தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு நெ. 59a-.

நாலடியார் உரை வளம்

(மூலமும் மூன்று பழைய உரைகளும் அடங்கியது)

முதல் பாகம் 1 – 200 பாடல்கள்

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு நெ. 59-a.

நாலடியார் உரைவளம்

(மூலமும் மூன்று பழைய உரைகளும் அடங்கியது)

முதல் பாகம் 1--200 பாடல்கள்.

தஞ்சை சரசுவதி மகால் வெளியீடு நெ. 59-a.

நாலடியார் உரைவளம்

(மூலமும் மூன்று பழைய உரைகளும் அடங்கியது)

★

முதல் பாகம் - 1—200 பாடல்கள்.

★

பதிப்பாசிரியர்கள்:

ஸ்ரீ S. முத்துரத்ன முதலியார்,
தமிழ்ப்பண்டிதர், சரசுவதி மகால், தஞ்சாவூர்.

வித்துவான் **ஸ்ரீ M.R. கந்தசாமி பிள்ளை,**
தமிழாசிரியர், தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளி,
அம்பாசமுத்திரம்.

தஞ்சை சரசுவதி மகால் நிர்வாகக் கமிட்டியினருக்காக
கௌரவ காரியதரிசி

ஸ்ரீ S. கோபாலன், B.A., B.L.,
அவர்களால் வெளியிடப்பட்டது.

1990. விலை ரூ. 90—00

© சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர் 1990.

முதற்பதிப்பு: 1953

இரண்டாம்பதிப்பு: 1990

NALADIAR URAI VALAM I PART
(VARIORUM EDITION OF
COMMENTARIES TO NALADIAR)

அச்சிட்டோர்:
கஜேந்திரா அச்சகம்
57, தெற்கு ரத வீதி,
சிதம்பரம் - 608 001.

PREFACE.

***

This publication entitled "NALADIAR URAI-VALAM" contains the text and three standard commentaries of "NALADIYAR". the wellknown ancient Tamil classic of four hundred stanzas dealing with Ethics, Politics and Erotics (அறம், பொருள், இன்பம்). It is needless to point out that this classic holds an equal position with "Tirukkural" in point of poetical merit and value of subject-matter.

Though several editions of this classic have appeared with some commentary or other, still there is no edition giving a faithful version of any of the three standard commentaries that now appear in this publication. The best-known among the three commentaries is that of PADUMANAR who is said to have been responsible for the classification of the four hundread verses into several sections or "Adhikaras". But has commentary has not been faithfully reproduced in any edition that has hitherto appeared, though every editor has been careful to state that his commentary is 'based' on Padumanar's. The second commentary in the present edition is by DHARUMANAR, and it sees the light

of day for the first time in this edition. The commentary is found preserved only in this library and our edition is based on it. The third commentary is a judicious combination of the views of the first two commentators, expressed in clear language. The name of the author does not find a place in the manuscript. It has therefore been named "Vilakka Urai" or the 'clear commentary' by our editors.

The work has been carefully edited by our Tamil Pandit, Sri S. Muthuratna Mudaliar, and Vidwan Sri M.R. Kandasami Pillai, Tamil Pandit, Thirthapathi High School, Ambasamudram. Parallel quotations (ஒப்புமைப் பகுதி), instances where the text is quoted as authority (மேற்கோள் பகுதி), and special notes have been added for every stanza. Lists have been appended at the end, of special usages and vocabulary occuring in the text An alphabetical list of the beginnings of the stanzas has also been given. Sri S. Rajagopalan, Copying clerk of the Library has rendered valuable service in carefully copying the text, tracing the quotations, noting the special usages and compiling the alphabetical list. Our thanks are due to the two Pandits and the copying clerk for their valuable service.

This publication has been issued in two volumes of convenient size. It is hoped that

this edition will be found useful by scholars who have, felt the need for a standard edition of the classic.

We are grateful to the Government of Madras for their timely grants that have helped us to publish this and other valuable manuscripts of our library.

Saraswathi Mahal,
Tanjore,
20—10—53.

S. GOPALAN,
Hon. Secretary.

முன்னுரை.

''நாலடியார் உரைவளம்'' என்னும் இவ்வெளியீட்டில் தமிழ் இலக்கியங்களில் பிரசித்திபெற்ற 'நாலடியார்' என்னும் நானூறு பாடல்களின் மூலமும், மூன்று பழைய உரைகளும் அடங்கியிருக்கின்றன.

அறம், பொருள், இன்பம் என்னும் முப்பாலைப்பற்றிப் பேசும் இவ்வரிய பழம்பெருநூல் சொற்சுவை, பொருட் சுவைகளில் தமிழகம் போற்றும் திருக்குறளுக்கு நிகரான தென்பது யாவரும் அறிந்ததே. இந்நூல் பலரால் உரை யுடன் அச்சிடப்பட்டிருப்பினும், இப்போது வெளியிடப் படும் மூன்று உரைகளும் பூராவாக இதுவரை பதிப்பிக்கப் படவில்லை. இம்மூன்று உரைகளில் அதிகமாக யாவராலும் போற்றப்படுவது பதுமனார் உரை. இவ்வுரையாசிரியரே நாலடியாரிலுள்ள நானூறு பாடல்களுக்கும் அதிகார அடைவு செய்ததாகச் சொல்லப்படுகிறது. அத்தகைய பெருமை உடையதாக இருந்தும், இவ்வுரை உள்ளபடி இதுவரையில் அச்சிடப்படவில்லை. ஆயினும், ஒவ்வொரு பதிப்பாளரும் தமது பதிப்பில் உள்ள உரை பதுமனார் உரையைத் தழுவியது என்று மட்டும் சொல்லத் தவறுவ தில்லை. அடுத்த உரை தருமர் என்பவரால் எழுதப்பட்ட தாகத் தெரிகிறது. இவ்வுரை முதன்முதலாக இப்போது தான் வெளிவருகிறது. மூன்றாவது உரை முதல் இரண்டு உரைகளைத் தழுவி விளக்கமான நடையில் எழுதப் பட்டிருக்கிறது. அதன் ஆசிரியர் பெயர் அவ்வுரைச் சுவடியில் காணப்படவில்லை. அதுகாரணம் பற்றி அவ் வுரைக்கு 'விளக்கவுரை' என்று பெயரிடப்பட்டிருக்கிறது.

இம்மூன்று உரைகளும் சரசுவதி மகால் நூல் நிலையத்தில் காப்பாற்றப்பட்டுள்ள பழைய சுவடிகளிலிருந்து எடுத்துப் பதிப்பிக்கப்பட்டிருக்கின்றன.

சரஸ்வதி மகால் தமிழ்ப் பண்டிதர் ஸ்ரீ S. முத்துரத்தின முதலியார் அவர்களும், அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப் பள்ளித் தமிழ்ப் பண்டிதர் வித்வான் ஸ்ரீ கந்தசாமி பிள்ளை அவர்களும் மிக்க பிரயாசையுடன் நூலின் மூலத்தையும், உரைகளையும் பதிப்பித்துள்ளனர். ஒவ்வொரு பாட்டின் உரைக்குப்பிறகு அச்செய்யுள் எடுத்தாளப்பட்ட இடங்களும், அதே பொருள் அமைந்த இதர நூல்களும். 'மேற்கோள் பகுதி' 'ஒப்புமைப்பகுதி' என்ற பெயர்களுடன் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. அநுபந்தங்களாக இந்நூலில் கண்ட பொருள்களைப்பற்றிய விசேடக் குறிப்புகளும், செய்யுட்களின் முதலடி அகராதியும் எழுதிச் சேர்க்கப் பட்டிருக்கின்றன. சரசுவதி மகால் எழுத்தாளர் ஸ்ரீ இராஜ கோபாலன் இந்நூல் மூலத்தையும் உரைகளையும் சுவடிகளிலிருந்து பிழையின்றி எழுதுவதிலும், மேற்கோள், ஒப்புமைப் பகுதிகளுக்கு வேண்டிய இடங்களைத் தேடிச்சேர்ப்பதிலும், விசேடக்குறிப்புகள், அகராதி இவைகளைத் தயார் செய்வதிலும் அரும்பாடுபட்டு உதவியுள்ளார். இம்மூவரும் செய்த அரிய சேவைக்கு எங்கள் நன்றி.

இவ்வரிய நூலையும், இதர நூல்களையும் வெளியிடுதற்கு உதவிபுரிந்துவரும் சென்னை அரசாங்கத்துக்கு நாங்கள் எப்போதும் கடமைப்பட்டுள்ளோம்.

சரசுவதி மகால்,
தஞ்சாவூர்.
20—10—53.

S. கோபாலன்,
கௌரவ காரியதரிசி

———

நாலடியார் உரைவளம்

முகவுரை.

“தவளத் தாமரைத் தாதார் கோயில்
அவளைப் போற்றுதும் அருந்தமிழ் குறித்தே”

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலாத தமிழ்.

நாலடியார் நூற்பெருமை.

தென்மலயத்து அருந்தவன் அருளிய தமிழ் மொழிப் பரவையுள், தன்னேரில்லாச் சிறப்புடையதாகிய திருக்குற ளோடு மதித்துரைக்குந் தகுதிப்பாடு உடைய நூல் நாலடியார், என்ப.

இந்நூல் பண்டை உரை ஆசிரியருட் சிறந்தார் எனக் கருதும், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், இளம் பூரணர், சேனாவரையர், பரிமேலழகர், பேராசிரியர், முதலிய தொல்லுரை ஆசிரியர்கள் பலராலும் எடுத்தாளப்படும் பிரமாண நூற்களில் ஒனறாகும்.

முத்தமிழ் வளர்ந்தோங்கிய சங்கங்கள் மூன்று. அவை தலை, இடை, கடைச் சங்கங்கள் என்ப. அவற்றுள், இது

கடைச் சங்கம் மருவிய நூற்களில் கீழ்க்கணக்கு நூற்றொடரில் ஒன்றென்ப.

எனவே, அதனை,

நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுகங் கோவை பழமொழி மாமூலம்
இன்னிலைய [1]காஞ்சியோடு ஏலாதி யென்பவே
[2]கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு''

என்னும் பாவான் உணர்க.

கீழ்க்கணக்கு நூற்களின் இலக்கணம்:—

''அடிநிமிர் வில்லாச் செய்யுட் டொகுதி
அறம் பொரு ளின்ப மடுக்கி யவ்வகைத்
திறம்பட வருவது கீழ்க்கணக் காகும்''

எனவரும் பன்னிருபாட்டியல் சூத்திரத்தானும்,

''வனப்பியல் தானே வகுக்குங் காலைச்
சின்மென் மொழியாற் றாய பனுவ லோடு
அம்மை தானே அடிநிமிர் பின்றே''[3]

—(தொ. செ. சூ. 236.)

பா. பேதம். [1]''காஞ்சியுட னேலாதி''
" [2]''கைந்நிலையோ டாங்கீழ்க் கணக்கு''

[3]இதன் பொருள்:- சிலவாய மெல்லிய வாய சொல்லோடும் இடையிட்டு வந்த பனுவல் இலக்கணத்தோடும் அடிநிமிர் வில்லது அம்மையாம் என்றவாறு.

அடிநிமிரா தெனவே அம்மை யென்பது முழுவதும் ஒரு செய்யுளாகல் வேண்டும். வேண்டவே, அஃது உறுப்பன்றாகிய செல்லும், அதனை உறுப்பெனல் வேண்டுமாதலின் அடிநிமிரா தெனப்பட்ட செய்யுள் உறுப்பாக அவை பல தொடர்ந்து முடிந்து ஈண்டுச் செய்யுளாமென்பது. சிலவாகவென்பது எண்ணுச் சுருங்குதல். மெல்லியவாய்ச் சிலவாய சொற்கள், எழுத்தினான் அகன்று காட்டாது சிலவெழுத்தினான் வருவது. அடிநிமிரா என்றது ஐந்தடியின் ஏறாதென்றவாறு.

என்னும் செய்யுளியற் சூத்திரத்தானும், அதற்குப் பேராசிரியரும்' நச்சினாரும், உரைத்த உரையானும் உணர்க.

திருக்குறள் அமைப்புப்போல, இந்நூலும், அறப்பால், பொருட்பால், காமத்துப்பால், என மூன்று பிரிவினுள் அடங்கியதாகும்.

அம்மை, அழகு, தொன்மை, தோல், விருந்து, இயைபு, புலன், இழைபு, எனத் தொடர்நிலைச் செய்யுட்கு இலக்கணங் கூறுமிடத்து 'வனப்பியல்தானே' என்னும் சூத்திரவிதியால் 'அடி நிமிர் வல்லது அம்மையால்' என்றாங்கு இந்நூல் 'அம்மை' ஆமென்றுணர்க. அமைதிப்பட்டு நிற்றலின் அம்மையென்றாயிற்று.

அறம், பொருள், இன்பம், என்று முப்பாலில் நூல் கூறியவர் வீடு கூறாரோ எனின், அகத்தியனாரும், தொல்காப்பியனாரும், 'வீடுபேற்றிற்கு நிமித்தம் கூறுதலன்றி வீட்டின் தன்மை தமிழாற் கூறார் என்று உணர்க.' என்பர்.—(தொ. சிறப்பு பா. உரையில் நச்சினார்க்கினியர்)

அஃது,

"அந்நிலை மருங்கின் அறமுதலாகிய
[1]மும்முதற் பொருட்கு முரியவென்ப"
—தொ. செ. சூ. 106.

தாயபனுவலோடென்றது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்றற்கும் இலக்கணஞ் சொல்லுப, வேறு இடை இடை அவையன்றியும் தாய்(தாவி)ச் செல்வதென்றவாறு. அஃதாவது பதினெண் கீழ்க்கணக்கென வுணர்க. அதனுள், இரண்டடியானும், ஐந்தடியானும், ஒரோ செய்யுள் வந்தவாறும், அவை சிலவாய மெல்லிய சொற்களான் வந்தவாறும், அறம் பொருளின்பமென அவற்றுக்கு இலக்கணங் கூறிய பாட்டுப்பயின்று வருமாறுங் கார்நாற்பது களவழி நாற்பது முதலாயின வந்தவாறுங் கண்டு கொள்க. அறிந்து கொள்க என்பனவாகும்.

[1]உலகியற் பொருள் மூன்றனையுங் கூறுவான், அவற்றை மும்முதற் பொருள் என்றான். அவை இன்றி வீடு பெறுமாறு வேறு இன்மையின் வீடும் ஆண்டும் கூறினான் என்பது.

என்ற சூத்திரத்தானும், அதற்குப் பேராசிரியரும், நச்சினார்க்கினியரும், எழுதிய உரையானும் உணர்க.

'நாலடி' என்பது, நான்காகிய அடிகளை உடையது. பண்புத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகைக் காரணப் பெயராயமைந்து, வெண்பா யாப்பால் உற்ற இந்நூற்குக் 'கருவி ஆகுபெயராயிற்று'.

பெயர்வகை.

''முதனூல் கருத்த னளவு மிகுதி
பொருள்செய் வித்தோன் தன்மைமுத னிமித்தினும்
இடுகுறி யானுநூற் கெய்தும் பெயரே''

—ந. சூ. 49

அளவினாற்பெயர் பெற்றன: பன்னிரு படலம், நாலடி நானூறு முதலாயின என்பது கொண்டு நான்கடி அளவினால் இந்நூற்கு இப்பெயர் அமைந்தது என்ப.

இனி வேறோர் வரலாறு.

பாண்டியன் அவைக்கண் வீற்றிருந்து தமிழாராய்ந்த எண்ணாயிரம் சமணமுனிவர் பஞ்சத்தால் வருந்தி, அவையை விட்டு நீங்கும்போது தாமிருந்தபீடத்தின்கீழ் ஒவ்வோர் பாடலை எழுதிவைத்துப் பாண்டியனிடம் அறிவிக்காமல் சென்றனர்.

அல்லாதார் வீடென்னும் பொருண்மை செய்யுட்கண் வாராமை அதுகூறான் என்ப. அங்ஙனம் கருதின் அறம் முதற்பொருளும் செய்யுட்கள் வாரா மறுக்க—என்பர் பேராசிரியர்.

மும்முதற் பொருள், எனவே அவற்றது துணைப் பொருளாகிய அறநிலை இன்மையும், பொருள் நிலை இன்மையும், இன்பநிலை இன்மையும், அடங்குமென்ப. உலகியற் பொருள் மூன்றனையும் இவை எனக்கூறி அவற்றை விடுமாறுங் கூறவே வீடுங் கூறிற்றாம்—என்பர். நச்சினார்க்கினியர்.

பின், அரசன் முனிபுங்கவர்களைக் காணாது வருத்தமுற்று அவர்கள் வீற்றிருந்த தவிசினை அப்புறப்படுத்த அதன்கீழ்ச் சிறுமுறியில் ஒவ்வொரு பீடத்தின் கீழும் ஒவ்வொரு 'வெண்பா' எழுதிவைத்திருப்பதைக் கண்டு, அப்புலவர்களைப் பிரிந்த வருத்தத்தினால் அவற்றை வையை ஆற்றில் எறிய ஏவினன். அவ்வாறு செய்யப்பட்டவற்றுள் நானூறு பாடல்கள் ஆற்றின் வழிச்செல்லாது எதிரேறிச் சென்றன. இத்தெய்வத் தன்மையை அரசன் உணர்ந்து பெரிதும் வியப்புற்று, அவற்றை எடுத்து ஒருநூலாக்கி 'நாலடியார்' எனப் பெயரிட்டு வழங்கினன் என்ப

''மன்னன் வழுதியர்கோன் வையைப் பேராற்றின்
எண்ணி இருநான்கோ டாயிரவர்—உன்னி
எழுதியிடு மேட்டி லெதிரே நடந்த
பழுதிலா நாலடியைப் பார்''

என்னும் பாவான் ஓர்க.

இந்நூலை எண்ணாயிரம் முனிவர் பாடினர் என்பதற்குப் பின்வரும் பாடல் சான்றாகும்.

''எண்ணா யிரவ ரிசைத்த வெண்பா நானூறுங்
கண்ணாமிந் நாலடியைக் கற்றுணரத்—தண்ணார்
திருக்குருகூர் மாறனையே தேர்ந்துமறை தேர்ந்த
திருக்குருகூர் மாறனையே தேர்''

இந்நூல் நானூறு பாடல்களைக் கொண்டது என்பதற்கு

''நானூறும் வேதமா நானூறு நானூறா
நானூறுங் கற்றற்கு நற்றுணையா—நானூறும்
பண்மொழியாள் பாகம் பகிர்ந்து சடைக்கரந்த
கண்ணுதலான் பெற்ற களிறு''

என்னும் பாவினால் உணர்க.

பழமொழிகள்.

திருக்குறளையும், நாலடியையும், சேர்த்துக் 'கபிலபாணர்'

என்பதுபோலத் தொன்றுதொட்டுக் கூறுவதுண்டு.

அவற்றுள் சில வருமாறு:—

> ''பாலு நெய்யு முடலுக் குறுதி
> வேலு வாளு மடலுக் குறுதி
> ஆலும் வேலும் பல்லுக் குறுதி
> நாலு மிரண்டும் சொல்லுக் குறுதி''

> ''பழகு தமிழ் சொல்லருமை நாலிரண்டில்''
> ''[1]நாலடி இரண்டடி கற்றவனிடத்து
> வாயடி கையடி அடிக்காதே''

என்பனவாம்.

இனி,

> ''நாலடி வள்ளுவ ராமேயிப் பாலை நடந்த பெருங்
> காலடி மேலடி மானடி யேகட் டுரலிற் பட்ட
> பாலடி சில்வெண்ணெ யுண்டோ னரங்கன் பனிவரையில்
> வேலடி முள்ளுக் குபாயமிட் டேகும் விரகு நன்றே''

என அரங்கக் கோவைக்கண் உள்ள உடன் போக்குத்துறைச் செய்யுள். இது, அஃதாவது தலைவன் அடிச்சுவட்டின் மீது தலைவி அடிவைத்து நடக்குங்கால் நான்கு அடியும் இரண்டடியாய்த் தோன்றியதற்கு நாலடியாரையும், திருக்குறளையும், உவமமெடுத்துக் கூறிய நயம் காண்க.

இச்சிறப்புச் செய்யுள்களில் நாலடியார் முதலில் கூறப் படுவதால் அதன் அருமை திருக்குறளுக்கு ஒப்போமிக்கோ என்றுகொள்ளற்பாலது. பொருட்செறிவில் மிகச்சிறந்த திருக்குறளில் உள்ள அதே பொருள் காவியச்சுவை மிகுதி

---

[1]நாலடி, குறள், கற்றவனிடத்து வாய் பேசாதே, என்றொரு பொருளும்; நாலடி, இரண்டடி (சிலம்பப்) படைப்பயிற்சியில் நாலடி இரண்டடி கற்றவனிடத்து கையினால் அடிக்காதே என்றொரு பொருளும் தொனித்தல் காண்க.

யுடன் நாலடியில் நிகழ்வது குறிப்பிடத்தக்கது.

அதிகார அடைவு செய்தவர்.

'வளங் கெழு' என்னும் பாயிரத்தால் பாலும், இயலும் அதிகார அடைவு செய்தவர் 'பதுமனார்' என்பதும், அவரே உரை விரித்துளார் என்பதும் புலனாம்.

உரை ஆசிரியர்—தருமர் என்பவர், திருக்குறளுக்கும் உரை விரித்து, இந்நூற்கும் உரை எழுதி இருத்தல் கூடுமென ஊகித்தற் கிடனுண்டு.

திருக்குறட் கருத்துக்களும், சொற்களும், இந்நூலகத்துப் பலவிடத்துக் காணலாம். அவ் அவ்விடங்களில் ஏற்ற பெற்றி குறிக்கப்பெற்றுள்ளன.

கருத்துக்கள் வேறுபடுவன சில வருமாறு:—

''நல்கூர்ந்த மக்கட் கணிகல மாவ தடக்கம்''

—நாலடி. 241.

''எல்லார்க்கு நன்றாம் பணிதல் அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து''

—குறள்.

''வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம்—ஆங்கே
இனந்தீது எனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது''

—நாலடி. 245.

''மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல்''

—குறள். 453.

''அற்றார்க் கொன் றாற்றாதான் செல்வமிகுநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று''

—குறள். 1007.

''கொடுத்தலுந் துய்த்தலுந் தேற்றா இடுக்குடை
உள்ளத்தான் பெற்ற பெருஞ்செல்வம் இல்லத்து
உருவுடைக் கன்னியரைப் போலப் பருவத்துள்
ஏதிலான் துய்க்கப் படும்''

—நாலடி. 274.

தழுவி உரைத்தவற்றுட் சில:—

''கரவா துவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்''

—குறள். 1061.

''கரவாத திண்ணன்பின் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளுஞ் சுடுமால் எவன்கொலோ
கொள்ளுங்கால் கொள்ளுங் குறிப்பு''

—நாலடி. 304.

''இரவுள்ள உள்ளம் உருகும் கரவுள்ள
உள்ளதூஉ மின்றிக் கெடும்''

—குறள். 1069.

''கரப்பவர்க்கு யாங் கொளிக்குங் கொல்லோ இரப்பவர்
சொல்லாடப் போஒம் உயிர்''

—குறள். 1070.

''ஈயாய் எனக்கொன் றிரப்பா னேல்
மாயானோய் மாற்றி விடின்''

—நலேடி. 304.

பாக்களிலுள்ள சிறப்பான குறிப்புக்கள்:—

சங்க காலத்துக்குமுன் வழங்கிய சொற்கள்:—

'கணக்காயர்'—

கற்றதூஉ மின்றிக் கணக்காயர் பாடத்தாற்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்--மற்றதனை

நல்லா ரிடைப்புக்கு காணாது சொல்லித்தன்
புல்லறிவு காட்டி விடும்''

''கணக்காயர் பாடத்தாற் பெற்றதாம் பேதையோர் சூத்திரம்''
—நாலடி. 314.

''கணக்காயனார் மகனார் நக்கீரனார்''

என்பதும் ஆம்.

பாடபேதம்.

''கட்கினியாள் காதலன் காதல் வகையு ளைவாள்
உட்குடையாள் ஊராண் இயல்பினாள்''
— நாலடி. 384.

முன்பதிப்புக்களில் கொண்டபாடம் 'ஊர் நாண் இயல் பினாள்'. இவ்வுரை ஆசிரியர்கள் மூவரும் கொண்டபாடம் ஊராண் இயல்பினாள் என்பதே ஆகும். இதனை ஆசிரியர் நச்சினார்க்கினியர் தொ. சொ. சூ. 57 உரையில் ''உட்குடை யாள் ஊராண் இயல்பினாள்' எனவெடுத்துக்காட்டிய படியே ஆகும்.

''உட்குடையாள் ஊராண் இயல்பினாள்'' என்ற பாடத்தை எடுத்துக்காட்டுவர். ''மயிலைநாதர்''
— நன். பொது. சூ. 4 உரை.

யாப்பமைப்பு.

தொல்காப்பியம், வீரசோழியம், யாப்பருங்கலம், யாப் பருங்கலவிருத்தி, ஆகிய இன்னோரன்ன நூற்களின் உரை ஆசிரியர்களால் இந்நூல் யாப்பின் அமைப்புக்கு உதாரணமாக எடுத்தாளப்படுகின்றமையால் இந்நூலின் தொன்மை விளங்கா நிற்கும்.

புறத்திரட்டு.

சங்க காலமுதல் உள்ள இலக்கியங்களிலிருந்து திரட்டப் பட்ட இந்நூலில் 1570 செய்யுட்கள் உள்ளன. அவற்றுள்

நாலடியாரிலிருந்து இந்நூலில் 200க்கு மேற்பட்ட பாக்கள் சேர்க்கப் பெற்றிருக்கின்றன.

பாராட்டிக் கூறும் புலவர்.

''வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவண தெய்த இருதலையும் எய்தும்''

என்னும் நாலடியார் கருத்தமைய.

இடைநிலை யாம்பொரு ளுண்டேன் முதனிலை எய்தறமும்
கடைநிலை யாயின் பழமேவு மென்றனக் காதலரென்
றடைநிலை யாம்பதத் தெம்மான் திருவெங்கை ஆயிழைக்குத்
தொடைநிலை வார்குழற் பூங்கொடியே சென்று சொல்லுகவே

— வெங்கைக்கோவை, சிவப்பிரகாசர்.

குறட்பாக்களோடு அமைவனவற்றுட் சில—

''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீரப் பேதையார் நட்பு''

— குறள். 782.

''பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு''

— நாலடி. 125.

''பகைபாவம் அச்சம் பழியென நான்கும்
இகவாவா மில்லிறப்பான் கண்''

— குறள். 146.

''அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்
பிறன்தார நச்சுவார்ச் சேரா—பிறன்தாரம்
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்று
அச்சத்தோ டிந்நாற் பொருள்''

— நாலடி. 82.

''குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்பொ டுயிரிடை நட்பு''

—குறள். 338.

''சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து''

—நாலடி. 30.

பண்டை உரை ஆசிரியர்கள் உரைகூறத் தொடங்கு மரபு:-

பரிமேலழகர்

அதிகாரப் பொருள் கூறுமிடத்து, 'அஃதாவது' என்று தொடங்குவர்.

நச்சினார்க்கினியர்

அதிகாரப்பொருள் கூறுமிடத்து; 'நிறுத்தமுறையானே எழுத்து உணர்த்திச் சொல் உணர்த்துகின்றார் ஆதலின், சொல்லதிகாரம் என்னும் பெயர்த்து' என்றும், சூத்திரப் பொருள் கூறுமுன் 'என்பது சூத்திரம்' எனவும், 'இதன் பொருள்' எனவும், கூறுவர்.

பேராசிரியர்

'இவ்வோத்து என்ன பெயர்த்தோ எனின்', என்றும், 'என்பது சூத்திரம்' எனவும், 'இதன்பொருள்' எனவும் கூறுவர். 'அஃதியாதோ எனின்', எனவும் புகல்வர்.

இளம்பூரணர்

'இவ்வதிகாரம் என்ன பெயர்த்தோ எனின்', என்றும், 'பொருள் என்பது யாதோ எனின்' என்றும், 'இதன் பொருள்', எனவும் தொடங்குவர்.

நக்கீரனார்

'என்பது, என்னுதலிற்றோ வெனின்' என்றும்; 'இதன் பொருள்' எனவும் தொடங்குவர்.

சேனாவரையர்

'நிறுத்த முறையானே சொல்லுணர்த்திய எடுத்துக் கொண்டார்' எனவும், 'இதன்பொருள்' எனவும் தொடங்குவர்.

இனி, இந்நூல் உரை ஆசிரியர்கள் கூறுவன:-

'அஃதாவது' என்றும், 'என்பது' எனவும் 'என்றது', எனவும் தொடங்குவர், இவ்வாறு தொடங்குவதால் அவ்வுரையாசிரியர் களோடு ஒருங்குவைத்து எண்ணத்தக்கார் என்பது புலனாகிறது.

உரை விசேடம்.

''வைகலும் வைகல் வரக்கண்டும்''

—இதன் விரிவுரை. 39.

[1]**''கல்வி கரை இல கற்பவர் நாள்சில''**

—இதன் விரிவுரை பதுமனார். 135.

''ஆற்றுர் துணையும்''

—இதன் உரை. 196.

---

[1]'கரையில்லாத கல்வியாவன' எனத்தொடங்கி, அறுபத்துநான்கு கலைகளின் விரிவுரை கூறியும், 'வேறுபடுத்து ஆராய்ந்து அமைவுடைய கற்கலாவது' எனத்தொடங்கி, கவிகளாலே சோகரசம், வீரசம், முதலியன பேதங்கள் உளவாகச் சித்திரித்துச் சொல்லப்பட்ட காவிய நாடகங்களா

[1]'பழவினை' என்பதற்கு விளக்கங்கூறுவது.

"கடல் சார்ந்தும்"

—இதன் உரை. 244.

"நன்னிலைக் கண்"

—இதன் உரை பதுமனார். 248.

இவை விரிவும், நயமும் உற்ற உரைப்பகுதிகளாகும். மற்றுமுள்ள பாடல்கள் விரிவஞ்சி விடப்பெற்றன.

நாலடியார் உரைவளம்.

திருக்குறளுக்கு உரை வரைந்த ஆசிரியர் [2]பதின்மர் என்ப. மற்றுஞ்சில ஆசிரியர்களும் உரை எழுதி இருத்தல் கூடுமென்பது அவ்வுரைப் போக்கால் விளங்குகின்றது. அஃதேபோல, நாலடியாருக்கும் உரைவகுத்த ஆசிரியர் பலர் இருத்தல்கூடும். அவருள், தருமர், பதுமனார், விளக்கவுரைகாரர் என, மூன்று உரை ஆசிரியர்கள் வரைந்துதவிய உரைகளை, இங்கே தொகுத்து வெளியிடலால் இதற்கு "நாலடியார் உரைவளம்" எனப் பெயரிடப்பெற்றது.

உரைச் சுவடிகளின் வரலாறு.

பேரரசர் சரபோஜி மன்னன் தொகுத்த நூற்பெரு மன்றத்துள் (சரசுவதி மகாலில்) நாலடியார் உரையுடன் அமைந்த ஏட்டுச்சுவடிகள் மூன்று உள்ளன.

லும்' எனப் பலவாகப் புதியன விரித்துக்கூறியது படித்துணரத் தக்கது.

[1]பிரத்தியட்சம், அநுமானம், ஆகமம், உவமானம், அர்த்தாபத்தி, அபாவம், எனப் பகுத்துரைப்பன ஆராய்தற்குரியது.

[2]"தருமர் மணக்குடவர் தாமத்தர் நச்சர்
பரிமே லழகர் பருதி—திருமலையர்
மல்லர் பரிப்பெருமாள் காளிங்கர் வள்ளுவர்நூற்
கெல்லையுரை செய்தார் இவர்".

அவற்றுள், [1]தருமர் உரையுடன் கூடிய சுவடி 1. (இது பதவுரை) முற்றும் உள்ளது.

பதுமனார் உரையுடன் அமைந்த சுவடி 1. (இது பொழிப்புரை) இது 136 பாடல்களுக்குமட்டும் உள்ள உரைப் பிரதி.

உரை ஆசிரியர் பெயர் குறிக்கப்படாமல் அமைந்த உரைப்பிரதி 1. இது 297 பாடல்களுக்குமட்டும் உரையுடன் (பதவுரை) கூடியது.

இவ்வுரை ஆசிரியர் பெயர் விளங்காமையால் விளக்கவுரை எனப் பெயரிடப்பெற்றது.

இவற்றை ஒப்புநோக்குதற்குப் பல்வேறு இடங்களில் ஆராய்ந்து கிடைத்த பிரதிகள் வருமாறு:—

(1) டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் சேகரித்து வைத்தது. அடையாறு கலாக்ஷேத்திரத்தில் உள்ள பிரதி 1. (இது தருமபுர ஆதீனத்துப் பிரதி நாலடி விருத்தி என்று பெயர்)

(2) சென்னை அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதி (பொழிப்புரை)

(3) ௸ புத்தகசாலைப் பிரதி 1. (பதவுரை)

(4) நாலடியார் தேவருரை பிரதி 1. அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

---

[1]தருமர் உரைபற்றி சரசுவதி மகால் தமிழ்ச் சுவடிகளின் விவரமடங்கிய பட்டியலைத் தயாரித்த பண்டிதர் L. உலகநாத பிள்ளை கூறியிருப்பது வருமாறு:— "இதில் முழுவதும் இருக்கிறது. இவ்வுரை சிறந்ததாகக் காணப்படுகிறது. 'சீலமுனிவர்' என்னும் முதற் குறிப்புடைய செய்யுளில் "கண்டான் பொருடான் பயனுரைத்தான் காதலித்துத் தண்டார்ப் பொறைத் தருமன் தான்" எனவந்திருப்பதைக் கொண்டு இவ்வுரை செய்தவர் 'தருமர்' என்பவராய் இருத்தல் வேண்டுமென்று கருதப்படுகின்றது, இவ்வுரை அச்சிடப்படவில்லை".

(5) நாலடிப் புகழ்ச்சி. பிரதி 1. இது நண்பர் ஒருவரிடமிருந்து கிடைத்தது.

இவற்றுள் 4, 5ம் பிரதிகள் ஒப்பு நோக்குதற்குரியதாக வில்லை. பதுமனார் உரை 136ஆம் பாடல்களுக்கு மேற்பட்ட பகுதியையும், விளக்க வுரை 297 ஆம் பாடல்களுக்கு மேற் பட்ட பகுதியையும் அரசாங்கத்துக் கையெழுத்துப் புத்தக சாலைப் பிரதியையுங்கொண்டு பூர்த்தி செய்து கொள்ளப் பெற்றது.

பிறமொழிப் புலவர் கூறுவது:—

Dr. G. U. Pope. இவர் தாம் எழுதிய நாலடியார் பதிப்புரையில் பின்வருமாறு கூறியுள்ளார்:—

"கடவுள் வாழ்த்துப் பாடலைத் தவிர வேறு இடங்களில் கடவுளைப்பற்றிக் கூறவில்லை. எனினும் சில தெய்வங்களைப் பற்றியும், மக்களின் பொதுவான நம்பிக்கைகளைப் பற்றியும், கூறப்பட்டிருக்கிறது.

ஆனால் சீரிய ஒழுக்கத்தைப்பற்றிய கருத்துக்களும் மக்களாவார் நல்லொழுக்கத்தினால் ஈடுபடவேண்டிய கடமை யைப்பற்றியும், மிக்க வன்மையுடனும், திருத்தமாகவும் கூறி யுள்ளார்.

முடிவில் இத்தகைய சிறந்த ஒழுக்கத்தில் மிகப் பற்றுள்ள மக்களாவார், தணிப்பட்ட பேரின்பத்தை எய்துவர்களென நான் கருதுகிறேன். அன்னாரை இவ்வழியில் நிலைநாட்டியது திருக்குறளும், நாலடியுமே ஆகும்".

நாலடியாரின் காலம்.

நாலடியாரின் காலத்தைப்பற்றி ஆராய்ச்சியாளர்கள்,

நிச்சயமான ஓர் முடிவுக்கு வந்திருப்பதாகத் தெரியவில்லை.

(1) கடைச் சங்கநூற்களைத் தொகுத்துக் கூறும் வெண்பாவில் நாலடியார் முதலில் கூறப்பட்டுப் பின் மற்றப் பதினெண் கீழ்க்கணக்கு நூற்கள் கூறப்பட்டிருப்பதால், நாலடியாரும் கடைச் சங்க நூற்களில் ஒன்று என்ற முடிவுக்குப் பெரும்பான்மையோர் வந்துள்ளனர். கடைச்சங்க காலம் கி. பி. முதலாவது அல்லது இரண்டாவது நூற்றாண்டில் முடிவடைந்தது என்று நிச்சயித்தற்குப் போதிய சான்று உள்ளது.

சீத்தலைச்சாத்தனார் கடைச்சங்கப் புலவருள் ஒருவர் என்பது சங்க நூற்களாகிய எட்டுத்தொகை நற்றிணையிலும், குறுந்தொகையிலும், அகநானூற்றிலும், புறநானூற்றிலும், இவருடைய பாக்கள் இருத்தலாலும், 'தண்டமிழ் ஆசான் சாத்தன்' எனவும், 'நன்னூற் புலவன்' எனவும், சிலப்பதிகாரத்துச் சிறப்பித்துக் கூறப்படுதலாலும், திருவள்ளுவமாலையில் சாற்றுப்பாக்கள் தந்த புலவர் வரிசையில் இவரும் இருத்தலாலும் நிச்சயிக்கப்படுகிறது. "சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்ட மணிமேகலை" என்று பேராசிரியர் தொல்காப்பியச் செய்யுளியல் உரையில் கூறியிருத்தலால், 'மணிமேகலை' சங்ககாலத்தில் ஏற்பட்டதென்பது நிச்சயிக்கப்படுகிறது. சீத்தலைச்சாத்தனாரும், சிலப்பதிகாரம் இயற்றிய இளங்கோவடிகளும், தங்கள் நூற்களை ஒருவருக்கொருவர் உரைத்தும் கேட்டும் இருந்தனர் என்பது "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள், உரைசால் அடிகள் அருளக் கூலவாணிகன் சாத்தன் கேட்டனன்" எனச் சிலப்பதிகாரப் பதிகத்திறுதியிலும், "இளங்கோவேந்தன் அருளிக் கேட்ப, வளங்கெழு கூல வாணிகன் சாத்தன், மாவண் டமிழ்த்திற மணிமே கலைதுற, வாறைம் பாட்டினுள் அறியவைத் தனன்என்" என மணிமேகலைப் பதிகத்திறுதியிலும் கூறியிருத்தலால் தெளிவாகிறது.

இளங்கோவடிகளின் முன்னவனாகிய "செங்குட்டுவன்" பத்தினிக் கடவுளாகிய கண்ணகிக்குக் கோயில் அமைத்து

விழாக் கொண்டாடிய காலத்து இலங்கை மன்னனாகிய 'கயவாகு' என்பவன் உடனிருந்தனன் என்று சிலப்பதிகாரம் வரந்தரு காதையால் தெரிவதால் 'கயவாகு' வின் காலமே இளங்கோவடிகள், சாத்தனார், இவர்கள் காலமாக விருத்தல் வேண்டும். 'மகாவம்சம்' என்னும் இலங்கைச் சரித்திர நூலுள் 'கயவாகு' என்ற பெயருடைய அரசர் இற்றைக்கு 800 ஆண்டு கட்கு முன்பு ஒருவரும், 1800 ஆண்டுகட்கு முன்பு ஒருவரும் விளங்கினர் எனக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. சிலப்பதிகாரம் சோழர்கள் புகார் நகரத்தைத் தலை நகராகக் கொண்டு அரசியல் நடாத்திய காலத்தியதாதலால், அது 800 வருடங்கட்கு முந்தியதெனக் கொள்ளல் ஏற்புடைத்தன்று. ஆகவே, 1800 ஆண்டுகட்கு முன்பிருந்த 'கயவாகுவே' சங்கப்புலவர் சீத்தலைச் சாத்தனார் காலத்தவன் என்பது தெள்ளிதின் புலனாகும். இந்த முடிபு திரு. Dr. உ. வே. சாமிநாதய்யர் அவர்களால் சிலப்பதிகார முகவுரையிற் கூறப்பெற்றுள்ளது. ஆதலின், நாலடியார் கடைச்சங்ககாலமாகிய இற்றைக்கு 1800 ஆண்டுகட்கு முந்தியகாலத்தில், ஏற்பட்ட நூல் என்பது பெரும்பாலோர் துணிபு.

(2) இதற்கு மாறாக இம்முடிவை ஒப்புக்கொள்ளாத பல அபிப்பிராயங்களும் இப்போது நிலவி வருகின்றன.

i பதினெண் கீழ்க்கணக்குப்பற்றிய வெண்பா பிற்காலத்து ஏற்பட்டிருக்கலாம் அதை நிச்சயமான ஓர் ஆதாரமாகக் கொள்ளல்கூடாது. ஆதலின், நாலடியாரின் காலத்தை வேறு ஆதாரங்களைக்கொண்டே நிச்சயித்தல் வேண்டும். நாலடியாரில் உள்ள செய்யுட்கள் சமண முனிவர்களால் இயற்றப்பட்டவை என்பதற்கு ஆதாரமான சிறப்புப்பாயிரப் பாடல்களும், அதைப்பற்றிய கர்ணபரம்பரைச் செய்திகளும், பழைய [1]சுவடிகளில் காணப்படுகின்றன.

---

[1]சரசுவதி மகால் நூல் நிலையச்சுவடிகளில் No. 82 நாலடியார் மூலம் மிகப் பழமை உடையதாகக் காணப்படுகிறது.

சமண முனிவர்கள் பாண்டிநாட்டை விட்டுச் சென்றது சம்பந்தர் காலம் என்பது பிரசித்தம். ஆதலால், நாலடியார் சம்பந்தர் காலத்தில் ஏற்பட்டிருத்தல்கூடுமென்பர் ஒரு சாரார். தஞ்சை சரசுவதி மகால் சுவடிகளை ஆராய்ந்து சுவடிகளைப் பற்றிய குறிப்புகளுடன் கூடிய 'சுவடித் தொகுப்பு நூல்'' எழுதிய பண்டித L. உலகநாத பிள்ளை அவர்கள் 'சம்பந்தர்' காலத்தில் இந்நூல் ஏற்பட்டிருத்தல் கூடுமெனக் கருதுகிறார். ஆனால் எண்பெருங் குன்றத்துச் சமணமுனிவர் இயற்றிய இந்நூல் யாவராலும் வேளாண் வேதமெனப் போற்றப் படுதலால், தென்னாட்டில் சமணம் தழைத்தோங்கிச் சமண முனிவர் தவவலிமை உன்னத நிலையில் இருந்தகாலத்தில் இது ஏற்பட்டதென்றுகொள்வது பொருந்துமே அல்லது சமணம் குன்றிச் சமண முனிவர்கள் தோல்வியுற்று நாட்டைவிட்டு அகன்ற காலத்தில் ஏற்பட்டதென்று கூறுதல் பொருந்தாது.

எண்பெருங்குன்றத்துச் சமணமுனிவர் பஞ்சம் வந்தபோர் காலத்தில் பாண்டியன் அவைக்கு வந்து, அவனால் உபசரிக்கப் பட்டுத் தங்கினர் என்றும், அவர்கள் பாண்டியனிடம் விடைபெற்றுக்கொள்ளுதல் இயலாதென அஞ்சி விடைபெற்றுக் கொள்ளாமலே ஊரைவிட்டுப் போயினர் என்றும், அவர்கள் போன பின்பு ஒரு சமயம் அவர்கள் அமர்ந்திருந்த ஆசனங்களைப் புரட்டிப் பார்க்க அவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு ஓலையில் ஓர் பாடலை எழுதிப் போந்தது தெரிந்த தென்றும், அதை அரசன் எடுத்து அவற்றின் பொருளில் உள்ள உண்மையைச் சோதிக்க எண்ணி அவற்றை வைகையாற்றிற் போட அவற்றுள் 400 பாடல்கள் கரையெதிர் ஏறியதைக்கண்டு

ஏறக்குறைய இற்றைக்கு 400 வருடங்கட்கு முன்பு எழுதப்பட்ட தென அதன் தோற்றத்தைக் கொண்டு ஊகித்தற்கிடனுண்டு. இதில் எண்பெருங் குன்றத்தின் பெயர்கள் அடங்கிய வெண்பா சிறப்புப்பாயிரத்தில் காணப்படுவதோடு முடிவில் 'எண்பெருங் குன்றத்து எண்ணாயிர முனிவரும் செய்த, 'வையை' ஆற்றிற்கு எதிராக நடந்த நாலடி நானூறும்' என்றும் எழுதப்பட்டுள்ளது.

ஆச்சரியப்பட்டு அந்த 400 பாடல்களையும் சேகரித்தான் எனவும் கர்ண பரம்பரையும், பழைய பாட்டின் பொருளுமாகும். இப்படி நேர்ந்த காலம் சம்பந்தர் காலத்தில் நடந்திருத்தல் கூடாது. ஏனெனில் அப்போது சம்பந்தர் எழுதிய தேவாரப்பதிக ஏடே எதிர்சென்றதேயன்றி, சமணமுனிவர் இட்ட ஏடு எதிர் செல்ல வில்லையென்பது பிரசித்தம். அப்போது அவர்களால் நாலடியார் எழுதப்பட்டிருந்தால் அதை மக்கள் ஆதரிக்க இடமில்லை, ஆகையால் நாலடியார் சம்பந்தர் காலத்தில் ஏற்பட்டதென்று கொள்வது சரியென்று தோன்றவில்லை.

ii. நாலடியாரில் **பெருமுத்தரையர்** என்னும் செல்வம் குறையாத வள்ளல்களைப்பற்றி 200-வது பாட்டிலும், 296-வது பாட்டிலும் கூறப்பட்டுள்ளது. அப்பாடல்களில் 'எக்காலத்திலும் இரவாதவர் வறியராயினும் **பெருமுத்தரையருக்கு** ஒப்பாவார்' என்றும், ஈதலிற் சிறந்த **பெருமுத்தரையர்** இடும் உயர்ந்த விருந்துக்குக் காத்திருப்பவரைக் காட்டிலும், இரவாதார் உண்ணும் நீரும் அமுதத்திற்கு ஒப்பாகும்' என்றும் பொருள் அடங்கியுள்ளது.

'பெரும்பிடுகு முத்தரையனாயின சுவரன் மாறன்' என்பவனைப் பற்றிய புகழ்ச்சிப் பாடல்கள் தஞ்சைக்கு அடுத்த செந்தலைக் கோயில் கற்றூண்களில் வெட்டப்பட்டிருக்கின்றன. இப்பாடல்களில் இவனது வெற்றிகளும் பிறவும், பாராட்டிக் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால், இவனது வள்ளற்றன்மை இதில் குறிக்கப்படவில்லை. எனினும், புலவர் பலர் புகழ்ச்சிக் குரியவன் ஆதலின் இவன் கொடைக்குணம் வாய்ந்தவன் என்பது ஊகிக்கப்பெறும். இக்கல் வெட்டுகளைப்பற்றி எழுதியிருக்கும் திரு T.A. கோபிநாதராயர் அவர்கள், 'இச்சாசனத்தில் கூறப்பட்ட முத்தரையன் எக்காலத்தான் என்பது விளங்கவில்லை' என்று கூறியபோதிலும், 'எழுத்துக்களின் வடிவைக்கொண்டும், இந்தச் சாசனத்தில் "பல்லவன் வெல்லத் தென்னன் முனையைக் கெடச் சென்ற மாறன்" என்று கூறப்பட்டிருப்பதாலும்

இவன் பல்லவர்கட்கு உட்பட்ட ஓர் சிற்றரசனாகவிருத்தல் வேண்டும்' என்றும், ''பெரும் பிடுகு'' என்னும் பெயர் பரமே சுர வர்மப் பல்லவனுக்கு ஏற்பட்டிருக்கும் ஓர் பெயராதலாலும், பேரரசர் பெயரைச் சிற்றரசர் தாங்கும் மரபிருத்தலானும், இவன் முதல் பரமேசுரவர்மன் காலத்தவன் என்று நிச்சயிக் கலாம்' என்றும் கூறியிருக்கிறார், ஆதலின், இம்முத்தரையர் கி. பி. 8வது நூற்றாண்டின் தொடக்கத்தில் அரசுபுரிந்த சிற்றரசர் என்ற முடிவுக்கு வந்துள்ளார். இவரே நாலடியாரில் கூறப்பட்டார் என்று கொண்டு நாலடியார் 8-ம் நூற்றாண்டில் ஏற்பட்டிருக்க வேண்டும் என்பர் சிலர். ஆனால் நாலடியாரில் குறிப்பிடப்பட்ட 'பெருமுத்தரையார்? என்பார் செந்தலைக் கல்வெட்டில் கண்ட முத்தரையரா? என்பது நிச்சயிப்பதற் கில்லை. நாலடியாரில் முத்தரையர் என்று ஓர் மரபின் பெயர் கூறப்பட்டிருக்கிறதேயன்றி ஓர் குறிப்பிட்ட அரசன் பெயர் கூறப்படவில்லை.

மேலும், பெருமுத்தரையர் என்ற சொல்லுக்குச் சிறப்புரை கூறுமிடத்துப் [1]பதுமனார்: 'நான்கு மரபுகளிலும் முற்பட்டிருக் கும் தலைமையுடையார் என்பாருமுளர்' என்று கூறியுள்ளார். செந்தலைக் கல்வெட்டுக்களில் முத்தரையர் வள்ளன்மை சிறப் பாகக் கூறப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. இக்கல் வெட்டைக்கொண்டு நாலடியாரிற் கண்ட முத்தரையர் காலத் தைக் கொள்வதற்கோ அதைக் கொண்டு நாலடியாரின் தொன் மைக்கான பல ஆதாரங்களை எதிர்ப்பதற்கோ போதுமான வன்மை இல்லை. மிகப்பழைய உரை ஆசிரியர்கள் அனை வரும் சங்க காலத்திய இலக்கிய, இலக்கணங்கட்கு எடுத்துக் காட்டாக நாலடியாரின் பாக்களையே பெரிதும் எடுத்து ஆண்டிருப்பதால் அதன் தொன்மையை இலேசில் மறுத்தல் கூடா. மிக்க வன்மையான ஆதாரங்கள் இருந்தாலன்றி நாலடி யார் சங்ககால இலக்கியம் என்று கொள்வதே பொருந்தும்.

---

[1]296-பாடல் உரை.

உதவிய அன்பர்கட்கு நன்றியுரை.

நாலடியாரின் பிற்பகுதிப் பாடல்கள் 200ம் நன்முறையில் செப்பஞ்செய்து எழுதி உதவிய அம்பாசமுத்திரம் தீர்த்தபதி உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர் வித்துவான் திருவாளர் M. R. கந்தசாமி பிள்ளை அவர்கட்கும், இந்நூலின் முற்பகுதியை எழுதி உதவிபுரிந்த சரசுவதி மகால் நூல் நிலையம் எழுத்தாளர் திருவாளர் S. இராஜகோபாலன் அவர்கட்கும் எனது நன்றி உரியதாகுக. இந்நூல் வெளியீடு காரணமாகப் பல்வகையாலும் தொன்மையாகவே உதவி புரிந்துவரும் பிர்ம்மஸ்ரீ K. வாசுதேவ சாஸ்திரியார், B. A., அவர்களுக்கு நமது நன்றி உரித்தாகுக. இதுவும், இன்னோரன்ன நூற்கள் பலவும் வெளியிடற்குப் பணித்து உதவி புரிந்துவரும் 'சரசுவதி மகால் நூல் நிலையம் கவுரவ காரியதரிசி பிர்ம்மஸ்ரீ S. கோபாலன், B.A., B.L., அவர்கட்கு எனது நன்றி உரித்தாகுக. இத்தகைய நூற்கள் வெளியிடற்குப் பேருதவி புரிந்துவரும் சென்னை அரசாங்கத்துக்கு நமது நன்றி என்றும் உரித்தாகுக.

சரசுவதி மகால்,
தஞ்சை.
20—10—53.

S. முத்துரத்ன முதலியார்,
பதிப்பாசிரியர்.

★

நாலடியார் அதிகார அட்டவணை.

[முற்பகுதி 1—20 அதி].

தொடர் எண்.			பக்க எண்.
	கடவுள் வாழ்த்து	...	12

1. அறத்துப்பால்

1. துறவறவியல்.

1.	செல்வ நிலையாமை	....	17
2.	இளமை நிலையாமை	....	41
3.	யாக்கை நிலையாமை	....	64
4.	அறன் வலி யுறுத்தல்	...	85
5.	தூயதல்லாமை	...	116
6.	துறவு	....	141
7.	சினமின்மை	....	169

2. இல்லறவியல்.

8.	பொறை உடைமை	...	194
9.	பிறர்மனை நயவாமை	....	227
10.	ஈகை	...	253
11.	பழவினை	....	283

12. மெய்ம்மை 314

13. தீவினையச்சம் ... 341

2. பொருட்பால்

1. அரசியல்

14. கல்வி 371

15. குடிப்பிறப்பு 410

16. மேன்மக்கள் 434

17. பெரியாரைப் பிழையாமை ... 457

18. நல்லினஞ் சேர்தல் 481

19. பெருமை 505

20. தாளாண்மை 533

இப்பதிப்பில் எடுத்துக்காட்டிய நூற்பெயர்கள், நூலுறுப்புக்கள் முதலியவற்றின் முதற்குறிப்பகராதி.

அகநா, அகம்—அகநாநூறு.
அசை—அசையோத்து.
அடியார்க்—அடியார்க்குநல்லார்.
அதி—அதிகாரம், அதிகரணம்.
அம்பிகாபதி—அம்பிகாபதிக் கோவை.
அயோத்தி—அயோத்தியா காண்டம்.
அரசு—அரசாட்சிச் சுருக்கம்.
அரசி, அரசாட்சி—அரசாட்சிப் படலம்.
அரும்—அரும்பதவுரையாசிரியர் (சிலப்)
அலங்கார—அலங்காரப்படலம்.
(கலிங்) அவதாரம்—
அவி—அவிரோதவுந்தியார்.
(கந்த) அவைபுகு—
அறநெறி—அறநெறிச்சாரம்.
(தாயு) ஆகார—
ஆசிரிய—ஆசிரியமாலை.
ஆசீவக-ஆசீவகவாதச் சருக்கம்.
ஆத்தி—ஆத்திசூடி.
ஆரணிய—ஆரணியகாண்டம்.
திருப்பாட்டு சுந்தரர்) ஆரூர்—
ஆற்றுப்—ஆற்றுப்படலம்.
இ.கொ.-இலக்கணக் கொத்து.
இடைச்—இடைச்சொல்லியல்.
(விநாய) இந்திரசாப—
இந். வதை—இந்திரசித்து வதைப்படலம்.
இரத—இரதநூபுர சக்கரவாளச் சருக்கம்.
இராமாவதாரம்.
இ. வி.—இலக்கணவிளக்கம்,
இளம்—இளம்பூரணர்.
இன்—இன்னிலை.
இன்னா—இன்னாநாற்பது.
இனிய, இனியவை—இனியவை நாற்பது.
இறை—இறையனாரகப் பொருள்
உஞ்சை—உஞ்சைக்காண்டம்.
உதய—உதயகுமாரன் அம்பலம் புக்ககாதை.
உபகாரப்—உபகாரப் படலம்.
உபதேச ரத்தின மாலை.
உவம—உவமவியல்.
உரி-உரியியல், உரிச்சொல்லியல்.
உலக—உலகவறவி புக்ககாதை.
உறுப்—உறுப்பியல்.
ஊர்சூழ்—ஊர்சூழ் வரி.
எச்ச—எச்சவியல்.
எழுத்—எழுத்ததிகாரம்.
ஏலாதி.
ஐங்குறு—ஐங்குறுநூறு.
ஒழி—ஒழிபியல்.
ஔவை-ஔவையார் தனிக்கவி.
கச்சி—கச்சிமாநகர் புக்காதை.

கடைதிறப்பு.
கந்த—கந்தபுராணம்.
கம்ப—கம்பராமாயணம்.
கம்பன்.
கல்லா—கல்லாடம், கல்லாடர்.
கலிங்க—கலிங்கத்துப்பரணி.
கலித்—கலித்தொகை.
களவு—களவியல்.
கற்பு—கற்பியல்.
காஞ்சி—காஞ்சிப் புராணம்.
காசி காண்டம்.
கார் நாற்பது.
கால்கோட்—கால்கோட்காதை.
காளிங்—காளிங்கர்
கிட்கிந்தை-கிட்கிந்தைப்படலம்.
கிருட்—கிருட்டினன் தூதுச் சருக்கம்.
கிளவி—கிளவியாக்கம்.
கிளைகண்டு—கிளைகண்டுநீங்கு படலம்
குசேலோபாக்கியானம்.
குண்டலகேசி.
குமரேசசதகம்.
குற்றிய-குற்றியலுகரப்புணரியல்.
குறள்—திருக்குறள்.
குறிஞ்சி—குறிஞ்சிப்பாட்டு.
குறுந்திரட்டு.
குறுந்—குறுந்தொகை.
(அயோ) கைகேயி—கைகேயி சூழ்வினைப்படலம்.
கொலைமறுத்தல்.
கொன்றைவேந்தன்.
கோயில்நான்மணி—கோயில் நான்மணிமாலை.
சங்கர—சங்கரநமச்சிவாயர்.
சந்தவிருத்தம்—திருச்சந்த விருத்தம்.
சமயசிவாகரமுனிவர்.
393 சி. சி. உ.—
சிதம்பரப்—சிதம்பரப்பாட்டியல்.
சிந்தா—சிவகசிந்தாமணி.
சி. போ.—சிவஞானபோதம்.
சிவஞானசரிதை.
சிவஞானதீப வார்த்திகம்.
சிவஞான நிலயம்.
சிவஞான போதமா—சிவஞான போதமாபாடியம்.
சிவப்பிரகாசர்.
சிலப்—சிலப்பதிகாரம்.
சிறுபஞ்ச—சிறுபஞ்சமூலம்
சிறுபாண்—சிறுபாணாற்றுப்படை.
சிறை—சிறைசெய்காதை, சிறை விடுகாதை.
சீவக—சீவகசிந்தாமணி.
சுந்தரர்—சுந்தரர்தேவாரம்.
சுப்பிர—சுப்பிரமணியதீட்சிதர்.
(சூளா) சுயம்—
சூ—சூத்திரம்.
சூ. நிகண்டு-சூடாமணிநிகண்டு.
சூர்ப்—சூர்ப்பநகைப் படலம்.
சூளா—சூளாமணி.
செய்-செய்யுளியல், செய்யு ளோத்து
சேதுபு—சேதுபுராணம்.
சேனா—சேனாவரையர்.
சொல்—சொல்லதிகாரம்.
சோணசைல—சோணசைல மாலை.
ஞானவாசிட்டம்
ஞானாமிர்தம்.
தக்கயாகப்—தக்கயாகப்பரணி.
தஞ்சைவா—தஞ்சைவாணன் கோவை.

(திருவிளை) தடா. அவதா—தடாதகைப்பிராட்டியார் அவதாரச் சருக்கம்.
தண்டலை—தண்டலையார் சதகம்
தண்டி—தண்டியலங்காரம்.
(சேதுபு) தனுக்—
தாயுமானவர்—தாயுமானவர் பாடல்
திணைமாலைநூற்றைம்பது.
திணைமொழியைம்பது.
திருஉலா—திருக்கைலாய ஞானஉலா.
திருச்சிற்—திருச்சிற்றம்பலக் கோவையார்.
திருநூற்—திருநூற்றந்தாதி.
திருமுரு—திருமுருகாற்றுப்படை
திருப்பாட்டு.
(சுந்தரர்) திருப்புறம்—
திருமந்—திருமந்திரம்.
திருமுருகு—திருமுருகாற்றுப் படை.
திருவடி—திருவடிசூட்டுப்படலம்
திருவா—திருவாசகம்.
திருவாத-திருவாதவூர்ப்புராணம்.
திருவாய்—திருவாய்மொழி.
திருவாலவாயு—திருவாலவாயுடையார் புராணம்.
திருவிளை—திருவிளையாடற் புராணம்.
திருவேங்—திருவேங்கடமாலை.
திவா—திவாகரம்.
துன்ப—துன்பமாலை.
துறவு—துறவுச்சருக்கம்.
தெய்வச்-தெய்வச்சிலையார்.
தேவா—தேவாரம்.
தொடை—தொடையோத்து.
தொல்—தொல்காப்பியம்.
நச்—நச்சினார்க்கினியர்.
நரிவிருத்—நரிவிருத்தம்.
நல்வழி.
நற்—நற்றிணை.
நறுந்—நறுந்தொகை.
நன்—நன்னூல்.
நன். வி.—நன்னூல்விருத்தி
நன்னெறி.
நாகபாச—நாகபாசப்படலம்.
(திருவிளை) நாட்டுச்—நாட்டுச் சருக்கம்.
நாட்டுப்—நாட்டுப்படலம்.
நாடவிட்ட—நாடவிட்டபடலம்.
நாலடி—நாலடியார்.
நான்மணி—நான்மணிக்கடிகை.
நீத்தார்—நீத்தார்பெருமை.
நீதி—நீதிவெண்பா.
நீதிநெறி—நீதிநெறிவிளக்கம்.
நீல—நீலகேசித்தெருட்டு.
நெடுநல்—நெடுநல்வாடை.
நேமி—நேமிநாதம்.
நைடதம்.
பட்டினத்தார்—பட்டினத்தார் பாடல்.
(காஞ்சி) பணாத—
பதி—பதிகம்.
பதிற்றுப்—பதிற்றுப்பத்து.
பரிதி—பரிதியார்.
பரிப்—பரிப்பெருமாள்.
பரிபா—பரிபாடல்.
பரிமே—பரிமேலழகர்.
பழம்பாடல்.
பழமொழி.
பழ—பழமொழிநானூறு.
பழியஞ்சின—பழியஞ்சின திருவிளையாடல்.
பள்ளியடை-பள்ளியடைப் படலம்.

பளிக்—பளிக்கறைபுக்ககாதை.
பாகவதம்.
(திருவிளை) பாண்டி சுரந்—
பாத்திர—பாத்திரம்பெற்ற காதை, பாத்திரங்கொண்டு பிச்சை புக்ககாதை.
பாத்திர மரபு—பாத்திரமரபு கூறியகாதை
பாரத வெண்பா.
பா-ம்—பாடபேதம்.
பால-பாலகாண்டம்.
பிங்—பிங்கலம்
பிரபுலிங்—பிரபுலிங்கலீலை.
பிரயோக—பிரயோகவிவேகம்.
புண—புணரியல்.
புறத்—புறத்திணையியல்
புறத்திரட்டு.
புறம், புறநா—புறநானூறு.
பு.வெ-புறப்பொருள் வெண்பா மாலை
பெரியதிரு, பெ. திரு—பெரிய திருமொழி.
பெருங்—பெருங்கதை.
பெரும்பாண்-பெரும்பாணாற்றுப் படை.
பேரா—பேராசிரியர்.
பொருள்—பொருளதிகாரம்.
போர்—போர்ச்சருக்கம்.
மணக்—மணக்குடவர்.
மணி—மணிமேகலை.
மதுரைக்காஞ்சி.
மந்திரப்—மந்திரப்படலம்.
மந்திரமாலை—திருமந்திரமாலை.
மந்தரைசூழ்ச்சி—மந்தரை சூழ்ச்சிப்படலம்.
(திருவாத) மந்தி—
மயிலை—மயிலைநாதர்.
மரபு—மரபியல்.
மலைபடுகடாம்.
(திருவிளை) மாணிக்க—
(கந்த) மாயை, மாயையுபு—
(பிரபு) மாயை-பூசை—
மாரீசன்-மாரீசன் வதைப் படலம்.
முத்—முத்தியிலம்பகம்.
முதுமொழிக்காஞ்சி.
முருகு—திருமுருகாற்றுப்படை.
மூதுரை.
மெய்ப்பாடு—மெய்ப்பாட்டியல்.
மேரு—மேருமந்தரபுராணம்.
மேற்—மேற்கோள்.
(நீலகேசி) மொக்கல—
மோகவதைப்பரணி.
(தாயுமான) மௌன—
யசோத—யசோதரகாவியம்.
யா. கா.—யாப்பருங்கலக் காரிகை
யாப்பு—யாப்புப்படலம்
யா.வி—யாப்பருங்கல விருத்தி.
யுத்த—யுத்தகாண்டம்.
(பிரபு)—பிரபுலிங்கலீலை.
வஞ்சி—வஞ்சிமாநகர் புக்க காதை.
வத்த—வத்தவகாண்டம்
வரந்தரு—வரந்தருகாதை.
வளையாபதி.
வன—வனம்போக்குப் படலம்.
வாக்கு—வாக்குண்டாம்.
விநா, விநாயக—விநாயக புராணம்.
(திருவிளை) விருத்த—
வில்லி—வில்லிபுத்தூராழ்வார் பாரதம்.
விவேகசிந்தாமணி.
விழாவறை—விழாவறைகாதை.
வினை—வினையியல்.
வீர, வீரசோ—வீரசோழியம்.

வெங்கைக்கோவை.

வெற்றி—வெற்றிவேற்கை.

(பு. வெ.) வென்றிப்

வேதா—

வேற்வி—வேள்விப்படலம்.

வேற்-வேற்றுமையியல்,
வேற்றுமை மயங்கியல்.

(மேரு) வைசயந்த-

வைத்திய-வைத்தியநாத
தேசிகர்.

வைரா, வைராக்கிய-
வைராக்கிய சதகம்.

நாலடியார் உரைவளம்

சிறப்புப்பாயிரம்

தருமர் உரை:-

மாலின் மருகா மதகளிறே ([1]மாருமா
பாலமுத மோடு பழமி)டுவேன்—சாலவே
நாலடி நானூறு நழுவாம லென்மனத்திற்
சீலமுட னிற்கத் தெளி.

சீல முனிவ ரிருந்து தெரிந்துரைத்த
நாலடி நானூற்றி னற்பொருளைப்—பால்வகையே
கண்டான் பொருடான் பயனுரைத்தான் காதலித்துத்
தண்டார்ப் பொறைத்தருமன் தான்.

வெள்ளாண் மரபுக்கு வேதமெனச் சான்றோர்க
ளெல்லாருங் கூடி யெடுத்துரைத்த—சொல்லாய்ந்த
நாலடி நானூறு நன்கினிதா வென்மனத்தே
[2]சீலமுட னிற்கவே செப்பு.

அதிகார வகுப்பு.

வளங்கெழு திருவொடு வையக முழுதும்
உளங்குளி ரின்பத் தின்ப முவப்ப

---

1 பிறையுள்ளிருப்பவை மற்ற உரைச்சுவடிகளிலிந்து கிடைத்தவை.

2 'சீலமுட னிற்க தெளிந்து' என்பது பாடபேதம்.

வண்பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாஅங்
கெண்பெருங் குன்றத் திருந்தவ முனிவரர்
அறம்பொரு ளின்பம் வீடெனு மிவற்றின்
திறம்பிற ரறியுந் திறத்தை நாடிப்
பண்புற வெடுத்துப் பாங்குறப் பகர்ந்த
வெண்பா வியலென் றுயிர மிவற்றுட்
பாரெதிர் கொண்டு பரவி யேத்த
நீரெதிர் வந்து நிரையணி பெற்ற
மேனாற் றகையின் விதிமுறை பிழையாஅ
நானூ றவற்றி னயந்தெரிந் தோதிய
மதுமலர்த் தண்டார்ப் பதுமன் தெரிந்த
ஐயமில் பொருண்மை யதிகா ரந்தாம்
மெய்யா நலத்த வெண்ணோ நவற்றுள்
அறவியல் பதிமூன் றரசர்க் குரிய
பொருளிய லிருபத் தொருநான் கின்பம்
ஆன்ற வகையை மூன்றென மொழிந்தனன்
சான்றோ ரேத்துந் தருமத் தலைவனே.

பதுமனார் உரை:—

பாயிரம்.

அறவிய லிருவகைத் தாமவை தம்முட்
டுறவே யில்லற மிருமூன் றென்ப;
பொருளியல் வகையேழ் புலப்படக் கிளப்பி
னரசிய லேழதி கார மாகு
நட்பிய ஞன்கதி கார மின்ப
மூன்றே துன்ப வியலதி கார
நான்கே மூன்றே பொதுவியல் பகையியல்
கூறதி கார நான்கே பன்னெறி

கூறதி	கார	மொன்றே	யின்ப
வகைதா	னிருவகை	யவற்று	ளின்ப
துன்பத்	ததிகார	மொன்றே	ஏனை
இன்பங்	கூறதி	கார	மிரண்டே.

என்பது சூத்திரம்.

என்னெனின், அவற்றுள்,

அறவியல் இருவகையாவன:— துறவறம், இல்லறம்.

அவற்றுள் (1) **துறவறம்** ஏழதிகாரம். அவையாவன:—

1. செல்வநிலையாமை
2. இளமைநிலையாமை
3. யாக்கை நிலையாமை
4. அறன்வலியுறுத்தல்
5. தூயதன்மை
6. துறவு
7. சினமின்மை

ஆக 7.

(2) **இல்லறம்** ஆறதிகாரம். அவையாவன:—

1. பொறையுடைமை
2. பிறர்மனை நயவாமை
3. ஈகை
4. பழவினை
5. மெய்ம்மை
6. தீவினையச்சம்

ஆக 6.

ஆகப் பதின்மூன்றும் அறவியல்.

இனிப் **பொருளியல்** ஏழுவகைப்படும். அவையாவன:— அரசியல், நட்பியல், இன்பவியல், துன்பவியல், பொதுவியல், பகையியல், பன்னெறியியல் என ஏழு.

அவற்றுள் (1) **அரசியல்** ஏழதிகாரம். அவையாவன;—

1. கல்வி
2. குடிப்பிறப்பு
3. மேன்மக்கள்
4. பெரியாரைப்பிழையாமை
5. நல்லினஞ்சேர்தல்
6. பெருமை
7. தாளாண்மை

ஆக. 7

(2) **நட்பியல்** நான்கதிகாரம். அவையாவன:—

1. சுற்றந்தழால்
2. நட்பாராய்தல்
3. நட்பிற்பிழை பொறுத்தல்
4. கூடா நட்பு

என 4 ஆம்.

இனி (3) **இன்பவியல்** இருவகைப்படும்.
அவற்றுட்டலையின்பம் மூன்றதிகாரம், கடை இன்பம் மூன்றதிகாரமாம்.

அவற்றுட்டலையின்பம் மூன்றதிகாரமாவன:—

1. அறிவுடைமை
2. அறிவின்மை
3. நன்றியிற் செல்வம்

ஏனைக் **கடையின்பம்** பின்பே வரும்.

(4) **துன்பவியல்** நான்கதிகாரம். அவையாவன:—

1. ஈயாமை
2. இன்மை
3. மானம்
4. இரவச்சம்

என 4 ஆம்.

(5) **பொதுவியல்** அதிகாரம் ஒன்று. அஃதாவது:—

1. அவையறிதல்

(6) **பகையியல்** நான்கதிகாரமாம். அவையாவன:-

1. புல்லறிவாண்மை
2. பேதைமை
3. கீழ்மை
4. கயமை

ஆக 4 ஆம்

(7) **பன்னெறி** அதிகாரம் ஒன்றே. அஃதாவது:-

1. பன்னெறி

மூன்பு, நிறுத்தின **கடையின்பம்** மூன்றதிகாரம். அவை யாவன:—

அவற்றுள் இன்ப துன்பவதிகாரம் ஒன்று
அஃதாவது 1. பொதுமகளிர்:

நின்ற விரண்டாவன:—2. கற்புடைமகளிர்
3. காமநுதலியல்
ஆக இரண்டாம்.

ஆக அதிகாரம் 40

பாயிர முற்றும்.

———o———

விளக்க உரை:—

அதிகாரவடைவு

[1]செல்வ நிலையாமை, இளமை நிலையாமை, யாக்கைநிலை யாமை யென்னுமதிகார வடைவுகளுக்கு மலைவாம்; அஃது யாதெனின் முன்பு யாக்கையுளதா யதில் நிலையாமையுணர்த்தி, யது நிலைநின்ற பின்பு இளமை நிலையாமை யுணர்த்திய பின் அந்த

---

[1] இப்பகுதி சென்னை கீழ்த்திசைக் கையெழுத்துப்பிரதி நூல்நிலையச் சுவடியினின்றும் பூர்த்திசெய்து எழுதப் பெற்றது.

விளமைப் பருவத்திலே முயன்றுண்டான செல்வத்தினிலேயாமை யுணர்த்த வேண்டாவோ வென்னில்; யாக்கைக்குப் புருஷாயசு நூறுவயதென்று மிளமைப் பருவ முப்பத்திரண்டு வயதென்று மொரு நியமங்களுண்டு. இந்தச் செல்வத்துக்கு இத்தனை நாணிற்கு மென்றோருறுதி யில்லாமையா, லிப்படிக்கொரு வுறுதி யில்லாத செல்வம் வந்தெய்தின பொழுதே மறுமைக்குறுதியான வறங்களைச்செய்ய வேண்டுமென்றற்கு, முன்பு செல்வ நிலையா மையை வைத்து அதன்பின்பு அப்படி நிலையாத செல்வத்தை யனுபவிப்பதற்கு இளமைப் பருவத்தை நிலையாகக் கருதியிராமல் முப்பத்திரண்டு வயதுக்குள்ளே துறந்து தவஞ்செய்யவேண்டு மென்றற்கு, இளமைநிலையாமையினை யதிகார வடைவு செய்த பின்பு, யாக்கைக்குக் கற்பித்த வயது நூறென்று இதனை நிலை யென்று கருதாம லறத்தினை நாடோறும் வழுவாமற் செய்ய வேண்டுமென்றற்குப், பின்பு யாக்கை நிலையாமையைச் சொன்னாரென்பதாம்.

ஆதலால் நிலையாமையின் விரைவு கூறற்பொருட்டு முந் துறச் செல்வ நிலையாமையினை வைத்து, அதற்குப்பின்பு சிறிது காலம் நின்றபின்பு நிலையாவான இளமைநிலையாமையினை வைத்து, அதற்குப்பின்பு முதியரானபருவத்தினைக் குறித்து இளமைநிலையாமைக்குப் பின்பு சிறிதுகாலம் நின்றபின்பு நிலை யாவான யாக்கைநிலையாமையினை வைத்து, அதன்பின்பிந்தப் பெறுதற்கரிய யாக்கையினைப் பெற்ற பொழுதே யறஞ்செய்தற் பொருட்டாக அறன்வலியுறுத்தலைவைத்து, அதன்பின்பாக அறத் தினைமறந்து விஷயங்களிலே மயங்காமல் விஷயங்களில் தூய்மை யில்லாமையை யறிவித்தற்பொருட்டாகத் தூயதன்மையினை வைத்து, அதன்பின்பாக அப்படித் தூய்தலில்லாமையில் நின்று மயங்காமல் மறுமைக்குறுதியாக மனைவாழ்க்கையினைத் துறந்து தவஞ்செயற் பொருட்டாகத் துறவென்னுமதிகாரத்தைவைத்து, அதன்பின்பு இந்தத் துறவுக்கு மறுதலையாகிய சினமெழாமலுயிர் கள் மேலன்புவைத்தற் பொருட்டாகச் சினமின்மையை வைத்து, அதன்பின்பாக இப்படி யொத்த தவத்துக்கு மறுதலையாகிய பசி யைப் பொறுத்தலும், அறியாமையால் ஒருவர் தன்னை யொரு

தீங்கு செய்தாலதனைப் பொறுக்கவுமென்பது கொண்டு பொறை யுடைமையைவைத்து, அதன்பின்பாக இல்லறத்தை நடத்து வார்க்கு இந்தப் பிறர்மனை நயவாமை பெரும்பான்மையாதலி னிந்தப் பிறர்மனைநயவாமையை இல்லறத்துக்கு முதலதிகாரமாக வைத்தார்.

இந்திரியங்கள் செய்யு [1]மீகைகளை மீட்டுத் தன்வசத்திலே யொருப்படுத்திக்கொள்ளுதல் முன்சொன்ன பொறையுடைமை யினும் பிறர்மனையாளை நயவாமையரிதாதலிலதன்பின் இந்தப் பிறர் மனை நயவாமையைவைத்து, இந்தத்தீயகுணமில்லாதவனுக் கல்லது, கொடுத்தல் கூடாதாதலிற் பிறர்மனை நயவாமையின் பின் ஈகை யென்னுமதிகாரஞ் சேர்த்து, முற்பிறப்பிலொருவற் கொன்றைக் கொடாதவன் துன்பமுற்றுப் பசிப்பிணி நலிய இரந்து திரிவனென்னுமிதனை யறிவித்தற்கு ஈகைக்குப் பின்பாகப் பழவினையை வைத்து, இந்தப் பழவினையைத் தீரவுணரு மிவனுலகத்தினடந்த போது மொழுக்கத்தினைத் தப்பானென்பது கொண்டு உலகத்தினடந்தபோது முண்மையினை மெய்ம்மை யென்று பழவினையின் பின்பேவைத்து, உலகத்தினடந்த போதுந் தன்மதானங்களைச் செய்யாமற் றீமையிலே புரிந்தொழுகுமவற்கு அறிவித்தற் பொருட்டாக இப்பிறப்பின் மிகவுந் துன்பமுறுபவர் முற்பிறப்பிற் றீங்குசெய்தவரென்னுமது தோன்ற அதன்பின்பு தீவினையச்சத்தினை வைத்து, அப்பாற் பதின்மூன்றதிகாரமாகச் சேர்த்து இனிப் பொருட்பாலதிகார மடைவு செய்தற்குக் கல்வி முதலாக வெடுத்துக்கொண்டார்.

பொருட்பாலுக்கு அரசர்க்கு மற்றுமொழிந்தோர்க்குங் கல்வி யுண்டானுலுலகத்திற் பிராணிகளிற் க்ஷேமப்படுதலானுந் தனம்[2] பரிபாலித்து வருதலானும் பொருட்பகுதிக்குக் கல்வி பெரும் பான்மையாதலிற் கல்வியை முதல் வைத்து, இந்தக் கல்விக்குப்

---

1 ஈகை = ஆசை (வடமொழி 'ஈஹா'):மிகை யென்னும் பாடம் அச்சுப்பதிப்புக்களில் காணப்படுகிறது.

2 'தர்மம் பரிபாலிப்பது' என்பது பாடபேதம்.

பின்பு **குடிப்பிறப்பு** வைத்தார் கல்விக்குத்தக வொழுகுதல் குடிப் பிறந்தார்க்கு மிகவும் வேண்டுமாதலிற் குடிப்பிறப்பைச் சேர்த்து, அதன்பின்பு எல்லாக் குணங்களிலும் வைத்து மேம்பாட்டுத் தன்மை குடிப்பிறந்தார்க்குப் பெரும்பான்மையாதலிற் குடிப் பிறப்புக்குப் பின்பு **மேன்மக்களை** வைத்து, இப்படிக் கொத்த மேன்மக்களைப் பிழைத்தவர்களுக்கு மறுமைக் குறுதியுமில்லை யாய் இப்பிறப்பினிலும் யாவராலு மிகழப்பட்டு அந்தப் பிராணவ பிமான மென்கிறது மில்லையாய்விடுவராதலின் மேன்மக்களைப் பிழைத்தலாகாதென்பது கொண்டு அதன்பின்பு **பெரியாரைப் பிழையாமையை** வைத்து, இப்படிக்கொத்த முறைமையினையுடை யாரைச் சேர்ந்து மதிப்புண்டாக வேண்டுமென்பது தோன்றப் பின்பு **நல்லினஞ்சேர்தல்** வைத்து, ஒருவர் தீயராகிலும் நல்லினஞ் சேரவேயவர் பெருமையடைவ ரென்பது தோன்றவதன் பின்பு **பெருமை** யென்னுமதிகாரத்தை வைத்து, அந்தப் பெருமையு முயற்சியுடையாற் கல்லதில்லை யென்பது தோன்றப் பெருமைக்குப் பின்பு **தாளாண்மை**யை வைத்து, இப்படி முயன்று செல்வத்தினை யுண்டாக்கினார்க் கல்லது சுற்றமுண்டாகாதென்பது தோன்றத் தாளாண்மைக்குப் பின்பு **சுற்றந்தழாலை** வைத்துச், சுற்றந்தழுவி யிருப்பாரொருவர் தமக்குச் சுற்றமாகத் தக்காரை யாராய்ந்து கொள்ள வேண்டுமென்பது கொண்டு அதன்பின்பு **நட்பாராய்தலை** வைத்து, அப்படியாராய்ந் துறவுகொண்ட பின்பு அவன் செய்த பிழைகளைப் பொறுக்க வேண்டுமாதலின் பின்பு **நட்பிற் பிழை பொறுத்தலை** வைத்து, அதன்பின்பு நட்பாகிய முறைமையினை யுடையவர் தமது காரியங்களுள் எது குறைவறப் பலிப்பித்துக் கொள்ளுமளவும் வேற்றுமை சிறிதும் புலப்படாமற் கலப்புண்டாக அவர் மனங்கொள வொழுகிப் பின்பு கால் தாழ்ந்து விடுவா ராதலினிவர் குணத்தினைப் பின்புகண்டு அவருடனே கரிசங்கொள் ளாமலிது சிலர்க்கியல் பென்றிருத்தல் நட்பிற் பிழைபொறுக்கும் பெரியோர்க்கே இவராவதென்பது கொண்டு அவர்பின்பே **கூடா நட்பை** வைத்து, இப்படி யொத்தாரையும் நல்லவராக்கித் தமது சுபாவத்தன்மையுங் குன்றுமலிருத்தல் அறிவுடையோர்க்கல்லது கூடாதென்பதுங்கொண்டு **அறிவுடைமை**யினை அதன்பின்பு வைத்து,

அறியாமையால் வருங்குற்றம் விரித்துரைத்தா லல்லதுமுன் சொன்ன வறிவுடைமை சாயாமல் நில்லாதென்பது கொண்டு முன்சொன்ன வறிவுடைமையைப் பேணவேண்டி, யதன் பின்பே யறிவின்மையை வைத்து, இந்த அறிவில்லாதார்க்கு உளதாகிய செல்வம் பிறர்க்குப் பயன்படா தென்பது தோன்ற வதன் பின்பே நன்றியிற் செல்வத்தை வைத்து, இந்தச்செல்வம் பிறர்க்குப் பயன்படாமையாவதனுல் வருங்குற்றந் தோன்ற அதன்பின்பு ஈயாமையை வைத்து, ஒருவர்க்கொன்றைக் கொடா மல், மறுமைக் குறுதியான வறங்களையுஞ் செய்யாமற், ருனுந் தன்னுடம்பினைச் செறித்திருக்குமவனே மிடியனென்று காட்டுதற்கு ஈயாமையின் பின்பே இன்மையை வைத்து, வறுமை யுற்றவ னுக்கே மானிக்கத்தக்க[1] செய்கைகளுண்டாவது ஆதலாலப்படி வறுமையிலே துன்பமுறுபவன்; மானபங்கம் வந்தகாலத்து வறுமையாலுங் கிடந்து நலங்காமற், றன்பிராணனைவிட்டு மானத்தினைப் பரிகரிக்கிறவது வறுமையுடையவனுக்கே பெரும் பான்மை யாதலாலிதன் பின்பே மானமென்னு மதிகாரத்தை வைத்து, அப்படி மானத்தினைப் பரிகரியாமல் வறுமையாலே பிறர்பக்கற் சென்றிரந்து, முயிர்வாழவென்று துணிவனுயி விடுப வருமில்லையாய் இகழுபவரேயுள்ள துலகத்தி லதனு லிரப்பினை யஞ்சவேண்டு மானமுடையா ரொருவற் காதலா லிரவச்சத்தை யதன்பின்பே வைத்து, எல்லாக் கல்வியையுமுடைய பல சபை யிலுமிருந்து உலகத்திலுள்ளாருடைய இயல்புகளையு மறியுமவர், இரப்புக்குத் துணிந்து செல்லா ரென்பது தோன்றவதன்பின்பு அவையறிதலை வைத்துச், சபையிலுள்ளாரியல்புகளை யறியாமல வைக்குள்ளே யொன்றினைச் சொல்லி இகழப்படுவர் புல்லறிவாள ராதலால் அவையறிதலின் பின்பே புல்லறிவாண்மையை வைத்து, இந்தப் புல்லறிவு சிலவறிந்து மறியாமலுமான தன்மையாதலிற் பேதைமை நேராக வறியாமலே இருக்குமாதலிற் புல்லறிவாண் மைக்குப் பின்பு பேதைமையை வைத்து, இந்தப் பேதைமை யறி விலனென்னு மாத்திரமல்லது, பிறர்செல்வங்கண்டு அது பொரு

---

[1] மானிக்கத்தக்க—பெருமைப்படுத்தத்தக்க

மையு, மவரைப் புறஞ்சொல்லுதலு, மவர் மனங்கொள்ளும்படி யவருடனேகூடி யுறவுபோலே யிருந்து அவற்றுத்தாழ்வு செய்தலாற், கீழ்மைக்குணம் பேதைமையினு மிகவும் நீக்கப்படுமாதலி லதன்பின்பு கீழ்மை யென்னு மதிகாரத்தினை வைத்து, இந்தக் கீழ்மைபோலு மன்றியிலே தனக்கு ஒருவர் பல நன்றிகளையுஞ் செய்து தானுமவராலே பரிகாரப்பட்டு இருந்தாலு, மவர் நெஞ்சறியாமற் றனக்குச் சிறிது குறையுண்டாகி, லவ்வளவு கொண்டு அவர்களுக்குக் கொலையினைச்செய்யுந் தன்னை நெருங்கிவந்தார் சிலருக்குப் பயன்பட்டு மாசாரஞ்செய்து சிறிது பொருட்பெறிற்றன்னைப் பெரியானொருவனாக மதித்து, மியாவர் சிலரையுங்கண்ணேட்டமற அவரெதிர்நின்று குடிப்பழிதான வசனங்களைச் சொல்லியு, மிப்படியொத்த குணங்களையுடைய ராதலின், முன் சொன்ன கீழ்மையினு மிகவுந் தூஷிக்கப்படுமாதலின் பின்பு இந்தக் கயமையினை வைத்துப், பின்பு அதிகாரத்திலேறின பாட்டுகளை யெடுத்துப் பன்னெறி யென்றோரதிகாரத்தை வைத்து, அதன் பின்பாக இழிவான குணங்களையுடைய பொதுமகளிரைவைத்து, இந்தப் பொதுமகளிர் குணங்களொன்றுமில்லையாகவே நல்ல குணமுடையார் எல்லாராலு மதிக்கப்படுவராதலாலதன்பின்பு கற்புடை மகளிரை வைத்து, இப்படி பொருட்பாலிருபத்தா றதிகாரமுமடைவு செய்து;[1]

---

[1]இவ்வுரை யாசிரியர் செல்வ நிலையாமை முதலாகத் தீவினை யச்ச மீறாகப் பதின்மூன்றதிகாரம் அறப்பகுதியாகவும்; கல்வி முதலாகக் கற்புடை மகளிரீறாக விருபத்தாறதிகாரம் பொருட் பகுதியாகவும், 'காம நுதலியல்'—என்ற ஓரதிகாரம் இன்பப் பகுதியாகவும் வகுத்துள்ளது காண்க.

''தெய்வப் புலமைத் திருவள்ளுவநாயனாரும் கற்புடை மகளிரை அறத்துப் பாலினும், பொதுமகளிரைப் பொருட்பாலினும், சேர்த்துள்ளது இங்கு கருதற்குரியது. 'காமநுதலியல்'—தவிர்த்த மற்றை யிரண்டதிகாரங்கட்கும் அகபொருட் கிளவி இல்லாமையும் இவ்வதிகார வடைவிற்குக் காரணமாம்; என்று சென்னைக் கல்விச்சங்கத்துத் தமிழ்ப் புலவராக இருந்த தாண்டவராய முதலியாரவர்களும் தமது நாலடி உரையில் கூறியிருப்பது காண்க'' என்பர் புதுவை நயனப்பர்.

காமத்துப்பால் ஓரதிகாரமாகவும் இப்படி நாற்பததிகாரமும், பதுமனார் அடைவுசெய்த இந்த அறம், பொருள், இன்ப மூன்றும் வழுவாமல் நடாத்தி; யிந்த நாற்பதகிகாரத்திலுஞ் சொல்லப் பட்ட குற்றங்களைத் தவிர்த்து, குணங்களை நூல் சொன்னபடியே தப்பாம லொழுகினவர்க்கு, வீடுபேறு முண்மையாதலிலிதற்குக் கடவுளை வழிபட்டு அந்தக் கடவுளருளாலே இவை தப்பாமல் நடந்து வீடுபேறுண்டாக வேண்டு மென்றற்குக் கடவுளையொரு பாட்டினால் வாழ்த்தினார்.

சிறப்புப் பாயிரம் முற்றும்.

கடவுள் வாழ்த்து.

வானிடு வில்லின் வரவறியா வாய்மையாற்
கானிலந் தோயாக் கடவுளை—யாநிலஞ்
சென்னி யுறவணங்கிச் சேர்துமெம் முள்ளத்து
முன்னி யவைமுடிக வென்று.

தருமர் உரை:— என்பது. வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்—வானின்கண்ணே தோன்றியவில்லினது தோற்றமுமிழப்பு மறிய வரிது; அதுபோன்ற பிறப்பினதியல்பையு மறியவரிது; இது உண்மை யாதலால், கானிலந்தோயாக் கடவுளை—நிலத்தின் கண்ணே கால் தரியாததோர் கடவுளை, யாநிலஞ்சென்னியுற வணங்கி—யாம் நிலத்தின் கண்ணே சென்னி முதலாகிய வெட்டுறுப்புக்களுமழுந்தும்படி(யாக) வணக்கஞ் செய்து, சேர்தும்—சேரக்கடவோம்; எம்முள்ளத்து முன்னியவை முடிக வென்று—[எம்மனத்தில் நினைந்தன முடிவனவாகக் கருதி].

மனத்து நினைவு யாதெனின் மாயையாகிய விப்பிறவி மாறும் வகை. வானிடு வில்லின் வரவறியா வாய்மையா லென்றதினலே பிறப்பும், இறப்பும் யாவர்க்குந் தெரியாததுண்மை யெனக் கொள்வ தெப்படியோ வெனில், அவை ஒருதலை விளக்கமென்னு மிலக்கண விதியால் வானின் தோன்றும் வில்லினது தோற்றமு மிழப்புந் தெரியாதென்று குறிப்பாற் கொள்ளப்பட்டது. கானிலந் தோயாக் கடவுளை யென்றது தேவத்தன்மை கூறியதாயினும், தேவராலு மிவ்வளவென்று அறியப்படாத பெருமையினைவுடைய கடவுளாதலால்; அவரது பெருமையை நினைப்பவர் உள்ளக் கமலமிசை யிடைவிடாதே தோயுந் தன்மையையுடைத்தான பாதங்களாதலால், நிலத்தின்கண் தோயாத பாதங்களை யுடையவரென்றுயிற்று. பிறப்பறுகை காரணமாக வணங்குவோமெனினும் இந்நூலால் அறம், பொருளினது குணத் தன்மைகளை யறிந்து அதனல் வீடுபெற வேண்டுமென்பதாதலின்

இந்நூற்கு இடையூறு வாராதினிதின் முடியும் பொருட்டு வணக்கஞ் செய்தது.

பதுமனார் உரை:- என்பது கடவுள் வாழ்த்து. வானிடு வில்லின் வரவுபோன்றிருந்த வரவினையறிந்து கானிலந் தோயாக் கடவுளை யாம் நிலத்தில் சென்னியுற வாய்மையால் வணங்கிச் சேர்து மெம்மனத்து நினைத்தன முடிவனவாக என்றவாறு.

இதற்கிவ்வா றன்றிப் பிறவாற்றானும் பொருளுரைப்பாருமுளர். வானிலே தோற்றப்படா நின்ற வில்லினது வரவு போன்ற பிறப்பியல்பை மெய்ம்மையாக வறிந்து, பூவில்மேல் வந்தருளு மிறைவனை யாஞ் சென்னியாலே உறவணங்கிச் சேர்து மென்றது நினைந்தன முடிவனவாக வென்றவாறு.

பிறப்பியல்பிற்கு முற்றுவமமாதலால் வானிடுவில்லுவம மாயிற்று. வரவு ஈண்டியல்பு. அறியாவெனவே* அறிந்தென்ப தாயிற்று. வாய்மையாலென்றது இறைவனே வணங்குவாற்குப் பொய்யா வாய்மையாற் படுவதின்மையிற் பிறப்பியல்பை மெய் யாக வறிந்தென்பதாம். கானிலந் தோயாக் கடவுளை யென்பது கடவுளரோ டொத்தளவினரன்றி யொத்தாரு மிக்காரு மில்லாத விறைவற்குக் கானிலந்தோயப் படாமையும் பொதுவாகிய வியல் பொன்றையுமே யிவர்க்குக் கூறும் பான்மை யல்லாமையும் †பூவின்மேல் வந்தருளு மிறைவனென்பது கருத்து. யா நிலஞ் சென்னியுற வணங்கிச் சேர்து மென்றது வணக்கங்கள் பல வாதலின் வண்மையாற் சமய வணக்கத்தியல்பு தோன்றயாம் நிலத்திலேயுற வணங்கிச் சேர்து மென்றார்.

என இக்கடவுள் வாழ்த்தின்கட் சொல்லிய கருத்தினால் வீடு பெறற்குக் கடவுள் வழிபாடே வேண்டுமென்பது கருத்து.

---

*பாயிரமுதல் இதுவரை அடையாற்றுச் சுவடி நிலையத்தி லுள்ள "நாலடி விருத்தி" என்ற சுவடியின் துணைகொண்டு பூர்த்தி செய்யப்பட்டது.

† 'மலர்மிசை யேகினான்' என்னும் வள்ளுவர் வாக்கை இவ்வுரை தழுவியிருப்பது காண்க.

இனி யதுவேயுமின்றியும், 'முன்னியவை' யென்ற பன்மை வாய்ப் பாட்டால் வீட்டின் பத்துக்குக் காரணமாகிய வறம், பொருள், இன்பம் முதலிய மூன்றினையு மிடையூறுபடாது செய்துமுடிக்க வேண்டுமென்றவாறு. இன்பம், பொருள், அறமென்னுது அறம், பொருள், இன்பமென்ற பொருண்மை யென்னையெனின், (மு)ன் கூறப்படுவனவற்(ரேடொ)ட்டியது பிற் கூறப்படுதலானும், நூல் வழக்கத்தானும், அறம், பொருள், இன்பமென்ருர். அவ்வறம், பொருள், இன்பத்துக்கு வருவாய்கள் யாவையோ வெனின்; இந்நூலின்கண் அமைத்த அறம், பொருள், இன்பமாவது; அறத்தைக்கருதிச் சொல்லப்பட்ட அதிகாரங்கள் பதின்மூன்றும், பொருளைக்கருதிச் சொல்லப்பட்ட அதிகாரங்கள் இருபத்தாறும், காமவின்பத்தைக் கருதிச் சொல்லப்பட்டதோ ரதிகாரமுமாக நாற்பததிகாரத்தாலடக்கிய தர்மார்த்த காமங்களாகிய புருஷார்த் தங்களை, [1]எண் பெருங் குன்றத்தெண்ணுயிர மிருடிகளும், உக்கிரப் பெருவழுதி முன்னெழுதி நீரி னெழுக்கப் பட்டொரு பொருண்மேற் பலவாய்ப் பரந்த வெண்ணுயிரம் வெண்பாவுக்கு ளெதிரேறின கவிகள் நானூறும், தருமநெறி வழக்கமாய்க் கிடந்த விந்தக்கவிகள் நானூற்றையும் நாற்பததிகாரத்திலும் பண்பாலும், பயனுலுமின்பத்தாலும், சார்பாலும், பொருளுக் கேற்பப் பத்து வெண்பாக்களை யோரதிகாரமாக்கிப், பதுமா சாரியராற் சேர்க்கப்பட்ட சிறப்புப் பெயரால் நாலடி யென்னும் பெயரால் முடிதற்கு மிதனையோதிறைக்கு மறிவும், ஒழுக்கமும், வீடுபேறுமாகிய பயன் பெறுதற்குக் காரணமாகவு மிவ்வாசாரி யனால் கடவுள் வணக்கஞ் சொல்லப்பட்டது.

வானவருந் தோற்கப்படா நின்ற காமன் கையில் வில்லினது வரவினையுமறியாத வென்றும் பொருளுரைப்பாரு முளர்.

விளக்க உரை:—வானிடு வில்லின் வரவறியா—வானிலே

---

[1]எண்பெருங்குன்றம் வருமாறு:—(திருவாலவாயு—
பு. கு. பக். 288)

பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி,
யருங்குன்றம் பேராந்தை யானை—யிருங்குன்றம்,
என்றெட்டு வெற்பு மெடுத்தியம்ப வல்லார்க்குச்,
சென்றெட்டுமோ பிறவித் தீங்கு.

யிடுகின்ற வில்லினது தோற்றமு மழிவும் போன்ற பிறப்பிறப்பா கிய வியல்பை யறிந்து; வாய்மையாற் கானிலந் தோயாக் கடவுளை —நிலத்திற் கால் தோயாத கடவுளை உண்மையாகவே; யாநிலஞ் சென்னியுற வணங்கிச் சேர்தும்—யாம் நிலத்தைச் சென்னியுற வணங்கி யடைதும்; எம்முள்ளத்து முன்னியவை முடிக வென்று —எம்மனத்து நினைத்தன முடிவதாக வென்றவாறு.

மனத்து நினைவு—பிறப்பிறப்பு மாறும் வகை. வாய்மை யென்பது நெஞ்சு, வாக்கு உண்மையாதல்.

மேற்கோள் பகுதி:—

நச்:—கட்டளை ஒரூஉ மோனைத் தொடைக்கு **"வானிடு வில்லின் வரவறியா வாய்மையால்"** என்பதை எடுத்துக்காட்டுவர்.

தம்மொடுதாம் வந்த கட்டளை அடியெதுகைக்கும் **"வானிடு .... யாநிலம்"** என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.
—தொல். செய். சூ. 92; 93.

தெய்வ., பேரா.,:—செய்யா வென்னும் வினையெச்சத்துக்கு **'வானிடு..................வாய்மையால்''** என்பதை எடுத்துக்காட்டுவர்
—தொல். சொல். வினை. சூ. 33.

நச்:—கடவுள் வாழ்த்தின் வேறுபாடுகளுள் ஒன்றற்கு **"வானிடு வில்லின்**...........முடிக வென்று" என்பதை மேற்கோ ளாகக் காட்டுவர். —தொல். செய். சூ. 109.

சீவக:—"மற்றவன் றேவனாகி வானிடு சிலையிற் றோன்றி —நூல்கள், இந்திரவில் இன்னவாறு தோன்று மென்று அது தோன்று முறைமை கூறுவாகலின், அங்ஙனந் தோன்றுகின்ற தேவர்க்கு அஃது உவமையாயிற்று; இக்கருத்தானன்றே **'வானிடு வில்லின் வரவறியா'** என்றார் பிறரும்" என்பர் அதன் உரைகாரர்.
—சீவக. 951.

குறிப்பு:—

தேவர்களின் தோற்றத்திற்கு இந்திரவில்லை உவமை கூறுவர். இவை கீழ்க்கண்ட நூல்களில் ஆளப்படுவதனால் அறியலாம்.
"திருவிலிட்டுத் திகழ்தரு மேனியன்......... பெருவிறல் வானவன்"
—சிலப். 15: 156–160

"திருவிட்டுத் திகழ்தரு மேனியன்" —மணி. 6: 10

"அந்தரப்பே ருலகத்து ளமரரைமற் றமறையுங்கா
லிந்திரவில் லெனவெளிப் பட்டிமையவர்க டொழுதேத்தச்
சுந்தரநன் மணிப்படிவ மெனச்சுடர்ந்து தோன்றுவரே"
—சூளா. துறவு. 209.

"மற்றவன் றேவனாகி வானிடு சிலையிற் றோன்றி"—சீவக. 951.

"வானிடு வில்லின் வரவறியாத வகையன்" —நீல. ஆசீவக. 26.

கடவுள் வாழ்த்து முற்றும்.

இக்கடவுள் வாழ்த்துக்கு அரியதோர் பதவுரை செந்தமிழ்த் தொகுதி (11)ல் சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவரால் எழுதப் பட்டிருக்கிறது. அது வருமாறு:-

வானிடு வில்லின்—வானவிற்போல; வரவு அறியா வாய்மை யால்—வரற்பாலதாகிய இடையூறு இன்னவாறு தோன்றும் என்று அறியப்படாத சத்தியமாயிருத்தலால்; கால் நிலம் தோயாத கட வுளை—பாதம் நிலத்திற் படியாத கடவுளை; எம்முள்ளத்து முன்னி யவை முடிக என்று—எம்முடைய மனத்திலே நினைத்த காரியம் நிறைவேறவேண்டும் என்று வேண்டி; யாம் நிலம் சென்னி உற வணங்கி சேர்தும்—யாம் நிலத்திற் சிரம் பொருந்த வணங்கி மனத்திற் சிந்திப்பாம் என்க.

நினைத்த காரியம் நிறைவேறும்படி கடவுளை வணங்கிச் சிந்திப்பாம் என்பது இதன் கருத்து.

"வணங்கிச் சேர்தும்" என்னும் பிரதிஞ்ஞையை "வானிடு வில்லின் வரவறியா வாய்மை" ஏதுவாய் நின்று வலியுறுத்திற்று. மங்கலா சரணமாகிய கடவுள் வாழ்த்து இடையூறு கடியும் என்று வடநூலாருங் கூறுவர்.

வானிடுவில்—இந்திரவில் வரவு என்றது வரற்பாலதாகிய இடையூற்றினை யுணர்த்தி நின்றது. இந்திரவில்லு இன்னவாறு தோன்றும் என்பது யாவராலும் அறியப்படமாட்டாது. அதுபோல வரற்பாலதாகிய இடையூறும் இன்னவாறு தோன்றும் என்பது அறியப்படாமையினை; அதற்கு இந்திரவில்லு உவமையாயிற்று. இக்கருத்துப் பெறுமாறு நச்சினார்க் கினியரும் "கற்றவைம்பதங் கள்" என்னும் சிந்தாமணிக் கவியுரையிலே, "நூல்கள் இந்திரவில் இன்னவாறு தோன்றுமென்று அது தோன்றும் முறைமை கூறு வாகலின் அங்ஙனந்தோன்றுகின்ற தேவர்க்கு அஃதுவமையா யிற்று. இக்கருத்தானன்றே "வானிடு வில்லின் வரவறியா" என்றார் பிறரும் என்று கூறினர்.

கடவுள் என்பது முனிவருக்கும் பிறர்க்குஞ் சேறலாற் "கானி லந்தோயா" என்பது பிறிதினியைபு நீக்கிய விசேடணம். கடவுள் என்பது ஊர், பேர், உருவம் முதலிய எல்லாங்கடந்தவன் எனப் பொருள்படும். கட—பகுதி, உள்—ஒரு பெயர் விகுதி, முன்னி யவை என்றது நன்று முடிதல், சென்று பயன்படல், நின்று நிலவல் முதலியவைகளை.

முதலாவது
அறத்துப்பால்.

---

1. துறவறவியல்.

---

1. செல்வ நிலையாமை.

தருமர் உரை:- அஃதாவது செல்வங்கொண் டறஞ்செய வேண்டுமாதலாற் செல்வமொருபடியும் நிலையாதாகலிற் பொருளென்று நிற்குமென்று கருதாதிம்மைக்குப் புகழு மறுமைக் குறுதியும் பொருளுள்ள பொழுதே விரைந்து செய்யும் பொருட் டாகச் செல்வநிலையாமை யுணர்த்தப்பட்டது.

அறம், பொருள், இன்பம், வீடென்றவற்றுளறன் முதன்மை யாகச் செய்வதகாலின் செல்வநிலையல்ல வென்றுறுதி கூறி அறத்தின் முயலும்படிக்குச் செல்வ நிலையாமையை முதற் கண்ணே வைத்துக் கூறினர்.

பதுமனார் உரை:— இவ்வதிகாரம் நாற்பதினுள் அறமென்று சொல்லப்பட்ட பதின்மூறினுள்ளு மில்லறத்தின் கண்ணே செய்யக்கடவன எழுபகுதியும் மென்றவாறு.

அவற்றுள் முதலதிகார மென்னையோவெனின் **செல்வ நிலையாமை,** அஃதாவது இன்ப நுகர்ச்சிகளுக்குக் காரணமாகிய பொருள்களினுடைய வீட்டம். இது யாவர்மாட்டு மொருபடிப் பட நில்லாதாகிய நிலையாமை கூறப்பட்டது. நிலையாமை யெனவே அமையுமாயின் யாக்கைமேல் வையாது செல்வத்தின் மேல் வைத்து நிலையாமை சொல்லியதென்னையெனின் யாக்கை நிற்க செல்வ மிழத்தலும், செல்வம் கிடக்க யாக்கை யிழத்தலும் தருதலால் செல்வம் கொண்டறஞ்செய்ய வேண்டுதலினெல்லா ரிடத்துமுளதாகிய செல்வங்களெவ்வாறுனும் நில்லாமை காட்டி யறஞ் செய்வித்தல் கருத்தாதலி னென்றவாறு.

1. அறுசுவை யுண்டி யமர்ந்தில்லா ளூட்ட
மறுசிகை நீக்கியுண் டாரும்—வறியராய்ச்
சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனிற் செல்வமொன்
றுண்டாக வைக்கற்பாற் றன்று.

தருமர்:—என்பது. அறுசுவை யுண்டி—[1] கார்த்தல், [2]கூர்த்தல் தித்தித்தல், கைத்தல் புளித்தல், துவர்த்தலென்னுமாறு சுவையினையு முடைய வுணவை; அமர்ந்தில்லா ளூட்ட—விருப்பமுடனே தனக்கியைந்த மனையாளானவளூட்ட; மறுசிகை நீக்கியுண்டாரும்—கறிசோறு முற்சிகையை நீக்கிப் பிற்சிகை யுண்ட செல்வரும்; வறியராய்ச் சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனில்—அச்செல்வம் தொலைந்தவிடத்து மிகவும் நல்குரவை யடைந்து ஓரிடத்திற் சென்று கூழினை யிரப்பராதலால்; செல்வமொன்றுண்டாக வைக்கற்பாற் றன்று—செல்வ மென்னும் பெயரினையுடைய தொன்றினைத் தனக்கெப்போதும் நிலையென்று கருதி வைப்பதன் றென்றவாறு.

ஓரிடமென்றது முன்பு வாழ்ந்தவிடந்தன்னி லிரத்த லென்றாயிற்று. மறுசிகை யென்றது வறியராஞர் கிடைத்தது யாதொன்றும் நீக்காதுண்பர்; செல்வரானவர் முதற்கண் உண்டாகிய கறிசோறு இடுவித்துக் கொண்பர். அது செல்வக் களிப்பாலான தொழில், அவற்றை முன்புண்டான உணவு முற்சிகையென்றும், பின்புண்டான உணவு பிற்சிகை யென்றும் கூறினார். சிகையென்ன வேண்டியதென்னோவெனில் சிகை யென்பது முன்னோர் கூறிய நூல்களிலுளதாகலி லீண்டெதுகைக் கியையும்படி மறுசிகை யென்று கூறினார்.

ஆதலால் முன்னை நல்வினைப் பயத்தலாலுண்டாகிய செல்வ முண்டாகிய போதே தனக்குறுதியாகிய அறத்தினையும் இம்மைக் காகிய புகழினையுந் தேடிக் கொள்ளுதலே கருமம். செல்வமெப்போதும் நி(லையாது). வேண்டியபோது (அறஞ்)

[1] உறைத்தல்

[2] துவர்த்தல்

செய்துகொள்ளுவோ மென்று பொறுத்திருப்பது நன்றல்ல வென்றவாறு.

புதுமனார்:- அறுசுவை யுண்டியை விரும்பி மனையாளூட்ட முற்சிகை நீக்கிப் பிற்சிகையை யுண்டாரும் வறியராயோரிடத்துச் சென்று கூழினை யிரப்பராயிற் செல்வ மென்பதொன்று நிலை யுண்டாக நினைக்கப்பாற்றன்றென்றவாறு.

அறுசுவை—கைத்தல், புளித்தல், கார்த்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல். மறுசிகை—கறிதோறு முற்சிகையை நீக்கிப்பிற்சிகை யுண்டல். ஓரிடத்தில்—இப்படி யுண்ட விடந் தன்னிலே. உண்டாக—நிலையுண்டாக.

விளக்க:- அறுசுவை யுண்டி—அறுசுவையாகிய உண்டியை; அமர்ந் தில்லாளூட்ட—விரும்பிய மனையாளூட்ட; மறுசிகை நீக்கியுண்டாரும்—கறிதோறு முற்சிகை நீக்கியுண்டாரும்; வறிஞராய்ச் சென்றிரப்ப ரோரிடத்துக் கூழெனில் —வறிஞராய்த் தாம் இருந்த விடத்தில் தானே சென்று கூழை யிரப்பர்; செல்வமொன்றுண்டாக வைக்கற்பாற் றன்று—செல்வ மென்ப தொன்று நிலையுண்டாக வைக்கும் பகுதியுடைத்தல்ல வென்றவாறு.

அல்லதூஉம்—அறுசுவை என்றது கைத்தல், புளித்தல், கார்த்தல், உவர்த்தல், துவர்த்தல், தித்தித்தல். மறுசிகை—முன் னிட்டசோறு. ஓரிடமென்றது முன்பு வாழ்ந்திடந் தன்னிலே யிரத்தல். உண்டாரும் என்னும் 'உம்மை' அங்ஙனம் செல்வச் செருக்கை உடையாரு மென்னும் சிறப்பும்மை(யு)மாகப் பொருந்தியவென்றுமாம்.

மேற்கோள் பகுதி:—

பேரா:-அளவடிக்கு "அறுசுவையுண்டி அமர்ந்தில்லா ளூட்ட" என்பதை எடுத்துக் காட்டுவர்.

—தொல்.செய்.சூ.32.

மயிலை:- உயிரில் பொருட் பண்புணர்த்துதலுக்கு "அறு சுவை யுண்டி" என்பதை எடுத்துக்காட்டுவர்.

—நன்.சூ.453.

இளம்:- இச்செய்யுளை, ஒரு நோக்காக ஓடியநோக்கிற்கும் நேரிசை வெண்பாவிற்கும் மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல்.செய்.சூ.104,118.

ஒப்புமைப் பகுதி:-

"ஆமின் சுவையவை யாறோ டடிசிலுண் டார்ந்தபின்
தூமென்மொழி மடவா ரிரக்கப் பின்னுந்துற்றுவா
ரீமி னெமக்கொரு துற்றென் றிடறுவ ராதலிற்
கோமின் துழாய்முடி யாதியஞ்சோதி குணங்களே"

—திருவாய்.4.1:7

"முல்லைமுகை சொரிந்தாற்போன் றினியபாலடிசில் மகளிரேந்த
நல்லகருணையால் நாள்வாயும் பொற்கலத்து நயந்
துண்டார்கள்
அல்லலடைய அடகிடுமி னோட்டகத்—தென்று அயில்வார்க்
கண்டும்
செல்வம் நமரங்காள் நினையன்மின் செய்தவமே நினைமின்
கண்டீர்"

—சிந்தா.முத்—2623.

"ஒருநாயகமா யோட வுலகுட னாண்டவர்
கருநாய் கவர்ந்த காலர் சிதைகிய பானையர்
பெருநாடு காண இம்மையிலே பிச்சைதாம் கொள்வர்"

—திருவாய்.4-ப. 1

"கடகஞ் செறிந்ததங் கைகளால் வாங்கி
யடகு பறித்துக்கொண் டட்டுக்—குடைகலனா
வுப்பிலி வெந்தைதின் றுள்ளற்று வாழ்பவே
துப்புரவு சென்றுலந்தக் கால்.

—நாலடி 289.

"சிறப்புஞ் செல்வமும் பெருமையு முடையோ
ரறக்கூழ்ச் சாலை யடையினு மடைவர்"

—வெற்றி.

குறிப்பு:-

சிகை-பிடி அளவு கொண்ட உணவு. மறுசிகை நீக்கி யுண்டல்—முதற்சிகையை மாத்திரம் புசித்தல்; செல்வர் தமக்குப் படைத்த உணவுப் பொருள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு பிடி

யெடுத்துண்டு மிச்சத்தை எச்சிலென நீக்குதல் மரபு, "தன் னெச்சி லுண்ணாத் தகைமையான்" என பாரத வெண்பா (311) விலும் வருதல் காண்க,

2. துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டுப்
[1]பகடு நடந்தகூழ் பல்லாரோ டுண்க
வகடுற யார்மாட்டு நில்லாது செல்வஞ்
சகடக்கால் போல வரும்.

தருமர்:—என்பது. துகடீர் பெருஞ்செல்வம் தோன்றியக் கால் தொட்டு—குற்றந்தீர்ந்த பெரியதோர் செல்வமானது தோன்றியகாலந்தொடங்கி; பகடு நடந்த கூழ்—ஏர் நடந்த உணவுகளை; பல்லாரோடுண்க—பலருடனும் கூடி உண்க, அகடுற யார் மாட்டும்—சாயாமல் யாவரிடத்தும் நடுவுற; செல்வம் நில்லாது—செல்வமானது நிற்பதன்று; சகடக்கால் போல வரும்—தேர்க்கால் போலக் கீழ்மேலாய் வருமென்றவாறு.

செல்வ முதன்மையாயினும் ஏர்நடந்தே உணவுகளுண்டாக வேண்டுமென்பது தோன்றப் பகடு நடந்த கூழென்றார். ஆத லால் நன்முயற்சியினால்வந்த உணவுகளைப் பலரோடுங் கூடி யுண்க. எனவே செல்வமுண்டாய வழி அச்செல்வந் தனக்கெப் போது நின்று பயன்தருமென்று கருதாமல் விரைந்து அறத் தினைச் செய்வது தனக்கு நிலையான செல்வ மென்றாயிற்று.

பதுமனார்:—குற்றந் தீர்ந்த பெருஞ்செல்வம் தோன்றியக் காலமே தொடங்கி ஏர்நடந்த கூழினைப் பலரோடு முண்க. நடு வுற யார்மாட்டும் செல்வம் நிலையாது. சகடக்கால் போலத் திரிந்து வருமென்றவாறு.

துகடீர்—குற்றந்தீர்ந்த. பகடு நடந்த கூழ்—தன்முயற்சி.

---

[1] பகடு—ஏர். (புறம் 35)
"சுழன்றும் பின்ன துலக மதனா
லுழந்து முமவே தலை"—குறள் 1031.

யாற் செய்யப்பட்ட உழவுத் தொழிலான் வந்தசோறு. அகடுற—நடுவுற என்றது சாயாதொரு படிப்பட. சகடக்கால்—மேல் கீழாய் வருதல்.

விளக்க:—துகடீர் பெருஞ்செல்வந் தோன்றியக்காற் றொட்டு—குற்றந்தீர்ந்த பெரிய செல்வம் தோன்றிய காலந் தொடங்கி; பகடுநடந்த கூழ்—ஏர் நடந்த கூழை; பல்லா ரோடுண்க—பலருடனும் கூடி யுண்க; அகடுற—சாயாதொரு படிப்பட; யார் மாட்டும்—யாவரிடத்தும்; நில்லாது செல்வம்—செல்வம் நில்லாது; சகடக்கால் போலவரும்—சகடக்கால் போலக் கீழ்மேலாய்த் திரிந்து வரு மென்றவாறு.

குற்றந்தீர்ந்த பெருஞ்செல்வமானது பெறுதற்கரிய மனிதப் பிறப்பென்றுமாம். ஆதலால் நன்முயற்சியால் வந்த (தாதலா)ல் பல்லாரோடும் கூடியுண்க. பல்லார்—தென்புலத்தார், தெய்வம், ஒக்கல், விருந்து என்னுமித்திறத்தார். அகடுற வென்றது சாயாமல் நடுவுற. யார் மாட்டும் என்னும் வினை குறிப்பு வினை.

மேற்கோள் பகுதி:—

நச்:—செய்யுட்கண் முடியுந் துணையும் அடிதோறுங் குறித்த பொருளை முடிய நாட்டுதற்கு "துகடீர்..................றொட்டு" என்பதை எடுத்துக்காட்டுவர்.

—தொல். செய். சூ. 78

நச்:—வேற்றுமைத் தொகைக்கு உதாரணம் கூறுமிடத்து "பகடு நடந்த கூழ் பல்லாரோடுண்க" என எடுத்துக் காட்டுவர்.

—தொல். சொல். எச்ச. சூ. 17.

யா. வி:—தனிச்சொலின்றி ஒருவிகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பாவிற்கு இச்செய்யுளை எடுத்துக்காட்டுவர்.

—செய். சூ. 8.

யா. கா.:—இங்கும் அதற்கே மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளது.

செய். சூ. 24.

பேரா:— அளவியல் வெண்பாட்டிற்கு உதாரணமாக இச் செய்யுளைக் காட்டுவர்.

—தொல். செய். சூ. 158

நச்:— "நெடுவெண்பாட்டு" என்னும் சூத்திர உரையில் "**துகடீர்பெருஞ் செல்வம்**" என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். செய். சூ. 158

ஒப்புமைப் பகுதி:-

"படைப்புப்பல படைத்துப் பலரோ டுண்ணு
முடைப்பெருஞ் செல்வ ராயினும்"

—புற நா. 188.

"அற்கா வியல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்
அற்குப வாங்கே செயல்.

—குறள் 333.

"கிழவர் இன்னோர் என்னாது பொருள்தான்
பழவினை மருங்கின் பெயர்பு பெயர்பு உறையும்.

—கலித். 21-10

"பகடு தரு செந்நெல்"

—புறம். 390.

3. யானை யெருத்தம் பொலியக் குடைநிழற்கீழ்ச்
சேனைத் தலைவராய்ச் சென்றோரு—மேனை
வினையுலப்ப வேறாகி வீழ்வார் தாங் கொண்ட
மனையாளை மாற்றார் கொள.

தருமர்:- என்பது. யானை யெருத்தம் பொலிய — யானைப் பிடர்மேலே அழகு பெறக்; குடை நிழற் கீழ் — வெண்கொற்றக் குடையின் நிழலின் கீழே; சேனைத்தலைவராய்ச் சென்றோரும் — மிகுதியாகிய சேனைக்குத் தலைமையாகச் சென்றவரசரும்; ஏனை வினையுலப்ப வேருகிவீழ்வர்— தீவினை வந்து சூழ்ந்த விடத்து வேறுபட்டுக் கெடுவர்; தாங்கொண்ட மனை

யாளை மாற்றார்கொள—தாங் கொண்ட மனையாளைப் பகைவர் பிடித்துக்கொண்டு போம் படியாகக் கெடுவரென்றவாறு.

ஏனை வினையுலப்ப வென்றது தனது நல்வினைப்பயனை யனுபவித்து நல்வினை முடிந்து தீவினைவந்து சூழ்ந்தவிடத்தி லிவ்வகையாய்க் கெடுவராதலால் எவ்வகைத்தாய செல்வத்தை யும் நிலையென்று கருதாமல் தனக்குறுதியாகிய அறத்தினைச் செய்து கொள்வதே நன்றென்பதாயிற்று.

பதுமனார்:- யானை எருத்தம் பொலிவுபெறக் குடைநிழற் கீழ்ச் சேனையுடைய விறைவராய்ச் சென்றொரு மற்றைத் தீவினை யுதவ வேறுபட்டுத் தாங்கொண்ட மனையாளைப் பகைவர் கொள்ளக் கெடுவரென்றவாறு.

ஏனை என்பதனை அசைநிலையாக்கி வினையுலப்ப வென்பதனை நல்வினை முடிய வென்றுரைப்பாருமுளர். எருத்தம்—புறக் கழுத்து. பொலிய—மிகவிளங்க. ஏனைவினை யுலப்ப—மற்றைத் தீவினை கெடுப்ப.

விளக்க உரை:- யானையெருத்தம் பொலியக் குடைநிழற் கீழ்—யானைக் கழுத்திலே அழகுபெற தவளச் சத்திரத்தின் நிழற் கீழே; சேனைத் தலைவராய்ச் சென்றோரும் — சேனையையுடைய இறைவராய்ச் சென்றோரும்; ஏனைவினை யுலப்ப—மற்றத்தீவினை யுதவ; வேறாகி வீழ்வர்—வேறுபட்டுக் கெடுவர்; தாங்கொண்ட மனையாளை மாற்றார் கொள—தான் கொள்ளப்பட்ட மனையாளைப் பகைவர் கொள்ளும்படியாக.

ஏனையென்பதனை அசைநிலையாக்கி, வினையுலப்ப வென்பதனை நல்வினை முடிய வென்றுரைப்பாருமுளர். 6 [illegible] ர்றது பிடரி. பொலிய என்ற[illegible]லும், மாலை ட [illegible]வார வாரத்தாலும் சிற[illegible]பாரு முளர். சேனைத்தலைவ ரென்றது யானை, குதிரை, தேர், கருவி, காலாள் ஆனவிச் சதுரங்க பரிவாரத்துக்குத் தலைவரென்றது. மனையாள்—கொண்ட மனையாளுமன்றி பூமாதேவியுமாம்.

மேற்கோள் பகுதி:-

அடியார்க்:—"முதிர் வினை நுங்கட்கு முடிந்ததாகலின் என்றதற்கு அடியார்க்குநல்லார் "நுங்கட்கு முற்பட்ட நல்வினை முடிந்ததாகலான்" என்று பொழிப்புரை கூறி, முதிர்தல்—முற்படுதல், எனவே நல்வினை முடிதலால் என்க; "ஏனைவினை யுலப்ப", என்றார் பிறரும், என மேற்கோள் கூறுவர்.

—சிலப்பதிகாரம்.

ஒப்புமைப் பகுதி:-

"உய்ம்மின் திறைகொணர்ந்து என்றுல காண்டவர் இம்மையே
தம்மின்சுவை மடவாரை பிறர்கொள்ளத் தாம்விட்டு
வெம்மி னொளிவெயிற் கானகம்போய்க் குமைதின்பர்கள்
செம்மின்முடித் திருமாலை விரைந்தடி சேர்மினோ"

—திருவாய் 4.1

"அரையது துகிலே மார்பினது ஆரம்
முடியது முருகு நாறும் தொடையல்
புடையன பால்வெண் காவிரியின் கற்றை
மேலது மாலைதாழ்ந்த மாணிக்கால் தனிக்குடை
முன்னது முரசு முழங்குந் தானை
இந்நிலை இனைய செல்வத் தீங்கிவர்
யாவ ரேயோ தேவ ரல்லர்
இமைப்பதும் செய்தனர் மாந்த ரேஎன
மயக்கம் நீங்கக் களிற்றுமிசை வந்தனர்
நெருந லின்றிவர் பசிப்பிணி காய்தலின்
உணங்கிய துணியும் உடுத்து
மாசுமீப் போர்த்த யாக்கையொடு
தாமே ஒருசிறை இருந்தனர் மன்னே". —ஆசிரிய.

(௩)

4. **நின்றன நின்றன நில்லா தெனவுணர்ந்**
தொன்றின வொன்றின வல்லே செயிற்செய்க
சென்றன சென்ற வாழ்நாள் செறுத்துடன்
வந்தது வந்தது [1]கூற்று.

---

[1]கூற்று—எமனுக்கு ஏவல் செய்யும் மடங்கல்.(பரி. 3—8)

தருமர்:—என்பது. நின்றன நின்றன—நிற்கும் நிற்குமென்று தாம் விரும்பியிருந்த செல்வங்கள் பலவும்; நில்லாதென வுணர்ந்து—நிலையாக ஒழியுமென்பதனை யோர்ந்தறிந்து; ஒன்றின வொன்றின—தனக்கு வலியாகப் பொருந்திய பொருந்திய வறங்களை; வல்லே செயிற் செய்க—செய்வாயாகில் விரைந்து செய்க; சென்றன சென்றன வாழ்நாள்—வாழுகிற நாளுஞ் சென்றது; செலுத்துடன் வந்தது வந்தது கூற்று—கோபத் துடனே கூற்றும் வந்தது வந்ததென்றவாறு.

கூற்று எனவே உலகத்துண்டாகிய மரணமனைத்துங் கூற்றுவனாலுறுவதாகலின் எக்காலமுந் (தோன்றுவன்) அன்றி இக்கூற்றுவனுக் கருள் சிறிதுமில்லை. ஆதலால் செல்வ நிலை யாமையேயன்றி (யாக்கை)யும் நிலையல்ல வெண்பதுணர்ந்து தனக்காகிய வறங்களையும், புகழினையும், விரைவிற் செய்ய வேண்டுமென்பதாயிற்று.

பதுமனார்:— நின்றன நின்றனவென்று தாங் கருதப்பட்ட தனதானியமான பொருள்கள் நிலையாவென வுணர்ந்து பொருந்திய பொருந்திய வறங்களைச் செய்வாராயின் விரைந்து செய்க. தாம் வாழும் நாட்கள் கழிந்தன, கழிந்தன கூற்றடர்ந்து வந்தது, வந்ததாகலானென்றவாறு.

நின்றன, நின்றன வென்றும்; ஒன்றின, வொன்றின வென்றும் இரட்டிய மொழிகள் பொருட்பான்மையின் கண் வந்தன. சென்றன, சென்றன வென்றும்; வந்தது, வந்தது வென்று மிரட்டிய மொழிகள் விரைவின்கண்ணே வந்தன சென்றன, சென்றனவே யென்றும், வந்தது வந்ததே யென்றும் ஏகாரம் பெய்து பொருளுரைப்பாருமுளர். நின்றன நின்றன வென்றது தாங்கருதப்பட்டன. ஒன்றின ஒன்றின-பொருந்தின பொருந்தின. வல்லே செயில்-விரைந்து செய்வதாயின். செறுத்து அடர்ந்து. சென்றன, சென்றன; வந்தது, வந்ததுவென்னு. மிரட்டிப்புகள் நெருப்பு, நெருப்பு என்றது போலும் விரைச் சொல்லடுக்கு.

விளக்க உரை:— நின்றன நின்றன—நிற்கும் நிற்கு மென்று தான்விரும்பியிருந்த செல்வங்கள் பலவும்; நில்லாதென வுணர்ந்து—நிலையில்லாப் போகிறது அறிந்து; ஒன்றின வொன்றின—பொருந்திய வறங்களை; வல்லே செயிற் செய்க—செய்வாராகில் விரைந்து செய்க; சென்றன, சென்றன வாழ்நாள்—நாம் வாழ்நாள்கள் கடந்தன கழிந்தன; செறுத்துடன் வந்தது வந்தது கூற்று—அடர்ந்து வந்தது வந்தது கூற்று ஆதலாலென்ற வாறு.

நின்றன, நின்றன வென்றும்; ஒன்றின, ஒன்றின வென்றும் இரட்டிய மொழிகள் பொருட்பான்மையின்கண் வந்தன. சென்றன சென்றனவே; வந்தது வந்ததுவே என்றும் ஏகாரம் பெய்து பொருளுரைப்பாரு முளர். நின்றன, நின்றனவே யென்று தாம் நினைந்தன; உணர்ந்து—தம்மேலன்றி பின் மேலிட்டுணர்ந்து; ஒன்றின—கொடுக்கக் கூடின பொருளைத் தம்மனதிற்கியைந்த பொழுதே விரைந்து செய்க என்பது கருத்து, சென்றன, சென்ற(னவாழ்) நாள் வந்தது, வந்தது கூற்று என்பது எழுவாயாக்கிப் பொருளுரைக்க. ஒன்றின—பொருந்தின. வல்லே—விரைந்து; செறுத்து—அடர்ந்து.

மேற்கோள் பகுதி:—

நச்:—விரைவு பற்றிய சொல்லடுக்கிற்கு "வந்தது வந்தது கூற்று" என்பதை உதாரணம் காட்டுவர்.

—தொல். சொல். எச்ச. சூ. 15:

ஒப்புமைப் பகுதி:—

" நில்லாது செல்வம் நிலவார் உடம்பு அடைந்தார்
செல்லார் ஒருங்கென்று சிந்தித்து—நல்லார்
அருளுளம் புரிகுவ ராயின்
இருளறு சிவகதி எய்தலோ எளிது. —யா. வி. 55 மேற்

"காலைச் செய்வோமென் றறத்தைக் கடைபிடித்துச்
சாலைச்செய் வாரேதலைப் படுவர்—மாலைக்
கிடந்தா னெழுத லரிதான் மற்றென்கொ
லறங்காலைச் செய்யாத வாறு" —அறநெறி·

(சு)

5. என்னுனு மொன்றுதங் கையுறப் பெற்றக்காற்
பின்னுவ தென்று பிடித்திரா— முன்னே
கொடுத்தா ருயப்போவர் கோடிநீக் கூற்றங்
தொடுத்தாறு செல்லுஞ் சுரம்.

தருமர்:— என்பது. என்னுனு மொன்றுதங் கையுறப் பெற்றக்கால்—யாதானுமொரு பொருளைத் தங்கைக்குள்ளாகப் பெற்றவுடனே, பின்னுவதென்று பிடித்திரா-பின்னைச்செய்கிரே மென்று பிடித்திராதே; முன்னே கொடுத்தார் உயப்போவர்— முன்னே அறத்தைச் செய்தவர் தப்பப்போவர்; கோடில் தீக் கூற்றம்—தன்செய்கையிலே சிறிதும் கோட்டமில்லாதகூற்றுவன்; தொடுத்தாறு செல்லுஞ் சுரம்—பாசக் கயிற்றினாற் கட்டிக் கொண்டு போவதொரு காட்டுவழியை யென்றவாறு.

கூற்றுவனானவன் நாளையாகிதென்று பொறுத்திருப்பதில்லை பாசக்கயிற்றாற் கட்டி யாவருஞ் செல்லுதற்கரிய காட்டு வழியி லிழுத்துக்கொண்டு போவதுண்மை யென்பது அறிந்து அவ் வழியிற் புக்குத் துன்பத்திலழுந்தாமல் மேலேயே வழியிற் செலுத்துவதாகிய அறத்தினை விரும்பிச் செய்வதே கருமமென்ப தாயிற்று.

பதுமனுர்:—யாதானுமொரு பொருள் தங்கையுளெய்தப் பெற்றால் பிறர்க்கீதல் பின்னொரு காலத்தாமதென்று பிடித்திராது மற்றதனை முன்னரே கொடுத்தவர் தப்பப்போவர். தன்செய் கையிற் கோட்ட மில்லாடிதீக் கூற்றம் பாசத்தாற் பிடித்துக் கொண்டு போங்கடத்தினை யென்றவாறு.

கொடுதீக் கூற்றம் எல்று பாடமோதுவாரு முளர். என் னானும்—யாதானும். பின்னாவது—ஒருநாளைக் குறித்துப் பின்னாவது. முன்னே—யாக்கையும், பொருளும் அழிவதற்கு முன்னே. உயப்போவர்—தப்பிப்போவர். கோடிநீக் கூற்றம்— தன் செய்கையில் தப்பாத தீக்கூற்றம். தொடுத்தாறு செல்லுஞ் சுரம்—பாசத்தாற் யிணித்துப்போங் காட்டுவழி.

விளக்க உரை:— என்னானுமொன்று—யாதானு மொரு பொருளை; தங்கையுறப் பெற்றக்கால்—தங்கையுளேயாக பெற்ற பொழுதே; பின்னாவதென்று பிடித்திரா—பின்னொரு காலத்து அறத்தைச் செய்கிறோமென்று கருதிப் பிடித்திராது; முன்னே கொடுத்தாருயப்போவார்—முன்னே கொடுத்தவர் தப்பிப் போவர்; கோடிநீக் கூற்றம்—தம் செய்கையில் கோட்டமில்லாத தீக்கூற்றம், தொடுத்தாறு செல்லுஞ் சுரம்—பாசத்தாற் கட்டிக் கொண்டு போகிற காட்டுவழி யென்றவாறு. கொடுதீக் கூற்ற மென்று பாடமோதுவாரு முளர்.

மேற்கோள் பகுதி:

நச்:—கட்டளை ஒருஉ முரணுக்கு ''பின்னாவ தென்று பிடித்திராமுன்னே'' என்பதை உதாரணமாகக் காட்டுவர்.

—தொல்.செய்.சூ.95.

(ரு)

6. **இழைத்தநா ளெல்லை யிகவா பிழைத்தொரீஇக்**
கூற்றங் குறித்துய்ந்தா ரீங்கில்லை—யாற்றப்
பெரும்பொருள் வைத்தீர் வழங்குமி னாளைத்
[1]தழீஇந்தழீஇந் [2]தண்ணம் படும்.

தருமர்:—என்பது. இழைத்த நாளெல்லை யிகவா—தனக்கு வரைந்த நாளானது சிறிது பொழுதாயினும் எல்லையைக் கட வாது பிழைத்தொரீஇக் கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை-அவ் வெல்லை கடந்து நீங்கி (யமனிடத்தினின்றும்) பிழைத்தவர் களிவ்வுலகத்திலில்லை; ஆற்றப் பெரும்பொருள் வைத்தீர்— மிகவும் பெரிதாகிய பொருள்களைத் தேடி வைத்தவரே! வழங்கு மின்—உங்களுக்குறுதி பயப்பதொரு அறத்தின் பொருட்டும் புகழின் பொருட்டும் பொருளை வழங்கிவீராக; நாளைத் தழீ

---

[1]ஒலிக்குறிப்பு.

[2]தண்ணம்—பிணப்பறை.

இந் தண்ணம்படும்—தழீஇம் தழீஇ மென்னு மோசையுடனே தண்ணுமையாகிய சாக்காட்டுப்பறை யறையப்படு மென்றவாறு.

நாளையெனவே விரைவிலேசாவு எய்து மென்பதாயிற்று. இப்பெற்றித்தாய உயிர் வாழ்க்கையின் நிலைமையை யறிந்து செல்வம் நிலையாமையையு முணர்ந்து தனக்கு நன்னெறி பயப் பதனைக் கடுகச்செய்ய வேண்டுமென்பதாம். இத்தொடர்பு "முதலடியினொரூஉ எதுகையாக விருவிகற்பத்தான் வ(ருப வென்றா)ர்,

பதுமனார்:—ஒருவர்க்கு வரைந்த நாட்கள் தம் எல்லையைக் கடவாவாதலாற் கூற்றத்தைத்தப்பி நீக்கிக் கடந்துயிர் வாழ்ந்தா ரிவ்வுலகத்தின்கண் இல்லை. நாளையே தழீஇம், தழீஇமென்று சாக்காட்டுப் பறையொலிக்கு மாகலாற் பெரும் பொருள் வைத்தீர் மிகவும் வழங்குமி னென்றவாறு.

எல்லை யிகவாரென்று பாட மோதுவாரு முளர். தண்ணுமை யென்பது தண்ணமென்று விகாரமாயிற்று. இழைத்த நாள்—முன்னை வினையினாலே சூழப்பட்டநாள். எல்லையிகவார்—தன்னெல்லையைக் கடவாது கூற்றத்தைக் கடந்து தப்பிப்போய் நிலைபெற்றார். ஆற்ற—மிகவும். பெரும்பொருள்—அறனுமின்ப துந் தருதலாற் பெரும் பொருள்; வழங்குமின்—அறங்காரணமாக வழங்குமின். நிலையாமையான் நாளைத் தழீஇம், தழீஇமென்னு மனுகரணத்தைக் கொண்டு சாக்காட்டுப் பறை யுளதாம்.

விளக்க உரை:—இழைத்த நாளெல்லை யிகவா—ஒருவருக்கு வரைந்த நாட்கள் தம் எல்லையைக் கடவாது; பிழைத் தொரீஇக்கூற்றங் குதித்துய்ந்தா ரீங்கில்லை—கூற்றத்தைத் தப்பி நீங்கி, அவ்வெண்ணத்தைக் கடந்து பிழைத்துயிர் வாழ்ந்தார் இவ்வுலகத்தின்கணில்லை; ஆற்றப் பெரும்பொருள் வைத்தீர்—மிகவும் பெரிய பொருளைத் தேடி வைத்தவரே! வழங்குமின்—கொடுங்கள்; நாளைத் தழீஇந் தழீஇந்தண்ணம் படும்—நாளைத் தழீஇம், தழீஇமென்று ஓசையுடனே தண்ணுமையெனுஞ் சாக்

காட்டுப்பறை யொலிக்கும், ஆதலால் அறிந்தென்றவாறு.

நாளையென்றது ஒருநாளுமாம், ஒருநாழிகையுமாம், ஒரு கணப்பொழுதுமாம். எல்லை யிகவாரென்று பாடமோதி அதன் எல்லையைத் தப்பாரென்று பொருளுரைக்க. தண்ணுமை யென்றது தண்ணமென்று விகாரமாயிற்று. தழீஇம், தழீஇ மென்றது அனுகரண வோசை. ஒரீஇ யென்றது நீங்கி என்ற வாறு. தழீஇந் தழீஇ மென்பதற்கண்ணே பிறர்பொருள் பிறர்க் கிட்டதென்றும் பறையென்பாரு முளர். பெரும் பொருளென்பது இகழ்ச்சிக் குறிப்பு. நாளை யென்றது வழக்குவாய்ப் பாடாய் பிள்ளையென நின்றது.

தண்ணம்—தண்ணுமை யென்னும்பறை. இழைத்த நாள்—முன்னை வினையினாலே சூழப்பட்ட நாள், ஆற்ற—மிகவும். பெரும் பொருள்—அறனுமின்பமுந் தருதலாற் பெரும்பொருள். சிறியாரைப் பெருகச் செய்தலானுமாம்.

ஒப்புமைப் பகுதி:-

"கோட்டுநா ளிட்டுக் குறையுணர வாராதால்
மீட்டொருநா ளிடையுந் தாராதால்—வீட்டுதற்கே
வஞ்சஞ்செய் கூற்றம் வருதலா னன்றாற்றி
யஞ்சா தமைந்திருக்கற் பாற்று"

—அறநெறி 109

"தேற்றத் தெளியின் தெளிந்தீர் கலங்கன்மின்
ஆற்றுப் பெருக்கிற் கலக்கி மலக்காதே
மாற்றிக் களைவீர் மறுத்துங்கன் செல்வத்தை
கூற்றன் வருங்கால் குதிக்கலு மாமே"

—திருமந் 172

"வளமையும் தேசும் வலியும் வனப்பும்
இளமையும் இற்பிறப்பும் எல்லாம்—உளவாய்
மதித்தஞ்சி மாறுமஃ திண்மையால் கூற்றங்
குதித்துய் தறிவாரோ இல்."

—பழமொழி 183

''கூற்றங் குதித்தலுங் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட் டவர்க்கு''. —குறள் 269.
''கூழைமை பயின்ற கூற்ற வரசனைக் குதிக்குஞ் சூழ்ச்சி
பாழியந் தடக்கை வேந்தே பயின்றிலம் யாங்க ளென்றார்''.
—சூளா. துறவு. 18.

''சென்றநா ளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலா
நின்றநாள் யார்க்கு முணர்வரிது.''
—அறநெறி 69·
(சு)

7. [1]தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்துநுந் நாளுண்ணு—மாற்ற
வறஞ்செய் தருளுடையீ ராகுமின் யாரும்
பிறந்தும் பிறவாதா ரில்.

தருமர்:—என்பது. தோற்றஞ் சால் ஞாயிறு நாழியா—ஒளி அமைந்த பகலவனையே அளவு நாழிகையாக வைத்து; வைகலுங் கூற்ற மளந்துநும் நாள் உண்ணும்—நாள்கடோறும் உம்முடைய வாழ்நாள்களை யளவாக அளந்து கூற்றுண்ணும்; ஆற்ற வறஞ்செய் தருளுடையீ ராகுமின்—ஆதலால் மிகவும் விருப்பத்துடனறத்தினைச் செய்து அருளைப் பொருந்தக் கடவீர்; யாரும் பிறந்தும் பிறவாதாரில்—[யாவரும் மனிதப் பிறப்பிலே பிறந்து வைத்தும் அறஞ்செய்யாராகிற் பிறவாதாருடன்] வைத் தெண்ணப்படுவரென்றவாறு.

மானிட யாக்கைக்கு அறிவுளதாகலின் இவ்வாக்கை யெடுப்பதே அரிது. இவ்வாக்கை யெடுத்து மிதற்கேற்புடைய வறத்தினைச் செய்யாராகில் அறிவில்லாத விலங்கு முதலாயிவரா யிற்று. அதனால் பிறந்ததில் பயனில்லாத அசேதனமாக இருத்

[1]'தோற்றஞ்சால்' என்பது' தோற்றஞ்சால் தொருபொருள்' என்னுங் கலித்தொகையிற் போல (பாலை 17) விளக்க மமைந்த எனவுமாம்.

தலின் பிறவாதாரில் வைத்தெண்ணப் படுமென்பதாயிற்று.

பதுமனார்: — தோற்றம் அமைந்த ஞாயிறே நாழியாக நாடோறுங் கூற்றமானது நும்முடைய வாழ்நாட்களை அளந்துண்ணும். ஆதலால் நீர் பெற்ற பெருஞ் செல்வத்தைத் தானெல்லீரு மிகவு மறத்தைச் செய்தருளுடையீ ராகுமின். மக்கட் பிறப்பிற் பிறந்து வைத்தும் பிறவாதுபோற் பயன் கொள்ளாதார் யாவரும், உலகத்தின்கணிலையென்று ஆவரென்றவாறு. அல்லதூஉம் ஒருக்காற் பிறந்து வைத்தும் பின்பு பிறவாதா ருலகின்கணில்லை யென்றுமாம்.

தோற்றஞ்சால்-தோற்றம் அமைந்த. நாழியா-நீர் வாழும் நாட்களை யளக்குங் கருவியாக. பிறந்தும் பிறவாதாரில்—ஒருக்காற் பிறந்த பின்பும் பிறவாதாரில்லை யென்றும், பெறுதற் கரிய மக்கட் பிறப்பைப் பெற்றுப் பிறந்தும் பயன்கொள்ளாதார் பிறவாதாரில் வைக்கப்படுவர் என்றுமாம்.

விளக்க உரை:— தோற்றஞ் சால்—தோற்ற மமைந்த; ஞாயிறு நாழியா—ஞாயிறு அளவு நாழியாகவைத்து; வைகலும் கூற்ற மளந்து—நாள் தோறும் கூற்றமளந்து; நுந்நாளுண்ணும் —உம்முடைய நாள்களை யுண்ணும்; ஆற்றவறஞ் செய்தருளுடையீராகுமின்—ஆதலால் நீர் பெற்ற செல்வத்தால் எல்லீரு மிகவும் அறஞ்செய்தருளுடையீராகுங்கள்; யாரும் பிறந்தும் பிறவாதாரில்-பிறந்து வந்தும் அறஞ்செய்யாராயிற் பிறவாதாரிலே வைத்தெண்ணப் படுவரென்றுமாம்.

ஒருபிறவியிலும் பிறவியாகாதாரில் .... நீ யெனச் செல்வ நிலையாமை சொல்லியது. நானாழியென்ற துணவின் தொழில் பற்றி. யாவராயினம் என்னும் சிறப்புப்பற்றிப் பிறவாதார் கொள்ளும் பயனில்லை; யாக்கை பிறந்தாராயின் பயன் கொள்ளுவரென்பது கருத்து. இந்தப் பிறப்பில் பிறவாதது அசேதனங்கள்.

ஒப்புமைப் பகுதி:—

"நாளென ஒன்றுபோல் காட்டி உயிரீரும்
வாள துணர்வார்ப் பெறின்." —குறள் 334.

"வாழ்நாட் கலகா வயங்கொளி மண்டிலம்
வீழ்நாள் படாஅ தெழுதலால்" —நாலடி 22.

"வாள்களாகி நாள்கள் செல்ல" —சந்த விருத்தம் 112.

"அறஞ்செய் தருளுடைய ராகல்" —பழமொழி 215.

"அறனு மருளுடையான் கண்ணதேயாகும்" —சிறுபஞ்ச.

"அருளிலார்க் கவ்வுலக மில்லை" குறள் 247.

"கொள்ளுங் கொடுங்கூற்றம் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே." —நன் 30.

"கருவிடை வந்த ஒருநாள் தொடங்கி
மறவா மறலி முறைபிறழ் பேழ்வாழ்
அயிற்றலை யன்ன எயிற்றிடைக் கிடந்து"
—கோயில் நான்மணி. 8;5-7.

குறிப்பு:—

அறமாவது, மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கியன ஒழிதலுமாம். அருளாவது, தொடர்புபற்றாது இயல்பாக எல்லா வுயிர்களிடத்துஞ் செல்வதாய கருணை.

(எ)

8. செல்வர்யா மென்றுதாஞ் செல்வுழி யெண்ணாத
புல்லறி வாளர் பெருஞ்செல்வ—மெல்லிற்
கருங்கொண்மூ வாய்திறந்த மின்னுப்போற் றோன்றி
மருங்கறக் கெட்டு விடும்.

தருமர்:—என்பது. செல்வர் யாமென்று தாம் செல்வுழி யெண்ணாத—தாம் செல்வத்தை யுடையோமென்று தாம் செல்லுமிடத்தைக் கருதாத; புல்லறிவாளர் பெருஞ்செல்வம்-நுண்ணிய வறிவினை யெய்தாது புன்மையாகிய வறிவினைப் பொருந்திய வரது பெரிய செல்வமானது; எல்லில் கருங்கொண் மூவாய் திறந்த மின்னுபோற்றோன்றி—இராத்திரி காலத்திலே கரிய மேகமானது

வாய்திறந்து விடப்பட்ட மின்னினொளிபோலத் தோன்றி; மருங் கறக்கெட்டுவிடும்—வழியறக் கெட்டுப்போமென்றவாறு.

அறத்தின் வழிச்செல்லாது (அர)சர் இறக்கு மாதலாலவனது கேட்டினையும் பொருள் மேலேற்றிக் கூறினார். செல்வ மிவ் வியல்பின தென்றறிவுறுத்தி அறத்தின் வழிப்படப் பொருட் குறுதி கூறியதாயிற்று.

பதுமனார் :—யாம் செல்வமுடையோமென்று கருதித் தாமிறந்து செல்லுமிடத்தை ஆராயாத புல்லறிவினை யுடையார் பெருஞ் செல்வம், இரவின்கட் கருமுகிலினைக் கிழித்த மின்னல் போலத் தோன்றி வழியறக் கெட்டுவிடுமென்றவாறு.

செல்வுழி—போமிடம். எல்லில்—இரவில். [1]மருங்கற—பக்கமற.

விளக்க உரை:—செல்வர் யாமென்று—நாம் செல்வ முடையோமென்று; தாம் செல்வுழி யெண்ணாத—தாம் இறந்து செல்லுமிடத்தை ஆராயாத; புல்லறிவாளர் பெருஞ் செல்வம்—புல்லியவறிவினருடைய பெரிய செல்வம்; எல்லிற் கருங்கொண் மூவாய் திறந்து மின்னுப்போற் றோன்றி—இரவின் கண்கரிய முகிலினைக் கிழித்து மின்னுபோற் றோன்றி; மருங்கறக் கெட்டு விடும்—நடுவாகக் கெட்டுவிடும்.

செல்வுழி—ஆராயாது போமிடம். மருங்கற என்றது எண்ணப்படாமற் றோன்றுமாம்; விழிய என்றுமாம்.

மேற்கோள் பகுதி:—

நச்:—செல் உழி—செல்வுழி, 'மெய்யீற்றுடம்படுமெய்' என்பர். —தொல். புண. சூ. 38.

---

[1]மருங்கற—மயக்கமற.

9. உண்ணா [1]னொளிநிறா னோங்கு புகழ்செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான்—கொன்னே
வழங்கான் பொருள்காத் திருப்பானேல் அஆ
இழந்தானென் [2]றெள்ளப் படும்.

தருமர்:—என்பது. உண்ணா னொளிநிறான்—தானு முண்ணான் ஒளியையும் நிறுத்தான்; ஓங்குபுகழ் செய்யான்—தானிறந்துபோன காலத்தும் பூமியின்கண் நின்று தன்னை யுண்டாக்கத்தக்க மிக்க புகழினையுஞ் செய்யான்; துன்னருங் கேளிர் துயர் களையான்—பெறுதற்கரிய கேளிருடைய விதனங் களையும் நீக்கான்; கொன்னே வழங்கான் பொருள் காத்திருப்பா னேல்—இவ்வகையால் ஒருவருக்கும் பொருளை வழங்காமல் வீணிலே வைத்துக் காத்திருப்பானாகில்; அஆ இழந்தானென் றெள்ளப்படும்—இவனிடமிருந்த பொருளாலொருபயனுங் கொள்ளாதிழந்தானென்றெல்லாராலு மிகழப்படுவா னென்ற வாறு.

'அஆ' வென்றது அருளினகட் குறிப்பு. ஒளிநிறான் என்பது, தன்னை நன்னெறிக்கட் செலுத்தும் வகைத்தாகத் தனக்கெய் போதும் ஒளியை யுண்டாக்கப்பட்ட அறத்தினையும்; தன்னைக் காத்து நிற்கும்படி செய்யான் எவ்வகையாலுய்யக்கடவன். பொருளுண்டாய வழி இவ்வியல்பினனாவது அறிவின்மையல்லோ வென்றுயர்ந்தோர் அருளினாலிரக்கமுற்று யாவரும் புகழினையும் அறத்தினையும் செய்து உய்யும்வகைக் குறுதி கூறியது.

பதுமனார்:—தானுண்ணாதும், ஒளியை நிறுத்தாதும், மிக்க புகழைச் செய்யாதும், பெறற்கரிய கேளிரது துன்பத்தை நீக்காதும், பிறர்க்கு அறத்தை நோக்கிக்கொடாதும் பய னின்றியே பொருளைக் காத்திருப்பானாயின், அப்பொருளை யவன் 'அஆ' இழந்தானென்று கருதப்படுமென்றவாறு.

---

[1]'ஒளியாவது—வெள்ளைமையின்மை' என்பர் தொல்காப்பிய உரையில் நச்சினார்க்கினியர்.

[2]'றெண்ணப் படும்' என்பது பாடபேதம்.

ஒளியென்பது தானுளகாலத் தொப்புரவு. புகழென்பது தானிறந்த காலத்து முளதாமுரை. கொன்னே—பயனின்றியே. வழங்கான்—அறத்தை நோக்கி வழங்கான். கொன்னே என் பதனைப் பொருள் காத்திருப்பானென்னுஞ் சொல்லுடனே கூட்டிக் கொள்க. 'அஆ' அருளின்கட் குறிப்பு.

விளக்க உரை:— உண்ணா னொளிநிறான்—தானு முண் ணாது ஒளியையும் நிறுத்தான்; ஓங்கு புகழ் செய்யான்—தானிறந்த காலத்தும் பின்பும் நிற்கத்தக்க பெரிய புகழையுஞ் செய்யான்; துன்னருங் கேளிர் துயர்களையான்—பெறுதற்கரிய கேளிருடைய விதனங்களையும் நீக்கான்; கொன்னே வழங்கான் பொருள் காத்திருப்பானேல்—ஒருவருக்கு ஒன்றைக் கொடாதே ஒரு பயனுமன்றியே பொருளை அந்தத் துவைத்துக் காத்திருப் பானாகில் அஆ இழந்தானென்றெண்ணப்படும் — அஆ அப் பொருளை இழந்து போனானென்று கருதப்படும்.

ஒளியென்பது தானுளதாகிய காலத்து விளங்குதல். புக ழென்பது இறந்த காலத்தும் உளதாம் உரை. அஆ என்பது சான்றோர் அருளின்கட் குறிப்பு.

மேற்கோள் பகுதி:—

பரிமே:—"ஒளி—தாம் உளகாலத்து எல்லாரானும் நன்கு மதிக்கப்படுதல்; ஒளி—உறங்கா நிற்கவும் தாம் உலகங் காக்கின்ற அவர் கடவுட்டன்மை" எனவும் "ஒளி—தான் உளனாய காலத்து மிக்குத் தோன்றுதலுடைமை, 'ஒளி நிறா **னோங்கு புகழ் செய்யான்'** என்றார் பிறரும்" எனவும் கூறுவர்.

—குறள் 653, 698, 971.

நேமி:—கொன்னென்னு மிடைச்சொல் பயனின்மையாகிய பொருட்கண் வந்ததற்கு மேற்கோள்.

—சூளா. 53 உரை.

நச்:— "**அ ஆவிழந்தான்**" — ஆகாரம் இரக்கக் குறிப்பு உணர்த்தலும் பிறவுங்கொள்க" என்றார்.

—தொல். சொல். இடைச். சூ. 34.

மயிலை:—அந்தோ, அன்னோ, கொல்லோ, அ ஆவா, அ ஆ என்பன இரக்கங் குறித்து வரும் "... அ ஆவிழந்தானென் றெண்ணப் படும்'' எனக் காண்க.

—எண். சூ. 420.

சங்கர:— அ ஆ என்னும் இடைச்சொல் இரங்குதற் பொருள் தரும் என்பதற்கு "அ ஆ விழைந்தா னென்றெண்ணப் படும்'' என்பதை உதாரணமாகக் காட்டியுள்ளார்.

—நன். சூ. 421.

வைத்திய:— அ ஆ என்பது அருளின்கட் குறிப்பு உணர்த்தியற்கு "அ ஆ .... படும்'' என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.

நச்.
பேரா } :— குறிப்பின் கண், தனிக்குறில் விட்டிசைந்து மொழி முதலில் நேரசையாய் வந்ததற்கு; "அ ஆ விழந்தானென் றெண்ணப் படும்'' என்பதை எடுத்துக்காட்டுவர்.

—தொல். செய். சூ. 7

யா. வி:— "உண்ணா .... படும்'' இதனுள் அ ஆ என்புழிக் குறிப்பின் கண் வந்த தனிக் குறில் அகரம் மொழி முதற் கண் நின்று நேரசையாயிற்று. அ ஆ என்பது அறிவின் கட் குறிப்பு.''

—அசை. சூ. 7.

யா. கா:— "உண்ணா .... படும்'' இதனுள் அ ஆ என்புழி அருளின்கட் குறிப்பாய், விட்டிசைத்துக் குற்றெழுத்து மொழிக்கு முதற்கண் நேரசையாயின வாறும், அல்லாத வழி பிறவற்றின் குறிலோடும், நெடிலோடும் கூடி நிரையசை ஆயின வாறும் கண்டுகொள்க.''

—ஒழி பி.2.

இ. வி:— இவரும் இதற்கே மேற்கோளாகக் காட்டுவர்.

—சூ. 743.

ஒப்புமைப் பகுதி:—

"செயற்பால செய்யா திவறியான் செல்வம்
உயற்பால தன்றிக் கெடும்'' —குறள் 437.

"கருங்குளவி சூரைத்தூற் றீச்சங் கனிபோல்
வருந்தினர்க் கொன்றீயாதான் வாழ்க்கை—அரும்பகலே
இச்சித் திருந்தபொருள் தாயத்தார் கொள்வரே
எற்றோமற் றெற்றோமற் றெற்று."

ஔவையார்—தனிக்கவி.

குறிப்பு:—

புகழ்—'இல்லறத்தின் வழுவாதார்க்கு இம்மைப் பயனாகி இவ்வுலகின்கண் நிகழ்ந்து இறவாது நிற்கும் கீர்த்தி; என்பர் பரிமேலழகர்.

**10. உடாஅது முண்ணாதுந் தம்முடம்பு செற்றுங்
கெடாஅத நல்லறமுஞ் செய்யார்—கொடாஅது
வைத்தீட்டி னாரிழப்பர் [1]வான்றோய் மலைநாட
வுய்த்தீட்டுந் தேனீக் கரி.** (கூ)

தருமர்:—என்பது. உடாது முண்ணாதும்—தனக்கியல் பாகிய உடுக்கையை யுடாமலும், வேண்டிய நல்லுணவுகளை யுண்ணாதேயும்; தம்முடம்பு செற்றும்—இப்படியாகத் தனது உடம்பினை ஒடுங்கப்பண்ணியும்; கெடாத நல்லறமுஞ் செய்யார்—அழிவில்லாத நன்மைபெற்ற அறங்களையுஞ் செய்யார்' கொடாது வைத்தீட்டினா ரிழப்பர்—ஒருவர்க் கொன்றைக் கொடாதே தேடிவைத்திருந்தவர் பொருளை இழந்து விடுவர்; வான்றோய் மலைநாட—வானைத் தோயுமுயரத்தினையுடைய மலை நாடனே!; உய்த்தீட்டுந் தேனீக்கரி—பூவினது மதுவைக் கொண்டுவந்து கூடவைத்து இழந்துபோகிற ஈயல்லவோ இவ்வியல்பினாற்குச் சான்றென்றவாறு.

ஈயானது தன்னறிவின்மைத் தன்மையா லிழப்பதன்றி

---

[1] வான்றோய் மலைநாட-ஆடூஉமுன்னிலை. குறிஞ்சி நிலத்தின் தலைவனை விளித்தார்

அறிவுளதாயி னிழப்பதன்றோ. அறிவுடைய மானிட யாக்கை யெடுத்தும் இவ்வியல்பின னாதலின் இவனும் அசேதனமாகக் கருதி, யாவருமறிவுற்றுப் பொருளெய்தியபொழுதே உண்டுடுத்து இம்மை மறுமைக் குறுதியாகிய புகழினையும், அறத்தினையும் விரும்பி விரைவிற் செய்துகொள்வதாக உறுதி கூறியவாறு.

பதுமனார்:— உடாதேயு முண்ணாதேயும் தம்முடம்பைச் செறுத்துங் கெடாத நல்லறத்தையுஞ் செய்யாதேயும் கொடாதேயும் பொருளை வைத்தீட்டினாரிழப்பர். வான்றோய் மலை நாடனே உய்த்தீட்டுந் தேனீயிதற்கு கரியாவதென்றவாறு.

செற்றும் — செறுத்தும். உய்த்தீட்டும் — முயன்றுகொண்டு வந்தீட்டும். கரி - சான்று.

விளக்க உரை:— உடாது முண்ணாதும் — உடாதேயு முண்ணாதேயும்; தம்முடம்பு செற்றும்—இப்படியொத்த தம் முடம்பை செறுத்தும்; கெடாத நல்லறமுஞ் செய்யார்-அழியாத நல்லறங்களையுஞ் செய்யாராய்; கொடாது வைத்தீட்டினாரி ழப்பர்—ஒருவற் கொன்றைக் கொடாதே ஈட்டிவைத்தவ ரிழந்து விடுவர்; வான்றோய் மலைநாட—வானைத் தோய்கிற மலை நாடனே; உய்த்தீட்டுந் தேனீக்கரி—பூவின் மதுவைக் கொண்டு வரும் தேனீ வைத்திழந்துவிடுமியல்பன்றோ சான்றென்றவாறு.

கரி—சான்று.

ஒப்புமைப் பகுதி:—

"ஈட்டிய தேன்பூ மணங்கண் டிரதமும்
கூட்டிக் கொணர்ந்தொரு கொம்பிடை வைத்திடும்
ஒட்டித் துரந்திட் டதுவலி யார்கொளக்
காட்டிக் கொடுத்து கைவிட்ட வாறே." — திருமந்.171.

"ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்." — கொன்றை 4

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்". —குறள் 228.

"உண்ணாது வைக்கும் பெரும்பொருள் வைப்பின்னா"
—இன்னா நாற்பது.

---

2. இளமை நிலையாமை

தருமர்:- அஃதாவது பதினாறு வயதுக்கு மேல் முப்பத்திரண்டு வயதுக்குள் விடயங்களிலே முயங்கப்பட்ட காமக் குழவிப்பருவம். இந்தப் பருவத்திலே துறத்தல் பயனுண்டென்பது தோன்ற இளமை நிலையாமை யுணர்த்தப்பட்டது.

பதுமனார்:- அஃதாவது ஈண்டிளமையாகக் கூறப்படுகின்றது குழவியும், வளர்ச்சியு மறியாமையு மாகிய பதினாறு வயதுகளுக்குளன்றி, இதற்குமேல் விஷயங்களிலே மயங்கப் பண்ணும் யௌவன பருவத்தைப் போலும்.

அஃதாவது இந்திரிய கருவமும், புறந்தோல் மேலழகாகத் தோற்றப்பட்ட ஒளியும், இளமையுங் கணந்தோறு மநித்தப்பட்டு முப்பத்திரண்டு வயதளவிற்றான் மிகுதி குறைந்து வேறுபட்டு வனிதையர்களானும் முதிர்ந்தா னெனப்படுதல்

இது அதன்பின் வைத்ததென்; செல்வ நில்லாத விடத்தவ் விளமையா லென்ன பயனுண்டாம். இளமை நில்லாதென வேண்டிய தென்னையோவெனின் இளமையோடு நின்றார் பின்பொருக்காற் செல்வம் பெற்றா(ல்தா)ன் கொள்வே மென்று மதிப்பர். அவ்விளமை நில்லாமையைத் தன் நரைமேலும் தளர்ச்சி மேலுமிட்ட வ்விளமைப் பருவத்தே அறஞ் செய்வராயின் செல்வமும் வேண்டுவதில்லை யென்பது கருத்து.

விளக்க உரை:- அஃதாவது பதினாறு வயதுக்குள்ளோ

விடயங்களிலே மயங்கப்பட்டதா மிக்குழவிப் பருவம். இந்தப் பருவத்திலே துறத்தல் நலமுண்டென்பது தோன்ற விளமை நிலையாமையை யுணர்த்தப்பட்டது.

11. நரைவரு மென்றெண்ணி நல்லறி வாளர்
குழவி யிடத்தே துறந்தார்—புரைதீரா
மன்னா விளமை மகிழ்ந்தாரே கோலூன்றி
[1]யின்னாங் கெழுந்திருப் பார்

தருமர்: என்பது. நரைவரு மென்றெண்ணி மூப்பானது வருமென்றறிந்து அதனை மனத்திலெண்ணி; நல்லறிவாளர்—மிகுந்த அறிவினையுண்டானவர்; குழவி யிடத்தே துறந்தார்—இளமைப் பருவத்திலே தானே துறவை யடைந்தார்; புரைதீரா மன்னா விளமை—நற்றந்தீராத நிலைபேறில்லாத விளமையை; மகிழ்ந்தாரே கோலூன்றி—விநம்பினவரே தடியை யூன்றி; இன்னாங் கெழுந்திருப்பார்—தன்னிளமைப் பருவத்துண்டாகிய வியல்பு போக்கிக் கையுற்று இருப்பவரென்றவாறு.

எனவே இளமையானது நிலையல்ல. மூப்பு வருங்காலத்து முன்னுள்ள திடம்போய் நரை, திரை, நோய் முதலானவற்றால் மெலிந்து யாவரு மெண்ணாது நகைக்கும் படிக்கு [மூ]ப்பெய்திக் காலம் வருமளவு மூன்றுதடிமேலுழன்று திரிந்திறப்பர். இவ் வகைத்தாகிய மூப்பிலே துறந்தால் தவமுயன்று தனக்குறுதி பயப்பதோர் பயனை யெய்துவதரிதாகலின், இளமையைத் தனக்கு நிலையென்று மகிழ்ச்சியாகிப் பருவக்களிப்பால் மறந் திராது இளமைப் பருவத்திலே தானே துறந்து தவத்தின் முயன்று தனக்குறுதி பயக்கும் பயனைப்பெற வேண்டுமென்பதாயிற்று.

பதுமனார்:- நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர்

---

[1]இன்னாங்கு—ஒரு சொல்; 'பட்டாங்கு' என்பது போல. 'இன்னாங்கு செய்வார்' — நாலடி. 355.
'ஒருவன் இன்னாங்தரைத்தான்'—தொல். சொல் சூ. 246 உரை.

குழவிப் பருவத்தே துறந்தார். குற்றம் நீங்காத மன்னா விளமையை விரும்பினாரே தண்டூன்றி இன்னாங் கெழுந்திருப்பா ரென்றவாறு.

இளமை கழிந்து நரையானது வந்தால் மனமுதலான கருவி கள் கலங்கியும், நழுவியும் பயன்படாவென்றும், துறக்கப்படுவன தம்மிடத்துளவாகத் துறப்பது துறவென்றெண்ணிக் குழவி யிடத்தே துறந்தார். பதினாறளவும் கலை நிரம்பாவாகலிற் குழவியென்று பெயர்.

புரை—குற்றம். இன்னாங்கெழுந்திருப்பார் — மக்கட்பிறப் பான் பயன் கொள்ளப் பெற்றிலமென்று பின்பு இன்னாதா வெழுந்திருப்பார்.

விளக்க உரை:- நரைவரு மென்றெண்ணி நல்லறிவாளர் குழவியிடத்தே துறந்தார் - இனிமேலிப்படி நரை வருமென்று நல்லறிவினையுடையார் குழவிப் பருவத்திலே துறந்தார்; புரை தீரா—குற்றந்தீராத; மன்னாவிளமை—நிலையாத விளமையை; மகிழ்ந் தாரே—விரும்பினாரே; கோலூன்றி— தடியையூன்றி; இன்னாங் கெழுந்திருப்பார் பொல்லாதாக வெழுந்திருப்பார்.

பதினாறளவுங் கலைநிரம்பாவாதலின் குழவியென்று பெயர்.

மேற்கோள் பகுதி:-

நச்.
சேனா. } :— 'என்று' என்னுமிடைச்சொல், வினைப் பொருண்மை குறித்து வருவதற்கு "**நரைவரு மென்றெண்ணி**" என்பதை எடுத்துக்காட்டுவர். —தொல். சொல். இடைச்.சூ.11

இ. வி:—இவரும் இதற்கே எடுத்துக்காட்டுவர்.
—இ. வி. சூ. 255.

நேமி:—பெயரெச்சம் உடனடுக்கி வந்து முடிந்ததற்கு

"**புரைதீரா மன்னாவிளமை**" என்பது எடுத்துக்காட்டு.
- நேமி. 46 உரை.

இ. கொ. } :—பெயரெச்சம் மறையாயடுக்கி வந்ததற்கு
பிரயோக. }

"**புரைதீரா மன்னா விளமை**" என்பதை எடுத்துக் காட்டுவர்.

—இ. கொ. சூ. 120.
—பிரயோக. சூ. 39.

ஒப்புமைப் பகுதி:-

"*திறைமன்ன ருய்ப்பத் திருநிற்பச் செங்கோ னடப்பக்*
குறைவின்றிக் கொற்ற முயரத் தெவ்வர்தேர் பணிய
வுறைகின்ற காலத் தறங்கேட் டுருமுற்ற பாம்பி
னறிவன் னடிக்கீழ் அரசஞ்சித் துறந்த வாறும்"

—*சீவக. பதி.* 27.

"**தலைவனும் தலைவியும் மூப்புவருவதன் முன்துறப்பார்**"

—**கலி.**22 ந.

"வடிவிளமை வாய்த்த வனப்பு வணங்காக்
குடிகுல்மென் றைந்துங் குறித்து—முடியா
துளங்கா நிலைகாணார் தொக்கீர் பசுவால்
இளங்காற் றுறவா தவர்"

—*சிறுபஞ்ச* 24.

"வேண்டி னுண்டாகத் துறக்க சிறந்தபின்
ஈண்டியற் பால பல.'

—குறள் 342.

(க)

12. **[1]நட்பினா ரற்றனர் நல்லாரு மஃகினா**
ரற்புத் தளையு மவிழ்ந்தன—வுட்காணாய்
வாழ்தலி னூதிய மென்னுண்டாம் வந்ததே
யாழ்கலத் தன்ன [2]கலி.

---

[1]'*நட்புநா ரற்றன*' என்பது பாடபேதம்.

[2]'கலுழ்' என்று பாடமோதி அழுகை யென்றுரைப்பாரு முளர்

தருமர்:- என்பது, நட்பினா ரற்றனர்—நட்பா யிருந்த பேரும் மனத்திலீரன்பாக அற்றார்கள்; நல்லாரு மஃகினார்—தன் மேம் காதலை யுடைய மகளிரு மன்பு சுருங்கினார்; அற்புத்தளையுற் அவிழ்ந்தன—அன்பாகிய பிணிப்பென்னுந் தன் புதல்வர் முதலா யினாருங் கை நெகிழ்ந்தார்கள்; உட்காணாய் — புறம்பாக வன்றியுழுள்ளாக நோக்கிக்காணாய்; வாழ்தலி னூதியமென்னுண் டாம்—ஆதலால் மனைவாழ்க்கையினாற் பயனுள்ளதேது; வந்ததே யாழ்கலத் தன்ன கலி—வந்ததல்லோ ஆழு மரக்கலத் தினிடத்திலுண்டாகு மொலிபோலச் சுற்றத்தா ரழுகிற வோசையு மென்றவாறு.

'அன்புத்தலை' யென்பதை எதுகைக் கமையும் படிக்கும் **'அற்புத்தலை'** யென்று திரித்துக் கூறினார். எனவே இதிமைப் பருவத்திலே துறந்து தனக்குத் துணையாகிய தவத்தை முயலாமல், இளமைப் பருவத்திலே இல்வாழ்க்கையை விரும்பி னாற்கு; மூப்பு வந்த வேளையிற் றவமுயலுதற்கு கூடாது மூப்பிலே நோயுந் துன்பமும் பெற்றுழல்வதா மதனால் மூப்பு இத்தன்மைத்தென்று விரித்து இளமை நிலையல்ல வெனக் கூறியதாயிற்று.

பதுமனார்:- நட்பாகிய நாரு மற்றன. நின்னாற் காதலிக்கப் பட்ட மகளிரு மன்பு குறைந்தார். அன்பென்னா நின்றதளையும் நெகிழ்ந்தன. புறனாகவன்றி யுள்ளே யாராயாய், மனைவாழ் வினாற் பயனென் னுளதாம்; ஆழுங்கலம் போலே சுற்றத்தா ரழுகைக்குரலுங் வந்தது என்றவாறு.

நார்— பிணிக்குநார். நல்லாரு மஃகினார்—மகளிரானவரு மன்பு குறைந்தார். அற்புத்தளை—அன்பாகிய பிணிப்பும். வாழ் தலில்—துறவாது மனையிலே வாழ்தலில். ஆழ்கலத்தன்னகலி —நீரிலாழ்ந்து கெடுமரக்கலத்தன்ன வாரவாரம்.

விளக்க உரை:- நட்பினா ரற்றனர் — நட்பாகியனாரு மற்றனர்; நல்லாரு மஃகினார்—தன்மேல் காதலுடைய மகளிரு மன்பு குறைந்தார்; அற்புத் தளையுமவிழ்தன— அன்பென்னுந்

தனையு மவிழ்ந்தன; உட்காணாய்—புறனாகவன்று யுள்ளே பாராய்; வாழ்தலினூதிய மென்னுண்டாம்—மனைவாழ்க்கையிற் பயனென்னுண்டாம்; வந்ததே—வந்ததல்லோ; ஆழ்கலத்தன்ன கலி—ஆழுங்கலம் போல சுற்றத்தா ரழுகைக் குரலும் வந்ததல் லோ வென்றவாறு.

ஆழ்கலத்தன்ன கலி—நீரி லாழ்ந்து கெடு மரக்கலத்தன்ன ஆரவாரம்.

மேற்கோள் பகுதி:-

நச்
சங்கர. } :- மென்றொடர்க் குற்றியலுகர மொழியின்

மெல்லொற்று வேற்றுமைக் கண்ணும் அல்வழிக் கண்ணும் வரு மொழி முதலில் வலிவந்த விடத்துக்கிளைவல் லொற்றாயதற்கு, ''**அற்புத்தளை**'' என்பதை எடுத்துக்காட்டுவர்.

—தொல். எழுத். குற்றிய. சூ. 9.
—நன். சூ. 184

ஒப்புமைப் பகுதி:-

4—4 வந்ததே சுலும்:-

''ஆழ்கல மாந்தர்போல வணிநக ரழுங்கிற்றன்றே''

''பேதுசெய் பிணிப் பெரும்புலி பாய்திடப் பிணமா
மோதைமாக் கடலுடை கலத்த வுருற்ற துறவே''

''பண்ணார் களிறேபோற் பாயோங்குயர் நாவாய்
கண்ணார் கடன்மண்டிக் காற்றிற் கவிழுங்கால்
மண்ணார் மணிப்பூணோய் மக்களுறுந் துன்பம்
நண்ணா நரகத்தின் நான்கா மடியன்றே''

—சீவக. 1163; 2759; 2793.

''கலங்கவிழ்த்த நாய்கன்போற் களை துணை பிறிதின்றிப்
புலம்பு மென்னிலை''

—யா. வி. செய். சூ. 33.
—யா. கா. செய். சூ. 12.
இ. வி. சூ. 738.

''காற்றத் திடைப்பட்ட கலவர் மனம்போல
வாற்றத் துளங்கா நிற்ப னாழிவலவா''

—பெரிய திரு. 11.8:1.

13. சொற்றளர்ந்து கோலூன்றிச் சோர்ந்த நடையின ராய்ப்
பற்கழன்று பண்டம் பழிகாறு—மிற்செறிந்து
காம நெறிபடருங் கண்ணினார்க் கில்லையே
யேம நெறிபடரு மாறு.

தருமர்:—என்பது. சொற்றளர்ந்து கோலூன்றி—தான் சொல்லுகிற சொல்லும் தடுமாற்றமாகிக் கையிற் றடியூன்றி; சோர்ந்த நடையினராய்—தமது வசமிழந்து சோருகின்ற [சல]மலங்களையுடையராய்; பற்கழன்று பண்டம் பழிகாறும்—பற்களும் விழுந்து உடம்பென்னும் பண்டம் இப்பெற்றியால் பிறரால் பழிக்கப்படுமளவும்; இற்செறிந்து—இல்லின் கண்ணே பொருந்திய; காமநெறி படருங் கண்ணினார்க் கில்லையே—மனை வாழ்க்கையாகிய ஆசைவழியிற் செல்லுமனத்தினை யுடையவர்க்கு இல்லையல்லோ; ஏம நெறிபடரு மாறு—தனக்கு அரணாகிய நன்னெறிக்கண் விரும்பிச் செய்யும் வழிபாடில்லை யென்றவாறு.

சோர்ந்த நடையென்பதஃனச் செல்வம்போய் வறுமையாகிய வாழ்க்கை என்பாருமுளர். எனவே அறிவின்மையினால் இல் வாழ்க்கையை விரும்பி இளமைப் பருவத்தை பயனின்றியே கழிப்பவர்க்கு, இளமையினிலை இத்தன்மை யென்று உறுதி கூறி மூப்புவருமுன்னே தமக்குறுதியாகிய நெறிக்கண் முயலும்படிக்கு அறிவுறுத்தியாயிற்று.

பதுமனார்:—சொல்லுந் தளர்ந்து கோலுமூன்றிச் சோர்ந்த [சல]மலங்களையு முடையராய்; பல்லுங்கழன் றிப்பெற்றியான் உடம்பென்னும் பாண்டம், பிறராற் பழிக்கப்படுமளவு மனையின் கண்ணே செறிந்து; காமநெறியை யொழுகு மறிவுடையார்க்

கில்லை தமக்கரணாகிய நன்னெறிக்கண் நின்றொழுகும் வகை யென்றவாறு

சோர்ந்த நடையென்பதனைத் தளர்ந்த செல்வமென்பாரு முளர். பண்டம் பழிகாறும்—உடம்பாகிய பண்டம் பழிப் புண்ணுமளவும், ஏமநெறி படருமாறு—தமக்கரணாகிய நெறியிற் றுறந்து போயப் போக்கு. ஏமம்—இரட்சிக்க வெண்பதாம்.

விளக்க உரை:—சொற்றளர்ந்து கோலூன்றி - சொல்லுந் தளர்ந்து கோலு மூன்றி; சோர்ந்த நடையினராய்ப் பற்கழன்று —சோர்ந்த [சல]மலங்களையுடையராய்ப் பல்லும் வீழ்ந்து; பண்டம் பழிகாறும்—உடம்பென்னும் பண்ட மிப்பெற்றியால் பழிக்கப்படுமளவும்; இற்செறிந்து—இல்வாழ்க்கையின் கண்ணே செறிந்து; காமநெறி படருங் கண்ணினார்க்கு—ஆசைவழி யொழுகும் கருத்தையுடையார்க்கு; இல்லையே ஏமநெறி படரு மாறு— தமக்கரணாகிய நன்னெறிக்கணின்றொழுகும் வழியென்ற வாறு.

சோர்ந்த நடையென்பதனை தளர்ந்த செல்வமென்பாரு முளர். ஏமம்—இரட்சை என்பதாம்.

ஒப்புமைப் பகுதி:—

''முதுகு பற்றி கைத்தலத்துகால் முன்னோர் கோலூன்றி
விதிர் விதிர்த்துக் கண்சுழன்று மேற்கிளை கொண்டிருமி
இதுவென் னப்பர் மூத்தவாறென் னென்
றிளையவ ரேசா முன்''

—பெ. திரு. 1. 3:2.

''ஒழுகிய நடையு நீரு முதலகை யிகப்ப வூறு
மழுகலிவ் வள்ளல் யாக்கை யகம்புற மாயிற் றாயின்
கழுகொடு கவருங் காக்கை கைதடி கொண்டு காத்து
மழகுள சுழலுமன்னோ வாயிரச் சாதி மாதோ''

—சூளா. துறவு. 11.

குறிப்பு:-

பண்டம் — உடலாகிய பொருள். "பண்டமறியார் படு சாந்துங் கோதையுங், கண்பா ராட்டுவர்," "தம்மை யோர், பண்டத்துள் வைப்ப திலர்" என (நாலடி. 48, 58ல்) வருவதும் காண்க. (ந)

14. தாழாத் தளராத் [1]தலைநடுக்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—[2]காழில்
மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகுந் தங்கைக்கோ
லம்மனைக்கோ லாகிய ஞான்று.

தருமர்:-என்பது. தாழாத் தளரா—மூப்பினாலுடல் வளைந்து தாழ்ந்து தளர்வெய்தி; தலைநடுக்காத் தண்டூன்றா—தலை நடுங்கிக் கையில் தடியை யூன்றி; வீழா விறக்கு மிவண் மாட்டுங் காழில்—விழுந்து மெழுந்துஞ் செல்கின்ற இவளிடத்துங் குற்றங்களில்லை; மம்மர்கொள் மாந்தர்க் கணங்காகும்—இல் வாழ்க்கையில் விருப்பமுற்று மகளிருடைய நலத்தைக் காதலிக்கு மனிதர்க்கு வருத்தமாகும்; தங்கைக்கோல் அம்மனைக் கோலாகிய ஞான்று—தாம் காதலித்த மகளிர்க்கு அவருடைய தாய் போலக் கையில் தடியாகிய நாளிலென்றவாறு.

நெறியின்கண்ணொரு முதியா ளித்தன்மையாகச் செல்லு மயளை நோக்கி யிவளாகிலும் மூப்பிடத்து மடியுற்றிராமல் தொழில்மேற் செல்லுகின்றாள். இவளிடத்துக் குற்றமில்லை. தாம் விரும்பிய மகளிர்க்கு மூப்பு வந்துழி முன்செல்வத்தால் மேன்மை பெற்றிருந்தாளாதலில் ஒரு தொழிலுக்கு மாவாள், அல்லாமல் விரும்பிய மாந்தரால் மிகவும் பரிகரிக்க வேண்டுமாதலில் அதற்கு அம்மகளிர் வருத்தஞ் செய்வதோரணங் கென்றார்.

---

[1]தலைநடுங்கா என்பது பாடபேதம்.

[2]காழிலா' காழில்லா என்பன பாடபேதங்கள்.

ஆதலால் இவ்வகைத்தாய இளமை ஒருவருக்கும் நிலையல்ல. மூப்புற்றுழிச் செய்து முடிக்கு முறுதிப்பாடுமில்லை. அதனால் இளமைப் பருவத்திலே தானே தன்னை நன்னெறியிலுய்ப்பதாய உறுதிகளைச் செய்துகொள்ள வேண்டுமென்பதாயிற்று.

பதுமனார்:- குனிந்து, தளர்ந்து, தலையை நடுக்கித் தண்டினை யூன்றி, விழ்ந்து கழிகின்ற விவள்கண்ணேயும், மனதின் கட்டிண்மையின்றி மயக்கத்தைக் கொண்ட ஆடவர்க்கு வருத்துந் தன்மையுள்ளதாம். இவள் தன் கைத்தண்டு தாய் கைத்துண்டாகிய ஞான்றென்றவாறு.

விறக்குமென்று பாடமோதி வெருவுமென்று பொருளுரைப் பாருமுளர்.

காழில்லா—மனத்தின் கட்டுறவிற் றிண்மையில்லா. மம்மர் கொண் மாந்தர்க்கு — மயக்கத்தைக் கொண்ட மக்கட்கு. அணங்காகும்—வருத்தத்தைச் செய்யும். தன்கைக்கோ லம் மனைக்கோ லாகிய ஞான்று—இவளுன்றின தண்டு தாயூன்றின காலத்து.

விளக்க உரை:- தாழாத் தளரா — தாழ்ந்து தளர்ந்து; தலைநடுங்காத் தண்டூன்றா—தலைநடுக்கித் தண்டினையூன்றி; வீழா—விழ்ந்து; இறக்கும்—கழிகின்ற, இவண்மாட்டும்—இவளி டத்தேயும்; காழில் மம்மர்கொள் மாந்தார்க்கு—நன்மையில்லாத மயக்கத்தைக் கொண்டவாடவர்க்கு; அணங்காகும் - தெய்வப் பெண் போல வருத்தஞ் செய்யும். தங்கைக்கோல் அம்மனைக் கோலாகிய ஞான்று—இவள்கைத்தண்டு தாய் கைத்துண்டாகிய ஞான்றென்றவாறு.

[1]விறக்குமென்று பாடமோதி வெருவுமென்று ரைப்பாருமுளர்.

---

[1] "விறப்பே வெரூஉப் பொருட்டு மாகும்"-தொல். சொல். உரி. சூ. 50

மேற்கோள் பகுதி:—

மயிலை: உயர்திணைப்பெயர், குறிப்பினாற் பெண் பாலொழித்து வந்ததற்கு "மம்மர்கொள் மாந்தர்க்கு .... ஞான்று" என்பதை எடுத்துக்காட்டுவர். —நன். சூ. 351.

இளம்:- "தாழாத் தளரா.....................ஞான்று" என்பது பிறர்மாட்டு மூப்புப் பற்றி இழிப்புப் பிறந்தது" என்பர்.
—தொல். மெய்ப்பாடு. சூ. 6

ஒப்புமைப் பகுதி:-

—நனிபெரிதும்

வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து."

—நாலடி. 17.

"தளர்ந்த நடையிற் றண்டுகா லூன்றி
வளைந்த யாக்கையோர் மறையோ னாகி"
—மணி. பாத்திர. மரபு. 30.

குறிப்பு:-

"அணங்காகும்—காமநெறியான் உயிர்கொள்ளும் தெய்வ மாகும்" என்பர் பரிமேலழகர். (குறள்—918.)

விறக்குமிவண்மாட்டும், மம்மர்கொள் மாந்தர்க்கு (இவள்) தன் கைக்கோல் அம்மனைக் கோலாகிய ஞான்று அணங்காகும் எனக்கூட்டுக. (௪)

15. எனக்குத்தா யாகியா ளென்னையீங் கிட்டுத்
தனக்குத்தாய் நாடியே சென்றா—டனக்குத்தா
யாகி யவளு மதுவானால் தாய்த்தாய்க்கொண்டு
ஏகு மளித்திவ் வுலகு.

தருமர்:- என்பது. எனக்குத்தா யாகியா ளென்னை யீங்கிட்டு-எனக்குத் தாயாகி வந்தவளென்னை இவ்விடத் திருத்தி; தனக்குத் தாய்நாடியே சென்றாள்-தனக்கொரு தாயை விசாரித்து அவளிடத்து நாட்டமாகவே போயினாள்; தனக்குத் தாயாகி யவளு மதுவானால்-[அவள் தனக்குத் தாயாகியவளு மத்தன்மையளானால்], தாய்த்தாய்க் கொண்டேகு மளித் திவ்வுலகு—தாயை நாடிக்கொண்டே இறந்துபோகா நின்றது இந்த ஏழை உலக மென்றவாறு.

எனவே உலகத்துள்ளா ரெல்லா மிவ்வகைத் (தாயிற)க்குந் தன்மையாயிருக்கவும், இளமையை நிலையென்று கருதித் தமக் குறுதியாகிய அறங்களைத், தவங்களைச் செய்யாது வீணிலே நாளைக்கழியா நின்றார்; இவ்வுலகத்திலுள்ள வேழை மனிதர். இவர் அறிவின்மை இத்தன்மைத்தோவென விரங்கக் கூறியதாம்.

பதுமனார்:- இளமை கழிந்து எனக்குத் தாயாகியவள் என்னையீங்கே இட்டுத்தனக்கொரு தாயை நாடவேண்டி இறந்து போயினாள். தனக்குத் தாயாகியவளும் இளமை கழிந்து அப்பெற்றியினாற் றாயை நாடிக்கொண்டு போகா நின்ற திவ்வேழை யுலகென்றவாறு.

நாடியே சென்றாள்—தேடி யிறந்துபோயினாள். அளித்திவ் வுலகு—அளிக்கத்தக்க உலகு.

விளக்க உரை:- எனக்குத் தாயாகியாள் - எனக்குத் தாயாகியவள்; என்னையீங்கிட்டு-என்னை இவ்விடத்தில் பெற்று வைத்து; தனக்குத் தாய்நாடியே சென்றாள்-தனக்கொரு தாயை வேண்டியிறந்துபோனாள்; தனக்குத் தாயாகியவளு மதுவானால்-அவள் தனக்குத் தாயாகியவளு மப்பெற்றிய ளானால்; தாய்த் தாய்க் கொண்டேகும்-தாயைத் தாயை நாடிக்கொண்டு போகா நின்றது; அளித்திவ்வுலகு-கொண்டாடத் தக்க திவ்வேழை யுலகமென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

''உழந்துழந்து கொண்ட வுடம்பினைக் கூற்றுண்ண
விழைந்திழைந் தெங்கணுந்தோன்றிச்—சுழன்றுழன்ற
சுற்றத்தா ரல்லாதா ரில்லைகா ணன்னெஞ்சே
செற்றத்தாற் செய்வ தெவன்''

—அறநெறி. 102.

''மூத்தோர் மூத்தோர்க் கூற்ற மய்த்தென
பாறா வந்த பழவிறற் றாய''

—புறம். 75.

(நீ)

16\. வெறியயர் வெங்களத்து வேன்மகன் பாணி
முறியார் நறுங்கண்ணி முன்னர்த் தயங்க
மறிகுள குண்டன்ன மன்னா மகிழ்ச்சி
யறிவுடை யாளர்க ணில்.

தருமர்:—என்பது. வெறியயர் வெங்களத்து — வெறியாடற் றொழிலை விரும்பிச் செய்யுங் கொலைக்களத்து; வேல்மகன் பாணி—வேலினைக் கையிற் றரித்து அத்தொழிலுக் குரித்தாக நிற்குமவன் கையின்; முறியார் நறுங்கண்ணி—தளிரால் சேர்த்த நறுவியதாகிய மாலை; முன்னர்த் தயங்க — தன்முன்னே அசைந்து தோன்ற; மறி[1]குளகு உண்டன்ன—அதனை ஆடானது தனக் குணவென்ன உண்டிறந்தாற் போலும்; மன்னா மகிழ்ச்சி—நிலை பேறில்லாத விளமையால் வருங்களிப்பு; அறிவுடையாளர்க ணில்—அறிவுடைய பெரியோரிடத்தில்லை என்றவாறு.

குறிஞ்சித் திணையில் வெறியாடு மமர்க்களத்தில் ஆடுகளை வெட்டும்போது, கையிலே தளிரால் சேர்த்து வாளைக் கைப் பிடித் தசைக்க, ஆடுதனக்குணவென்று வந்துண்ணும்பொழுது;

---

[1]குளகு—இலைமேயும் விலங்கின் உணவு. ''இலைநுகர் விலங்குணாவே குளகென வியம்பலாகும்'' என்பது நிகண்டு.

தன் கையால்மெல்ல அந்த ஆட்டை வெட்டுவனாகலின் அவனை வேல் மகனென்றார். வெட்டுந் தொழிலுக்காகிய வேலு (டனுள்ள தளிர்) உணவு ஆதலாலந்த மறியானது, அறிவின்மையினாலவன் தன்னைக் கொல்லுமவன் என்றறியாமல் அவன் கையிற்றளிர் தனக் குணவென்று விரும்பியிருந்தது போல; அறிவில்லாரும் தமது நிலைமை யறியாமற் றமக்குறுதியானது இளமைப் பருவத்திற் செய்யாது இவ்வகைத்தாய்க் கெடுவர். அப்படிப் போலாது அறிவுடையார் இளமையானது நிலையல்லவென்று கருதி, மூப்பு வருமுன்னே தானே தம்மை நன்னெறிக்கண் செலுத்துவதாய உறுதிகளைச் செய்து கொள்வரென அறிவில்லார்க்கு மறிவுறுத்திய தாயிற்று.

பதுமனார்:—வெறித் தோழிலை விரும்பிச் செய்கின்ற வெய்ய கொலைக்களத்து வேலனாகிய மகன் கையில், கட்டளிரார்ந்த நறுங்கண்ணி தன்முன்னே அசைந்து தோன்ற வதனை யாட்டு மறிதளகாக வுண்டாற் போலும் நிலையாத விளமையால் வருங்களிப்பு நல்லறிவுடையார் மாட்டில்லையாம் என்றவாறு.

வெறியயர் வெங்களம்—தெய்வத் தொழிலைச் செய்யப்பட்ட வெங்களம். பாணி—கை. முறி—தளிர். தயங்க—அசைய. ஆட்டு மறியானது தன்னைக் கொல்லவிட்ட மாலையை யறியாது மன்னா மகிழ்ச்சி—நிலை நில்லா உடம்பிலாலே நுகரு மகிழ்ச்சி.

விளக்க உரை:— வெறியயர் வெங்களத்து — வேற்றொழிலை விரும்பி தெய்வத் தொழிலைச் செய்கின்ற வெய்ய கொலைக் களத்து; வேன்மகன் பாணி—வேலனாகிய படிமற்றான் கையில்; முறியார் நறுங்கண்ணி—தளிரார்ந்த நறுவிய மாலை; முன்னர்த் தயங்க--தன்முன்னே உணர்ந்து தோன்ற; மறிகுளகு உண்டன்ன மன்னா மகிழ்ச்சி — ஆட்டுமறிகுளகாக உண்டானாற் போல நிலையில்லாத விளமையால் வருங்களிப்பு; அறிவுடையாளர் கணில்—அறிவுடையாரிடத்தில்லை யென்றவாறு.

மன்னா மகிழ்ச்சி–நிலையில்லா உடம்பினால் நுகரு மகிழ்ச்சி.

ஒப்புமைப் பகுதி:-

"கொலைஞ ருலையேற்றித் தீமடுப்ப வாமை
நிலையறியா தந்நீர் படிந்தாடி யற்றே
கொலைவல் பெருங்கூற்றங் கோட்பார்ப்ப வீண்டை
வளையகத்துச் செம்மாப்பார் மாண்பு.
—நாலடி. 331.

குறிப்பு:-

வெறியயர்தல்-ஆவேசங் கொண்டாடுதல். "வேலன்றை இய வெறியயர் களனும்" (முருகு. 222) என்றும், "வேலனார் வந்து வெறியாடும் வெங்களத்து" (சிலப்.24) என்றும் வருதல் காண்க. நறுங்கண்ணி — "புலராப் பச்சிலை யிடையிடுபு தொடுத்த மலரா மாலை" என்பது புறம். 33.

(௬)

17. பனிபடு சோலைப் பயன்மர மெல்லாங்
கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—நனிபெரிது
வேற்கண்ண ளென்றிவளை வெஃகன்மின் மற்றிவளுங்
கோற்கண்ண ளாகுங் குனிந்து

தருமர்:- என்பது. பனிபடு சோலைப் பயன் மரமெல்லாம் —குளிர்ச்சியை யுடைய சோலையிற் பயன்படு மரங்களெல்லாம்; கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—பழமெல்லா முதிர்ந்துபோய் வறிதாய் நிற்கு மரம் போலு மிளமையானது; நனிபெரிது வேற் கண்ணா ளென்றிவளை வெஃகன்மின்—மிகவும் பெரிதாகும் வேல் போன்ற கண்ணினையுடையா ளென்றிவளை விரும்பா தொழிமின்; மற்றிவளுங் கோற்கண்ணா ளாகுங் குனிந்து-பின்பு இவளுடல் வளைந்து தோலினிட மாக இயங்குதலை யுடைய ளாவளென்றவாறு.

எனவே பழம்போலும் இளமையா(னது நிலையாது.(அ தனை அறியாமல் (பருவக்களிப்பால் இச்சை ஊட்டும்) மகளி

ரெழில் நலங்களை விரும்பி தமக்குறுதி செய்துகொள்ளமாட்டா து இருப்பதென்! அம் (மங்கைமாட்டாகிலு மிளமை நிலையோ; அவற்கு மித்தன்மை யாயிற்றதலால் நமக்கு நன்னெறி பயப் பதனை விரும்பாமல் காமக்களிப்பால் மறந்தா லெவ்வகைத்தாய் நன்னெறி சேர்வீரென் றறிவுறுத்தியவாறு.

பதுமனார்:- குளிர் படுகின்ற சோலையிற் பயன்படுகிற மரங்களெல்லாம் பழமுதிர்ந்து, கழிந்தாற்போலு மிளமையானது ஆகலான் இக்காலத்து, மிகப் பெரிது மிவள் வேலொத்த கண்ணினையுடையளென்று விரும்பாதொழிமின். இவளும் கோலாகிய கண்ணினை யுடையளாம் வளைந்தென்றவாறு.

நனி—மிக. வெஃகுதல்—விரும்புதல். கோற்கண்——கோலே கண்ணாதல்.

விளக்க உரை:- பனிபடு சோலைப்பயன் மரமெல்லாம்—குளிர்ச்சி படுஞ் சோலையிற் பயன் மரங்களெல்லாம்; கனியுதிர்ந்து வீழ்ந்தற் றிளமை—பழமுதிர்ந்து கழிந்தாற்போலு மிளமையானது; நனிபெரிது வேற்கண்ணா ளென்றிவளை வெஃகன்மின்—மிகவும் பெரிது வேல்போற் கண்ணினையுடையாளென்று விரும்பாதொழிமின்; மற்றிவளுங் கோற்கண்ணாளாகுங் குனிந்து மற்றிவளுங் கோலாகிய கண்ணினையுடையாளாம் வளைந்தென்றவாறு.

நனி—மிக. வெஃகுதல்—விரும்புதல். கோற்கண்—கோலேகண்ணாகும்.

மேற்கோள் பகுதி:-

மயிலை:- மரபு வழுவமைப்பு உணர்த்துதலுக்கு **"நனி பெரிதும்............ .....வெ:கன்மின்"** என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.

நன். சூ. 397

ஒப்புமைப் பகுதி:—

"வேற்கண்ட மடவார் விழைவொழிய யாம்விழையக்
கோற்க ணெறிகாட்டக் கொல்கூற் றுழையதாம்"
—வளையாபதி.

"காய் முதிர்கனியி னூழ்த்து வீழுமிவ் வியாக்கை"
—சீவக. 1435.

"தாழாத் தளராத் தலைநடுக்காத் தண்டூன்றா
வீழா விறக்கு மிவண்மாட்டுங்—காழில்லா
மம்மர்கொண் மாந்தர்க் கணங்காகுந் தங்கைக்கோ
லம்மனைகோ லாகிய ஞான்று"
—நாலடி.14.

குறிப்பு:—

கோற்கண்ணள் ஆகும் என்பது, முதுமையிற் கண்கெட்டு ஊன்றுகோலையே ஆதாரமாகக்கொண்டு தட்டித்தட்டி வழி தெரிந்து நடப்பள் என்பதாம்.

(எ)

**18. பருவ மெனைத்துள பல்லின்பா லேனை
யிருசிகையு முண்டீரோ வென்று—வரிசையா
லுண்ணாட்டங் கொள்ளப் படுதலால் யாக்கைக்கோ
ளெண்ணா ரறிவுடை யார்.**

தருமர்:— என்பது, பருவம் எனைத்துள—உமக்கு வயது எவ்வளவுண்டு; பல்லின் பாலேனை— பல்லினுறுதி எவ்வளவு; இருசிகையு முண்டீரோ வென்று—இருபொழுதும் உண்டீரோ வென்று; வரிசையால்—முறைமுறையாக; உண்ணாட்டங் கொள்ளப் படுதலால்—இவனுடைய உள்ளக்கருத்தைப் பிறரா லாராயப்படுதலால்; யாக்கைக்கோள் எண்ணா ரறிவுடையார்— யாக்கையின் (கோட்) பாட்டை யொன்றாகக் கருதார் அறிவினை யுடையவரென்றவாறு.

இருசிகை யென்பதனை முற்சிகை, பிற்சிகை நீக்காமல் உண்ணும் பல முண்டோ வென்பாரு முளர். எனவே, இளமை யினது நிலைமை இத்தன்மையதென அறிவுடையார் தமக்கான உறுதிகளை முயன்று செய்வ(ர)ல்லாது, யாக்கையினது கோட் பாடாகிய விளமைப் பருவத்தினது களிப்பிலுறாரென அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:- யாண்டெத்தனையுள. பற்களின் பகுதி எத்துணைய. ஒருசிகையே யன்றி இருசிகைச்சோறுமுண்டீரோ வென்று முறைமையால் யாக்கைதான், உள்ளாராய்ச்சிக் கொள்ளப்படுதலா லிவ்வியாக்கைக் கோளினை யொன்றாக மதியார் அறிவுடையா ரென்றவாறு.

இருசிகை-இருக்காலாவது இடுஞ்சோறு. உண்ணாட்டம்-உள்ளபடியாராய்தல். கோள்—கோட்பாடு.

விளக்க உரை:- பருவமெனைத்துள - வயதெத்தனையுள; [1]பல்லின் பாலேனை—பற்களென்; இருசிகையு முண்டீரோ வென்று - இருசிகைச் சோறு முண்டீரோ, ஒருசிகை யளவோ உமது தீபனமென்று கேட்டு; வரிசையா லுண்ணாட்டங் கொள்ளப்படுதலால்—முறைமையா லுமதுள்ளத்தைப் பிறரா லாராய்ந்து கொள்ளப்படுதலால்; யாக்கைக்கோ ளெண்ணாரறி வுடையார்—யாக்கை என்பதன் கோட்பாட்டை ஒன்றாகக் கருதா ரறிவுடையாரென்றவாறு.

இருசிகை—இருக்காலாவதிடுஞ் சோறு. உண்ணாட்டம்—உள்ளபடி யாராய்தல், கோள்—கோட்பாடு.

குறிப்பு:—

இருசிகை—இருபோதுணவு என்றும், மெல்லுணவும்

---

[1]'பல்லின் பாலேனை' என்பதற்கு பல்லின் உறுதி எவ்வள வென்று தருமரும், 'பற்களின் பகுதி எத்துணைய' எனப் பதுமனாரும் கூறுவர்.

வல்லுணவுமாகிய வுணவுகளென்றும், இரண்டு கவளமாகிய உணவென்றும் பொருள் கூறுவர்.

(அ)

19. மற்றறிவாம் நல்வினை யாமிளையோ மென்னாது
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ்செய்ம்மின்
முற்றி யிருந்த கனியொழியத் தீவளியால்
நற்கா யுதிர்தலு முண்டு.

தருமர்:— என்பது. மற்றறிவாம் நல்வினை யாமிளையோ மென்னாது — யாமிளையோ மல்லோஞ் செய்யுமறத்தினைப் பின்னைச் செய்கின்றோ மென்னாது; கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ் செய்ம்மின்—கையில் பொருளுண்டாய வப்பொழுதே தாமதியாமல் அறத்தைச் செய்யுங்கள்; முற்றியிருந்த கனி யொழிய முதிர்ந்தபழம் போவதன்றியில்; தீவளியால் நற்காய் உதிர்தலுமுண்டு—தீதாகிய காற்றினாலே உறுதிப்பட்ட காய் களு முதிர்வதுண்டு; ஆதலால் செல்வமு மிளமையும் நிலைமை யென்று கருதாமல் கையில் பொருள்ளபோதே அறமும், புகழும் தேடாதார்க்கு ஒரு பயனுமில்லை யென்றவாறு.

பதுமனார்:— நல்வினையைப் பின்னைச் செய்வாம் நாமிளையமென்று கருதாது, கைப்பொருள் உண்டாயின பொழுதே கரவாதறஞ் செய்ம்மின். முதிர்ந்திருந்த பழமொழியத் தீக்காற்றால் நற்காய் வீழ்தலு முண்டாகலா னென்றவாறு.

கைத்து—பொருள். தீவளி—தீக்காற்று.

விளக்க உரை:— மற்றறிவாம் நல்வினை யாமிளையோ மென்னாது - யாமிளையோமல்லோம், பின்னைச் செய்கிறோம் நல்வினையென்னாது; கைத்துண்டாம் போழ்தே கரவாதறஞ் செய்ம்மின் — கைப்பொருளுண்டான பொழுது கரவாதறஞ் செய்யும்; முற்றிருந்த கனியொழிய –முற்றியிருந்த பழமொழிய;

தீவளியால் நற்கா யுதிர்தலுமுண்டு-தீக்காற்றால் நல்லகாயுதிர் தலுமுண்டு; ஆதலால் இளமையை நம்பாம லறத்தைச் செய்ம்மி னென்றவறு.

மேற்கோள் பகுதி:—

நச்:— **"கைத்துண்டாம் போழ்தே"** .... எனவும், ஐகார ஈறுவேற்றுமைக்கண் அத்தும் அம்மும் பெற்றன" என்பர்.

—தொல். எழுத். குற். சூ. 78.

நச்.
சேனா
தெய்வ. } :— மற்றென்னுமிடைச்சொல் வினைமாற்றின்கட் காலம் பற்றி வந்ததற்கு **"மற்றறிவாம் நல்வினை யாமிளையம்"** என்பதை எடுத்துக் காட்டுவர்.

—தொல். சொல். இடை. சூ. 14.

மயிலை.
சங்கர.
வைத்திய. } :— இவர்களும் இதற்கே இதனை எடுத்துக் காட்டுவர்.

—நன். மயிலை. சூ. 432.
—நன். சங்கர. சூ. 433
—இ. வி. சூ. 266.

பரிமே: — "கைத்து — கையகத்தாய பொருள். **'கைத்துண்டாம் போழ்தே கரவாது அறம் செய்ம்மின்'** என்றார் பிறரும்" என்பர்.

—குறள். 593

ஒப்புமைப் பகுதி:-

"இளமையு நில்லா யாக்கையு நில்லா
வளவிய வான்பெருஞ் செல்வமு நில்லா
புத்தே ளுலகம் புதல்வருந் தாரார்"
மிக்க வறமே விழுந்துணை யாவது
தானஞ் செய்யென" —மணி. சிறை. 135—139.
தினைத்தனை யாயினுஞ் செல்வமும் யாக்கையு
நிலையா வென்றே நிலைபெற வுணர்ந்தே
மலையா வறத்தின் மாதவம் புரிந்தேன்"

—மணி. கச்சி. 98—100.

"நாளைச் செய்குவம் அறம் எனில் இன்றே
கேள்வி நல்உயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழ்நாள் உணர்ந்தார்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை"

—சிலப்.

"அன்றறிவாம் என்னா தறஞ்செய்க"

—குறள். 36.

"—யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து."

—நாலடி. 92.

"—அறவினை
மற்றறிவா மென்றிருப்பார் மான்பு."

—நாலடி. 332.

"தாம்செய் வினையல்லால் தம்மொடு செல்வதுமற்
றியாங்கணும் தேரிற் பிறிதில்லை—ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் பயனின்றே
கூற்றம் கொண்டோடும் பொழுது" —நாலடி. 120.

"மின்னு மிளமை யுளதா மெனமகிழ்ந்து
பின்னை யறிவென்றல் பேதைமை—தன்னைத்
துணித்தாறுஞ் தூங்கா தறஞ்செய்க கூற்ற
மணித்தாய் வருதலு முண்டு."

—அறநெறி. 106.

"பேரஞர் இடும்பை யெல்லாம் பிளந்திடும் பிறப்பு நீக்கும்
ஆரமிர் தரிதிற் பெற்றாம் அதன்பயன் கோடல் தேற்றாம்
ஒருமைம் பொறியு மோம்பி உளபகல் கழிந்த பின்றைக்
கூரெரி கவரும் போழ்தில் கூடுமோ குறித்த வெல்லாம்"

—சிந்தா. 377.

(கூ)

20. ஆட்பார்த் துழலு மருளில்கூற் றுண்மையாற்
றோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம்மின்

—பீட்பிதுக்கிப்

பிள்ளையைத் தாயலறக் கோடலான் மற்றதன்
கள்ளங் கடைப்பிடித்தல் நன்று.

தருமர்:—என்பது. ஆட்பார்த்துழலும்—தான்கொண்டு செல லத்தக்க மனிதரைக் குறித்துக் காலம் பார்த்துத் திரியும்; அருளில் கூற்றுண்மையால்—இரக்கமில்லாத கூற்றுவன் உள்ள துண்மை யாதலால்; தோட்கோப்புக் காலத்தாற் கொண்டுய்ம் மின்—நீவிர்மேற்செல்லும் வழிக்குக் கட்டுச்சோறாகிய வறங்களை, உமக்கு இயலுங்காலங்களிலே தானே கைக்கொண்டு பிழைத்துப் போமின்; பீட்பிதுக்கிப் பிள்ளையைத் தாயலறக் கோடலான்—கருப்ப முதிருமுன்பே அதனை நெருக்கித் தாயழுதலறும்படிக்கு. அக்கருப்பத்திருந்த பிள்ளையைக் கூற்றுவன் கொண்டுபோகையினால்; மற்றதன் கள்ளங் கடைப்பிடித்தல் நன்று—மற்றந்தக் கூற்றுவனது வஞ்சத்தை மறவா தொழுகுதலே நன்றென்ற வாறு.

உலகிற் பிறந்துள்ளாரைக் கூற்றுவன் கொண்டு போவதேயு மன்றிக் கருப்பத்து ளிருக்குங் குழவியையும் கொண்டுபோவ தறிந்திருந்தும், இளமை எப்போதும் நிலைத்திருக்கு மென் றெண்ணி இயன்ற காலங்களிலே தானே, தமக்கு இம்மை மறுமைக்குறுதியாகிய வறத்தினைச் செய்துகொள்ளாது, பருவக் களிப்பால் பின்னைச் செய்துகொள்வோமென்று மகளிர் நலத்தை விரும்பியிருக்கும், அவர்க்குப் பின்னென்னு மிடமில்லை யென்ப தறிதற்குப் பீட்பிதுக்கிக் கொண்டுபோம், கூற்றென்றறிவுறுத்திய தாயிற்று. கோப் பென்பது சுழலுதற்பேர், தோளிலேகொண்ட கட்டுச்சோறு நடக்குந்தோறுஞ் சுழலுமதனால் தோட்கோப் பேன்றார்.

பதுமனார்:—தான் கொண்டு போமாளினைக் காலம் பார்த்துத் திரியு மருளில்லாத கூற்றுளதாதலால், தோட்கோப் பாகிய வாற்றுணவினை முற்காலத்தே கொண்டு பிழைத்துப் போமின்; முற்றாத கருவினைப் பிதுக்கிப் பிள்ளையைத் தாயழக் கொண்டுபோகலான், அக்கூற்றினது வஞ்சத்தை மறவா

தொழுகுதல் நன்றென்றவாறு.

தோட்கோப்பு—ஆற்றுணவு. தோளின் கண்ணே கோக்க லாற் றோட்கோப்பென்று பொதிசோற்றுக்குப் பெயராயிற்று; அல்லதூஉம் தோளின் கண்ணே சுற்றுதலாற் றோட்கோப்பென் பாருமுளர். பீள்—முற்றுக்கரு. கள்ளங் கடைப் பிடித்தல்—கூற்றினது வஞ்சத்தை மறவா தொழிதல்.

விளக்க உரை:— ஆட்பார்த்துழலும்—தாம் கொண்டு போம் [ஆளினைக்] காலம் பார்த்துத் திரியும்; அருளில் கூற்றுண் மையால்—அருளில்லாத கூற்றுளவாதலால்; தோட்கோப்புக் [1]காலத்தாற் கொண்டுய்ம்மின்—தோட்கோப்பாகிய வாற்றுண வினை முதற்காலத்தே கொண்டு பிழைத்துப் போமின்; பீட்பிதுக்கிப் பிள்ளையைத் தாயலறக் கோடலான்—முற்றாக் கருவினைப் பிதுக்கிப் பிள்ளையைத் தாயழக்கொண்டுபோ மாதலால்; மற்றதன் கள்ளங் கடைப்பிடித்தல் நன்று—மற்றந்தக் கூற்றுவனது வஞ்சத்தை மறவாதொழுகுதல் நன்றென்றவாறு.

பொதி சோறு முடிந்த முடிச்சு, நடக்குந்தோறுந் தோளின் கண்ணே சூழ்தலாற் றோட்கோப்பு மென்றார் பிறரும்.

ஒப்புமைப்பகுதி:-

"வேற்றுவ ரில்லா நுமரூர்க்கே செல்லினும் வெகுண்டீர்போல
ஆற்றுணாக் கொள்ளா தடிபுறத்து வைப்பீரே யல்லிர் போலுங்
கூற்றங் கொண்டோடத்தமியே கொடுநெறிக்கண் செல்லும்
போழ்தைக்

காற்றுணாக்கொள்ளீ ரழகலால் அறிவொன் றுமிலிரேபோலும்"
—சீவக. 1550

"—செல்கதிக்

காற்றுணாப் பெறாதழு தலறி வீழுமே"
—சீவக. 2934.

---

[1] 'காலத்தில்' என்றபாலது 'காலத்தால்' என உருபுமயக்கமுற்றது.

"கருந்தாள் போகி பொருங்குபீள் விரிந்து"

—புறம். 120.

"சிறுகாலையே தமக்குச் செல்வுழி வல்சி
யிறுகிறுகத் தோட்கொப்புக் கொள்ளார்"

—நாலடி. 329.
(ய).

---

3. யாக்கை நிலையாமை.

தருமர்::— அஃதாவது சுக்கில சுரோணிதங்களின் கூட்டுறவிலே ஆத்மாவை மகாமாயை யென்பதோர் சத்தியானது, கன்ம வாதத்துக் கீடாகப் பூவினது மணத்தைக் காற்றானது கொண்டு வந்தறிவிக்குமாப்போல, கன்மங்களுக்கான வனுபோகக் கருத்தை யவத்தா காலத்திலே யுண்டாக்கிக் கருவித்தாக வருவான்மாவைச் சுக்கில, சுரோணிதங்களிலே கூட்டிக் கட்டிவிக்கையினால் உடம்பிற்கு யாக்கையென்று பேராயிற்று.

யாக்கை என்பது பிணிப்பு. இதனை இவ்விடத்திற் கூறிய தென்னையோவெனில், இவ்வியாக்கைக்குப் புருடாயுள் நூறென்று வயதைக் கற்பித்து வைக்கையால் இவ்வயதை நம்பி யுலகத்தவர் தமக்கியலுங் காலத்திலே இம்மை, மறுமைக்காகிய புகழினையும், அறத்தினையும் தேடிக்கொள்ளாமற் பின்பு செய்து கொள்ளுகிறோமென்று, அதனை உதாசீனம் பண்ணி இளமைப் பருவத்தில் விடயங்களிலே பரந்து திரிவர். ஆதலாலிவ் வாக்கை நிலையாமை யறிந்து அறத்தின் முயலும்படிக்கு அறிவுறுத்தியது.

பதுமனார்:- அஃதாவது யாக்கை—பிணிக்கை. காலகன்ம வசனான சீவனான ஐம்பூதங்களுடைய பரமாணுக்களுடனேகூடிக் கர்ப்பக் கொள்கையிற் றொங்கினதாது, சலக்குழியிலே கட்டுண்டு ஆலம் வித்தளவாகத் தோன்றிப் பாபகன்மத்தாலே, நரகவேதனை செல்லக் கால வசத்தாலே வளர்ந்து, தாமரை மொட்டளவாகி இது நழுவி விழாமலிதின் மத்திம தேசமான நாபியிலும், மாதா

வின் இருதய கமலத்திலும் பந்தித்துத் தூங்கப்பட்ட நாளத்தாலே, புண்ணிய கன்மமான தன்னத்தினுடைய விரச பாகத்தைச் செலுத்தியது விரண்டருகும் பீசாங்குரம்போல், அதோ முகமாக நீண்ட ஆகிருதியிலே சிற்ப சாத்திரப்படியே ஊர்த்த முகமாக முற்படத் தலையும், கழுத்தும், தோள்களும், சகனங்களும், சத்ததாதுக்களுமாக உறுப்பெற்றுப் பின்பு முகாகிருதி தோன்றியதிலே நெற்றியும் கண்களும், மூக்கும், வாயும், செவிகளும், கைகால் விரல்களும் முதலான சருவாங்கமுந் தோன்றிச் சொப்பனாவத்தையும், சூட்சுமனாவத்தையும் போல மயங்கிக் கிடந்து காலஞ்சென்று, தூக்கற்றுப் புண்ணிய கன்மம் வழிகாட்ட வீழும் அவ்விதனத்தா லுண்டாகிய பயத்திலே, முன்பு சித்திரம் போலக் கிடந்த அவயவங்கள சேட்டிக்கத் தொடங்கி, ஆகார நித்திரா பயத்தளவாகிப் பூர்வகன்மமானது வாதனைகளை நினைவிக்கக் காலம் பக்குவப்படுத்த எழுந்திருக்கவும் இருக்கவும், நிற்கவும், நடக்கவும், வார்த்தை சொல்லவு மவற்றால் பற்க டோன்றிப் பன்னிரண்டு வயதளவுங் குலைந்தெழுந்து, பதினாற ளவிலே தாதுவுந் தோன்றி வளர்ந்த விதற்குத் தோற்றமாகக் கண்டது நீர்க்குமிழியாதலாலே காற்றாலாதல், உட்டிணத்தாலாதல், நீராலாதல் யாதானுமொரு வேதுவினாலுடைதற்கு இன்னபொழுதென்று தெரியாமை நிலையாமையாகக் கூறப் பட்டது.

இது அதன்பின் வைத்ததென்னை. அவ்விளமை நிலையாமை யாக்கை நிலையாமை யாகாதோவெனின் அற்றன்று. இளமையுஞ் செல்வமும் அங்ஙனம் நில்லாதாயினானும், யாக்கைக்கு வரைந்த நாளுண்டென்றும் மதித்து இடையில் அறஞ்செய்யக் கருதார்; தன்னுலகத்துள்ள எல்லா 'உயிர்கள் மேலதாய் வரு நிலையாமையை எவ்வாற்றானும் இத்தன்மையவென்று காட்டி, நிலையாமையை மூன்று கூறு செய்தாலல்லது அதன் தகுதிகள் தோன்றாதாதலானும், மேலறத்தைச்செய்து மதனாலுயிர்க்கு நிலைபேறு காட்ட வேண்டியுமென்பது கருத்து.

விளக்க உரை:- யாக்கை என்பது பிணிப்பு. அஃதாவது சுக்கில சுரோணிதங்களின் கூட்டுறவிலே ஆத்மாவையும், மாயையென்பதொரு சத்தி கன்ம வசத்துக் கூடாகப் பூவின் மணத்தைக்

காற்றுக்கொண்டு வந்தறிவிக்குமாபோல, கன்மங்களுக்கான வனுபோகங்களுமாக வைத்தார். அக்காலத்திலே யுண்டாக்கி கருவிக்கருத்தாகவந்த ஆத்துமாவைச் சுக்கில சுரோணிதங் களினாலே கூட்டிக் கட்டி வைக்கையினால் யாக்கையென்று பெயராயிற்று.

இது இவ்விடத்தில் சொன்னதேனோவெனின், இதற்குப் புருஷாயிசென்று நூறுவயது கற்பித்து வைக்கையாலிதனை நம்பி யாத்மாக்கள், அறத்தைப் பின்செய்கிறோமென்று அறத்தை உதாசீனம் பண்ணி, இளமைப் பருவ விடயங்களிலே பாய்ந்து திரிவார்க் கிவ்வியாக்கையினது நிலையாமை யுணர்த்தி அறஞ் செய்யும்படி பண்ணினது.

21. மலைமிசைத் தோன்று மதியம்போல் யானைத்
தலைமிசைக் கொண்ட குடையார்— நிலமிசைத்
துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட்ட டாரல்லா
லெஞ்சினா ரிவ்வுலகத் தில்.

தருமர்:- மலைமிசைத் தோன்று மதியம்போல்—மலையின் மேலே யெழுந்து காணப்பட்ட சந்திரனைப்போல; யானைத் தலை மிசைக் கொண்ட குடையார்—யானைப் பிடர்மீது தாம் வரவது மீது இவ்வியல்பினதாய்த் தோன்றக்கொண்ட வெண் கொற்றக் குடையையுடைய வரசரும்; நிலமிசைத் துஞ்சினா ரென்றெடுத்துத் தூற்றப்பட்டா ரல்லால்—இந்தப் பூமியின்மீது இறந்தாரென்று யாவராலுமெடுத்துக் கூறப்பட்டாரன்றியில்; எஞ்சினா ரிவ்வுலகத் தில்—சாவை யொழித்திருந்த பேர் இந்தப் பூமியிலே இல்லை யென்றவாறு.

எனவே யாக்கையினது நிலைமை இத்தன்மைத்தெனவறிந்து, விரைவிற் றன்னை நன்னெறியி லுய்ப்பவற்றைச் செய்துகொள்ள வேண்டுமென்பதாயிற்று.

பதுமனார்:- மலைமேலே தோன்றும் திங்களைப் போலக் களிற்றினது தலைமேற்கொண்ட குடையினையுடைய வரசர்

களும், துஞ்சினாரென்று நிலத்தின் கண்ணவர் தூற்றப்பட்டாரல்ல தொழிந்தா ரிவ்வுலகத்தின் கணில்லை யென்றவாறு.

எஞ்சினார்—ஒழிந்தார்.

விளக்க உரை:— மலைமிசைத்தோன்று மதியம்போல்—மலையின்மேலே தோன்று மதியம் போல; யானைத் தலை மிசைக் கொண்டகுடையார்—யானைத் தலைமேலே கொண்ட குடையை உடையவரும், நிலமிசைத் துஞ்சினாரென்று—இந்தப் பூமியிலே இறந்தாரென்று; எடுத்துத் தூற்றப்பட்டாரல்லால்—பலராலு மலர்தூற்றப் பட்டா ரல்லது; எஞ்சினா ரிவ்வுலகத்தில்—சாவ தொழிந்தா ரிவ்வுலகத்தில்லை என்றவாறு.

மேற்கோள் பகுதி:—

பேரா:—அளவடியானே வந்த வெண்பாவிற்கு ''**மலைமிசை** .... **குடையர்**'' என்பதை எடுத்துக்காட்டுவர்.

—தொல்.செய்.சூ.35

ஒப்புமைப் பகுதி:

''மற்ற வெங்கட களிற்றினுத யக்கி ரியின்மேன்
மதிக வித்திட வுதித்திடு மருக்க னெனவே
கொற்ற வெண்குடை கவிப்பமிசை கொண்டு''

—கலிங்க. அவதாரம் 51

''கொலையானை மேலோர் குளிர்வெண் குடைகீழ்ப்
பலயானை மன்னர் பலர்போற்ற வந்தான்
மலையாகம் போழாக மற்றிவனோ சாய்ந்தான்
நிலையாமை சால நிலைபெற்ற தன்றே''

—சூளா. அரசு.334

(க)

22. **வாணாட் கலகா வயங்கொளி மண்டிலம்**
வீழுநாள் படாஅ தெழுதலால்—வாணா

ளுலவாமு னொப்புர வாற்றுமின் யாரும்
நிலவார் நிலமிசை மேல்.

தருமர்:—என்பது. வாணாட் கலகா வயங்கொளிமண்டிலம். தான் வாழும் நாள்களை மறவாது எண்ணுங் கருவியாகிய- விளங்கா நின்ற ஒளியை யுடைத்தாகிய பரிதியானது; வீணாள் படாஅ தெழுதலால்—ஒரு நாளாகிலும் வீண்போகாது தோன்று தலால்; வாணா ளுலவாமு னொப்புர வாற்றுமின்—உம்முடைய வாழு நாளானது கெடுவதற்கு முன்னே ஒப்புரவாகிய அறத் தொழிலைச் செய்வாயாக; யாரும் நிலவார் நிலமிசை மேல்—யாரும் நிலத்தின் கண் இறந்தபேரே யல்லாமல் நிலையான பேரில்லை; அதனால் இவ்வாக்கையை நம்பாது தனக்குறுதியான வற்றை விரைவிற் செய்துகொள்ளுங்களென்றவாறு.

மிசைமேல் என்றது மீமிசைச்சொல், ஒப்புரவாற்றுமின்—ஒப்புர வென்பது உலக நடை. உலகநடை யென்பதுயர்ந் தோர் மாட்டு என்றபடியே உயர்ந்தோரானவர்கள், யாக்கையினது நிலைமை இத்தன்மைத்தென்று அறிந்து, தமது வாழ்நாள்களைப் பயனின்றி வீணிலே கழியாமல் தம்மை (உய)ரச் செய்யும் நெறியிற் செலுத்துவர், அதனாலவரது தன்மையைச் செய்துய்வீ ரென்பார் ஒப்புரவாற்றுமி னென்றார்.

பதுமனார்:— வாழு நாட்களுக் கெண்ணுங் கருவியாய் விளங்கா நின்ற ஒளியையுடைய பரிதி வீழ்நாள் படாமைத் தோன்றுதலான், வாழ்நாள் முடிவதற்கு முன்னே செய்யத் தகுமறங்களைச் செய்மின். யாவரும் நிலத்தின்க ணிலையாரா தலானென்றவாறு.

அலகு—எண்ணுங் கருவி. வயக்குதல்—விளங்குதல். வீழ்நாள் —எண்ணுதலை யொழிய வீழ்நாள். உலவாமுன்—முடிவதற்கு முன்னே. நிலவார்—நிலையார், நிலமிசைமேல் என்பதனை ''வெறிகமழ் தாமரை மீமிசையொதுங்கிய'' வென்றார்

[1]யா. வி. கடவுள் வாழ்த்து.

போற் கொள்க. நிலமிசை மேலென்பதனைக் கட்டிய பிராயத்தின் மேலென்பாரு முளர்.

விளக்க உரை:- வாழ் நாட் கலகா—தன் வாழ்நாள் எண்ணுங் கருவியாய்; வயங்கொளி மண்டிலம்—விளங்கா நின்ற ஒளியையுடைய மண்டிலம்; வீழ்நாள் படாஅ தெழுதலால்—வீணாள் படாமற் றோன்றுதலால்; வாழ்நா ளுலவா முன் ஒப்புரவாற்றுமின்—வாழ்நாள் கெடுவதற்கு முன்னே ஒப்புரவாகிய வறத்தைச் செய்யுங்கள்; யாரும் நிலவார் நிலமிசை மேல்—யாவரும் நிலத்தின்க ணிலையாராதலா லறத்தைச் செய்யுங்கள் என்றவாறு.

மிசை மேலென்றது மீமிசை. வீழ்நாள்—எண்ணுதலை யொழிய வீழ்நாள். உலவா முன்—முடிவதற்கு முன்னே. நிலவார்—நிலையார். நிலமிசை யென்பதனை "[1]வெறிகமழ் தாமரை மீமிசை யொதுங்கிய வென்றாற்" போலக்கொள்க.

ஒப்புமைப் பகுதி:-

"தோற்றஞ்சால் ஞாயிறு நாழியா வைகலுங்
கூற்ற மளந்து"

—நாலடி. 7.

"வாழ்நாட்கு அலகாகிய பலகதிரையுடைய செல்வன்"
—புறநா. 34—உரை.

குறிப்பு:-

ஒப்புரவு—உலகநடையை அறிந்து அதற்கு ஏற்பப் பிறர்க்கு உதவி செய்தல். உலகத்தாரோடு ஒத்துச் செய்யுஞ் சிறந்த தொழிலென்றுமாம்.

(உ)

---

[1]யா. வி. கடவுள் வாழ்த்து.

23. மன்றங் கறங்க மணப்பறை யாயின
வன்றவர்க் காங்கே பிணப்பறையாய்--பின்றை
யொலித்தலு முண்டாமென் றுய்ந்துபோ மாறே
வலிக்குமா மாண்டார் மனம்.

தருமர்:- என்பது. மன்றங் கறங்க மணப்பறையாயின—மன்றத்துள்ளே ஒலிக்கப்பட்ட மணப்பறை யானது; அன்றவர்க்காங்கே பிணப்பறையாய்—அவ்வகையாகிய மணக் கோலத்துக்கான பறை அன்றுதானே, அவர்கட்கு அந்தப்படியே பிணத்துக்குக் கொட்டுகிற பறைதலை யுண்டாய், முன் மணக் கோலத்துக்கியையக் கொட்டிய ஓசைபோக்கி அந்தப்பறை தானே; பின்றை ஒலித்தலு முண்டாமென்று—பின்பு பிணக் கோலத்துக்கியைய வொலிப்பது இவ்வுலகத்துள்ள காரியமென்று கருதி; உய்ந்துபோ மாறே—பிழைத்துப் போவதாகிய வழியினையே; வலிக்குமா மாண்டார் மனம்—துணியா நிற்கு மாட்சிமையை யுடையார் மனமென்றவாறு.

அந்தப் பரம வழியாவது, யாக்கை நிலையெனக் கருதாது இளமையிலேதானே புகழும், அறமும் விரும்பித் தவத்திலே செல்லும் வழி.

பதுமனார்:- மன்றத்துள்ளே ஒலிக்கு மணக்கோலத்திற் காயின, பறை அன்றே அவர்க்கே அவ்விடத்தே பிணக்கோலத் திற்குப் பின்பு பறையா யொலித்தலு முளதாமென்று கருதிப் பிறவித் தடுமாற்றத்தை நீங்கலான நெறியைத் துணியு முயர் மாட்சிமைப் பட்டார் மனமென்றவாறு.

வலிக்குமாம்—துணியுமாம்.

விளக்க உரை:- மன்றங் கறங்க மணப்பறையாயின—மன்றத்துக்குள்ளே யொலிக்கும் மணக்கோலத்துக் காயின பறை; அன்றவர்க்காங்கே பிணப்பறையாய்-அன்றே யவர்க்கே அவ்விடத்தே பிணக்கோலத்துக் கறையும் பறையாய்; பின்றை

யொலித்தலு முண்டாமென்று-பின்னை யொலித்தலு முளதா மென்று கருதி; உய்ந்து போமாறே வலிக்குமா மாண்டார் மனம் -[பிழைத்துப் போகிற நெறியைத் துணியா நிற்கும்.] வலிமை யுடைத்தான மாட்சிமை யுடையார் மனமென்றவாறு.

வலிக்குமாம்—துணியுமாம்.

ஒப்புமைப் பகுதி:-

"ஓரி னெய்தல் கறங்க வோரி
லீர்ந்தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூவணி யணியப் பிரிந்தோர்
பைத லுண்கண் பனிவார் புறைப்பப்
படைத்தோன் மன்றவப் பண்பி லாள
னின்னு தம்மவிவ் வுலக
மினிய காண்கித னியல்புணர்ந் தோரே"

—புறநா. 194.

"மணமகனே பிணமகனாய் மணப்பறையே பிணப்பறையா
யணியிழையார் வாழ்த்தொலிபோ யழுகை யொலியாய்க்
கணமதனிற் றறந்திறுமிக் காயத்தின் வரும் பயனை [கழியக்
யுணர்வுடையார் பெறுவருணர் வொன்றுமிலார்க்
கொன்றுமிலை"

—திருவிளை. பழியஞ்சின. 40

"மணவணி யணிந்த மகளி ராங்கே
பிணவணி யணிந்துதங் கொழுநரைத் தழீஇ
உடுத்த வாடை கோடி யாக
முடித்த கூந்தல் விரிப்பினும் விரிப்பர்" —வெற்றி. 56.

(ந)

24\. சென்றே [1]யறைப வொருகாற் சிறுவரை
நின்றே [1]யறைப பறையினை—நன்றேகாண்

---

[1] 'எறிப' என்பது பாடபேதம்.

முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்
செத்தாரைச் சாவார் சுமந்து.

தருமர்:- என்பது. சென்றே யறைப வொருகால்-பிணக் கோலத்துக்கு பறையறையுமவர் அவ்விடத்துச் சென்று ஒரு நிலை பறை யறைவார்; சிறுவரை நின்றே யறைப பறையினை —சிறிது பொழுது தவிர்ந்து நின்று மற்றுமந்தப் பறையை யறைவார்; நன்றேகாண்—இத்தன்மை மிக நன்றாக விருந்தது இதனைக் கண்டறியாய்; முக்காலைக் கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர்-பிணத்தை மூடியதனையு மெடுத்துக்கொண்டு மூன்று காலாகக் கட்டியிருக்கிற கொட்டிலே தீயையும்கொண்டு செல்லாநிற்பர்; செத்தாரைச் சாவார் சுமந்து-செத்துக்கிடக்கிற பிணத்தை யதுபோலச் சாகக் கடவதா யிருப்பவரென்றவாறு.

நன்றேகாண் என்பதனால் இந்த யாக்கையினது நிலைமை இத்தன்மை யாகியது காணாயோ, இதனை யறிந்து மற்றும் விடயங்களிலே படரா நின்றாயல்லது, உனக்கான உறுதிகள் கைக்கொண்டா யில்லையென்று யாவரு மறத்தினை விரும்பும் படிக் குறுதி கூறியது.

பதுமனார்:- சென்றே யொருநிலை பறையை யெறிவர் சிறிதுபொழுது தவிர்த்து நின்றிரு காலாவது பறையை யெறிவார். பின்னை மூன்றாங்கொட்டினுட் பிணத்தை மூடித் தீயையுங் கொண்டு சாவக்கடவார் செத்தாரைச் சுமந்தெழுவர். ஆதலா னிவ்வுலகத்தினியற்கை நன்றேகாண் என்றிகழ்ந்த வாறெனக் கொள்க.

சிறுவரை-சிறுபொழுது. நன்றே காண் என்று உலகியற்கை இகழ்ந்தவாறு. சாவார்-சாகின்றவர்.

விளக்க உரை:- சென்றே யெறிப வொருகாற் சிறுவரை நின்றே யறைப பறையினை -சென்று சென்று தாழ்த்துத் தாழ்த்துப் பறையொலிக்க; நன்றேகாண் முக்காலைக்

கொட்டினுள் மூடித்தீக் கொண்டெழுவர் செத்தாரைச் சாவார் சுமந்து—அது நன்றாயிருந்தது மூன்றாங் கொட்டிற்குத் தீயை யுங் கொண்டெழுந்திருப்பர் செத்தாரைச் சாவார் சுமந்தென்ற வாறு.

பொழிப்புரைப்படி வருமாறு:—

சென்றேயொரு நிலை பறையை யெறிவர். சிறிது பொழுது தவிர்ந்துநின் றிருக்காலாவது பறையை யெறிவர். பின்னை மூன்றாங் கொட்டினுள் பிணத்தை மூடித் தீயையுங் கொண்டு சாவக் கடவர், செத்தாரைச் சுமந்து எழுவராதலா னிவ்வுலகத் தியற்கை நன்றே காணென் றிகழ்ந்தவாறெனக் கொள்க.

சிறுவரை—சிறிது பொழுது நன்றே காண் என்று உலகத் தியற்கை இகழ்ந்தவாறு. சாவார்—சாகிறவர்.

மேற்கோள் பகுதி:—

நச்:—நன்று ஈற்று 'ஏ', தீதென்னுங் குறிப்புணர்த்தியதற்கு **"நின்றே யெறிப பறையினை நன்றே காண்"** என்பதை எடுத்துக் காட்டுவர். —தொல். சொல். இடைச். சூ. 34.

நச்.
பேரா: } :—"வெண்பாவினுள், **'சென்றே யெறிய ... காண்'** எனப் பன்னிரண்டெழுத்தடி யொன்றினையும் இருகாற் சொல்லி எதுகை கொள்ளுங்கால், அடியோடடிக் கூட்டத்துத் தளைவகை சிதையாது தொடைப்பகுதியுட் பட்ட வாறு காண்க" என்பர். —தொல். செய். சூ. 34.

தெய்வ:— **"சென்றே யெறிப .... சுமந்து**—இதனுள் நன்றே காண் என்பது, தீதேகாண் என்னுங் குறிப்புணர்த் திற்று. —தொல். சொல். இடை. சூ. 33.

(௪)

25. கணங்கொண்டு சுற்றத்தார் கல்லென் றலறப்
பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு —[1]மணங்கொண்டு

---

[1] 'மணங்கொண்டீண்டு' என்பது பாடபேதம்.

[1]உண்டுண்டுண் டென்னு முணர்வினான் சாற்றுமே
[2]தொண்டொண்டொ டென்னும் பறை.

தருமர்:— என்பது. கணங்கொண்டு சுற்றத்தார் ஒருவர் செத்துழி அச்சுற்றத்துள்ளா ரெல்லாருங் கூட்டங்கூடி; கல்லென்றலற—கல்லென்னு மோசை யுடைத்தாக அழுதலற; பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—அதற்குரியார் அந்தப் பிணத்தைச் சுமந்து கொண்டு, இடுகாட்டினிடத்தே செல்லு மவரைக் கண்டிருந்தும்; மணங்கொண்டு-பெண்ணைக்கொண்டு; உண்டுண்டுண்டு என்னு முணர்வினான்—அவ்விடத்திலே மனை வாழ்க்கையுண்டு உண்டென்று நம்பி, அறத்தினை விரும் பாதிருக்கும் பேதைமையாகிய அறிவினையுடையாற்கு; சாற்று மே—[நிலையாமையை] அறிவிக்குமே; தொண்டொண்டொ டென்னும் பறை — தொண்டொண்டொ டென்னுமோசை கொட்டுஞ் சாக்காட்டுப் பறையானது என்றவாறு.

ஒருவன் செத்து அவன் சுற்றத்துள்ளா ரெல்லாந் திரண் டழுதல(றி)ப் பிணப்பறையுடன் இடுகாட்டிற் செல்வது கண்டும் மற்றொருவன் பெண்ணைக் கொண்டு மணக் கோலத்தோடும் போகிறவன் இதன் நிலைமை இவ்வளவிற்றோவென்று அறியா மல், இன்னமிருந்து மனை வாழ்க்கையின் கண் வாழக்கடவோ மென்னும் பேதைமை அறிவுடையாற்கு, உங்கள் நிலைமை இத்தன்மையதேயென்று அச்சாப்பறை அறைவிக்குமெனா; இல் வாழ்க்கை நிலைமை முதலாயின (இத்த)ன்மைய, அதற்காங் காலத்திலே தானே தனக்கு வலி பயப்பதனை இயற்றுவீரென்று யாவர்க்கு மறிவுறுத்தியவாறு.

பதுமனார்:— கூட்டங் கொண்டுற்றார் கல்லென் றலறியழப் பிணத்தைச் சுமந்து கொண்டு, சுடுகாட்டுள் செலுத்துவாரைக் கண்டேயும் மணத்தினை விரும்பி, இம்மனை வாழ்க்கை யின்க ணுகர்ச்சி யுண்டென்று கருதும் புல்லறிவுடையாற்கு,

---

[1]'உண்டுண்டுண் என்னும் உணர்வினான்' என்பது பாடபேதம்.
[2]தொண்டொண்டொ டென்னும் என்பது பாடபேதம்.

நிலையாமையை யறிவிக்கின்றது தொண்டொண்டொ டென்னும் பறை யென்றவாறு.

"உண்டுண்டுண்" என்பதனை உண்டுண்டென்று பாடமோதி மணத்தினையும்கொண்டு டுண்டுண்டுவென்று முனைவிற் சாற்று மென்று பொருளுரைப்பாரு முளர்.

கணம்—திரட்சி. கல் அனுகரணம்.

விளக்க உரை:—கணங்கொண்டு சுற்றத்தார்—உறவின் முறையார் கூட்டங்கள்; கல்லென் றலற—அனுகரண வோசை யுடனே யழ; பிணங்கொண்டு காட்டுய்ப்பார்க் கண்டு—பிணத்தை இடுகாட்டிலே வைப்பாரைக் கண்டும்; மணங்கொண் டீண்டு—மணக்கோலங் கொண்டு; உண்டுண்டுண் டென்னு முணர்வினாற் சாற்றுமே—[மனைவாழ்க்கையுண்டு உண்டென்று நம்பியிருக்கின்ற பேதைமையாகிய அறிவினை யுடையார்க்கு நிலையாமையை அறிவிக்குமே]; தொண்டொண்டொ டென்னும் பறை—தொண்டொண்டொ டென்னு மோசை யென்றவாறு.

பொழிப்புரை:—

கூட்டங் கொண்டுற்றார் கல்லென் றலறி யழப் பிணத்தைச் சுமந்து கொண்டு சுடுகாட்டுச் செலுத்துவாரைக் கண்டேயு மணத்தினை விரும்பி, இம்மனை வாழ்க்கையின்க ணுகர்ச்சி யுண் டென்று கருதும் புல்லறிவுடையார்க்கு, நிலையாமை யறைகின்றது தொண்டொண்டொ டென்றொலிக்கும் பறை யென்றவாறு.

உண்டுண்டு ணென்பதனை உண்டுண்டென்று பாட மோதுவாருமுளர். கணம்—திரட்சி. கல்—அனுகரணம்.

மேற்கோள் பகுதி:—

நன்-வி:—"உண்டுண்டுண்டு" என்பது, துணிவு பற்றி மூன்றடுக்கி வந்தது.

—சூ. 395.

(ரு)

26. நார்த்தொடுத் தீர்க்கிலென் நன்றாய்ந் தடக்கிலென்
[1]பார்க்குழிப் பெய்கிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டக் கால்.

தருமர்:—என்பது. நார்த்தொடுத் தீர்க்கிலென்—நாரைக் கட்டி யிழுத்தாலென்; நன்றாய்ந் தடக்கிலென்—நூல்களிற் கூறியவாறு குற்றமற ஆராய்ந்து அடக்கினாலென்; பார்க்குழிப் பெய்கிலென்—பூமியிலே குழியுண்டாக்கி அதிலே புதைத் தாலென்; பல்லோர் பழிக்கிலென்—உலக வியற்கை செய்தில ரென்று பலரும் பழித்தாலென்; தோற்பையுள் நின்று—உடம்பாகிய தோற்பைக்குள்ளே நின்று; தொழிலறச் செய் தூட்டும்—செய்யுந்தொழில்களிற்றாழ்வறச் செய்தூட்டப்பட்ட; கூத்தன் புறப்பட்டக்கால்—இவ்வுடம்பாகிய தோல்யந்திரத்தை ஆட்டிவிக்குங் கூத்தனாகிய ஆத்துமநாயகன் புறப்பட்டுப் போன காலத்தென்றவாறு.

ஒருவர் இறந்துழி அப்பிணமானது நன்மையுடன் ஒருவ ருரிமையரா யிருந்து, நூலின்படி அடக்கப்பட்டாலும் அடக்கப் படும். அல்லது உரிமையரற்று இத்தன்மைத்தாய்ப் போனாலும் போமாதலால், இத்தன்மையவாகிய யாக்கையை நிலையென்று கருதாம லறத்தினை விரும்பி வழிபடுதற் குறுதி கூறியவாறு.

பதுமனார்:—நாரால் கட்டி யீர்த்தாலென், நன்றாக வாராய்ந் தடக்கி லென்னை; பார்த்துழிப் பெய்தாலென்னை, பல் லோர் பழித்தாலென்னை; தோற்பையாகிய உடம்பின்கண்ணே நின்று செய்யக்கடவ தொழில்களை யறச்செய்து நுகர்விக்குங் கூத்தன் புறப்பட்டக்கா லென்றவாறு.

பார்த்துழி—பாரில் புதைக்கை. தொழிலறச் செய்தூட்டும்—செய்யக்கடவதான இருவினைகளுந் தப்பாமற் செய்து நுகர்

[1]'பார்த்துழி', 'பார்த்துழி' என்பன பாடபேதங்கள்.

விக்கும். கூத்தன்—கூத்தாடி.

விளக்க உரை:—நார்த்தொடுத்து ஈர்க்கிலென்—நாராற் கட்டி யிழுக்கிலென்; நன்றாய்ந் தடக்கிலென்—அலங்கரித் தடக்கினாலென்; பார்த்துழிப் பெய்கிலென்—பாரைக்கிழித்துப் புதைத்தாலென்; பல்லோர் பழிக்கிலென்—உலகவியற்கை செய்யிலவே என்று பலராற் பழிக்கப்பட்டாலென்; தோற்பை யுள் நின்று—தோலாகிய உடம்பினுள்ளே நின்று; தொழிலறச் செய்தூட்டும் செய்தொழில்களை யறச்செய்தூட்டும்; கூத்தன் புறப்பட்டக் கால்—கூத்தனாகிய ஆத்தும நாயகன் புறப்பட்டுப் போன காலத்தென்றவாறு.

தொழிலறச் செய்தூட்டும்—செய்யக் கடவதான இருவினை களையுந் தப்பாமற் செய்து நுகர்விக்கும். கூத்தன்—கூத்தாடி.

மேற்கோள் பகுதி:—

யா.வி:— ரகர வொற்றிடை வந்த ஆசிடையெதுகைக்கு இச்செய்யுள் மேற்கோள்.

—தொடை. சூ. 37.

பிரயோக:—"**தோற்பையு ணின்று**..................**புறப்பட்டக்கால்**" என்னும் நாலடியாருள், கூத்தன்—உயிர்க்கூத்தன்" எனவரும்.

—சூ. 40—உரை.

ஒப்புமைப் பகுதி: —

காக்கை கவரிலென் கண்டார் பழிக்கிலென்
பாற்றுளிப் பெய்யிலென் பல்லோர் பழிக்கிலென்
தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்
கூத்தன் புறப்பட்டுப் போனவிக் கூட்டையே"

—மந்திரமாலை.

"உறுப்புக் கடாமுடன் கூடி யொன்றாயிருந்த பெரும்பை"

—குண்டலகேசி.

குறிப்பு:

நன்றாய்ந்தடக்குதல்—நன்றாகத் தகனஞ் செய்து அத்திகளைப் பொறுக்கியெடுத்து அடக்கம் செய்தல். "நன்றாக ஆராய்ந்து அற்றமடக்கினா லென்னனை" என்பர் பதுமனாரும். பாத்துஉழிப் பெய்தல்—பூமியைப் பகுத்து நீளமாகத் தோண்டி அதனுள்ளே [1]போகட்டுப் புதைத்தல். 'பார்த்துழி' யென்பதற்குக் கண்டுழி யென்றும் பொருள் கூறுவர்.

(௬)

27. படுமழை மொக்குளில் பல்காலுந் தோன்றிக்
கெடுமிதோர் யாக்கையென் றெண்ணித்—தடுமாற்றந்
[2]தீர்ப்போம்யா மென்றுணருந் திண்ணறி வாளரை
நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்.

தருமர்:— என்பது. படுமழை மொக்குளில்—பெய்யப்பட்ட மழையிற் றோன்றிய குமிழிபோல; பல்காலுந் தோன்றி— இறப்பதும், பிறப்பதுமாய்ப் பலகாலமுந் தோன்றி; கெடுமிதோர் யாக்கை யென்றெண்ணி—அழியுமிந்த உடம்பென்று கருதி; தடுமாற்றந் தீர்ப்போம் யாமென்றுணரும்—இப்பிறவித் தடுமாற்றத்தை எப்படித் தீர்ப்போமென்று விசாரிக்கின்ற; திண்ணறிவாளரை—உறுதிப்பட்ட அறிவினையுடையாரை; நேர்ப்பார்யார் நீணிலத்தின் மேல்—ஒப்பார்யார் இந்த நீண்ட பூமியினிடத்தென்றவாறு.

மழையிற் றோன்றுங் குமிழி போலப் பிறப்பது மிறப்பதுமே தொழிலாக, எப்போது மெடுத்திருக்கும் யாக்கையானது கெடுவ தேதெனில், அதிகமான பாவங்கள் செய்வதனாலந்தந்த மாசாகிய நரகத்தில் வீழ்த்தினாற் றிரும்பியெழுந்து யாக்கை யெடுப்பது மில்லை. நன்னெறியாகிய தவங்களில் முயன்று அரிதாய பதங் களைப் பெற்றவரும் யாக்கை யெடுப்பதில்லை என்பது தோன்றக்

[1]போகவிட்டு.

[2]'தீர்ப்பேம்'என்பது பாடபேதம்.

கெடுமிதோர் யாக்கை யென்றார்.

பதுமனார்:—மழையிற்றோன்றி யழியும் மொக்குளே போலப் பல்காலுந் தோன்றிக் கெடுமிதோ ராக்கையென்று கருதிப் பிறவித்தடுமாற்றத்தை யாமொழிப்போ மென்றாராயுந் திண்ணிய வறிவினையுடையாரை யாவரொப்ப ரிவ்வுலகத்தின் கணென்ற வாறு.

படுமழை மொக்குள்—படுமழையி லுண்டான குமிழி. தடுமாற்றம்—பிறவித்தடுமாற்றம். நேர்ப்பார்—ஒப்பார்.

விளக்க உரை:—படுமழை மொக்குளில்—பெய்கிற மழையிற் குமிழி போல; பல்காலுந் தோன்றி—பலகாலும் பிறப்பதிறப் பாய்; கெடுமிதோர் யாக்கை யென்றெண்ணி—அழியுமிந்த உடம்பென்று கருதி, தடுமாற்றம் தீர்ப்போம் யாமென் றுணரும்—பிறவித் தடுமாற்றத்தை எப்படித் தீர்ப்போம் யாமென் றுணரும்; திண்ணறிவாளரை—திண்ணறிவினை யுடையாரை, நேர்ப்பார்யார் நீணிலத்து மேல்—அவரையொத்தவ ராரிந்த நீண்ட புவியிடத்தென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

"மாரி மொக்குள்"

—ஐங்குறு. 275.

"மாரி மொக்குளின் மாய்ந்து"

—சீவக. 409.

"மின்னுமொக் குளுமென"

—சீவக. 2754.

"விண்ணுநீர் மொக்குளின் விளியும் யாக்கையை"

—கம்ப. அயோத்தி. கிளைகண்டு. 79.

"மீதெழு மொக்குளன்ன யாக்கையை"

—கம்ப. இந். வதை.9.

"மாரி மொக்குளின் மாய்ந்து பிறந்து"

—மேரு. 6—75.

"நீரிற்குமிழி நீர்மேலெழுத்து"

—பட்டினத்தார்

"நீரிற்குமிழி பூணமைந்து நின்றாலு நில்லாமெய்
பார்க்கு மிடத்தின்மேற் பற்றுநா ளெந்நாளோ"

—தாயுமானவர்

"பேனமார் வெள்ளநீரிற் பிறந்திடுங் குமிழிபோலும்"

—குசேலோபாக்கியானம்.

(எ)

28. **யாக்கையை யாப்புடைத்தாய்ப் பெற்றவர் தாம்பெற்ற**
யாக்கையா லாய பயன்கொள்க—யாக்கை
மலையாடு மஞ்சுபோற் றோன்றிமற் றாங்கே
நிலையாது நீத்து விடும்.

தருமர்:—என்பது. யாக்கையை யாப்புடைத்தாய்ப் பெற்றவர்—தம்முடம்பை வலியுடைத்தாய்ப் பெற்றவர்; தாம் பெற்ற யாக்கையாலாய பயன் கொள்க—தாம்பெற்ற உடம்பினால் செய்யப்படுவதாய தவத்தைச் செய்து கொள்ளக் கடவார்; யாக்கை மலையாடு மஞ்சுபோற் றோன்றி—இந்த உடம்பானது மலையிலே படியும் மஞ்சுபோலக் காண்பித்து; மற்றாங்கே நிலையாது நீத்து விடும்—அவ்விடத்திலே மறைவதாகிய [1]மஞ்சுபோல யாக்கையானது நிலைமையின்றி ஒழிந்துவிடுமென்றவாறு.

உடம்பினது நிலைமை இத்தன்மை. இவ்வுடம்புறுதியோடிருக்கும்போதே தனக்குதவியாகிய உறுதிகளைச் செய்துகொள்ளவேண்டுமென்பதாயிற்று.

---

[1]மஞ்சு—மேகம். 'மஞ்செனநின்றுலவும்' (சீவக. 2853.)

பதுமனார்:- உடம்பினை வலியுடையதாகப் பெற்றவர், தாம்பெற்ற உடம்பினானாயி வறப்பயனைச் செய்துகொள்க. அவ்வுடம்புதான் மலையின்கண் ஆடுமுகில்போலத் தோன்றி, நிலையாது தன்னை நீக்கிவிடுமாதலா லென்றவாறு.

யாப்புடைத்தாப் பெற்றவர்—இளமையிலிறந்து போகாது நலந்தீங்கறியு மளவுமிருக்க யாக்கையை வலியுடையதாகப் பெற்றவர். பயன் - அறப்பயன்.

விளக்க உரை:- யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் —தம்முடைம்பை வலியுடையதாகப் பெற்றவர்; தாம்பெற்ற யாக்கையா லாய பயன்கொள்க—தாம்பெற்ற யாக்கையாலாய வறப்பயனைச் செய்துகொள்க; யாக்கை மலையாடு மஞ்சுபோற் றோன்றி—உடம்பானது மலையிலே படியும் மஞ்சுபோற் றோன்றி; மற்றாங்கே நிலையாது நீத்துவிடும்—மற்றாங்கே நிலையாவாய் உடம்பினை ஒழிந்துவிடு மென்றவாறு.

மேற்கோள் பகுதி:-

தெய்வ:— நான்காம் வேற்றுமைக்கண் வரும் பொருள் வேறுபாடு உணர்த்துமிடத்து, "**யாக்கையை யாப்புடைத்தாப் பெற்றவர் தாம்பெற்ற, யாக்கை**—என்றவழி வலி எனப் பொருளாயிற்று" என்பர்.

—தொல். சொல். வேற் சூ. 14.

ஒப்புமைப் பகுதி:-

புன்னுனிமே னீர்போ னிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க வறவினை" —நாலடி. 29.

(அ)

29. புன்னுனிமேனீர்போல் நிலையாமை யென்றெண்ணி
இன்னினியே செய்க வறவினை—இன்னினியே

நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச்
சென்றா னெனப்படுத லால்.

தருமர்:- என்பது. புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி — புல்லினது நுனியினிற்கு நீர்போல மனிதர் யாக்கையினது நிலைமை யென்று கருதி; இன்னினியே செய்க வறவினை — இப்பொழுதே அறத்தினது தொழிலை செய்க; இன்னினியே நின்றா னிருந்தான் கிடந்தான் — ஒருவனிப்போது தானின்றான், அவனிருந்தான், அவத்தையாய்க் கிடந்தான்; தன் கேளலறச் சென்றா னெனப்படுதலால் — தன் சுற்றமெல்லா மழுது அலறும்படிக்கு இறந்துபோனானென்று மற்றொருவரால் சொல்லப்படுதலா லென்றவாறு.

எனவே (புல்லினது நுனிமேலுள்ள நீர்த்துளி) மிகவுங் கொஞ்சமது சற்றே வெயிற்காண சுற்றிப் போம். அத்தன்மை யான (யாக்கை நிலையானதென்று) கருதாமல் விரைவிலே தானே, தன்னை நன்னெறி உய்ப்பவற்றைச் செய்துகொள்ள வேண்டு மென்பதாயிற்று. ''இன்னினியே'' என்பது அடுக்குப் பண்பு.

பதுமனார்:- புல்லினது நுனிமேல் [நிற்கும்] நீர் ஆதித்தன் கிரணங்கரண நீங்கினாற்போலும், உடம்பினது நிலையாமை யென்று கருதி, இப்பொழுதே செய்க அறவினையை. இப்பொழுதே நின்றா னொருவன், இருந்தான், கிடந்தான் தன்கேளி ரெல்லாமலற விறந்து போயினானென்று சொல்லப்படுதலா னென்றவாறு.

இன்னினியே — இப்பொழுதே.

விளக்க உரை:- புன்னுனிமேல் நீர்போல் நிலையாமை யென்றெண்ணி — புல்லின் நுனியின் நீர்போல நிலையாமை யென்று கருதி; இன்னினியே செய்க வறவினை — இப்பொழுதே அறவினையைச் செய்துகொள்க; இன்னினியே நின்றா னிருந் தான் குடந்தான்றன் கேளலறச் சென்றா னெனப்படுதலான் —

இப்பொழுதே நின்றானிருந்தான் கிடந்தான் தன் உறவின் முறையாரெல்லா மலற, இறந்து போயினானென்று சொல்லப் படுதலால் இப்பொழுதே அறத்தைச் செய்க வென்றவாறு.

இன்னினியே—இப்பொழுதே.

மேற்கோள்: பகுதி:-

நச்:—முற்றுச்சொல் அடுக்கி முடிக்கும் பெயர் வெளிப் படாது நின்றமைக்கு, **"நின்றா னிருந்தான் கிடந்தான்றன் கேளலறச் சென்றான்"** என்பதை எடுத்துக்காட்டுவர்.

—தொல். சொல். எச்ச. சூ. 33.

குறிப்பு:-

தேகம் அநித்தியமென்பதற்கு **அவிரோதவுந்தியாரும் (20)**, **யாக்கையாவது** அநித்தியமாதலின் விரைந்தறஞ் செய்ய வேண்டுமென்பதற்கு, **கொலை மறுத்தலும்** (22 உரை) பிரமாண மாக நிற்றல் காண்க.

(கூ)

30. கேளாதே வந்து கிளைகளா யின்றோன்றி
வாளாதே போவரான் மாந்தர்கள்--வாளாதே
சேக்கை மரனொழியச் சேணீங்கு புட்போல
யாக்கை தமர்க்கொழிய நீத்து.

தருமர்:— என்பது. கேளாதே வந்து கிளைகளா யிற் றோன்றி — (கேளாமலே) குடியின் கட் பிறந்து அவற்குச் சுற்றமென்பது காண்பித்து; வாளாதே போவரான் மாந்தர்கள் —சொல்லாதே இறந்துபோவார் மனிதர், அதென்போல வெனில்; வாளாதே சேக்கை மரனொழியச் சேணீங்குபுட்போல —சொல்லாதே மரத்திலே வைத்த கூட்டை விட்டுத் தூரத்திலே (பறந்து போகிற பறவை போல); யாக்கை தமர்க்கொழிய நீத்து- உடம்பை தனக்குற்றாரானவர் பார்த்துத் துயரமெ

(ய்யும்படி) யாக்கி விட்டு நீங்குவ ரென்றவாறு.

யாக்கையினது நிலையாமை இத்தன்மையெ (ன்று தெளிந்து), இம்மையிற் கொண்டுய்ப்பதாயவற்றைக் கைக்கொள் ளாது பயனின்றியே (நாளைக் கழிப்போர்க்கு) இதன் தன்மை கூறி வற்புறுத்தியது.

பதுமனார்:— கேளாதே வந்து சுற்றத்தாராய்க் குடியின்கட் டோன்றிச் சொல்லாதே இறந்து போவர் ஆன்மாக்கள். சொல் லாதே மரத்தின்கட் குடம்பையொழியச் சேய்த்தாக நீங்கும் பறவை போலத் தம்முடம்பு தம்முற்றார்க் கொழிய விட்டென்ற வாறு.

கேளாதே வந்து—தந்தை, தாயாரும், பிறக்கு மவர்தாமுந் தம்மிலறியாது வந்து பிறத்தல். வாளாதே — சொல்லாதே; தமர்க்கொழிய—உற்றார்க்கொழிய.

விளக்கவுரை:- கேளாதே வந்து கிளைகளா யின்றோன்றி —சொல்லாதே பிறந்து வந்து சுற்றத்தாராய்க் குடியின்கட் டோன்றி; வாளாதே போவாரான் மாந்தர்கள் —சொல்லாதே இறந்து போவார் மனிதர்கள், அஃதென்போல வென்னில்; வாளாதே சேக்கை மரன் ஒழியச் சேணிங்கு புட்போல— சொல்லாதே மரத்தில் வைத்த கூட்டை விட்டு தூரத்திலே பறந்து போகிற புட்போல; யாக்கை தமர்க்கொழிய நீத்து—உடம்பைத் தம்முற்றார்க்கொழிய விட்டு நீங்குவா ரென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"அலங்க லஞ்சினைக் குடம்பைப் புல்லெனப்
புலம்பெயர் மருங்கிற் புள்ளெழுந் தாங்கு
மெய்யிவண் ஒழியப் போகி யவர்
செய்வினை மருங்கிற் செலீஇயர்கின் உயிரே".

—அகநா. 113:23—37.

"குடம்பை தனித்தொழியப் புள்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு".

—குறள். 338.

"குடம்பையுந் தானெனுங் கொள்கைத் தேகொலோ
தடம்பயில் கூத்தரின் நடிக்கும் ஐவர்வாழ்
உடம்பையும் யானென உரைக்கற் பாலதோ"

—திருவிளை.

"காண லாம்பர மேகட் கிறந்த தோர்
வாணி லாப்பொரு ளேயிங்கோர் பார்ப்பெனப்
பாணனேன் படிற்றாக்கையை விட்டுனைப்
பூணுமாறு அறியேன் புலன் போற்றியே"

—திருவா.

(யீ)

4. அறன்வலி யுறுத்தல்

தருமர்:- அஃதாவது—அறமாவது, உயிர்களுக்கு இதமானவை செய்தலும், மெய்ம்மை முதலாகிய நன்னெறியி(ன் நடத்தலும், தானதருமம்) செய்தலுமாம். அறன்வலி யுறுத்தலாவது, அறத்தினுடைய வலிமை இத்தன்மையதென்று உலகிலுள்ளோ ரறிந்து, அதனால் சுவர்க்கமோட்சங்களைப் பெறுந்தி(றனெ)ண்ணி, அறத்தினைச் செய்யும்படிக்கு அறத்தின் வலிமையை அறிவிப்பது.

பதுமனார்:- அறமாவது, பிராணிகளுக்கிதமாமவை செய்தலும், சத்தியஞ் சொல்லுதலும், இயம நியமாதிகளும் தானதருமங்களும், செபத்தியான பாவனைகளும், ஓதல் ஓதுவித்தல் முதலான [வைகளும்], தவத்தைப் பண்ணுதலும், சாந்தியும், நித்தியா நித்தியங்களை யறிதலுமாம். இதனை வலியுறுத்தலாவது, இப்பெற்றிப்பட்ட அறமானது சுவர்க்க மோட்சங்களைத் தருமென்பது உலகத்தார்க் கறிவித்தல்.

இஃது அதன்பின் வைத்ததென்னை, அந்நிலையாமைகளைச் சொல்லி யறஞ்செய்யு மென்னும் காரணத்தா லடங்காதோரிவெனின்; உயிர்க்கு நிலை(யா)யுள்ள அறத்தைச் செய்தார், தன் வலியாற் பிறவற்றைப் பெறுதலானும்; அறத்தின் வலி காட்ட வேண்டி யெல்லாச் செயல்களினும், அவ்வறத்தின் செயலே உறுதியாக நோக்கி, அறஞ்செய்யுமென்று துணிவித்தற் பொருட்டென்றவாறு.

விளக்க உரை:- அறமாவது, உயிர்களுக்கு இதமாவன செய்தலும், சத்தியஞ் சொல்லுதலும், தானதருமங்களைச் செய்தலுமாம். இதன் வலியுறுத்தலாவது, இதனுடைய வலியை உலகத்தார்க்கறிவித்தல். அறிக்கையாவது, சுவர்க்க மோட்சங்களைக் கொடுக்குமென் றறிவித்தறஞ் செய்யும்படி பண்ணுதல்.

குறிப்பு:-

'அறன்வலி யுறுத்தல்' என்பதற்கு குறளிற்கு உரைகண்ட ஆசிரியர்களின் உரை வருமாறு:-

பரிமே:- அஃதாவது, அம்முனிவரான் உணர்த்தப்பட்ட அம்மூன்றனுள் ஏனைப்பொருளும் இன்பமும் போலாது அறன், இம்மை மறுமை வீடென்னும் மூன்றனையும் பயத்தலான், அவற்றின் வலியுடைத்தென்பது கூறுதல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். "சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும், அறத்து வழிப்படூஉந் தோற்றம்போல" என்றார் பிறரும்.

மணக்:- அறன்வலி யுறுத்தலாவது, அறம் வலிமையுடைத்து என்பதனை யறிவித்தல். இதனானே அறத்துப்பால் முற்கூறுதற்குக் காரணம் சொன்னாருமாம். இது மேற்கூறிய முனிவராற் கொண்டுய்க்கப்படுதலின் பிற்கூறப்பட்டது.

பழைய:—தருமத்தின் உறுதியை யுணர்த்தல்.

பரிதி:— அஃதாவது தன்மத்தினுறுதியை யுரைத்தல்

—குறள். அதி. 4.

31. அகத்தாரே வாழ்வாரென் றண்ணாந்து நோக்கிப்
புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
தவத்தாற் றவஞ்செய்யா தார்.

தருமர்:— என்பது. அகத்தாரே வாழ்வாரென்று அண்ணாந்து நோக்கி-ஓர் இல்லத்து வாழுமவரை நோக்கி இவரோ வாழக்கடவர், நாமோ இப்படி வறுமையுறக் கடவோமென்று அலமந்து அதனை [அவ்வில்லினை] யுற்றுப்பார்த்து; புகத்தாம் பெறார்—அவ்வில்லத்துப் புகுந்து இரப்பதற்கு மிகவு மியையா தாராக; புறங்கடைபற்றி—தலைவாசலைப் பற்றிக்கொண்டு; மிகத்தாம் வருந்தி யிருப்பரே—தமது வறுமையை நினைத்து வறுமை இத்தன்மையதோவென்று, மிகுதியான வருத்தத்தை எய்தியிருப்பர்; மேலைத்தவத்தால் தவஞ்செய்யாதார்—அப்படி வருந்தி யிருப்பவர் ஆரோவெனில், முன்பு தவத்தைச் செய்து அந்தத் தவத்தின் காரணமாகப் பின்பு தவஞ்செய்யாதா ரென்ற வாறு.

முன்பு தவஞ்செய்து அதன்காரணமாகப் பின்பு தவஞ் செய்யாதார் என்பது, முன்பு மக்கட் பிறப்புக்குத் தவம்பண்ணிச் செல்வத்துக்குத் தவம் பண்ணாதவர்; பின்பு மறுமைக்கு உறுதி யாகத் துறந்து தவம் பண்ணாம லிரந்து திரிகின்றார் என்றி கழ்ந்து கூறியது.

பதுமனார் :— இல்லினுள்ளாரே வாழ்வாரென்று வினவி அண்ணாந்து பார்த்துத் தாம் புகப்பெறாது, கடைப்புறத்தைப் பற்றி மிகவும் தாம் வருந்தியிருப்பர்; முன்பு தாஞ்செய்த தவங் காரணமாகப் பின்பு தவஞ் செய்யாதா ரென்றவாறு.

அகத்தாரே—அகத்திலுள்ளாரே. மேலைத் தவத்தாற் றவஞ் செய்யாதார்—முன்பு செய்த தவப்பயன் கைம்முதலாகப் பின்னுந் தவஞ்செய்து கைம் முதலுண்டா(க்)காதவர்.

விளக்க உரை:— அகத்தாரே வாழ்வா ரென்றண்ணாந்து

நோக்கி—இல்லினுள்ளாரே வாழ்வாரென் றண்ணாந்து பார்த்து; புகத்தாம் பெறார்—உட்புகப் பெறாராய்; புறங்கடை பற்றி—தலைவாசலைப் பிடித்துக்கொண்டு நின்று; மிகத்தாம் வருந்தி யிருப்பரே—மிகவும் தாம் மனம் வருந்தி யிருப்பரே; மேலைத் தவத்தால் தவஞ்செய்யாதார்—முன்பு செய்த தவங் காரணமாகப் பின்பும் அத்தவஞ்செய்யாதா ரென்றவாறு.

முன்பு தாஞ்செய்த தவங்காரணமாகப் பின்பு தவஞ் செய்யாதா ரென்பது, மக்கட் பிறப்புக்குத் தவம்பண்ணிச் செய்யாதா ரென்பது, மக்கட் பிறப்புக்குத் தவம்பண்ணிச் செல்வத்துக்குத் தவம் பண்ணாதவர்; அவர் பின்பு மறுமைக் குறுதியாகிற தவம் பண்ணாமல் பிச்சையிரந்து திரிகிறாரென்று இகழ்ந்தபடி.

ஒப்புமைப் பகுதி:-

"மாசித்திங்கண் மாசினசின்னத் துணிமுள்ளின்
ஊசித்துன்ன மூசியவாடை யுடையாகப்
பேசிப்பாவாய் பிச்சை யெனக்கை யகலேந்திக்
கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்.

—சீவம். முத்தி. 331.

"வித்தி நல்லறம் விளைந்த வதன்பயன்
துய்ப்போர் தம்மனைத் துணிச்சித ருடுத்து
வயிறுகாய் பெரும்பசி யலைத்தற் கிரங்கி
வெயிலென முனியாது புயலென மடியாது
புறங்கடை நின்று புன்கண் கூர்ந்துமுன்
அறங்கடை நில்லா தயர்வோர் பலரால்"

—மணி. பாத்திர. 108—113.

"சிறப்புடை மரபிற் பொருளு மின்பமும்
அறத்து வழிப்படூஉந் தோற்றம் போல"

—புறம். 31:1—2.

"ஒளிறுவாண் மன்ன ரொண்சுடர் நெடுநகர்
வெளிறுகண் போகப் பன்னாட் டிரங்கி"

—புறம். 177: 1—2.

"முன்முறை செய்தவத்தின் இம்முறை இயைந்தேம்"
—பரிபா. 11: 138.

"தவமும் தவமுடையார்க் காகும்"
—குறள். 262.

"இலர்பலர் ஆகிய காரணம் நோற்பார்
சிலர்பலர் நோலா தவர்."
—குறள். 270.

"முற்பெரிய செல்வம் முட்டின்றிச் செய்யாதார்
பிற்பெரிய செல்வம் பெறலாமோ? - வைப்போடு
இகலிப் பொருள்செய்ய எண்ணியக்கால் என்னாம்?
முதலிலார்க் கூதிய மில்"
—பழ. 312.

"பெற்றி கருமம் பிழையாமல் செய்குறின்
பற்றின்கண் நில்லா தறஞ்செய்க—மற்றது
பொன்றாப் புகழ்நிறுத்திப் போய்ப்பிறந்த வூர்நாடிக்
கன்றுடைத் தாய்போல் வரும்"
—அறநெறி.

"மேலைத்,தவத்தளவே யாகுமாந் தான்பெற்ற செல்வம்"
—மூதுரை. 7.
(க)

32. ஆவாநா மாக்க நசைஇ யறமறந்து
போவாநா மென்னாப் புலைநெஞ்சே!—ஓவாது
நின்றுஞற்றி வாழ்தி யெனினுநின் வாழ்நாள்கள்
சென்றன செய்வ துரை.

தருமர்:—என்பது. ஆவாம் நாம் ஆக்கம் நசைஇ—மேலாகக் கடவோமென்னும் ஆக்கத்தை விரும்பி; அறம் மறந்து—அறத்தினை மறந்து; போவாம் நாமென்னாப் புலைநெஞ்சே!—போகக்கடவோ மென்றெண்ணுந் தீய மனமே!; ஓவாது நின்று உஞற்றி வாழ்தி யெனினும்—ஒழியாமல் நின்று முயன்று

வாழ்வாயாயினும்; நின் வாழ்நாள்கள் சென்றன செய்வதுரை— நீ வாழும்நாள்கள் சென்றன, இனி நீ முயன்றுசெய்யு முபாய மேது சொல்லென்றவாறு.

எனவே முயல்வது, தன்வயசு போமுன்னே அறத்தின் முயன்று தனக்குறுதி பண்ணிக் கொள்ளாமல், அறத்தின் தொழிலை மறந்து வீண்தொழில் முயல்வார்க்கு, உன் வாழு நாள் கழிந்தால் மறுமைக்குறுதி எந்தவகை தேடிக்கொள்ளப் போகிறா யென்று உறுதி கூறியவாறு.

பதுமனார்:—மேலாகக் கடவதாம் ஆக்கத்தை ஆசைப்பட் டறத்தினை மறந்து, நாமிறக்கக் கடவாமென்று பாராத கீழ்மை நெஞ்சே!; ஒழியாதே நின்று முயன்று வாழ்வா யாயினும் நினது வாழ்நாள்கள் கழிந்தன. நீ செய்வது சொல்லென்றவாறு.

ஆவாம் நாம் ஆக்கம் நசைஇ—மேலாகக் கடவோமென்று ஆக்கத்தை ஆசைப்பட்டு, உஞற்றி—முயன்று.

விளக்க உரை:—ஆவாம் நாமாக்க நசைஇ—மேலாகக் கடவோமென்று ஆக்கத்தை விரும்பி; அறம் மறந்து போவாம் நாமென்னாப் புலைநெஞ்சே!—அறத்தை மறந்து இறக்கக் கடவோ மென்று நினையாத கீழ்மைநெஞ்சே!; ஓவாது நின்று ஞற்றி வாழ்தி யெனினும்—ஒழியாது நின்று முயன்று வாழ்வாயா யினும்; நின் வாழ்நாள்கள் சென்றன செய்வதுரை—நீ வாழும் நாட்கள் கழிந்தன, இனி நீ செய்வது சொல்லென்றவாறு.

குறிப்பு:—

ஆவாம்—மேலாகக் கடவோம்; "ஆதுநா மென்னுமவர்" என்ற நாலடி 181-லும், "ஆது மென்னுமவர்" என்ற குறள் 653-லும், வரும் 'ஆதும்' என்பதற்கும் இப்பொருள் படுதல் காண்க.

(உ)

33. வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா
மனத்தி னழியுமாம் பேதை -நினைத்ததனைத்
தொல்லைய தென்றுணர் வாரே தடுமாற்றத்து
எல்லை [1]யிகழ்ந்தொழுகு வார்.

தருமர்:— என்பது. வினைப்பயன் வந்தக்கால் வெய்ய வுயிரா—தீவினைப்பயன் வந்தவிடத்து அதற்காற்றானாக வெய்தாக உயிர்ப்பெய்தி; மனத்தின் அழியுமாம் பேதை —நெஞ்சு புண்ணாகத் துன்பப்பட்டு மனத்திடத்தை விடுவார் அறிவில்லாத மடமையோர்; நினைத்ததனைத் தொல்லைய தென்றுணர் வாரே— தனக்கு வந்த துன்பத்தைத் தாம் விசாரித்து இது தாம் செய்த தீவினையால் வந்ததல்லோ வென்றறிந்து, அதற்கு வருந்தாது முன்னுக்கு மப்படி தீவினையிற் படாது, நல்வினைக் கண் செலுத்துதற் கேதுவாய அறத்தினில் முயலுவா ரல்லவோ; தடுமாற்றத் தெல்லை யிகழ்ந்தொழுகு வார் — தடுமாற்றத்தி னெல்லையைக் கடந்த வொழுக்க முடையார் என்றவாறு.

ஆதலால் முன்பு தவஞ் செய்யாமையினால் அல்லவோ தீவினையெய்துவது, அதனையறிந்து நல்லோரானார் நன்னெறியினொழுகுவார். அறிவிலா ரதனையறியாது (தடு)மாற்றத் தீநெறியின் கண்ணே ஒழுகுவரதனால் அத்தன்மையாரும், அறத்தினது வலிமையை அறியவேண்டி அவரை மனத்தினழியும் பேதையென்று இகழ்வாகக் கூறி, தடுமாற்றத்தெல்லை யிகழ்ந்தொழுகுவா ரென்றறிவுள்ளாரை உயர்த்திக் கூறியவாறு.

பதுமனார்:— முன் செய்த தீவினைப் பயத்தால் துன்பம் வந்தால், வெய்யவாக உயிர்த்து மனத்ின்க ணழியும் பேதையாயினான்; அத்துன்பத்தை யாராய்ந்து பார்த்து முன்செய்த தீவினைப் பயனென்றறிவாரே. பிறவித் தடுமாற்றத் தெல்லையைக் கடந்து நீங்கினா ரென்றவாறு.

---

[1]இகந்தொருவு வார்—என்பது பாடபேதம்.

உயிரா — மூச்சுவிட. நினைத்ததனை — கருதியதனை. தொல்லையது—பழவினை.

விளக்கவுரை:— வினைப்பயன் வந்தக்கால் — தீவினைப் பயன் வந்தக்காலத்து; வெய்ய வுயிரா—வெய்தாக உயிர்த்து; மனத்தி னழியுமாம் பேதை—நெஞ்சம் துக்கப்பட்டுத் திரிவன் அறியாதவன்; நினைத்ததனைத் தொல்லைய தென்றுணர் வாரே— தனக்கு வந்த துன்பத்தை தீர விசாரித்து, நாம் முன்பு செய்த தீவினைப் பயனல்லவோ நமக்கு வந்ததென்றறிந்து, வருந்தாதிருக்கிறவர் யாவர் சிலபேர்கள் அவரல்லவோ; தடுமாற்றத் தெல்லை யிகந்தொருவு வார்—தடுமாற்றத்தெல்லை யைக் கடந்து நீங்குவாரென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"பண்டுருத்துச் செய்த பழவினை வந்தெம்மை
இன்றொறுக் கின்ற தெனவறியார்—துன்புறுக்கும்
மேவலரை நோவதென்?" —பழ. 191

(௩.)

**34. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தாற்
பெரும்பயனு மாற்றவே கொள்க—கரும்பூர்ந்த
சாறுபோற் சாலவும் பின்னுதவி மற்றதன்
கோதுபோற் போகு முடம்பு.**

தருமர்:— என்பது. அரும்பெறல் யாக்கையைப் பெற்ற பயத்தால்—மக்கள் யாக்கையைப் பெறுதலரிது, அத்தன்மைய வாகிய யாக்கையைப் பெறப்பட்டானே யானால்; பெரும்பயனும் ஆற்றவே கொள்க—பலன்களுக்கு ளெல்லாம் பெரிதாய அறப் பயனை மிகவுஞ் செய்துகொள்க; கரும்பூர்ந்த சாறுபோற் சாலவும் பின்னுதவி—கரும்பினை நெருக்கிக் கொள்ளப்பட்ட சாறுபோல

அறப்பியனும், பின்னுக்கு மிந்தியாக உதவிச் செய்யும்; மற்றதன் கோதுபோற் போகுமுடம்பு—உடம்பானது கரும்பினது கோது போலக் கழிந்துபோ மென்றவாறு.

எனவே கரும்பினை நெருக்கிச் சாறுகொள்ளும்போது அயிற்கு மெய்வருத்த முள்ளதுபோல, அறத்தி முயன்றார் தமக்குள பெய்வருத்தமாகிய இடையூறுகளைத் தம்மறிவினால் தள்ளி, அதனின் முயல்வராகில் கரும்பினது [1]இரதம் போலப் பெரியதோர் இன்பத்தை எய்துவிக்கும். அதனை யறிந்து கரும்பின் கோதுபோலக் கழிந்து போகிற யாக்கையை நிலை யென்று நம்பாமல், விரைவிலே அறத்தைச் செய்துகொள்ளுதல் நன்றென்பதாயிற்று.

பதுமனார்:- பெற்றகரிய மக்கள யாக்கையைப் பெற்றல், பெறும் பேற்றையு மிகவே கொள்க. கொண்டாற் கரும்பினை நெருக்கிக்கொண்ட சாறுபோல மிகவும் அறவினையை யுதவி, அக்கரும்பினது கோதுபோலக் கழியு முடம்பென்றவாறு.

பிறப்புத் துன்பமென்றும், பிறப்பற முயல்வதுஞ் சொல்லு வார்; 'அரும்பெறல் யாக்கை யென்ற' தொன்னை யெனின், அல்லாத பிறப்பின் இழிவை நோக்கியும் மக்கள் யாக்கையின் உயர்ச்சி நோக்கியுமாம். [அல்லாத பிறப்பு] தனுக்கிழிபாவது, பூர்வ கன்மங்களாலே யறியும் புலன்களும், பொறிகளும், உறுப்புக்களும், சேட்டைகளுங் குறைந்து [2]பிறுகுண போட்சத் திரயங்களாகிப் பரிசோந்திரிய மொன்றையுமே யுடைய தாவரங் களும், சங்கமமானவை[யும்], வெற்பிலேதானே வடிவும், சரீரா களும், முட்டையிலே தோன்றுவனவும், பையில் பிறப்பனவும் மாம். அவற்றுள் நால்(வகை)வண்டும், துப்பியும் போல்வனவும் மெய், வாய், கண் *..............இதனைப் பெற்ற பயத்தாற்

---

[1]இரதம்—சுவை, இனிமை.

[2]'பிறுகுண மோக்ஷத்திரயங்களாகி' என்பது சுவடியில் உள்ளபடி எழுதப் பட்டிருக்கிறது. பொருள் விளங்கவில்லை.

* நடுவில் இரண்டு ஏடுகள் சிதைந்துள்ளன.

பெரும்பயனை மிக்க கொள்கையாவது, இம்மையிற் சுகமும் மறுமையிற் பிறவாமையுமாம். ஊர்ந்து—நெருங்கின.

விளக்க உரை:- அரும்பெறல் யாக்கையை—பெறுதற்கரிய மக்கள் யாக்கையை; பெற்ற பயத்தாற் பெறும் பயனும் ஆற்றவே கொள்க—பெற்ற பேற்றால் பெரிய வறப் பயனை மிகவுஞ் செய்துகொள்க; கரும்பூர்ந்த சாறுபேற் சாலவும் பின்னுதவி—கரும்பினை நெருக்கிக் கொள்ளப்பட்ட சாறுபோல மிகவு மறப்பயனை மறுமைக்குதவி; மற்றதன் கோது போற் போகு முடம்—மற்றந்தக் கரும்பின் கோதுபோல் உடம்பு கழிந்துபோ மென்றவாறு.

பிறப்புத் துன்பமென்றும், பிறப்பற முயல்வதுஞ் சொல்வார் 'அரும்பெறல் யாக்கை' யென்றதென்னை யெனின் அல்லாத பிறப்பினிழிவை நோக்கியும், மக்கள் யாக்கையி னுயர்ச்சி நோக்கியுமாம், இதனைப் பெற்ற பயத்தால் பெரும் பயனை மிகக் கொள்கையாவது, இம்மையிற் சுகமும் மறுமையிற், பிறவாமையுமாம்.

ஒப்புமைப் பகுதி:-

''வினைபல வலியினால் வேறுவே றியாக்கை யாகி
நனிபல பிறவிதன்னுள் துன்புறூஉம் பல்லுயிர்க்கு
மனிதரி னரியதாகுந் தோன்றுதல் தோன்றினாலும்
இனியவை நுகரவெதுஞ் செல்வமு மன்னதேயாம்''.
—வளையாபதி.

''உயர்குடி நனிஉள் தோன்றல் ஊனமில் யாக்கையாதல்
மயர்வறு கல்விகேள்வித் தன்மையால் வல்லராதல்
பெரிதுண ரறிவேயாதல் பேரறங் கோட லென்றாங்கு
அரிதிவை பெறுத லேடா பெற்றவர் மக்க ளென்பார்''.
—வளையாபதி.

''ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல்''. —குறள். 33.

—ஒல்லும் வகையான்
மருவுமின் மாண்டார் அறம்.

—நாலடி. 36.

"பரவை வெண்டிரை வடகடற் படுநுகத் துளையுள்
திரைசெய் தென்கட லிட்டதோர் நோன்கழி சிவணி
அரச வத்துளை யகவயிற் செறிந்தென வரிதாற்
பெரிய யோனிகள் பிழைத்திவண் மானிடம் பெறலே"

—சீவக. முத்தி. 151.

"மக்க ளுடம்பு பெறற்கரிது பெற்றபின்
மக்க ளறிவு மறிவரிது - மக்கள்
அறிவறிந்தா ரென்பா ரறத்தின் வழுவார்
நெறிதலை நின்றொழுகு வார்".

—அறநெறி. 212.

—ஆற்ற

அறவரண மாராய்ந் தடையினஃ தல்லால்
பிறவரண மில்லை உயிர்க்கு" —அறநெறி.

"தோற்ற மரிதாய மக்கட் பிறப்பினால்
ஆற்றுந் துணையு மறஞ் செய்க"

—பழ. 137

"ஒன்றும் வகையான் அறஞ்செய்க"

—பழ 303

"ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்னினிதே"

—இனிய. 7.

"அரிதரிது மானிடராத லரிது"

—ஔவை.

"கோதுபோற் போகு முடம்பு"
"கோதென்று கொள்ளாதாங் கூற்று" —நாலடி. 106.

குறிப்பு:-

இத்தேகம் இன்றியமையாதது என்பதற்கு அவிரோத வுந்தியார்—20ல் பிரமாணம் கூறியிருப்பது காண்க.

(ரு)

35. கரும்பாட்டிக் கட்டிச் சிறுகாலைக் கொண்டார்
துரும்பெழுந்து வேங்காற் றுயராண் டுழவார்
வருந்தி யுடம்பின் பயன்கொண்டார் கூற்றம்
வருங்காற் பரிவ திலர்.

தருமர்:- என்பது கரும்பாட்டிக் கட்டிச் சிறுகாலைக் கொண்டார்—கரும்பினையாட்டி யதனை [1]யட்டுக்கண்ட கருப்புக் கட்டியை முற்காலத்திலே கொண்டவர்; துரும்பெழுந்து வேங்காற் றுயராண்டுழவார்—மற்றந்தக் கோது எழுந்து வேம் பொழுது அவ்விடத்துத் துயரமுற்று வருந்தார்; வருந்தியுடம்பின் பயன்கொண்டார்—உடம்பினாலாய அறப்பயனை வருந்தி மெய் வருத்தமுற்றுக் கைக்கொண்டவர்; கூற்றம் வருங்காற் பரிவதிலர்—கூற்று வந்தகாலத்துத் தம்துயர வாழ்க்கைக்கு வருந்தா ரென்றவாறு.

கரும்பின் இரதங் கொள்ளுமளவுங் கரும்பைப் பரிந்து காப்பர். அதினிரதங் கொண்டபின் அது கோதானதுக்கு யாரும் பரிவாரில்லாததுபோல; அறப்பயனு முடம்பினாலே கொள்ள வேண்டுமாதலால் அப்பயன் கைக்குள்ளானால், அவ் வுடம்பினைப் பரிகரிப்பதென், எங்ஙனம் போயினென் என்று தமக்குள்ளான (வா)றுத(லை) நாடிக் கொண்டிருப்ப ரென்பதாம். இது துறந்து தவம் பண்ணுதலின் கருத்து.

பதுமனார்:- கரும்பினை யாட்டிப் பாகினை முற்காலத்தே கொண்டார், பின்பதன் கோதெழுந்து வேம்பொழுது அவ்விடத்தில் துன்பமுற்று வருந்தார். அவரைப்போல முயன் றுடம்பினான அறமாகிய பயனைக் கொண்டார், கூற்றம வருங்காற் றுன்பமுறுத லிலரென்றவாறு.

துரும்பு—கோது. ஆண்டு—அவ்விடத்து. உழவார்—வருந்தார். பரிவதிலர்—இரங்குவதிலர்.

---

[1] அட்டு—1. வடித்து. ('சீயட்டு முயவுநோய்' —சீவக.2798).
2. வார்த்து. ('யாப்பினு ளட்டிய'—நீர்' குறள் 1093.)

விளக்க உரை:- கரும்பாட்டிக் கட்டிச் சிறுகாலைக் கொண்டார்—கரும்பையாட்டிப் பாகினை முற்காலத்தே கொண்டவர்; துரும்பெழுந்து வேங்காற் றுயராண்டு உழவார்—கோதெழுந்து வேம்பொழுது அவ்விடத்துத் துயரமுற்று வருந்தார்; வருந்தியுடம்பின் பயன் கொண்டார்-உடம்பினானாய வறப்பயனை வருந்திக் கொண்டவர்; கூற்றம் வருங்காற் பரிவதிலர்-கூற்றன் வருங்காலத் திரங்குவதில ரென்றவாறு.

உடம்பினானாய வறப்பயனாவது துறந்து தவம் பண்ணுதல். துரும்பு—கோது. ஆண்டு-அவ்விடத்து. உழவார்—வருந்தார். பரிவதிலர்—இரங்குவதிலர்.

மேற்கோள் பகுதி:-

நச்:- மதுரைக் காஞ்சியில் 'பேயு மணங்கு முருவுகொண்டு ஆய்கோல், கூற்றக் கொஃறேர் கழுதொடு கொட்ப என்ற விடத்து உரைகூறி; "கரும்பாட்டிக் கட்டி ....பரிவதிலர் என்றார் பிறரும்" என்பர்.

—மதுரைக்காஞ்சி. 632—3. உரை.

திருநூற்று:- "......இதனால் உடம்பின்பயன் பெற்றோரமென்பதாம்: 'உடம்பின் பயன்கொண்டார் கூற்றம் வருங்காற் பரிவதிலப்' என்றாகலின்". —திருநூற்று. 57—உரை.

ஒப்புமைப் பகுதி:-

"அதிசோக மொடயலார்களைப் போலடுங் கூற்றம் வந்தான்
மதிசோர் தரமயங் கிக்கிட வோமலர் மேனடந்தார்
துதிசே ரிணையடி யாந்துணை யோடவர் தொல்லறமாம்
பொதிசோ றுடைய மிடையோ மினித்தனிப் போநெறிக்கே."

— திருநூற்று. 57.

"செய்ய வெல்லாஞ் செய்தன னாகலின்
இடுக வொன்றோ சுடுக வொன்றோ
படுவழிப் படுகவிப் புகழ்வெய்யோன் றலையே"

—புறம். 239: 19—21.

"அன்றறிவாம் என்னா தறஞ்செக மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை."

—குறள். 36.

"உடம்பின் பயன்கொண்டய ராதலாலே
கூற்ற முட்கார்"

—திருநூற்று. 68—உரை.

குறிப்பு:-

கரும்பு—உடம்புக்கும், அதனை ஆட்டுதல்—விரதங்களால் உடம்பின் வருத்துதற்கும், கருப்பஞ் சாற்றுக்கட்டி—உடம்பின் பயனுக்கும், சிறுகாலை—இளமைப்பருவத்துக்கும், கருப்பங் கட்டி கொண்டார்—யாக்கைப் பயன் கொண்டார்க்கும், துரும் பெழுந்து வேதல்—யமன் வரவினால் உடம்பு அழிதற்கும், கருப்பங் கட்டி கொண்டார் துயராண்டுழவார்—உடம்பின் பயன் கொண் டார் பின்யாக்கை அழிவிற்கு வருந்தாமைக்கும் உவமைகளாம். இச்செய்யுள் எடுத்துக்காட் டுவமையணி.

(ரு)

**36. இன்றுகொ லன்றுகொ லென்றுகொ லென்னாது
பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி
ஒருவுமின் றீயவை யொல்லும் வகையான்
மருவுமின் மாண்டா ரறம்.**

தருமர்:— இன்றுகொல் அன்றுகொல் என்றிகொ லென் னாது—மக்கட்கு வாழ்நாள்கள் குறிக்கப்பட்டது இன்றுதானோ, அல்லது மற்றும் நடுவுபட்ட நாளிலேயோ, என்றோவென்று உறுதிப்பட கிருதிபண்ணி வையாமல்; பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி—காலம் பார்த்துக் கொண்டு எப்போதும் பிறகே திரியா நின்றது கூற்றமென்று கருதி; ஒருவுமின் தீயவை —தீதாகிய கருமங்களைச் செய்யாது தவிருங்கள்; ஒல்லும் வகையால்— தனக்கியன்ற மருவாதியாலே; மருவுமின் மாண்டா ரறம்—மாட்சிமைப்பட்டாரால் கூறப்பட்ட அறத்தினைப்

பொருந்திச் செய்யுங்க ளென்றவாறு.

'கொல்' என்றதசை. தீயவையாகிய பாவத்தொழிலைத் தவிர்ந்து தருமத் தொழிலிலே முயலாது, பின்னைச் செய்கிறோமென் றிருந்தால் யாக்கைக்கு நிலை இல்லையே. இந்த யாக்கை கழிந்தபின் அறவினை செய்து கூடுவதல்லவே. அதனால் விரைவிலே அறத்தைச் செய்துகொள்ள வேண்டுமென்பதாயிற்று.

பதுமனார்:—இன்றோ மக்கட்கு வாழ்நாள், எல்லை குறிக்கப்பட்ட அன்றோ, நடுவுபட்ட நாளிலென்றோ வென்று நினையாது; பின்னே வந்து நின்றது கூற்றமென்று துணிந்து தீவினைகளை நீங்குமின். மாட்சிமைப்பட்டாராற் சொல்லப்பட்ட அறங்களை இயன்றவாற்றாற் பொருந்துமின் என்றவாறு.

இன்றுகொல் என்பது இன்றன்று கொல் என்றுமாம். அன்றுகொல்—மக்கட்கெல்லை குறிக்கப்பட்டவன்றோ. பின்றையே—பின்னே. மாண்டாரறம்—மாட்சிமைப் பட்டாராற் சொல்லப்பட்ட வறம்.

விளக்க உரை:—இன்றுகொல் அன்றுகொல் என்றுகொலென்னாது—இன்றோ மக்கட்கு வாழ்நாள் எல்லை குறிக்கப் பட்ட வன்றோ, நடுவுபட்ட நாளிலேயோ வென்றுறுதி வையாமல்; பின்றையே நின்றது கூற்றமென் றெண்ணி—காலம் பார்த்துப் பிறகே[திரியா]நிற்கிறது கூற்றமென்று கருதி; ஒருவுமின் தீயவை—தீயவினைகளைத் தவிருங்கள்; ஒல்லும் வகையால்—கடைப்பட்ட மருவாதியால்; மருவுமின் மாண்டா ரறம்—பொருந் துங்கள் மாட்சிமைப் பட்டார் சொல்லிய வறங்களையென்றவாறு.

மேற்கோள் பகுதி:—

இளம்:—எட்டெழுத்தான் வந்த அடிக்கு "இன்றுகொலன்றுகொ லென்றுகொ லென்னாது" என்பதை எடுத்துக் காட்டுவர்.

—தொல். செய். சூ. 54.

நச்:—முற்றெதுகைக்கு இவ்வடியை எடுத்துக்காட்டுவர்.
—தொல். செய். சூ. 93.

யா. கா:—நான்கடியாய்த் தனிச் சொலின்றிப் பல விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்கு இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.
—செய். சூ. 4.

இ. வி:—இங்கும் இச்செய்யுள் இருவிகற்பத்தான் வந்த தற்கு எடுத்துக்காட்டாக உள்ளது.
—சூ. 730.

ஒப்புமைப் பகுதி:—

"நாளைச் செய்குவம் அறம்எனில் இன்றே
கேள்வி நல்உயிர் நீங்கினும் நீங்கும்
இதுவென வரைந்து வாழ்நாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை"
—சிலப். 28: 179—82.

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வாய் எல்லாஞ் செயல்."
—குறள். 33.

"ஒன்றும் வகையா லறஞ்செய்க ஊர்ந்துருளின்
குன்று வழியடைப்ப தில்."
—பழ. 303.

"ஆற்றுந் துணையால் அறஞ்செய்கை முன்னினிதே"
—இனியவை. 7.

"கொள்ளுங் கொடுங்கூற்றங் கொல்வான் குறுகுதன்முன்
உள்ளங் கனிந்தறஞ்செய் துய்கவே"
—நன்னெறி. 30.

குறிப்பு:—

"ஒல்லும் வகையான்—தத்தமக்கு இயலுந் திறத்தான்.

இயலுந் திறமாவது இல்லறம் பொருளளவிற் கேற்பவும், துறவறம் யாக்கை நிலைக்கேற்பவுஞ் செய்தல்", என்பர் பரிமேலழகர்.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும்போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரை தானே"
என்ற திருமந்திரமும் (254) காண்க.

(சு)

37. மக்களா லாய பெரும்பயனு மாயுங்கால்
எத்துணையு மாற்றப் பலவானால்—தொக்க
உடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகா தும்பர்க்
கிடந்துண்ணப் பண்ணப் படும்.

தருமர்:- மக்களால் ஆய பெரும்பயனும் ஆயுங்கால்—மானிட யாக்கையை எடுத்தவாறாலாகும் பெரிய பயன்களை எவ்வளவாமென்று ஆராய்ந்து பார்க்குங் காலத்து; எத்துணையும் ஆற்றப் பலவானால்—சிறிதல்ல பலவாகி மிகுதியாகவிருக்கும் ஆதலால்; தொக்க உடம்பிற்கே ஒப்புரவு செய்து ஒழுகாது—வினையால் தொகுக்கப்பட்ட உடம்புக்கான ஒப்புரவுகளையே செய்து கொள்ளாமல்; உம்பர்க்கிடந்து உண்ணப் பண்ணப் படும்—சுவர்க்க லோகத்தினிலிருந்து அனுபவிக்கும், அதற் கேற்பதானவைகளைச் செய்யப்படு மென்றவாறு.

தொக்க உடம்பென்றது[1] சத்த தாதுக்களுங்கூடி ஒன்றியது. அதனை தொக்க வுடம்பென்றார். அவ்வுடம்பினாற் பண்ணும் பயன் அனேக முண்டாயினும் அதிலிப்போதைக்கு, அவ்வுடம்பு மாத்திரத்துக் குறுதியானவற்றைச் செய்வதல்ல. தொக்க வுடம்பிற்கே ஒப்புரவு செய்தொழுகா தென்றவாறு. உண்டு,

[1]சத்த தாதுக்களாவன:—1.இரதம். 2. இரத்தம். 3. சுக்கிலம். 4. கொழுப்பு. 6. தசை. 6. என்பு. 7. மச்சை (என்புக்குள் உள்ள சத்து) என்பன.

உடுத்துப், பூசி, முடித்து என்னுஞ் சிறிய வின்பத்தைச் செய்து கொண்டு அந்தத் தன்மையாகவே ஒழுகாமல், மேலுலகின்க ணிருந்து அனுபவிக்கப் படுவதாய (நல்) அறங்களைப் பண்ணத் தகுமென்பதாம்.

பதுமனார்:- மக்கட் பிறப்பினாற் கொள்ளலாய பெரும் பயனும் ஆராயுங்காலத்து, எத்துணையு மிகப்பல உளவானால், பொருந்திய உடம்பிற்கே செய்யத்தக்கன செய்யாது, மேலு லகத்தின்க ணிலைபெற்று நுகர [அறத்தைச்] செய்யத்தகு மென்றவாறு.

[மக்களா லாய பெரும்பயனாவது] ஊணும், உறக்கமும்' அச்சமும், புணர்தலும் பொது வியல்பாக வுடைய எல்லாப் பிறப்புகளுள்ளும், மக்கட் பிறப்பிற்குப் பெருமை அறிவுடைமை. அதுதான் மூன்றுவகை. லோகதிட்டி, சாத்திரதிட்டி, ஞான திட்டி என்[பன]. அவற்றுள் லோகதிட்டியாவது லோகா சாரமும், ஒப்புரவும், சமுசார வாசனையும் அறிந்துடம்பை நானென் றிருத்தல். சாத்திரதிட்டியாவது அறம், பொருள், இன்பம், வீடென்பன முதலாக வெண்ணப்பட்ட சகலகலை களையும், சுவர்க்க [மத்திய] பாதாள முட்படச் சொல்லப்பட்ட வெல்லா லோகங்களினுமுள்ள விசேடங்களையு நூன்முகமாகக் கேட்டறிந்து இவ்வுடம்பை நானல்லே னென்றிருத்தல். ஞான திட்டியாவது யாதொரு பொருள்களையுந் தன்னையு முண்மை யுணர்தல்

ஆதலால் அறஞ் செய்து பிறந்து பொருளுண்டாகையும், பொருளினாலே இவ்வுலகத்துண்டான இன்பங்களை யனுப விக்கையும், மறுமைக்கான அறஞ்செயலுடனே தவங்களைப் பண்ணிச் சுவர்க்கசுகம் பெறுகையும், இப்பலங்களையும் அபேட் சித்து அழகிய ஞானத்தாலே மோட்சசுகம் பெறுகையும், இவை மக்களாலாய பயனானதால் நிலையாமையும் புழுமலங்களுந் தொக்க வுடம்பிற்கே யொப்புரவானவை செய்தொழுகாது, மேலழியாது நுகர்வன செய்துகொள்ளப்படும் என்றவாறு.

'பெரும்பயனும்' என்ற உம்மையால் பயனில்லாமையும்

என்றது; அறிவில்லாதார் விலங்கோ டொப்பார். மக்கட் பிறப்பாலாகிய பயன் பெற்றிலர் என்பதாம்.

விளக்கவுரை:- மக்களால் ஆய பெரும்பயனும் ஆயுங் கால்—மக்கள் பிறப்பாலாய பெரும்பயனை ஆராயுங்காலத்து; எத்துணையும் ஆற்றப் பலவானால்—எவ்வளவு மிகவும் பலவானால்; தொக்க வுடம்பிற்கே யொப்புரவு செய்தொழுகாது—பொருந்திய உடம்புக்கே யான வொப்புரவுகளைச் செய்யாதே, உம்பர்கிடந்து உண்ணப் பண்ணப்படும்-மேலுலகத்தின் கண்ணே இருந்து அனுபவிக்கத் தக்க நுகர்ச்சிகளாகிய வறங்களைச் செய்யத்தகு மென்றவாறு.

பொருந்திய வுடம்பென்பது சத்த தாதுக்களுங் கூடி யொன்றிளது பொருத்தமெனப்பட்டது. உடம்பிற்கான ஒப்புரவு க(ளாவன):- உண்ண, உடுக்க, பூச முடிக்கவென்கின்றவை.

பொழிப்புரை:-

மக்கட் பிறப்பினாற் கொள்ளலாய பெரும்பயனு மாயுங்கால், எத்துணையு மிகப்பல வுளவானால் பொருந்திய உடம்பிற்கே செய்யத்தக்கன செய்யாது, மேலுலகத்தின்க ணிலைபெற்று நுகர வறத்தைச் செய்யத்தகு மென்றவாறு.

ஊணும், உறக்கமும் †.. பயன்பெற்றில ரென்பதாம்.

குறிப்பு:-

ஒப்புரவு—உலகநடையை அறிந்து அதற்கேற்பப் பிறர்க்கு உதவிசெய்தல். ஒப்பு+உரவு எனப் பிரித்து உலகத்தாரோடு ஒத்துச் செய்யுஞ் சிறந்த தொழில் என்று கொள்க.

ஒப்புரவு—நாலடி. 22, 148; குறள். 213, 218, 220

---

†பதுமனார் உரையில் உள்ளதே. அதிற் கண்டுகொள்க.

இவ்விடங்களில் வருவதும் காண்க.

(எ)

38. உறக்குந் துணையதோ ராலம்வித் தீண்டி
இறப்ப நிழற்பயந் தாஅங்கு—அறப்பயனுந்
தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
[1]வான்சிறிதாய்ப் போர்த்து விடும்.

தருமர்:- என்பது. உறக்குந் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி—கிள்ளியெடுக்கு மளவினதாகிய ஒரு ஆலம் விதையானது ஓங்கி வளர்ந்து; இறப்ப நிழல் பயந்தாங்கு—மிகுதியாய நிழலைக் கொடுத்தாற்போல; அறப்பயனும்—தருமத்தினுடைய பலனும்; தான் சிறிதாயினும்—கொடுத்தபயன் கொஞ்சமே யானாலும், தக்கார் கைப்பட்டக்கால்—தகுதியுடைய பெரியோரால் கொள்ளப்பட்ட காலத்து; வான்சிறிதாய்ப் போர்த்து விடும்—ஆகாயமுஞ் சிறிதென்னலாம்படி யுயர்ந்ததனை நீக்கிவிடு மென்ற வாறு.

எனவே மிகவும் சிறியதாகிய ஆலம்விதை, அதுவும் பலவல்ல ஒருவிதைதானே இவ்வகைத்தானது; யாவரும் அறிந்ததல்லாது அறியத் தருவல்லவே. அதுபோல நல்லோர் முகத்திற் கொடுத்த பொருளும், இத்தன்மைத்தாய்ப் பின்னுதவு மென்ப தற்கு அனுமானம் தேவையில்லை யென்று, கொடுக்குந் தன்மையும் அறத்தினுடை வலி இத்தன்மைய வென்பதுந் தோன்றக் கூறியதாயிற்று.

பதுமனார்:- உறக்கு மளவினதோர் ஆலம்வித்து வளர்ந்து மிகநிழலைத் தந்தாற்போலக் கொடுத்த பொருள்தான் சிறிதாயி னும் நல்லார் கைப்பட்டக்கால் அவ்வறத்தான் வரும்பயன் விசும்பு சிறிதென்னும்படி பெருகுமென்றவாறு.

---

[1] பா-ம்;— 'வான் சிறிதாப்'.

அடக்கத்தாலே உயிருளதாகத் தோன்றாது கிடந்துறங்கும் உறக்கத்தளவும் போலும், நுண்மையாலே தோன்றாத ஆலம் வித்து செவ்விபெற்று நன்னிலஞ் சார்வாகத் தோன்றி, உறுப்புகளீண்டி மிகநிழலைப் பயந்தாற்போல அறங் காரணமாகக் கொடுத்த பொருள்தான் சிறிதாயினும், நல்லார் கைப்பட்டக்கால் வான்சிறிதென்னும்படி பயன் பெருத்து விடும்.

உறக்குந் துணை என்று வலித்தது செய்யுள் விகாரம். உறக்கிறவள வென்னில் இவ்வுற நூலிற் பெரியோர் சொல்லா ரென்பதாம்.

விளக்க உரை:— உறக்குந் துணையது ஓர் ஆலம் வித்து ஈண்டி — உறங்கு மளவினதான வாலம்விதை [1]அங்குரித்து வளர்ந்து; இறப்ப நிழற் பயந்தாங்கு—மிக்கநிழலைத் தந்தாற் போல; அறப்பயனுந் தான் சிறிதாயினும்—அறப்பயனு மற்பமாயினும்; தக்கார் கைப்பட்டக்கால்—தகுதியுடையார் கையிற் புகுந்த காலத்து; வான் சிறிதாய்ப் போர்த்து விடும்—ஆகாசமும் சிறிதென்னும்படி நீக்கிவிடு மென்றவாறு.

பொழிப்புரை:-

உறக்கு மளவினதோ ராலம்வித்து ஈண்டி வளர்ந்து மிக நிழலைத் தந்தாற்போலக் கொடுத்த பொருள்தான் சிறிதாயினும் நல்லார் கைப்பட்டக்கால்; அவ்வறத்தான் வரும்பயன் விசும்பு சிறிதாமென்னும்படி பெருகுமென்றவாறு.

அடக்கத்தாலே *.. பெரியோர் சொல்லா ரென்பதாம்.

---

[1]அங்குரித்து—முளைத்து. 'வித்துட்டங்கிய யங்குரித்து' (திருவாத. 4. மந்தி. 7)

*பதுமனார் உரையில் உள்ளதே. அதிற் கண்டுகொள்க.

மேற்கோள் பகுதி:—

தெய்வ } :— "உறக்குந்துணை ....விடும்" என்பதனுள்,
பேரா } உம்மை இசை நிறை யாயிற்று" என்பர்.

—தொல். சொல். இடைச். சூ. 46.

நச்:— "தான் சிறிதாயினும்........போர்த்து விடும்"; இஃது ஏற்றற் சிறப்பு என்பர்.

—தொல். பொருள். புறத். சூ. 75.

பேரா:— பிறபொருளாக்கம் பற்றிய வியப்பென்னும் மெய்ப்பாட்டிற்கு "உறக்கும் .... பயந்தா அங்கு" என்பதனை எடுத்துக்காட்டுவர்.

— தொல்.பொருள்.மெய்ப்.சூ. 7.

இ.வி:— இங்கும் அதற்கே மேற்கோளாக வந்துள்ளது.

—சூ. 578.

பரிமே:— "இனைத்துணைத் தென்பதொன் றில்லை விருந்தின், துணைத்துணை வேள்விப் பயன்' என்னும் குறளுக்கு உரைகூறுமிடத்து "தான் சிறிதாயினுந் தக்கார்கைப் பட்டக்கால், வான்சிறிதாப் போர்த்து விடும்" ஆகலின், இனைத்துணைத்தென்பது ஒன்று இல்லை என்றும் கூறினார்", என்பர்.

—குறள். 87. (விருந்தோம்பல்)

ஒப்புமைப் பகுதி:—

"இனைத்துணைத் தென்பதொான் றில்லை விருந்தின்
துணைத்துணை வேள்விப் பயன்".

—குறள். 87.

"தினைத்துணை நன்றி செயினும் பனைத்துணையாக்
கொள்வர் பயன்தெரி வார்."

—குறள். 104.

"தினையனைத்தே யாயினும் செய்தநன் றுண்டால்
பனையனைத்தா உள்ளுவர் சான்றோர்".

—நாலடி. 344.

"முட்டில் பெரும்பொரு ளாக்கியக்கான் மற்றது
தக்குழி யீத லினிது"

— இனியவை.20.

"உண்ணெகிழ்ந்த தீயிற் சிறிதெனினுங்
குன்றுபோற் கூடும் பயன்"

— சிறுபஞ்ச.65.

"அறத்தி னீட்டிய வொண்பொரு ளறவோன்
திறத்து வழிப்படூஉஞ் செய்கை போல"

— மணி. உலக. 3-4.

"பெருந்தவர் கைப்பெய் பிச்சையின் பயனு
நீரு நிலமுங் காலமுங் கருவியுஞ்
சீர்பெற வித்திய வித்தின் விளைவும்
பெருகிய தென்னப் பெருவளஞ் சுரப்ப"

— மணி.கச்சி.229—232.

"பார்த்தெதிர்

வியந்தவர் வெருக்கொள விசும்பி னோங்கினான்
உயர்ந்தவர்க் குதவிய வுதவி யொப்பவே"

— கம்ப.பால.வேள்வி.35

"ஞான முன்னிய நான்மறை யாளர்கைத்
தானம் என்னத் தழைத்தது நீத்தமே"

— கம்ப.பால.ஆற்றுப்.30.

"இழிந்த மாந்தர்கைப் பொருள்களு மிகபரத் தாசை
கழிந்த யோகியர் கைப்படிற் றூயவாய்க் களங்கம்
ஒழிந்த வாறுபோல்"

— திருவிளை.நாட்டுச்.16.

"தெள்ளிய வாலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணியதே யாயினு மண்ணல் யானை
அணிதேர் புரவி யாட்பெரும் படையொடு
மன்னர்க் கிருக்க நிழலா கும்மே."

— நற்.17.

(அ)

39\. வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்
வைகலை வைத்துணரா தார்.

தருமர்: என்பது. வைகலும் வைகல் வரக்கண்டும் அஃது ணரார்—நாள்தோறும். விடிவதும், அத்தமிப்பதுமாகக் காலங் கழிந்து வருவதனைக் கண்டிருந்தும் அதனை யுற்றறியாமல்; வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர்—நாள்தோறுமிப்படி போகா நிற்கிற பொழுதைத் தமக்கு இற்றைப்பொழுது போன தென்றுவதற்கு இன்புறுவர்; வைகலும் வைகற்றம் வாழ்நாள் மேல் வைகுதல்—நாள்தோறுங் கழியா நிற்கிற பொழுதானது தம் முடைய வாழ்நாள்மேல் செல்லா நின்றதென்று; வைகலை வைத்துணராதார் – தமக்கு நூறு வயதென்னும் நாளை ஒரு அளவாக வைத்து, இப்படி நாள்கள் கழிந்து போகிறதெல்லாம் அந்த வயதிலே சென்றுபோகிற தென்றறியாதவ ரென்றவாறு.

வைத்துணரா தாரெனவே நூறு வயதென்பது [1]புருடாயு ளென்று விதியல்லாமல். யாவரும் நூறுவயது செல்லுமளவு மிருப்பது கட்டளையோ; அவரவர் வினைப்பகுதி மாத்திரமே அல்லவோ வாழ்நாளும். அத்தன்மையவாய வயதினைத் தான் இப்பிறப்பில் வாழநா ளிவ்வளவென்றுணராதார் மிகவும் அறிவில்லாதார். நாள்தோறுஞ் செல்லுகின்ற பொழுதைத் தமது வாழ்நாளிலே செல்லுகிற தென்றெண்ணி, விரைவிலே தனக். குறுதியாய அறத்தினைக் கைக்கொள்ள அறியாது, தனக்கு இற்றைப்பொழுது போயிற்றென்று அதற்கு இன்புறுவரென்றார்.

இது அறிவின்மை யென்னும் பெயர் பொருந்திய தீண்டுக் கூறிய தென்னையோ வெனில், இப்படி மாத்திரைதோறுந் தம் வாழ்நாள் கழிவாகக் கண்டுமதனை யறியாம லதற்கு மகிழ்ந் திருத்தல் முன்னைத் தீவினையாலல்லவோ. தீவினை இப்படி

1\. 'புருஷாயித்து' என்பது சுவடியிலுள்ளது.

மதிமயங்கி அறிவழிப்பது போல, நல்வினையும் நல்லறிவைக் கொடுக்கு மென்றது தோன்ற; உலகத்தார்க்கு அறத்தினது வலியை அறிவிக்கை காரணமாக, இப்பாட்டு அறன்வலி யுறுத்தலில் சேர்க்கப்பட்டது.

பதுமனார்:—[நாள் தோறும் நாள்கழிதலைத் தம்வாழ்நாள் மேற் கழிவாக வைத்தந் நாட்களை யெண்ணி உணராதார், நாள் தோறும் தம்வாழ்நாள் கழிவுவரக்கண்டும் அதனையறியாது நாள் தோறு நாள்கழிதலுக் கின்புறா நிற்பயென்றவாறு].

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரா ரென்பது, நாடோறும் தம்வாழ்நாள் கழிவுவரக் கண்டுமதனை யறியா ரென்றவாறு. வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவ ரென்பது, நாடோறு நாட்கள் கழியுமென் றின்புறுவ ரென்ற வாறு. நாட்கழிவி (ற்கி)ன்புறுமா றென்னையெனின், உலகத் தார் பொழுது போக்கை இன்புறுவதாகக் கருதுவ ரென்றவாறு. வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல், வைகலை வைத்துணராதா ரென்பது, நாடோறு நாட்கழிதலைத் தம் வாழ்நாள் மேல் கழிவாக வைத்து வந்நாட்களை யறியாதா ரென்றவாறு

வைகலும் வைகல் வரக்கண்டும்—ஒருநாட் கழிய ஒருநாள் வரக்கண்டும். அஃதுணரார்—இப்பிரபஞ்சத்தினுடைய வாக்கக் கேடு முதலாக வருநிகழ்ச்சி காலவசமா யல்லது வாரா தென்று அஃதுணரார். வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர் — நாள்தோறுந் தஞ்செயலும், அறிவுங் கெட்டு, விழும்படி வரும் வைகலைத் தமக்கிப்படியே பொழுதுபோமென் றின்புறுவர். வைகலும் வைகற்றம் வாழ்நாள்மேல் வைகுதல்— நாடோறும் வரும் வைகல் தம்வாழ்நாள்களின் மேற் செலவு பட்டு வைகுதல். வைகலை வைத்துணராதார் என்பது வைகலை மக்கள் யாக்கைக் குள்ள வயதிலேவைத்து எண்ணி யதுகழிந்து வரும்படி யறியாதா ரென்றவாறு.

எண்ணி யறிதலாவது, பிறந்தது முதலாகப் பத்துவயதில் மையும், இருபது வயதில் வளர்ச்சியும், முப்பது வயதில் ஒளியும், நாற்பது வயதில் மேதைமையும், ஐம்பது வயதிற்

பலமும், அறுபதே வயதில் தாதுவும், எழுபது வயதில் கண்ணும், எண்பது வயதிற் செவியும், தொண்ணூற்றில் மனமும். நூற்றில் பிராணனுமாக வடைவே யொழுகக் குறைந்து பஃபத்திலே இக்குறைவு தோன்றி வருகின்றமை (யை) யுணராதா ரென்ற வாறு.

வருகின்ற நாட்கள் காலமாவதும், அதனை யுணர்தலா வதும்:—காலமாவது, வண்ண ரூபங்களையும் [1]ஆதி அந்தங் களையு முடையதன்றி எங்குமுளதாய், தன்னுள்ளே யெல்லாப் பொருள்கழுந்தோன்றிக் கழியத் தானொவ்பிலயும் நாமமுமின்றி யிருப்பது. [2]இத்தாலுகத்துக்குள்ளுந் தோன்றப்பட்ட நில, நீர், தீ, [3]கால்; வானாகிய பிரபஞ்சத்துக்குள் [4]நாண்மீன்களும், [5]கோண்மீன்களும். கிழக்கு மேற்காகச் சுழலவருஞ் சக்கிரத்துக் குள்ளுஞ் சந்திரதித்தர் [6]உதயாத்தமனத்திலே நாழிகை, போது நாளாகவும், தெற்கு, வடக்கான திக்காலும், உயர்ச்சி, தாழ்ச்சி யாலும் பருவங்களாகிய மாதங்கள் நாலுநாலு கூடியொரு காலமாகி பனி, வேனில், காரென்னும் பருவம் பிறந்து; இப் பருவங்கள் மூன்று கூடிய யோராண்டாகி, ஆண்டுகள் பல செல்லுங் காலத்துள் நவக் கிரகங்கள் கடிதாகவும், மெள்ளவு மவ்விராசிகளிலே நடந்து சில கூடிக் கழியுங் காலத்திலே இப் பூமிக்கு நலந்தீங்கு தோன்ற, இப்படி வருங்காலத்திலே [7]ஒரு படிப்பட்ட [8]தொக்குளதாய்க்

---

[1] ஆதி அந்தம்—தொடக்கமும், முடிவும்.

[2] இத்தால்—இதனால்.
"தான்வந்து தொடரு மித்தால்." (தாயு. ஆகார 15)

[3] கால்—காற்று.
("கால்கடிப் பாகக் கடலொலித் தாங்கு"-பதிற்றுப்.68-1.)

[4] நாண்மீன்—நட்சத்திரம்.
("நாண் மீண்வாய் சூழ்ந்த மதிபோல்" -கலித். 104-27)

[5] கோண்மீன்—கிரகம்.
("வாணிற விசும்பிற் கோண்மீன்"-சிறுபாண் 242.)

[6] உதயாத்தமனம்— (1) காலை மாலைகள், (2) சூரிய சந்திர நட்சத்திரங்களின் மறைவுகள்.

[7] ஒருபடிப்பட்ட— ஒருவகைப்பட்ட.

[8] தொக்குளதாய்—பற்றுளதாய்.

[1]காவல்வாசிப்பட்டுப் பாவகன்மமான தொதுங்கிப் புண்ணிய தன்ம மேற்பட்டு வருங்காலத்தைக் கிருதயுக மென்றும்; பின்பு இக்கிரகங்களின் விசேடத்தாலே சிறிது நன்மை குறையக்குறைய வல்லாத யுகங்களுமாய்க் கலிகாலம் பிறந்து, பாவக்கோள் பெற்றதுங் கொண்டு பாவமிக்குப் புண்ணிய மொதுங்கிப் பின்னை மிகவும் [2]அதமதானியமாய்க் கடுசமாகியும், பக்குவமாகியும் இருப்பன புசித்துத் தாமத குணமேற்பட்டுப் பாவங்களைச் செய்கையாகிக் [3]கீழ்களும் விலங்கு சாதிகளும், பட்சிகளுமான செனனம் பெருத்துக் காம, வெகுளி, மயக்கமிக்குச் சரீரங்களும் வயதுங் குறுகி வருகின்றவிது காலகுண மென்றும்; ஆகாசத் தியங்கும் ஆதித்திய சந்திர தாராகணங்களானவையுஞ் சுதந்திரத் தாலே நில்லாமை காலவச விழுப்புண்டு வரக்கண்டு பூமியில் [4]விருக்க முதலாக விளைவனவு மல்லாத பிராணிகளுக்குங் காலம் வேண்டியிருத்தலும் கர்ப்பங்களும் பத்தும், பன்னிரண்டும் ஆறு மூன்று மொன்று மாதங்களுள் புக்கே பிறக்கவும் மரணங்களு(ம்) மனிதர்க்கும், யானைக்கும் வயது நூற்றிருபது மஞ்சுநாளும், குதிரைக்கு முப்பத்திரண்டும், ஒட்டைக்கும் கழுதைக்கு மிருபத் தஞ்சும், பசு எருமைக்கு இருபத்துநாலும், ஆட்டுக்கும் மானுக்கும் பதினாறும், நாய் நரிக்குப் பன்னிரண்டுமான காலங்களுக்கும் பிரபஞ்சத்துக்கும், பிரமாவுக்கும் இன்னதனை யுகமென்றுஞ் சருவமுங் காலவசமாகி இந்நாளாகி வருகின்ற தென்வாறு.

விளக்க உரை:— வைகலும் வைகல்வரக் கண்டு மஃதுணரார்—நாள்தோறும் விடிவதும் அத்தமிப்பதாய் இப்படி காலங்கழிந்து வருவதனை யறியார்; வைகலும் வைகலை வைகு மென் றின்புறுவர் — நாள்தோறும் இப்படி போகாநிற்கிற

---

[1]காவல்வாசிப்பட்டு—அடிவைத்த பலன் ஏற்பட்டு.

[2]'அதமதியானியமாய்' என்று சுவடியில் உள்ளது.

[3]கீழ்களும —இழிந்தோர்களும், கீழானவர்களும்.

'கீழ்தன் மனம் புரிந்த வாறேமிகும்' (நாலடி. 341)

[4]விருக்கம்—விருட்சம்.

பொழுதைத் தமக்கு; இற்றைப்பொழுது போனதென் றதற்கின் புறுவர்; வைகலும் வைகல்தம் வாழ்நாள்மேல் வைகுதல்—நாள் தோறும் கழியாநிற்கிற பொழுதானது தம்முடைய வாழ்நாள் மேல் செல்லா நின்றதென்று; வைகலை வைத்துணராதார்— தமக்கு நூறுவயதென்று ஒரு அளவைக் கற்பித்துவைத்து அந்த நாள்களின்மேல் வைகுதலறியாதவர் நாள் கழிதலுக்கு கின்புறுவர் என்றவாறு.

இப்படிக்கொத்த அறிவின்மையாரை அறிவின்மையிலே சேராமல் அறன் வலியுறுத்தலிலே வைத்ததென்னையோ வெனின்; நல்வினைசெய்ய வேண்டுமென்பது கொண்டு நிலையாமையை யறிவித்தது.

பொழிப்புரை:-

வைகலும் வைகல்வரக் கண்டு மஃதுணரார் என்பது*....... யாக்கைக்குள்ள வயதிலேவைத்து எண்ணியதுகழிந்து வரும்படி யறியாதா ரென்றவாறு.

மேற்கோள் பகுதி:-

நச்.
பேரா. } :- வழிமோனைக்கு இச்செய்யுளை மேற்கோ ளாகக் காட்டுவர். —சொல். செய். சூ. 93.

நச்.
பேரா. } :- "ஒரு சொல்லே மிக்கு வருதலின் ஏந்தல் வண்ண மென்றாயிற்று அது, **வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார்'** என வரும்" என்பர்.
—தொல். செய். சூ. 231.

பேரா:— "கூறியது கூறன் முன்வைத்த தென்னையெனின் அது நூலுட்போலச் செய்யுட் கண்ணும் பயன்படவரின் அமையும் என்றற்கென்பது. அவை, **வைகலும்**.............................. **அஃதுணரார்** எனவும் சொல்வகையான் இரட்டித்தவாறு என்பர்.
—தொல். மரபு. சூ. 108.

*பதுமனார் உரையில் கண்டுகொள்க.

இ. வி.
யா. வி.
யா. கா.
சிதம்பரப்.
} ஒரு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்கு இச்செய்யுளை எடுத்துக்காட்டுவார்.

—சூ. 730.

—செய். சூ. 4 & 7.

—செய். சூ. 4.

—செ. சூ. 1.

தண்டி.
வீர.
} :—"சொற்பொருட்பின் வருநிலை யணிக்கு" இதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—சூ. 41.

—அலங்கார. சூ. 28.

அணியியலுடையார்:—"இஃது அகவல் வெண்பாவென்று அணியியலுடையார் காட்டிய பாட்டு' என்பதனால் அணியியலுடையாரும் இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டினரென்பதறிக.

—யா.வி.செய்.சூ.4.

பரிமே:-"சொல்லின் என்பது இருவழியும் மிகையாயினும், "சொற்பொருட்பின் வருநிலை" யென்னும் அணிநோக்கி வந்தது, 'வைகலும் வைகல்வரக் கண்டும்' என்பதுபோல என்பர்.

—குறள். 200.

ஒப்புமைப் பகுதி:—

"வைகல் நாளும் வைகின்றே"

—சீவக. 156.

(கூ)

40. மான வருங்கல நீக்கி யிரவென்னும்
ஈன விளிவினால் வாழ்வேன்மன்—ஈனத்தால்
ஊட்டியக் கண்ணு முறுதிசேர்ந் திவ்வுடம்பு
நீட்டித்து நிற்கு மெனின்.

தருமர்:— என்பது. மான வருங்கலம் நீக்கி—மானமென்ப

தொரு பெறுதற்கரிய ஆபரணத்தை நீக்கி; இரவென்னும் ஈன விளிவினால் வாழ்வேன்மன்—இரப்பென்னு மீனமாகிய விளி வரவினா லுயிர்வாழக் கடவேன்; ஈனத்தா லூட்டியக் கண்ணும்-இரவென்னு மீனத்தொழிலா லிரந்தூட்டிய விடத்தும்; உறுதி சேர்ந் திவ்வுடம்பு நீட்டித்து நிற்குமெனின்—இந்த உடம்பானது உறுதிபெற்று நெடுங்காலம் நிற்குமாகி லென்றவாறு.

இரந்தூட்டி லிவ்வுடம்பு நிலைபெறுமனால், வறுமையாய வழி இரக்க லாகாதென்னு மானத்தை நீக்கியாயினும், இரவினா லுயிர்வாழக் கடவேன். இரவாகிய வீனத்துக் குடன்படினு மிவ்வியாக்கை நிலையல்லவே. அதற்காக மானத்தை விடுவதோ அறிவு! இரக்கத் தக்கதான மிடி வந்தகாலத்துத் துறந்து தவம் பண்ணக் கடவேனேயல்லது, (அதை) நீக்கி இரக்கக் கடவேனோ வென்று துறப்பதாகத் துணிதல். இதுமுன் செய்த நல்வினைப் பயனால் வந்த அறிவாதலா லறத்தினதுவலி இத் தன்மையதென்று, யாவரு மறிதற்பொருட்டு மானமென்னு மதிகாரத்திற்குப் பொருந்திய பாட்டு, அறன்வலி யுறுத்தலில் சேர்க்கப்பட்டது.

பதுமனார்:— மானமென்கிற பெறற்கரிய வணியினைக் கழித்து, இரப்பென்னா நின்ற வாழ்வையுடைய இழிவரவினா லுயிர்வாழ்வே னன்றோ யானீனத்தாழ்வினா னிரந்தூட்டிய விடத்து முறுதியை யுடைத்தா யிவ்வுடம்பு நீட்டித்து நிற்குமாயி னென்றவாறு.

மான வருங்கலம் — மானமாகிய பெறுதற்கரிய வணி. ஈனத்தா லூட்டியக் கண்ணும்—தீவினையால் வரும் பொருள் களாலே நுகர்வித்த விடத்தும்.

விளக்க உரை:— மானம் அருங்கலம் நீக்கி—மானமாகிய வாபரணத்தை (நீக்கிவி)ட்டு, இரவென்னும் ஈனவிளிவினால் வாழ்வேன்மன்—இரப்பென்கிற ஈனமாகிய விளிவரவினா லுயிர் வாழ்வோ மென்கை என்ன பயத்ததோ; ஈனத்தா லூட்டியக் கண்ணும்-ஈனமென்கிற விளிவரவினாலே இரந்தூட்டிய விடத்தும்; உறுதி சேர்ந்திவ்வுடம்பு நீட்டித்து நிற்குமெனின்—உறுதியை

யுடைத்தா யிவ்வுடம்பு நீட்டித்து நிற்குமாகி லிரந்தாகிலு மூட்டக்கடவே னென்றவாறு.

இது மானத்திற் சேராமலிதிற் சேர்த்த தென்னையோ வெனின், வறுமையுற்ற காலத்திரவாமல் துறந்து தவம்பண்ண வேண்டுமென்பதாயிற்று. துறக்கவே த்வினை வாராமல் நல்வினைப் பயனாம்.

மேற்கோள் பகுதி:-

நேமி :—'ஈன விழிவினான் வாழ்வேன் மன்'' என்பது கழிவின்கண் வந்தது.

—சூ. 53.

ஒப்புமைப் பகுதி:-

''மருந்தோமற் றூனோம்பும் வாழ்க்கை பெருந்தகைமை
பீடழிய வந்த விடத்து''

—குறள். 968.

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்''

—குறள். 969.

''இளிவரின் வாழாத மானம் உடையார்
ஒளிதொழு தேத்தும் உலகு.''

—குறள். 970.

''இன்மை இடும்பை இரந்துதீர் வாமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்.''

—குறள். 1063.

''இரப்பன் இரப்பாரை எல்லாம் இரப்பின்
கரப்பார் இரவன்மின் என்று.

—குறள். 1067.

குழவி யிறப்பினு மூன்றடி பிறப்பினும்
ஆளன் றென்று வாளிற் றப்பார்

தொடர்ப்படு ஞமலியி னிடர்ப்படுத் திரீஇய
கேளல் கேளிர் வேளான் சிறுபத
மதுகை யின்றி வயிற்றுத்தீத் தணியத்
தாமிரந் துண்ணு மளவை
ஈன்ம ரோவிவ் வுலகத் தானே.'' —புறம். 74.

''ஊனமே யான ஊனிடை யிருக்கும்
உயிரினைத் துறந்தும்ஒண் பூணாம்
மானமே புரப்ப தவனிமேல் எவர்க்கும்
வரிசையும் தோற்றமும் மரபும்
ஞானமே யான திருவடி யுடையாய்
ஞாலமுள் ளளவும்நிற் றலினால்
ஈனமே உயிருக் கியற்கைஆ தலினால்
என்றனன் வீமனுக் கிளையோன்'' —வில்லி. பழம். 18.

''மானமழிந்தபின் வாழாமை முன்னினிதே''
இனியது. 14.

''தம்முடை யாற்றலு மானமுந் தோற்றுத்தம்
இன்னுயி ரோம்பினு மோம்புக—பின்னர்ச்
சிறுவரை யாயினு மன்ற தமக்காங்கு
இறுவரை யில்லை யெனின்'' —நீதிநெறி. 41.

''இலமென்னும்
வன்மையின் வன்பாட்ட தில்''.
''இன்னாமை வேண்டி னிரவொழுக'' —நான்மணி. 17. 31.
(ய)

---

5. [1]தூயதல்லாமை.

தருமர்:- அஃதாவது தூயது—அல்லாமை. இந்த உடம்பி

பா—ம் :—[1]'தூய தன்மை'

னுள்ள மலங்களி னிழிவைச் சொல்லி அத்தன்மையவாய உடம்பினும், விடயங்களினும் இந்த இழிவைநோக்கி மனஞ் செல்லாது, இதனாலாவ தொன்றுமில்லையென்று துறந்து தவம் பண்ணும்படிக்கு அறிவுறுத்தியது.

பதுமனார்:- அஃதாவது குடரும், மலமும், கிருமிகளும், துர்க்கந்தங்களும் தோன்றாமல் மூடியிருந்த தோலின் புறத்தைக் கண்டு, நன்றென்றுந் தூயதென்றும் மயங்குவார்க்கிது துயதல்லாமை யறியும்படி கூறுகின்றது.

இது அதன்பின் சொல்லிய தென்னை. முன்சொன்ன உடம்பினது நிலையாமைகடானே தூயதல்லாமை தோன்றா தோவெனின், அவ்வாற்றா னிலையாமைகளை யறிந்து அறத் தின் வலியைத்தா மறிந்தாராயின், அவ்வறப்பயனை நுகரு மிடத்துத் தம்முடம்பாகிய வ(ழ)கை மதியாததனைப் பிறிதுள்ள வற்றானறிவாராயின், அறத்தின் கண்ணே வலியுறுவரென்பது கருத்து.

விளக்க உரை:- அஃதாவது தூயது அல்லாமை. இந்த உடம்பினுள்ள மலங்க[ளின் இழிவு]களைச் சொல்லி, மகளி ரிடத்து மயங்காதபடி யறிவுறுத்தித் துறந்து தவம்பண்ணும்படி பண்ணினது.

41. மாக்கேழ் மடநல்லா யென்றரற்றுஞ் சான்றவர்
நோக்கார்கொல்? நொய்யதோர் [1]புக்கில்லை-யாக்கைக்
ஈச்சிற கன்னதோர் தோலறினும் வேண்டுமே [கோர்
காக்கை கடிவதோர் கோல்.

தருமர்:- என்பது. மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ் சான்றவர்—மிக்கதாகிய அழகும், பேதைமைபோலச் சிறந்த

பா-ம்:— [1]'துச்சிலை'. துச்சில்—(துஞ்சு+இல்) ஒதுக்கிடம். "உடம்பினுள் துச்சில் இருந்த உயிர்க்கு" (குறள். 340)

வார்த்தையுமுடைய நல்லாயென்று மகளிர் மகிழ்வுறப் பலகாலுஞ் சொல்லுகின்ற அமைந்தோரானவர்; நோக்கார்கொல்? நொய்யதோர் புக்கில்லை-உள்ளுற நோக்கியறியாரோ இழிவாகிய உடம்பை?; யாக்கைக்கோர் ஈச்சிறகன்னதோர் தோலறினும் வேண்டுமே-இந்த உடம்பினில் ஒரு [ஈயினது] சிறகளவு தோலற்றாலும் வேண்டுமல்லவோ; காக்கை கடிவதோர் கோல்-காக்கையானது அந்தப் புண்ணைக் கொத்தாதபடிக்கு, காக்கை(யை) ஓட்ட ஒரு கோலென்றவாறு.

உடம்பினுள் சற்றே வடுப்படினும் இத்தன்மையா மென்பதறிந்தும், அவ்வுடம்பில் விருப்பமுற்று அதனைப் பலகாலும் புகழ்ந்துகூறி, அந்தவிடயத்திலே முயங்குவது மேலைக்குதவுவதாய நன்னெறியைப் பயக்குமோ; அமைந்தோர்க்கிது தகுதியன்று. தம்முடைய யாக்கைக்கிறுதி வருமுன்னே தவத்தின் முயன்று, தமக்குறுதியானவற்றைக் கைக்கொள்ள வேண்டுமென்றறிவுறுத்தியது.

என்று அரற்றுஞ் சான்றவரெனவே சான்றாண்மையுடையவர்க் கித்தொழில் இயைவதன்றே; இத்தொழிலுக்கு உடன்படுவார் அமையாதாரல்லவோ. அதனால் அவரதிழிபைச் சிறப்பித்துச் சான்றவ ரென்றார்.†

பதுமனார்:- மாமை நிறத்தையு மென்மையையு முடைய நல்லாயென்று, பலகாற் சொல்லுஞ் சான்றவர் காணார்கொல்லோ சீர்மையில்லாததோர் உடம்பாகியபுக்கில்லை? அவ்வுடம்பிற்கோர் ஈயின் சிறகன்னதோர் தோலறினும், காக்கையைத் துரப்பதற்கோர் கோல் வேண்டுமென்றவாறு.

மாக்கேழ்-அழகிய நிறம். புக்கில்-[2]தனக்கென வமையாதவில்.

விளக்க உரை:— மாக்கேழ் மடநல்லாய் என்றரற்றுஞ்

---

†இது எதிர்மறை யிலக்கணை என்பர். வடநூலார் இதனை விபரீதலக்ஷணா என்பர். இவ்விலக்கணம் பிறதுறிப்பில் அடங்கும்.

[2]தனக்குரியதென்று சொந்தமில்லாத வீடு.

சான்றவர் நோக்கார் கொல்?—மாமை நிறத்தினையுடைய மெத்தென்ற நல்லாயென்று, அகப்பொருளினதியல்பைக் கூறியாற்றுகின்ற சான்றவர் பார்க்கிறாரில்லையோ?; நொய்யதோர் புக்கில்லை—இழிவா யிருப்பதோருடம்பை; யாக்கைக்கோர் ஈச்சிறகன்னதோர் தோலறினும் வேண்டுமே—இந்த உடம்பிலே ஈயின் சிறிதளவு தோலறினும் வேண்டுமல்லவோ; காக்கை கடிவதோர் கோல்—காக்கை கொத்தாதபடி ஒட்டுதற்கொரு கோல் என்றவாறு.

மாக்கேழ்—அழகிய நிறம். [1]புக்கில்—தனக்கென வமையாதவில்.

ஒப்புமைப் பகுதி:—

"ஒழுகிய நடையு நீரு முதலகை யிகப்ப ஆறு
மழுகலிவ் வள்ளல் யாக்கை யகம்புற மாயிற் றாயிற்
கழுகொடு கவருங் காக்கை கடிதடி கொண்டு காத்து
மழகுள சுழல் மன்னோ வாயிரச் சாதி மாதோ"

—சூளா. துறவு. 11.

"உயிர் புகும் புக்கில்"

—மணி. சிறை. 76.

குறிப்பு:—

மாக்கேழ்—மாமைநிறம்; மாந்தளிர் போன்ற நல்லநிறம் எனலுமாம். கெழு, கேழென்றாயிற்று. கெழு—நிறம். 'குருவுங் கெழுவு நிறனா கும்மே' என்பது தொல்காப்பியம். (சொல். சூ. 303.) கேழ்—1. ஒளி. 'நயங்கேழ் பெருவள நல்கு நல்லூர' (தஞ்சைவா. 392) 2. நிறம். 'ஒண்கேழ் நூற்றித ழலரின்' (புறநா. 27)

சான்றவர்—பெரியோர். ஈண்டு இகழ்ச்சிக் குறிப்பில்

---

[1]புக்கில்—(உயிர்) புகுந்த வீடு. உடம்பைக் குறித்தது.

வந்தது.

'நொய்ய தோர் புக்கில்':—

"புக்கில் அமைந்தின்று கொல்லோ உடம்பினுள்
துச்சில் இருந்த உயிர்க்கு"

என்ற திருக்குறளின் கருத்தும் காண்க.

(க)

42. தோற்போர்வை மேலுந் துளைபலவாய்ப் பொய்ம்மறைக்கு
மீப்போர்வை மாட்சித் துடம்பானால்-[1] மீப்போர்வை
பொய்ம்மறையாக் காமம் புகலாது மற்றதனைப்
பைம்மறியாப் பார்க்கப் படும்.

தருமர்:— என்பது, தோற்போர்வை மேலுந் துளை பல வாய்ப் பொய்ம்மறைக்கும்-தோலாகிய போர்வை மேலுந் துளைகள் பலவாகி உள்ளினுள்ள பொல்லாங்குகளை மறைக்கப்பட்ட; மீப் போர்வை மாட்சித் துடம்பானால்—மேல்[போர்த்த] போர்வையி னாலே தானல்லவையெனத் தோன்றியிருக்கும் உடம்பு ஆதலால்; மீப்போர்வை பொய்ம்மறையாக் காமம் புகலாது— உள்ளுள்ள பொல்லாங்குகளை மறைப்பதாகிய மேற்போர்வை யினாலே காமநுகர்ச்சியை விரும்பாமல்; மற்றதனைப் பைம்மறி யாப் பார்க்கப்படும்-மற்றிந்த வுடம்பைப் [பைமறியாக] நோக்கி யதன்மேல் விருப்பமற்றுத் தவமுயற்சிக்குத் துணிதலுண்டாகப் படுமென்றவாறு.

பையைத் திருப்பிப்போட்டுப் பார்த்தாற்போல உடம்பின் தோலை மறித்துப் பார்க்கில், உள்ளிற் பொல்லாங்கு தோன்றும். இத்தன்மையவாய் இழிவாகிய உடம்பின்மேல் விருப்பத்தை யொழித்து, தன்னுடைய நல்ல அறிவினால் தனக்குறுதியான வற்றைச் செய்துகொள்ள வேண்டுமென்பது கருத்து.

பாடம்:—[1]'தோற்போர்வை'.

இத்தன்மையவாகிய யாக்கையையுடைய மகளிரிடத் தின்பம், நொய்தில் தவிருவதாய சிறியவின்ப மென்பதறிந்து தவத்தின் முயன்று செய்வனாகில், மாறாத பெரியவின்பத்தைச் சேருவனென்று அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—தோலாகிய போர்வைமேலுந் துளைபல[வுள] வாய், உள்ளுள்ள பொல்லாங்குகளை மறைக்குமீப்போர்வையான் உள்ள மாட்சித்திவ்வுடம் பாதலான்; மேற்போர்த்த அப்பொய்ம்மறைப்பானே காமநுகர்ச்சியை விரும்பாது, அவ்வுடம் பினைப் பைம்மறியாக நோக்கத் தருமென்றவாறு.

மேலும்—உள்ளேயன்றிமேலும். மீப்போர்வை—தோலின் மேனிறத்துத் தோன்றும் மேற்போர்வை. காமம் புகலாது—காமநுகர்ச்சியை விரும்பாது.

விளக்க உரை:—தோற்பார்வை மேலும் துளை பல வாய்—தோலாகிய போர்வைமேலும் துளைபல வுளவாய்; பொய்ம் மறைக்கு மீப்போர்வை மாட்சித்துடம்பானால்—உள்ளுள்ள பொல்லாங்குகளை மறைக்கு மேற்போர்த்த போர்வையாலே நன்மையா யிருக்குமோ இவ்வுடம்பு; மீப்போர்வை பொய்ம் மறையாக் காமம் புகலாது—உள்ளுள்ள பொல்லாங்குகளை மறைக்கு மேற்போர்த்த போர்வையாலே காமநுகர்ச்சியை விரும்பாதே; மற்றதனைப் பைம்மறியாப் பார்க்கப்படும்—மற்றிந்த வுடம்மைப் பையினது மறியாக நோக்கத் துறவுக்கு முயலத்தக்க துணிவுண்டா மென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

'காமம் புகலாது' :—

''காமஞ் செப்பாது கண்டது மொழிமோ''

—குறுந். 2.

''காமஞ் செப்பிக் கண்ணினா விரப்பார்''

—சீவக. 2549.

'பைம்மறியாப் பார்க்கப்படும்' :—

''மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்கோ யிதனைப் புறமறிப் பாராய்''

—மணி. பளிக். 120—121.

''பைம்மறியா நோக்கப் பருந்தார்க்குந் தகைமைத்து''

—இறை. சூ. 1. உரை.

"உடலை உட்புறம் நோக்கி அசுசித்துவம் பாவிப்பதல்லது"

—திருநூற்று. 68. உரை.

"உயிர்.........பைம்மறியாப் பார்ப்பாருக்கு
நரம்பு, நாடி முதலியவை யாகாது அவற்றின்
வேறுமாயினாற் போல''

—சிவஞான. போதமா. சூ. 12. அதிகரணம். 4.

"பைம்மறிப் படுப்பி னுள்ளறி யாமற் பணிநறுந் துகில்புனை மடவார்

மெய்ம்மிசைக் கருந்தோல் கண்டுவந் துழலும் வினையினேன்''

—சோணசைல, 67.

குறிப்பு:—

துளைபல—கண், செவி, மூக்கு, வாய் முதலிய நவத்துவாரங்கள். மற்றும் ''மயிர்த்துவாரங்களும், இடையிடையே யுண்டாகுஞ் சிரங்குத் துளைகளும், மேக முதலியவற்றா லுண்டாகும் புண்ணின் துளைகளுமாம்'' என்பர் சிலர்.

காமம் புகலாது—காமம் புனைந்துரையாது.

(உ)

43. தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடிப்
பொய்க்கோலஞ் செய்ய வொழியுமோ?—எக்காலும்
[1]உண்டி வினையு ளுறைக்கு மெனப்பெரியோர்
கண்டுகை விட்ட மயல்.

தருமர்:- தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடி—†தக்கோலப் புட்டிலையுந் தின்று, தலைநிறைய மிக்க நாற்றமுடைய மலர்களையு முடித்து; பொய்க்கோலஞ் செய்ய வொழியுமோ?— இவ்வகைத்தாகிய பொய்க்கோலங்களைச் செய்தாலும், உடலினுள்ளேயுள்ள பொல்லாங்குகள் போமோ?; எக்காலும் உண்டி வினையுள் உறைக்குமென—எப்பொழுதும் உண்ணுமுணவினால் வரும் வினையை யுள்நின்று இயங்கப்பட்ட, வாயுக்கொண்டு புறப்படுந்தேறும் துர்க்கந்தமாமென்று; பெரியோர் கண்டுகை விட்ட மயல்—அறிவுடைய பெரியோராயினாரிதன் பொல்லாங்குகளைக்கண்டு (கை)விட்ட உடம்பென்றவாறு.

இத்தன்மையவாகிய உடம்பைப் பொய்க்கோலஞ் செய்ததனால் ஆவதில்லையென்று, அதனை விரும்பாது நீக்கித் தமக்குறுதியாகிய தவத்தின் முயலும் படிக்கு அறிவுறுத்தியவாறு. தக்கோலம், [1]பஞ்சவாசத்திற் கூட்டியது.

பதுமனார்:- தக்கோலத்தைத் தின்று தலைநிறையப் பூவினைச்சூடி. இவ்வகையாற் பொய்யாகிய கோலங்களைச் செய்யவே குற்றங்களும் நீங்குமோ? எப்பொழுதும் உணவினால் வரும் விளைவினைப் புறப்படப் பொழியா நிற்குமென்று, பெரியோராயினார் ஆராய்ந்து கைவிட்ட உடம்பாகிய [1]துராலினை யென்றவாறு.

உண்டி வினையுள் உறைக்குமென—உண்ணும் உணவினால் வரும் விளைவினைப் புறப்படப் பொழியுமென. மயல்—மயக்கம்,

---

பா-ம்:—[1]'உண்டி வினையு'

†தக்கோலப் புட்டில்—தக்கோலத்தின் காய்.

'அம்பொதிப் புட்டில்' திருமுரு. 191.

[1]பஞ்சவாசமாவன:—இலவங்கம், ஏலம், கர்ப்பூரம், சாதிக்காய், தக்கோலம் என்ற ஐவகை வாசனைத்திரவியங்கள். (சிலப், 5—26 உரை) தக்கோலம்-- வால்மிளகு.

[1]துரால்—செத்தை, மயல், துரால், செத்தை என்பன, ஒரு பொருட் சொற்கள்.

துராலென்றுமாம்.

விளக்க உரை:- தக்கோலந் தின்று தலைநிறையப் பூச் சூடி—தக்கோலப் புட்டிலையுந் தின்று, தலைநிறையப் பூச்சூடி; பொய்க்கோலஞ் செய்யவொழியுமோ—[பொய்யாகிய கோலங் களைச் செய்யவே] உள்ளுள்ள பொல்லாங்குகள் போமோ; எக்காலும் உண்டி வினையுள் உறைக்குமென—எப்பொழுது முணவினால் வரும் வினைவினை யுள்ளியங்கும் வாயுக்கொண்டு வந்து, புறப்படுந்தோறும் துர்க்கந் திக்குமென்று; பெரியோர் கண்டுகை விட்டமயல்—பெரியோராயினா ரிதன் பொல்லாங்கைக் கண்டு கைவிடப்பட்ட, உடம்பாகிய துராலினை [என்றவாறு].

[இத்தகைய உடம்பாகிய துராலினைப்] பொய்க்கோலஞ் செய்ய வொழியுமோ வென்றவாறு.

மேற்கோள் பகுதி:-

யா. வி:—யகர வொற்றிடைவந்த ஆசிடை யெதுகைக்கு இச்செய்யுள் மேற்கோளாக வந்துள்ளது.

—சூ. 37.

மயிலை:—பெயர்ச்சொ லொன்றேநின்று ஒழிந்த தன்னினங் களைத் தழுவியவதற்கு, **'தக்கோலந் தின்று தலைநிறையப் பூச்சூடி'** என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன். சூ. 357.

நச்:—"வம்புண் கோதையர் மாற்று மயலரோ" என்ற அடிக்கு, "வண்டுகள் புதுமையையுண்ட பழமாலையைச் சூடுதலிற் சேடியராயிற்று; **'கண்டு கைவிட்டமயல்'** என்றார் பிறரும்" என்பர்.

—சீவக. 128.

ஒப்புமைப் பகுதி:-

"மெய்ப்படு சாந்தும் பூவு மிகநனி கமழு மேனுங்
கைப்படு சாந்தும் பூவுங் கொண்டலாற் கலக்க லாகா

ஐப்படு பித்து நெய்த்தோ ரசும்புசோ ரழுகற் புன்றோல்
பொய்ப்பட வுரைத்த துண்டோ பொன்னனீர் நம்மு ணாமால்''
—சீவக. 2938.

''முருகு புத்தப் புதுமலர்ப்பொற் புறமுடிக்கிற் கமழுமே
கருகு கற்றைக் குழலொழிக்கிற் பழைய சிக்குக் கமழுமே''
—மோகவதைப்பரணி.

'எக்காலும் உண்டிவினையு ளுறைக்கும்':—
''சோற்றா லெடுத்த சுவர்''

—பழமொழி.

(௩)

44. **தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று**
கண்ணில்புன் மாக்கள் கவற்ற [1]விடுவனோ?
உண்ணீர் களைந்தக்கா னுங்குசூன் றிட்டன்ன
கண்ணீர்மை கண்டொழுகு வேன்.

தருமர்:- தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று— தெளிந்த நீரினுள்ள குவளைப்பூப் போலும், [பொருகின்ற கயல் போலும், வேல்போலும்] இம்மாதர் கண்ணென்று உவமையாகப் புகழ்ந்து (கூறி); கண்ணில் புன்மாக்கள் கவற்ற விடுவனோ?— அறிவில்லாத புல்லிய மனிதர் என்மனத்தைக் கவலைப்படுத்துவதற்குடன்பட்டுத் துறவைவிட்டு நீங்குவேனோ?; உள்நீர் களைந்தக்கால்—உள்ளினீர்மையைக் களைந்தவிடத்து; நுங்கு சூன்றிட்டன்ன—பனைநுங்கைக் கழற்றிப் போட்டாற் போன்றிருக்கிற; கண்ணீர்மை கண்டொழுகுவேன்—அந்தக்கண்ணினது செய்கையைக் கண்டு தவத்தின்கண்ணே ஒழுகக் கடவேனென்றவாறு.

காமநுகர்ச்சியை விரும்பி பேரின்பத்துக் கியன்ற நன்னெறிக்கணொழுகாத புல்லறிவினார்க்கு, நன்னெறியி னொழுகுவ

பா-ம்:—[1]'விடுவெனோ'.

தாக உறுதி கூறியது.

பதுமனார்:- தெண்ணீரின்கணுள்ள குவளைப்பூப் போலும், பொராநின்ற கயல்போலும்; வேல்போலுமென்று சொல்லி அறிவில்லாத புன்மாக்கள் எனது மனத்தைக் கவலைப் படுத்துவதற் குடன்பட்டுத் துறவைவிட்டு நீங்குவனோ? உள்ளினீரை வாங்கினாற் பனைநுங்கினைத் தோண்டினாற் போலுங் கண்ணீர்மையைக் கண்டு செல்கின்ற யானென்றவாறு.

விளக்க உரை:- தெண்ணீர்க் குவளை பொருகயல் வேலென்று—தெளிந்த நீரின்கணுள்ள குவளை போலும், பொரப் பட்ட கயல்போலும், வேல் போலுமென்று; கண்ணில் புன் மாக்கள் கவற்ற விடுவனோ?—அறிவில்லாத புல்லிய மனிதர் என் மனத்தைக் கவலைப்படுத்துவற் குடன்பட்டுத் துறவை விட்டு நீங்குவனோ? உள்நீர் களைந்தக்கால்—உள்ளினீர் மையைக் களைந்தக்கால்; நுங்கு சூன்றிட்டன்ன—பனைநுங் கினைக் கழற்றிப் போட்டாற்போ லிருக்கிற; கண்ணீர்மை கண் டொழுகுவேன்—கண்ணீர்மையைக் கண்டு துறவிலே யொழுகு கின்ற யான் இந்தத் துறவைவிட்டு, இனி இந்த விடயங்களிலே புகுந்து மயங்குவனோ வென்றவாறு.

குறிப்பு:-

கண்களுக்கு நிறத்தினாலும், மெய்ம்மையினாலும், அழகினா லும் குவளையும்; வடிவினாலும், பிறழ்ச்சியினாலும் கயலும்; கூர் மையினாலும், ஆடவரை வருத்துந் திறத்தாலும் வேலும் உவமை களாகக் கூறப்பட்டன. கண்–அறிவு. ''குன்றனா லுரைப்பக் கேட்டே பாகத்தார் குடும்ப நீக்கி, இன்று கண் விடுக்கப்பட்ட தேம்'' (சீவக. 1437) என்ற விடத்தும் இப்பொருள் பயிலுதல் காண்க. மாக்கள்—மனவுணர்ச்சியில்லாமல் ஐம்பொறியறிவு மட்டுமேயுடைய விலங்குபோன்ற ஒரு சார் மானிடர். ''மாவு மாக்களும் ஐயறி வினவே''; ''மக்கள் தாமே ஆறறி வுயிரே'' (தொல். மரபு. சூ. 32, 33) என்ற சூத்திரங்

களாலும், அதன் உரைகளாலும் அறிந்துகொள்க.

(சு)

45. முல்லை முகைமுறுவன் முத்தென் றிவைபிதற்றுங்
கல்லாப்புன் மாக்கள் கவற்ற [1]விடுவனோ?
எல்லாருங் காணப் புறங்காட் டுதிர்ந்துக்க
பல்லென்பு கண்டொழுகு வேன்.

தருமர்:—என்பது. முல்லை முகைமுறுவல் முத்தென்றிவை பிதற்றும்—முறுவலானது முல்லையின் அரும்பென்றும் முத்தென்றும் பல்வகையாகப் புகழ்ந்து சொல்(லும்); கல்லாப் புன் மாக்கள் கவற்ற விடுவனோ?-கல்வியில்லாத புல்லிய வறிவின ராய மனிதர் என் மனத்தைக் கவலைப்படுத்துவதற் குடன்பட்டுத் துறவை விடுவேனோ?; எல்லாருங் காணப் புறங்காடு உதிர்ந் துக்க—பலருங் காணச் சுடுகாட்டுமேல் உதிர்ந்து சிதறிக் கிடக் கின்ற; பல்லென்பு கண்டொழுகுவேன்-பல்லாகிய வெலும்பினைக் கண்டு நன்னெறிக்கண்ணே ஒழுகக்கடவே னென்றவாறு.

பல்லின் செய்கை இத்தன்மை யென்பதறியாது அதனைப் புகழ்ந்து கூறி, காமநுகர்ச்சியால் மயங்குதல் அறிவின்மையாம். அத்தன்மையார்க்கு மகளிரதிழிவைத் தெரிவித்துத் தவத்தின் முயலுதற்கு அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—முல்லைமொட்டே போன்றது முறுவலென்றும் முத்தென்றும் கல்லாத புல்லிய மாக்கள் என்மனத்தைக் கவலைப் படுத்த, அதற்குடன்பட்டுத் துறவைவிட்டு நீங்குவனோ? யாவருங் காணச் சுடுகாட்டுக்குள் உதிர்ந்து கிடக்கின்ற பல்லாகிய வெலும்பினைக் கண்டு செல்கின்ற யானென்றவாறு.

பா-ம்:—[1]'விடுவெனோ'.

விளக்க உரை:— முல்லைமுகை முறுவல் முத்தென்றிவை பிதற்றும்-முல்லைமுகை முறுவலென்றும், முத்தென்று மிப்படிப் பிதற்றும்; கல்லாப் புன்மாக்கள் கவற்ற விடுவனோ?-கல்லாத புல்லிய மனத்தார் என்மனத்தைக் கவலைப்படுத்த துறவை விடுவேனோ?; எல்லாருங் காணப் புறங்காடு உதிர்ந்து உக்க-பலருங் காணும்படி சுடுகாட்டி லுதிர்ந்திருக்கும்; பல்லென்பு கண்டொழுகுவேன்-பல்லாகிய எலும்பினைக் கண்டு துறவிலே ஒழுகின்ற யான் இதற்கு உடன்படுவேனோ என்றவாறு.

மேற்கோள் பகுதி:—

வயிலை:—அன்விகுதி தன்மைக் கண் வருதற்கு, "கல்லாப் புன் மாக்கள் கவற்ற விடுவனோ" என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன். சூ, 330.

ஒப்புமைப் பகுதி:—

"பல்லையென்று மென்பெனாது பவளமுட் பொதிந்தகூர்
முல்லையென்ப முறுவலென்ப முத்தமென்ப பித்தரே"
—மோகவதைப்பரணி.

குறிப்பு:—

பற்களுக்கு; வெண்ணிறத்தாலும், உருவினாலும், அழகினாலும் முல்லையரும்பும், முத்தும் உவமைகளாக கூறப்பட்டன.

(ரு)

46. **குடருங் [1]கொழுவுங் குருதியு மென்பும்**
தொடரும் நரம்பொடு தோலும்—இடையிடையே

பா-ம்:— [1]'கொழுப்பும்'

வைத்த [1]தடியும் வழும்புமா மற்றிவற்றுள்
எத்திறத்தா ளீர்ங்கோதை யாள்.

தருமர்:—என்பது. குடரும் கொழுவும் குருதியும் என்பும்—குடரும், மூளையும், இரத்தமும், எலும்பும்; தொடரும் நரம் பொடு தோலும்—படர்ந்த நரம்பும், தோலும்; இடையிடையே வைத்ததடியும் வழும்புமாம்—நடுவே நடுவே வைத்துப் பொருந்திய தசையும் †வழும்புமா யிருக்கின்ற இவ்வுடம்பு; மற்றிவற்றுள் எத்திறத்தாள் ஈர்ங்கோதை யாள்—நாமெண்ணி வந்தவற்றுளே எந்த உறுப்பு, இத்தொழிலிலல்லது திறப்படப்(பெற்ற) உடம்பினையுள்ள[வள்] ஈரபாகத்தினாற் சிறந்தமாலையினை யுடையவளென்றவாறு.

இத்தன்மையவாயபொல்லா (வியல்) பினைய மகளிருடைய (அவயவ)த்துள்ளாய் மயங்கி, நன்னெறிக்கண் செல்லாத புல்லிய வறிவினையுடையார்க்கு அவ்வுடம்பின் இயற்கை, இதுவெனக் கூறி அறிவுறுத்தியது.

பதுமனார்:—குடரும், மூளையும், குருதியும், என்பும், படர்ந்த நரம்புடனே தோலும், இடையிடையே வைத்ததசையும் வழும்புமாகிய இவையே இவள்மாட்டு நாம் காண்கின்ற(து). இவற்றுள் எப்பக்கத்தாள் (நீ) ஈர்ங்கோதையாளென்று சொல்லப் படுகின்றவ ளென்றவாறு.

விளக்க உரை:—குடருங் கொழுவுங் குருதியு மென்பும்—குடரும், மூளையும், இரத்தமும், எலும்பும்; தொடரும் நரம் பொடு தோலும்—பரந்த நரம்பொடு தோலும்; இடையிடையே வைத்த தடியும்—நடுவேநடுவே வைத்த தசையும்; வழும்புமாம்—வழும்புமாயிருக்கும்; மற்றிவற்றுள் எத்திறத்தா ளீர்ங்கோதை யாள்—மற்றுநாம் எண்ணிவந்த இவற்றுக்குள் எப்பக்கத்தாள்

---

[1]'தடியுமுடம்புமாமற்'.

†வழும்பு—நிணம், கொழுப்பு.

ஈரபாகத்தினாற் சிறந்த மாலையினையுடையாளென்று நீர் கொண்டாடத்தக்கவள்; நாமெண்ணின உறுப்புகளு ளின்னா ளென்று நமக்கறியச் சொல்லென்றவாறு.

மேற்கோள் பகுதி:—

வீர:—இழிப்புச் சுவைக்கு இச்செய்யுள் மேற்கோள்.

—*வீர.* அலங்கார. சூ. 28.

வைரா:—"என்னை கண்டுநீ மாதரார் வடிவமீ திச்சைவைத் துழல்கின்றாய், பொன்னை யுந்துகி லையும்பிரித் திடின்வெறும் புழுமலக் கூடல்லால், பின்னையுண்டு கொல்" என்பதற்கு இச் செய்யுள் மேற்கோள்.

—வைராக்கிய. 42.

ஒப்புமைப் பகுதி:—

"அழுக்குடம்புச் சீழ்நீரான் யாத்தசீர் மெல்லியலை[1] யாண
முழுக்காட்டி மன்றின்முன் கைத்தாக்—குழீஇக்கூடல்
என்னே? செறிகாமம் பூட்டு மியல்மாரன்
மன்னரசான் மாண்பூப் புலகு."

—இன். 24

"என்பினை நரம்பிற் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறந் தோலைப் போர்த்து மயிர்புறம் பொலிய வேய்ந்
ஒன்பது வாயி லாக்கி யூன் பயில் குரம்பை செய்தான் [திட்டு
மன்பெருந் தச்ச னல்லன் மயங்கினார் மருள வென்றான்".

—சீவக. 1577.

"என்பினை நரம்பினிற் பின்னி யுதிரந்தோய்த் திறைச்சி மெத்திப்
புன்புறத் தோலின் மூடி.......................................
ஒன்பது வாயிற் றாய வூன்பயில் குரம்பை".

—மேரு. வைசயந்த. 116.

---

[1] யாணம்—வாசனை.

"இடையுறு மென்பினை நரம்பி னார்த்திடாப்
புடையுறு மிறைச்சியாற் பொதிந்து போக்கற
மிடைதரு தோலினான் வேயப் பட்டதோர்
உடலினை யானென வுரைக்க லொண்ணுமோ."

—பாகவதம். 5:2.

"குடர்வழும்பு தொடர்நரம்பு குருதியென்பு குழுவுமங்
கடல்வழங்கு மமிர்தமிந்த மகளிரென்ப கவிகளே."

—மோகவதைப்பரணி.

"நாடியோ வென்போ நரம்போசீக் கோழையோ
தேடியெனை யறிவேன்"

—சிவஞானபோத வார்த்திகம். சூ. 9. அதி. 1.

குறிப்பு:-

பெண்ணாசைமிக்கு உடலின்பம்நாடி அறங்கைவிட்ட ஒருவனைநோக்கி, உடலின் தூயதல்லாமையைக் கூறியதாம். (கூ)

47. ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப்புலனுங்
கோதிக் குழம்பலைக்குங் கும்பத்தைப்—பேதை
பெருந்தோளி பெய்வளா யென்னுமீப் [1]போர்த்த
கருந்தோலாற் கண்விளக்கப் பட்டு.

தருமர்:— என்பது. ஊறி யுவர்த்தக்க வொன்பது வாய்ப் புலனும்—மலங்கள் பொதிந்து வெறுக்கத்தக்க வொன்பது வாசலினிடந்தோறும்; கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தை—உள்ளியங்குகின்ற காற்றாலே சிதறப்பட்டு மலக்குழம்புகள் வந்தலைப்பதாகிய ஒரு குடத்தினை; பேதை பெருந்தோளி பெய்வளாய் என்னும்—பேதைமையாகிய அறிவில்லாதவன் பெரிய தோளினை

பா-ம்:— [1]'போர்த்து'

யும், அழகுபெற வமைத்த வளைகளையு முடையாயென்று புகழ்ந்து கூறுவன்; மீப்போர்த்த கருந்தோலால் கண்விளக்கப் பட்டு—மேலே போர்த்திருக்கிற கரிய தோலின் செய்கைகளைக் கண்ணுற்று அதனால் மருண்டென்றவாறு.

எனவே உடம்பினுடைய பொல்லாங்கு விசாரியாமல் மேற் செயல்களை அறிவதனால், அவனுக்குக் காமநுகர்ச்சியின் விருப்ப மற்றதல்ல. அதனால் அதனிழிபும், அவன் மடமையும் முணர்த்தி யாவரும் நன்னெறிக்கட்பட்டு உய்யும்வகை வற்புறுத்தியவாறு.

பதுமனார்:— மலங்கள் பொசிந்து வெறுக்கத்தக்க ஒன்பது வாயிலிடந்தோறும், உண்ணிகழ்கின்ற காற்றினாற் சிதறப்படு மலக்குழம்புகள் வந்தலைக்கின்ற, உடம்பாகிய குடத்தைப் பேதையாகிய காமுகன் பெரிய தோளினை யுடையாய், பெய்யப் பட்ட வளையினையுடையாய் என்றாற்றா நிற்கும்; அதன்மேன் மூடிய கருந்தோலாற் கண்விளக்கப் படுதல்னென்றவாறு.

ஊறி—மலங்கள் பொசிந்து. புலனும்—இடத்தும். கோதி —காற்றினால் மயக்கப்பட்டு. பேதை—பேதையானவன். கண் விளக்கப்பட்டு—தோன்றியுந் தோன்றாமையும்.

விளக்க உரை:— ஊறி உவர்த்தக்க ஒன்பதுவாய்ப் புலனும்—மலங்கள் பொதிந்த ஒன்பது வாசலிடந்தோறும், கோதிக் குழம்பலைக்கும் கும்பத்தை—உள்ளியங்குகின்ற காற் றாலே மலக்குழம்புகள் வந்தலைப்பதோர் குடத்தை; பேதை பெருந்தோளி பெய்வளா யென்னும்—அறியாதவன் பெரிய தோளினை யுடையாளென்றும், இடப்பட்ட வளையினையுடை யாளென்றும் சொல்லும்; மீப் போர்த்த கருந்தோலாற் கண் விளக்கப் பட்டு—மேலே போர்த்த கரியதோலாற் கண் விளக்கப் பட்டு என்றவாறு.

ஊறி—மலங்கள் பொதிந்து. புலனும்—இடத்தும். கோதி —காற்றினால் மயக்கப்பட்டு, கண்விளக்கப்பட்டு—தோன்றியுந் தோன்றாமையும்.

மேற்கோள் பகுதி:-

"உடலை உட்புறம்பாக நோக்கி அசுசித்துவம் பாவிப்ப தல்லது கருந்தோலாற் கண்விளக்கப் படார்"

—திருநூற்று.68.உரை.

குறிப்பு:—

"மீப்போர்த்த கருந்தோலாற் கண்விளக்கப்பட்டு" என்றது மேற்போர்த்துள்ள தோலினழகையே நோக்கி மயங்கி என்றபடி. வெளித்தோற்றம் கண்டு மயங்குவார் பேதையாயினார்; அறிவுடையோர் உடலினிழிவை அறிந்த துறப்பரென்பதாம்.

உடலின் பல உறுப்புகளுள்ளும் தோளைக் குறித்தது; அத்தோளின்மேல் கிடந்துறங்கு மின்பத்தையே பெரிதாக கருதும் பேதையார்க்கு அறிவுறுத்தும் பொருட்டாம், "தாம்வீழ்வார் மென்றோட் டுயிலி னினிதுகொல், தாமரைக் கண்ணா னுலகு" என்றார் வள்ளுவரும்.

பெருந்தோள் என்றது மகளிர் தோள் பருத்திருத்தல் நல்லிலக்கணம் என்பதாதலின். "தோள் கண்ணென மூவழிப் பெருகி" என்ற கலித்தொகையும் காண்க.

(எ)

48. பண்ட மறியார் படுசாந்துங் கோதையுங்
[1]கொண்டுபா ராட்டுவார் கண்டிலர்கொல்—மண்டிப்
பெடைச்சேவல் வன்கழுகு [2]பெயர்த்திட்டுக் [3]குத்து
முடைச்சாகா டச்சிற் றுழி.

தருமர்:- என்பது. பண்ட மறியார்—உடம்பாகிய

பா-ம்)—[1]'கண்டுபா ராட்டுவார்'.
[2]'பேர்த்திட்டு'.
[3]'குத்தன்', 'கொத்தல்'.

பண்டத்தின் உண்மையறியாராய்; படுசாந்தும் கோதையும் கொண்டு பாராட்டுவார் கண்டிலர்கொல்—மேலே பூசப்பட்ட கலவையும், இட்ட மாலையினையுங்கொண்டு பாராட்டுவார் கண்டாரில்லையோ; மண்டிப் பெடைசேவல் வன்கழுகு பெயர்த்திட்டுக் குத்தும்—சென்றுமண்டிப் பேடையும் சேவலுமுடன் (வலிமையுடைத்) தாகிய கழுகெனப் பெயர்ந்து நின்று குத்தப் படும்; முடைச்சாக்காடு அச்சு இற்றுழி—முடைநாறு முடம்பாகிய சகடக்கால் அச்சானது முறிந்துபோன காலத்தென்றவாறு.

யாக்கையானதி னின்றுஞ் சீவன் விலகிய காலத்திலது கழுகு முதலானவற்றுக் கிரையேயன்றி, மற்றொன்றுக்கு மாவதல்ல வென்பதனைக் (கருதாத) தனை, நிலைமையாக வெண்ணிப் பின்னுக்குதவு(வ)தான தவத்தொழிலை மறந்திருக்குமவர், எவ்வாறுய்ய கடவாரென்றதன் நிலைமையி னிழிவுகூறி அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:- உடம்பாகிய பண்டத்தின் உண்மையறியாது பூசுஞ்சாந்தையும்,[இட்ட] பூமாலையையும் பற்றி அவ்வுடம்பினைப்[பார்த்துக்கொண்டு] புகழ்வார் கண்டிலர் கொல்லோ; பெடையொடுகூடிய சேவல(ாம்) வன்கழுகு மறித்துக்குத்தா நிற்கும். அவ்வூன் சகடம் அச்சுமுறிந்தகாலத்தி லென்றவாறு.

பண்டமறியார்—உடம்பாகிய பண்டப் பொல்லாங்கு [அறியாது]. முடைச்சாகாடு அச்சு இற்றுழி—பொல்லாத நாற்றத்தைச் சுமந்தெப்போதும் நிலையாமை இயல்பாகவுடைய உடம்பாகிய உருளைச்சகடம் அச்சுமுறிந்த விடத்து.

விளக்க உரை:— பண்டம் அறியார்—உடம்பாகிய பண்டத்தி னுண்மையை யறியாராய்; படுசாந்தும் கோதையுங் கொண்டு பாராட்டுவார் கண்டிலர்கொல்—மேற்பூசின சாந்தினையும், இட்டமாலையினையுங் கொண்டு பாராட்டுவார் கண்டாரில்லையோ; மண்டிப் பெடைச்சேவல் வன்கழுகு பேர்த்திட்டுக் குத்தும்—சென்றுமண்டிச் சேவலுடனே பேடையுமான

கழகுகள் மறித்திட்டுக்குத்தும்; முடைச்சாகாடு அச்சு இற்றுழி —முடைநாறுகிற உடம்பாகிய சகடை அச்சுமுறிந்த காலத்து [என்றவாறு].

கழுகுகள் மறித்துக் குத்துமதனை அறியவேண்டும் என்ற வாறு.

மேற்கோள் பகுதி:—

நச்:—மேற்கதுவாய் எதுகைக்கு, "**கொண்டுபாராட்டுவார் கண்டிலர்கொள் மண்டி.**" என்பதை எடுத்துக்காட்டுவர்.

—தொல்.செய்.சூ.93.

ஒப்புமைப் பகுதி:—

"புனைவன நீங்கிற் புலால்புறத் திடுவது
மூப்புவிளி வுடையது தீப்பிணி யிருக்கை
பற்றின் பற்றிடங் குற்றக் கொள்கலம்
புற்றடங் கரவிற் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையா றழுங்க
றவலா வுள்ளந் தன்பா லுடையது
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து".

—மணி.பளிக்.114—120.

"பிறத்தலு மூத்தலும் பிணிப்பட் டிரங்கலும்
இறத்தலு முடைய திடும்பைக் கொள்கல
மக்கள் யாக்கை யிதுவென வுணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்"

—மணி.உதய.136—139.

குறிப்பு:—

பெடை, சேவல் முறையே பறவைகளின் பெண் பெயரை யும் ஆண் பெயரையும் குறித்தது. முடைசாகாடு-தீ நாற்றத்தை யுடைய வண்டியாகிய உடம்பு. சாகாடு என்பது வண்டி.

இங்கு உடலைக் குறித்தது. அச்சு என்பது அச்சாணி. இங்கு அது உயிரைக் குறிக்க வந்தது. 'உணர்ச்சி அச்சாக வுசா வண்டியாக' (அறநெறி.169) என்றது போல.

அச்சில்லாமல் வண்டி செல்லாது. அதுபோல உயிரில்லாது உடல் இயங்காதாகலின், உடலை வண்டியென்றும், உயிரை அச்சென்றும் உருவகப்படுத்தினார். 'கொண்டு பாராட்டுவார்' என்பது பூசுவன, முடிப்பன முதலியவற்றால் உடலை அழகு படுத்துவ ரென்பதாம்.

(அ)

49. கழிந்தா ரிடுதலை கண்டார்நெஞ் சுட்கக்
குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—ஒழிந்தாரைப்
போற்றி நெறிநின்மி னிற்றிதன் பண்பென்று
சாற்றுங்கொல் சாலச் சிரித்து.

தருமர்:—என்பது. கழிந்தார் இடுதலை—செத்தாருடைய போகட்ட தலையானது; கண்டார் நெஞ்சு உட்க—கண்டவர்கள் நெஞ்சு அஞ்சும்படி; குழிந்து ஆழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—கண்களானது நீர்மைபோய்க் குழிபோன்று ஆழ்ந்துதோன்றி; ஒழிந்தாரைப் போற்றி நெறிநின்மின்—சாவை யொழித்திருக்கும் தவத்தோரைக் கண்டு போற்றி, அவர்தன்மையாகிய நல் வழியிலே ஒழுகா நில்லுங்கள்; இற்றிதன் பண்பென்று—நிற்பதே கரும மல்லது இவ்வுடம்பின தியல்பு இத்தன்மையவென்று; சாற்றுங் கொல் சாலச்சிரித்து—மிகவுஞ் சிரித்துச் சொல்லுவது போலு மென்றவாறு.

எனவே யாக்கையினதுநிலை இத்தன்மையென்பது அறியாம லதனை, நிலைமையாகக் கருதித் தமக்குறுதியானவற்றைச் செய்து கொள்ளாதிருக்கும் பேதைமையார்க்கு, இந்த யாக்கையின் நிலைமை இத்தன்மை யென்று அறிந்திலரோவென்று மற்றொரு தலைஎலும்பு சிரித்துக்கொண்டு சொன்ன (தென்பதாம்).

எலும்பு சிரித்துச் சொல்லுமோவெனில், அந்தத்தலையைக் கண்டார் பயப்படும்படி கிடந்துருளவுங் கண்டு, மற்றுந்தாம் யாக்கையொடு வாழக்கடவோ மென்றிருப்பார்க்கு, அதன் தன்மை அறிவிப்பார் அந்தத்தலை சொல்லியதாகக் கூறினார். இது குறிப்புத் தொழில். 'போற்றி நெறிநின்மின்' என்றது, வஞ்சம் வாராதபடி பாதுகாத்து நன்னெறியில் நிற்கவென்றது. வஞ்சமாவன:— கொலை, களவு, கள், காமம், பொய் முதலானவை. அவை இவ்வுடம்பிற்கு உறுதிசெய்யாமல் வஞ்சித்துக் கெடுக்குமாதலால், அதனை வஞ்சமென்று அறிவித்து அது புகாமல் பாதுகாத்துத் தமக்குறுதி பய(ப்பதாகிய, நன்) னெறியி னொழுகல் வேண்டுமென்பதாயிற்று.

'குழிந்தாழ்ந்த' என்றது மீமிசைச்சொல்.

பதுமனார்:- செத்தாருடைய போகட்ட தலைகளைக் கண்டவர்கள் மனங்கள் வெருவ, [அத்தலைகள்] குழிந்தாழ்ந்த கண்களையுடையவாய்த் தோன்றிச் சாவாதொழிந்திருந்தாரைப் பாதுகாத்து நெறியின் கண்ணே நின்றொழுகுமின், இப்பெற்றித் திவ்வுடம்பின் தன்மை,யென்று சிரித்து அறிவிக்கின்றன கொல்லோ வென்றவாறு.

'குழிந்தாழ்ந்த' என்பது மீமிசை யென்றாற்போல கொள்க. இடுதலை—போகட்டதலை. உட்க—வெருவ. இற்று—இத் தன்மைத்து. சாற்றுங்கொல்—அறிவியா நின்றதுபோலும்.

விளக்க உரை:- கழிந்தார் இடுதலை—செத்தாருடைய போகட்டதலை; கண்டார் நெஞ்சுஉட்க—கண்டவர்கள் நெஞ்சுட்கும்படி; குழிந்தாழ்ந்த கண்ணவாய்த் தோன்றி—குழிந்தாழ்ந்த கண்களையுடையவாய்த் தோன்றி; ஒழிந்தாரை—சாவாதொழிந்திருப்பாரை; போற்றி நெறிநின்மின்—[1]வஞ்சம் வாராதபடி பாதுகாத்துத் துறவாகிய நல்வழியிலே நில்லுங்கள் என்றும்; இற்றிதன் பண்பென்று—இத்தன்மையாயிருக்கு மிவ்வுடம்(பின் தன்மை)யென்றும்; சாற்றுங்கொல் சாலச் சிரித்து—மிகவும்

சிரித்தறிவிப்பது போலுமென்றவாறு.

[ஆதலா லிப்படி நிலையாத வுடம்பைநம்பிப் பாராட்டாமல், பிறப்பறுக்க, இம்மையிற் றவத்தைச் செய்யுமென்றறிவித்தது.]

'வஞ்சம் வாராமல்' என்பது களவு, கொலை, கள், காமம், பொய் [முதலியன வராமல்.] 'குழிந்தாழ்ந்த' என்றது மீமிசைச் சொல். இடுதலை—போகட்டதலை. உட்க—வெருவ. இற்று—இத்தன்மைத்து. சாற்றுங்கொல்—அறிவியா நின்றது போலும்.

மேற்கோள் பகுதி:-

மயிலை.
சங்கர. } :- 'ஒருபொருட் பன்மொழி சிறப்பினின் வழாஅ' என்னும் சூத்திரத்திற்கு "குழிந்தாழ்ந்த கண்ண வாய்த் தோன்றி" என்பதனை எடுத்துக்காட்டுவர்.

—நன்.சூ.397.

—நன்.சூ.398.

பேரா:- "மா—கருமை. மாமிடறென்பது. பண்புத் தொகையாய் இன்னதிதுவென்னுந் துணையாய் நிற்றலானும், 'மைத் தழையா நின்ற' என்பது அக்கருமையது மிகுதியை உணர்த்தி நிற்றலானும், கூறியது கூறலாகமையறிக அது 'தாமரைமீமிசை' எனவும், குழிந்தாழ்ந்த கண்ண' எனவும் இத்தன்மைய பிறவும் வருவனபோல" என்பர்.

—திருச்சிற். 102.

சிவஞானபோதமாபாடியம்:- "கண்டறிதல்; 'குழிந்தாழ்ந்த கண்' என்புழிப்போலச் சிறப்பின்கண் வந்தமீமிசை".

—சூ.6.அதிக. 2—4.

திருநூற்று:- "கழிதல்—சாதல்; கழிந்தா ரிடுதலை' என்றார் பிறரும்."

—திருநூற்று. 33—உரை.

(கூ)

50. உயிர்போயார் வெண்டலை யுட்கச் சிரித்துச்
செயிர்தீர்க்குஞ் செம்மாப் பவரைச் செயிர்தீர்ந்தார்
கண்டிற் றிதன்வண்ண மென்பதனாற் றம்மையோர்
பண்டத்து வைப்ப திலர்.

தருமர்:—என்பது. உயிர்போயார் வெள்தலை—செத்தாருடைய வெள்ளெலும்பாகக் கிடக்குந் தலையானது; உட்கச் சிரித்து—கண்டார் அஞ்சும்படி சிரித்தாற்போன்று பல்லைக் காட்டிக்கொண்டு கிடந்து; செயிர்தீர்க்கும் செம்மாப்பவரை—இந்தயாக்கையை நிலையெனக்கருதி மனைவாழ்க்கையின் கண்ணே வாழக்கடவோமென்று இறுமாந்திருக்கும் அவரை, யாக்கையினிலை தான் கிடக்குமாப்போல வல்லவோவென்று இப்படியாகிய நிலைமையைக் குறியாமல், விரைவில் உமக்கான உறுதியில் முயலுங்களென்றவர் அறிவின்மையாகிய குற்றத்தைத் தீர்க்கும்; செயிர்தீர்ந்தார்—குற்றந் தீர்ந்த பெரியோர்; கண்டு இற்று இதன்வண்ண மென்பதனால்—அந்தத் தலையினைக் கண்டு இந்தயாக்கையின் தன்மை இவ்வளவல்லோ வென்றெண்ணி அதனாலே; தம்மையோர் பண்டத்து வைப்பதிலர்—தம்மையொரு தொழிலின்கண் நிலையாக்காமல் யாக்கையினிலையைக் கருதி, மனைவாழ்தலைத் துறந்து தவத்துக்குரிமையாவ ரென்றவாறு.

ஒருவர் செத்து அவருடையதலை இதுவென்று [அறிந்து], அறிவுடையார் துறந்து தவமுயலக் கருதுவர். அறிவில்லாதார் அதனைக்கண்டும் தம்மை நிலையாகக்கருதி அவத்தொழிலிலே முயன்றிறுமாப்பா ராதலால், அவருக்கு அறிவுறுத்துவார் அவருடைய அறிவின்மையாகிய செயிரை, அந்தத் தலையானது தீர்க்குமெனக் குறிப்புந் தொழிலாற் கூறினார்.

பதுமனார்:—உயிர்போகப் பட்டாருடைய வெண்டலைகள் வெருவச் சிரித்துக் குற்றங்க ணீங்கும் மனைவாழ்வின்க ணின்று செம்மாப்பவரை, அவ்வகையன்றிக் குற்றந் தீர்ந்தாரறிந்து இத்தன்மைத் திவ்வுடம்பின் பெற்றியென்று சொல்லுதலால், அதனைக் கொண்டு தம்முடம்பினை ஒருபண்டத்தோடு வைத்தெண்ணார் அறிவுடையா ரென்றவாறு.

செயிர்—குற்றம். செம்மாத்தல்—இறுமாத்தல்.

விளக்க உரை:—உயிர்போயார் வெள்தலை—செத்தாருடைய [தசைகழிந்த] வெள்ளிய தலைகள்; உட்கச்சிரித்து—கண்டவர்கள் அஞ்சும்படி பல்லைக்காட்டிச் சிரிப்பதனை [போற்கிடந்து]; செயிர்தீர்க்குஞ் செம்மாப்பவரை—மனைவாழ்க்கையின் கண்ணே நின்று அதிலுள்ள குற்றங்களைநீக்கி யதனை நிலையாகக் கருதி இறுமாந்திருப்பவரை [அவர் அறிவின்மையாகிய குற்றத்தைத் தீர்க்கும்]; செயிர்தீர்ந்தார்-குற்றந் தீர்ந்த பெரியோர்கள்; கண்டு இற்று இதன்வண்ண மென்பதனால்—[அந்தத் தலையினைக்] கண்டு இத்தன்மைத் தித்தவுடம்பென்றறிந்து; தம்மையோர் பண்டதத்துள் வைப்பதிலர்—தம்மையொரு பண்டமாக வைத்தெண்ணா ரென்றவாறு.

[எண்ணாராய்த் துறந்து தவஞ்செய்வ ரென்பதாம்].

ஒப்புமைப் பகுதி:-

'வெண்டலை':—

''வெண்டலை பயின்ற காட்டுள்''

—சீவக. 303.

''கருந்தலைகள் வெண்டலைகளாய்க் கழியு முன்னே''

—சீவக. 2619.

'செம்மாப்பவர்':—

''வலையகத்துச் செம்மாப்பார் மாண்பு''

—நாலடி. 331.

''செம்மாந்து செல்லுஞ் செறுநர்''

—பழ. 131.

குறிப்பு:-

வெண்டலை—மேல்தோலழிந்து என்புமாத்திரமாய் நிற்குந்

தலை. செம்மாப்பவரை—மனைவாழ்க்கையின்கண் விருப்புற்று இறுமாந்திருப்பவரை. செம்மாப்பவர் என்பது ஒருசொல்; இறுமாப்பவர், அல்லாப்பவர், ஏமாப்பவர், சோகாப்பவர் என்பன போல.

(ய)

௬. துறவு.

தருமர்:—அஃதாவது துறப்பதற்குமுன் ஒழுகப்பட்ட உலக ஒழுக்கத்தின்மேலும், இந்த உடம்பிற்குத் தொடர்ச்சியான பொருள்கள்மேலும் பற்றற்று எல்லாந் துறந்து தவம்பண்ணுதல். தவமென்பது கொலை, களவு, கள், காமம் முதலானவற்றில் செல்லும் மனத்தைமீட்டுத் தமக்குறுதி பயப்பதினி லொருமைப் பட்டு, அதற்கு இடையூறு வரும்பொழுதும் யாக்கையைக் கருதாமல் தம்மொருமைப்பாட்டில் உறுதிப்பட்டிருப்பது.

பதுமனார்:—தாம் முன்பொழுகப்பட்ட உலகவொழுக்கத் தினோடு இவ்வுடம்பின்மேலும், இவ்வுடம்பிற்குத் தொடர்ச்சி யான பொருண்மேலும் வைத்தபற்று இளமையிற் றுன்பமும், [மறு]பிறப்பிற் கேதுவுமா மென்றோர்ந்து என்தெனப்பட்ட பொருள்களைப் பற்றற விடுதல்.

இது அதன்பின்னை வைத்ததென்னை; அங்ஙன மறியவல்ல வியற்கையை யுடையார்க்கதுவே துறவல்லது, துறக்க வேண்டுவ தில்லையெனின் மனைவாழ்க்கையின் நின்று இப்பெற்றியெல்லா மறிந்தாராயினும், [1]ஒக்கல்வாழ்க்கையை விட்டு நீங்கிநின்ற பினல்லது நிலையுண்டாகாதென்பது பயப்படவும், இன்றித்

[1] ஒக்கல் – சுற்றத்தார்.

ஒக்கல் வாழ்க்கை—சுற்றத்தோடு கூடி வாழும் இல்லற வாழ்க்கை.

தம்மாற் றுறக்கப்பட்டார் அல்லல் களையவே காலம் போது மித்தனையல்லது தவமுயலவு மியலாதென்பது கருத்து.

ஆக இவ்வாறதிகாரத்தினுஞ் சொன்ன பெற்றிகளால் இல்லறத்தின்கண்ணே நின்றுசெய்ய வேண்டுவ மென்றவாறு. இல்லறத்துக்குரியனவாகிய செய்கையெல்லாமிதன்கண் அடங் காதெனவு மடக்கிப் பொருளுரைக்க.

விளக்க உரை:—துறப்பதற்குமுன்னே யொழுகப் பட்ட உலக வொழுக்கத்தின் மேலும், இந்த உடம்பிற்குத் தொடர்ச் சியான பொருள்கள்மேலும் பற்றறுத்துத் துறந்து தவம் பண்ணுதல். தவமென்பது கொலை, களவு, கள், காமம், பொய் யென்கிற விவற்றில் மனம் செல்லாதபடி மீட்டு [உடம்பினைப் போற்றாமல் † ஒறுத்துத்] தான, தன்ம, தியான, செப, ஓம தர்ப்பண மென்கிற அனுட்டானங்களால் உடையவரை வழி படுதல்.

[†ஒறுத்தலாவது இவற்றுக்கோர் இடையூறுவரின் நிலை யாதவுடம்பைக் கைவிட்டிந்த வழிபாடுகளைத் தப்பாதிருத்தல்.]

குறிப்பு:--

துறவு:—

பரிமே:—அஃதாவது புறமாகிய செல்வத்தின்கண்ணும், அகமாகிய யாக்கையின்கண்ணும் உளதாம் பற்றினை, அவற்றது நிலையாமை நோக்கி விடுதல்.

மணம்:—துறவாவது, ஒருவன் தவம்பண்ணா நின்றகாலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும், அதனைப் பற்றறத்துறத்தல்.

பரிதி:—துறவாவது, நிலையாமை அறிந்தால் மூன்றுவகை ஆசையும் விட்டுத் துறவறத்திலே நிற்கவேணும் என்றவாறு.

—குறள். அதி. 35 துறவு.

51. [1]**விளக்குப் புகவிருண் மாய்ந்தாங் கொருவன்**
தவத்தின்முன் னில்லாதாம் பாவம்—விளக்குநெய்
தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு நல்வினை
தீர்விடத்து நிற்குமாந் தீது.

தருமர்:—விளக்குப் புகவிருள் மாய்ந்தாங்கு-விளக்கினுடைய ஒளியுண்டான விடத்திருள்கெட்டு நீங்கினாற்போல; ஒருவன் தவத்தின்முன் நில்லாதாம் பாவம்-ஒருவன் செய்யும் தவத்தின் முன்னே பாவம் நிற்கமாட்டாது; விளக்குநெய் தேய்விடத்துச் சென்றிருள் பாய்ந்தாங்கு-விளக்குநெய் அற்றவிந்த விடத்தில் நீங்கிநின்ற இருள்வந்து பாய்ந்தாற்போல, நல்வினை தீர் விடத்து நிற்குமாந் தீது-முன்செய்த நல்வினையானது நீங்கிய காலத்துத் தீவினை வந்தடரா நிற்கு மென்றவாறு.

விளக்குண்டான காலத்தும் இருளானது நீங்கி நிற்பதன்றி அதற்றுப் போனதல்லவே; அதுபோல நல்வினையுள்ள கால மளவுந் தீவினை நீங்கிநின்று அகற்றவிடத்து வந்தடரு (மாகலான்); தவம் முயன்று இடையூறு வந்துழிக் கலங்கி அதனையொழியாது, உறுதிப்பாட்டுடன் ஒரு நி(லைநின்) றொழுகல் வேண்டுமென்பதாயிற்று. முன்செய்த நல்வினையி னாலே தீவினைகெட்டதுபோல, (பின்)செய்த நல்வினையும் பின்னுக்குறுதி பயக்குமென்றுறுதி கூறினார்.

பதுமனார்:-விளக்குச்சென்று புக்கவிடத்து இருள் கெட்டாற் போல, ஒருவன் செய்யுந் தவத்தினெதிர் நிற்கமாட்டாதாம் பாவம். அவ்விளக்கி லிருக்கின்ற நெய் தேய்ந்தவிடத்து அதனையிருள் சென்றடைந்தாற்போலத் தவமாகிய நல்வினை நீங்கியவிடத்துச் சென்று தீவினை யடர்ந்து நிற்குமென்றவாறு.

விளக்க உரை:— விளக்குப் புகவிருள் மாய்ந்தாங்கு—

பா-ம்:— [1]'விளக்கின்'.

விளக்குச் சென்றவிடத்து இருள் 'கெட்டாற்போல; ஒருவன் தவத்தின்முன் நில்லாதாம் 'பாவம்-ஒருவன் செய்யுந் தவத்தின் முன்பு பாவம் நில்லாது; விளக்குநெய் தேய்விடத்துச் சென் றிருள் பாய்ந்தாங்கு-விளக்குநெய் தேய்விடத்து இருளடர்ந்தாற் போல; நல்வினை தீர்விடத்து நிற்குமாந் தீது—முன்செய்த நல்வினை நீங்கினகாலத்துத் தீவினை வந்தடர்ந்து நிற்குமென்ற வாறு.

மேற்கோள் பகுதி:-

பரிமே:—'அல்லவைதேய அறம்பெருகும் நல்லவை, நாடி இனியசொலின்' என்ற குறளிற்கு உரைகூறுமிடத்து "தேய்தல் தன்பகையாகிய அறம்வளர்தலில் தனக்கு நிலையின்றி மெலி தல், 'தவத்தின்முன் நில்லாதாம் பாவம்' என்பதூஉம் இப் பொருட்டு" என்பர்.

—குறள். 96.

ஒப்புமைப் பகுதி:-

"தொல்லை நல்வினை முற்படத் தோன்றிய
வல்லல் வெவ்வினை போல வகன்றதே"

—சீவக. 343.

"....... ....விளக்கினுட் பெய்த நெய்யுந்
திரியுஞ்சென் றற்றபோழ்தே திருச்சுடர் தேம்பினல்லால்
எரிமொய்த்துப் பெருகலுண்டோ விருவினைசென்று தேய்ந்தாற்
பரிவுற்றுக் கெடாமற் செல்வம்பற்றியா ரதனைவைப்பார்"

—சீவக. 2316.

"எல்லை யாரிரு ணல்வினை முன்னர்ப்
பாவம் போலப் பறைந்து கையகல"

—பெருங். 1.53. 156—7.

"போதமே லாகப்பண்டே புல்லிய மலநோய் தீர்ந்தும்".

காஞ்சி. நாட்டுப். 12.

''புண்ணிய நறுநெயிற் பொருவில் காலமாம்
திண்ணிய திரியினில் விதியென் தீயினில்
எண்ணிய விளக்கவை இரண்டு(ம்) எஞ்சினால்
அண்ணலே அவிவதற் கையம் யாவதோ.''

—கம். அயோ. திருவடி. 75.

நல்வினை................தீது:—

''ஏனை வினையுலப்ப வீறாகி வீழ்வர்''

—நாலடி. 2.

குறிப்பு:-

விளக்குமுன் இருள் கெடுதல்போலத் தவத்தின்முன் பாவம் கெடும் என்றும்; விளக்குநெய்யற்று அணைந்தகாலத்து இருள் மூடினாற்போலத் தவங்குறையப் பாவம்வந்துசேரும் என்றும் கூறினார். துறவினா லேற்படும் நன்மையும், அது இல்லையாயின் உளவாகும் தீமையும் உபமானமுகத்தால் இச்செய்யுளில் கூறப் பட்டன. அதிகாரம் நோக்கி நல்வினை இங்கு துறவைக் குறித்தது.

''நீஇ ராடல் நிலக்கிடை கோடல்
தோஒ லுடுத்தல் தொல்லெரி யோம்பல்
ஊஉ ரடையாமை யுறுசடை புனைதல்
காட்டி லுணவு கடவுட் பூசை
ஏற்ற தவத்தி னியல்பென மொழிய''

என்னும் பழம்பாடலால் தவத்தினியல்பு உணர்க.

தவம்:—

பரிமே:—அஃதாவது மனம், பொறிவழி போகாது நிற்றற் பொருட்டு விரதங்களான் உண்டி சுருக்கலும், கோடைக்கண் வெயில்நிலை நிற்றலும், மாரியினும் பனியினும் நீர்நிலை நிற்றலும் முதலிய செயல்களை மேற்கொண்டு அவற்றால் தம்உயிர்க்கு வரும் துன்பங்களைப் பொறுத்து, பிறஉயிர்களை ஓம்புதல்.

மணக்:—தவமானது, ஊணும் உறக்கமுங் குறைத்தலும்,

வெயிலும் பனியும் தாங்கலும், தேவர்வழிபாடு முதலாயினவும் மேற்கொண்டு முயறல்.

—குறள். அதி. 27. தவம்.

(க)

52. நிலையாமை நோய்மூப்புச் சாக்காடென் றெண்ணித்
தலையாயார் தங்கருமஞ் செய்வார்—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு [1]மென்றிங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்.

தருமர்:—நிலையாமை நோய்மூப்புச் சாக்காடு என் றெண்ணி—உலகத்திற் பிறந்தார்க்கு இளமை நிற்பதல்ல, நோயு மூப்புஞ் சாக்காடு முள்ளதென்று அதனைத் தீரவிசாரித்து; தலை யாயார் தங்கருமஞ் செய்வார்—அறிவினால் உயர்ந்தோர் தமக் குறுதியாகிய நன்னெறியி லொழுகாநிற்பர்; தொலைவில்லாச் சத்தமுஞ் சோதிடமுமென்று இங்கிவை பிதற்றும்—முடிவிலாத சத்த சாத்திரமுஞ் சோதிடநூல் முதலானதென்னு மிவைகளை யிவ்விடத்துச் சொல்லாநிற்கும்; பித்தரிற் பேதையாரில்—இப்படிச் சொல்லுகின்ற பித்தர்போல அறிவில்லாதார் இவ்வுலகத்தி லில்லை யென்றவாறு.

பிதற்றுதல் பித்தர்க் கியன்றது; எனவே நன்னூல்களினா லறிவுவந்து தவம்பண்ணுவதே யாயினும்; மறுமைக்குறுதியு மில்லாதாகலின் சின்னூல்களைக் கருதுவாரை இழிவாக்கி யுரைத்து நன்னூலின்நெறி கருதவேண்டுமென வறிவுறுத்தியது.

பதுமனார்:—பிறந்தார்க்கிளமை முதலாயின நிலையாமையும், நோயும், மூப்பும், சாக்காடுமே யுள்ளனவென்று கருதித் தலையாய அறிவுடையார், தங்கருமமாகிய தவத்தைச் செய்வர். முடிவில் லாத இலக்கணச் சத்தமும், சோதிட நூலுமென்று சொல்லப்

பா-ம்:—[1]'என்றாங்கு'.

பட்ட விரண்டினையுமே பிதற்றும் பித்தர்போல அறிவில்லாதார் [இவ்வுலகத்தில்] இல்லையென்றவாறு.

நிலையாமை பிறப்பிற்கியல்பு. நிலையாமை முதலாயின துன்பங்களையுடைத்து. தங்கருமம்—தவம். பிதற்றும் பித்தரிற் பேதையாரில்—பிதற்றுங் கடைகளான பித்தரின் மிக்கபேதையாரில்லை. மோட்சவித்தை யல்லாதனவற்றை வித்தையாகக் கருதலால் பித்தர். பிறப்புத் துன்பமென்றறியாமை பேதைமை. பித்தன்—மாறுபட்டவறிவு [டையவன்]. பேதை—ஒன்றுமறியாதவன்.

விளக்க உரை:— நிலையாமை நோய்மூப்புச் சாக்காடு என்றெண்ணி—பிறந்தார்க்கிளமை முதலாகிய நிலையாமையும், நோயும், மூப்பும், சாக்காடு முளதாமென்று கருதி; தலையாயார் தங்கருமஞ் செய்வார்-தலையானவர்கள் தங்கருமமாகிய தவத்தைச் செய்வார்கள்; தொலைவில்லாச் சத்தமும் சோதிடமும் என்றாங்கு-முடிவில்லாத சத்தசாத்திரமும், சோதிடமு மென்கிற; இவை பிதற்றும் பித்தரின் பேதையாரில்—இவற்றைப் பிதற்றும் பித்தர் போல அறியாதவ ரிவ்வுலகத்தி லில்லை யென்றவாறு.

நிலையாமை பிறப்புக்கியல்பு. தங்கருமம்—தவம். மோட்சவித்தையல்லாதவற்றை வித்தையாகக் கருதலால் பித்தர். பிறப்புத் துன்பமென்றறியாமை பேதைமை. பித்தன்-மாறுபட்ட அறிவு(டையவன்). பேதை—ஒன்றுமறியாதவன்.

மேற்கோள் பகுதி:—

இ. கொ:—இன்னுருபு ஒப்புப்பொருளில் வந்ததற்கு இச்செய்யுள் மேற்கோளாக வரும்.

—சூ. 56.

பரிதி:—'தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார், அவம்செய்வார் ஆசையுட் பட்டு' என்ற குறளிற்கு உரை கூறுமிடத்து, "நிலையாமை, நோய், மூப்பு, சாக்காடு என்று எண்ணித்

தலை யாவார் தங்கருமஞ் செய்வார்: தங்கருமமாவன தவம், பூசை, நியதி, தானம், தன்மம் என்பன. மற்றல்லாதார் செனனவழி தேடி ஆசைவிலங்கிட்டு அவம்செய்வார் என்றவாறு'' என்பர்.

—குறள். 266.

ஒப்புமைப் பகுதி:—

''தவம்செய்வார் தங்கருமம் செய்வார்மற் றல்லார்
அவம்செய்வார் ஆசையுட் பட்டு.'' —குறள். 266.

''நில்லா தவற்றை நிலையின என்றுணரும்
புல்லறி வாண்மை கடை.'' —குறள்.331.

''தாவில் கொள்கைத் தந்தொழின் முடிமார்''

—திருமுரு. 89.

''என்னுயிர்க் குறுவதுஞ் செய்ய வெண்ணினேன்''

—கம்ப. அயோத்தி. மந்திர. 17.

குறிப்பு:—

நிலையாமை:—

பரிமே:— நிலையாமையாவது, தோற்றமுடையன யாவும் நிலையுதலிலவாம் தன்மை, மயங்கியவழிப் பேய்த்தேரின் புனல் போலத் தோன்றி மெய்யுணர்ந்தவழிக் கயிற்றிலரவுபோலக் கெடுதலின் பொய்என்பாரும் நிலைவேறுபட்டு வருதலால் கணந்தோறும் பிறந்திறக்கும் என்பாரும், ஒருவாற்றான் வேறுபடுதலும் ஒருவாற்றான் வேறுபடாமையும் உடைமையின் நிலையுதலும் நிலையாமையும் ஒருங்கே உடைய என்பாரும் எனப் பொருட்பெற்றி கூறுவார் பலதிறத்தராவர்; அவர் எல்லார்க்கும் அவற்றது நிலையாமை உடம்பாடாகலின், ஈண்டு அதனையே கூறுகின்றார் இஃது உணர்ந்துழியல்லது பொருள்களின் பற்றுவிடாதாகலின் [1]இது முன் வைக்கப்பட்டது.

---

[1]'இது' என்பது துறவு.

மணக்:— நிலையாமையாவது, மயக்கத்தினால் தானென்று நினைத்திருக்கின்ற யாக்கையும், தனதென்று நினைத்திருக்கின்ற பொருளும் நிலை நில்லாமையைக் கூறல்.

பரிதி:- நிலையாமையாவது, செல்வம், யாக்கை, இளமை இவைகள் நிலையல்ல என்றவாறு.

—குறள். அதி. 34. நிலையாமை.

தங்கருமம் என்பது தவத்தினைக் குறித்தது. 'தவம் செய்வார் தங்கருமம் செய்வார்' என்ற குறளின்கண், "அநித்தமாய் மூவகைத் துன்பத்ததாய் உயிரின் வேறாய உடற்கு வருத்தம் வரும் என்று ஒழியாது தவத்தினைச் செய்ய, பிறப்புப்பிணி மூப்பு இறப்புக்களான் அநாதியாகத் துன்பமெய்தி வருகின்ற உயிர் ஞானம்பிறந்து வீடுபெறும் ஆகலின், தவஞ்செய்வாரைத் தங்கருமஞ் செய்வார் என்று கூறினார்" என்றார் பரிமேலழகர்.

(உ)

53. இல்ல மிளமை யெழில்வனப்பு மீக்கூற்றஞ்
செல்வம் வலியென் றிவையெல்லா—மெல்ல
நிலையாமை கண்டு [1]நெடியார் துறப்பர்
தலையாயார் தாமுய்யக் கொண்டு.

தருமர்:— என்பது. இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம்-தங்குடியின் நலம், இளமைப்பருவம், தோற்றப்பொலிவு, அழகு, தாம் முதன்மையா யிருப்பது; செல்வம், வலியென்று இவையெல்லாம்—தமக்குண்டாகிய செல்வம், சுற்றத்தாலுந் தம்மாலுமுண்டாகிய வலிமையென்று சொல்லப்பட்ட இவைகளெல்லாம்; மெல்ல நிலையாமை கண்டு—நெடுங்காலத்துக்கு நில்லாதாய் விரைவிற் போவதைக்கண்டு; நெடியார் துறப்பர்—இல்வாழ்க்கையின்கண் நீட்டியாமல் துறப்பர்; தலையாயார் தாமுய்யக் கொண்டு—முதன்மையாகிய அறிவினையுடையவ

பாடம்:— [1]'நொடியார் துறப்பார்த் தலையாயார்த்'.

ரானவர் தாமுய்யு முபாயத்தை யுட்கொண்டென்றவாறு

இவ்வகைத்தாகிய யாக்கையை நிலையாகக் கருதி நன்னெறியின் ஒழுகாதார்க்கு அறிவுறுத்தும் பொருட்டு, இவ்வகையெல்லாம் நிலையல்லவென்று அறிவுடையோர் நன்னெறியினெழுகுவாரென்றவரைச் சிறப்பித்து, இவையெல்லாங் கண்டிருந்தும் அறிவில்லார் விடயங்களில் முயங்கிக் கெடுவரென்றவர் உய்யும் வகைக்கு வற்புறுத்தியது

பதுமனார்:—குடிப்பிறப்பு, இளமை, தோற்றப்பொலிவு, வடிவழகு, முதன்மை, செல்வம், வலியென்று சொல்லப்பட்டவிவையெல்லாம், நிலையாமையை ஆராய்ந்து நீட்டியாதே தம்மை உய்யக்கொண்டு துறந்துபோவர் தலையாய வறிவினையுடையாரென்றவாறு.

இல்லம்—குடிப்பிறப்பு. எழில்—தோற்றப்பொலிவு. வனப்பு—அழகு. மீக்கூற்றம்—[1]சொற் செலவும், பிறர்தன்னை மிகுத்துச் சொல்லுதலும். நிலையாமை—கணந்தோறு மொழுக [2]வநித்தப்பட்டு வருநிலையாமை. நெடியார்—நீட்டியார்.

விளக்க உரை:— இல்லம் இளமை எழில்வனப்பு மீக்கூற்றம் செல்வம் வலியென்று இவையெல்லாம்—குடிப்பிறப்பு, இளமை, தோற்றப்பொலிவு, வடிவழகு, முதன்மை, செல்வம், சுற்றத்தின் வலியென்று சொல்லப்பட்டதெல்லாம்; மெல்ல நிலையாமைகண்டு—மெல்ல நிலையாவாய்ப் போகிறதுகண்டு; நெடியார் துறப்பர்—மனைவாழ்க்கையின்கணீட்டியாதே துறந்து போவர்; தலையாயார் தாமுய்யக் கொண்டு—தலையானவர் தம்மை உய்யக்கொண்டு என்றவாறு.

---

[1] சொற்செலவு—செல்வாக்கு.

[2] அநித்தப்பட்டு—நிலையற்று.

ஒப்புமைப் பகுதி:—

"உருவு மிளமையு மொண்பொருளு முட்கும்
ஒருவழி நில்லாமை கண்டு"

—நாலடி. 102.

"வளமையும் தேசும் வலியும் வனப்பும்
இளமையும் இற்பிறப்பும் எல்லாம்—உளவாய்
மதித்தஞ்சி மாறுமஃ தின்மையால் கூற்றங்
குதித்துய்ந் தறிவாரோ இல்".

—பழமொழி. 183.

"உடையான் வழக்கினி தொப்ப முடிந்தான்
மனைவாழ்க்கை முன்னினிது மாணாதா மாயின்
நிலையாமை நோக்கி நெடியார் துறத்தல்
தலையாகத் தானினிது நன்கு".

—இனியவை. 3.

"இளமையும் வனப்பும் நில்லா இன்பமும் நின்றஅல்ல
வளமையும் வலிவு நில்லா வாழ்வுநாள் நின்றஅல்ல
களமகள் நேசம் நில்லா"

—நரிவிருத். 14.

"முடங்குட விளமை செல்வ முரண்வலி முதலா யுள்ள
அடங்கலு மகில முற்று மனித்தமென் றதுவே யன்றித்
தொடங்கிய விடங்க டோறுந் துன்பமே யாகுந் தன்மை
அடங்கிய வறிஞ ராய்ந்த பரிசமது மறைகுவன்"

—சிவஞானசரிதை.

குறிப்பு:-

எழில்—எழுச்சி(குறள் 407). "எழிலாவது, வளர்ந்தமைந்த பருவத்தும் இது வளர்ந்து மாறியதன்றி இன்னும் வளருமென்பது போன்று காட்டுதல்", என்பர் நச்சினார்க்கினியர் (தொல். பொருளியல். சூ. 53). "மீக்கூற்றம்-மேன்மையான சொல்லாற் பிறந்த புகழ்" என்பர் சங்கரநமச்சிவாயர். (நன். சூ. 178).

உயர்குடிப்பிறப்பு, இளமை முதலியவற்றின்மீது பற்றுக் கொண்டு, அதனை அனுபவிக்கக் கருதி இல்லறவாழ்வில் புகாது, அவற்றின் நிலையாமையினைக்கண்டு அறிவுடையோர் நன்னெறியாகிய துறவை இளமையிலேயே கொள்வர் என்றார். ஆகவே வடிவழகு, இளமை இவற்றை அனுபவிக்கக் கருதி இல்லறத்தின் கண் புகுவார்க்கு உய்யும் வகை கூறியதாம்.

''வடிவிளமை முதலியவற்றை அனுபவிக்கக்கருதி இளம் பருவத்திலேயே துறவடையாதிருப்பவர்கள், பாரத்தை இழுக் கின்ற பசுவை நிகர்த்துக் குடும்ப பாரத்தை இழுத்துக்கொண்டே திரிந்து அவ்வனுபவங்களும் முடியப்பெறாமல் முத்திப் பேற்றினையும் இழப்பர்'' என்ற கருத்துக்கொண்ட கீழ்க்கண்ட செய்யுளையும் நோக்குக.

''வடிவிளமை வாய்த்த வனப்பு வணங்காக்
குடிகுலமென் றைந்துங் குறித்து—முடியா
துளங்கா நிலைகாணார் தொக்கீர் பசுவால்
இளங்காற் றுறவா தவர்''.

—சிறுபஞ்சமூலம். 24.
(ரு)

54. துன்பம் பலநா ளுழந்து மொருநளை
இன்பமே காமுறுவ ரேழையார்—இன்பம்
இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையாறு
அடைவொழிந்தா [1]ரான்றவிந் தார்.

தருமர்:—என்பது. துன்பம் பலநாள் உழந்தும்—பலநாளுந் துன்பமே யனுபவித்தும்; ஒருநாளை இன்பமே காமுறுவர் ஏழையார்-ஒருநாள் இன்பத்தை யனுபவித்து அந்த ஒருநாளைய இன்பத்தைக் காதலித்து, முன்புபட்ட துயரங்களை யெல்லாம் மறந்துபோவர் அறிவில்லாதார்; இன்பம் இடைதெரிந்து இன்னாமை நோக்கி—இன்பங் காரணமாக வதனால்வரும்

பா.ம்:—[1]'ஆன்றமைந்தார்'.

இடையூறுகளை ஆராய்ந்துகண்டு; மனையாறு அடைவு ஒழிந்தார் - மனைவாழ்க்கை வாழக்கடவோமென்னு மியல்பை விட்டு நீங்கினார்; ஆன்றவிந்தார்—உயர்ந்த அறிவினால் அமைந்தோ ரென்றவாறு.

முன்செய்த நல்வினைப் பயத்தால் ஒருநாள் இன்பமுற்றுழி, தாம் முன்புபட்ட துன்பங்களையெல்லாம் மறந்துபோவதறி வின்மை. அதனால் எப்போதும் மாறாத பெரியவின்பத்தைப் பயப்பதாய தவத்தொழிலிலே முயலுவதற் கறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—பலநாளுந் துன்பத்தை யுழந்து முயன்று மொருநாளை யின்பத்தையே காதலிப்பர் ஏழ்மையுடையார்; மனைவாழ்க்கையினுள்ள வின்பத்தை வேறுபாடாராய்ந் தவ்வின்பத்தின்னாமை யறிந்து, அம்மனை வாழ்க்கையது நெறியை மருவுதலொழிந்தார் அறிவாலமைந் தடங்கினா ரென்றவாறு.

விளக்க உரை:—துன்பம் பலநாள் உழந்தும்—துன்பத்தைப் பலநாளாக வனுபவித்தும்; ஒருநாளை இன்பமே காமுறுவர் ஏழையார்—ஒருநாள் அனுபவித்த இன்பத்தினையே காதலித்து முன்புபட்ட துயரங்களை மறந்துவிடுவர் அறியாதார்; இன்பம் இடைதெரிந்து இன்னாமைநோக்கி—இன்பங்காரணமாகவத னால் வருமிடையூறு அறிந்து; மனையாறு அடைவு ஒழிந்தார் ஆன்றமைந்தார்—மனைவாழ்க்கையினது அடைவைவிட்டு நீங் கினார் அறிவாலமைந் தடங்கினா ரென்றவாறு.

மேற்கோள் பகுதி:-

இ.வி:—"இடைதெரிந்து—வேறுபட ஆராய்ந்து; 'இடை தெரிய' என்பதனை, "**இன்ப, மிடைதெரிந் தின்னாமை .... ஆன்றமைந்தார்**" என்றாற்போலக் கொள்க" என மேற் கோளாக வரும்.

—சூ. 570.

அவிரோதவுந்தியார்:—இச்செய்யுள் மேற்கோளாக வரும்.

—அவிரோத. 17.

ஒப்புமைப் பகுதி:-

"துன்பமே மீதூரக் கண்டும் துறவுள்ளார்
இன்பமே காமுறுவ ரேழையார்—இன்பம்
இசைதோறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் பரியாதா மேல்."

—நாலடி. 60.

"இற்சார்வி னேமாந்தே மீங்கமைந்தே மென்றெண்ணிப்
பொச்சாந் தொழுகுவர் பேதையார்—அச்சார்வு
நின்றன போன்று நிலையா வெனவுணர்ந்தார்
என்றும் பரிவ திலர்."

—நாலடி. 182.

"சிறப்பறு நோயாற் றுன்பஞ் செடிகொண்மூப் பதனாற் றுன்ப
மறப்புறத் தியக்கஞ் செய்யு மரணவே தனையாற் றுன்பம்
பிறப்பவ ரெக்காலத்தும் பெறுவது துன்ப மானால்
துறப்பதே கருமம்".

—குறுந்திரட்டு.

குறிப்பு:-

ஏழையர்—"நுழைந்த உணர்வினரன்றி வரும் வெண்மையினர்" (தொல். மெய்ப்பாடு. சூ. 26.) என்பர் பேராசிரியர். "நுண்ணுணர் வின்மை வறுமை யஃதுடைமை, பண்ணப் பணைத்த பெருஞ் செல்வம்", (நாலடி. 251) ஆதலால் அறிவிலார் 'ஏழையர்' எனப்பட்டார்.

(ச)

**55. கொன்னே [1]கழிந்தற் றிளமையு மின்னே
பிணியொடு மூப்பும் வருமால் -துணிவொன்றி
என்னொடு சூழா தெழுநெஞ்சே! போதியோ
நன்னெறி சேர நமக்கு.**

பா-ம்: —[1]'கழிந்தன்று', 'கழிந்தது'.

தருமர்:—என்பது. கொன்னே கழிந்தற்று இளமையும் —இம்மை மறுமைக்குறுதியான பயன்களைக் கொள்ளாதே, பயனின்றியே கழிந்துபோனது இளமைப்பருவ மானதும்; இன்னே பிணியொடு மூப்பும் வருமால் — இப்பொழுதே நோயுடனே மூப்புவந்தடையு மாதலால்; துணிவுஒன்றி என்னொடு சூழாது எழுநெஞ்சே!—துணிதலைப் பொருந்தி யென்னுடனேகூட எழுந்திருப்பாயாக, வேறொன்றையும் விசாரியாதே என்நெஞ்சமே!; போதியோ நன்னெறிசேர நமக்கு—போதாய் நமக்குறுதி பயப்பதாய நல்வழியை அடைய வென்றவாறு.

'ஓ', இரக்கக் குறிப்பு. இவ்வகைத்தாய பிறப்பறுதற்குத் துறவாகிய நல்வழியிற் செல்லாது பயனின்றியே நாளைக் கழிக்கின்றார், எங்ஙனம் உய்யக்கடவரென் றிரக்கமுற்று அறிவுடையோர் தமது நெஞ்சுடனே சொல்லுமாப்போல அறிவில்லார்க்கு அறிவுறுத்தியது.

பதுமனார்:—நமக்குப் பயன்படாதே கழிந்ததிளமையும் இப்பொழுதே பிணியொடுகூடி மூப்பும் வந்தடையுமாதலால், துணிவொன்றி யென்னோடு ஆராயாதே போனாய்நெஞ்சே!; போதி நமக்குத் துறவாகிய நன்னெறியை யடைவிக்க வென்றவாறு.

"என்னோடு சூழாதெழு நெஞ்சே!" என்பதற்கு, 'நிலையாமை யில்லாத வென்னுடனே ஆராயாதே நீயே துணிந்தெழுவாயாக!'', என்று பொருளுரைப்பாரு முளர்.

கொன்னே—பயனின்றியே. இன்னே—இப்பொழுதே. துணிவொன்றி—துணிதலைக்கூடி.

விளக்க உரை:—கொன்னே கழிந்தன்று இளமையும்-இம்மை மறுமைக்குறுதியான வறங்களைச் செய்யாதே பயனின்றியே கழிந்துபோன திளமையும்; இன்னே பிணியொடு மூப்பும் வருமால்—இப்பொழுதே நோயுடன் மூப்பும் வந்தடையு மாதலால்; துணிவுஒன்றி என்னொடு சூழாது எழுநெஞ்சே!—

துணிதலைப் பொருந்தி யென்னுடனே கூடத் (துறவிற்கு எழுந்) திருப்பாயாக, இனியொன்றை விசாரியாதே நெஞ்சமே!; போதியோ நன்னெறிசேர நமக்கு—போதாய்ப் பிறப்பறும் நல் வழியை யடைய வென்றவாறு.

மேற்கோள் பகுதி:—

நச்.
பேரா.
சேனா.
தெய்வச்.

:—'கொன்' என்னுமிடைச் சொல் பயமின்மைப் பொருளுணர்த்தியதற்கு, **"கொன்னே கழிந்தன் றிளமை"** என்ற அடியை எடுத்துக்காட்டுவர்.

—தொல்.சொல்.இடை.சூ.6.

இ.வி:—இங்கும் இதற்கே எடுத்துக்காட்டாக வரும்.

—சூ.265.

நச்:—சில இடைச்சொற்கள் விசேடித்து நிற்றற்கு, **'கொன்னே கழிந்தன் றிளமையும்'** என்ற அடியை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல்.சொல்.எச்.சூ.59,60.

ஒப்புமைப் பகுதி:—

"முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள"

—நாலடி.92.

"இளமை கழியும் பிணிமூப் பியையும்
வளமை வலியிவை வாடும்—உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினாய்!
வீடே புரிதல் விதி."

—ஏலாதி.21.

குறிப்பு:—

இளமையை யெல்லாம் மனைவாழ்க்கையிற் கழித்த ஒருவன்

பின்னர் தன்மனத்தை நோக்கிக் கூறியதாக அமைந்தது இச் செய்யுள்.

(ரு)

56. மாண்ட குணத்தொடு மக்கட்பே றில்லெனினும்
பூண்டான் கழித்தற் கருமையாற்—[1]பூண்ட
மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே
கடியென்றார் கற்றறிந் தார்.

தருமர்:—என்பது. மாண்ட குணத்தொடு மக்கட்பேறு இல்லெனினும்—தன் மனையாளுக்கு நல்லகுணமில்லாதே பிள்ளையு மில்லாதே போயிற்றாயினும்; பூண்டான் கழித்தற்கு அருமையால்—கொண்டவன் விட்டுத் துறப்பதருமை யாதலால்; பூண்ட மிடியென்னுங் காரணத்தின்—இப்படியாகிய மனைவாழ்க் கையிற் பூண்பது மிடியென்னுங் காரணத்தினாலே; மேன்முறைக் கண்ணே கடிஎன்றார் கற்றறிந்தார்—முற்காலத்திலேதானே துறந்து யாவரு [2]மிதனைக் கடியத் தகுந்ததென்று கூறினார், நன்னூல்களை ஆராய்ந்த அறிவுடையார் என்றவாறு.

மகளிரைக் காதலித்துத் துறவுக்கு முயற்சியில்லாதார் அதனை யொழிந்து, நன்னெறிப் பட்டுய்யும்படிக்கு மனைவாழ்க்கையைக் 'கடி' என்று பெயராக்கி இழிவாகக் கூறியதுமாம்.

பதுமனார்:—தன்மனையாட்கு மாட்சிமைப்பட்ட குணமும், மக்கட்பேறும் இல்லையாயினும் பூண்டவன் துறத்தற் கருமையால், பூண்டால் இடரமென்னுங் காரணத்தினால் முற்காலத்தின்கண்ணே கற்றறிந்தார், மணத்தைக் 'கடி' என்றே பெயர் கூறினார் என்றவாறு.

பூண்டமிடி—செய்துகொண்ட விடர். கடி என்றார்—

பா-ம்:—[1]'பூண்டன்'.

[2]'இதனை' யென்பது மணத்தினை.

மணத்தைத் தவிர்கவென்பதனைக் 'கடி' என்று பெயரிட்டார்.

விளக்க உரை:— மாண்டகுணத்தொடு—நல்ல குணங்களுடனே; மக்கட்பேறு இல்லெனினும்—பிள்ளைப்பேறில்லையாயினும்; பூண்டான் கழித்தற்கு அருமையால்—கொண்டவன் பின்பு விடுத்தற்கரிதாதலால்; பூண்ட மிடியென்னுங் காரணத்தின்—இப்படி பூண்டுகொண்ட மிடியென்னுங் காரணத்தினால்; மேன்முறைக்கண்ணே கடிஎன்றார் கற்றறிந்தார்—முற்காலத்துப் பெரியோர் மணத்திற்குக் 'கடி' எனப் பேர் கூறினார் என்றவாறு.

கழித்தற்கு-துறத்தற்கு. மணத்தைத் தவிர்க வென்பதனைக் 'கடி' யென்று பெயரிட்டார்.

மேற்கோள் பகுதி:—

மயிலை:—'என்' என்பது சொல்லுத லென்னும் தொழில் குறித்துப் பெயர்வினைகட்குரிய விகுதிகளுடனே வரும். என்பதற்கு, "**மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே, கடியென்றார் கற்றறிந்தார்**" என்ற அடியை எடுத்துக்காட்டுவர்.

—நன். சூ. 420.

மயிலை. } சங்கர. } :—சொல்லெச்சத்திற்கு "பூண்ட, மிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக் கண்ணே, கடியென்றார் கற்றறிந்தார்" என்ற அடியை எடுத்துக்காட்டுவர்.

—நன். சூ. 359, 360.

ஒப்புமைப் பகுதி:—

"கடியெனக் கேட்டுங் கடியான் வெடிபட
ஆர்ப்பது கேட்டு மதுதெளியான்—பேர்த்துமோர்
இற்கொண் டினிதிருஉ மேமுறுத லென்பவே
கற்கொண் டெறியுந் தவறு."

—நாலடி. 364.

குறிப்பு:

மாண்டகுணம்—கற்பு, நாண், மடம், அச்சம், பயிர்ப்பு என்பன, 'மாண்ட', என்பது மாண்பு என்னும் பண்பினடியாப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். கடி—1. நீக்கம். 2. கலியாணம். 'கன்னிக் காவலுங் கடியிற் காவலும்' (மணி. 18-98). கடி என்பது பலபொருள் ஒருசொல். 'கடியென்றார் கற்றறிந்தார்' என்பதற்கு மணவினையிலொறும் நீங்க வேண்டுமென்ற காரணத்தால் மணத்திற்கு கடியென்றே பெயரிட்டா ரென்பது "பிரிநிலை நவிற்சி யணியாம்" 'கடி' என்ற இடுகுறிப்பெயர்க்கு ஆசிரியர் இங்கு கடிதற்குறியது என்ற காரணப்பொருள் கற்பித்துக் கூறினார்.

(சா)

57. ஊக்கித்தாங் கொண்ட விரதங்க ளுள்ளுடையத்
தாக்கருந் துன்பங்க டாந்தலை வந்தக்கால்
நீக்கி நிறூஉ முரவோரே நல்லொழுக்கங்
காக்குந் [1]திருவொத் தவர்.

தருமர்:— என்பது. ஊக்கித் தாங்கொண்ட விரதங்கள் உள்ளுடைய – சீர் தூக்கித் தாம்செய்யவென்று துணிந்து செய்யுந் தவவிரதங்களி லுட்புகுந்து கெடுப்பதாய, தாக்கரும் துன்பங் கடாந் தலைவந்தக்கால்—காத்தற்கரியதாய துன்பங் களானது வந்து தலைப்பட்டவிடத்து; நீக்கிநிறூஉம் உரவோரே –அத்துன்பங்களைத் தள்ளித்தம்மை அவ்விரதங்களிலே நிறுத்த வல்ல வலியிலனயுடையவரே; நல்லொழுக்கங் காக்குந் திருவொத்தவர் — தாங்கொண்ட நல்லொழுக்கத்தைத் தவறு வாராமல் காக்குந் திருவினைப்பொருந்தியவ ரென்றவாறு.

விரதம் பூண்டுழி இடையூறு வந்தாலதற்கு மனங்கலங்கி யதனிலுறுதிப் படாதார்க்கு, மேலெய்தக் கடவதாய உலக

பா-ம்:—[1]'திருவத்தவர்'.

மென்னுந் திருவில்லை. அதனால் அவ்விடையூறுகளைத் தம்மன வலியினாலே தள்ளி ஒருமைப்பட்டுத் தவஞ்செய்வார், மற்றோர்க்கு எய்தற்கரிய உலகத்தில் மாறாத பெரியவின்பத்தை யனுபவிப்பா ரென்பார். நல்லொழுக்கமாகிய திரு அவரை விடாதே காத்து நின்று அனுபவிக்கப் படுத்துமென்றார்.

பதுமனார்:— ஒருப்பட்டுத் தாங்கொண்ட விரதங்கள் உள்ளுடையும்படி தாங்குதற்கரிய துயரங்கள் தம்மிடத்து வந்த காலத்து, அத்துயரங்களை நீக்கித் தம்மை அவ்விரதங்களிலே நிறுத்தும் வலியினையுடையாரே, தாங்கொண்ட நல்லசீலங்களை அழியாமற் காக்குந் திருவினையுடையார் என்றவாறு.

ஊக்கி-ஒருப்பட்டு. தாக்கரும் - தாங்குதற்கரிய. நிறூஉம் உரவோரே—தம்மை அவ்விரதங்களிலே நிறுத்தும் வலியினையுடையாரே. நல்லொழுக்கம்—நல்ல தவவொழுக்கம். திருவத்தவர்—திருவினையுடையார். அத்து—சாரியை.

விளக்க உரை:— ஊக்கித் தாங்கொண்ட விரதங்கள் உள்ளுடைய-ஒருப்பட்டுத் தாங்கொண்ட விரதங்கள் உள்ளுடையும் படி; தாக்கரும் துன்பங்கடாந் தலைவந்தக்கால்—காத்தற்கரிய துன்பங்கடாந் தலைவந்தவிடத்து; நீக்கி நிறூஉம் உரவோரே—அந்தத் துன்பங்களை நீக்கித் தம்மை அவ்விரதங்களிலே நிறுத்த வல்லவர் தாமே; நல்லொழுக்கங் காக்குந் திருவத்தவர்—தாங்கொண்ட நல்லொழுக்கத்துக்குத் தவறுவராமல காக்குந் திருவினையுடையவ ரென்றவாறு.

'திருவத்தவர்' என்பது செய்யுள் விகாரம். அத்து—சாரியை

மேற்கோள் பகுதி:-

நச்:—"நல்லொழுக்கங் காக்குந் திருவத்த வர்' என உகர ஈறு வேற்றுமைக்கண் அத்துப் பெற்றது" என்பர்.

—தொல்.எழுத்.குற்றிய.சூ. 78.

அவிரோதவுந்தியார் :— இச்செய்யுள் மேற்கோளாக வந்துள்ளது.

—அவிரோத. 64.

குறிப்பு:-

"விரதங்களாவன:— இன்ன அறஞ்செய்வல் எனவும், இன்னபாவம் ஒழிவல் எனவும் தம் ஆற்றலுக்கு ஏற்ப வரைந்து கொள்வன. அவைதாம் வரம்பிலவாகலின் பெருகுமென்று அஞ்சி, அவை தம்முள்ளே பலவற்றையும் அகப்படுத்து நிற்குஞ் சிறப்புடைய சிலவற்றை ஈண்டுக் கூறுவான் தொடங்கி, முதற்கண் அருளுடைமை கூறுகின்றார்".

—குறள். துறவறவியல். உரை.

துன்பங்களாவன:—தன்னைப்பற்றி வருவனவும், பிற உயிர்களைப்பற்றி வருவனவும், தெய்வத்தான் வருவனவுமாகிய துன்பங்கள்.

உரவோர்—அறிவினையுடையோர். உரன்—அறிவு. 'உரவோ ரெண்ணினு மடவோ ரெண்ணினும்' (பதிற். 73.) என்றவிடத்துப்போல.

(எ)

58. தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்(று)
எம்மை யிகழ்ந்த [1]வினைப்பயத்தான்—உம்மை
எரிவாய் [2]நரகத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்.

தருமர்:—என்பது. தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றி—தம்மை ஒருவர் இகழ்ச்சியாகச் செய்தால், அந்த இகழ்ச்சியைப் பொறுத்திருப்பது மல்லாமல்; மற்று எம்மை

பா-ம்:—[1]'வினைப்பயத்தால்'.

[2]'நிரயத்து'.

இகழ்ந்த வினைப்பயத்தான்—மீண்டும் அவரை நோக்கி இவர் நம்மை இகழ்ச்சி செய்ததாகிய தீவினைப்பயனாலே; உம்மை எரிவாய் நரகத்து வீழ்வர்கொல் என்று—பின்னுக்கு இவர் எரிவாய்ந்த நரகத்திலே வீழப்போகிறா ரல்லவோவென்று; பரிவதூஉம் சான்றோர் கடன்—அவர்க்கிரங்குவதும் அடைந் தோர்க்கு முறைமை என்றவாறு.

அவர் நரகத்தின்கண்ணே ய(டையும்) வழி தம்மாலே உண்டானதல்லவோ. தம்முடைய விரதத்துக்கு இவை பொருந்துவதன்றே. இவ்விரதத்துக்கு இவை இடையூறாயிற் றென்று அதற்கிரங்கியதுமாம். இப்பாட்டுப் பொறையுடைமைக் கடுத்தது இவ்விடத்துச் சேர்க்கப்பட்ட தேதோவெனில் துறந்து தவம் பண்ணலாவது, காமக் குரோத லோப [1]முதலாகிய பகை களைத் துறக்கப்பட்டதல்லவோ. அதனால் அவ்விரதம் பூண்டோர் தமது கோபத்தை இப்படித் தவிரவேண்டு மென்பது தோன்ற இப்பாட்டுத் துறவிலே சேர்க்கப்பட்டது.

பதுமனார்:—தம்மைப் பிறரிகழ்ந்தமை தாம் பொறுப்பதே யன்றியும் எம்மை இகழ்ந்து சொல்லிய தீவினைப் பயத்தான். மறுமையில் எரிபோல வாய்ந்த நரகத்தின் கண்ணவர் வீழ்வர், கொல்லோ, என்றிரங்குவதுஞ் சான்றோர்கடன் என்றவாறு.

உம்மை—மறுமை. எரிவாய்நிரயம்—எரிவாயுடைய நரகம். பரிவது—இரங்குவது. எம்மை—இவ்வகையாற் பலரையும், மற்று வினைமாற்று.

விளக்க உரை:— தம்மை இகழ்ந்தமை—தம்மைப் பிறரி கழ்ந்துசொல்லி வைததை; தாம் பொறுப்பதன்றி—தாம் பொறுத்துவிடுவதல்லாது; மற்ற எம்மை இகழ்ந்த வினைப் பயத்தால் —மற்றெம்மை இகழ்ந்துசொல்லிய தீவினைப்பயத் தால்; உம்மை—மறுபிறப்பிலே; எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்

---

[1]மத, மாச்சரியம் என்ற பிற.

என்று—எரிவாய் நரகத்திலே இவர்வீழப் போகிறாரென்று; பரிவதூஉம் சான்றோர் கடன்—அதற்கிரங்குவதூஉஞ் சான்றோர்க்கு முறைமை என்றவாறு.

இப்பாட்டுப் பொறையுடைமையிற் சேர்க்க வேண்டியிருக்க இதிற் சேர்த்ததென்னையோவெனின்; துறக்குமவனுக்குக் கோபமாகாது என்பது தோன்றத் துறவில் சேர்த்தார்.

மேற்கோள் பகுதி:-

நச்:—வாகைத்திணையின் துறைகளுள் ஒன்றாகிய 'பிழைத் தோர்த் தாங்குங் காவல்' என்ற துறைக்கு இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல்.பொருள்.புறத்.சூ.21.

பரிமே:— 'திறன்அல்ல தன்பிறர் செய்யினும் நோநொந்து, அறன் அல்ல செய்யாமை நன்று' என்ற குறளின்கண், துன்பத்திற்கு நோதலாவது, ''உம்மை எரிவாய் நிரயத்து வீழ்வர்கொல்'' என்று பரிதல்'' என்பர்.

—குறள்.பொறையுடைமை.7.

ஒப்புலயப் பகுதி:-

''உண்ணாது நோற்பார் பெரியர் பிறர்சொல்லும்
இன்னாச்சொல் நோற்பாரின் பின்''

—குறள்.பொறையுடைமை.10.

''நோவ உரைத்தாரைத் தாம்பொறுக்க லாகாதார்
நாவின் ஒருவரை வைதால் வயவுரை
பூவிற் பொலிந்தகன்ற கண்ணாய்! அதுவன்றோ
தீயில்லை ஊட்டும் திறம்''.

—பழ.45

குறிப்பு:-

துறந்தார்க்குச் சினமின்மையும், பொறையுடைமையும்,

பிறர் துன்பத்திற்கு இரங்கும் அருளுடைமையும் சிறந்த விரதங்க ளென்று கூறினார்.

பரிசில் மறுக்கப்பெற்ற இரவலனொருவன் மறுத்தானை நோக்கி,

[1]"—காணாது கண்டனம் அதனால்
நோயில ராகநின் புதல்வர் யானும்
வெயிலென முனியேன் பனியென மடியேன்
கல்குயின் றன்னவென் னல்கூர் வளிமறை
நாணல தில்லாக் கற்பின் வாணுதல்
மெல்லியற் குறுமக ளுள்ளிச்
செல்வல் அத்தை சிறக்க நின்னாளே"

எனக்கூறியதாக வரும் புறநானூற்றுச் செய்யுளையும் காண்க.

(அ)

59. மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற
ஐவாய வேட்கை யவாவினைக்—கைவாய்க்
கலங்காமற் காத்துய்க்கு மாற்ற லுடையான்
விலங்காது வீடு பெறும்.

தருமர்:—என்பது. மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற—உடம்பும், வாயும், கண்ணும், மூக்கும், செவியு மென பேர்பெற்றதான; ஐவாய வேட்கை யவாவினை—இவை ஐந்திடத்தாலும் நிகழ்த்து மனத்தினால் விரும்பப்பட்ட

---

[1] "எங்குடியிலுள்ளார் முன்பு காணாதது யாம்கண்டோம்; அத்தீங்கினால், நின்பிள்ளைகள் நோயின்றியே யிருப்பாராக; யானும் வெயிலென்று நினைந்து போக்கை வேறெனாய்ப் பனி யென்றுகொண்டு மடிந்திரேனாய் விட்டு நீங்காமையாற் கல்லாற் செய்தாற் போன்ற எனது நல்குரவின் மிகுதியான் வளிமறை யாகிய மனையிடத்து நாணல்லது வேறில்லாத கற்பினையும் ஒளியையுடைத்தாகிய நுதலினையும் மெல்லிய இயலினையு முடைய குறுமகளை நினைந்துபோவேன்; நின்ஆயுள் மிகுவ தாக" என்பது இதன் உரை. —புறம்,196.

வாசையை; கைவாய் கலங்காமல் காத்து உய்க்கும் ஆற்ற லுடையான்—ஒருமையுற்ற முறைமையிற் றப்பாமல் பாது காத்துச் செலுத்தவல்ல அறிவென்னும் வலியினையுடையான்; விலங்காமை வீடுபெறும்—தப்பாமல் வீட்டினைப் பெறுவ னென்றவாறு.

பஞ்சேந்திரியங்கள் முதலானவை [மேல் செல்லும் நுகர்ச்சியை] ஒழித்துத் தாமென்னு (மகங்காரத்தைத் துறந்) தார்க் கல்லாது தவவிரதம் கொள்ளலாகாது. அதனால் துறவின் தன்மை இதுவெனவும், அந்தநெறியிற் பிழையாது தவஞ்செய் தவர் வீடுபெறுவ துண்மையென்பதுந் தோன்ற, 'விலங்காமல் வீடு பெறும்' என்றார். இத்தன்மையாய மனவலியில்லாதார் தவவிரதம் பூண்பது, கூடாவொழுக்கமாய் யாவராலும் பழிப்புரை யெய்துவாரெனத் துறவினது உறுதி கூறியவாறு.

பதுமனார்:— உடம்பும், வாயும், கண்ணும், மூக்கும், செவியு மெனப் பேர்பெற்ற ஐந்து நெறிகளினுடைய வேட்கையினையும், மனத்தால்வரும் அவாவினையும் ஒழுக்கநெறியிற் றான் கலங்காது காத்துச்செலுத்தும், அறிவென்னும் வலியினை யுடையான் தப்பாமல் வீடுபேறு பெறுமென்றவாறு.

ஐவாய வேட்கை— ஐம்பொறியி னிடத்துள்ள வாசை. அவா—மனத்தி னாசை.

விளக்க உரை:— மெய்வாய்கண் மூக்குச் செவியெனப் பேர்பெற்ற— மெய்யும் வாயும், கண்ணும், மூக்கும், செவியு மென்று பேர்பெற்ற; ஐவாய வேட்கை யவாவினை—இவை ஐந்திடத்துள்ள வாசையினையும், அதனை விடாமற் செலுத்து மனத்தால் வருமவாவினையும்; கைவாய் கலங்காமல் காத்துய்க் கும் ஆற்றலுடையான்—ஒழுக்க முறைமையிற் றப்பாமல் செலுத்தவல்ல அறிவென்னும் வலியை யுடையவனே; விலங் காமை வீடுபெறும்—தப்பாமல் வீட்டினைப் பெறுவனென்றவாறு.

[1]கைவாய் [கலங்காமல் காத்து உய்க்கும்]—[ஐம்பொறி] தந்தம் நெறியிற்போய்க் கலங்காமல் தானின்ற வொழுக்கத்திற் காத்துச் செலுத்தும்.

ஒப்புமைப் பகுதி:-

''ஐந்தவித்தான் ஆற்றல்''

—குறள். நீத்தார். 5.

''சுவையொளி யூறோசை நாற்றமென் றைந்தின்
வகைதெரிவான் கட்டே யுலகு''

—குறள் நீத்தார். 7.

''அடல்வேண்டும் ஐந்தன் புலத்தை விடல்வேண்டும்
வேண்டிய எல்லாம் ஒருங்கு''

—குறள். துறவு. 3.

''பொறியெனும் பெயர வைவாய்ப் பொங்கழ லரவின் கண்ணே
வெறிபுலங் கன்றி நின்றார் வேதனைக் கடலு ணின்றார்.''

—சீவக. 375.

ஐவாய வேட்கை யவாவடக்கல் முன்னினிதே''

—இனியவை. 26.

குறிப்பு:-

அவாவினைக் காத்து' என்றதில் 'காத்து' என்பது இங்குத் தடுத்தற் பொருளில் வந்தது. ''கதங்காத்துக் கற்றடங்கல்'', ''செல்லிடத்துக் காப்பான் சினங்காப்பான்'' (குறள். 130,301) என்புழிப் போல.

ஐம்பொறிகளிலும் செல்லுகின்ற மனத்தைத் தடுத்துத் துறவறவொழுக்கத்தில் ஈடுபடுகின்றவன் முத்தியடைவது உறுதி யென இச்செய்யுளின்கண் கூறினார். (கூ)

---

[1]கை—ஒழுக்கம். 'கையொன்று, அறிகல்லாய் பேரறிகா ணீ'

—கலித். 95:25—26.

60. **துன்பமே மீதூரக் கண்டுந் துறவுள்ளார்**
இன்பமே காமுறுவ ரேழையார்—இன்பம்
இசைதொறு மற்றத னின்னாமை நோக்கிப்
பசைதல் [1]பரியாதார் மேல்.

தருமர்:—என்பது. துன்பமே மீதூரக் கண்டும்—துன்ப மானது இடையறாதே யடுத்த வருவதனைக் கண்டும்; துறவுள்ளார் தம்மை நல்வழிப்படுத்துவதாய துறவினை நினையார்; இன்பமே காமுறுவர் ஏழையார்—தமக்கெய்தாத வின்பத்தை யெய்துவ தாகக் காதலிப்பர் அறிவில்லாதார்; இன்பம் இசைதொறு மற்றதன் இன்னாமை நோக்கி -இன்பமானது தமக்கு அடுத்து வருந்தோறும், அந்தவின்பத்தினது பொல்லாங்குகளை யறிந்து; பசைதல் பரியாதார் மேல்—அவ்வின்பத்தின் மேவுதலைக் காதலியார் மேலாயினா ரென்றவாறு.

துன்பம் வந்தாலிது நாமுன்புசெய்த தீவினையல்லவோ என வறிந்து. இனியாகிலும் பின்னுக்கிப்படித் துன்பத்தை யனுபவி யாமல் இன்பமனுபவிப்பதற்கு அதற்கானவற்றின் முயலக் கடவோ மென்(றெண்)ணாமல், தமக்கு எய்தாத வின்பத்தைத் தமக்கு வரக்கடவதென்று காதலிப்ப ரல்லாமல், நாம்முன்பு நல்வினை செய்யாததனால் இன்பமெய்திற்றில்லை யென்றெண் ணார். அது அறிவின்மை[யல்லவோ]; அறிவுடையா ராயினார் தமக்கு இன்பமானது இடையறாமல் வந்தாலும் இது நிலையல் லாத சிறிய வின்ப மென்றெண்ணி, இதுவும் நாம் முன்புசெய்த நல்வினையால் வந்ததல்லவோ. இனி மாறாதபெரிய வின்பத் தைப் பெறும் படிக்கு, அதற்கான நன்னெறியி லொழுகக் கடவோ மென்று துணிவதல்லாது, தமக்கெய்திய சிறியவின்பத்தைப் பரியா ரென்று துறவினதுயர்ச்சி கூறியவாறு.

பதுமனார்:—துன்பமே தம்மேல் இடையறாதே அடர்ந்து வரக்கண்டுந் துறவினை நினையாது, தமக்கெய்தாத வின்பத்தைக்

பா-ம்:—[1]'பரியாதா'.

காதலியாநிற்பர் ஏழ்மையுடையார். மேலாயினா ரின்பமிடை யறாதே தமக்கு வந்தெய்துந்தோறும்; மற்றதனான் வருந் துன்பத்தை யாராய்ந்து அவ்வின்பத்தை மேவுதலைக் காதலியா ரென்றவாறு.

[துன்பமே மீதூரக் கண்டும் துறவு உள்ளார்]-துன்பந்தான் இடையறாது வந்தெய்தக்கண்டுந் துறக்க நினையார். [இன்பமே] —தமக்கெய்தாத வின்பத்தை, இசைதோறும்—அறிவுடையார் தமக்கின்ப மெய்துந்தோறும். பசைதல் பரியாதுமேல்—அவ் வின்பத்தின் மேவுதலைக் காதலியார். மேவுதலைக் காதலியாது மேலாய துறவினைக் காதலிப்பார். 'மேல், கீழ்' என்பன ஆகு பெயர்.

விளக்க உரை:—துன்பமே மீதூரக் கண்டும்—துன்ப மிடையறாதே அடுக்கி வரக்கண்டும்; துறவுள்ளார்—துறவினை நினையார்; இன்பமே காமுறுவர் ஏழையார்—தமக்கெய்தாத இன்பத்தினையே காதலிப்பர் ஏழையாயினார்; இன்பம் இசை தோறு மற்றதன் இன்னாமைநோக்கி—தமக்கு இன்பம் அடுத்து வருந்தோறு மதின் பொல்லாங்கை யறிந்து; பசைதல் பரியாதார் மேல்—மேவுதலைக் காதலியார் மேலாயினா ரென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

"துன்பம் பலநா ளுழந்து மொருநாளை
இன்பமே காமுறுவ ரேழையார்—இன்பம்
இடைதெரிந் தின்னாமை நோக்கி மனையாறு
அடைவொழிந்தா ரான்றமைந் தார்"

—நாலடி. 54.

"சிறப்பறு நோயாற் றுன்பஞ் செடிகொண்மூப் பதனாற் றுன்ப
மறப்புறத் தியக்கஞ் செய்யு மரணமே தனையாற் றுன்பம்
பிறப்பவ ரெக்காலத்தும் பெறுவது துன்ப மானால்
துறப்பதே கருமம்"

—குறுந்திரட்டு.

குறிப்பு:—

இல்லற வாழ்வினா லேற்படும் துன்பமே மிக்கிருக்க அதனை நோக்காது, நடுநடுவே காணும் சிறியவின்பத்தையே நோக்கி இல்லறவாழ்வை விரும்புவர் மிக்குள்ள துன்பத்தை யறிந்து துறக்காதவ ரென்பதனான் அவரை 'ஏழையார்' என்றார். அறிவிற் சிறந்த மேம்பட்டவ ராயினார் இதனையோர்ந்து இல் லறவாழ்வை விரும்பாது துறப்பரென்பதாம்.

(ய)

7. சினமின்மை.

தருமர்:— அஃதாவது, தம்மை மற்றொருவர் இழிவாகச் சொன்னவிடத்தும், மெய்துூர்ந்தடித்த விடத்தும் இது நாம் முன்பு செய்த தீவினையால் வந்ததல்லாமல், தீவினைசெய்யா திருக்கிலிது நமக்கு வருவதல்ல வென்றும்; ஒருவர் மெய்துூர்ந் தடித்ததனைத் தம்மேலொரு மரமிடுவதுபோலும், முள்தைத்த தல் போலுங் கருதி, மரத்தினோடும் முள்ளினோடும் வாசியற்றாற் போலத் தமக்குப் பொல்லாங்கு செய்தவர்மேலும், கோப மெழா மல் தம்மறிவினா லதனைமீட்டல்.

பதுமனார்:— சினமின்மையாவது சினத்தைக் கருதாமை. யாவனொருவன் தம்மை இகழ்வாகச் சொன்னவைத் தம்மாட்டுள வாயின், உண்மை சொன்னான் [அதனை விலக்குவாம்] எனவும்; அவை இல்லையாயிற் பொய்சொன்னான் நமக்கென் என்றும்; மெய்துூர்ந்ததனைத் தாம் முட்டினதோடும் தம்மேல் யாதானும் ஒன்றுபட்டதனோடு வாசியற்றிருத்தலுமாகிய சினமின்மைகளைக் கூறப்பட்டது.

இது துறவறத்தின்கண் சொல்ல வேண்டியதென்னை. மனைவாழ்க்கைவிட்டு நீங்கிக் காமவெகுளி மயக்கமில்லாத துறவறத்தின்கண் நின்றார்க்குச் சினமென்னெனின், எல்லா

வுயிர்கட்கு முடம்பொடு நின்று வாழவேண்டுதலிற் காரணமின்றிச் சினம்வரு மாதலால்; அதனையொழிந்து துறவறத்தின் கண் நிற்கவேணும் என்றவாறு.

விளக்க உரை:—அஃதாவது ஒருவன் தம்மை இழிவாகச் சொன்னானாகில், தமக்கவன் சொன்ன இழிவுண்டானால் நமக்குள்ளதல்லவோ வென்றும், இல்லையாகில் பொய் சொன்னானென்று பொறுத்தலும்; தம்மையொருவன் மெய் தூர்ந்தடித்தானாகில், முள்தைத்தபொழுதும் மரம் விழுந்த பொழுதும் பொறுத்தல்போலும், இஃதெல்லாம் நாம் முன்பு செய்த வினையல்லவோ வந்ததென்று, கோபமெழுந்திராதபடி அறிவினால் மீட்டல்,

குறிப்பு:—

முற்றத்துறந்த முனிவர்களுக்குச் சினம் கூடாதென்பதனான் இவ்வதிகாரம் துறவறவியலின்பாற் சேர்க்கப்பட்டது. திருவள்ளுவனாரும் 'வெகுளாமை' என்றோர் அதிகாரத்தைத் துறவறவியலில் வைத்ததும் காண்க.

"வெகுளாமையாவது சினத்தைச் செய்தற்குக் காரணம் ஒருவன்மாட்டு உளதாய இடத்தும் அதனைச் செய்யாமை" என்றார் பரிமேலழகர்.

'வெகுளுதற்குக் காரணம் உள்ள இடத்தும் வெகுளாராதல்' என்று மணக்குடவரும்; 'வாக்கினால் பொய்சொல்லாதது போலே மனத்தினால் குற்றமாகிய கோபத்தையும் விடுக என்றவாறு' என்று பரிதியாரும் கூறினர்.

61. **மதித்திறப் பாரு மிறக்க மதியா**
மிதித்திறப் பாரு மிறக்க—மிதித்தேறி
ஈயுந் தலைமே லிருத்தலா லஃதறிவார்
காயுங் கதமின்மை நன்று.

தருமர்:— என்பது. மதித்து இறப்பாரும் இறக்க—தம்மையொருவர் இவர் நல்லாரென்று இயல்பாகச் சொல்லிப் போவாரும் போக; மதியா மிதித்து இறப்பாரும் இறக்க—தம்மை யொருவர் மதியாமல் அவமானஞ்செய்து போவாரும் போக; மிதித்து ஏறி ஈயுந் தலைமேல் இருத்தலால்—ஈயானது தம்முடம்பை மிதித்து[1] உளரித் தலைமேலு மிருப்பதானா லதனைக் கண்டும்; அஃதறிவார் காயுங் கதமின்மை நன்று—அதனை [2]அசேதனமென்று கருதி அதன்மேற் கோபமெழாதது போல வறிந்து, பிறரைக் காயும் வெகுளியை மீட்டல் நன்றென்றவாறு.

நன்னெறியி னமைந்தவர் தம்வினைப்பயனைக் கருதுவதல் லால் ஒருவர் நன்குசெய்தார் தீங்குசெய்தா ரென்றவரைக் கருதுவதில்லை. அதனால் அறிவில்லாதார் இவற்றின் நலமறிந் தமையும் படிக்கு, ஈயை உவமையாக்கி வற்புறுத்தியது.

பதுமனார்:— [தம்மை] இவர் நல்லவரென்று மதித்துப் போவாரும்போக; மதியாது மிதித்துப் போவாரும் போக. மிதித்தேறித் தலைமேலே ஈயுஞ் சென்றிருத்தலால் அதன் தன்மை யறிவார், [அதன்மேற் சினங்கொள்ளாததுபோலப்] பிறரைச் சீறும் வெகுளியின்மை நன்றென்றவாறு.

மதித்து இறப்பாரும் இறக்க—நல்லவரென்று மதித்துப் போவாரும் போக. காயும் கதம் இன்மை நன்று—பிறரைக் காயுஞ் சினமில்லாமை நன்று.

விளக்க உரை:— மதித்து இறப்பாரும் இறக்க—தம்மை யிவர் நல்லாரென்று போவாரும்போக; மதியா மிதித்து இறப் பாரும் இறக்க—மதியாதே மிதித்துப் போவாரும்போக; மிதித் தேறி ஈயுந் தலைமேல் இருத்தலால்—மிதித்தேறித் தலைமேலே ஈயுமிருத்தலால்; அஃதறிவார் காயுங் கதமின்மை நன்று—

---

[1] உளரி—கோதி, அலைத்து.

[2] அசேதனம்—அறிவில்லாதது.

அதனை அசேதனமென்று அதன்மேற் சின மெழாம லிருந்தாற் போலப் பிறரைக்காயும் வெகுளி இல்லாமலிருத்தல் நன்றென்ற வாறு.

ஒப்புமைப் பகுதி:—

"நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று"

—நாலடி. 67.

குறிப்பு:-

கீழோரானவரே பெரியோரை அவமதிப்பர்; அறிவினாற் சிறந்தோர் அங்ஙனம் அவமதியார் என்பது தெளிவுபடக் கூறு தற்கு மிதித்தேறித் தலைமேல் இருக்கும் ஈயினைச் சுட்டினார். ஈயினியல்புறிந்தார் அதன்மேல் சினங்கொள்ளாதுபோல அத்தன்மைய கீழோரினையும் அவர் செயல்கண்டு வெகுளாது இருத்தலே நன்றென்றார்.

(க)

62. **தண்டாச் சிறப்பிற்றம் மின்னுயிரைத் தாங்காது**
கண்டுழி யெல்லாந் துறப்பவோ?—மண்டி
அடிபெயரா தாற்ற விளிவந்த போழ்தின்
முடிகிற்கு முள்ளத் தவர்.

தருமர்:— என்பது. தண்டாச் சிறப்பில் தம்இன்னு யிரைத் தாங்காது—கெடாத சிறப்பினையுடைய தமது இனிய உயிரைப் பரிகரியாது; கண்டுழியெல்லாந் துறப்பவோ?—சினத்துக்குக் காரணமாகிய பிழைகண்டவிடத்திலே எல்லாம் உயிரைவிடக் கடவதோ?; மண்டி அடிபெயராது ஆற்ற இளி வந்த போழ்தின்—[1]சென்றுமண்டி நின்றநிலையிற் பெயராதே தமக்குறுதியாகிய மேன்மைகளழிய [2]இளிவரவு வந்தவிடத்தில்;

---

[2] இளிவரவு—இகழ்ச்சி.

முடிகிற்கும் உள்ளத்தவர் - †[அவ்விளி வரவுகள் செய்யாதே முடிக்கவல்ல ஊக்கத்தினை யுடையார் என்றவாறு.]

அறிவுடையோ ரானவர்கள் சினத்தைத் தவிர்ந்திருப்பினும், மானமழிய வருமிடத்து அறத்துக்கேதுவாக உயிரைத் துறந்து, அறத்தினைக் கொள்வதற்கிடம் வருமிடத்து உயிரைப் பரிகரிப்பது குற்றமாகலால்; அறிவில்லார் செய்வதனைத் தமக்கது சினமாகக் கருதலாகாததன்றி இவ்வகைத்தாய் இளிவரவு வந்தவிடத்து, உயிர்க்கு வஞ்சிப்பதல்லவென்று அதன்தன்மை கூறியதாயிற்று.

பதுமனார்:-கெடாத சிறப்பையுடைய தமது இன்னுயிரைக் காவாது, சினத்திற்குக் காரணமாகிய பிழை கண்டுழி யெல்லாந் துறப்பவோ?; நின்ற நிலையிற் பெயராது சென்று மண்டித் தாங்கொண்ட மேற்கோளழிய மிகவிளிவரவு வந்தவிடத்து, அவ்விளிவரவுகள் செய்யாதே முடிக்கவல்ல ஊக்கத்தினையுடையார் என்றவாறு.

தண்டா-கெடாத. கண்டுழி-சினத்துக்குக் காரணமாகிய பிழை கண்டவிடம். மண்டி-எதிரே அடர்ந்து. அடிபெயராது ஆற்ற இளிவந்த போழ்தின்—நின்றநிலையிற் பெயராது மிகவும் இளிவரவு வந்தபொழுது. [முடிகிற்கும் உள்ளத்தவர்—] தம்மிடத்து அதனாலொரு விகற்பம் வராதபடி தமக்குவந்த விளிவரவு பிரகாசிப்பதல்லவென்று அடக்கி முடியுமுள்ளத்தவர். 'இன்னுயிர்' என்றது ஈண்டு உள்ளத்தைநோக்கி. தன்னுயிர் தான் பெறப் பெற்றானென்பது [1]"உள்ளத்தான் உள்ளான் வெகுளி என்றாற்போல.

விளக்க உரை:- தண்டாச் சிறப்பிற்றம் இன்னுயிரைத்

†சுவடியில் இவ்விடத்தில் 'உயிரை விடவல்ல வலியினை யுடையாரென்றவாறு' என்று இருக்கிறது.

[1]"உள்ளிய வெல்லாம் உடனெய்தும் உள்ளத்தான்
உள்ளான் வெகுளி எனின்" —குறள்.வெகுளாமை.9.

தாங்காது—நீங்காத சிறப்பினையுடைய தமதினிய உயிரைப் பாதுகாவாது; கண்டுழி யெல்லாந் துறப்பவோ?—சினத்துக்குக் காரணமாகிய பிழை கண்டவிடத்தெல்லாம் உயிரைவிடக் கடவதோ?; மண்டி அடிபெயராது ஆற்ற இளிவந்த போழ்தின் —[சென்றுமண்டி நின்றநிலையிற் பெயராதே தமக்குறுதி களாகிய மேன்மைகளழிய இளிவரவு வந்த விடத்தில்]; [முடிகிற்கும் உள்ளத்தவர்]-தம்மிடத்து அதனாலொரு விகற்பந் தோன்றாதபடி தமக்குவந்த விளிவரவு பிரகாசிப்பதல்ல[வென்று அடக்கி முடியுமுள்ளத்தவர்] என்றவாறு.

'இன்னுயிர்' என்றது ஈண்டு உள்ளத்தை நோக்கி. தன்னுயிரைத்தானே பெறப்பெற்றா ரென்பது [1]"உள்ளத்தான் உள்ளான் வெகுளி", என்றாற்போல.

குறிப்பு:--

மானங்காத்தற்காக முத்திப்பேற்றிற்குரிய யாக்கையைத் துறவறத்தார் விட்டு முத்திப்பேற்றை இழக்கார் என்றார்.

(உ)

63· **காவாதொருவன்றன் வாய்திறந்து சொல்லுஞ்சொல்**
ஓவாதே [2]தன்னைக் சுடுதலால்—ஓவாதே
ஆய்ந்தமைந்த கேற்வி யறிவுடையா ரெஞ்ஞான்றுங்
[3]காய்ந்தலமைத்து சொல்லார் கறுத்து.

கருமர்:—என்பது. காவாது ஒருவன் தன்வாய்திறந்து சொல்லுஞ் சொல்—தம்மை மதியாமலொருவன் வாய்திறந்து இழிவாகச் சொன்ன சொற்களானது; ஓவாதே தன்னைச் சுடுதலால்—தாம் பொறுத்துவிட்ட பின்பு அந்த இழிவான

---

[1]குறள். 309.

பா-ம்:—[2]'தம்மைச்'

[3]'காய்ந்தமைந்த'.

சொற்களானது சொன்னவன் தன்னையே ஒழியாதே வருத்துமாதலால்; ஓவாதே ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையார்— ஒழியாதே நன்னூல்களை ஆராய்ந்து நிரம்பிய கேள்வியி னாலாகிய அறிவினையுடையார்; எஞ்ஞான்றுங் காய்ந்தமைந்து சொல்லார் கருந்து ...ந்நாளும் பிறர்தம்மை இகழ்ந்து சொன்னாலுமதற்குத் தாம் மனத்துக் கோபமுண்டாகிக் கடிய சொற்களை வெகுண்டு சொல்லா ரென்றவாறு.

பதுமனார்:—பாதுகாவாது பிறனொருவன் தன்வாய் திறந்து சொல்லுங் கடுஞ்சொற்கள் ஒழியாதே தம்மைச் சுடுமாதலால், ஒழியாதே ஆராய்ந்து நிரம்பிய கேள்வியானாய அறிவுடையார், பிறரைக் காய்ந்தமைந்த சொற்களை வெகுண்டு சொல்லா ரெஞ்ஞான்று மென்றவாறு.

அல்லதூஉம் தன்னைச் சுடுதலா லென்று பாடமோதித் தன்னையே சுடுமாதலாலென்று பொருளுரைப்பாரு முளர். தம்மைச் சுடுதலால்—கேட்டவர் தம்மையெனவுஞ் சொன்னவன் தன்னையே [யெனவுஞ்] சுடுதலால். கறுத்து—வெகுண்டு.

விளக்க உரை:— காவாது ஒருவன் தன்வாய்திறந்து சொல்லுஞ் சொல்—தம்மை மதியாம லொருவன் வாய்திறந்து சொல்லுங் கடியசொற்கள்; ஓவாதே தம்மைச் சுடுதலால்— தாமதனைப் பொறுத்துவிடப் பின்புவைதவன் தன்னையே விடாமல் வருத்துமாதலால்; ஓவாதே ஆய்ந்தமைந்த கேள்வி யறிவுடையார்—ஒழியாதே நூல்களை யாராய்ந்து நிரம்பிய கேள்வி யாலாய வறிவினை யுடையார்; எஞ்ஞான்றுங் காய்ந்தமைந்து சொல்லார் கறுத்து—எல்லாநாளும் [பிறர்தம்மை யாதொன்றைச் செய்யினும் சினத்தினான்] மிகக் கடிய சொற்களை வெகுண்டு சொல்லார் என்றவாறு.

தம்மைச் சுடுதல் கேட்டவர்தம்மை எனவும், சொன்னவர் தன்னையே சுடுதலெனவுமாம்.

ஒப்புமைப் பகுதி:-

"யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல் இழுக்குப்பட்டு".

—குறள். 127.

"தீயினால் சுட்டபுண் உள்ஆறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு".

—குறள். 129.

"தன்னைத்தான் காக்கின் சினம்காக்க காவாக்கால்
தன்னையே கொல்லும் சினம்"

—குறள். 305.

"எள்ளிப் பிறருரைக்கு மின்னாச்சொல் தன்னெஞ்சில்
கொள்ளி வைத்தாற்போல் கொடிதெனினு—மெள்ள
அறிவென்னு நீரால் அவித்தொழுகல் ஆற்றின்
பிறிதெனினும் வேண்டா தவம்".

—அறநெறி. 101.

"காவா நாவிற் கணகனும் விசயனும்"

—சிலப். கால்கோட். 159.

"காவாதவள் கண்ணறச் சொல்லிய வெஞ்சொல்".

—சீவக. 1069—3

"ஆக்கப் படுக்கும் அருந்தளைவாய்ப் பெய்விக்கும்
போக்கப் படுக்கும் புலைநரகந் துய்ப்பிக்கும்
காக்கப் படுவன இந்திரியம் ஐந்தினுள்
நாக்கல்ல தில்லை நனிவெல்லு மாறே".

—வளையாபதி.

"பரிந்தா லென்னா மென்றனள் பாயுங் கனலே போல்
எரிந்தாறாதே இன்னுயிர் உண்ணும் எரியன்னாள்"

—கம்ப. அயோத்தி. கைகேயி. 43.

"நாவது காவானாகில் அவனுக்கா நடந்து போரில்
சாவது பழுதென்றன்றோ சகத்துளோர் சாற்றுகின்றார்"

—வில்லி. கிருட். 142.

"கற்றறிந்தார் கண்டது அடக்கம்"

—பழமொழி.

குறிப்பு:-

பிறர்கூறிய கடுஞ்சொல் தம்மை வருத்துதலைக்கண்டு அறிவுடையார், தாம்கூறும் கடுஞ்சொல்லும் இவ்விதமே பிறரை வருத்துமென, சினந்தார் மாட்டும் பொறுப்பதன்றிச் சினந்து கடுஞ்சொல் உரையாரென்றார். இது துறந்தார்க்குரிய சீரிய பண்பாம்.

இனி, இல்லறத்தின் வாழ்வான் இங்ஙனம் பொறுத்தலரிது. ஆயினும் இகழ்ந்தாரைக் காணாதவிடத்தே இகழ்ந்தது புறங் கூறாது அவர்முன்னே இகழ்ந்து கூறிவிடுக; என இச்செய்யுளிற்கு மாறு பாடாக வரும் கீழ்க்கண்ட நாலடிச் செய்யுளையும் காண்க.

"தம்மை யிகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை யவரொடு பட்டது"

—நாலடி. மெய்ம்மை. 7.

கேள்வியாவது, 'கேட்கப்படும் நுற்பொருள்களைக் கற்றறிந்தார் கூறக்கேட்டல்' என்பவர் பரிமேலழகர். கறுத்து—கோபித்து; "கறுப்புஞ் சிவப்பும் வெகுளிப் பொருள" (தொல். சொல். உரி. 76).

(ந)

64. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்—ஓர்த்ததனை
உள்ளத்தா னுள்ளி யுரைத்துரா யூர்கேட்பத்
துள்ளித்தூண் முட்டுமாங் கீழ்.

தருமர்:—என்பது. நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்-தம்மை எதிர்த்துத் தமக்கு நிகரில்லாதவர் நீர்மையல்லாத இழிவான சொற்களைச் சொன்னவிடத்து; வேர்த்து வெகுளார் விழுமியோர்—சீரிய குணத்தை யுடையவர்கள் மனமழுங்கி

வெகுளுதலைச் செய்யார்; ஓர்த்ததனை உள்ளத்தான் உள்ளி—பிறர்சொன்ன இளிவரவான சொற்களை மனத்தால் நினைந்து [1]மறுகுவதுஞ்செய்து; உரைத்து உராய் ஊர்கேட்ப—அச் சொற்களை ஊர்தோறுஞ் சென்றுசொல்லி எங்குமறியும்படி நிரப்பி; துள்ளித் தூண்முட்டுமாங் கீழ்—துடித்துத் தூணினை முட்டுவர் கீழ்மக்களானோர் என்றவாறு.

நாம் முற்செய்த தீவினையால் வந்ததன்றி தீவினை செய்யாதிருக்கில் நமக்கிது வரக்கடவதல்லவென்று, சீரியோ ரதனையொரு பொருளாக எண்ணி மனமழுங்காமல், தமது அறிவினாலே சினத்தை மீட்டிருப்பதுபோலப் பொறுப்பதின்றி; தாமுஞ் சினத்தைப்பாராட்டி யதனால் மற்றும் இழிவெய்திக் கெடுவர் கீழோராயினார். அதனாலவர் பின்னும் படுந்துன்பத்தைத் தூண் முட்டுவரென்று, கீழ்மக்கள் அறிவின்மையை இழிவாக்கிக் கூறியது.

பதுமனார்:—தமக்கு எதிரில்லாதார் எதிர்ந்து நீர்மையல்லாத சொற்களைச் சொன்னால், மனம்புழுங்கி வெகுளார் சீரியோர். சொன்னகுற்றத்தை மறவாது மனத்தானினைந்து, ஊரறியச் சென்று சொல்லிப்பதறித் தூணின்கண் தலையை முட்டுவர் கீழாயினாரென்றவாறு.

நேர்த்து—எதிர்த்து. உரைத்து உராய்—சொல்லித்திரிந்து, துள்ளி—பதறி.

விளக்க உரை:—நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்-தம்மை எதிர்த்து நிகரல்லாதார் நீர்மையல்லாத சொற்களைச் சொன்னவிடத்து; வேர்த்து வெகுளார் விழுமியோர்—மனம்புழுங்கிக் கோபியார் சீரியோர்; ஓர்த்ததனை-பிறர்வைத்தனை; உள்ளத்தான் உள்ளி—மனத்தால் நினைந்து மறுகுவதுஞ் செய்து; உரைத்து உராய் ஊர்கேட்ப—ஊரறியச்சென்று

---

[1] மறுகுதல்—மனங்குழம்புதல், சுழலுதல், புரளுதல்.

சொல்லியதனை எங்கும்பரப்பி; துள்ளித்தூண் முட்டுமாங்கீழ்— துடித்துக் தூணின்கண் தலையை முட்டுவார் கீழாயினா ரென்றவாறு.

உரைத்துஉராய்—சொல்லித் திரிந்து. துள்ளி—பதறி.

மேற்கோள் பகுதி:-

மயிலை:-'நிகர்' என்பது உவமவுருபாக வந்ததற்கு **"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்"** என்ற அடியை மேற் கோளாகக் காட்டுவர்.

—நன்.சூ.366.

பிரயோக:— **"நேர்த்து.....................விழுமியோர்"** என்புழி வெகுண்டுவேரார் என முன்பின்னாகப் பிறந்தது".

—சூ.39.

சிவஞானபோதமா:— "கண்டு காட்டல் — என்பதனை, "வேர்த்து வெகுளார் விழுமியோர்' என்புழிப்போலக் 'காட்டிக் காண்டல்' எனமாறி வைத்துரைத்துக் கொள்க".

—சூ.11.

ஒப்புமைப் பகுதி:-

"கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்".

—நாலடி.66.

— நீர்த்தன்றிக்

கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு"

—நாலடி.70.

"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்தல் தகுதி"

—நாலடி.72.

"விழுமியோர், காண்டொறுஞ் செய்வர் சிறப்பு"

—நாலடி.159.

"ஆய்ந்த அறிவின ரல்லாதார் புல்லுரைக்குக்
காய்ந்தெதிர் சொல்லுபவோ? கற்றறிந்தார்" —பழ.268.

"இறப்பச் சிறியவர் இன்னா செயினும்
பிறப்பினால் மாண்டார் வெகுளார்" —பழ.370.

"ஆக்கம் பெரியார் சிறியார் இடைப்பட்ட
மீச்செலவு காணின் நனிதாழ்ப" —நீதிநெறி.17.

குறிப்பு:—

பெரியோரின் இயல்பினையும் கீழோரின் இயல்பினையும் எடுத்துக்கூறிய இச்செய்யுள் "தன்மை நவிற்சி யணி". வேர்த்தல், துள்ளுதல், தூண்முட்டுதல் என்பவை சினத்தின் மிகுதியைக் காட்டின. நேர்த்து, ஓர்த்து என்பன நேர்ந்து, ஓர்ந்து என்பவற்றின் வலித்தல். விழுமியோர்—சீரியோர்; "விழுமஞ் சீர்மையும் சிறப்பு மிடும்பையும்" (தொல்.சொல்.உரி.சூ.57).

(௪)

65. இளையா னடக்க மடக்கங் கிளைபொருள்
இல்லான் கொடையே கொடைப்பயன்—எல்லாம்
ஒறுக்கு மதுகை யுரனுடை யாளன்
பொறுக்கும் பொறையே பொறை.

தருமர்:—என்பது. இளையான் அடக்கம் அடக்கம்—வயதில் சிறியவன் தனது ஐம்பொறிகளை நெறிதவறாது, அடக்கி ஒழுகுதலே அடக்கமாவது; கிளைபொருள் இல்லான் கொடையே கொடைப்பயன்—வளரும்பொருள் இல்லாதவன் கொடுக்கிறதே கொடைக்குப் பயனாவது; எல்லாம் ஒறுக்கும் மதுகை உரன் உடையாளன்—மற்றுள்ள எல்லா வகையினாலுந் தண்டிக்கத் தக்க மிகுதியான வலியினையுடையவன்; பொறுக்

கும் பொறையே பொறை—இத்தன்மையாகிய வலியினையுடை யவன் பொறுப்பதே பொறையாவதென்றவாறு.

வலியில்லாதவன் ஒருவர் ஒறுத்த காலத்தில் எதிர்த்துச் செய்யத்தகுவ தொன்றுமில்லை. ஆதலால் அவன் பொறுப்பது பொறையல்ல. யாவரையும் ஒறுக்கும் வலியுடைத்தாயும் பொறுத்தல் அவர்க்கழகு. யாவரையும் ஒறுக்கும் மிக்க வலியாவது, தவவலி. அரசனாயினும் தனக்கடங்கினாரைத் தண்டிப்பதன்றி ஏனையோரைத் தண்டிக்குந் தன்மையில்லை. தவவலியினாலவர் யாவரையுந் தண்டிக்குந் தன்மையுடையார். அத்தன்மையுடையார் பொறுத்தலே பொறை. ஆதலால் தவவிரதம் பூண்டார் சினத்தை மேற்கொள்ளல் ஆகாதென்பதாயிற்று. ''யதீனாங் கோபீ சண்டாளி'' யென்றார் வடமொழியாரும்.

வயது முதிரக் காமமடங்கும், அத்தன்மையுடைத்தாயும் அறிவில்லார் அடங்குதல் செய்யார். இளமையில் காமமிகுதி யாலே பொறி நெறிசெல்லாது பரக்குமாதலால், அதனைத் தன்னறிவினால் அடக்கவேண்டுமதனால் 'இளையான் அடக்கம் அடக்கம்' என்றார். கிளைபொருள் இல்லாதாயினென்(றது) தன் னுடம்பு வருந்தியதனால் வரும்பொருள் சிறிதேயாயினும் அப்பொருளில் கொடுத்தல் பல(ன்)மிகுதியாம். அத்தன்மையாருங் கொடுத்தல் வேண்டுமாகில் பொருளுள்ளவன், தனக்குப் பொருள் எய்திய வழி வஞ்சியாமல் கொடுக்க வேண்டுமென்பதாயிற்று.

இளையான் அடக்கம் போலவும், பொருள் இல்லான் கொடுப்பது போலவும், மிக்க வலியினையுடையார் சினத்தை மேற்கொள்ளாது பொறுக்க வேண்டுமென்பதாயிற்று.

பதுமனார்:—இளையானாயினான் ஐம்பொறிகளை யடக்கு தல் அடக்கமாவது. வளரும் பொருளையில்லாதான் கொடையே பயனுடைய கொடையாவது. எல்லா வகையானும் ஒறுக்க வல்ல முதன்மையையும், வலியினையுமுடையான் பொறுக்கின்ற பொறையே பொறையாவ தென்றவாறு.

எல்லாம் ஒறுக்கும்—எல்லாப் பகைகளையும் அடக்கும்.

மதுகை உரன்—வலிய நிலை.

விளக்க உரை:—இளையான் அடக்கம் அடக்கம்— இளை யானாயினான் ஐம்பொறிகளையு மடக்குதல் அடக்கமாவது; கிளைபொருள் இல்லான் கொடையே கொடைப்பயன்—(வளரும் பொரு)ளில்லாதவன் கொடுத்தலே கொடைப்பயனாவது; எல்லாம் ஒறுக்கும் மதுகைஉரன் உடையாளன்—எல்லாவகையாலும் ஒறுக்கவல்ல முதன்மையையும் வலியையுமுடையவன்; பொறுக்கும் பொறையே பொறை—பொறுக்கின்ற பொறையே பொறை யென்றவாறு.

எல்லாம் ஒறுக்கும்—எல்லாப் பகைகளையு மடக்கும். மதுகை உரன்—வலிய நிலை.

ஒப்புமைப் பகுதி:—

"அத்த நண்ணிய நாடுகெழு பெருவிறல்
கைப்பொருள் யாதொன்று மிலனே நச்சிக்
காணிய சென்ற விரவன் மாக்கள்
களிறொடு நெடுந்தேர் வேண்டினுங் கடவ
உப்பொய் சாகாட் டுமணர் காட்ட
கழிமுரி குன்றத் தற்றே"

—புறம். 313.

"பொறுத்தல் இறப்பினை என்றும் அதனை
மறத்தல் அதனினும் நன்று".

—குறள். 152.

குறிப்பு:—

இளமைகழிந்த முதியவன் ஐம்பொறிகளை அடக்குதலும், நிறைந்த செல்வமுடையவன் தன்செல்வத்தின் மிகச்சிறிய பகுதியைக் கொடுத்தலும், பிறரை ஒறுக்கும் வலியில்லான் பொறுத்திருத்தலும் அருமையானவையல்ல. இவை இயல்பே

யாம்.

ஐம்பொறிகளை வெல்லுதற்கரிய இளமைப் பருவமுடையவன் நெறிதவறாது அடங்கியிருத்தலும், வளரும் செல்வத்தினைப் பெற்றிராத வறியவன் தனக்கியன்றளவு கொடுத்தலுமாகிய இவைகளே அரியன. அதுபோன்று யாவரையும் ஒறுக்கவல்ல தவவலியினை யுடையான், தனக்குத் தீங்கிழைத்தார் மாட்டும் சினமெழாது பொறுத்திருத்தலே சிறந்த பொறையாவது என்ற வாறு.

இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி.

தருமர்:—"கிளைபொருள் இல்லான் கொடையே கொடைப் பயன்" என்ற அடிக்குப் பொருள் கூறுமிடத்து, வளரும் பொருள் இல்லாதவன் கொடுக்கிறதே கொடைக்குப் பயனாவது என்றும், தன்னுடம்பு வருந்தியவதனால் வரும் பொருள் சிறிதே யாயினும் அப்பொருளில் கொடுத்தால் பலன் மிகுதியாம் என்றும் உரைப்பர்.

(ரு)

66. கல்லெறிந் தன்ன கயவர்வா யின்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்—[1]ஒல்லை
இடுநீற்றாற் பையவிந்த நாகம்போற் றத்தங்
குடிமையான் வாதிக்கப் பட்டு.

தருமர்:—என்பது. கல் எறிந்தன்ன கயவர்வாய் இன்னாச் சொல் — கல்லெறிந்தாற் போலுங் கீழோரானவர் வாயிற் பொல்லாச் சொற்களை; எல்லாருங் காணப்பொறுத்து உய்ப்பர் —யாவருமறியப் பொறுத்துத் தம்மை உயர்ச்சியிற் செலுத்துவர்;

பா-ம்—[1]'தொல்லை'.

ஒல்லை இடுநீற்றால் பை அவிந்த நாகம்போல்—மந்திரித்திட்ட நீற்றாலே [விரைவிலே] படமொடுங்கி அடங்கின பாம்புபோல; தத்தம் குடிமையான் வாதிக்கப்பட்டு-பெரியோரானவர் 'தங்கள் தங்கள் குடிமை யொழுக்கமென்னும் பாசத்தால் கட்டுப்பட்டு அடங்குவரென்றவாறு.

கயவரானவர் — அறிவில்லாதவர். அறிவின்மையால் ஒருவரைக் கல்லால் எறிந்தாற்போல இழிவான சொற்களை யவற்குச் சினமிகுதியாம்படிக்குச் சொன்னாராயினும், அச்சொல்லைக் கருதிச் சினத்தை மேற்கொண்டாராகில் தாமும் அவரைப் போலக் கீழோராவது உட்கொண்டு, தங்குடி ஒழுக்கத்துக்கு இயன்றதல்ல வென்றவரை. அசேதனமாக வெண்ணித் தம்மறிவினால் சினத்தை மீட்டலென்பதாயிற்று.

பதுமனார்: –கல்லெறிந்தாற்போலுங் கயவர்வாய் இன்னாத சொற்களை எல்லாரும் அறியவே பொறுத்துச் செலுத்துவர்; இட்ட நீற்றான் விரைந்து படமடங்கிய பாம்புபோலத் தம்முடைய பழைய குடிப்பிறப்பால் ஒறுக்கப்பட்டென்றவாறு.

உய்ப்பர்—செலுத்துவர். பையவிந்த—படமடங்கின குடிமையால்—குடிப்பிறப்பால். தொல்லைக் குடிப்பிறப்பால் என்று கூட்டுக.

விளக்க உரை:— கல் எறிந்தன்ன—கல்லெறிந்தாற் போலும் கயவர்வாய் இன்னாச்சொல் — கயவர் சொல்லுங் கடிய சொற்களை; எல்லாருங்காணப் பொறுத்து உய்ப்பர்—யாவரு மறியப் பொறுத்துச் செலுத்துவர்; தொல்லை இடுநீற்றால் பை அவிந்த நாகம்போல்—மந்திரித்திட்ட நீற்றாலே படமொடுங்கின பாம்பு போல; தத்தம் குடிமையால் வாதிக்கப்பட்டு—தந்தா முடைய பழைய குடிப்பிறப்பாலே ஒடுங்கப்பட்டு [என்றவாறு].

பிறர் வைதவற்றைப் பொறுத்து விடுவரென்றவாறு. தொல்லைக் குடிபிறப்பால் என்று கூட்டுக.

ஒப்புமைப் பகுதி:-

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்"

—நாலடி. 64.

"—நீர்த்தன்றிக்

கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு"

—நாலடி. 70.

"நேரல்லார் நீரல்ல சொல்லியக்கான் மற்றது
தாரித் திருத்தல் தகுதி"

—நாலடி. 72.

குறிப்பு:-

கயமை—குணங்கள் யாவும் இலராய கீழோரது தன்மையென்பர் பரிமேலழகர் (குறள். அதி. 108). 'கயவர்வாய் இன்னாச்சொல்' என்றவிடத்து 'சொல்' என்பதே இருக்க 'வாய்'. என வேண்டாது கூறியதென்னெனில், கயவர் வாய் எப்பொழுதும் நல்ல சொற்கள் பயின்றறியாதென அதன் இழிவு விளங்குவதற்காம். 'செம்பொருள் கண்டார்வாய்ச் சொல்' என்ற குறளின்கண் (91) "வாய் எனவேண்டாது கூறினார், தீயசொல் பயிலா என்பது அறிவித்தற்கு" என்ற பரிமேலழகர் உரையைக் காண்க.

"குடிமையாவது குடிப்பிறப்பிற்குத் தக்கவொழுக்கம்; குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமையென்றா ரென்பது; அதனை ஊராண்மையெனவுஞ் சொல்லுப" என்றார் பேராசிரியர் (தொல். மெய்ப்பாடு. சூ. 25).

மந்திரித்து இடப்பட்ட வீபூதியினால் கட்டுப்பட்டு பிறர் வருத்தினாலும் சீறாது அடங்கிய நாகம்போல, தமது குடிப்பிறப்பாகிய ஒழுக்கத்திற்குக் கட்டுப்பட்டு கயவர்வாய் இன்னாச் சொற்களை யெல்லாம் பொறுத்துச் சினமெழாது அடங்கிவிடுவர் துறந்தவ ரென்றவாறு. இது உவமையணி.

(சா)

67. மாற்றாராய் நின்றுதம் மாறேற்பார்க் கேலாமை
ஆற்றாமை யென்னா ரறிவுடையார்—ஆற்றாமை
நேர்த்தின்னா மற்றவர் செய்தக்காற் றாமவரைப்
பேர்த்தின்னா செய்யாமை நன்று.

தருமர்:- என்பது. மாற்றாராய் நின்று தம்மாறு ஏற்பார்க்கு ஏலாமை—தமக்குப் பகைவராக நின்று தம்முடன் மாறுபடு தலைச் செய்வார்க்குப் பொறுப்பதனை; ஆற்றாமை என்னார் அறிவுடையார்—அவருடன் எதிரதற்குச் செயலற்றுப் பொறுத் தானென்று இழிவாகக் கருதார் அறிவினையுடையார்; ஆற்றாமை நேர்த்து இன்னா மற்றவர் செய்தக்கால்—தாம் பொறாதன இளிவரவாகியவற்றை அப்பகைவராக நின்றவர் செய்தாராயினும்; தாமவரைப் பேர்த்து இன்னா செய்யாமை நன்று—தாமும் அவரைப்போல இன்னா செய்யாதொழிதல் நன்றென்றவாறு.

ஒருவர் அறிவின்மையினால் ஒருவற்குப் பகைவர் செய்வது போல மிகுதியான குற்றங்களைச் செய்தாராயினும், அதனைத் தம்மறிவினாற் சினமாகக் கருதாமல் பொறுத்தால், அது செய லற்றுப் பொறுத்தாரென்று அறிவுடையார் இழிவாக எண்ணுவ தில்லை. கீழோரானவர் அதனை இழிவாக வெண்ணினால், முதலே தமக்கு மனம்பொறாத குற்றங்களைச் செய்தவர் அறிவின்மையால் செய்ததல்லவோ? அவரைப்போல அறிவில்லா தவரே தாம் பொறுத்ததனை இழிவாகக் கருதுவாரன்றி' அறிவுடையோர் கருதுவதில்லையே! ஆதலால் தமக்கு ஒருவர் செய்த குற்றங்களைக் கருதி தாமும் அவர்க்கொரு தீங்குவிளை யாமல் அறிவினாலே சினத்தை நீக்க வேண்டு மென்பதாம்.

சினந் தவிர்தலே தவவிரதம்பூண்ட தன்மையென்பது தோன்றப் 'பேர்த்தின்னா செய்யாமை நன்று' என்றார்.

பதுமனார்:— பகைவராய்நின்று தம்மோடு மாறு ஏற் பார்க்குத் தாமெதிராமையை வலியின்மையாகச் சொல்லார்

அறிவுடையார். பொறுத்தற்கரிதாம் வகை மாறுபட்டு இன்னா தனவற்றை அப்பகைவர் செய்தால், தாமப்பகைவரை வேறு படுத்தி இன்னா செய்யாதொழிதல் நன்றென்றவாறு.

ஏலாமை—எதிராமை. ஆற்றாமை நேர்த்து—ஆற்றாதபடி எதிர்ந்து.

'மற்றவர் செய்தக்கால் தாமவரைப், பேர்த்தின்னா செய்யாமை நன்று' என்று சொல்லுதல் அல்லாது; 'ஆற்றாமை என்னார் அறிவுடையார்'.

விளக்க உரை:- மாற்றாராய் நின்று-பகைவராய் நின்று; தம்மாறு ஏற்பார்க்கு ஏலாமை—தம் மாறுபட்டவர்க்குப் பொறுப்பதனை; ஆற்றாமை என்னார் அறிவுடையார்—இவன் செயலற்றுப் பொறுத்தானென்று கருதார் அறிவுடையார்; ஆற்றாமை நேர்த்து இன்னா மற்றவர் செய்தக்கால்—தாம் பொறாதவற்றைப் பகைவர் எதிர்ந்து குற்றங்களைச் செய்தா ராயினும்; தாமவரைப் பேர்த்து இன்னா செய்யாமை நன்று— தாமவரை மீண்டு பொல்லாங்கு செய்யாமலிருத்தல் நன்றென்ற வாறு.

ஏலாமை—எதிராமை. ஆற்றாமை நேர்த்து—ஆற்றாதபடி யெதிர்ந்து.

ஒப்புமைப் பகுதி:—

''இணரெரி தோய்வன்ன இன்னா செயினும்
புணரின் வெகுளாமை நன்று''

—குறள்.308.

''கறுத்தின்னா செய்தவக் கண்ணும் மறுத்தின்னா
செய்யாமை மாசற்றார் கோள்''

—குறள்.312.

''இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்''

—குறள்.314.

''பெரியதப் புநராயினும் பகைவர்
பணிந்து திறைபகரக் கொள்ளுநை''

—பதிற்.17—2.

''பொறையின் ஆற்றலால்
மூண்டெழு வெகுளியை முறையின் நீக்கினோர்
ஆண்டுறை அரக்கரால் அலைப்புண்டாரரோ''

—கம்பன்.

(எ)

68. நெடுங்கால மோடினு நீசர் வெகுளி
கெடுங்கால மின்றிப் பரக்கும்—அடுங்காலை
நீர்கொண்ட வெப்பம்போற் றானே தணியுமே
சீர்கொண்ட சான்றோர் சினம்.

தருமர்:—என்பது. நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி—கயவர் மனத்திற்கொண்ட கோபமானது நெடுநாட் சென்றாலும்; கெடுங்காலம் இன்றிப் பரக்கும்—ஆறும் பொழுதில்லாமல் தொடர்ந்தே வளராநிற்கும்; அடுங்காலை நீர்கொண்ட வெப்பம் போல் தானே தணியுமே—தண்ணீரானதை நெருப்பினா(ல் காய்ச்சிய) பொழுதுண்டாகிய வெம்மை ஒருவரால் ஆற்றப் படாமல் தானே தணிவதுபோல; சீர்கொண்ட சான்றோர் குணம்—சீர்மைமிக்க அமைந்தோரானவர் மனத்துண்டாகிய கோபமானதுந் துண்ணீரா(றுவது)போலத் தானே ஆறுமென்றவாறு.

சீர்மையில்லாதவர் கோபங்கொண்டவிடத்து யாவர் சொல்லினும் கோபமாறார். அதுபோலாகாது அமைந்தவர் தாம் சினத்தை மேற்கொள்வது இயல்பல்லவென்று, தம்மறிவினால் மீட்டதனைத்தானே தணியுமென்(றது) அறிவுடையார் தன்மையவாறு.

பதுமனார்:—நெடுங்காலஞ் செல்லினுங் கயவர்வெகுளி கெடும்பொழுதின்றி வளராநிற்கும். நெருப்பினான் அடும்பொழுது நீர்கொண்ட வெம்மைபோல், ஆற்றுவாரின்றித் தானே

தணியுஞ் சீர்மையைக்கொண்ட சான்றோர் வெகுளி என்றவாறு.

அடுங்காலை — நெருப்பால் எரிக்குங்காலை; அச்சினந் தன்னை அடுங்காலை யென்றுமாம்.

விளக்க உரை:— நெடுங்காலம் ஓடினும் நீசர் வெகுளி —நெடுங்காலஞ் செல்லினுங் கயவர் கோபம்; கெடுங்காலம் இன்றிப் பரக்கும்—(ஆறும்பொழுதி)ன்றி வளராதிற்கும்; அடுங் காலை நீர்கொண்ட வெப்பம்போல் — நெருப்பினால் அடுங் காலத்து நீர்கொண்ட வெம்மைபோல; தானே தணியுமே— ஆற்றுவாரின்றித் தானே தணியுமே; சீர்கொண்ட சான்றோர் சினம்—சீர்மைமிக்க சான்றோர் வெகுளி யென்றவாறு.

அச்சினந்தன்னை அடுங்காலை யென்றுமாம்.

ஒப்புமைப் பகுதி:-

"கற்பிளவோ டொப்பர் கயவர் கடுஞ்சினத்துப்
பொற்பிளவோ டொப்பாரும் போல்வாரே—விற்பிடித்து
நீர்கிழிய வெய்த வடுப்போல மாறுமே
சீரொழுகு சான்றோர் சினம்"
"அடுங்காலை.........சினம்":—

—மூதுரை. 23

(அ)

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது" —குறள். 29.

"கலைவலார் நெஞ்சிற் காமமே போன்றும்
கடவுளர் வெகுளியே போன்றும்
உலைவிலார் நில்லா தொருபக லுள்ளே
உருப்பவிர் வெஞ்சுரங் கடந்தார்" —சீவக. 2107.

"வெஞ்சுரம் துறந்த,
மையில் சிந்தையோர் வெகுளியின் தணிந்தது".

—திருவிளை. பாண்டி. சுரந். 64.

69. உபகாரஞ் செய்ததனை யோராதே தங்கண்
அபகார மாற்றச் செயினும்—உபகாரந்
தாஞ்செய்வ தல்லால் தவற்றினால் தீங்கூக்கல்
வான்றேய் குடிப்பிறந்தார்க் கில்.

தருமர்:— என்பது. உபகாரஞ் செய்ததனை ஓராதே—தாம் ஒருவற்குபகாரஞ் செய்தவற்றை விசாரியாதே; தங்கண் அபகாரம் ஆற்றச் செயினும்—அவ்வுபகார(த்துக்குத்) தம்மிடத்து மிகவும் அபகாரங்களைச் செய்தாராயினும்; உபகாரம் தாம் செய்வதல்லால் — தான்செய்யும் உபகாரம்தானே செய்வ தல்லாமல்; தவற்றினால் தீங்கு ஊக்கல்—அவர்செய்த தவறு கருதித் தாமுமவர்க்குத் தீயகாரியஞ்செய்ய ஒருப்படுதல்; வான்றோய் குடிப் பிறந்தார்க்கு இல்—வானைத்தோய்ந்த குடியின்கட் பிறந்தார்க்கில்லை யென்றவாறு.

வான்றோய் குடி—(உயர்)குலம். 'வான்தோய்ந்த' வென்றவர் குலவுயர்ச்சி கூறினார். உயர்குலத்திற் பிறந்தாரிலும் நெறி தவறுவார் இல்லலயோவெனில், குடிமையுடையார் அவ்வில்யபிற் பிழைப்பதில்லையே. ஒருதலையாக அக்குடிக்கண் தோன்றினாராயினும் நெறிதவறில், அவர் முற்பிறப்பின் தொழிலிதுவெனக் கருதி அவரைக் கீழோராகக் கூறப்படும். ஆதலால் உயர்ந்த குடிப்பிறப்பினாலும் அறிவினாலும் ஒருவர், நன்கு செய்யினும் தீங்கு செய்யினும் தாம் நன்கே (செய்வ) ரெனச் சினமின்மை கூறியவாறு.

பதுமனார்:— தாம் உபகாரஞ் செய்தசெயலை யறியாது அபகாரந் தம்மாட்டு மிகச்செய்தாராயினும், தாமுபகாரஞ் செய்வ தல்லது மற்று அவர்செய்த தவறுகாரணமாகத் தீயவை முயன்று செய்தல், வான்றோய் குடியின்கட் பிறந்தார்க்கில்லை என்றவாறு.

தவற்றினால்—தவறு காரணமாக. தீங்கு ஊக்கல்—தீங்கை மேற்கொள்ளுதல். வான்றோய் குடி—வானிலே தோய்வது போல உயர்ந்த குடி.

விளக்க உரை:—உபகாரஞ் செய்ததனை ஓராதே—தாம் உபகாரஞ் செய்தசெயலை யறியாதே; தங்கண் அபகாரம் ஆற்றச் செயினும்—தம்மிடத்தொருவர் அபகாரம் மிகவும் செய்தாராயினும்; உபகாரம் தாம் செய்வதல்லாமல் - தான்செய்யும் உபகாரத்தைச் செய்வதல்லாமல்; தவற்றினால் தீங்குஊக்கல்—அவர்செய்த தவறுகண்டு தீயவற்றைச் செய்ய ஒருப்படுதல்; வான்றோய் குடிப்பிறந்தார்க்கு இல்-வானைத்தோயுங் குடியின்கட்பிறந்தார்கண் இல்லையென்றவாறு.

மேற்கோள் பகுதி:-

பரிமே:-"வானுயர் தோற்றம் என்பது "வான்தோய் குடி" என்றாற்போல இலக்கணை [1]வழக்கு"

—குறள். 272—உரை.

வான்றோய் குடிப்பிறந்தார்க் கில்:—

"வான்றோய் குடிப்பிறந்தார்க் கல்லது"

—நாலடி. 142—2.

ஒப்புமைப் பகுதி:-

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்" —குறல். 314.

"இன்னாசெய் தார்க்கும் இனியவே செய்யாக்கால்
என்ன பயத்ததோ சால்பு". —குறல். 987.

"ஒல்லும்வாய்
இன்னார்க் சினிய புரிதல்" —இன். 38.

(கூ)

---

[1]வழக்கு நான்கு வகைப்படும், அவை,

1. இலக்கணை வழக்கு.
2. உலக வழக்கு.
3. உபசார வழக்கு.
4. மகளிர் வழக்கு.

70. கூர்த்துநாய் கௌவிக் கொளக்கண்டுந்[1] தன்வாயாற்
பேர்த்துநாய் கௌவினா ரீங்கில்லை—நீர்த்தன்றிக்
கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ?
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு.

தருமர்:—என்பது. கூர்த்துநாய் கௌவிக்கொளக் கண்டும்—சினமிகுந்து நாயானது ஒருவரைக் கடிக்கக் கண்டும்; தன் வாயால் பேர்த்து நாய்கௌவினார் ஈங்கில்லை — மீண்டுதம் வாயால் அந்தநாயைக் கடித்தவர்கள் இந்த உலகத்துளில்லை; நீர்த்து அன்றிக் கீழ்மக்கள் கீழாய சொல்லியக்கால்—கீழ் மக்களானார் நீர்மையில்லாத இழிவாகிய சொற்களைச் சொன்னவிடத்தும்; மேன்மக்கள் தம்வாயான் மீட்டு—மேன்மக்களானவர்கள் தாமுமவரைப் போல இழிவாகிய சொற்களைத் தம் வாயினால்; சொல்பவோ? சொல்லுவதோ? எனச் சொல்லாரென்றவாறு.

கீழோரானார் தம்மை இந்நாய் கடிக்கலாமோவென்று அதற்கு இடர்செய்வர். மேலோர் அதன் அறிவின்மையால் வந்ததல்லவோ; அதற்கிடர்செய்யில் தம்விதனந் தீர்வதல்லவே. இதுநாம் முற்செய்தீவினையென்று கருதி அதன்மேற் சினங் கொள்ளாதுபோலக் கீழோர் தம்மை அவமானஞ் செய்தாலும், அவரை அசேதனமாகவெண்ணி அவர்மேற் சினங்கொள்ளாரென்பதாம்.

பதுமனார்:—சினமிக்கு நாய் தன்வாயாற் கௌவிக் கொளக் கண்டும், பேர்த்து அந்நாயைத்தம்வாயால் கௌவினார் இவ்வுலகத்தில்லை. நீர்மையுடைத் தன்றாம்படி கீழாயசொற்களைக் கீழ்மக்கள் சொல்லினால், மேன்மக்கள் தம்வாயால் மீண்டு தாமுஞ் சொல்லுவாரோ? என்றவாறு.

கூர்த்து—சினங்கூர்ந்து. நீர்த்தன்றி—நீர்த்தனவன்றி.

பா-ம்:—[1] 'தம் வாயால்'.

விளக்க உரை:— கூர்த்துநாய் கௌவிக் கொளக் கண்டும்—சினமிக்க நாயானது தன்வாயாற் கௌவிக் கொளக் கண்டும்; தம்வாயால் பேர்த்து நாய் கௌவினார் ஈங்கில்லை—மீண்டும் தம்வாயால் அந்தநாயைக் கௌவினார் இவ்வுலகத்தில்லை நீர்த்தன்றி—நீர்மையல்லாத; கீழ்மக்கள்; கீழாய சொல்லியக்கால்—கீழான சொற்களைச் சொன்னக்கால்; தம்வாயான் மீட்டு—மேன்மக்கள் தம்வாயால் மறித்து; சொல்பவோ?— சொல்லுவரோ? சொல்லா ரென்றவாறு.

நீர்த்தன்றி- நீர்த்தனவன்றி.

ஒப்புமைப் பகுதி:—

''நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்''

—நாலடி. 64.

''கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்''

—நாலடி. 66.

''நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது
தாரித் திருத்தல் தகுதி''

—நாலடி. 72.

''ஆய்ந்த அறிவின ரல்லாதார் புல்லுரைக்குக்
காய்ந்தெதிர் சொல்லுபவோ கற்றறிந்தார்?—தீந்தேன்
முசுக்குத்தி நக்கு மலைநாட! தம்மைப்
பசுக்குத்தின் குத்துவா ரில்''.

—பழ. 268.

''நீர்த்தக வில்லார் நிரம்பாமைத் தந்நலியின்
கூர்த்தவரைத் தாநலிதல் கோளன்றால் சான்றவர்க்குப்
பார்த்தோடிச் சென்று கதம்பட்டு நாய்கவ்வின்
பேர்த்துநாய் கவ்வினா ரில்''.

—பழ. 37.5

குறிப்பு:-

இப்பாட்டின்கண்ணும் 'சொல்ப' எனவே இருக்க, 'தம் வாயால்' என வேண்டாது கூறியதுகாண்க. இவ்விதம் கூறியது அவர்கள் வாய் நல்லசொற்களையே பயின்றதெனத் தாம் வேண்டியதன் சிறப்பு கூறுதற்காம். 91, 139, 415-ம் குறள்களில் பரிமேலழகர் உரையைக் காண்க. இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமையணி.

(ய)

துறவறவியல் முற்றிற்று.

2, [1]இல்லறவியல்.

---

8. பொறையுடைமை.

தருமர்:— அஃதாவது பொறையென்னும் விரதத்தையே தமக்குடைமையாகக் கொள்ளுதல். சினமின்மை கூறியதே யமையாதோ பொறையுடைமையுங் கூறவேண்டுமோவென்னில்; சினமின்மையாவது, பிறர் தம்மனமானது சினக்கத்தக்க குற்றங் களைச் செய்யிலவர்மேற் கோபமெழாமல் அறிவால் மீட்டல்.

பொறையுடைமையாவது மெய், வாய், கண், மூக்கு, செவி களுக்கு இதமானதொழிந்து பிறிதொன்றினால் இந்தப் புலன் களுக்குத் தகாத குற்றங்கள் வந்ததாகில், பூவுக்கு மணமும்

---

[1] "இல்லறமாவது, இம்மை மறுமையாகிய இருமையின்பங் களையும் அனுபவித்தற்கு உரிய இல்வாழ்க்கை நிலைக்குச் சொல்லுகின்ற நெறிக் கண்நின்று, அதற்குத் துணையாகிய கற்புடை மனைவியோடுஞ் செய்யப்படுவது'' என்று திருக்குறள் உரைப்பாயிரத்தின்கண் பரிமேலழகர் கூறுதல் காண்க.

"இல்லின்கண் இருந்து தானமுதலாயின செய்தல்'' என்பர் குறள் உரையாசிரியர்களி லொருவராகிய மணக்குடவர்,

கரும்புக்கு இரதமும்போல பாவிக்கப்படாமல், சுபாவமாகப் படிம்போன் றிருத்தலும், விரதத்துக்கு இடையூறாகிய பசி, தண்ணீர்த்தாகம் முதலானவற்றைப் பொறுத்தலுமாம்.

பதுமனார்:—தமக்கு இதஞ்செய்யும் வலியார்திறத்துச் சினமொழித்தும், அவர்முன்பு தாம்நிற்கும் நிலையையும் கருதி, எளியோர் குறை செய்தவிடத்தும் இவரெளியர் நமக்காற்றா ரென்றும், அறியாமற் செய்தாரென்றும் கருதித் தம்பெருமையும் அறிவும்பார்த்துப் பொறுத்தலும், ஒருவருடன் மாறுகொள்ளின் அவருமெதிரே மாறுகொண்டு, இருவருஞ் சேர்ந்தாருடனே கெடும்படியை யொருவன் ஓர்ந்து பொறுத்தலுமாம்.

இஃது அதன்பின் சொல்லியதென்னை. அச்சினமின்மை பொறையுடைமை யாகாதோவெனின் அற்றன்று. பசி, நோய், நில, நீர், தீவளி முதலிய வெல்லாத் துன்பங்களும் உடம்பினைச் சாருமாதலால், இன்பதுன்பங்களை மனவலியால் ஐம்புலன் கள(ாலும்)அடக்கித் [1]துறவின்கண்ணே முயலவேண்டுமென்பது கருத்து. அதனால் சினமொழிதற்கும் அதுவே உறுதியென்ப தாம்.

விளக்க உரை:— பொறையென்னும் விரதத்தையே

---

[1]இவ்வுரையால் 'பொறையுடைமை' என்னும் அதிகாரமும் துறவற வியலைச் சார்ந்ததாக, இவ்வுரையாசிரியர் கருதுகிறா ரென்த் தெரிகிறது. விளக்க உரையில் அதிகாரவடைவின் கண்ணும், "சினமின்மையை வைத்து அதன்பின்பாக இப்படி யொத்த தவத்துக்கு மறுதலையாகிய பசியைப் பொறுத்தலும், அறியாமையால் ஒருவர் தன்னையொரு தீங்கு செய்தாலதனைப் பொறுக்கவும் என்பதுகொண்டு பொறையுடைமையை வைத்து, அதன்பின்பாக இல்லறத்தை நடத்துவார்க்கு இந்தப் பிறர்மனை நயவாமை பெரும்பான்மையாதலின் இந்தப் பிறர்மனைநயவாமை யை இல்லறத்துக்கு முதலதிகாரமாக வைத்தார்" என வந்துள்ளது. இது அறிஞர்களின் ஆய்விற்குரியது.

தமக்குறுதியாகக் கொள்ளுதல் மெய், வாய், கண், மூக்கு, செவிகளுக்கு இதமானவை யொழிந்து பிறிதொன்றினால் அந்தப் புலன்களுக்குத் தகாதகுற்றங்கள் வந்ததாகில் பூவுக்கு மணமும், கரும்புக்கு இரதமும்போலப் பாவிக்கப்படாமற் சுபாவமாகப் படிமம்போல் இருத்தலும், விரதத்துக்கு இடையூறாகிய பசி, தண்ணீர்த் தாகத்தைப் பொறுத்தலுமாம்.

அறியாமையால் தம்மை ஒருவர் தீங்குசெய்தால், அதனைப் பொறுக்க வேண்டுமென்பதுகொண்டு பொறையுடைமையை வைத்தது.

குறிப்பு:-

பொறையுடைமை:-

பரிமே:— அஃதாவது காரணம் பற்றியதால், மடமை யானாதல், ஒருவன் தமக்கு மிகைசெய்தவழித் தாமும் அதனை அவன்கட் செய்யாது பொறுத்தலை யுடையராதல். நெறியில் நீங்கிய செய்தாரையும் பொறுக்கவேண்டும் என்றற்கு, இது பிறனில் விழையாமையின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— பொறையுடைமையாவது தமக்குத் துன்பம் செய்தாரைத் தாமும் துன்பஞ் செய்யாது, அவர்மாட்டுச்சென்ற வெகுளியை மீட்டல்.

பரிதி:— பொறையுடைமையாவது பிறர்செய்த குற்றம் பொறுத்தல்; மனத்தொழிலால் மெய்யின்பத்திலும் பெரியதாகை யால் இது சொல்லப்பட்டது என்றவாறு.

—குறள். அதி. 16.

71. கோதை அருவிக் குளிர்வரை நன்னாட!
பேதையோடு யாதும் உரையற்க—பேதை
[1]உரைக்கில் சிதைந்துரைக்கும் ஒல்லும் வகையான்
வழுக்கிக் கழிதலே நன்று.

பா—ம்:—[1]'உரைப்பில்'.

தருமர்:—என்பது. கோதை அருவிக் குளிர்வரை நன்னாட!—மாலைபோல விழுகின்ற அருவியாற் பொலிந்த குளிர்ந்த நிழலையுடைய மலைநாடனே!; பேதையோடு யாதும் உரையற்க—அறிவில்லாருடன் ஒன்றுஞ் சொல்லாதொழிக; பேதை உரைக்கில் சிதைந்து உரைக்கும்—அறியாதவன் ஒன்றைச் சொன்னானால் சிதையச் சொல்லுவான், ஒல்லும் வகையால்—பொருந்திய வளவினாலே; வழுக்கிக் கழிதலே நன்று—அவனைத் தப்பிப் போவதே நன்றென்றவாறு.

அறிவில்லார் தமது குணமேயன்றி எதிர்நின்று பேசுமவர் மேன்மையறிந்து சொல்லார். அச்சொற்களைப் பொறுத்து ஒல்லும்வகையால் அவரைவிட்டுப் போகிறபொழுது, அவர் தம்மை யவமானித்துப் போகிறாரென் றெண்ணினும் இவர்க்கது பொறையன்று. ஆதலால் அவரைத் தப்பிப் போமதற்கான உபாயத்தாலே (அவர்தம் மனம்) முறியாதபடி மேன்மை செய்தே போகவென்றதாம்.

பதுமனார்:—மாலை போல் தோன்றும் அருவியையுடைய குளிர்ந்தவரை நன்னாடனே! பேதையா யிருப்பானுடனே யாதொன்றையுஞ் சொல்லாதொழிக. அப்பேதையாயினான் ஒன்றினைச் சொல்லிற் சிதையச் சொல்லுவன். ஆதலால் அவனை நீங்குவதற்குப் பொருந்தும்வகையால் தப்பி நீங்குதல் நன்றென்றவாறு.

கோதை அருவி—மாலைபோற் றோன்றும் அருவி. சிதைந்து உரைக்கும்—அழியச் சொல்லும். ஒல்லும் வகையால்—நீங்குதற்குப் பொருந்தும் வகையால். வழுக்கி—தப்பி.

இது, ஒருத்தன் பேதைமையிடத்துப் பொறை.

விளக்க உரை:—கோதை அருவி—மாலைபோல விழுகிற அருவியினையுடைய; குளிர்வரை நன்னாட!—குளிர்ந்த மலை

நாடனே!; பேதையோடு யாதும் உரையற்க—அறியாதவனோடு [யாது]ஒன்றுஞ் சொல்லாதொழிக; பேதை உரைக்கில் சிதைந்து உரைக்கும்—அறியாதவன் ஒன்று சொல்லுங்காலத்துக் கேடதைச் சொல்லும்; ஒல்லும் வகையால்—பொருந்திய வளவினால்; வழுக்கிக் கழிதலே நன்று—அவனைத் தப்பி நீங்குதலே நன்றென்றவாறு.

இஃது, ஒருத்தன் பேதைமையிடத்துப் பொறை.

ஒப்புமைப் பகுதி:-

"நயன்சாரா நன்மையின் நீக்கும் பயன்சாராப்
பண்பில்சொல் பல்லா ரகத்து".

—குறள். 194.

"புல்லவையுள் பொச்சாந்தும் சொல்லற்க நல்லவையுள்
நன்கு செலச்சொல்லு வார்"

—குறள். 719.

"கல்லா தவரிடைக் கட்டுரையின் மிக்கதோர்
பொல்லாத தில்லை ஒருவற்கு—நல்லாய்!
இழுக்கத்தின் மிக்க இழிவில்லை; இல்லை;
ஒழுக்கத்தின் மிக்க உயர்வு".

—பழ. 64.

"ஆறாச் சினத்தன் அறிவிலன் மற்றவனை
மாறி யொழுகல் தலையென்க—ஏறி
வளியால் திரையுலாம் வாங்குநீர்ச் சேர்ப்ப!
தெளியானைத் தேற லரிது".

—பழ. 385.

"வென்றிப் பொருட்டால் விலங்கொத்து மெய்கொள்ளார்
கன்றிக் கறுத்தெழுந்து காய்வாரோடு—ஒன்றி
உரைவித் தகமெழுவார் காண்பவே கையுள்
சுரைவித்துப் போலும்தம் பல்".

—நாலடி. 315.

"அருளின் அறம்உரைக்கும் அன்புடையார் வாய்ச்சொல்
பொருளாகக் கொள்வர் புலவர்—பொருளல்லா
ஏழை யதனை இகழ்ந்துரைக்கும் பாற்கூழை
மூழை சுவையுணரா தாங்கு".

—நாலடி.321.

"வெள்ளைக் கோட்டியும் விரகினில் ஒழிமின்"

—சிலப்.வரந்தரு.198.

கோதை அருவிக் குளிர் வரை:-

"இலங்கு நீண்முடி யிந்திரன் மார்பின்மேல்
விலங்கி வீழ்ந்தமுத் தாரமும் போன்றவை"

—சீவக.35.

"கோதை யருவிக் குளிர்வரை மேனின்று"

—சீவக.525.

"இலங்கு மாலை வெள்ளருவிய வெழில்வரை"

—சீவக.2378.

குறிப்பு:-

'கோதை' என்பதற்கு ஒழுங்குஎனப் பொருள்கூறி 'கோதை யருவி' என்பதை எடுத்துக்காட்டாகக் காட்டுவர் அடியார்க்கு நல்லார் (சிலப். 5:191—5). 'கோதை யருவிக் குளிர்வரை நன்னாட' என்பது ஆடூஉ முன்னிலை. சிதைந்து—வரம்பு கடந்து.

மாலைபோல அருவியைக் கொண்டுள்ள மலை என்றார். மலையானது, தன்னிடத்திலுள்ள மணிவரன்றி மரங்களைப் பறித்தேகும் அருவியைப் பொறுப்பதன்றி அவ்வருவியை மாலை போலவும் மகிழ்ந்து கொண்டது. அதுபோன்ற தன்மையினை யுடையோர் பெரியோர் என்பது இவ்வடியின்கண் பயிலும் தொகைமொழி.

தொகை மொழியாவது, "நெஞ்சினிற் பொருளை நிரப்ப வேறொரு, செஞ்சொலிற் காட்டுந் திறனே" என்பது. அஃதாவது கவியானவன் தான் கருதிய பொருளைப் பொருத்தமுற

நாட்டுச் சிறப்பின் மையிலாவது, வேறு முகத்தாலாவது வெளி யிடுவது என்பதாம்.

(௬)

72 **நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால் மற்றது**
தாரித்து இருத்தல் தகுதிமற்று—ஒரும்
புகழ்மையாக் கொள்ளாது பொங்குநீர் ஞாலஞ்
சமழ்மையாக் கொண்டு விடும்.

தருமர்:—என்பது. நேரல்லார்—தமக்கு நிகரல்லாதவர்; நீரல்ல சொல்லியக்கால்—[தம்மை எதிர்த்து] நீர்மையல்லாத சொற்களைச் சொன்னவிடத்து; அது தாரித்து இருத்தல் தகுதி—அந்தச் சொற்களைப் பொறுத்திருப்பதே அமைந்தோர்க்குத் தகுதியாவது: மற்று— அவருடன் தாமும் எதிர்த்து சொன்னால்: பொங்குநீர் ஞாலம்—மிக்க நீர்சூழ்ந்த பூமியிலுள்ளார்; புகழ்மை ஆ கொள்ளாது—அதனைப் புகழாகக் கொள்ளார்; சமழ்மை ஆ கொண்டுவிடும்—அதனைத் தவறாகக் கொண்டு விடுவர் என்ற வாறு.

'ஒரும்' என்பது இடைச்சொல். '**தரித்திருத்தல்**' என்ப தனை விகாரப்படுத்தி எதுகைக்கு இயையும்படி '**தாரித்திருத்தல்**' என்று கூறினார்.

பதுமனார்:—தமக்கு நிகரல்லார் எதிர்ந்து நீர்மையல்லாதன வற்றைச் சொன்னால், அச்சொல்லைப் பொறுத்திருத்தல் ஒருவற்குத் தகுதியாவது. அன்றிப் பொறாததனைப் புகழாகக் கொள்ளாது, பொங்குநீர் ஞாலம் அதற்குத் தாழ்வாகக் கொள்ளு மென்றவாறு.

தாரித்து—பொறுத்து. ஒரும்—இடைச்சொல். மற்று அத னைப் பொறானாயில். சமழ்மை—மதிக்கப்படாத தாழ்வு.

இது, நிகரல்லாதா ரிடத்துப் பொறை.

விளக்க உரை:- நேரல்லார் நீரல்ல சொல்லியக்கால்—தமக்கு நிகரல்லாதார் எதிர்ந்து நீர்மையல்லாத சொற்களைச் சொன்னால்; [மற்று—அசை] அது தாரித்து இருத்தல் தகுதி—அந்தச் சொல்லைப் பொறுத்திருத்தலே ஒருவற்குத் தகுதியாவது; மற்று—அவனோடு எதிர்ந்து சொல்லுதலை; பொங்குநீர் ஞாலம்—மிக்க நீர் சூழ்ந்த பூமியிலுள்ளார்; புகழ்மை ஆ கொள்ளாது—புகழாகக் கொள்ளாது; சமழ்மை ஆ கொண்டு விடும் அதனைத் தாழ்வாகக் கொண்டுவிடுவா ரென்றவாறு.

தாரித்து—பொறுத்து. ஒரும்—இடைச்சொல். சமழ்மை—மதிக்கப்படாத தாழ்வு.

இது, நிகரல்லாதாரிடத்துப் பொறை.

மேற்கோள் பகுதி:—

மயிலை:- எதிர்மறை எச்சத்திற்கு இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன். சூ. 359.

ஒப்புமைப் பகுதி:—

"தெரியா தவர்தம் திறனில்சொல் கேட்டால்
பரியாதார் போல இருக்க—பரிவில்லா
வம்பலர் வாயை அவிப்பான் புகுவாரே
அம்பலம் தாழ்க்கூட்டு வார்."

—பழ. 135.

"தம்மை யிகழ்ந்தமை தாம்பொறுப்ப தன்றிமற்று
எம்மை யிகழ்ந்த வினைப்பயத்தான்—உம்மை
எரிவாய் நிரயத்து வீழ்வர்கொ லென்று
பரிவதூஉஞ் சான்றோர் கடன்".

—நாலடி. 58.

"நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்
வேர்த்து வெகுளார் விழுமியோர்". —நாலடி. 64:1—2.

"கல்லெறிந் தன்ன கயவர்வாய் இன்னாச்சொல்
எல்லாருங் காணப் பொறுத்துய்ப்பர்"

—நாலடி. 66:1—2.

"கீழ்மக்கள் கீழாய சொல்லியக்காற் சொல்பவோ
மேன்மக்கள் தம்வாயான் மீட்டு"

—நாலடி. 70:3—4.

"சிறியோர் செய்த சிறுபிழை யெல்லாம்
பெரியோ ராயிற் பொறுப்பது கடனே"

—வெற்றி. 31.

[1]'சமழ்மை':—

"மலர்நிறஞ் சமழ்க்கு மன்றே"

—கம்ப. நாடவிட்ட. 65.

"கள்வன் சமழ்ப்பு முகங்காண்மின்"

—பரி. 20—36.

குறிப்பு:—

'நேர் அல்லார்' என்பதற்கு செவ்வையான குணமில்லாதவர் என்றும் பொருள் கூறுவர். ஒரும்—அசை; "அஞ்சுவ தோரு மறனே" (குறள். 366) என்புழிபோல. 'ஞாலம்' என்றது இங்கே உயர்ந்தோரைக் குறித்தது; "உலகமென்பது உயர்ந்தோர் மாட்டே" என்பதனான்.

(உ)

73. காதலார் சொல்லுங் கடுஞ்சொல் உவந்துரைக்கும்
ஏதிலார் இன்சொலில் தீதாமோ?—போதெலாம்
மாதர்வண்டு ஆர்க்கு மலிகடல் தண்சேர்ப்ப!
ஆவது அறிவார்ப் பெறின்.

---

[1] "முடித்தன னென்று சமழ்த்தன னோக்கி". (பெருங். மாத. 27—186)

"அம்மையிற் செய்தன விம்மை வந்து சந்தித்த பின்னைச் சமழ்ப்ப தென்னே". (தேவா 1200—4)

தருமர்:- என்பது. போது எலாம்—பூக்கள் தோறும்; மாதர் வண்டு—அழகிய வண்டுகள்; ஆர்க்கும்—ஆரவாரிக்கும்; மலிகடல் தண்சேர்ப்ப!—குளிர்ந்த சோலைகள் அருகுசூழ்ந்த கடற் சேர்ப்பை யுடையவனே!; ஆவது அறிவார்ப்பெறின்—ஆங்காரியங் களை அறியவல்லவரைத் தமக்குக் காதலராகப் பெற்றால்; காதலர் சொல்லும் கடுஞ்சொல்—தம்மேற் காதலை யுடையார் சொல்லுங் கடியசொற்களானது; ஏதிலார் உவந்து உரைக்கும் இன்சொலில்—தமக்கு இதமாக உவந்து அயலார் சொல்லும் இனிய சொற்களினும்; தீது ஆமோ?—தீதாகுமோ? என்றவாறு.

எனவே தமக்கு நன்கு தீங்கு என்பனவற்றை அறிவிக்க வல்லவர் காதலராகி, அவர் இவர்க்கு தீங்குவருங்கால் அதனை யறிந்து இவர் செய்யுந் தீயசெயலறும்படி, கடிதாகச் சொல்லி அடக்குவது காதலர் சொல்லுங் கடுஞ்சொல். அயலார் இனிய சொற்கள், அப்போது செவிக்கு இன்பமாகச் சொல்லிப் போவதன்றிக் காதலரைப்போலத் தீயவை நீங்குவதில்லை. அதனையறிந்து அமைந்தோர் தம்முடன் காதலார் சொல்லும், கடியசொற் பொறுக்கப்படும். கீழோர் தம்மை இப்படிச் சொல்லலாமோ வென்று, அதனைத் தவறாகக் கொள்ளுவரன்றி தத்த மக்கானவையென்று எண்ணார். அமைந்தோர் தமக் கானவை யென்று அறிந்து பொறுத்தலால், பொறையுடைமை யாவர்க்கும் இது என்று அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:— போதெலாம் மாதர்வண்டு ஆர்க்கு மலிகடல் தண்சேர்ப்பனே! விளைவினை [சீர்]தூக்கியறிய வல்லாரைப் பெறின் தம்மேற் காதலையுடையார் சொல்லுங் கடியசொல், அயலார் உவந்து சொல்லும் இன்சொற்போலத் தீதாகவற்றோ? என்றவாறு.

கடுஞ்சொல் — இடிக்குஞ் சொல். மாதர்—காதல். ஆவது அறிவார்—தன் சுற்றத்தார்.

இது, தன் சுற்றத்தார் கழறுஞ் சொல்லைப் பொறுத்தல்.

விளக்க உரை:- போது எலாம் — பூக்கள் தோறும்; மாதர்வண்டு — அழகிய வண்டுகள்; ஆர்க்கும் — ஆரவாரிக்கும்; மலிகடல் தண்சேர்ப்ப! — மிகக் குளிர்ந்த கடற்சேர்ப்பை யுடையவனே!; ஆவது அறிவார்ப்பெறின்—[இவை இரண்டினை யுஞ்] சீர்தூக்கி யறியவல்லாரைப் பெறின்; காதலார் சொல்லும் கடுஞ்சொல் — தம்மேற் காதலையுடையவர் சொல்லுங் கூடிய சொற்கள்; ஏதிலார் உவந்து உரைக்கும்—அயலார் தமக்கு இதமானவற்றை யுவந்து சொல்லும்; 'இன்சொலில் தீதுஆமோ! —இனிய சொல்லினும் பொல்லாதோ? என்றவாறு.

கடுஞ்சொல்—இடிக்குஞ் சொல். மாதர்—காதல். ஆவது அறிவார்—கருமமறிவார்.

ஒப்புமைப் பகுதி:—

"நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தற் பொருட்டு''

—குறள். 784.

"அழச்சொல்லி அல்ல திடித்து வழக்கறிய
வல்லார்நட் பாய்ந்து கொளல்''.

—குறள். 795.

"நட்டார்போல் நல்லவை சொல்லினும் ஒட்டார்சொல்
ஒல்லை உணரப் படும்''.

—குறள். 826.

"உடம்பட்டு நீப்பார் கிளவி மடம்பட்டு
மெல்லிய வாதல் அறியினும்''

கலி. 113:15—16.

"உளைய உரைத்து விடினும் உறுதி
கிளைகள்வாய்க் கேட்பது நன்றே—விளைவயலுள்
பூமிதித்துப் புட்கலாம் பொய்கைப் புனலூர!
தாய்மிதித்த ஆகா முடம்''.

— பழ. 299.

"இனியவ ரென்சொலினு மின்சொல்லே யின்னார்
கனியு மொழியுங் கடுவே—அனல்கொளுந்தும்
வெங்காரம் வெய்தெனினு நோய்தீர்க்கு மெய்பொடிப்பச்
சிங்கி குளிர்ந்துங் கொலும்".

—நீதிநெறி.59.

"மாசற்ற நெஞ்சுடையார் வன்சொலினிது ஏனையவர்
பேசுற்ற வின்சொல் பிறிதென்க—ஈசற்கு
நல்லோன் எறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு".

—நன்னெறி.2.

"அழ அழச் சொல்லுவார் தமர்
சிரிக்கச் சிரிக்கச் சொல்லுவார் பிறர்".

—பழமொழி.

"கோழி மிதித்துக் குஞ்சு முடமாகுமா"

—பழமொழி.

குறிப்பு:—

"போதெலாம் மாதர்வண்டு ஆர்க்கும் மலிகடல் தண் சேர்ப்ப!" என நெய்தல் நிலமாகிய கடற்கரையின் வளத்தைச் சிறப்பித்து, அந்நெய்தல் நிலத்தலைவனை விளித்துக் கூறினார். இது ஆகூஉ முன்னிலை. 'போது' என்பது மலரும் பருவத்து அரும்பு. மாதர் வண்டு—அழகுபொருந்திய வண்டுகள்.

மலரை மலரச் செய்யவே அதனிடம்சென்று வண்டு ஆரவாரிப்பது அதுபோல, காதலார் கூறும் கடுமொழியும் அவரை நல்வழிப்படுத்தும் பொருட்டேயாம் என்பது தொகைமொழி.

(ந.)

74. அறிவது அறிந்தடங்கி அஞ்சுவது அஞ்சி
உறுவது உலகுவப்பச் செய்து—பெருவதனால்
இன்புற்று வாழும் இயல்புடையார் எஞ்ஞான்றும்
துன்புற்று வாழ்தல் அரிது.

தருமர்:—என்பது அறிவது அறிந்து அடங்கி—அறியத் தக்கவற்றை அறிந்தடங்கி; அஞ்சுவது அஞ்சி—அஞ்சத்தக்க வற்றை அஞ்சி; உறுவது உலகு உவப்பச் செய்து—தமக்கு மறுமைக்கு உறுதியானவற்றை யுலகத்தார் மகிழும்படிசெய்து; பெறுவதனால் இன்புற்று வாழும் இயல்புடையார்—பெற்றவள வினால் அமைதி பிறந்து இனிமையுற்று வாழுமியல்பினை யுடையார்; எஞ்ஞான்றும் துன்புற்று வாழ்தல் அரிது—எல்லா நாளுந் துன்பமுற்று வாழ்வதில்லை என்றவாறு.

இத்தன்மையாக (ஒருவரொ)ழுகில் ஒருகாலத்தும் துன்ப முறாத உலகத்தின்கண்ணே இருந்து, எந்த நாளும் வாழப்பெறுவ ரென்பதாயிற்று. இதனில் பொறையுடைமை இல்லையேயெனில், கெடுவழியிலே செல்லும் புலன்களைமீட்டுத் தம்வயத்ததாக்கித் தீயவற்றைத் தீர்த்துக் கொண்டிருத்தலே பொறையுடைமை யாவது.

பதுமனார்:—அறியத்தக்கதனை யறிந்தடங்கி, அஞ்சப் படுவதனை யஞ்சி, தங்கையுற்றப் பொருள்களை உலகத்தார் உவப்ப வீய்ந்து, தாம்பெற்றதனான் இன்புற்றுவாழுந்தன்மையை யுடையார் இடும்பையுற்று வாழ்தல் எஞ்ஞான்றும் அரிதென்ற வாறு.

"அறிவது அறிந்து................... அரிது":—

யாவராலும் அறிதற்கரிதாகி அறியவேண்டுவதாகவிருந் துள்ளதனை உள்ளபடியறிந்து, அதற்குத்தக்க காம, வெகுளி களின் வழிச் செல்லாதடங்கி, அஞ்சுவதாகுங் கொலை முதலா யின பாவங்களை யஞ்சி, மறுமைக்கு வந்துறுவதான அறங்களை உயர்ந்தோர் உவக்கும்படிசெய்து, பெற்றபொருள் உள்ளவள வினால் இன்புற்று உயிர்வாழும் இயல்பினையுடையார், எல்லா நாளுந் துன்புற்றுப் பிறந்திறந்து வாழ்தல் அரிதென்றவாறு.

விளக்க உரை:— அறிவது அறிந்து அடங்கி—அறியத் தக்கவற்றை யறிந்தடங்கி; அஞ்சுவது அஞ்சி—அஞ்சத்தக்க வற்றை யஞ்சி; உறுவது உலகுஉவப்பச் செய்து—தம்மை

[மறுமைக்கு] உறுதியானவற்றையுலகத்தார் மகிழும்படி செய்து; பெறுவதனால் இன்புற்றுவாழும் இயல்புடையார்—பெற்றவளவினால் அமைதிபிறந்து இனிமையுற்று வாழுமியல்புடையார்; எஞ்ஞான்றும் துன்புற்று வாழ்தல் அரிது—எல்லா நாளுந்துன்புற்று வாழ்தல் காணாதென்றவாறு.

கெடுவழியிலே செல்லும் புலன்களை மீட்டல்.

ஒப்புமைப் பகுதி:—

'அறிவது அறிந்து':—

"உலகத்தோ டொட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தவர்".

—குறள். 140.

"அறிவுடையார் ஆவ தறிவார் அறிவிலார்
அஃதறி கல்லா தவர்".

—குறள். 427.

"அறிவுடையார் எல்லாம் உடையார் அறிவிலார்
என்னுடைய ரேனும் இலர்".

—குறள். 430.

"அறிவினால் மாட்சிஒன் றில்லா ஒருவன்
பிறிதினால் மாண்ட தெவனாம்?—பொறியின்
மணிபொன்னும் சாந்தமும் மாலையும் இன்ன
அணிஎல்லாம் ஆடையின் பின்"

—பழ. 271.

"வித்துவான் தனவான்"

—பழமொழி.

"அறிவுடையார் ஆவது அறிவார்"

—பழமொழி.

'அடங்கி':—

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆர்இருள் உய்த்து விடும்".

—குறள். 121.

''கற்றறிவார் கண்ட தடக்கம்''

—பழமொழி.

'அஞ்சுவது அஞ்சி':—

''அஞ்சுவ தஞ்சாமை பேதைமை அஞ்சுவது
அஞ்சல் அறிவார் தொழில்''.

—குறள். 428.

''துஞ்சலு மிலர்பிற ரஞ்சுவ தஞ்சி''.

—புறம். 182—4.

''தவ்வெனும் பழிபா வங்கள் தபுதிறய் தாமை அஞ்சிச்
செவ்விய நெறியில் நாளும் செலுத்துக பொறிகள் ஐந்தும்''

—விநா. அரசி. 50.

'பெறுவதனால்... ....உடையார்':—

''போதுமென்ற மனமே பொன்செய்யு மருந்து''.

—பழமொழி.

குறிப்பு:-

அறிவது — யாவராலும் அறிதற்கு அரியதும், அறிய வேண்டுவதுமான ஒழுக்கநெறி நூலும், வேதாந்த நூல்களுமாம். அஞ்சுவது-அஞ்சத்தக்க பழிபாவங்கள். உறுவது-மறுமைக்கு வந்தடைவனவாகிய தருமங்கள். பெறுவது-ஊழியினால்பெற்ற பொருள்கள். அறிவது, அஞ்சுவது, உறுவது, பெறுவது என்பன சாதியொருமை. ஒருபெயர் ஒருமைமாறு தோன்ற நின்றும், பன்மைப் பொருளைத்தரின் அது 'சாதியொருமை' என்பர் இலக்கணநூலார்.

இச்செய்யுளின்கண் அறிவுடைமை, தீவினையச்சம், ஒப்புரவு, அடக்கமுடைமை முதலிய பிறபொருள்கள் பற்றியும் கூறப்பட்டிருத்தல் காண்க.

(சு)

75. வேற்றுமை இன்றிக் கலந்திருவர் நட்டக்கால்
தேற்றா ஒழுக்கம் ஒருவன்கண் [1]உண்டாகில்
ஆற்றுந் துணையும் பொறுக்கப் பொறானாயில்
தூற்றாதே தூர விடல்.

தருமர்:— என்பது. வேற்றுமை இன்றி-வேறுபாடின்றி; கலந்து இருவர் நட்டக்கால்-கலந்து இரண்டுபேர் நட்புச் செய்த காலத்து; தேற்றா ஒழுக்கம்—தெளியத் தகாத வொழுக்கம்; ஒருவன்கண் உண்டாகில்—ஒருவனிடத்திலே யுண்டானால்; ஆற்றும் துணையும்—அவன்கொண்ட வெகுளி ஆறுமளவும்; பொறுக்க—பொறுக்கக் கடவன்; பொறான் ஆயில்—(பொறுக்க மாட்டானாயில்); தூற்றாதே தூரவிடல்—(அவன்செய்த தீமை களைப் பிறர்க்கு உரையாது அவன் நட்பினைத் தூரவிடுதல் என்றவாறு).

நட்புக்கொண்டவன் தீமையை அமைந்தோரானால் அவன் வெகுளியை யடங்குமளவும் பொறாமல், அவன் நட்பினை அகல விட்டால் அவரை உலகத்துள்ளார் தூற்றாரோ வென்றவாறு. இவர் பொறையென்னும் விரதம் பூண்டது இவ்வளவிற்றோ வென்று, உலகத்திலுள்ளார் அவரை இகழ்வரெனப் பொறை யினை வற்புறுத்தியவாறு.

பதுமனார்:— வேறுபாடின்றிப் பொருந்தி இருவர் நட்புச் செய்தால் அறிவின்மையால் வருந் தீயவொழுக்கம், ஒருவன் மாட்டுளதாயின் ஆற்றுமளவும் பொறுக்க. அவன் செய்த தீமைகளைப் பிறர்க்கு உரையாது, அவன்நட்பினைத் தூர விடுதல் பொறாதார்க்கு வருவது என்றவாறு.

அல்லதூஉம் ஆற்றுமளவும் பொறுக்க; அப்பொறையே நற்குணமாவது. பொறுத்திலனாயின் அவன்செய்த பிழையைப் பிறர்க்குச் சொல்லாதே, அவன் நட்பினைத் தூரவிடுக வென்

பா-ம்:— [1]'உண்டாயின்'.

பாருமுளர். அல்லதூஉம் 'தூற்றாதே தூரவிடல்' என்பது அவன் செய்த குற்றத்தைத் தூற்றாதே மறக்க வென்பாருமுளர் என்பதாம்.

ஒழுக்கமும் நற்குணங்களும் அறியாது வேற்றுமையின்றியே இருக்கும்படி கலந்திருவர் நட்டக்கால், பின்பு பிறரறியாதபடி யொழுகுந் தீயவொழுக்கம் ஒருவனிடத்துண்டாயின், அதனை யறும்படி கழறி யாற்றுமளவும் பொறுக்க. அவன் கழறுதலைப் பொறானாயில், தான் பிறரறியத் தூற்றாதே யவன் செறிவினைத் தூர விடல்.

தேற்றா வொழுக்கம்-பிறர்க்கு அறிவித்தற்காகா வொழுக்கம்; அஃதாவது களவும் பிறர்மனை நயத்தலும். இவை பிறரறியத் தூற்றாதே செறிவினை யொழுக விடுத்தலும், அவன் ஒழுக்கத்தைப் பொறுத்தலும். 'ஆற்றுந் துணையும்' என்றது நெருப்பை யாற்றுந் துணையும் என்றாற்போலும்.

விளக்க உரை:— வேற்றுமை இன்றி-வேறுபாடின்றி; கலந்து இருவர் நட்டக்கால்-கலந்திருவர் நட்புச்செய்த காலத்து; தேற்றா ஒழுக்கம்-தெளிவில்லாத ஒழுக்கம்; ஒருவன்கண் உண்டாயின்-ஒருவனிடத்து உண்டாயின்; ஆற்றும் துணையும்-அவன் அந்தக் குணம் தவிரும்படி கழறி, அஃதவன் தவிருமளவும்; பொறுக்க-பொறுக்கக்கடவன்; பொறான் ஆயில் தூற்றாதே தூரவிடல்-பொறானாயில் அவன்செய்த தீமைகளைப் பிறர்க்கு உரையாமல், அவன் நட்பினைத் தூரவிடுதல் என்றவாறு.

அல்லது பொறையுடைமை யென்னும் விரதமுடையவர்க்கு வருவதொன்றல்ல என்றவாறு.

பொழிப்புரைப்படி:-

வேறுபாடின்றிப் பொருந்தி இருவர் †......................ஆற்றுந் துணையும் என்றாற்போலும்.

---

†பதுமனார் உரையில் உள்ளதே.

ஒப்புமைப் பகுதி:-

இ.கொ. } :-"தேற்றாவொழுக்கம் ஒருவன்கண் உண்டாயின்
நன்.வி. } —இவை சொல்லொன்றே தன்வினையும் பிற
வினையும் ஆயின".

—இ.கொ.சூ.67.
—நன்.வி.சூ.322.

சிவஞானபோதமா:— "காட்டிய வென்பது தன்வினைப் பொருள்பட நின்றது.......... .....'தேற்றா வொழுக்கம்'............ என்புழிப் போல".

—சூ.9.அதிகரணம்.

பேரா:—"உளவே என்னும் ஏகாரம் எதிர்மறை. அஃதென் போலவெனின் "தூற்றாதே தூரவிடல்" என்றது 'தூற்றும்' என்று பொருள் பட்டவாறு போல என்றறிக".

—திருச்சிற்.110—உரை.

நேமி:—"தூற்றாதே தூரவிடல்: தூற்றும் என்னும் பொருள் பட்டமையான் எதிர்மறை ஏகாரம்".

—சூ.52.

ஒப்புமைப் பகுதி:—

"நல்லா ரெனத்தா நமுவிரும்பிக் கொண்டாரை
அல்லா ரெனினு மடக்கிக் கொளல்வேண்டு
நெல்லுக் குமியுண்டு நீர்க்கு நுரையுண்டு
புல்லிதழ் பூவிற்கு முண்டு".

—நாலடி.221.

"இலங்குநீர்த் தண்சேர்ப்ப! இன்னா செயினுங்
கலந்து பழிகாணார் சான்றோர்—கலந்தபின்
தீமை யெடுத்துரைக்குந் திண்ணறி வில்லாதார்
தாமு மவரிற் கடை".

—நாலடி.227

"தமரென்று தாங்கொள்ளப் பட்டவர் தம்மைத்
தமரன்மை தாமறிந்தா ராயி னவரைத்

தமரினு நன்கு மதித்துத் தமரன்மை
தம்மு ளடக்கிக் கொளல்''.

—நாலடி.229.

''அழிவந்த செய்யினும் அன்பறார் அன்பின்
வழிவந்த கேண்மை யவர்''.

—குறள்.807.

''நண்பொன்றித் தம்மாலே நாட்டப்பட் டார்களைக்
கண்கண்ட குற்றம் உளவெனினும் காய்ந்தீயார்
பண்கொண்ட தீஞ்சொல் பணைத்தோளாய்! யாருளரோ
தங்கன்று சாக்கறப் பார்''.

—பழ.16.

''ஆண்டீண்டு எனவொன்றோ வேண்டா அடைந்தாரை
மாண்டிலார் என்றே மறைப்பக் கிடந்ததோ?
பூண்டாங்கு இளமுலைப் பொற்றொடி! பூண்ட
பறையறையார் ஆயினார் இல்''.

—பழ.112.

''ஈரமில் லாதது கிளைநட்பு அன்று''

—முதுமொழிக். 5:3.

குறிப்பு:-

தேற்றா வொழுக்கம்—பிறர்க்குத் தெளிவிக்கல் ஆகாத வொழுக்கம் 'தேற்றா' என்பது தன்வினை, பிறவினைகட்குப் பொதுவினை. பிறவினை, தன்வினைப் பொருளில் வந்த தென்றும் கூறுவர். கீழ்க்கண்ட பிறநூல்களிலும் 'தேற்றா' என்னும் சொல் இங்ஙனம் வருதல் காண்க.

''தேற்றாய் பெரும நீ பொய்யே'' —புறம்.59.

''பலசொல்லக் காமுறுவர் மன்றமா சற்ற
சில சொல்லல் தேற்றா தவர்'' —குறள்.649.

''வாளினாற் பேசல் அல்லால் வாயினாற்பேசல் தேற்றேன்''
—சீவக.257.

"வாணிகம் ஒன்றுந் தேற்றாய்"

—சீவக. 770.

(ரு)

76. இன்னா செயினும் இனிய ஒழிகென்று
தன்னையே தானோவின் அல்லது—துன்னிக்
கலந்தாரைக் கைவிடுதல் கானக நாட!
விலங்கிற்கும் விள்ளல் அரிது.

தருமர்:—என்பது. கானக நாட!—வனங்கள் சூழ்ந்து பொலிவெய்திய நாட்டையுடையவனே!; இன்னா செயினும்—[தம்முடன் நட்புக்கொண்டவர் தமக்கு] குற்றஞ் செயினும்; இனிய ஒழிக் என்று—[அது நமக்கு] இனியது சினமே ஒழிக வென்று; தன்னையேதான் நோவின் அல்லது—தன்னைத் தானே நொந்துகொள்ளுவதல்லாது; துன்னிக் கலந்தாரை—தம்மோடு பொருந்தி நட்புக்கொண்டவரை; கைவிடுதல்—நீத்து விடுதல்; விலங்கிற்கும் விள்ளல் அரிது—மிருகங்களுக்கு உள்ளிட விது பொருந்தியதென்று சொல்லப்படுவதொன்று அல்லவென்ற வாறு.

விலங்காயினுந் தன்னி(னம்தீ)மைப்பட்டால் அதனை நீத்து விடும் பாலதல்ல வென்றாராகலில், நட்புக்கொண்டவர் செய்த பிழைகளை எண்ணுவது பொறையல்ல. அதனால் அவர்மேல் எழுந்த சினத்தைத் தமக்கவர் செய்தது இன்னாமையல்ல இனிதேயாம். அத்தன்மை விசாரியா தெழுவதென்ன(என), சினத்தையே நொந்ததனை அடர்த்தலை தன்னையேதான் நோவரென, யாவருக்கும் பொறை இனிதென்று அதன்பொலிவு கூறியது.

பதுமனார்:—கானக நாடனே! நட்டார் இன்னாதன வற்றைச் செய்தாராயினும், அவை இனியவேயெனத் தீயன வாகக் கொள்ளாதொழிக வென்று கருதி என்னகுற்றத்தாலே அவர் இன்னாதனசெய்ய வந்ததென்று, தன்னைத்தானே நோவ

தல்லது பொருந்திய நட்டாரைக் கைவிடுதல், விலங்கிற்குஞ் சொல்லுதல் அரிதென்றவாறு.

இனிய ஒழிக-இனியதனை யாங்கருதுதலொழிக. தன்னையே தான் நோவின் அல்லது—உடம்பினால்தானே தோன்றுந் துன்பங்களான் வரும் இன்னாமையும், ஒன்றனாலே நோய்பட்டு வரும் இன்னாமைகளும், கன்மபலமென்று சினஞ் செல்லாதவாறு போலப் பிறர்செய்த இன்னாமையும், இவர் சார்வாக வந்தது நாமுன்புசெய்த வினையென்று, அவரை நோவாது தன்னையே தான் நோதல். துன்னிக் கலந்தாரைக் கைவிடுதல் அரிதென்பது, மக்களுள்ளார்க்கேயன்றிச் செறிந்தபின் விலங்கிற்கும் விள்ள லரிது.

இது, தன்னைச் செய்த இன்னாமையைப் பொறுத்தல்.

விளக்க உரை:—கானக நாட!—காட்டையுடைய நாடனே!; இன்னாசெயினும்—[தம்மோடு நட்புக்கொண்டவர்] ஒரு குற்றங்களைச் செயினும்; இனிய ஒழிக என்று—அது நமக் கினிய, மேற்சினத்தை யொழிக வென்று; தன்னையேதான் நோவின் அல்லது—தன்னைத்தானே நொந்துகொள்வது அல்லது; துன்னிக் கலந்தாரைக் கைவிடுதல்—பொருந்திய நாட்டாரைக் கைவிடுதல்; விலங்கிற்கும் விள்ளல் அரிது—மிருகங்களுக்கும் சொல்ல அரிதென்றவாறு.

தன்னைத்தான் நோதலாவது, நாமொரு குற்றஞ் செய்யா திருக்கவும் இவன் இன்னா செய்தானென்று தன்னைத்தானே நோதல்.

பொழிப்புரைப்படி:—

[பதுமனார் உரையில் உள்ளதே.]

மேற்கோள் பகுதி:-

மயிலை:—ஒழியிசை எச்சத்திற்கு இச்செய்யுளை மேற் கோளாகக் காட்டுவர்.

—நன். சூ. 359.

பிரயோக:—"விள்ளல்-செல்லல், 'கைவிடுதல் விள்ளலரிது', 'கலந்தாரைக் கைவிடுதல்'...எனக் கையென்பது உபசர்க்கமாய் ......வினைச்சொல்லோடும் வந்தது".

—சூ. 45.

ஒப்புமைப் பகுதி:-

"தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர் நோய் செய்யும்"

—நாலடி. 68.

"மரீஇப் பலரொடு பன்னாண் முயங்கிப்
பொரீஇப் பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇஇப் பின்னைப் பிரிவு".

—நாலடி. 220.

"இறப்பவே தீய செயினுந்தன் நட்டார்
பொறுத்தல் தகுவதொன்று அன்றோ?—நிறக்கோங்கு
உருவ வண்டார்க்கும் உயர்வரை நாட!
ஒருவர் பொறையிருவர் நட்பு".

— நாலடி. 223.

"பரா அரைப் புன்னை படுகடற்றண் சேர்ப்ப!
ஒராஅலும் ஒட்டலுஞ் செய்பவோ? நல்ல
மருஉச்செய்தி யார்மாட்டுந் தங்கு மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று".

—நாலடி. 246.

"விலங்கேயும் தம்மோடு உடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅய் இழியு மலைநாட! இன்னாதே
பேஎயோடு ஆனும் பிரிவு".

—பழ. 122.

"தந்தீமை இல்லாதார் நட்டவர் தீமையையும்
எந்தீமை என்றே உணர்பதாம்".

—பழ. 247.

"பிரிவு செய்தாலரிதே கொள்க பேயொடும் என்னும்பெற்றி"
—திருச்சிற். 144.

"பேயோ டேனும் பிரிவொன் றின்னா தென்பர் பிறரெல்லாம்".
—திருப்பாட்டு, சுந்தரர், ஆரூர்.

"தெரியக்
கண்ணிற் காணார் ஆயினுங் கனவின்
நண்ணுங் காலை நல்லுயிர் செருக்கும்
பேயே ஆயினும் பிரியின் இன்பம்
வாயாது என்று மதியோர் அறைப
மரீஇ நாளுநின் நன்றி யாரும்
அறிய வார பெரும"
—ஞானாமிர்தம். 46.

"வையை சூழ்ந்த வளங்கெழு வைப்பில்
பொய்யா யாணர் மையற் கோமான்
மாவனும் மன்னெயில் ஆந்தையும் உரைசால்
அந்துவஞ் சாத்தனும் ஆதன் அழிசியும்
வெஞ்சின வியக்கனும் உளப்படப் பிறரும்
கண்போல் நண்பிற் கேளிரொடு கலந்த
வின்களி மகிழ்நகை இழுக்கியான் ஒன்றோ"
—புறம். 71: 10—16.

"காணுதல் ஒழிக நல்லார் காணினங் கவர்பால் நட்புப்
பேணுதல் ஒழிக பேணின் பிரிவுறல் ஒழிக"
--பிரபுலிங். சிவப்பிரகாசர்.

"—மருவியப்
பேயின்திறத்துப் பிரிதல் இன்னாவென்று பேசுவரே"
—அம்பிகாபதி. 517.

"பேயோடு பழகுறினும் பிரிவதரிது அரிதென்று தூயோரு
மொழிவரால்"
—குசலோபாக்கியானம்.

"கூடிப் பிரியேல்"
—ஆத்திச்சூடி. 37.

'இனிய ஒழிக என்று' என்பதற்கு, 'அவற்றை இனியன வாக எண்ணிச் சினத்தை ஒழிவாயாக என்று, மனத்தைநோக்கிச் சொல்லி' என்று பொருள் கொள்ளலும் ஏற்கும். 'தன்னையே தான் நோதல்' என்பதற்கு, பிறர் இன்னாமை செய்யக் காரண மாக இருந்தது தான் முன்செய்த தீவினையென, தன்னையே தான் நொந்துகொள்வதென்றும்; முன் நன்கு ஆராயாது'நட்புப் பூண்ட தன்னையே தான் நொந்துகொள்வதென்றும் பொருள் கொள்க 'விள்ளல்' என்பதற்கு 'பிரிதல்' என பொருள்கொண்டு உரை கொள்ளலும் ஏற்கும்.

(௬)

77. பெரியார் பெருநட்புக் கோடல்தாம் செய்த
அரிய பொறுப்பவென்று அன்றோ?—அரியரோ?
ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட!
நல்லசெய் வார்க்குத் தமர்.

தருமர்:— என்பது. ஒல்என் அருவி—ஒல் என்னும் ஓசை யுடைத்தான அருவி வீழப்பட்ட; உயர்வரை நல்நாட!-அடர்ந்த மலை சேர்ந்த நாடனே!; பெரியார் பெருநட்புக் கோடல்- அடங்கி ஒழுகுதலை யுடைய பெரியோரை மிகவும் நட்புறுதல்; தாம் செய்த அரிய—அப்பெரியோர்க்கும் பொறுத்தற்கரிதாகத் தாஞ் செய்த குற்றங்களை; பொறுப்ப என்று அன்றோ?— பொறுப்பரென்று அல்லவோ?; நல்ல செய்வார்க்கு—நன்மை செய்வார்க்கு; தமர் அரியரோ—உறவு ஆவார் கிடைப்பது அரிதோ? என்றவாறு.

நன்மை செய்வாரை யாரும் உறவு பண்ணுவர். குற்றஞ் செய்வாரை யாருஞ் சேரார். அத்தன்மையராயினார் தம்மைச் சேர்ந்து நட்புப்பண்ணினால், அவர்செய்த பிழையெண்ணாது அவருக்கு நன்மையே செய்வது அமைந்தோர்க்குக் கடனாத லால், அப்பெரியோர்க்கல்லது அறிவில்லாதார்க்குப் பொறைவரு தல் அரிது. அதனால் யாவரும் அந்தத்தன்மையாக வொழுகும் படிக்கு அறிவுறுத்தியது.

பதுமனார்:— ஒல்லென்று ஒலிக்கும் அருவியினையுடைய உயர்ந்தவரை நன்னாடனே! பெரியாரோடு பெருநட்புச் செய்தல் தான் செய்யப்பட்ட வரிய பிழைகளைப் பொறுப்பர் என்றன்றோ? நல்லவற்றைச் செய்வார்க்குத் தமர் அரியரோ? என்றவாறு.

ஒல்லென்—ஒல்லென்று ஒலிக்கும். தமர்—சுற்றமாவார்.

இது, பொறையுடைமையின் பெருமை சொன்னதாம்.

விளக்க உரை:— ஒல்என் அருவி—ஒல்லென்னும் ஓசையினையுடைய அருவிவிழும்; உயர்வரை நன்னாட!—உயர்ந்த மலைநாடனே!; பெரியார் பெருநட்புக் கோடல்—அடங்கியொழுகும் பெரியோருடன் உறவுபண்ணுதல்; தாம் செய்த அரிய பொறுப்ப என்று அன்றோ?—தாம்செய்த பிழையை அரிதாகப் பொறுப்ப ரென்று அல்லவோ? நல்ல செய்வார்க்கு—நல்லவற்றைச் செய்யுமவர்க்கு: தமர் அரியரோ?—நட்புக்கொள்ளுகைக்கு ஒருவர் அரியரோ? என்றவாறு.

தமர்—சுற்றமாவார். இது பொறையுடைமையின் பெருமை சொன்னதாம்.

குறிப்பு:-

'ஒல் என் அருவி உயர்வரை நன்னாட' என்றது ஆடூஉ முன்னிலை. உயர்வரை—வினைத்தொகை. 'உயர்' என்பது வினைப்பகுதி யாதலாலும், காலந்தோன்றி நிற்றலாலும் பண்புத்தொகை எனல் பொருந்தாது' என்பர் நச்சினார்க்கினியர். (தொல். கிளவி.)

பயனின்றியே ஒலித்தலைச் செய்கின்ற அருவியைத் தன்னிடத்தில் கொண்டுள்ள மலைபோன்று, குற்றஞ் செய்கின்ற நட்பினரையும் பொறுமையுடன் ஏற்றுக்கொள்க என்பது தொகைமொழி. 'அரியரோ' என்றவிடத்து வரும் ஓகாரம் எதிர்மறை; அரியர் அல்லர் என்றபடி. அரிய, நல்ல என்பன பெயர்ச்சொற்கள். ஒல்—ஒலிக்குறிப்பு.

(எ)

78. வற்றிமற்று ஆற்றப் பசிப்பினும் பண்பிலார்க்கு
அற்றம் அறிய உரையற்க—அற்ற
மறைக்குந் துணையார்க்கு உரைப்பவே தம்மைத்
துறக்குத் துணிவிலா தார்.

தருமர்:—என்பது. வற்றிமற்று ஆற்றப் பசிப்பினும்- உடம்பு வற்றிக் கெடும்படி மிகவும் வறுமையாகிய காலத்தினும்; பண்பு இலார்க்கு—தம்முடன் நட்புப் பண்பிலாதவருக்கு; அற்றம் அறிய உரையற்க—தம்முடைய வறுமை யறியச் சொல்லா தொழிக; அற்றம் மறைக்கும்-தமது வறுமையைக் கெடுக்க வல்ல; துணை யார்க்கு உரைப்பவே — தன்மையாயுடையார்க்குத் தம் வறுமையை யறிவிக்கும் பகுதியாவார்; தம்மைத் துறக்கும் துணிவு இலாதார்-தாமென்னும் அபிமானமறத் துறந்து விரதம் பூணத் துணிவு இல்லாதவ ரென்றவாறு.

தவவிரதம் பூண்டற்குத் துணிவு இல்லாதாராயின், தம் வறுமை யறிந்து தாங்கவல்லாரிடத்து இரப்பினும் ஒருதலையாக நன்று. தம் வறுமை யறிந்து இரங்காதாரிடத்துத் தம்வறுமை கூறி யிரப்பதிலும், நிலையல்லாத யாக்கையை யொழிப்பது நன் றென்பதுமாம். ஆதலால் பொறையென்னும் விரதம் பூண்டவர், பசி முதலியன தவத்துக்கு இடையூறென தம்முடம்புகெடப் பசி வந்துற்ற காலத்தினும், தமக்கு இயலுமளவும் பொறுப்பதன்றித் தம்மோடு நட்புப் பண்பில்லாதார்க்குத் தம்வறுமையைச் சொல் லாரென்பது தோன்ற 'அற்றமறிய உரையற்க' என்றார்.

இது, தவவிரதத்துக்கு இடையூறு வாராது பொறுப்பது.

பதுமனார்:—தம்முடைய உடம்பு மிகமெலிந்து பசிப்பினும், தம்மொடு நட்புப் பண்பில்லாதார்க்கு அறியத் தமது வறுமை யைச் சொல்லாதொழிக. அவ்வறுமையைக் கெடுக்குந் துணை யார்க்குச் சொல்லுவர், பெரிதான பொறையுடைமையைக் காத்துத் தம்முயிரை நீக்குந் துணிவிலாதா ரென்றவாறு.

வற்றி—வறுமையால் உடம்புவற்றி. அற்றம் மறைக்கும்

துணையார்க்கு — வறுமையைக் கெடுக்கும் அளவினார்க்கு. உரைப்பவே—உரைப்பரல்லரோ.

இது, தம்பசியைப் பொறுத்தல்.

விளக்க உரை:—வற்றி—உடம்புவற்றி; [மற்று-அசை] ஆற்றப் பசிப்பினும்—மிகவும் பசிப்பினும்; பண்பு இலார்க்கு—தம்மோடு நட்புப் பண்பிலாதார்க்கு; அற்றம் அறிய உரையற்க—தம்முடைய வறுமையைச் சொல்லாதொழிக; அற்றம் மறைக்கும் துணையார்க்கு—தமது வறுமையைக் கெடுக்கும் அளவினையுடையார்க்கு; உரைப்பவே—சொல்லுவர்; தம்மை துறக்கும் துணிவு இலாதார்—தமதுயிரை நீக்குந் துணிவில்லாதவ ரென்றவாறு.

விரதத்தைத் தவிர்ந்து நிலையாத உடம்பைப் பரிகரிக்க வேண்டி, இளைத்த நெஞ்சினையுடையவர் இவர்க்குச் சொல்லுவர். விரதத்தைத் தவறாமல் நடத்துந் துணிவுடையார் சொல்லா ரென்பதாம்.

வற்றி—வறுமையால் உடம்பு வற்றி. இது, தம் பசியைப் பொறுத்தல்.

ஒப்புமைப் பகுதி:—

> ''என்பாய் உகினும் இயல்பிலார் பின்சென்று
> தம்பாடு உரைப்பாரோ தம்முடையார்—தம்பாடு
> உரையாமை முன்னுணரும் ஒண்மை உடையார்க்கு
> உரையாரோ தாமுற்ற நோய்''.

—நாலடி. 292.

> ''ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலின் அந்நிலையே
> கெட்டான் எனப்படுதல் நன்று''.

—குறள். 967.

> ''இரக்க இரத்தக்கார்க் காணின் கரப்பின்
> அவர்பழி தம்பழி அன்று''.

—குறள். 1051.

"இரத்தலும் ஈதலே போலும் கரத்தல்
கனவிலும் தேற்றாதார் மாட்டு".

—குறள். 1054.

"தெற்றப் பரிந்தொருவர் தீர்ப்ப ரெனப்பட்டார்க்கு
உற்ற குறையை உரைப்பதாம்—தெற்ற
அறையார் அணிவளையாய்? தீர்த லுறுவார்
மறையார் மருத்துவர்க்கு நோய்".

—பழ. 88.

"தோழனோடு மேழைமை பேசேல்".

—பழமொழி.

'வற்றிமற்று ஆற்றப் பசிப்பினும்':—

"புனிற்று நாய் குரைக்கும் புல்லென் அட்டில்
காழ்சோர் முதுசுவர்க் கணச்சிதல் அரித்த
பூமி பூத்த புழற்கா ளாம்பி
ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த
குப்பை வேளை உப்பிலி வெந்ததை
மடவோர் காட்சி நாணிக் கடையடைத்
திரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம்"

—சிறுபாண். 132—40.

"ஆடுநனி மறந்த கோடுயர் அடுப்பின்
ஆம்பி பூப்பத் தேம்புபசி உழவா" —புறம். 164.

"குடிப்பிறப்பு அழிக்கும் விழுப்பங் கொல்லும்
பிடித்த கல்விப் பெரும்புணை விடூஉம்
நாளணி களையு மாணெழில் சிதைக்கும்
பூண்முலை மாதரொடு புறங்கடை நிறுத்தும்
பசிப்பிணி என்னும் பாவி"

—மணி. 11: 76—80.

"மானங் குலங்கல்வி வண்மை அறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்

கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந் திடப்பறந்து போம்''.

நல்வழி. 26.

குறிப்பு:—

பண்பாவது, எல்லார் இயல்புகளும் அறிந்து ஒத்து ஒழுகுதல்; 'பண்பெனப் படுவது பாடறிந் தொழுகல்' என்றார் கலித்தொகையினும் (கலி. 133). 'அற்றம்' என்பது வறுமையைக் குறிக்கும் தொழிற்பெயர்; எல்லாப் பொருள்களும் அறுதல், அதாவது இல்லையாதல். அறு-பகுதி, அம்-விகுதி. ற்-விரித்தல். ஏ—அசை. 'மறைக்கும்' என்பது 'நீங்கும்' என்னும் பொருள் தருதலை 'தம்வயிற் குற்ற மறையா வழி' என்னுந் திருக்குறளினும் காண்க. இதற்கு 'இரட்டுற மொழிதல்' என்னும் உத்தியால் 'வெளியிடாதொழிதல்' என்ற பொருள் கூறுவாருமுளர்.

(அ)

79. இன்பம் பயந்தாங்கு இழிவு தலைவரினும்
இன்பத்தின் பக்கம் இருந்தைக்க—இன்பம்
ஒழியாமை கண்டாலும் ஓங்கருவி நாட!
பழியாகா ஆறே தலை.

தருமர்:- என்பது. ஓங்கு அருவி நாட!—அருவி விழுகிற சிறப்பினாலே பொலிவுபெற்றுயர்ந்த மலைகள் சூழ்ந்த நாடனே!; இன்பம் பயந்த ஆங்கு இழிவு தலைவரினும்—முதலில் இன்பத்தைத் தமக்குக் கொடுப்பதுபோல, அவ்வின்பம் தமக்கு பின்பு இழிவு கொடுக்குமாகில்; இன்பத்தின் பக்கம் இருந்தைக்க—இன்பத்தின் பகுதியைத் தமக்கு இன்பமென்று கருதியிராமலொழிக; இன்பம் ஒழியாமை கண்டாலும்—அவ்வின்பமானது இடைவிடாதே வரக்கண்டாலும்; பழிஆகா ஆறேதலை-பழிப்புரையாக வருகிற அவ்வின்பத்திலும், தமக்குப் பழிப்புரையில்லாமல் வருந் துன்பமாயினும் அதுவே நன்மை யென்றவாறு.

பழியாகாவாறாவது:—கொலை, களவு, கள், காமம் முதலிய

வற்றை விரும்பித் தம்விரதத்தைத் தவிர்வது, நிலையாத வின்பத்தைக் கருதி நிலையான தன்வீடு பேற்றைக் கொடுக்கும், விரதந் தவிர்ந்தானென் றெல்லோரும் பழிப்பது. கொலை, களவு, கள், காமங்கள் முதலில் இன்பம்போலிருந்து, பிறகு தனக்குத் துன்பத்தைக் கொடுக்கும். (அதனால்) முதலியவற் றைப் பொறுத்து விரதநெறி தவறாமல் நடந்தாராகிலது, அப்போதைக்குத் துன்பம்போலத் தோன்றிப் பிறகு ஒருகாலத் திலும் நீங்காத பெரிய வின்பத்தைக் கொடுக்கும். அதனால் இன்பம் பயந்தாங்கு இழிவு தலைவரும்படிக்கு இன்பம் இடைய றாமல் வந்தாலும் அவ்வின்பத்தை (இன்ப)மென்று கருதி அதற்கு ஒருப்படாமல் பொறுத்துத் தம்மை நன்னெறியின் உய்க்குமவற்றின் முயல வேண்டுமென்பதாம், 'அயக்க' என்பது ஒருவகை அசைநிலைச் சொல்; 'நம்பி கேட்டைக்க' என்றார் பிறரும்.

பதுமனார்:— ஓங்கருவி நாடனே! இன்பத்தைப் பயந்த அவ்விடத்தின் இழிவரவு தம்மாட்டுவரினும், அவ்வின்பத்தின் திறமொழிக. அவ்வின்பம் நீங்காது தம்மாட்டு வரக்கண்டா ராயினும் தமக்குப் பழியாகாத நெறியே தலைமை யென்றவாறு.

இருந்தைக்க—ஒழிக. இது, பொல்லாத வின்பத்தை யொழியும் பொறையுடைமை.

விளக்க உரை:— ஓங்கு அருவி நாட!—உயர்ந்த அரு வினையுடைய மலைநாடனே!; இன்பம் பயந்தாங்கு இழிவு தலைவரினும்—தமக்கொரு இன்பத்தைத் தந்து அவ்விடத்தேசர் இழிவு வருமாயில்; இன்பத்தின் பக்கம் இருந்தைக்க—தமக்கு அவ்வின்பத்தின் திறமொழிக; இன்பம் ஒழியாமை கண்டாலும் —இன்பம் இடைவிடாதே வரக்கண்டாலும்; பழி ஆகா ஆறே தலை—தமக்குப் பழிச்சொல் இல்லாமையே தலைமை யென்றவாறு.

இருந்தைக்க-ஒழிக. பழிக்கப்படுதலென்பது, நிலையில்லாத வின்பத்தினை விரும்பி நிலைநிற்கும் வீடுபேற்றை விளைவிக்கிற

விரதத்லதத் தவிர்ந்தானென்று பெரியோரால் பழிக்கப்படுதல்.

ஒப்புமைப் பகுதி:--

''எழுதெழின் மலருண்கண் இருந்தைக்க வெனப்போனான்''
—சிலப்.19.ஊர்சூழ்.67.

''ஆய மடமகளிர் எல்லீருங் கேட்டைக்க''
—18.துன்ப.49.

குறிப்பு:—

இன்பம் தருதல் நோக்கி பழியோடு கூடிய இன்பத்தைக் கொள்ளாது, பழிதருதல் நோக்கி அவ்வின்பத்தினை விடல் வேண்டுமென்பது கருத்து.

இருந்தைக்க—இருந்த உனக்கு, எனப் பொருள் கொள்ளுவர் வேறுசிலர்.

(கூ)

80. தான்கெடினுந் தக்கார்கேடு எண்ணற்க தன்னுடம்பின்
ஊன்கெடினும் உண்ணார்கைத்து உண்ணற்க-[1]வான்கவிந்த
வையகம் எல்லாம் பெறினும் உரையற்க
பொய்யோடு இடைமிடைந்த சொல்.

தருமர்:—என்பது. தான்கெடினும் தக்கார்கேடு எண்ணற்க-தான் கெட்டானாயினும் வேறொருவர்க்குக் கேடு எண்ணாதொழிக; தன் உடம்பின் ஊன்கெடினும்—பசியால் வருந்தித் தம்முடம்பில் ஊன் கெடுகின்ற வறுமைக் காலத்திலும்; உண்ணார்

பா-ம்:—[1]'வான்கவித்த'.

கைத்து உண்ணற்க—தம்வறுமை யறிந்து தவிர்க்கும் இயல் பில்லாதாரிடத்து இரவினாலுண்டல் பெ(ாருந்தா தொழிக); வான் கவிந்த வையகமெல்லாம் பெறினும்—வானால் கவிக்கப் பட்ட பூமி முழுவதையும் ஒருவரால் பெறுவராயினும்; பொய் யோடு இடைமிடைந்த சொல் உரையற்க—பொய்யோடு பொருந்திய சொற்களைச் சொல்லாதொழிக வென்றவாறு.

அறிவில்லார் வறுமை வந்தகாலத்து அவ்வறுமைக்கு ஆற்றா ராக ஒருவர்க்குக் கேடு நினைத்தும், இரக்கப்படாத விடத்தா கிலுஞ் சென்று இரந்தும்; பொய்களைச் சொல்லியும் இவ்வகைத் தாக உயிர்வாழக் கருதுவர். அது அப்போதைக்கு வாழ்வுபோல உடனே கேட்டினையும், இளிவரல்களையும் பயக்கும். நிலை யாத யாக்கையின் பொருட்டாகச் சிறியவின்பத்தைக் கருதி, இத்தன்மையாக வொழுகிக் கெடுவது கருமமல்லவென்று பொறுத்து, தமக்கு வறுமை வந்தாலும் யாக்கை நிற்குமளவிற்கு மதனைப் பரிகரிக்கும் பொருட்டு, தமக்கியன்ற விடத்து இரந்து அப்பொருளால் யாக்கையைப் பரிகரித்துத் தமக்குப் பெரிய வின்பத்தைக் கொடுப்பதாய நன்னெறியி னொழுகுவர் பெரியோ ரென்பதாம்.

பொறையில்லாதார், இம்மையிலும் மறுமையிலும் கெடுவர். பொறையுடையார் இம்மை மறுமைக்கும் நன்மையே பெறுப ரென்பது கருத்து.

பதுமனார்:— தான் கெடுவனாயினுந் (தன்னைக் கெடுக்கத்) தக்கார்(க்குக்) கேட்டை யெண்ணாதொழிக. தன் உடம்பின் ஊன் வற்றிக் கெடினும், உண்ணப்படாதார் கைப்பொருளை யுண்ணற்க. விசும்பாற் கவித்த ஞாலமெல்லாம் பெறினும் பொய்யொடு கலந்த சொல்லை உரையற்க என்றவாறு.

தக்கார்—தகுதியுடையார், என்றதீண்டு பிறரைநோக்கி. **கைத்து**—கைப்பொருளை. 'பொய்யொடு இடைமிடைந்த சொல்' என்பது தனக்கும் பிறர்க்கும் துன்பம் விளைத்தாற் பொய் சொல்லாதொழிக. அதனொடொத்துச் செறிந்த சொல்லாகிய

மெய்யும், பிறர்க்குத் துன்பத்தைப் பயக்கிற பொய்யின் தன்மைத்தாலான் அப்பெற்றிப்பட்ட மெய்யுஞ் சொல்லற்க.

இத்திறந்தோறும் பொறுத்தல்.

விளக்க உரை:— தான் கெடினும்—தானே கெட்டானாயினும்; தக்கார்கேடு எண்ணற்க—தன்னைக் கெடுக்கத்தக்க தகுதியுடையார்க்கு கேட்டை யெண்ணாதொழிக; தன் உடம்பின் ஊன்கெடினும்—தன்னுடம்பில் ஊன் பசியாலே மெலிந்து கெடினும்; உண்ணார்கைத்து உண்ணற்க—உண்ணாதான் கைப் பொருளை யுண்ணாதொழிக; வான்கவிந்த வையகமெல்லாம் பெறினும் வானால் கவிக்கப்பட்ட பூமி முழுவதையும் பெற்றாராயினும்; பொய்யோடு இடைமிடைந்த சொல் உரையற்க—பொய்யுடனே கலந்து உண்மையைச் சொல்லாதொழிக வென்றவாறு.

துறவிலே இருந்தவனுக்கு இந்தமூன்றும் பொறுக்க வேண்டுமென்பதாம்.

ஒப்புமைப் பகுதி:-

"ஊன்கெடினும்... ...உண்ணற்க':—

"பொற்கலத்துப் பெய்த புலியுகிர் வான்புழுக்கல்
அக்காரம் பாலோடு அமரார்கைத்து உண்டலின்
உப்பிலிப் புற்கை உயிர்போற் கிளைஞர்மாட்டு
எக்கலத்து ஆனும் இனிது".

—நாலடி. 206.

"உயிர்சென்று தான்படினும் உண்ணார்கைத்து உண்ணாப்
பெருமைபோற் பீடுடையது இல்"

—இனியவை. 12.

"வான்கவித்த வையகம்':-

வானஞ்சூடிய, மலர்தலை யுலகத் துள்ளும்"

—பெரும்பாண். 409.

"வானஞ் சூடிய, மண்டிணி கிடக்கை"

—புறம். 35.

'வான்கவிந்த..........சொல்':—

"உயர்நிலை உலகம் அமிழ்தொடு பெறினும்
பொய்சேண் நீங்கிய வாய்நட் பினையே"

—மதுரைக் காஞ்சி. 197—8.

"நும்மோர் அன்னோர் மாட்டும் இன்ன
பொய்யொடு மிடைந்தவை தோன்றின்
மெய்யாண்டு உளதோவிவ் வுலகத்தானே".

—அகம். 286: 15—7.

"பொய்யொடு மிடைந்த பொருளாசை"

—சீவக. 2873.

குறிப்பு:-

'உண்ணார்கைத்து உண்ணற்க' என்பதற்கு உண்ணத்தகாதார் கைப்பொருள்கொண்டு உண்ணவேண்டா என உரை கூறி; உண்ணத்தகாதார் குரு, தெய்வம், வறியராதியர் என்றும், அவர்பொருள்கொண்டு உண்ணுதல் பெரும்பாவமென்பது அறநூல் துணிபு என்றும் மொழிவர். இனி 'கைத்து' என்பதற்கு 'உணவு' எனப் பொருள்கொண்டு, உண்ணத்தகாதார் தாழ்ந்த குலத்தாரெனவும், அன்போடு உபசரியாதவ ரெனவும் கூறுவர். (ய)

---

9. பிறர்மனை நயவாமை.

கருமர்:— அஃதாவது வேறொருவருடைய இல்லாளை விரும்பாமை. தன் மனையாளிடத்தொரு பழுதுண்டாகில் தனக்கதனா லுண்டாகிய அவமானமும், அதனை நீக்கவொண்ணாமையும், தான் மரிக்குமளவும் ஒருவரருகு போயிருத்தற்கு நாணமும், அதனால்வரும் பெருத்ததுக்கமும், தானிறந்தாலும் நிற்பதாயப் பழிப்புரையும் நினைத்து, தான் பிறர் மனை

யாளிடத்து இந்தப் பொல்லாவொழுக்கம் ஒழுகுங்காலத்து அவர்களுக்கும் இத்தன்மை அல்லவோ வென்றும், தனக்கு மறுமைக்கு நரகமென்றும், இம்மைக்கும் அரசனால் தனக்குக் கேடுவரும் என்றும், நிற்பதாய பழிப்புரையும் நினைத்துப் பிறர் மனையாளிடத்துச் செல்லும் விருப்பத்தை அறிவினால் மீட்டலென்பதாம்.

பதுமனார்:— அஃதாவது இல்வாழ்க்கைக்குத் துணையாக விருந்து [1]தன்வங்கிஷத்தினையுங் [2]கிரகதன்மத்தினையும் இரட்சிப்பாளாக, ஒத்தகுலத்தினுந் தொன்றுதொட்டு மறுப்படாத குடியிலும் ஆராய்ந்து வரைந்து கொள்ளப்பட்ட பிறர் மனையாளை நயவாமையாவதும், தானும் தன்வங்கிஷத்திலும் தன்மனையாளிடத்தும் ஒருகுறை பிறந்தவிடத்துத் தனக்குவரும் மானமும், பின்பது தீர்க்கவொண்ணாமற் படுந்துன்பமும் நன்மனையாளையும் உவக்கும்படி அவன்செய்யுங் களவினையும் கருதாதவன், அச்சத்தாலாயினும் (விரும்)பாமை காரணமாகக் கூறப்பட்டது.

இது அதன்பின் சொல்லியதென்னை. மனைவாழ்க்கைவிட்டு நீங்கி(னாலல்லது) செயற்கையாகிய காமமும், இயற்கையாகிய காமமும் ஒருவருக்குள். அவற்றினுட் செயற்கையாகிய காமத்தினை விட்டாலல்லது, இயற்கையாகிய மனத்தின்கட் காமம்விடார். ஆதலின் அது விடுதற்பொருட்டானும், அம்மனை வாழ்க்கையின்கண் நின்றார்க்குஞ் செயற்கையாகிய காமம் விடுதற்பொருட்டானும், பெரும்பான்மையாற் றுறவின்கண்ணே சொல்லப்பட்டது. அதிகாரத்தினது பெற்றிகளையும் இருவகையாலும் உரைக்கப் பொறையுடைமைக்கும் அதுவே உறுதியென்றவாறு.

விளக்க உரை:— அதாவது தன்மனையாளுக்கு ஒரு பழுதுண்டாகில் தனக்கு அதனாலுண்டான மானமும், அதனை நீக்கவொண்ணாமையும், தான்மரிக்குந்தோறும் ஒருவனிடத்திற்

---

[1]தன்மரபினையும்.

[2]இல்லற தருமத்தினையும்.

போயிருக்கிறதற்கு நாணமுடைமையும், தானிறந்த பின்பும் நிற்பதாய பழிப்புரையும் நினைத்து, பிறர்மனையாளிடத்துத் தான் இந்தப் பொல்லாவொழுக்கம் ஒழுகுங்காலத்து அவர்களுக்கும் இம்மரியாதியல்லவோ வென்றும், மறுமைக்கு நரகமென்றும், அரசரால் தமக்கு கேடுவருமென்றும், நிற்கத் தக்கதாய பழிப்புரையென்றும் பிறர்மனையாள் மேல்சென்ற மனத்தை மீட்டலென்பதாம்.

குறிப்பு:—

திருக்குறளிலும் 'பிறனில் விழையாமை' என ஓரதிகாரம் வகுக்கப்பட்டிருத்தல் காண்க. பிறனில் விழையாமையாவது, 'காமமயக்கத்தால் பிறனுடைய இல்லாளை விரும்பாமை'' என பரிமேலழகரும், ''பிறனுடைய மனையாளது தோள்நலம் விரும்பாமை'' என மணக்குடவரும் கூறுவர்.

81. அச்சம் பெரிதால் அதற்கின்பஞ் சிற்றளவால்
நிச்ச நினையுங்காற் கோக்கொலையால்—நிச்சலுங்
கும்பிக்கே கூர்த்த வினையாற் [1]பிறன்றார(ம்)
நம்பற்க நாணுடை யார்,

தருமர்:—என்பது. அச்சம் பெரிதால்—[வேறொருவருடைய மனையாளிடத்துச் செல்லும்பொழுது] மிகுதியான அச்சத்தைக் கொடுக்கும்; அதற்கு இன்பம் சிறு அளவால்-அந்த அச்சத்தைப் பொறுத்து அவருடன் நயந்தானாகிலும், சிறிதுபொழுதையில் இன்பமின்றி நெடிதாக அனுபவிக்கும் இன்பமில்லை; நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால்—நாள்தோறும் அதனை விசாரிக்குமளவில் அரசனால் கொலையுமுள்ளதாம்; நிச்சலும் கும்பிக்கே கூர்த்த வினையால்-நாள்தோறும் விசாரிக்கில் இச்செய்கை மறுமைக்கு நரகத்தின் அனுபவிக்குங் கொடிய

பா-ம்:— [1]'பிறர்தாரம்'.

தொழிலாம்; [ஆதலால்] பிறன்தாரம் நம்பற்க நாண் உடையார் -பிறர்மனையாளை விரும்புவது நாணமுடையார்க்கு இயல்பல்ல வென்றவாறு.

பதுமனார்:—பிறர்மனையை விரும்பினால் அச்சம் பெரிதாமாதலால், அதற்கு இன்பஞ் சிறியவளவினதால், நாடோறும் ஆராயுங்கால் அரசனால் வருந் தண்டமுமுளதால், நாடோறும் நரகத்திற்கே மிக்க தீவினையுமாதலால், பிறர்மனையாளை நாணினையுடையார் விரும்பாதொழிக வென்றவாறு.

கும்பி—[1]நிரயம்.

விளக்க உரை:—அச்சம் பெரிதால்-[பிறர்மனையாளிடத்துச் சென்றகாலத்து] அச்சம் மிகவுண்டாம்; அதற்கு இன்பம் சிறு அளவால்—அதற்கு இன்பஞ் சிறியவளவினதாம்; நிச்சம் நினையுங்கால் கோக்கொலையால்-நாள்தோறும் ஆராயுங்கால் அரசனாலுளதாகிய கொலையுமாம்; நிச்சலும் கும்பிக்கே கூர்த்த வினையால்—நாள்தோறும் இந்தச்செய்கை மறுமைக்கு நரகத்தின் கண்ணே யனுபவிக்க மிக்க தீவினையாம்; [ஆதலால்] பிறன்தாரம் நம்பற்க நாண்உடையார்-பிறன்தாரத்தை விரும்பாதொழிக நாணுடையா ரென்றவாறு.

கும்பி—நிரயம்.

ஒப்புமைப் பகுதி:—

“பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டார்கண் இல்”.

—குறள். 141.

“எளிதென இல்இறப்பான் எய்துமெஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி”.

—குறள். 145.

---

[1]நரகம்.

"காதலால் கரிந்து நையக் கடியவே கனைந்துகன்றி
ஏதிலான் தாரம் நம்பி எளிதென இறந்துபரவத்து
ஊதுலை உருக வெந்த ஒள்ளழற் செப்புப்பாவை
ஆதகா தென்னப் புல்லி அலறுமால் யானைவேந்தே.
—சீவக. 2769.

"தங்கிருட் போதில் தலைச்சென் றயல்மனை
அங்கு மகிழ்ந்தாள் அவள்இவள் காணெனச்
செங்கன லேயென வெம்பிய செம்பினில்
பொங்கனற் பாவைகள் புல்லப் புணர்ப்பார்".
—சூளா. துறவு. 93.

"வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர் பொருள் தாரம் என்றிவற்றை
நம்பினார் இறந்தால் நமன்தமர் பற்றி
எற்றிவைத்து எரி எழுகின்ற
செம்பினா லியன்ற பாவையைப் பாவீ
தழுவென மொழிவதற்கு அஞ்சி
நம்பனே வந்துஉன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்துள் எந்தாய்".
—பெரியதிரு. 1—6—4.

"காமங் குறித்துப் பாவத்தில் கலந்த பேதை யாருள்ளும்
வாமங் கனிந்த பிறன்மனைவியை மதிக்கும் பேதை
யோர்பயத்தால்

தாமங் கிழிக்கும் அறம்பொருள் போல் சற்றும் இன்பம்
உறார் அதனால்

தோமங் குரிப்பப் பிறன்மனைவி தோள் காமுறுதல் சூழலே"
—விநா. அரசி. 29.

குறிப்பு:-

'நிச்சக்' என்பதற்கு 'உண்மை' என்றுபொருள் கொள்ள லும் ஏற்கும். 'கும்பி' என்ற சேற்றின்பெயர், சேறாகிற நரகத்துக்கும் ஆயிற்று. 'நம்பற்க' என்றது 'நம்பு' என்னும் உரிச்சொல்லின் அடியாகப் பிறந்த எதிர்மறை வியங்கோள்.

'நம்பு' என்றது இங்கு [1]'நசை' என்றப் பொருளை யுணர்த்திற்று. 'நம்பு மேவு நசையாகும்மே' (தொல். சொல். 329) என்பதும் காண்க. நாணாவது, செய்யத் தகாதனவற்றில் உள்ள மொடுங்குதல்.

(க)

82. **அறம்புகழ் கேண்மை பெருமையிந் நான்கும்**
பிறன்றார நச்சுவார்ச் சேரா—பிறன்றார
நச்சுவார்ச் சேரும் பகைபழி பாவமென்று
அச்சத்தோடு இந்நாற் பொருள்.

தருமர்:—என்பது. பிறன்தாரம் நச்சுவார்—பிறருடைய மனையாளை விரும்பினோ ரிடத்தில்; அறம்—அறமும்; புகழ்—புகழும்; கேண்மை—கேண்மையும்; பெருமை—பெருமையு மென்று சொல்லப்பட்ட; இந்நான்கும்—இந்நால்வகைப் பொருளும்; சேரா—சேராவாம்; பிறன்தாரம் நச்சுவார்—பிறருடைய மனையாளை விரும்பினானை; சேரும்—சேருமது யாதோ வெனில்; பகை—பகையும்; பழி—பழிப்புரையும்; பாவம் என்று—மறுமையில் நரகத்து அனுபவிக்குமதாய பாவமும்; அச்சத்தோடு இந்நால் பொருள்—அச்சமெனப்பட்டதோடு இந்நால் வகைப் பொருளுமென்றவாறு.

அச்சம், அரசனால் தண்டிக்கப்படுதல் முதலாயின.

பதுமனார்:—அறமும், புகழும், நட்பும், பெருமையுமாகிய விந்நான்கும் பிறன்மனையாளைக் காதலிப்பாரைச் சேரா. பிறன் மனையாளைக் காதலிப்பாரைப் பகையும், பழியும், பாவமும், அச்சமுமாகிய விந்நான்கு பொருளுஞ் சேருமென்றவாறு.

---

[1] விருப்பம்.

விளக்க உரை:—பிறன்தாரம் நச்சுவார்—பிறனில் விழை வாரை; அறம்—அறமும்; புகழ்—புகழும்; கேண்மை—கேண்மை யும்; பெருமை—பெருமையும் என்று சொல்லப்பட்ட; இந்நான் கும்—; சேரா—சேராதாம்; பிறன்தாரம் நச்சுவார்—பிறனில் விழைவாரை; சேரும்—அடைவது; பகை—பகையும்; பழி—பழி யும்; பாவம் என்று—பாவமும்; அச்சத்தோடு—அச்சமுமாகிய; இந்நால் பொருள்—இந்நான்கு பொருளுமென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

முதலிரண்டு அடிகள்:—

"அறனும் அறனறிந்த செய்கையுஞ் சான்றோர்
திறனுடையன் என்றுரைக்குந் தேசும்—பிறனில்
பிழைத்தான் எனப்பிறராற் பேசப் படுமேல்
இழுக்காம் ஒருங்கேயி வை".

—அறநெறி.149.

2—4:-

"பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்".

—குறள்.146.

"அறன்வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று".

—குறள்.150.

"பின்னிநின்ற பெருவினை மேல்வரும்
என்ன தாயினும் எதில்பெண் நீக்குமின்"

—வளையாபதி.

"செய்தாயேனும் தீவினையோடும் பழியல்லால்
எய்தாது எய்தாது......"

—கம்ப.ஆரணிய.மாரீசன்.182

"எவ்வினைய ரேனும் இனைவிழைச்சொன்று இல்லெனின்
தெவ்வுந் திசைநோக்கிக் கைதொழூஉம்—அவ்வினை

காத்த லிலரே எனைத்துணைய ராயினும்
தூர்த்தருந் தூர்ப்பார் அலர்".

—நீதிநெறி.89.

"பகையே பழியே பாவமே பயமே நான்கும் தினம்கொடுக்கும்
தகையார் பெருமை முழுதளிக்கும்...."

—விநா.அர.30.

குறிப்பு:—

பிறன்மனைவியை விரும்புவானைத் தருமமும், புகழும், நட்பும், பெருமையுமாகிய இந்நான்குஞ் சாராது. இந்நான்கிற் கும் ஈடாக பாவமும், பழியும், பகையும், அச்சமுமாகிய இந்நாற் பொருளும் சாரும் என்பதாம். நான்குபோய் நான்குவருமென்ற தனால், இது 'பரிவர்த்தனை அணி'.

(உ)

83. புக்க இடத்தச்சம் போதரும் போதச்சந்
துய்க்கும் இடத்தச்சந் தோன்றாமற் காப்பச்சம்
எக்காலும் அச்சந் தருமால் எவன்கொலோ?
உடகான் பிறனில் புகல்.

தருமர்:—என்பது. புக்க இடத்து அச்சம்—பிறர்மனையாளி டத்துச் சென்று புகுங்காலத்து வருவதோரச்சம்; போதரும் போது அச்சம்—திரும்பி வரும்போது வருவதோர் அச்சம்; துய்க்கும் இடத்து அச்சம்—அவளிடத்து இன்பமனுபவிப்பதோர் அச்சம்; தோன்றாமல் காப்பு அச்சம்—அந்நுகர்ச்சியைப் பிறரறியாமல் காப்பதுமோர் அச்சம்; எக்காலும் அச்சம் தருமால் —இந்தப்படிதான் எந்நேரமும் அச்சத்தையே கொடுக்கும்; எவன்கொலோ? உட்கான் பிறன் இல்புகல்-(அச்சமுடை)த்தாக எவன் பிறர்மனையாளிடத்துச் செல்வதனை நினைப்பான்? என்றவாறு.

எனவே இன்பம் நினைந்து வரும் அகௌரவத்தை மறந்தா

னாகிலும் அவ்வின்பமும் நெடிதாக அனுபவிப்பதில்லை. அது வன்றிச்சிறிதாக அனுபவித்தாலும் அச்சமறச் செவ்வையோடு அனுபவிப்பதுமல்ல. அதனை விரும்பினார்க்கு எப்போதுந் துன்பமே ஆயிருக்கவும், அதனை விரும்புவது அறிவின்மையென வதனில் விரும்பாதொழிக என அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—புக்ககாலத்தின்கண் வருவதோரச்சம், மீண்டு போதுங்காலத்து வருவதோரச்சம், நுகருங்காலத்து வருவதோரச்சம், அந்நுகர்ச்சியைப் பிறரறியாமற் காக்குங்காலத்து வருவதோரச்சம், மற்றும் எக்காலத்தும் அச்சமே தராநின்றதாதலால், பிறர்மனையாளை யஞ்சாதே 'விரும்புதல் என்னை கொல்லோ? என்றவாறு.

உட்கான்—கூசான்.

விளக்க உரை:— புக்க இடத்து அச்சம்—பிறர்மனையாளிடத்துச் சென்று புகுங்காலத்து வருவதோரச்சம்; போதரும் போது அச்சம்—மீண்டு போதுங்காலத்து வருவதோரச்சம்; துய்க்கும் இடத்து அச்சம்—பிறர்மனையாளை நுகருங்காலத்து வருவதோரச்சம்; தோன்றாமல் காப்பு அச்சம்—அந்த நுகர்ச்சியைப் பிறரறியாமல் காக்குங்காலத்து வருவதோரச்சம்; எக்காலும் அச்சம் தருமால்—எப்பொழுதும் அச்சத்தையே தருமாதலால்; உட்கான் பிறன்இல் புகல்—அஞ்சாதே பிறர் மனையாளிடத்துச் சென்றுபுகுதல்; எவன்கொலோ? - யாதுதான்? என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"எனைத்துணைய ராயினும் என்னாம்? தினைத்துணையும்
தேரான் பிறன்இல் புகல்".

—குறள். 144.

"மாறாய் நின்று—[1]கரம்போலக்
கள்ளநோய் காணும் மயல்"

—சிறுபஞ்ச. 62.

குறிப்பு:—

'உட்கான்' என்பது எதிர்மறைத் தெரிநிலை முற்றெச்சம். உட்கு—பகுதி. உட்கு-அச்சம்; 'நாணும் உட்கும் நண்ணுவழி யடைதர' (குறிஞ்சிப். 184) என்ற விடத்துப் போல. புகல்— 1. விருப்பம்; 'வானுறை புகறந்து' (பரிபா. 19—1). 2. புகுகை; 'முனைபுகல் புகல்வின்' (பதிற்றுப். 84—17). 'புகல் என்பதனை இடக்கரடக்கலாகக் கொண்டு தருமர் 'புகுகை' என்ற பொருள் கொள்ள, பதுமனார் 'விரும்புதல்' எனப் பொருள் கொண்டார்.

பிறர்மனை விரும்புவானுக்கு மற்ற யாவற்றினும் அச்சம், அவனுக்குள்ளே உணரப்பட்டு மிகுதியாக இருப்பதனைச் சுட்டிப் பிறர்மனை நயவாமையை அறிவுறுத்தினார். 'அறன் கடை நின்றாருள் எல்லாம் பிறன்கடை, நின்றாரின் பேதையார் இல்' என்ற திருக்குறளில் (142) 'அறன்கடைநின்ற பெண்வழிச் செல்வாரும் வரைவின்மகளிரோடும், இழிகுல மகளிரோடுங் கூடி இன்பநுகர்வாரும்போல அறமும் பொருளும் இழத்தலேயன்றிப் பிறன்கடை நின்றார் அச்சத்தால் தாம்கருதிய இன்பமும் இழக் கின்றாராகலின், பேதையாரில் என்றார்' என்ற பரிமேலழகர் உரையையும் காண்க.

(௩)

84. காணிற் குடிப்பழியாங் கையுறிற் கால்குறையு
மாணின்மை [2]செய்யுமால் அச்சமா—நீணிரயத்
துன்பம் பயக்குமால் துச்சாரி! [3]நீகொண்ட
இன்பம் எனக்கெனைத்தாற் கூறு.

---

[1]நஞ்சு.

பா—ம்:—[2]'செய்யுங்கால்'.

[3]'நீகண்ட'.

தருமர்:—காணில்-பிறர் மனையாளிடத்துச் செல்லுமவனை ஒருவர் காணில்; குடிப்பழியாம்-இவன் இத்தன்மையவனென்று தன்குலத்துக்கெல்லாம் இழிவாகிய சொல்லுண்டாம்; கைஉறில் —சென்றவிடத்து அகப்படுவனாகில்; கால்குறையும்— அரசனாற் றண்டிக்கப்பட்டு தன்நடக்கை குறையப்படுவன்; மாண் இன்மை செய்யுமால் அச்சாம்—மாட்சிமையுங் கெட்டு மிகுதி யான அச்சமுமுண்டாம்; நீள்நிரயத் துன்பம் இவைகளெல்லாந் தப்பினாலும் மேல்நெடிய நரகமாகிய துன்பத்தை; பயக்குமால் —அனுபவிக்கப்; பண்ணும்; [ஆதலால்] துச்சாரி!—பொல்லாத செயலையுடையவனே!; நீ கொண்ட இன்பம்—இத்தன்மையான செயலை நீ இன்பமெனக் கொண்டது; எனைத்து?-எவ்வகைத் தாக? என்று; எனக்குக்கூறு—யானறியும்படி கூறுவாயென்ற வாறு.

இருமையுங் கெடுப்பதாய விச்செயலைச் செய்வது அவன் அறிவின்மையென்பது தோன்ற, இவ்வகைத்தாய செயலை யுடையார் துச்சாரியென்று இழிவுபடக் கூறி யாவர்க்கும் அறிவுறுத்தியது.

பதுமனார்:— ஆராயிற் குடிப்பழியாம், அகப்படிற் றன் கால் குறைப்புண்ணும், மாண்டகைமையை யழிவிக்கும், அச்ச மிகவுண்டாம், நீண்ட நரகத் திடும்பையையுந் தரும். ஆதலால் பொல்லாத செய்கையுடையாய்! நீ யாராய்ந்தறிந்த வின்பம் எத்தன்மையாயிருக்கும்? எனக்கதனை யறியச் சொல்லென்ற வாறு.

காணில்—ஆராயில். கைஉறில் கால் குறையும்—அகப்படில் அப்பொழுதே உடல் குறைப்புண்ணும். மாண் இன்மை—மாட் சிமை யல்லாமை. துச்சாரி—பொல்லாத வொழுக்கமுடையாய். எனைத்து—எத்தன்மைத்து. ஆல்—அசை.

விளக்க உரை:—காணில்—பிறர் மனையாளிடத்துச் சென்ற காலத்து ஒருவர்காணில்; குடிப்பழியாம்—குடிக்குப் பழியாம்;

கைஉறில் கால்குறையும்—கையகப்படில் கால்குறையும்; மாண் இன்மை செய்யுங்கால் அச்சமாம்—இந்த மாட்சிமையல்லாத செய்கையிலே யொழுகுவனாகி லச்சமுண்டாம்; நீள் நிரயத் துன்பம் பயக்குமால்-நீண்ட நரகத் துன்பத்தினையுண்டாக்கும்; [ஆதலால்] துச்சாரி!—பொல்லாச் செய்கையையுடையவனே!; நீகண்ட இன்பம்–; எனைத்து? —எத்தன்மைத்தாயிருக்கும்?; எனக்கு கூறு—எனக்கு அறியச் சொல்லென்றவாறு.

காணில்—ஆராய்வாராயின். கைஉறில் கால் குறையும்— அகப்படில் அப்பொழுதே யுடல் குறையப் பண்ணும். ஆல்— அசை.

ஒப்புமைப் பகுதி:—

''பகைபாவம் அச்சம் பழிஎன நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்''.

—குறள்.146.

'நீள் நிரயத் துன்பம்'.—

''நிரயத்துத் துஞ்சாத் துயரந் தரும்''

—அறநெறி.65.

''நிரயத்தானை -மாற்றார்க்கு நரகவேதனையைச்
செய்யுந்தானை''

—சிலப்.30:25. அரும்பதவுரை யாசிரியர்.

குறிப்பு:—

'மாணின்மை' என்றது அதிகாரத்தால் பிறர்மனை நயத்தலைக் குறித்தது. இனி 'ஆணின்மை' எனக்கொண்டு ஆண்மையில்லாமையாகிய தீயொழுக்கத்தை எனப்பொருள் கொள்ளுதலும் உண்டு இந்திரியங்களை அடக்கவல்ல ஆண்மையின்மையைக் குறிக்க வந்ததாகக் கொள்ளுதல் சிறப்புடையது. 'பிறன்மனை நோக்காத பேராண்மை' என்ற திருக்குறளில் (148) 'பிறர்மனையாளை உட்கொள்ளாத ஆண்தகைமை' யென்றும்,

'புறப்பகைகளை அடக்கும் ஆண்மையுடையார்க்கும் உட்பகை யாகிய காமம் அடக்குதற்கு அருமையின், அதனையடக்கிய ஆண்மையைப் பேராண்மை யென்றார்'' என்றும் பரிமேலழகர் உரைகூறி யிருத்தல் காண்க. ஆகவே, பிறர்மனை நயத்தலை ஆண்மையின்மை யென்பது அமையும் என்பதறிக.

பிறர்மனை விரும்பிச் சென்றானுக்குக் காலைக் குறைத்தல் பண்டைய வழக்கு. 'எனைத்து' என்பது 'எத்தனைத்து' என்பதன் மரூஉ.

(சு)

85. செம்மையொன்று இன்றிச் சிறியார் இனத்தராய்க்
கொம்மை வரிமுலையாள் தோள்மரீஇ—உம்மை
வலியாற் பிறர்மனைமேற் சென்றாரே இம்மை
அலியாகி யாடியுண் பார்.

கருமர்:—என்பது. செம்மை ஒன்று இன்றி—செப்ப மொன்றும் அற்று; சிறியார் இனத்தர் ஆய்—தீங்குழல்வாரைச் சேர்ந்து; கொம்மை வரிமுலையாள் - இளமை நலமும், பொற் சுணங்கும் பெற்ற முலையினையுடையாள்; தோள் மரீஇ—தோளில் நெடுநாள் பழகி; உம்மை வலியால்—முற்பிறப்பில் தமது வலிமையினால்; பிறர்மனை சென்றாரே—பிறர்மனையாளிடத் துச் சென்றவரல்லவோ; இம்மை—இப்பிறப்பில்; அலி ஆகி ஆடி உண்பார்—அலியாகக் கூத்தாடி யுண்பவ ரென்றவாறு.

முற்பிறப்பிலே தமது புயவலியினாலே பிறர்மனைச்சென்று, கொம்மையும் வரியும் பரந்த முலையாளிடத்து நெடுநாள் பழகி யவர், இப்பிறப்பிலே சிறிய வின்பமாகிய இழிகுலத்திலே அலியாகப் பிறந்து வறுமையுற்றுத் தமது [1]அலமாப்பாகிய வுரையை, யாவர்க்கும் இதம்பெறச்சொல்லி இரந்து திரிவரென்று, மேலிவன் அனுபவிப்பதை இப்போது அலியாகப் பாடியுண்ப வரைச் சான்றாகக்கூறி அறிவுறுத்தியவாறு.

---

[1]அலமாப்பு—துன்பம்; 'அலமாப்பினிற் பாரிஉரு கூத்து' (திருப்பு. 879)

பதுமனார்:— மனத்தின்கட் செப்பமொன்றின்றிச் சிறியா ரினத்தை யுடையராய், இளமையையுந் [1]திதலையுமுடைய முலை யினையுடையாள் தோளை நெடுநாளாகப் பழகி, முற்பிறப்பின் கட்டம்வலியான் வலிசெய்து பிறர்மனைமேற் சென்றொழு கினாரே, இப்பிறப்பின்கண் அலிகளாய்க் கூத்தாடி யுண்பவ ரென்றவாறு.

செம்மை—செப்பம். கொம்மை—இளமை. வரி—திதலை. மரீஇ—மருவுவதற்காக உம்மை—முற்பிறப்பு ஆடி—கூத்தாடி.

விளக்க உரை:— செம்மை ஒன்று இன்றி—மனத்தின் கட் செப்பமொன்றின்றி; சிறியார் இனத்தராய்—தீக்குணமுடைய வரைச் சேர்ந்து; கொம்மை வரிமுலையாள்—இளமையுந் திதலையுடைய முலையாள்; கோள்மரீஇ—தோளினை நெடுநாட் பழகி; உம்மை வலியால்—முற்பிறப்பின்கட் டம்வலி யான் வலிசெய்து; பிறர்மனைமேல்—; சென்றாரே—சென்றொழுகி னாரே; இம்மை அலியாகி ஆடி உண்பார்—இப்பிறப்பிலே அலியாகிக் கூத்தாடி யுண்பாரென்றவாறு.

கொம்மை—இளமுலை வரி—வரிதல். மரீஇ—மருவுதற்காக. உம்மை—முற்பிறப்பு.

ஒப்புமைப் பகுதி:—

'சிறியார் இனத்தராய்'—
"[2]வறுமொழி யாளரொடு வம்பப் பரத்தரொடு
குறுமொழிக் கோட்டி நெடுநகை புக்குப்
பொச்சாப் புண்டு பொருளுரை யாளர்
நச்சுக்கொன் றேற்கு" —சிலப். 16 : 63—6.

---

[1]திதலை—1. தேமல்; பொன்னுரை கடுக்குந் திதலையர்' (திருமுரு. 145)

2 ஈன்ற பெண்களுக்குள்ள வெளுப்பு நிறம்; ஈன்றவள் திதலைபோல்' (கலித். 32.)

[2]வறுமொழி—பயனில் சொல்.

'கொம்மை வரிமுலையாள்' :—

—நெடுநல். 69.

"கொம்மை வருமுலை"

—குறுந். 159.

"கொம்மை வரிமுலை"

—சிலப். 28:16.

"கொம்மை வரிமுலை"

"கொம்மை வெம்முலை" —சீவக. 347.

'பிறர்மனைமேற் சென்றார்':—

"பிறன்கடை நின்றார்" —குறள். 142.

குறிப்பு:—

செம்மை—நடுவுநிலைமை. சிறியார் இனத்தராய்—"சிறிய இனமாவது, [1]நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென் போரும்' விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு" எனப் பரிமேலழகரும்; "காமுகரும், சூதாடிகளும் பெண்டிருமுதலாயினார்" எனப் பரிப்பெருமாளும் 'சிற்றினஞ் சேராமை' அவ்வதிகாரத்தில் (குறள். 46ம் அதி.) கூறுதல் காண்க. கொம்மை —1. இளமை (திவா). 2. அழகு (பிங்). 3. வன்மை (பிங்). 4. பருமை (பிங்). ஆகவே இத்தன்மைகொண்ட இளமுலைக்கும் 'கொம்மை' எனவே பெயராயிற்று. 'மருவி' என்பது சொல் விகாரப்பட்டு 'மரீஇ' என அளபெடுத்தது. 'உம்மை—முற்பிறப்பு' (சிலப். 15:92—உரை). ஆணுறுப்பு மிகுந்து பெண்ணுறுப்புக் குறைந்த பிறவி 'அலி' எனப்படும். முற்பிறப்பில் பிறர்மனை நயத்தலாகிய தீவினைகளைச் செய்தாரே இப்பிறப்பில் அலியாகி யாடியுண்பார்; எனப் பிறர்மனை விழைவினால் ஏற்படும் தீமையைக் கூறினார். "ஆண்பாற்குறிய ஆளுந்தன்மை முற்பிறப்பிற் தான்செய்த தீவினையாற் தன்னிடத்து இல்லையான..." என்று தொல்காப்பிய சூத்திரத்திற்கு (சொல். சூ. 4)

[1]புறம். 29: 11.

நச்சினார்க்கினியர் உரைகூறி யிருத்தலும் காண்க.

(ரு)

86. பல்லார் அறியப் பறையறைந்து நாட்கேட்டுக்
கல்யாணஞ் செய்து கடிபுக்க--மெல்லியற்
காதன் மனையாளும் இல்லாளா என்! ஒருவன்
ஏதின் மனையாளை நோக்கு.

தருமர்:— என்பது. நாட்கேட்டு—நல்ல முகூர்த்தத்திலே; பல்லார் அறிய—பலருமறிய; பறை அறைந்து—; கல்யாணம் செய்து—; கடிபுக்க—காவல் புகுந்த; மெல் இயல்—மென்மை யாகிய வியல்பையு முடையத்தான்; காதல் மனையாளும்—தான் காதலிக்குந் தொழிலையுமுடையவள்; இல்லாள் ஆ—தனக்கு மனையாளாகி இல்லத்திருப்ப, ஒருவன்—; ஏதில் மனையாளை—அயல் மனையாளை; நோக்கு—பார்க்கும் பார்வை; என்?—எவ் வகைத்தாகவோ? என்றவாறு.

தன்மனையாளை இவ்வகைத்தாய்க் காவல் புகுத்தி தனக்கு அவமானம் வராது காப்பவன், மற்றோர்க்கு இவ்வகைத்தெண் ணாது பார்க்கும்பொழுதே, இவன் அறிவு இத்தன்மையோ? என இழிவாக்கி யாவர்க்கும் அறிவுறுத்தியது. கடிபுகுதல்—தன்னுடம்புக்குப் ப்ரிகாரியாக வந்து புகுதலுமாம்.

பதுமனார்:— நல்லநாள் கேட்டுப் பலருமறியப் பறை யறைந்து மணஞ்செய்யப்பட்டுக் காவல்பூண்ட, மெல்லிய வியல் பினையுடைய காதன் மனையாளுந் தன்மனையகத்தாளாக. ஒருவன் அயன்மனையாளைக் காதலித்து நோக்குநோக்கு என்னைக் கொலோ? என்றவாறு.

கடி—காவல்.

விளக்க உரை:— நாள்கேட்டு — நல்லநாளுங் கேட்டு;

பல்லார் அறிய—பலரறிய; பறை அறைந்து—; கல்யாணஞ் செய்து—; கடிபுக்க—காவல் புகுந்த; மெல்இயல்—மெல்லிய வியல்பினை யுடைத்தான; காதல் மனையாளும்-காதலிக்கப் பட்ட மனையாளும்; இல்லாள்ஆ—இல்லாளாக; எதில் மனையாளை-அயல் மனையாளை] நோக்கி-பார்க்கும் பார்வை; ஏன்?-யாது தான்? [யாதோ? அறிந்திலோம்] என்றவாறு.

கடிபுகுதல்—தன் உடம்புக்குப் பரிகாரியாக வந்துபுகுதல்.

ஒப்புமைப் பகுதி:-

''அறனிற் கொண்ட தன்மனையாள் அமளித்தலத்தில் அழுதி
பிறனில் தேடும் பெரும்பாவி'' [ரங்கப்

—பாரதம்.

'பல்லார் அறிய...கல்யாணஞ் செய்து':—

''நேரிறை முன்கை பற்றி நுமர்தர
நாடறி நன்மணம் [1]அயர்கம் சின்னாட்
கலங்க லோம்புமின்''

குறிஞ்சிப். 231—3.

'' பலரறி மணமவர் படுகுவர்''

—சிலப். 24.

குறிப்பு:—

அறைந்து-அறைவித்து; பிறவினைப் பொருளில் வந்த தன் வினை. 'செய்து' என்பதில் 'படு' விகுதி தொக்கது. 'என்' என்பது 'எவன்' என்னும் வினாவினைக் குறிப்பு முற்றின் விகாரம். நோக்கு என்றது, இங்கு இடக்கரடக்கலாக வந்தது. 'பிறன் மனை நோக்காத பேராண்மை' என்ற திருக்குறளில் (148) பிறன் மனையாளை உட்கொள்ளாத பெரிய ஆண்தகைமை எனப் பரிமேலழகர் உரைகூறி இருத்தலும் காண்க.

(சு)

[1] நிகழ்த்துவேம்.

87. அம்பல் அயலெடுப்ப அஞ்சித் தமர்பரீஇ
வம்பலன் பெண்மரீஇ மைந்துற்று—நம்பு(ம்)
நிலைமையில் நெஞ்சத்தான் துப்புரவு பாம்பின்
தலைநக்கி அன்னது உடைத்து.

தருமர்:— என்பது. அயல் அயலார்; அம்பல் எடுப்ப-[தன் பொல்லாத செய்கையைக் குறித்து] செவிப்பறைச்சல் பறைய; தமர்-தன்னினத்தார்; அஞ்சி-[இவை வெளிப்பட்டு ஈனம் வருகிறதோவென்று] அச்சமுடைத்தாய்; பரீஇ—வருந்த; வம்பலன் பெண்மரீஇ—அயலான் மனையாளை மருவி; மைந்து உற்று—மயக்கமுற்று; நம்பும் நிலைமைஇல் நெஞ்சத்தான்—[நன்னெறியிற் செலுத்தாத பிறர்மனையாளிடத்து காதல் தன்னை] நம்பும் நிலையில்லாத நெஞ்சினையுடையவன்; துப்புரவு-நுகரும் நுகர்ச்சியாவது; பாம்பின் தலைநக்கி அன்னது உடைத்து— [மந்திர சக்தியால்] பாம்பினது தலையை (நக்கியின்புற்றது மேலும் தன்மையை) யுடைத்து என்றவாறு.

பாம்போடு பழகுவார்க்குக் கேடுவருதல் தப்பாது, அது போலப் பிறர்மனை விழைவார்க்குங் கேடுவருதல் தப்பாதென்பதாயிற்று.

பதுமனார்:— அயன் மனையிலுள்ளார் பழிதூற்றத் தன்னுற்றார் தனக்குவரும் இடும்பைக்கஞ்சி இரங்க, ஏதிலான் மனையாளை மருவி மயக்கமுற்று விரும்புகின்ற நிலையில்லாத நெஞ்சினையுடையான், நுகருநுகர்ச்சி பாம்பினது தலையைநக்கி இன்புற்றாற் போலுந் தன்மையை யுடைத்தென்றவாறு.

அம்பல்—ஆரவாரம். பரீஇ—இரங்கல். வம்பலன்—ஏதிலான். மைந்து—மயக்கம். துப்புரவு—நுகருநுகர்ச்சி.

விளக்க உரை:— அயல்—அயல் மனையார்; அம்பல் எடுப்ப—[தன்பொல்லாத செய்கையைக் குறித்து] செவிப் பறைசசல் அறைய; தமர்—உறவின்முறையார், அஞ்சி—[அது

வெளிப்படுகிறதோ, பழிப்புரையாகிறதோவென்று] மற்றுந் தனக்குவருந் துன்பங்களுக்கஞ்சி; பரீஇ—வருந்த; வம்பலன் பெண்மரீஇ—அயலான் மனையாளை மருவி; மைந்து உற்று—மயக்கமுற்று; நம்பும்—காதலிக்கிற; நிலைமை இல் நெஞ்சத்தான்—நிலையில்லாத நெஞ்சினையுடையவன்; துப்புரவு—நுகர்ச்சி; பாம்பின் தலைநக்கி அன்னது உடைத்து—பாம்பின்தலையை நக்கிப் பலர்க்குந் தன்னுடைய மந்திரவாதத்தை யறிவித்து அதனாற்றான் மகிழ்ந்ததனோடு ஒக்குமென்றவாறு.

இருவருக்கும் கேடுவருதல் தப்பாதென்பதாம். அம்பல்—ஆரவாரம். பரீஇ—இரங்கல். வம்பலன்—ஏதிலான். மைந்து—மயக்கம். துப்புரவு—நுகர்ச்சி.

குறிப்பு:--

'அயல்' என்பது ஆகுபெயராய் அயலாரைக் குறித்தது. அம்பல்—சிலரறிந்து புறங்கூறுமொழி (தொல். பொருள். சூ.225). இதன் இனமாகிய 'அலர்' என்பது 'பலருமறிந்து கூறும் புறங்கூற்று' (குறள், 1142) எனப் பொருள்படும். பரீஇ—'பரிய' என்னுஞ் செயவெனச்சத்தின் திரிபாகிய பரிந்து என்பதன் சொல்லிசையளபெடை. 'பெண்' என்றது ஈண்டு 'மனைவி' என்னும் பொருளில் வந்தது; 'பெண்ணிடர் விடுப்ப வாழ்விற் சாதலே பெரிது' என்ற சிந்தாமணிச் செய்யுளுரையையும் நோக்குக. "நினக்கிவன் மகனாகத் தோன்றியதூஉம் மனக்கினியாற்கு நீ மகளாயதூஉம், பண்டும் பண்டும் பலபிறப்புளவால், கண்டபிறவியே யல்ல காரிகை" என்றவிடத்து 'மகள்' என்பதும் இது போன்றதே.

மந்திரவாதத்தைப் பிறர்க்குக் காட்ட விழைந்து பாம்போடு பழகி வருவார்க்குக் கேடு வருதல் உறுதியாதல் போல, பிறன் மனைவியை விழைவார்க்கும் கேடுவருதல் தப்பாது நிகழுமென்றார். இச்செய்யுள் உவமையணி.

(எ)

88. பரவா [1]வெளிப்படா பல்லோர்கட் டங்கா
உரவோர்கட் காமநோய் ஓஒ கொடிதே!
விரவாருள் நாணுப் படலஞ்சி யாதும்
உரையாதுள் ஆறி விடும்.

தருமர்:— உரவோர்கண்—பெரியோரிடத் துண்டாகிய; காமநோய்—ஆசையென்னும் நோயானது; பரவா—பரவாது; வெளிப்படா—வெளிப்படாது; பல்லோர்கண் தங்கா—பலரு மறியப்படாது; விரவாருள் நாணுப்படல் அஞ்சி—அயலார்முன் தமக்கு நாணம் வருவதற்கஞ்சி; யாதும் உரையாது உள் ஆறி விடும்—யாதொன்றினையும் வெளிப்படக் கேட்டிராமல் தன் னுள்ளேதானே ஆறிவிடும்; [ஆதலால்] ஓஒ கொடிது!—(அது) மிகவுங் கொடியது என்றவாறு.

பதுமனார்:— அறிவுடையார் மனத்தின்கண் தோன்றிய காமம் பின்னை வளராது, வெளிப்படாது, பலர் மாட்டுந் தங்காது. ஆதலால் அக்காமத்தான் வருநோய் மிகவுங் கொடிது. பகைவர் முகத்து அவ்வுரவோர்கட்கு நாணம்வருமென்றஞ்சி, யாதொன் றும் பிறர்க்குரைக்கப்படாதே யுள்ளே யாறிவிடும் என்றவாறு.

[இது, யாவரையும் மயக்கிவிப்ப தொன்றாகலில், இந்தத் தீயவொழுக்கத்திலே எழுந்திருந்த மனத்தினை இப்படி வலிதாக மீட்டலென்பது காட்டுதற்குப் பிறர்மனை நயவாமையிலே சேர்க்கப்பட்டது].

உரவோர்—அறிவுடையோர். பரவா—வளராது. பல்லோர் கண் தங்கா—பல்லோர் மனங்கொள்ளப்படா.

விளக்க உரை:- உரவோர்கண் காமநோய்—பெரியோ

பா-ம்: [1]'வெளிப்படாப் பல்லோர்கட் டங்கா'.
[2]'வெளிப்படார் பல்லோர்கட் டங்கார்'.

ரிடத்துண்டாகிய வாசைநோய்; பரவா—பரவாது; வெளிப்படா — வெளிப்படாது; பல்லோர்கண் தங்கா — பலருமறியாது; [ஆதலால்] ஒஒ கொடிதே!—(அது) மிகவுங் கொடியதாயிருந்தது; விரவாருள் நாணுப்படல் அஞ்சி—அயலார்முன் அதனால்வரும் நாணுடைமைக் கஞ்சி; யாதும் உரையாது உள் ஆறி விடும்— யாதொன்றனையுஞ் சொல்லாதே தன்னுள்ளே யாறிவிடு மென்றவாறு.

இது யாவரையும் மயக்கிவிப்பது †............கொள்ளப்படா.

குறிப்பு:—

பரவா, வெளிப்படா தங்கா என்பன ஈறுகெட்ட எதிர்மறை, யொன்றன்பால் முற்றுகள். சிலர் ஈறுகெட்ட எதிர்மறைவினை யெச்சங்களாகக் கொண்டு 'வெளிப்படாப் பல்லோர் கண்தங்கா' எனப் பாடப்பேதம் கொள்ளுவர். விரவார் என்பதற்குத் தருமர் அயலார் என்றும், பதுமனார் பகைவர் என்றும்; உரை கூறினார். சிலர் இதற்கு 'காமநோய் கலவாதார்' எனப்பொருள் கொள்வர். 'யாதும் உரையாது' என்பது குறிப்புமொழி; சிறிதும் வெளிப்படாது என்பதை யுணர்த்திற்று. இனி விரவார் பழிப் பதற்குச் சிறிதும் இடமில்லாதபடி எனினும் அமையும். காமம், மனத்தையும் உடம்பையும் வருந்துவதொன்றாகலின் அதனை 'நோய்' எனக் குறித்தார். அறிவுடையோகண் தோன்றும் காமமானது கீழோரிடத்துப்போலப் புறத்தின்கண் செயல் படாது, அவர்தம் மனத்தினுள்ளேநின்று மிகவருந்தி அடங்கு தலின் அவர்தம் காமமானது மிகவுங் கொடியதென்பார்; ஒஒ கொடிதே! என்றார். கொடிதே என்பதினுள்ள ஏகாரம் தேற்றம்.

(அ)

89. அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்
வெம்பிச் சுடினும் புறஞ்சுடும்—வெம்க்

---

†பதுமனார் உரையில் உள்ளதே.

கவற்றி மனத்தைச் சுடுதலாற் காமம்
அவற்றினும் அஞ்சப் படும்'

தருமர்:— அன்பும்—; அழலும் — நெருப்பும்; அவிர்கதிர் ஞாயிறும்—பரிதியின் விளங்காநின்ற கதிர்களும்; வெம்பிச் சுடினும்—கனன்று சுட்டதாயினும்; புறம் சுடும்—உடம்பு மாத்திரஞ் சுடும்; காமம்—காமநோயானது; வெம்பி—கனன்று; மனத்தை—; கவற்றி சுடுதலால்—கவலைப்படுத்திச் சுடுதலாலே; அவற்றினும் அஞ்சப்படும்—முன்கூறியவற்றினும் கொடியதென்று பயப்படத் தருவதாம் என்றவாறு.

மனத்தைச் சுடுமென்றல் நரகத்தை அனுபவிக்கப்பண்ணு மென்பதாம். ஆதலால் பிறர்மனை நயத்தல் தன்னுடம்பு வருத்தஞ்செய்து போவதும் அல்ல; தான் முன்தேடிய நன்னெறி களையுங் கெடுக்கு மென்பதாயிற்று.

பதுமனார்:— அம்பும், நெருப்பும், விளங்கிய கதிர்களை யுடைய ஞாயிறுங் கனன்று சுடினும் உடம்பினைச் சுடும். அத்துணையே! உண்ணின்ற மனத்தைக் கவலைசெய்து கனன்று சுடுமதலால், காமம் அவற்றினும் அஞ்சத்தகுமென்றவாறு.

வெம்பி—கொதித்து. கவற்றி—கவலைசெய்து.

விளக்க உரை:— அம்பும்—; அழலும்—நெருப்பும்; அவிர் கதிர் ஞாயிறும்—விளங்காநின்ற கதிரையுடைய பரிதியும், வெம்பிச் சுடினும்—கனன்று சுட்டதாயினும்; புறம் சுடும்—உடம்பைச்சுடும்; [அத்துணையே] வெம்பி—கனன்று; மனத்தை—உண்ணின்ற மனத்தை; கவற்றி—கவலைசெய்து; சுடுதலால்—சுடுமாதலால்; காமம்—ஆசைநோய்; அவற்றினும்—முன் சொன்ன அவற்றைக் காட்டினும்; அஞ்சப்படும்—பயப்படத் தருமென்றவாறு.

மனத்தைச் சுடுமென்றல் நரகத்தை அனுபவிக்கப்படுத்து மென்பதாம். ஆதலால் பிறர்மனை நயத்தல் உடம்பளவினும்

நில்லாதென்பது கருத்து. வெம்பி—கொதித்து. கவற்றி—கவலைசெய்து.

மேற்கோள் பகுதி:-

நச்:— கட்டளைக் கூழை மோனைக்கு ‘அம்பும் அழலும் அவிர்கதிர் ஞாயிறும்’ என்றவடியை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல். செய். சூ 92.

அவிரோத வுந்தியார்:— மேற்கோளாக வந்துள்ளது.

—அவி. 89.

ஒப்புமைப் பகுதி:—

“நீங்கில் [1]தெறூஉம் குறுகுங்கால் தண்ணென்னுந்
தீயாண்டுப் பெற்றா ளிவள்”.

—குறள். 1104.

“மறப்பின் எவனாவன் மற்கொன் மறப்பறியேன்
உள்ளினும் உள்ளஞ் சுடும்”.

—குறள். 1207.

“மேவுதற் கரிதாய்க் கேசம் புகையதாய் விழிக்கு நன்றாய்த்
தீவினைச் சிகைசேர் மாத ரெனுங்கன றிருணம் போல
யாவரைச் சுடாது தூரத் தெரிகின்ற நரகத் தீக்குப்
பாவையர் குளிர்ந்த மேனி பசையிலா விறக தாமே”.

—ஞான வாசிட்டம்.

குறிப்பு:-

அம்பும், நெருப்புமாகிய பொருள்கள் சுட்டாலும் புறமாகிய உடம்பையே சுடவல்லன. காமமோ அகத்தையே சுடுவதென்றாகலின் அவற்றினும் மிக அஞ்சப்படும் என்றுந்

[1] சுடாநிற்கும்.

பிறர்மனை விழைவைத் தூண்டுவதாகிய காமத்தின் தீமையைக் கூறியறிவுறுத்தினார்.

(அ)

90. ஊருள் எழுந்த உருகெழு செந்தீக்கு
நீருட் குளித்தும் உயலாகு(ம்)—நீருட்
குளிப்பினுங் காமஞ் சுடுமேகுன் றேறி
ஒளிப்பினுங் காமஞ் சுடும்.

தருமர்:— என்பது. ஊருள் எழுந்த உருகெழு செம்தீக்கு—ஊரின்கண் எழுந்து பிறரஞ்சும்படியாக வெரிகின்ற தீயினால் வருந்துன்பத்துக்கு; நீருள் குளித்தும்—[அவ்வனல் தன்மேற் புகாவகை] நீரிலே முழுகியும் பிழைக்கலாம்; காமம்—காம நோயானது; நீருள் குளிப்பினும்-நீரிலே முழுகிக் கிடந்தாலும்; சுடும்—; காமம்—; குன்று ஏறி ஒளிப்பினும்—மலைமேலேறிக் குகைகளிலே ஒளிந்திருந்தாலும்: சுடும்—; என்றவாறு.

'ஊருள் எழுந்த உருகெழு செந்தீ' என்பது [1]பிரமகத்தி முதலாகிய மகாபாவங்கள். இவைகளுக்குக் கங்கை முதலாகிய புண்ணிய தீர்த்தங்களிலே ஆடியும், அதற்கேற்புடைத்தாகிய தானங்கள் செபஹோமங்களைக் செய்தும், [2]பிராயச்சித்தம் பண்ணித் தீர்த்துக்கொள்ளலாம். பிறர்மனை நயத்தலால் வரும் பாவமானது மலைமேலிருந்து தவம் பண்ணினாலும், கங்கை முதலாகிய பல தீர்த்தங்களிலே ஆடினாலும் போகாதென்பதாம்.

பதுமனார்:— ஊரின்கண் எழுந்தெரிகின்ற அஞ்சத்தக்க செந்தீயான் வருமிடும்பைக்கு, நீரின்கட் குளித்துப் பிழைக்கலாம். நீரின்கட் குளித்தாலுங் காமஞ் சுடும். மற்று மலைமேலேறி

---

[1]கொன்றானைத் தொடர்ந்துபற்றும் பார்ப்பனக் கொலைப் பாவம்; 'பிரமகத்தியி னீங்கிப் பிறங்குவான்'. (சேதுபு. தனுஷ். 57).

[2]பாவசாந்தி (சீவக. 910—உரை).

ஒளித்தாலுங் காமஞ் சுடும் என்றவாறு.

['குளித்தும்' என்ற வும்மையால், பிராமணரைக் கொன்ற பாவம், பசுக்களைக் கொன்றபாவ முதலாயினவற்றிற்குப் பிராயச்சித்தமுண்டு. பிறர்மனை நயத்தலுக்குப் பிராயச்சித்தமில்லை எனவறிக].

உருகு—உட்கு. உயலாகும்—பிழைக்கலாகும்.

விளக்க உரை:— ஊருள் எழுந்த — ஊரின்கண் எழுந்தெரிகின்ற; உருகெழு—அஞ்சத்தக்க; செந்தீக்கு — செந்தீயால் வருமிடும்பைக்கு; நீருள்குளித்தும் நீரின்கண் மூழ்கியும்; உயலாகும்—பிழைக்கலாம்; நீருள்–பல தீர்த்தங்களிலே; குளிப்பினும் ஆடினானாயினும்; காமம்–பிறர்மனை நயத்தலால் வருமாசை நோய்; சுடும்—; குன்று ஏறி—மலைமேலேறி; ஒளிப்பினும்—வனசரிதராய்த் தவம் பண்ணினானாயினும்; காமம்–அவ்வாசை நோயால் வரும்பாவம்; சுடும்—; [நீங்காது, நரகத்திலே யனுபவிக்கப் படுத்தும்] என்றவாறு.

'ஊருள் எழுந்த உருகெழு செந்தீ' என்பது பிராமணரைக் கொன்றபாவம், பசுக்களைக் கொன்றபாவம் முதலாயின, இவற்றுக்குப் பிராயச்சித்தமுண்டு. பிறர்மனை நயத்தலுக்குப் பிராயச்சித்தமில்லை யென்பதாம்.

மேற்கோள் பகுதி:—

அவிரோத வுந்தியார்:—மகளிர் இன்பம் இடராய் விளையுமென்பதற்கு மேற்கோள். —அவி. 89.

ஒப்புமைப் பகுதி:—

"நெடுஞ்சுடர்த்

தீயினாற் சுடுதலோ விலர்ம னாயிழை

தீயினுங் கடிதவர் சாயலிற் கனலுநோய்''
—கலி. 137: 20—22.

''ஊர்தலைக் கொண்டு கனலுங் கடுந்தீயுள்
நீர்பெய்தக் காலே சினந்தணியு மற்றிஃதோ
ஈரமில் கேள்வ னுறீஇய காமத்தீ
நீருட் புகினுஞ் சுடும்''.
—கலி. 144: 59—62.

''காலத்தால் வருவ தொன்றோ காமத்தாற் கனலும் வெந்தீச்
சீலத்தா லழிவதன்றிச் செய்யத்தா னாவதுண்டோ''
—இராமாவதாரம்.

''அளிக்கு மெய்யுயிர் கான்றழ லஞ்சின்
குளிக்கு நீருங் கொதித்தெழக் கூசுமால்
விளிக்கும் வேலையை வெங்கண் அநங்கனை
ஒளிக்க லாமிடம் யாதென வெண்ணுமால்''
—கம்ப. சூர்ப். 79.

'உள்ளினுஞ் சுட்டிடும் உணருங் கேள்வியில்
கொள்ளினுஞ் சுட்டிடுங் குறுதி மற்றதைத்
தள்ளினுஞ் சுட்டிடுந் தன்மை யீதினால்
கள்ளினுங் கொடியது காமத் தீயதே''.
—கந்த. மாயை. 11.

''கடலின் மூழ்கினும் குன்றிடை யொளிப்பினும் காம
முடல் விராயுயிர் சுடுவதே போலும்''
—விநாய. இந்திரசாப. 34.

குறிப்பு:-

'' தீயினும் தீமையினைத் தருவதொன்றாகலின் காமம் நெருப்பெனப்பட்டது. உபமானப் பொருளாகிய நெருப்பிற்கும், உபமேயப் பொருளாகிய காமத்திற்குமுள்ள வேற்றுமையினைக் கூறினமையின் இச்செய்யுள் வேற்றுமையணி. முன் செய்யுளிலும் (89) இவ்வணி இருத்தல் காண்க. இவ்விரண்டு செய்யுட்களினாலும் பிறர்மனை விழைவிற்கேதுவாகிய காமத்தின்

கொடுமையைக் கூறினார்.

(ய)

---

10. ஈகை.

தருமர்:— அஃதாவது புகழைக் குறித்தாயினும், மறுமைக் குறுதி வேண்டியாயினும் ஏற்கின்ற பேர் முகங்கண்டு, மகிழ்ச்சி யாகக் குளிர்ந்த சொல்லுடனே தனக்கியன்ற மாத்திரம் மறாமற் கொடுப்பதாம்.

பதுமனார்:— வறியாராயினார் யாவராயினும் யாதானு மொன்றை வேண்டிவந்தால், அவர் தம்வறுமை கூறுவதன் முன்னே அறிந்து, தமக்கு இயன்றபடி கிருபையினாலே யுவந்து கடுகக் கொடுத்தாலும்; அறம் புகழென்பது கருதிக் கொடுத்தலு மாகிய கொடை.

இஃததன்பின் சொல்லியதென்னை. துறந்தார்க்கு ஈயத் தக்க பொருள் எங்ஙனமுண்டாயதோவெனின் கூலநெல், உகிர் நெல், காய், கனி முதலிய தமக்குள்ளவற்றைப் பிறர்மனையை விரும்பாத நல்இந்திரியமுடையா(ர்கண்டி)டத்து (ஈய); அவ் வீகையது பயனைக் கருதாராதலின், அவர்க்கது தன்மார்த்த மாவது கருத்து. அதன்பின் இல்லறத்தின்கண்ணும் ஈகை சொல்லவேண்டி என்றவாறு.

விளக்க உரை:— அஃதாவது புகழைக் கருதியாதல், மறுமைக்குறுதி வேண்டியாதல், ஏற்கிறவன் முகங்கண்டு மகிழு மாத்திரமாதல் யாதொன்றாயினும் இரந்து வந்தவனுக்கு நேராக மறாமல் தனக்கியன்ற மரியாதி கொடுத்தலென்பதாம்.

குறிப்பு:-

ஈகை:-

பரிமே:— அஃதாவது வறியராய் ஏற்றார்க்கு மாற்றாது கொடுத்தல். இது மறுமைநோக்கியது ஆகலின், இம்மை நோக்கிய ஒப்புரவறிதலின்பின் வைக்கப்பட்டது.

மணக்:— ஈகையாவது, இல்லென இரந்துவந்தார் யாவர்க்கும் வரையாது கொடுத்தல்.

பரிதி:— ஈகையாவது, ஒப்புரவாகிய மேன்முறைமையிலும் கொடுத்தல் விசேஷம் என்றவாறு.

—குறள். 23ம் அதி. ஈகை.

91. இல்லா இடத்தும் [1]இயன்ற வளவினால்
உள்ள இடம்போற் பெரிதுவந்து மெல்லக்
கொடையொடு பட்ட குணனுடை மாந்தர்க்கு
அடையாவாம் ஆண்டைக் கதவு.

தருமர்:— என்பது. இல்லா இடத்தும்—தனக்குச் செல்வம் மிகுதியில்லாத காலத்தினும்; இயன்ற அளவினால்—தனக்கியன்ற மாத்திரம்; உள்ள இடம்போல்—தனக்குச் செல்வம் மிகுதியாக உள்ள காலம்போல; பெரிது உவந்து—மிகவும் மகிழ்ந்து; மெல்லக் கொடையொடு பட்ட ஏற்பவர் முகமறாமல் இயன்ற மாத்திரங் கொடுப்பதற்கு இயையும்; குணன் உடை மாந்தர்க்கு—குணமுடைய மனிதர்க்கு; ஆண்டைக் கதவு—[1]அவ்விடத்திற் கதவு; அடையாவாம்—அடையாதாம் என்றவாறு.

[1]'அவ்விடத்திற் கதவு' என்பது சுவர்க்கலோகத்தின் கதவு. செல்வமிகுதியுள்ளோர் கொடுப்பது அரிதல்ல, செல்வமில்லாதிருக்கவும் உள்ளகாலம்போல மகிழ்வுடன் கொடுப்பது; பலம்

பா-ம்: [1]'இயைந்த'.

அதிகமானபடியினாலே சுவர்க்கமெய்துவர். புகழில்லாதார்க்குச் சுவர்க்கமில்லை யென்பது தோன்றப் புகழுள்ளார்க்குச் சுவர்க்கலோகத்துக்குச் செல்லும்வழி மதிப்பில்லை யென்பதை, 'அடையாவாம் ஆண்டைக் கதவு' என்று குறிப்பாற் கூறியது.

பதுமனார்:— தமக்கில்லாத விடத்தும் பொருந்திய அள வினால் உள்ளகாலம்போல மிகவும் காதலித்து, மனத்தின்கண் ஈரமுடையராய்க் கொடையொடு பொருந்திய குணத்தையுடைய மக்கட்கு, துறக்கத்துக் கதவுகள் அடையாவாம் என்றவாறு.

மெல்ல—ஒழுக. ஆண்டைக் கதவு—துறக்கத்துக் கதவு.

விளக்க உரை:—இல்லா இடத்தும்—தமக்கில்லாத விடத்தும்; இயைந்த வளவினால்—பொருந்திய வளவினால்; உள்ள இடம்போல்—உள்ளகாலம்போல; பெரிது உவந்து—மிகவும் மகிழ்ந்து; மெல்ல—நேராக; கொடையொடு—மறாமலியன்ற கொடையுடனே; பட்ட—பொருந்திய; குணன் உடைமாந்தர்க்கு—குணத்தையுடைய மனிதர்க்கு; ஆண்டைக் கதவு —[1]அவ் விடத்திற் கதவு; அடையாவாம்—; என்றவாறு.

[1]'அவ்விடத்திற் கதவு' என்றது சுவர்க்கத்தில் கதவு.

ஒப்புமைப் பகுதி:-

"நட்டார்க்கு நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்—அட்டது
அடைத்திருந்து உண்டொழுகும் ஆவதின் மாக்கட்கு
அடைக்குமாம் ஆண்டைக் கதவு".

—நாலடி. 271.

"செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு".

—குறள். 86.

"ஒன்றாக நல்ல துயிரோம்பல் ஆங்கதன்பின்
நன்றாய்ந்து அடங்கினார்க்கு ஈந்துண்டல்—என்றிரண்டு

குன்றாப் புகழோன் வருகென்று மேலுலகம்
நின்றது வாயில் திறந்து''.

—அறநெறி. 62.

''எத்துணை ஆனும் இயைந்த அளவினாற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்—மற்றைப்
பெருஞ்செல்வம் எய்தியக்காற் பின்னறிதும் என்பார்
அழிந்தார் பழிகடலத் துள்''.

—நாலடி. 277.

''உறுபுனல் தந்துலகு ஊட்டி அறுமிடத்தும்
கல்லூற்று உழியூறும் ஆறேபோல்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணும் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை''.

—நாலடி. 185.

''இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்''.

—குறள். 218.

''ஆற்றுப் பெருக்கற்று அடிசுடுமந் நாளுமவ்வாறு
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும்
இல்லையென மாட்டார் இசைந்து''.

—நல்வழி. 9.

1-3:—

''இம்மி யரிசித் துணையானும் வைகலு
நும்மில் இயைவ கொடுத்துண்மின்''

—நாலடி. 94: 1—2.

''மறுமையும் இம்மையு நோக்கி ஒருவற்கு
உறுமாறு இயைவ கொடுத்தல்''

—நாலடி. 95: 1—2.

குறிப்பு:—

ஈதலோடு முகமலர்ச்சியும், இன்சொல்லும் வேண்டு

மாகலின், 'பெரிதுவந்து, மெல்லக்கொடையொடு, எனக் குறித்தார். கொடையொடு கூடிய குணமுடைய மாந்தர் தவறாது சுவர்க்கலோகம் அடைவாரென்பார்; 'கொடையொடு பட்ட குணனுடைய மாந்தர்க்கு அடையாவாம் ஆண்டைக்கதவு' என்றார்.

(க)

92. முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள
பின்னரும் பீடழிக்கு நோயுள—கொன்னே
பரவன்மின் பற்றன்மின் பாத்துண்மின் யாதுங்
கரவன்மின் கைத்துண்டாம் போழ்து.

தருமர்:—என்பது. சாநாள்—ஒருவற்குச் சாகின்ற நாளானது; முன்னரே—முந்தியெண்ணப் பட்டதாயிருக்கும்; முனிதக்க மூப்புடுள—அதுவன்றியும் யாவருந் தல்லை வெறுக்கத்தக்க மூப்புமுண்டு; பின்னரே—இதன் நடுவே; பீடு அழிக்கும்—தன் பெருமையைக் கெடுக்கத்தக்க; நோய்உள—நோய்களும் பல (உள்ளன); [ஆதலால்] கொன்னே—வீணிலே; பரவன்மின்—, பரந்துதிரியா (தீர்கள்); பற்றன்மின்—எய்திய பொருளின்மேற் பற்றுவிடு(ங்கள்); பாத்து உண்மின்—பகுந்து உண்ணுங்கள்; கைத்து உண்டாம் போழ்து—கையில் பொருளுண்டாகியபோது; யாதும் கரவன்மின்—[எப்பொழுதும் நிலையென்று பொருளை] ஒளித்து வைத்திராது [கையிலுண்டானதற்குத் தக்கது இயன்ற மாத்திரம்] இல்லையென்னாமல் கொடுக்கவேண்டு மென்பதாம்.

பதுமனார்:— முன்னது சாநாள் பின்பே வெறுக்கத்தக்க மூப்புள. இதற்குநடுவே பீடழிக்கு நோயுள. ஆதலால் பயனில்லாதனவற்றைப் பரந்து செய்யன்மின். பொருளின்கட்பற்றன்மின் பகுத்துண்மின். பொருளுண்டான பொழுது யாதுங் கரவாது கொடுமின் என்றவாறு.

கொடுக்கக் கருதியவைப் பின்பு கொடுப்போமென்னில்

[சாநாள்], முன்னரே—முன்னது. கொன்னே பரவன்மின்—பயனில்லாதவற்றைப் பரந்து செய்யன்மின். பற்றன்மின்—பொருள்மேற் பற்றன்மின். பாத்துண்மின்—பகுத்து உண்மின். கைத்து—பொருள்.

விளக்க உரை:— சாநாள்—சாகின்றநாள்; முன்னரே முந்தினது [அதற்கொரு நிலையில்லை உளதென்று துணிந்தானாயில்]; முனிதக்க மூப்புஉள—தன்னை வெறுக்கத்தக்க மூப்புள; பின்னரும்—இதற்கு நடுவே; பீடு அழிக்கும்... தன் பெருமையை அழிக்கத்தக்க; நோய்உள—நோய்கள் பலவுமுள; [ஆதலால்] கொன்னே—பயனின்றியே; பரவன்மின்—பரந்து திரியாதே கொண்மின்; பற்றன்மின்—பொருளின்கட் பற்றறுமின்; பாத்து உண்மின்—பகுத்துண்மின்; கைத்து உண்டாம் போழ்து-கைப்பொருளுண்டாயின பொழுதே; யாதும் கரவன்மின்—யாதொன்றினையும் ஒளியாதே கொடுங்கள் என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

நச்:—''முன்னரே சாநாண் முனிதக்க மூப்புள, பின்னரும் பீடழிக்கு நோயுள–; எனப் பிறாண்டும் முன்னர் பின்னரென்பன இடமுணர்த்தியே நிற்குமென்றுணர்க''.

—மதுரைக். 40–42. உரை.

ஒப்புமைப் பகுதி:-

'பாத்துண்மின்':—

''பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஎஞ்சல் எஞ்ஞான்றும் இல்''.

—குறள்.44.

''பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை''.

—குறள். 322.

'கரவன்மின்..... ......போழ்து':—

"கைத்துண்டாம் போழ்தே கரவாது அறஞ்செய்ம்மின்"

—நாலடி.19:2.

குறிப்பு:-

முன்னரே என்பதற்குக் கண்முன்பாக என்றுமாம். திருக்குறளில் 'பழியஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின்' என்றவிடத்து, பாத்தூண் என்பதற்கு 'அப்பொருளை இயல்புடைய மூவர் முதலாயினார்க்கும், தென்புலத்தார் முதலிய நால்வர்க்கும் பகுத்துத் தான்உண்டல்' என்று பரிமேலழகர் உரை கூறியதும் காண்க.

(உ).

93. நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பந் துடையார்
[1]கொடுத்துற்றுத் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டு
மிடுக்குற்றுப் பற்றினு நில்லாது செல்வம்
விடுக்கும் வினையுலந்தக் கால்.

தருமர்:—என்பது. நடுக்கு உற்று—பயமெய்தி; தன் சேர்ந்தார்—தன்னையடைந்தவருடைய; துன்பம்—துன்பத்தை; துடையார்—நீக்காதாரே கேளும்!; செல்வம்—; கொடுத்து உற்றுத் துய்ப்பினும்—பிறர்க்குக் கொடுப்பதற்கு மனமுற்றுக் கொடுப்பார்க்குங் கொடுத்துத்தாமும் உண்டாலும்; ஈண்டும் கால்—முன்பே செல்வத்துக்கு ஏதுவானவை தான் செய்திருந் தானாகில்; ஈண்டும்—மேன்மேலும் உண்டாம்; விடுக்கும் வினை உலந்தக்கால்—தான் முன்செய்த நல்வினைப்பயன் அனுபவித்துத் தீவினையெய்திய காலத்து; மிடுக்கு உற்றுப் பற்றினும்—செல்வம் போகாதபடிக்குத் தமது வலிமையினாலுற்றுப் பிடித்தாராயினும்; நில்லாது—;என்றவாறு.

பா—ம்:—[1]'கொடுத்துத்தற் றுய்ப்பினும்'—பதுமனார், விளக்க உரை.

[2]'கொடுத்துத்தான் றுய்ப்பினும்'.

எனவே செல்வமானது பின்னுக்குமிருந்து தனக்குதவும் என்று அவனை நிலையாகக் கருதாமல், தனக்கு அப்பொருளுள்ள காலத்திலேதானே பின்னுக்கு நல்லுலகத்தைக் கொடுப்பதாயப் புகழைத் தேடவேண்டுமென்று அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—செல்வந்தனை பிறர்க்குக் கொடுத்துத் தான் நுகரினும் ஈண்டுங்காலமாயின் ஈண்டும். அச்செல்வத்தை நீக்குந் தீவினை வந்துதவியகாலத்து வலியுற்றுப் பற்றினாலும் நில்லாது. [இஃதறியார்] வறுமையால் நடுக்கமுற்றுத் தன்னையடைந்தாரது துன்பங்களை நீக்குகின்றிலார் என்றவாறு.

நடுக்கு உற்று— வறுமையால் நடுக்குற்று. விடுக்கும் வினை உலந்தக்கால்—தீவினையுதவி நல்வினை முடிந்த காலத்து. ஆகையால் துன்பம் துடைக்கின்றிலர் அறியாதார்.

விளக்க உரை:— செல்வம்—; கொடுத்துத் தன் துய்ப்பினும்—பிறர்க்குக் கொடுத்துத் தாமும் உண்பினும்; ஈண்டும் கால் முன்பு செல்வமாகைக்குத் தவம் பண்ணினாராகில்; ஈண்டும்—பொருள் வருவாய் மேன்மேலுமுளதாம்; விடுக்கும் வினை உலந்தக்கால்—தாம் முன்னர்ச் செய்த நல்வினை நீங்கின காலத்து; மிடுக்குற்று பற்றினும்—வலியுற்றுப் பற்றினாலும்; நில்லாது நிலையாவாய்ப் போம்;[இஃதறியார்] நடுக்குஉற்று—நடுக்கமுற்று; தம்சேர்ந்தார்—தம்மையடைந்தவர்; துன்பம்—துன்பங்களை; துடையார்—நீக்குகின்றிலர் என்றவாறு.

நடுக்குற்று—வறுமையால் நடுக்குற்று. விடுக்கும் வினை உலந்தக்கால்—தீவினையுதவி நல்வினை முடிந்தகாலத்து. ஆகையால் துன்பந் துடைக்கின்றிலர் அறியாதார்.

மேற்கோள் பகுதி:--

மயிலை சங்கர } :—அடிமறிமாற்றுப் பொருள்கோளுக்கு இச்

செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன். சூ. 418.
—நன்-வி. சூ. 419.

ஒப்புமைப் பகுதி:-

"ஆகூழால் தோன்றும் அசைவின்மை கைப்பொருள்
போகூழால் தோன்றும் மடி".

—குறள். 371.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம."

—குறள். 376.

"ஆகும் சமயத்தார்க்கு ஆள்வினையும் வேண்டாவாம்
போகும் பொறியார் புரிவும் பயமின்றே
ஏகன் மலைநாட! என்செய்தாங்கு என்பெறினும்
ஆகாதார்க்கு ஆகுவது இல்".

—பழமொழி. 127.

"ஆம் போம் வினையான்"

—இன்னிலை. 18.

குறிப்பு:—

பன்மை வரவேண்டியிருக்க 'தற்சேர்ந்தார்', 'தான் துய்ப்பின்' என ஒருமை மயங்கிவந்தது வழுவமைதி (ஒருமை பன்மை மயக்கம்). இடுக்கு, நடுக்கு என்பன முதனிலை திரிந்த தொழிற் பெயர். மிஇக்கு உற்று—வலிமைபொருந்தி. இனிச் சிலர் இடுக்கு உற்று எனப் பிரித்து இறுக்குதல் பொருந்தி யெனவும், உலோபகுணத்தைப் பொருந்தியெனவும் பொருள் கொள்வர். விடுக்கும் வினை—முற்பிறப்பிற் செய்து குறையாக விட்ட நல்வினை. வேறுசிலர் 'விடுக்கும்' என்பதனை 'செல்வம் நில்லாது விடுக்கும்' எனக் கொண்டு, செல்வமானது நிலையாமல் விட்டுப் போம் என உரைகொள்வர். ஈகையினால் செல்வமழிந்துவிடுமே என்ற எண்ணமுடையார்க்கு, செல்வம் அழிகைக்கு வினைப்

பயனேயன்றி ஈகை அன்று என்றார்.

(ரு)

94. இம்மி அரிசித் துணையானும் வைகலு
நும்மில் இசைவ கொடுத்துண்மின்—உம்மைக்
கொடாஅ தவரென்பர் குண்டுநீர் வையத்து
அடாஅ அடுப்பி னவர்.

தருமர்:—என்பது. குண்டுநீர்—ஆழ்ந்த கடல் சூழ்ந்த; வையத்து—பூமியிடத்து; அடா அடுப்பினவர்—அடும் அடுப்பின வர்கள்; உம்மைக் கொடாதவர் என்பர்—இரந்து திரிவாரைப் பார்த்து இவர் முற்பிறப்பிலே இரப்போர்க்குக் கொடுத்துண்ட வர் அல்லவென்று சொல்லுவர்; [ஆதலால்] இம்மி அரிசித் துணை யானும்—தமக்கு வருவாயற்று மத்தங்காய்ப் புல்லரிசி கொண்டு வந்து அதனால் உணவு நடப்பினும்; வைகலும்—நாள்தோறும்; நும்மில் இசைவ—உமக்கியன்ற மாத்திரம் அந்தப் புல்லரிசியிலே யாகிலும்; கொடுத்து—இரப்போர்க்கும் கொடுத்து; உண்மின்—உண்ணுங்கள் என்றவாறு.

செய்யா செய்யுமென்னும் விதியால் 'அடாவடுப்பு' என்பது, 'அடும் அடுப்பு' என்று தற்காலக் குறிப்பாற் கூறியது. அடும் அடுப்பு எனவே செல்வமுண்டானவர்கள் இரந்துதிரிவாரைப் பார்த்து, இவர் முற்பிறப்பில் ஒருவர்க்குங் கொடாதுண்டவ ரென்று, இழிவாகக் கூறுவாரெனத் தாம் சொல்லாதுபோல இரந்துதிரிவாரைச் சான்றாக்கி, வறுமையான காலத்திலும் இயன்றமாத்திரம் பகுத்துண்ண வேண்டுமென்பது தோன்ற வறுமையை, 'இம்மியரிசித் துணையா (னும்)' என்றுகூறிப் புகழை விரும்பாதார்க்கு அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—ஆழ்ந்த நீராற் சூழப்பட்ட உலகத்து அடா அடுப்பினையுடைய(ராய் இரந்துதிரியுமவரை), முற்பிறப்பின்கட் கொடாதவரென்று சொல்லுவர் அறிவுடையார். (ஆதலால்)

இம்மியரிசி யளவாயினும் நாடோறும் நும் மனையின்கண், நுமக்கியக் கூடுவன பிறர்க்குக் கொடுத்துப் பின்னை உண்மின் என்றவாறு.

இம்மி—புல்நுனி. நும் இல் இயைவ—நும்மனைவியின்கண் நுமக்கு இயைவன. உம்மை—முற்பிறப்பு. குண்டுநீர்—ஆழ்ந்தநீர். அடா வடுப்பினவர்—தமக்கென்று அடாது பிறர்க்கு அடும் அடுப்பையுடைய இரப்பாளர்.

விளக்க உரை:—குண்டுநீர்-ஆழ்ந்த கடல் சூழ்ந்த; வையத்து-பூமியிடத்து; அடாத அடுப்பினவர்—அடாத வடுப்பினை யுடையராய் இரந்துதிரியுமவரை; உம்மை-முற்பிறப்பிலே; கெடா தவர் என்பர்-[முற்பிறப்பிலே கொடுத்தவர்] கொடாதவரெனச் சொல்லுவர்; [ஆதலால்] இம்மி அரிசித் துணையானும்-தமக்கு வேறொரு வருவாயற்று மத்தங்காய்ப் புல்லுப் பறித்துவந்த உணவே நடப்பினும்; வைகலும்-நாள்தோறும்; நும்இல் இயைவ—நும்மனையிடத்துப் பொருந்தின மரியாதி அந்தப் புல்லரிசி யாகிலும்; கொடுத்து உண்மின்—பிறர்க்குக் கொடுத்துண்மின் என்றவாறு.

குண்டுநீர்—ஆழ்ந்தநீர். அடாஅ வடுப்பினவர்-தமக்கென்று அடாது பிறர்க்கடும் அடுப்பையுடைய இரப்பாளர் என்பாருமுளர். வேடம்பூண்டு நாட்கடோறும் ஏற்பவர் என்றுமாம்.

ஒப்புமைப் பகுதி:-

''மாசித்திங்கண் மாசினசின்னத் துணிமுள்ளின்
ஊசித்துன்ன மூசியவாடை யுடையாகப்
பேசிப்பாவாய் பிச்சை யெனக்கை யகலேந்திக்
கூசிக்கூசி நிற்பர் கொடுத்துண் டறியாதார்''.

—சீவக. 2929.

''எத்திறத் தானும் இயைவ கரவாத
பற்றினிற் பாங்கினிய தில்''.

—இனியவை. 27.

குறிப்பு:—

இம்மி—மத்தங்காய்ப் புல்லரிசி; குறைந்ததோர் எண்ணுமாம் (சீவக. 495—உரை). துணையானும் என்றவிடத்து, ஆயின் என்பது விகாரமாய் ஆன் என வந்தது. நும்மில் இயைவ எனக்கொண்டு உமக்கியன்ற மாத்திரம் எனத்தருமரும்; நும் இல் இயைவ எனக் கொண்டு நும் மனையின்கண் நுமக்கீயக் கூடுவன எனப் பதுமனாரும் பொருள்கொண்டனர். என்பர் —என்றிழகப்படுவர்: செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த செய் வினை. குண்டு—ஆழம். குண்டுநீர்—கடல். கொடா, அடா என்பன கொடாஅ, அடாஅ எனச் செய்யுளோசை நிறைப் பதற்காக அளபெடுத்து வந்தன.

(சு).

95. மறுமையும் இம்மையு நோக்கி யொருவற்கு
உறுமாறு [1]இசைவ கொடுத்தல்—வறுமையால்
ஈதல் இசையா தெனினும் இரவாமை
ஈதல் இரட்டி உறும்.

தருமர்:—என்பது. மறுமையும் இம்மையும் நோக்கி—ஒருவற்குக் கொடுப்பது இம்மைக்குப் புகழும் மறுமைக்கு நல் லுலகமும் உண்டாமென்பதனை ஆராய்ந்தறிந்து; ஒருவற்கு—(ஒருவனுக்கு); இசைவ கொடுத்தல்—தமக்கு உண்டாயவற்றுள் இயன்றமாத்திரம் கொடுத்தல்; உறுமாறு—(உறுதியாவது); வறுமையால்—; ஈதல் இசையாது எனினும்—கொடுத்தல் கூடா தாயினும்; இரவாமை—ஒருவரிடஞ் சென்றிரவாமை; ஈதல் இரட்டிஉறும்—கொடுத்தலின் இருமடங்கு உறுதியுண்டா மென்றவாறு.

வறுமையுறில் அதற்கியன்ற தன்மையினால் நாட்கழிக்க வேண்டுமன்றி இரக்கத் தகாதவரிடத்தில் (இரத்தல், தான்

பா—ம்:—[1]'இயைவ'.

கொண்ட) மேற்கோளாகிய பொறை முதலாகிய விரதத்துக்கு அழிவாதலில் அதற்கழிவு செய்யலாகாதென்பார்: 'இரவாமை யீதலிரட்டியுறும்' என்று இரக்கத்தகாதவரிடத்து இரக்கில், இம்மைக்கு மிகுதியாகிய விழிவு எய்துவம், மறுமைக்குறுதி யாகிய விரதங்களுக்கு இடையூறென்பதுந் தோன்றக் கூறியவாறு.

பதுமனார்:— மறுமையும் இம்மையும் நோக்கி யொருவற் கியைவன கொடுத்தல் உறுவதொன்றானால், நல்குரவாற் கொடுத்தல் கூடாதாயினும் ஒருவர்பாற் சென்றிரவாமை கொடுத் தலின் இருமடங்காக உறுமென்றவாறு.

மறுமையும் இம்மையும் நோக்கலாவது, இம்மைப் பிறப்பும் இன்பதுன்பங்களுந் தம்வசத்தன அல்லாமைகண்டு, இது கொண்டே போனபிறப்பும் வரும்பிறப்பும் உண்டென்றும், ஒரு பிறப்பிற்செய்த இருவினைகள் மற்றைப்பிறப்பிற் பலிப்பது நோக்கி, மறுமைக்குத் தமக்குறுவதாக இயைவன கொடுக்க· வறுமையால் ஈதல் இசையாதெனினும், இரவாமை ஈதலுறுதி கொடுக்கு மேம்பாட்டினும் இரவாத மேம்பாடு பெரிதென்பதாம்.

விளக்க உரை:— மறுமையும் இம்மையும் நோக்கி—மறு பிறப்பும் இப்பிறப்பும் ஆராய்ந்து; ஒருவற்கு—ஒருவனுக்கு; இயைவ கொடுத்தல்—இயன்ற மரியாதி கொடுத்தல்; உறுமாறு —உறுதியாவது; வறுமையால்—வறுமையாலே; ஈதல் இசையாது எனினும்—கொடுக்கக் கூடாதாயினும்; இரவாமை— ஒருவர் பக்கல் சென்றிரவாதது; ஈதல் இரட்டி உறும்—கொடுத்தலின் இருமடங்கு உறுதியுடைத்தென்றவாறு.

இரத்தல், தான்கொண்ட மேற்கோளாகிய விரதத்துக் கழிவாதலில், 'இரவாமை ஈதலிரட்டியுறும்' என்றார்.

மறுமையும் இம்மையும் நோக்காலது †.......... என்பதாம்.

†பதுமனார் உரையில் கண்டுகொள்க.

ஒப்புமைப் பகுதி:-

"கரவாத திண்ணன்பிற் கண்ணன்னார் கண்ணும்
இரவாது வாழ்வதாம் வாழ்க்கை—இரவினை
உள்ளுங்கால் உள்ளம் உருகுமால் என்கொலோ
கொள்ளுங்கால் கொள்வர் குறிப்பு".

—நாலடி. 305.

"கரவாது உவந்தீயும் கண்ணன்னார் கண்ணும்
இரவாமை கோடி உறும்".

—குறள். 1061.

"கண்ணிற் சிறந்தார் தம்மிடத்தும் காழ்த்த மானம் கெட நாவால்
பண்ணற் குரிய அறங்குறித்தும் படர்ந்தொன் றிரவார் பெருமையினால்".

—விநா. அரசி. 154.

"நல்லது செய்தல் ஆற்றீ ராயினும்
அல்லது செய்தல் ஓம்புமின்"

—புறம். 195: 6—7.

"வள்ளன்மை யில்லாதான் செல்வத்தின் மற்றையோன்
நல்குரவே போலு நனிநல்ல—கொன்னே
அருளிலன் அன்பிலன் கண்ணறைய னென்று
பலரால் இகழப் படான்".

—நீதிநெறி. 67.

"ஏதம் பெருஞ்செல்வந் தான்றுவ்வான் தக்கார்க்கொன்று
ஈதல் இயல்பிலா தான்".

—குறள். 1006.

"கழிந்தவை தானிரங்கான் கைவரா நச்சான்
இழிந்தவை இன்புறான் இல்லார்—மொழிந்தவை
மென்மொழியால் உண்ணெகிழ்ந்து ஈவானேல் விண்ணோரால்
இன்மொழியால் ஏத்தப் படும்".

—சிறுபஞ்ச. 82.

"காயா மரமும் வறளாங் குளமுங் கல்லாவுமென்ன
ஈயா மனிதரை என்படைத் தாய்கச்சி யேகம்பனே."
—பட்டினத்தார்.

'மறுமையும்.......கொடுத்தல்':—
"நட்டார்க்கு நள்ளா தவர்க்கும் உளவரையால்
அட்டது பாத்துண்டல் அட்டுண்டல்"
—நாலடி.271:1—2.

"எத்துணை யானும் இயைந்த வளவினாற்
சிற்றறஞ் செய்தார் தலைப்படுவர்"
—நாலடி.272:1—2.

"இயைவது கரத்தலிற் கொடுமை யில்லை"
—முதுமொழிக்காஞ்சி.55.

"இயல்வது கரவேல்"
—ஆத்திச்சூடி.3.

"ஐயமிட்டுண்".
—ஆத்திச்சூடி.9.

'ஈதல் இசையாதெனினும்':—
"ஈகை யரிதெனினும்" —நீதிநெறி.68.

குறிப்பு:—

மறுமை, இம்மை என்பன ஆகுபெயராய் அவ்விரண்டின் பயனான துறக்க இன்பத்தையும், புகழையும் குறித்தன இயைவ—வினையாலணைந்த பெயர்.

(ரு)

96. நடுவூருள் [1]வேதிகை சுற்றுக்கோட் புக்க
படுபனை அன்னர் பலர்நச்ச வாழ்வார்

பா-ம்:—[1]'வேதிகைச் சுற்றுக்கோட்'—பதுமனார் & விளக்கஉரை

குடிகொழுத்தக் கண்ணுங்கொடுத்துண்ணா மாக்கள்
[1]இடுகாட்டுள் ஏற்றுப் பனை.

தருமர்:— என்பது. பலர்நச்ச—பலருந் தம்மை விரும்ப; வாழ்வார்—வாழுமவர்; நடுவூருள்—ஊர்நடுவே; வேதிகை சுற்றுக் கோள்புக்க—சுற்(றி)லுந் திண்ணையுண்டாக (பொருந்தி)யிருக்கிற; படுபனை அன்னர்—முதலோடு முதலாக முளைத்துப் பலத்துடன் தழைத்திருக்கிற பனையையொப்பார்; குடிகொழுத்தக் கண்ணும்—குடிவளமிக்க விடத்தும்; கொடுத்து உண்ணா மாக்கள்—இரப்போர்க்குப் [2]பகர்ந்து உண்ணாத மனிதர்; இடுகாட்டுள் ஏற்றுப் பனை—சுடுகாட்டில் நிற்கும் ஆண்பனையை யொப்பாரென்றவாறு.

தான் நிற்பது சுடுகாடுமாய் பயனில்லாத ஆண்பனையுமானால் அவ்விடத்துச் செல்வாரில்லை. நடுவூருமாய்ச் சென்றவரிருந்து ஆறும்படி சுற்றும் வேதிகையுமுண்டாய் பயனுண்டாகையானால்; அவ்விடத்து யாரும் செல்வர். அத்தன்மையோரென்பது இரந்துவந்தபேரைக் கண்டவிடத்தில் முகமலர்ந்து கொடுப்பது. வந்தபேரைக் கண்டவுடன் கடுஞ்சொல்லும், கொடுப்பதும் இல்லையாதலால் 'இடுகாட்டுள் ஏற்றுப்பனை என்றார். கொடுப்பதுமின்றி கடுஞ்சொல்லுஞ் சொல்லுவார், சுடுகாட்டுள்நின்ற பனைமரம்போல அந்தச் சுடுகாடு உவமையாகிய நரகிற் புகுவரென்பதும், நடுவூரில் பனையன்னார் அத்தன்மையாகிய நல்லுலகத்திற் புகுவரென்பதுந் தோன்றப் பனையை உவமையாக்கிக் கூறியதாம். குடிகொழுத்தல்—செல்வமுண்டாதல். அச்செல்வத்துக்குஞ் சுடுகாடு உவமை.

பதுமனார்:—பலருந் தம்மை நச்ச வாழ்வார் ஊர்நடுவின்கண் வேதிகை வட்டத்தையுடைய கோட்புக்க படுமுதலாகிய பனையையொப்பர். தங்குடி வளமிக்கவிடத்துங் கொடுத்துண்ணா

பா-ம்:—[1]'சுடுகாட்டுள் ஏற்றைப் பனை'.

[2]கொடுத்து.

மாக்கள் சுடுகாட்டுள் நிற்கும் ஆண்பனையை ஒப்பரென்றவாறு.

வேதிகை—திண்ணை. படுபனை—பயன்படும் பெண்பனை. (வளமிக்க விடத்தும்)—செல்வமிக்க விடத்தும். ஏற்றுப்பனை—ஆண்பனை.

விளக்க உரை:— பலர் நச்ச வாழ்வார்—(பலரும் தம்மை விரும்ப வாழுமவர்); நடுவூருள்—ஊருள் நடுவே; வேதிகைச் சுற்று—வேதிகை வட்டத்தையுடைய; [1]கோள்புக்க—காய்த்த; படு—குலைமுதலாகிய; பனை—பனையை; அன்னர்—ஒப்பர்; குடிகொழுத்தக் கண்ணும்—தங்குடி வளமிக்க விடத்தும்; கொடுத்து உண்ணா மாக்கள்—(வழங்கி உண்ணாத மாந்தர்கள்); இடுகாட்டுள்—சுடுகாட்டிலே நிற்கும்; ஏற்றுப்பனை—ஆண்பனையோடு ஒப்பர் என்றவாறு.

வேதிகை—திண்ணை. படுபனை—பயன்படு பெண்பனை. ஏற்றுப்பனை—ஆண்பனை.

மேற்கோள் பகுதி:-

பேரா:— ஆற்றலொடு புணர்ந்த வாண்பாற் கெல்லாம், ஏற்றைக்கிளவி யுரித்தென மொழிப' என்னும் தொல்காப்பியச் சூத்திரத்திற்கு, "எல்லா மென்றதனாற் சிறுபான்மை ஆற்றல் இல்லாதனவுங் கொள்க. அது சுடுகாட்டுள் ஏற்றைப் பனை, என்பது போன்று வருவன" என உரை வரைந்தனர்.

—தொல். பொருள். சூ. 604.

ஒப்புமைப் பகுதி:—

"—துன்னிக்

குழைகொண்டு தாழ்ந்த குளிர்மரம் எல்லாம்

---

[1]கோள்—காய் (அகம். 2).

உழைதங்கண் சென்றார்க்கு ஒருங்கு''.

—நாலடி. 167

"—பழுமரம்போல்

பல்லார் பயன்துய்ப்பத் தான்வருந்தி வாழ்வதே
நல்லாண் மகற்குக் கடன்''.

—நாலடி. 202.

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்''.

—குறள். 216.

''மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்''.

—குறள். 217.

''முன்னூர் பழுனிய கோளி யாலத்துப்
புள்ளார் யாணர்த் தற்றே யென்மகன்
வளனும் செம்மலும் எமக்கு''

—புறம். 254: 7—9.

''அருஞ் சுரத்தின் மரம்போல அடைந்தார்க்களித்தல்
அவற்கியல்பு''

—சீவக. 3—நச். உரை.

''—உதவுமாடுயர்
பார்கெழு பயன்மரம் பழுத்தற் றாகவும்''

—கம்ப. அயோத்தி. மந்திரப். 82.

''கற்றையுஞ் சுடர்மணி கனகம் ஏனைய
பிற்றையென் னாதருள் பெரியர் வண்மைபோல்
மற்றவண் உள்ளபன் மரமுந் தம்பயன்
எற்றையும் உலப்புறா தீகை சான்றவே''.

—கந்தபுரா.

''நச்சப் படாதவன் செல்வம் நடுவூருள்
நச்சு மரம்பழுத் தற்று.''

—குறள். 1008.

"அருகல நாகிப் பலபழுத்தக் கண்ணும்
பொரிதாள் விளவினை வாவல் குறுகா
பெரிதணிய ராயினும் பீடிலார் செல்வம்
கருதும் கடப்பாட்ட தன்று". —நாலடி. 261.

குறிப்பு:-

ஊர்நடு என்னும் ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர், நடுஊர் என பின்முன்னாக நின்றது இலக்கணப் போலி எனப்படும். சுற்றுக்கோள் என்பது சுற்றுக்கொள் என்பதன் முதனிலை திரிந்த தொழிற்பெயர். முன்னுள்ள அன்ன ரென்னுங் குறிப்புவினைமுற்றை ஏற்றுப்பனையினும் கூட்டிக் கொள்க. ஏறு என்பது ஒருசார் விலங்கின் ஆணின் பெயர். 'ஆனுட னெருமை பன்றி யாய்மயிர்க் கவரி சங்கு, மானொடு யரைபுல் வாயு மாறுகொள் சுரவும் ஏறாம்" என்ற நிகண்டும் காண்க. அது மரபு வழுவமைதியாய் இங்கு பனைக்கும் வந்தது. படுபனை—வினைத்தொகை; காய்த்துப் பயன்படுகின்ற பெண் பனை. வேதிகை சுற்றுக்கோள் புக்க எனக்கொண்டு 'சுற்றிலுந் திண்ணையுண்டாகப் பொருந்தியிருக்கின்ற' எனத் தருமரும்; வேதிகைச் சுற்றுக்கோள்புக்க எனக்கொண்டு 'வேதிகை வட்டத்தையுடைய காய்த்த' எனப் பதுமனாரும், விளக்க உரைகாரரும் உரைகூறிப் போதல் கண்டுணர்க.

(சு)

97. பெயற்பான் மழைபெய்யாக் கண்ணும் உலகஞ்
செயற்பல செய்யா விடினுங்—[1]கயற்புலால்
புன்னை கடியும் பொருகடல் தண்சேர்ப்ப!
என்னை? உலகுய்யு மாறு.

தருமர்:- என்பது. கயல் புலால்—[2]கயல்மீனாலுண்டாகிய

பா-ம்:—[1]'கயப்புலால்' —பதுமனாரும், விளக்க உரையும்.

[2]கயல்—கெண்டைமீன்.

புலால் நாற்றத்தை; புன்னைக் கடியும் —புன்னைப்பூவின் மணம் நீக்கா நின்ற; பொரு-கரையைத் திரைமோதும்; தண்-(குளிர்ந்த) கடல் சேர்ப்ப!—கடல் [1]சேர்ப்பையுடையவனே!; பெயல் பால் —பெய்யும் பகுதியான; மழை—; பெய்யாக் கண்ணும் பெய்யாதவிடத்தும்; உலகம்—உயர்ந்தோரானார்; செயல்பால—செய்யும் பகுதியான ஈகையை; செய்யாவிடினும்—; உலகு—இந்த உலகத்தார்; உய்யும் ஆறு—பிழைப்பது; என்னை?—எப்படியோ? என்றவாறு.

மழை பெய்யாவிடில் யாரும் உய்யக் கடவரல்ல. பயிர்களானது மழையைநோக்கி நிற்குமாப்போல இரப்போருங் கொடுப்பாரை நோக்கி நிற்பர். அவர் கொடாதகாலத்து இரப்பவர் உய்யக் கடவரல்ல அதனால் அவரை வஞ்சித்தல் பாவமென்பது தோன்றப் பொருளுடையோர் இரப்பார்க்கு முகமலர்ந்து கொடுக்கவேண்டு மென்பதாம். கொடுப்போரை உயர்ந்தோரெனச் சிறப்பித்துக் கூறினார்.

பதுமனார்:— கயப்புலால் நாற்றத்தைப் புன்னைக் கடியும் பொருகடற் றண்சேர்ப்பனே! பெய்தற் றன்மையையுடைய மழைபெய்யாதகாலத்தும், உயர்ந்தோர் தாஞ்செய்யக்கடவ வீகையைச் செய்யாவிடினும் உலகத்துமக்கள் [2]உய்யுமாறு என்னை? என்றவாறு.

[3]கயம்—பெருமை. உலகம்—உயர்ந்தோர்.

விளக்க உரை:— கயம் புலால்— (கடலிலுள்ள புலால் நாற்றத்தை); புன்னைகடியும்—புன்னைப் பூவின் மணம் நீக்கா நின்ற; பொரு—கரையைத் திரைமோதும்; தண்—(குளிர்ந்த); கடல்சேர்ப்ப!—கடல் சேர்ப்பை யுடையவனே!; பெயல் பால்

பா-ம்:—[1]துறையையுடையவனே.

[2]பிழைக்கும் வழி.

[3]கயம்- சுனை, குளம், கடல், என்றுமாம்.

—பெய்தல் பகுதியான; மழை—; பெய்யாக்கண்ணும்—பெய்யாதவிடத்தும்; உலகம்—உயர்ந்தோர்; செயல்பால—செய்தல் பகுதியான வீகையை; செய்யாவிடினும்—; உலகு—உலகத்தார்; உய்யும் ஆறு—பிழைப்பது; என்னை?—எப்படிதான்? என்றவாறு.

கயம்—பெருமை.

மேற்கோள் பகுதி:-

மயிலை:—உயிரில் பொருட்பண்பிற்கு "கயற்புலால், புன்னை கடியும் பொருகடற் றண்சேர்ப்ப" என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.

ஒப்புமைப் பகுதி:-

'மழை':—

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்டு
என்னாற்றுங் கொல்லோ உலகு".

—குறள்.211.

"பேரியலாளர் செய்கை ஊதியம் பிடித்து மென்னார்
மாரியை நோக்கிக் கைம்மாறு இயற்றுமோ வையம்
[என்றான்"

—கம்ப.யுத்த.நாகபாச.271.

"வான்செய்யும் நன்றிக்கு வையகத்தோர் செய்யும்
கைம்மாறு உண்டேயோ"

—திருவிளை.மாணிக்க.86.

"கழிந்தது பொழிந்தென வான்கண் மாறினும்..........
எல்லா உயிர்க்கும் இல்லால் வாழ்க்கை"

—புறம்.203:1—3.

"மழையின்றி மாநிலத்தார்க் கில்லை"

—நான்மணி.48.

குறிப்பு:-

பெயல்பால் என்பதற்குப் பெய்தற்கு உரியகாலத்தில் என்றும் பொருள்கொள்வர். கயல், புன்னை—இவைநெய்தல் நிலத்துக் கருப்பொருள்கள். சேர்ப்பன்—நெய்தல் நிலத் தலைவன். கயல் மீனாலுண்டாகிய புலால்நாற்றத்தைப் புன்னைமலர் போக்குவது போல, மக்களின் வறுமையைப் பெரியோர் போக்குவரென்பது தொகைமொழி 'பெய்யும் பகுதியான மழைபெய்யாத விடத்தும்' என்ற உபமானமும், 'உயர்ந்தோரானோர் செய்யும் பகுதியான வினையைச் செய்யாவிடினும்' என்ற உபமேயமும், 'இந்த உலகத்து மக்கள் உய்யுமாறு என்னை? என்றதனோடு ஒருதன்மையின் முடித்ததனால், இது இறுதிநிலைத் தீவகவணி எனப்படும்.

எல்லா உயிர்களும் உயிர்வாழ்தற்கு மழைபெய்தல் இன்றியமையாததுபோல, வறியோர்க்குப் பொருளுள்ளோர் ஈதல் இன்றியமையாதது என்பது கருத்து.

(எ)

98. ஏற்றகை மாற்றாமை என்னானுந் [1]தாம்வரையாது
ஆற்றாதார்க்கு ஈவதாம் ஆண்கடன்—ஆற்றின்
மலிகடல் தண்சேர்ப்ப! மாறீவார்க்கு ஈதல்
பொலிகடன் என்னும் பெயர்த்து.

தருமர்:—என்பது. மலிகடல் தண்சேர்ப்ப!-(வளங்கள்) மிகுந்த கடற்சேர்ப்பை யுடையவனே!; ஏற்றகை—ஏற்பவர்க்கு; மாற்றாமை—இல்லையென்று [2]மறாமல்; என்ஆனும்—ஏதொன்றாகிலும்; தாம்வரையாது—தனக்குள்ள மாத்திரம்; ஆற்றாதார்க்கு—வறியோர்க்கு; ஈவதாம்—கொடுப்பதே; ஆண்கடன்—ஆண்டகைமையாவது; ஆற்றின்—பொருள் வருவாயுடையராய்க் கொடுத்தலையுடையார்; மாறு ஈவார்க்கு—தாமொருவர்க்குங் கொடுக்குந்

பா—ம்:—[1]'தாம் வரையான்'.
'தாம் வரையார்'.
[2]'மறுத்து விடாமல்'.

தகைமையை யுடையார்க்கு; ஈதல்—கொடுத்தல்; பொலிகடன் என்னும்—[1]பலிசைக்குக் கொடுக்கும் அவன் என்னும்; பெயர்த்து—பெயரையுடைத் தென்றவாறு.

பொருள் உள்ளார்க்குங் கொடுக்கும்போது, அவரால் பயன்படக் கொடுப்பதாயிருக்குமன்றிப் புகழைப் பெற மாட்டார். அதனால் தமக்கு நல்லுலகத்தைக் கொடுப்பதாய புகழைப் பெறும்படிக்கு அதற்கானவிடத்துக் கொடுக்கவேண்டு மென்ப தாம்.

பதுமனார்:—மலிகடல் தண்சேர்ப்பனே! ஏற்றகையின் கண் யாதானுந் தம்மளவினால் மாற்றாதே வறியார்க்கு ஒன்றி னைக் கொடுத்தல் ஆண்டகைமையாவது. ஆற்றின் தமக்குக் கைம்மாறு ஈவார்க்குக் கொடுத்தல் பொலிதற்கிடுங் கடனென்னும் பெயரினை யுடைத்தென்றவாறு.

ஆற்றின்—கொடுக்கில். ஆற்றாதார்க்குக் கொடுப்பதே ஆண்கடன். ஆண்பாடு ஆவது ஒப்புரவறிதல்.

விளக்க உரை:— மலிகடல் தண் சேர்ப்ப !—மிக்க கடற் சேர்ப்பை யுடையவனே!; ஏற்றகை—ஏற்றவன்; கையின் கண்; மாற்றாமை—மிகவுஞ் சிறிதெண்ணாது, இல்லையென்னாது; என் ஆனும்—யாதானும்; தாம்வரையாது—தமக்குள்ள வளவி னால்; ஆற்றாதார்க்கு—வறியவர்க்கு; ஈவதாம்—கொடுத்தலே; ஆண் கடன்—ஆண்டகைமையாவது; ஆற்றின்—பொருள் வருவா யுடையார் ஆற்றுதலையுடையராய்; மாறுஈவார்க்கு—கைம்மாறு செய்வார்க்கு; ஈதல்—கொடுத்தல்; பொலிகடன் என்னும்—[2]பொலிகைக்குக் கொடுக்கும் அவன் என்னும்; பெயர்த்து—பெயரையுடைத் தென்றவாறு.

---

[1]பலிசை—1. வட்டி; 2. இலாபம்; 'பலிசையாற் பண்டம் பகர் வான் (பு. வெ. 12, வென்றிப். 2)

[2]பொலிகை—பொலிசை, பலிசை.

ஒப்புமைப் பகுதி:—

"வறியார்க்கொன்று ஈவதே ஈகைமற் றெல்லாம்
குறியெதிர்ப்பை நீர துடைத்து".

—குறள். 221.

"ஆற்றுதல் என்பதொன்று அலந்தவர்க்கு உதவுதல்"
—கலி. 133—6.

"இம்மைச் செய்தது மறுமைக்காம் எனும்
அறவிலை வாணிகன் ஆய் அவன்".

—புறம். 134: 1—2.

"ஆற்றுநர்க்கு அளிப்போர் அறவிலை பகர்வோர்
ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்
மேற்றே யுலகின் மெய்ந்நெறி வாழ்க்கை"

—மணி. 11 : 92—4.

"வைப்பானே வள்ளல் வழங்குவான் வாணிகன்"
—சிறுபஞ்ச. 34.

"இம்மையாற் செய்ததை இம்மையே யாம்போலும்
உம்மையே யாமென்பார் ஓரார் காண்"
—திணைமாலை நூற்றைம்பது. 123.

"தொடுத்த வறுமையும் பயனும் தூக்கி வழங்குநர்போல"
—திருவிளை. வாதவூ உபதே. 3.

"மாண்புடையாளர் கேண்மையர் தத்தம் வழிமுறை
யொழுக்கினி லமர்ந்தோர்
சேண்படு நிரப்பி னெய்தினோர் புரப்போர்த் தீர்ந்தவர்
தந்தை தாய்குரவர்
காண்டகு முதவி புரிந்துளோ ரினையோ ரொன்பதின்
மருமுளங் களிப்ப
வேண்டுறு நிதிய மளிப்பின்மற் றொன்றே கோடியா
மெனமறை விளம்பும்".
—காசி கண்டம்.

"அற்றார்க்கொன்(று) ஆற்றாதான் செல்வம் மிகநலம்
பெற்றாள் தமியள்மூத் தற்று".

—குறள். 1007.

"ஏற்றார்கட் கெல்லாம் இசைநிற்பத் தாமுடைய
மாற்றார் கொடுத்திருப்ப வள்ளண்மை".

—பழ. 318.

"நிலந்தினக் கிடந்த நிதியமொடு அனைத்தும்
இலம்படு புலவர் ஏற்றகைந் நிறையக்
.........................வீசி நல்கி".

—மலைபடுகடாம். 575—80.

"வாயாலில்லை யென்பதைக் கையாலில்லை யெனல்"

—பழமொழி.

"சிறுநன்றி யின்றிவர்க்குயாம் செய்தக்கால் நாளைப்
பெறுநன்றி மன்னும் பெரிதென்று—உறுநன்றி
தானவாய்ச் செய்வதூஉம் தானமன் றென்பதுவே
வானவாம் உள்ளத் தவர்".

—யா. வி. 4. மேற்.

'ஆற்றாதார்':—

"ஆற்றா மாக்கள் அரும்பசி களைவோர்"

—மணி. 11: 93.

"ஆற்றா மாக்கட்கு ஆற்றுந்துணை யாகி"

—மணி. 17: 64.

—மணி. 19: 35.

குறிப்பு:-

ஆனென்பது ஆயினென்பதன் மரூஉ. வரையார் எனக் கொண்டு நீக்காதவராய் என்றும், வரையறை செய்துகொள்ளாதவராய் என்றும் பொருள் கொள்ளலும் உண்டு. மலிகடல்—வளம் மிக்க கடல். கடலுக்கு வளமாவன; அம்பர், சங்கு, பவளம், முத்து, உப்பு முதலியன. பொலிகடன்—கொழுத்த

கடன், சிறந்தகடன் என்றுமாம்.

(அ).

99. இறப்பச் சிறிதென்னாது இல்லென்னா தென்றும்
அறப்பயன் யார்மாட்டுஞ் செய்க — முறைப்புதவின்
ஐயம் புகூஉந் தவசி கடிஞைபோற்
பைய நிறைத்து விடும்.

தருமர்:— என்பது. இறப்பச் சிறிது— [தாம் கொடுப்பது] மிகவும் சிறிது; என்னாது—என்றெண்ணி; இல் என்னாது— இரப்போர்க்கு இல்லை யென்னாது; என்றும்—எப்பொழுதும்; அறப்பயன் — அறப்பயனை; யார்மாட்டும் — யாவரிடத்தும்; செய்க—; முறைப் புதவின்—வுதவுதோறும் முறைமுறையாக, புகூஉம்—புகுந்து; ஐயம் — (பிச்சை) இரக்கின்ற; தவசி—; கடிஞைபோல்—பாத்திரம்போல; பைய— மெல்ல; நிறைத்து விடும்—;என்றவாறு.

யார்மாட்டும் என்பது, தாம்முன்பு அறிந்தவரென்று கொடுப்பது செய்து, இவர் நம்மை அறிந்தவரல்லவென்று அவர்க்கு இல்லையென்னாது யாவரிடத்தும் (அறப்பயனைச்) செய்வது. இறப்பச்சிறிது என்பது பொருளுள்ளவழி கொடுப்பதற் கெண்ணந் தேவையில்லையே. வறுமையாயவழி, ‘கொடுப்பது கொஞ்சமல்லவோ; மிகவுங் கொஞ்சமாய் ஒருவர்க்கு எப்படி கொடுக்கப்போகிறோம்’ என்று மனதிவிழிவு நோக்காது, சிறிதாயினும் இயன்றமாத்திரம் மனமறாமல் நாள்தோறுங் கொடுத்து வரில், அது ஐயமேற்பார் பாத்திரம் நிறைந்தாற்போல நாளிலே மிகுதியான பயனைத் தனக்கு உதவு மென்பதாம்.

புதவு—வாயில்.

பதுமனார்:— தமக்குள்ள பொருளை மிகவுஞ் சிறிதென்று கருதாதே, இல்லையென்னாதே என்றும் அறப்பயனான வகையை யாவர் மாட்டுஞ் செய்க. (செய்யின்) முறைமுறையாக மனை

வாயில் தோறும் பிச்சைபுகுகின்ற தவசி கடிஞைபோல் மெல்ல மெல்ல நிறைத்துவிடு மென்றவாறு.

முறைப்புதவின்—வாயில்தோறும். கடிஞை—இரங்குங்கலம்.

விளக்க உரை:— இறப்ப—மிகவும்; *சிறிது என்னாது*—*சிறிதென்னாதும்*; இல்என்னாது—இல்லை யென்னாதும்; என்றும்—எப்பொழுதும்; அறப்பயன்—அறப்பயனை; யார் மாட்டும்—யாவரிடத்தும்; செய்க—; முறைப்புதவின்—வீட்டில் வாசற்றோறும் முறைமுறையாக; புகூஉம்—புகுந்து; ஐயம்—பிச்சையெடுக்கும்; தவசி கடிஞைபோல்—தவசிபாத்திரம் போல; மைய—மெல்ல; நிறைத்துவிடும்—; என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

> "உறக்குந் துணையதோர் ஆலம்வித்து ஈண்டி
> இறப்ப நிழற்பயந் தாஅங்கு—அறப்பயனுந்
> தான்சிறி தாயினுந் தக்கார்கைப் பட்டக்கால்
> வான்சிறிதாப் போர்த்து விடும்".

—நாலடி, 38.

"பலதுளி பெருவெள்ளம்".

—பழமொழி.

"கடிஞை":—

"தோமறு கடிஞையும்"

—சிலப். 10: 98.

"தெய்வக் கடிஞை"

—மணி. 14: 45.

குறிப்பு:—

ஈண்டு 'அறம்' என்றது 'இல்லென்னாது' என்ற குறிப்பாலும் அதிகாரத்தாலும் ஈகையைக் குறித்தது. புதவு—வாயில்

(மதுரைக். 65). புகும் என்பது செய்யுளோசை நிறைக்க 'புகூஉம்' என நெடிலாகி அளபெடுத்தது. பைய—குறிப்பு வினையெச்சம்.

(கூ)

100. [1]கடிப்பிடு கண்முரசம் காதத்தோர் கேட்பர்
இடித்து முழங்கியதோர் யோசனையோர் கேட்பர்
அடுக்கிய மூவுலகுங் கேட்குமே சான்றோர்
கொடுத்தார் எனப்படுஞ் சொல்.

தருமர்:—என்பது. கடிப்புஇடு கண்முரசம்—ஒலியுண்டாக்குவதற்குத் தோல் போர்க்குமிடத்தினையுடைய பேரிகையொலியானது; காதத்தோர் கேட்பர்—காதவழியிலுள்ளவர்கள் கேட்பார்கள்; இடித்து முழங்கியது—வானிடத்து இடிந்து நாற்காதவழியினுள்ளார் கேட்பர்; சான்றோர்—அமைந்த பெரியோரால்; கொடுத்தார்—இன்னார் கொடுத்தார்; எனப்படும் சொல்—என்று வியந்து சொல்லப்பட்ட சொல்; அடுக்கிய மூவுலகும்—பூமி, அந்தர, சொர்க்கம் என்றடுக்கிச் சொல்லப்பட்ட மூன்றுலகமும்; கேட்குமே—;என்றவாறு.

யோசனை காதரைவழி யென்பதற்கு நாற்காதவழி யோசனையென்று கூறப்பட்டது. இத்தன்மையாகிய வொலிகளும் கேட்குமிடங்(களும்வேறு)பட ஒருவர் கொடுத்தாரென்று சொல்லுஞ்சொல், அதிதூரமாகிய மூன்று உலகமுங்(கேட்குமோ) வெனில் ஒருவர் கொடுப்பது நல்லோரானவர் கண்டுவந்து கூறியது பலரு(ங்கேட்)டு இவ்வுலகமெல்லாம் அறியும். அந்தரத்துஞ் சொர்க்கத்தினுமுள்ளார்.............. தன்மையாலே இவ்வுலகிலுண்டான மொழிகளை அறிவார். அதனால் மூவுலகமுங் கேட்குமெனப் புகழினது பெருமை கூறியவாறு.

பா-ம்—1 'கடிப்பிகு'.

பதுமனார்:—[1]கடிப்பிடு கண்ணினையுடைய முரசொலி யொருகாதத்துள்ளார் கேட்பர். மழையிடித்து முழங்கிய வோசை யோரோசனைக் கண்ணுள்ளார் கேட்பர். சான்றோ (ரால் இன்னார்) கொடுத்தாரெனப்படுஞ்சொல் அடுக்கப்பட்ட மூன்றுலகமுங் கேட்குமென்றவாறு

(மூன்றுலகமுங் கேட்குமென்பது); புகழால் இவ்வுலகமும், இவன்வழியிலுள்ளோர் இருந்த பிதுருலோகமும், இவன் பெறுவதான சுவர்க்க லோகமும் கேட்குமென்பது.

விளக்க உரை:—கடிப்பு இடுகண் முரசம்—கடிப்பிடித்த கண்ணினையுடைய முரசொலி; காதத்தோர் கேட்பர்—காதவழியிலுள்ளோர் கேட்பர்; இடித்து முழங்கியது— இடித்து முழங்கிய வோசை; ஓர் யோசனையோர் கேட்பர்— நாற்காதத்தார் கேட்பர்; சான்றோர்—சான்றோரால்; கொடுத்தார்—இன்னார் கொடுத்தார்; எனப்படும் சொல்—என்று வியந்து சொல்(லப்பட்டசொல்); அடுக்கிய மூவுலகும் கேட்குமே—அடுக்கிய மூன்றுலகத்தாரும் கேட்பர்.

மேற்கோள் பகுதி:-

பிரயோக:—"நாலடியாரும்.........யோசனையோர் கேட்பர் ....எனத் தற்சமமாகக் கூறினாற்போல, யாமும், உருவபேத மென்னாமலே ரூபபேதமென்றாம்".

—சூ. 37—உரை.

ஒப்புமைப் பகுதி:-

"ஒன்றா உலகத் துயர்ந்த புகழல்லால்
பொன்றாது நிற்பதொன் றில்"

—குறள். 233.

---

[1]கடிப்பு இடு—குறுந்தடியினால் அடிக்கப்படுகின்ற.

"நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு"

—குறள். 234.

"கடிப்பிகு கண் முரசம்" :—

"கடிப்பிகு முரசின் முழங்கி"

—குறுந்தொகை. 270—3.

"முரசுகடிப் பிகுப்பவும்"

—புறம். 158—1.

"கடிப்பிகு முரசே"

—சிலப். 17 : ("என்றியாம்").

"கண் முரசியம்பி"

—மணி. 1 : 69.

"முரசுகடிப் பிகுத்த மூரி முற்றத்து"

—பெருங். 1.37.5.

"நாக்கடிப் பாக வாய்ப்பறை யறையினும்"

—சிவப். 14 : 29.

"நாக்கடிப் பாக வாய்ப்பறை யறைந்தீர்"

—மணி. 25 : 51.

குறிப்பு:—

கடிப்பு—முரசடிக்குங் குறுந்தடி. முரசத்துக்குக் கண் என்றது தோல் விசித்த பக்கத்தை. முரசம் கருவியாகு பெயராய் முரசொலியைக் குறித்தது. காதம்—சற்றேறக் குறைய இரண்டேகால் மைல்; ஏழரை நாழிகை வழி என்றும் கூறுவர். யோசனை—நாற்காதவெல்லை யென்பது ஜைனநூல் வழக்கு; சீவக சிந்தாமணியில் 'ஓசனை கமழுமே' (சீவக. 1901) என்பதற்கு 'நாற்காதவெல்லை நாறுமென்க' என நச்சினார்க்கினியர் உரை கூறியிருத்தல் காண்க. காதம், யோசனை என்பன அவ்வொலிகள் சென்று பரவும் எல்லையைக் குறித்தன. சான்றோர்—மூன்றாம் வேற்றுமைத்தொகை; அது சான்றோரால்

எனப்படும் என இயையும். மற்றும் சிலர் ஆறாம் வேற்றுமைத் தொகையெனக்கொண்டு 'கொடுத்தார் எனப்படுஞ் சான்றோர் சொல்' என்றியைத்துக் கொள்வர். வேறு சிலர் 'சான்றோர்க் குக் கொடுத்தார்' என விரித்து நான்காம் வேற்றுமை உருபாகிய 'கு' ஈற்றில் தொகுத்தலாய் நின்றது என்பர்.

ஈகையினால் ஒருவரடையும் புகழ் மூன்றுலகமும் எட்டும் என்பது கருத்து.

(ய)

---

11. [1]பழவினை.

தருமர்:— 'ஊழ்' என்பதூஉ மிதனை. அஃதாவது முற் பிறப்பிற் செய்தவினை இப்பிறப்பிலே (யனுபவிக்கையும், இப் பிறப்பிற் செய்தவினைபிற்) பிறப்பிலே யனுபவிக்கையுமாகி இப்படி மாறிவருகின்றது. இவை யறிவதெப்படியென்னில், இப்பிறப்பிலே யாதொரு இன்பதுன்பங்களை யனுபவிக்கிறான் இது நாம் முற்பிறப்பிற் செய்த புண்ணிய பாவங்களென்றும், இப்பிறப்பிற்செய்த புண்ணிய பாவங்களும் மறுபிறப்பில் இப்படி பலிக்குமென்றும் அறிவாலுணரு மென்பதாம்.

பதுமனார்:— அஃதாவது முற்பிறப்பிற் செய்தவினை யிப்பிறப்பிலே அனுபவிக்கையும், இப்பிறப்பிற் செய்தவினை பிற்பிறப்பிலே அனுபவிக்கக் கிடப்பதுமாக (இப்படி) மாறி வருவது. இவையறியு மாறாவது, இப்பொழுது காணப்பட்ட பிறப்பு யாதொரு காரணத்தினா லுளதாகக் கண்டு, இதனைக்

---

[1]இங்கு பழவினையைப்பற்றிய பிரமாணங்களைப் பிரத்தி யட்சம் முதல் அபாவம் ஈறாக பதுமனார் விரித்துரைக்கும் கருத்து கட்கும் பூர்வமீமாம்ஸையில் ஔத்பத்திகசூத்திரத்தில் 'தர்மத் தின் பிரமாணங்களைச் சர்ச்சை செய்யுடமித்து சாபரபாஷ்யத் திலும், குமாரிலபட்டருடைய சுலோக வார்த்திகத்திலும் உள்ள கருத்துகட்கும் ஒப்புமை காணப்படுகின்றன.

கொண்டே முற்பிறப்பும் மறுபிறப்பும் உளதென்று [1]சொல்லுதலும், எல்லா சீவன்களுக்குஞ் சனித்தபொழுதே ஆகாரத்துக்கு வேண்டும் உற்சாகசத்தி பிறத்தலும், [2]சாக்கிரத்திற் கண்டன சொப்பனத்திற்கண்டு, சொப்பனத்திற் கண்டன சாக்கிரத்திலேயறிந்து, மறந்தன நினைப்பதுபோலவுஞ் சிலர்க்கு அறிவுங் கல்வியும் கடுகவுளதாதலும், சிலர்க்கு நெடுநாட் கற்பித்தாலும் வாராதொழிகையுங் கண்டு, இது முற்பிறப்பில் வாதனைகளென்றும் பிறப்புகளை யறியப்பட்டது.

வினையாவது, யாதொரு பிராணியையும் இது பிராணியென்றறிந்தவிடத்துக் கருத்துடன் செய்யப்பட்ட [3]இதமகிதங்கள், [4](புண்ணிய) கன்மம் [5]பாவகன்மம் கருதாது முடிவன ஒருவன் செயலாய் முடியாது மனோவாக்குக் காயங்கள் மூன்றுங் கூடியே யவ்வேவலுடன்பாடுகளுடன் செயல்முடிவு பெற்றனவே கன்மமாவன. அல்லதூஉம் யாதொருபொழுது(ஞ்) சரீர தன்மத்திறங்களிற் புடைபெயர்ச்சிகளொழிய, யாதொரு கிரிகைகளுஞ் செய்யுமிடத்து ராகத்துவேஷங்களாலும் பரிகரித்துச் செய்யாமையாலும், பிராணிகளுக்கு [6]அகிதம் வருவனவுந் [7]துவேஷங்களிலேயாம்.

இப்பெற்றிப்பட்ட வில்வினைகள் [8]பலித்து வருதலை யறிதற்குப் [9]பிரமாணமாவன:— 1. பிரத்தியட்சம். 2. அனுமானம். 3. ஆகமம். 4. உவமானம். 5. அர்த்தாபத்தி.

பா—ம்:—[1]கொள்ளுதலும்.

[2]சாக்கிரம்—ஆன்மா புருவமத்திடை நின்று தத்துவங்களுடன் கூடிவிடய நுகர்ச்சியில் மெத்தன நிற்கும் நிலை. (சி. போ. பா.4)

[3]நன்மைதீமைகள். [4]நற்செயல். [5]தீயசெயல். [6]தீமை; "அகித மொருவர்க்கு மெண்ணிலாதோர்" (சிருவேங். சத. 87).

பா—ம்:—[7]'தோஷங்களிலேயாம்'.

[8]'அனுபவித்து'

[9]பிரமாணம்—உண்மை ஞானத்தையறிதற்கு உதவும் சாதனம். அது இங்கு கூறியவாறு அறுவகையாகவும், பிரத்தியட்சம், அனுமானம், ஆகமம், உவமானம், அருத்தாபத்தி, அனுபலத்தி, சம்பவம், ஐதிகம் (வேதா. சூ. 20.) என எண்வகையாகவும் கூறப்படும்.

6. அபாவம் என்று சொல்லப்பட்ட பிரமாணங்களாலே யறிதல்.

1. **பிரத்தியட்சம்:—**

வைதாரை வைதும், அடித்தாரை யடித்தும், கொலைக்கு கொலைகொண்டும், குணஞ்செய்தாரை யனுக்கிரகித்தும், உபகரித்தாற்குப் பிரதிஉபகாரம் பண்ணியும் செயலுக்குச் செயலானவை பூமியிலே வழங்கி வருகின்ற பிரத்தியட்சத் தாலும்;

2. **அனுமானம்:—**

குருடரும், முடவரும், வியாதிகிரகத்தரும் இராச்சியம் பண்ணுதலும், [1]கிரகத்திலே சீமான்களாய்ப் பிறப்பாரும், அங்கவீனராய்ப் பிறப்பாரும், சென்மத்திலே தரித்திரராகியும், ஆயுசுவின்றி பிறப்பாரும் ஆகுமிவைகள், தாங்கள் (பிறக்கும்) பொழுது சமத்தராய்ச் செய்துகொண்டன வல்லாமையால், இது பூர்வகன்ம பலமென்னும் அனுமானத்தாலும்;

3. **ஆகமம்:—**

ஒன்றுக்கொன்று விபரீதமாகச் சொல்லுஞ் சமயங்கள் தோறுஞ் செய்தகன்மம், பலிக்குமென்பதொன்றையும் ஒரு படிப்படச் சொல்லுதல் எல்லா வாகமங்களாலும், எல்லா வற்றிலும் பழமையுடைய வேதங்களாலும் பெறப்படுதலாலும்;

4. **உவமானம்:—**

முன்பு இட்ட வித்து இப்போது பலித்து, இப்போதிட்ட வித்து மேற்பலிப்பதாகியும் வருவனவும், [2]சிவிகைக்காவுவாரும் அதன்மேல் இருப்பாரிடத்தும் இப்படிக் கன்மங்கள், பலித்து வரும்படி யென்றுங் காட்டலாகிய உவமானத்தாலும்;

5. **அர்த்தாபத்தி:—**

தனக்கு நன்மையைக்கருதி முயலவும், தீமைகள் வராமற்

பா-ம்:—[1]'கெர்ப்பத்திலே'

[2]''அறத்தா றிதுஎன வேண்டா சிவிகை
பொறுத்தானோ டூர்ந்தான் இடை''
—என்ற குறளும் (37), பரிமேலழகர் உரையும் காண்க.

காக்கவும், தான்வேண்டியவாறன்றி அவைதானே மாறிவருத லான அர்த்தா பத்தியினாலும்;

6. அபாவம்:—

இல்லாதொன்றுக்கு வடிவும், பெயரும் இல்லாமையால் அதனை [1]இல்லையென்றுஞ் சாதிக்கப்படாது. உள்ளதொன்றை இடத்தையும் காலத்தையும் பற்றவில்லை யென்பதன்றியும் முதலே இல்லையென்று சாதிக்கப்படாதாகை(யினாலே)யும் உண்டென்றும் இல்லையென்றும் இருவகையும் ஒருபெயரைப் பற்றி பிறத்தலாலுள்ளதென்ற, வச்சுபாவ [2]பிரகரணந்தன்னாலே கொள்ளுதலும்;

இவை யன்றித் தான்செய்த நலந்தீங்குகள் பலியாதென்று சொல்லும் நாத்திகனான உலோகாயதன்தானே, வைதாரை வைதும், தன் சுற்றத்துள்ளாரைக் கொன்றாரைக் கொலை கொண்டும், பொய்சொன்னாருடனே பொய் சொன்னோமென்று பிணங்கியும், தன்பொருள் களவுபோகில் தண்டித்தும், மாதா வென்றாகிலும் ஸ்ரீ நியதியுண்டாகியும், தன்னுடைய ஸ்ரீயிடத்துப் பிறரைக்காணில் மானித்தும், கோபித்தும், தண்டித்தும், கள்ளுண்டு மயங்கி, மலமூத்திரங் களைவானை யருவருத்தும் [3]உபேட்சித்தும் இவை ஆத்திகரைப்போல அனுபவ முடைய வனாகி நாத்திகஞ் சொல்லுமது பிரமாணம் அல்லாமலும்; தான்சொல்லும் பூதவசமாகிய சரீரமானவிடத்து மெங்குஞ் செவி, கண், வாய், மூக்கான கரணத்தில் ஞானம் பிறவா மலாலும்; அவைதான் ஒன்றறிந்து ஒன்றறியாத வேறுபாடுடை யாமையானும், இப்படி சுவபாவம் என்னுமிது தன்சொல்லோடு [4]பின்மலைதலானும்; இவன் சொல்லிவிட்டுத் தான் செய்த(த) தான கன்மம் பலிக்குமென்பது கூறப்பட்டது.

இது அதன்பின் சொல்லியதென்னை? உலகத்திலுள்ளார்

பா-ம்:— [1] 'உளதென்றும்'

[2]பிரமாணந்தன்னாலே என்றிருத்தல் கூடும்.

பா-ம்:—[3]'தூஷித்தும்'.

[4]'பின் முன் மாறுதலானும்'.

யாவர்க்கும் பழவினையாகிய ஊழையறிந்து, தத்தம் மனத் தளர்ச்சியைவிட்டு முயல வேண்டுமாதலின், ஒருவனுக்கு [1]நல்குரவுஞ் செல்வமும் உண்டென்றறிந்து ஈகையும் வலியுறுத்தி, தன்னுறவின்கட் டளராது ஒழுக வேண்டுதல் என்றவாறு.

விளக்க உரை:—முற்பிறப்பிலே செய்தவினை யிப்பிறப்பிலே யனுபவிக்கையும், இப்பிறப்பிலே செய்தவினை பிற்பிறப்பிலே அனுபவிக்கையுமாகி இப்படி மாறிவருகின்றது. இவையறிவது எப்படியென்னில், யாதொரு பிறப்புக் காணப்பட்ட பிறப்பிலே இன்பதுன்பங்கள் யாதொன்றனுபவிக்கிறான் இதுதான் முற் பிறப்பிலே (செய்த) புண்ணிய பாவங்களென்று(ம் இப்பிறப் பிலே தானொரு தானதன்மங்கள் செய்கிறான் செய்த பொழுதே மறுபிறப்புக்கிவை பலிக்குமென்றுந்) தானே தன் மனதிலே உணருமென்பதாம்.

குறிப்பு:-

'ஊழ்':—

பரிமே:—அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்று அடைதற்கு ஏதுவாகிய நியதி, ஊழ், பால், முறை, உண்மை, தெய்வம், நியதி, விதி என்பன ஒருபொருட்கிளவி. இது பொருள் இன்பங்கள் இரண்டற்கும் பொதுவாய் ஒன்றனுள் வைக்கப்படாமையானும், மேற்கூறிய அறத்தோடு இயைபுடை மையானும், அதனது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

மணக்:—ஊழாவது முன்பு செய்தவினை பின்பு விளையும் முறை. மேற்கூறிய அறப்பகுதியும் இனிக்கூறுகின்ற பொருட் பகுதியும் இன்பப்பகுதியும் முன்செய்த நல்வினையால் வருதலை யும், இவற்றிற்கு மாறான பாவமும் வறுமையும் துன்பமும் தீவினையால் வருதலையும் அறியாதே, அவை உலகத்தில்

---

[1]'நல்குரவுஞ் செல்வும் நரகும் சுவர்க்கமுமாய்
வெல்பகையும் நட்பும் விடமும் அமுதமு மாய்'
—(திருவாய். 6,3,1.)

தமது முயற்சியால் வந்தன என்பரன்றே. அதற்காக இது கூறப்பட்டது. ஒருவன் செய்தவினை தனதுபயனை வழுவின்றிப் பயத்தல் அறத்திறனாகுமாதலான், இஃது அறத்தின் இறுதிக்கண் கூறப்பட்டது.

பரிதி:—ஊழாவது, போனசென்மத்தின் வினைப்பயனைச் சொல்லியது என்றவாறு.

—குறள்.அதி.38.

101. [1]பல்லாவுள் உய்த்து விடினுங் குழக்கன்று
வல்லதாந் தாய்நாடிக் கோடலைத்—தொல்லைப்
பழவினையும் அன்ன தகைத்தேதற் செய்த
கிழவனை நாடிக் கொளற்கு.

தருமர்:—என்பது. பல் ஆவுள்—பலபசுக்கள் நின்றவிடத்திலே; குழக்கன்று—ஒரு இளங்கன்றை; உய்த்து விடினும்—செலுத்திவிட்டாலும்; தாய்—[அந்தக் கன்றானது தன்னுடைய] தாயை, நாடி—தேடி; கோடலை—அதனிடத்துச் செல்ல; வல்லதாம் - வல்லதாயிருக்கும்; [அதுபோல] தொல்லை—முன்னேசெய்த; பழவினையும்—பழைய வினையும்; தன்செய்த—தன்னைச் செய்தற்கு; கிழவனை—உரியவனை; நாடி—ஆராய்ந்து; கொளற்கு—பற்றியனுபவித்தற்கு; அன்னதகைத்தே—அத்தன்மையாம் என்றவாறு.

அநேகம் பசுக்களிலுந் தன்னுடைய தாயை நாடிச் சென்ற கன்றுபோல, உலகத்து எண்ணரும் மனிதருண்டாயினும் அவர் பாற்செல்லாது, அதற்கு உரியாரிடத்தேயே சென்று அனுபவிக்கப் பண்ணுமென்று ஊழினது (தன்மை கூறியவாறு.)

பதுமனார்:— பல [2]பெற்ற(ங்கள்) நின்றவிடத்து ஓரிளங்

பா-ம்:—[1]'பல்லா வொளித்துவிடினும்',
[2]பசுக்கள் (தொல்.பொரு.594).

கன்றினைக் கொண்டு சென்றுவிடினுந் தன்றாயை யறிந்து கொள்ள வற்றாம். முன்செய்த பழவினைதானுந் தன்னைச் செய்த தலைவனை ஆராய்ந்து நாடிக் கோடற்கு அத்தன் மைத்தேயாம் என்றவாறு.

கிழவன்—உரியவன்.

விளக்க உரை:—பல் ஆவுள்—பல பசுக்கள் நின்ற விடத்தே; குழக்கன்று—இளங்கன்றை; உய்த்துவிடினும்—செலுத்திவிடில்; தாய்நாடிக்கோடலை—தாயைத் தேடிக் (கண்டு) கொள; வல்லதாம்—வற்றாயிருக்கும்; [அதுபோல] தொல்லை—முன்பு செய்த; பழவினையும்—; தன் செய்த கிழவனை—தன்னைச் செய்த(ற்குரிய)வனை; நாடிக்கொளற்கு—ஆராய்ந்து பற்றிக் கொண்டனுபவித்தற்கு; அன்ன தகைத்தே—அத்தன்மைத்தா யிருக்கும் என்றவாறு.

கிழவன்—உரியவன்.

மேற்கோள் பகுதி:-

தெய்வச்.
சேனா. } :—மழவும் குழவும் இளமைக் குறிப்புப் பொருளு ணர்த்தும் என்பார், 'குழக்கன்று' என்பதனை மேற்கோள் காட்டுவர்.

—தொல். சொல். சூ. 308.

—தொல். சொல். சூ. 311.

மயிலை:—உரியியற் சொல்லுக்கு 'குழக்கன்று' என்பதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன். சூ. 270.

ஒப்புமைப் பகுதி:-

"பெற்றி கருமம் பிழையாமற் செய்குறின்
பற்றின்க ணில்லா தறஞ்செய்க—மற்றது
பொன்றாப் புகழ் நிறுத்திப் போய்ப்பிறந்த வூர்நாடிக்
கன்றுடைத் தாய்போல் வரும்."

—அறநெறி. 95.

"தாம்ஈட்டு அரும்வினைகள் தண்டா உடம்பொன்ற
நாம்மீட்டு ஒறுக்கொணா ஞாங்கர் அடிப்பட்ட சிம்பால்
பிதுக்கப் பெயல்போற் பிறப்பிறப்பும் போகா
கதுப்போடு இறுத்தல் கடன்".

—இன்னிலை. 7.

குறிப்பு:-

ஈண்டு விடின் என்பது செயப்பாட்டு வினைப்பொருளை யுணர்த்திற்று. அகரச்சாரியையும் படுவிகுதியும் செய்யுள் விகாரத்தால் தொக்கி நின்றன. வல்லது—பண்படியாப் பிறந்த ஒன்றன்பாற் குறிப்புமுற்று. தாய்—இருதிணைப் பொதுப்பெயர். கோடலை, கொளற்கு என்ற இருவிடத்தும் முறையே இரண்டனுருபும், நான்கனுருபும், ஏழாம் வேற்றுமை இடப் பொருளில் வந்தன; உருபுமயக்கம். தொல்லை பழமை—ஒருபொருட் பன்மொழி. தகைத்தே என்பதன் ஏகாரம் தேற்றம். தன்செய்த என்பதன் னகரம் றகரமாய்'தற்செய்த' எனவந்தது.

(க)

102. உருவும் இளமையும் ஒண்பொருளும் உட்கும்
ஒருவழி நில்லாமை கண்டும்—ஒருவழி
ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டு
நின்றுவீழ்ந் தக்க துடைத்து.

தருமர்:— என்பது. உருவும்—வடிவழகும்; இளமையும்—; [1]ஒண்பொருளும்—வளப்பமான செல்வமும்; உட்கும்—இவர் இத்தன்மையரென்று பலரும் அஞ்சத்தக்கபடியாக மதிப்போடு இருந்ததும்; [2]ஒருவழி—[முற்கூறிய அவையெல்லாம்] ஒருவற்கு;

---

[1]ஒள்பொருள்—ஒளியைத் தரவல்ல பொருள், மேலான செல்வம் என்றுமாம்.

[2]ஒருவழி—ஒரேதன்மையாக என்றுமாம்.

நில்லாமை—[ஒருபிறப்பின்கண்ணே] ஒருமைப்பட்டு நில்லாது; கண்டும்—கெடுதலறிந்திருந்தும்; ஒருவழி—இவைகள் ஒன்றி னுக்கும் முற்பிறப்பிற் றவம்பண்ணாமற் பிறந்து இப்பிறப்பிலும்; ஒன்றேயும்—அதனையறிந்து மறுமைக்குறுதியான நன்மைக ளொன்றினையும்; இல்லாதான்—செய்யாது உயிர் வாழ்பவன்; வாழ்க்கை—வாழ்க்கையானது; உடம்பு இட்டு நின்று—சிலநாள் உடம்பெடுத்து நின்று; வீழ்ந்தக்கது உடைந்து—[அந்தவுடம்பால் அனுபவிக்கும் பயனொன்றுங் கொள்ளாது] விழுந்துபோந் தன்மையுடைத்து என்றவாறு.

முன்செய்த தீவினையால் அல்லவோ இப்படிக் கெடுத லென்று விசாரித்து, மேலைக்குறுதியான நல்வினையைச் செய் யாது வீணிலே இவ்யாக்கை விழுந்துபோவது. முன்தீவினைப் பொருட்டென்று ஊழின துவலி யுணர்த்தியவாறு.

பதுமனார்:— உருவு முதலாகிய நான்கும் ஒருவர்மாட்டு நில்லாமை கண்டுவைத்தும், இவை ஒருங்கு நில்லாமை முற் பிறப்பின்கண் நல்வினை நிரம்பச் செய்யாமையான் வந்தபயன் என்பதறியாது, ஒருபிறப்பின்கண் நல்வினை யொன்றாயினுஞ் செய்யாதான் உளனாய் வாழ்கின்ற வாழ்க்கை, சிலநாள் உளதாய்(ப்பின்) தன்னுடம்பினைவிட்டுச் சாதற்றன்மையை உடைத்தென்றவாறு.

உட்கும்—மேம்பாடுடைமையாற் பிறர்கூசுதல். ஒருவழி நில்லாமை கண்டும்—ஒருவர்மாட்டு ஒருவழிப்பட நில்லாமை முற்பிறப்பில் வினையென்றறிந்து. ஒருவழி—ஒருபிறப்பிலும். ஒன்றேயும் இல்லாதான் வாழ்க்கை உடம்பிட்டுநின்று வீழ்ந்தக்க துடைத்து—ஒரு நல்வினையுஞ் செய்யாதான் உயிர்வாழ்க்கை சிலநாள் உடம்பெடுத்து நின்றவளவினனாய்ப் பின்னொழிவுற வீழத்தக்கதுடைத்து. உடம்பிட்டு என்றது சுவரிட்டுக் கிடந்தது; சுவரெடுத்து நின்றதென்றாற் போலக் கொள்க.

விளக்க உரை:— உருவும்—வடிவழகும்; இளமையும்—;

ஒண்பொருளும்—(மேலான) செல்வமும்; உட்கும்—இவர் இத் தன்மையரென்று பலரும் அஞ்சத்தக்க மதிப்பும்; ஒருவழி—ஒரு பிறப்பின்கண்ணே; நில்லாமை கண்டும்—; ஒருவழி ஒன்றேயும்-இவை ஒன்றினுக்கும் முற்பிறப்பிற் றவம் பண்ணாமல் பிறந்து இப்பிறப்பினும் அதனையறிந்து மறுமைக் குறுதியான தன்மங்களொன்றினையும்; இல்லாதான் வாழ்க்கை—செய்யாமல் உயிர்வாழ்பவன் வாழ்க்கை; உடம்புஇட்டுநின்று—சில நாள் உடம்பெடுத்து நின்று; வீழ்ந்தக்கது உடைத்து— [இந்த உடம்பாலாய பயன்கொள்ளாமல்] வீழ்ந்துபோந் தன்மை யுடைத்து என்றவாறு.

பொழிப்புரைப்படி:—

உருவு முதலாயின நாலும் ஒருவர்மாட்டு இவை †.........என்றாற் போலக் கொள்க.

ஒப்புமைப் பகுதி:—

"இளமையுங் காமமு நின்பாணி நில்லா........
கடைநா ளிதுவென் றறிந்தாரு மில்லை.......
கூற்றமு மூப்பு மறந்தாரோடு ஓராஅங்கு"
—கலி. 12: 12-18.

"கூற்றூழ்போற குறைபடூஉம் வாழ்நாளு நிலையுமோ"
—கலி. 17: 12.

"யாறுநீர் கழிந்தன்ன விளமை"
—கலி. 20: 13.

"இளமையு மெழிலும் வானத் திருவில்லி னீண்டைமாயும்"
—மேருமந்தரம். 109.

"இளமையு நிலையாவா லின்பமு நின்ற வல்ல
வளமையு மஃதேயால் வைகலுந் துன்ப வெள்ளம்

†பதுமனார் உரையில் கண்டுகொள்க.

உளவென நினையாதே செல்கதிக் கென்று மொன்று
விளைநில னுழுவார்போல வித்துநீர் செய்து
கொண்மின்".—வளையாபதி.

குறிப்பு:-

உரு—கண்டார் விரும்புந் தோற்றப் பொலிவு (குறள்.684.)

†வீழ்ம் என்ற எதிர்காலப் பெயரெச்சம் ஈற்றுயிர் மெய் கெட்டு நின்றது. தக்கது என்பது குணத்தை யுணர்த்துந் தொழிற்பெயர்; தகை; தகுதி என்பனபோல.

(உ).

103. [1]உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா
பெறற்பால் அனையவும் அன்னவா மாரி
வறப்பில் தருவாரும் இல்லை அதனைச்
சிறப்பில் தணிப்பாரும் இல்.

தருமர்:—என்பது. மாரி—மழை; வறப்பில்—மறுத்த காலத்தில்; தருவாரும்—அதனைப் பெய்விப்பாரும்; இல்லை—; சிறப்பில்—மழை (மிகப்) பெய்யுங்காலத்து; அதனை—(அம் மழையை),தணிப்பாரும் இல்—பெய்யாது நிறுத்தாவாருமில்லை; [அவைபோல்] உறல்பால்—தாம் அனுபவிக்கும் பகுதியான; தீவினைகளை; நீக்கல்—நீக்குதல்; உறுவர்க்கும் ஆகா—தபோதனராலும் ஆகாது; பெறல்பால்—பெறும்பகுதியான; அனையவும்—நல்வினைப்பயனும்; அன்னவாம்—அத்தன்மை யாயிருக்கும் என்றவாறு.

மாரி மறுத்தவிடத்துப் பெய்விப்பார் இல்லையோவெனில்; மழைகாலத்திலே நா(ட்)கோளின் பொல்லாங்காலே மழை

---

[1]பழவினையின் மூன்றாம் செய்யுளாக 'வளம்பட' என்பதனைப் பதுமனார் வைத்தார் தருமரும், விளக்கவுரைகாரரும் ஏழாம் செய்யுளாகக் கொண்டனர்.

நிலையானவிடத்தில், அதற்கான சாந்திசெபங்கள் செய்வித்து அப்பொல்லாங்குகளை நீக்குவதன்றி, காலமல்லாத வேளை யிலே மாரிகாலம்போல மழையைப் பெய்விப்பாரில்லை என்பது தோன்ற, 'வறப்பிற் றருவாருமில்லை' யென்றார். ஆதலால் தா(ன்) முன்செய்த நல்வினை தீவினை இரண்டும் இவ்வாறே பலிப்பதன்றி அதனை நீக்குதல், தபோதனராலும் ஆகாதென்று ஊழினது வலி கூறியவாறு.

பதுமனார்:—மாரி வறந்தகாலத்து அதனைத் தரவல்லாரு மில்லை. அம்மாரி மிக்க காலத்து அதனைத் தணிக்கவல்லாரு மில்லை. அதுபோல துன்பமுறற்பாலவற்றை நீக்குதல் அருந்த வர்க்கும் இயலா. இன்பம் பெறற்பாலனவும் அத்தன்மையாம் என்றவாறு.

முன்பு செய்த தீவினையான்வருந் துன்பங்களை நீங்குதல் அருந்தவர்க்கும் இயலா. நல்வினையான்வரும் இன்பங்களும், அத்தன்மைத்தாகும். உலகஞ்செய்த நல்வினையும் தீவினை யும் பலிக்குங்காலத்து, மாரியுந் தன்னியல்பாகி வறத்தல் சிறத் தல் செய்யினல்லது, வேறு மாரிபோல் நீரைத்தருவாரும் தவிர்ப் பாரும் இல்லை யென்பதாம். மர முதலாகிய விளைவனவுந் தம்மியல்பாகிப் பலிக்க நல்வினை செய்தார்க்கு நுகர்ச்சியானாற் போல. அல்லதூஉம் மாரியானதுந் துன்ப முயற்சியான செய் கையால், உலகத்துக்குப் பருவங் குறித்துங் குறியாதும் வழங்கு தலால், அதற்குந் தன்செய்கையால் உண்டாவதல்லது; மாரி தனக்கு வறப்பிற்றருவாரும் சிறப்பிற் றணிப்பாரும் இல்லை யென்று, மாரியின் மேலே செலுத்துதலுமாம்.

விளக்க உரை:— உறல் பால—உறும் பகுதியான தீவினை யின் பயன்களான துன்பங்களை; நீக்கல்—நீக்குதல்; உறுவர்க் கும் ஆகா—அருந்தவர்க்கும் இயலா; பெறல்பால் அனையவும்— இன்பம் பெறற்பாலனவும்; அன்னவாம்— அத்தன்மையாம்; [அதெப்படியென்னில்] மாரி—மழை; வறப்பில்— மறுத்த காலத்து; தருவாரும்—அதனைப் பெய்விப்பாரும்; இல்லை—த்

சிறப்பில் —மழை பெய்யுங்காலத்து; அதனை—; தணிப்பாரும் இல்—பெய்யாமல் நிறுத்தவல்லாரும் இல்லை யென்பதுபோலும் என்றவாறு.

மேற்கோள் பகுதி:

நச்.
சேனா.
இ-வி
:—'மன்னாப் பொருளு மன்ன வியற்றே, என்ற சூத்திரத்திற்கு, "உறற்பால நீக்க லுறுவர்க்கு மாகா" என்பதை மேற்கோள்காட்டி, இல்லாப் பொருள்கள் எச்சவும்மை பெற்றுவரும் என்றனர்.

—தொல். சொல். சூ. 34.
—தொல். சொல். சூ. 34.
—இ. வி. சூ. 315.

அடியார்க்கு நல்லார்:— "இட்ட வித்தின் எதிர்வந் தெய்தி, யொட்டுங்கலை யொழிக்கவு மொண்ணா" என்றவடிக்கு உரை கூறுமிடத்து, "உறற்பால ...... தணிப்பாருமில்" என்றாராகலின், தீவினை தன்னையே கூறினுமமையும்" என்பர்.

—சிலப். 10: 171-172.

ஒப்புமைப் பகுதி:

"உறற்பால, தீண்டா விடுத லரிது".

—நாலடி. 109.

"உறற்பால யார்க்கு முறும்".

—நாலடி. 177.

"அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் தீங்குறுதல் காண்டுமால்—பொங்கி
அறைப்பாய் அருவி அணிமலை நாட!
உறற்பால யார்க்கு முறும்".

—பழ. 15.

"விழுமிய
வேண்டினும் வேண்டா விடினு முறற்பால
தீண்டா விடுத லரிது".

—பழ. 62.

"எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்".

—குறள். 207.

"செய்ததன் பயம் பற்று விடாது"

—கலி. 59:23.

"சூள்வாய்த்த மனத்தவன் வினைபொய்ப்பின் மற்றவன்
வாள்வாய் நன்றாயினும் அஃதெறியாது விடாதேகாண்"

—கலி. 149. 10-11.

"தாமீட்டு அருவினைகள் தண்டா"

—இன்னிலை. 7.

"ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும்"

—சிலப். பதிக. 57.

"இட்ட வித்தின் எதிர்ந்துவந் தெய்தி
ஒட்டுங் காலை யொழிக்கவும் ஒண்ணா"

—சிலப் 10:172-173.

"உம்மை வினைவந்து உருத்தல் ஒழியாது"

—மணி. வஞ்சி. 32.

"வினைகளின் விளைவை யாவர் விலக்குநர் என்று
நின்றான்"

—யசோத. 144.

"வெல்வதற் கரிதால் வினையின் பயன்"

—யசோத. 170.

"உயிர்புகும் சட்டகம் உழிதொறும் உழிதொறும்
பழவினை புகுந்த பாடகம் போல"

—கல்லா. 11:1-2.

"ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது"

—இறை. சூ. 2. உரை.

"அம்புலியையும் அரவு விழுங்கும், வருவது வழியில்
நிற்காது".

—பழமொழி.

குறிப்பு:-

உறல், பெறல் என்ற இரண்டும் முறையே துன்பத்தையும், இன்பத்தையும் குறித்தற்குரிய வினைகள்; ஊறு, பேறு என்பதும் காண்க. வறப்பு, சிறப்பு என்ற தொழிற்பெயர்கள் ஈண்டு அவ்வக்காலத்தின்மேல் நின்றன. மழை பொய்த்தால் அதனைப் பெய்வித்தல் எவர்க்கும் இயலா. மற்று மிகுதியாகப் பெய்யுமிடத்தும் அதனைத் தவிர்ப்பதற்கும் ஒருவராலும் இயலாது. அதுபோல ஒருவற்கு தீவினையால் வந்துகூடும்படியான துன்பங்களையும், நல்வினையால் அவற்கு வரத்தக்க இன்பங்களையும் தடுத்தல் முனிவர்களாலும் ஆகமாட்டா என்பதாம். இனி வேறு சிலர் இச்செய்யுளை எதிர்நிரனிறைப் பொருள் கோளாகக் கொண்டு 'பெறல்பால் அனையவும் அன்னவாம்' என்பதற்குப் 'பெறத்தக்க தன்மையையுடைய இன்பங்களைப் பெறுதல்களும் முனிவர்களாலும் தரமுடியாதெனவாம்' எனப் பொருளுரைப்பர்.

104. திணைத்துணையர் ஆகித்தந் தேசுள் ளடக்கிப்
பனைத்துணையார் வைகலும் பாடழிந்து வாழ்வர்
நினைப்பக் கிடந்தது எவனுண்டாம்? மேலை
வினைப்பயன் அல்லாற் பிற.

தருமர்:—என்பது. பனைத்துணையார்—பனைத்துணையராகிப் பெருமை பெற்றிருந்தவரும்; வைகலும்—(நாள்தோறும்); பாடு அழிந்து—தம்பெருமை யழிந்து; திணைத்துணையராகி—தினையளவாகக் குன்றி; தம்[1]தேசு—தமது தேசாகிய (மகிமையை); உள் அடக்கி-(உள்ளே அடக்கிக்கொண்டு); வாழ்வர்-உயிர் வாழா நிற்பர்; மேலை வினைப்பயன் அல்லால்—முன் செய்த தீவினைப்பயன் அல்லாது; பிற-மற்றொன்று; நினைப்ப—விசாரிக்க; கிடந்தது—தக்கது; எவன் உண்டாம்; (யாது உளதாம்); வேறொன்றுமில்லை என்றவாறு.

---

[1]தேசு—புகழ்; 'திருவுந் தேசு நோக்குமின்' (சீவக.771-ந.)

மிகுதியான மகத்துவத்தை யடைந்தபேரையும் அத்தன்மை யாக்கியது ஊழல்லால், மற்றொன்றும் இல்லையென அதன் திறங் கூறியவாறு.

பதுமனார்:— பனையளவினையுடையார் தினையளவினை யுடையராய்த் தமதொளியினை யுள்ளடக்கி, நாடோறும் பாட ழிந்து வாழாநிற்பர். முன்செய்த தீவினையின் பயனன்றி, இத னைக் கண்டு வேறொரு காரணம் ஆராயக்கிடந்தது என்னுண் டாம்? என்றவாறு.

தேசு—ஒளி. பாடு அழிந்து வாழ்வர்—தம் பெருமையழிந்து வாழ்வர். நினைப்ப—ஆராய. செல்வ முதலாயினவுளவாக நல் வினை யுளவாயினும், அவற்றா னுகர்தற்கும் நல்வினை வேண்டுமென்பதாம்.

விளக்க உரை:— பனைத்துணையார் - பனையள வினை யுடையார்; வைகலும்—நாள்தோறும்; பாடு அழிந்து—பெருமை யழிந்து; தினைத்துணையர் ஆகி—தினையளவினையுடையவ ராய்; தம்தேசு-தமதொளியை; உள்ளடக்கி—; வாழ்வர்-(உயிர் வாழா நிற்பர்); மேலை வினைப்பயன் அல்லால் -முன்செய்த தீவினைப்பயனன்றியே; பிற—வேறொன்று; நினைப்பக்கிடந் தது; இதனைக் கண்டு காரணமாராயக் கிடந்தது; எவன் உண்டாம்? என் உண்டாம்? [வேறொன்றுமில்லை] என்ற வாறு.

குறிப்பு:-

'தினை,பனை என்பன சிறுமை பெருமைகட்குக் காட்டுவன சில அளவை' என்பர் பரிமேலழகர் (குறள். 104.) மேலை என்பது ஐயீற்றுப் பண்பாகு பெயர். பழவினையின் பயனாய் பனைத்துணையாரும் விரைவிலே அவ்வுயர்ச்சியினின்றும் தாழ்ந்து ஒளி குன்றி வாழ்வர் என்றார்.

(௬).

105. **பல்லான்ற கேள்விப் பயனுணர்வார் வீயவுங்**
கல்லாதார் வாழ்வது அறிதிரேற்—கல்லாதார்
சேதனம் என்னுமச் சேறகத்து இன்மையாற்
கோதென்று கொள்ளாதாங் கூற்று.

தருமர்:—என்பது. பல் ஆன்ற—பலவாகி யகன்ற; கேள்விப் பயன் உணர்வார்—நன்னூல் பயன்களிலே கேள்விப்பட்டு அமைந்தோர்; வீயவும்—இறக்கவும்; கல்லாதார்—கல்வியில்லாதார்; வாழ்வது—உலகில் வாழ்வது; அறிதிரேல்—யாதோவெனில்; கல்லாதார்—கல்லாதாரிடத்து; [1]சேதனம் என்னும்—அறிவு என்னும்; அச் சேறு—(அந்தமது)ரபாகம்; அகத்து இன்மையால்—மனத்து இன்மையாலே; கூற்று—(கூற்றம்); கோதுஎன்று—அவரைக் கோதென்று (கருதி); கொள்ளாதாம்—கொள்ளாது போனதுபோலும் என்றவாறு.

சாரமுண்டானவற்றை யல்லவோ யாவரும் போசிப்பது. அசாரமானதைப் போசிப்பார் இல்லையே. அதுபோல அவரையுங் கூற்று உண்ணாதுபோனாற்போல் இருந்ததென்று உவமை கூறியது. (இது) பழவினையான தெப்படியென்னில் அனேக தவம்பண்ணி மானிடயாக்கை எடுக்க வேண்டுமாகையால், கல்லாதவன் இந்த உடம்பு எடுத்தற்கும் புருடாயுளுக்குந் தவம்பண்ணி, கல்விக்குத்தவம் பண்ணினவன் அல்லவென்பதும், இறந்தவன் கல்விக்கும் உடம்பெடுத்தற்குந் தவம்பண்ணிப் புருடாயுளுக்குத் தவம் பண்ணினான் இல்லையென்பதும்; பழவினைப்பயன் பலிக்குமாதலால் இவையிரண்டுக்கும் நிரம்பத் தவம்பண்ண வேண்டுமென்று, ஊழினதுதிறம் உணர்த்தியவாறு.

பதுமனார்:— நிரம்பிய பலகேள்வியான் வரும்பயனையுணரும் நல்லார் இறக்கவும், கல்லாதார் நெடுநாள் வாழவும்

---

[1]சேதனம்—சைதனியம். சைதனியம்—அறிவு; 'சுத்தான்ம சைதனியமே தனக்குச் சொருபமாகக் கொண்டு (சி.போ. 8,2)

காரணமறிதிரேல், கல்லாதார் மனத்திற் சேதனமென்னும் மதுரமில்லாமையால், அவரைக் கோதென்று கருதிக் கூற்று கொள்ளாதது போலும் என்றவாறு.

வீயவும்—இறக்கவும். சேதனம்—அறிவு. சேறு—சாரம் என்பது. கல்வியுண்டாக நல்வினையும், அது கொண்டு பயன் கொள்ளாமல் இறந்தது தீவினையும் பலித்ததாம்.

விளக்க உரை:— பல் ஆன்ற—பலவும் கற்றமைந்த; கேள்விப்பயன்—கேள்வியான் வரும் பயனை; உணர்வார்—அறிந்த அறிவினையுடையார்; வீயவும்—இறக்கவும்; கல்லாதார்-; வாழ்வது—நெடுநாள் உயிர்வாழ்தல்; அறிதிர் ஏல்—யாதோ வென்னில், கல்லாதார்—கல்லாதவர்க்கு; சேதனம் என்னும்—அறிவென்னும்; அச்சேறு—(அச்)சாரம்; அகத்து—(மனத்தில்); இன்மையால்—இல்லாமையால்; கூற்று—கூற்றம்; கோது என்று—(அவரைக் கோதென்று கருதி); கொள்ளாதாம்—கொள்ளாததுபோலும் என்றவாறு.

இது பழவினையான தெப்படியென்னில், அனேகந் தவம் பண்ணி இந்த மானிடப்பிறப்புப் பெறவேண்டுமாகையினால், உடம்பு எடுத்தற்குத் தவம்பண்ணிக் கல்விக்குத் தவம் பண்ணினாரில்லை யென்பதும், இறந்தவன் புருடாயுளுக்குத் தவம் பண்ணாமல் கல்விக்குத் தவம் பண்ணினா னென்பதும் இப்படிப் பழவினைப்பயன் பலிக்குமாதலால் தன்மங்களை இவை இரண்டிற்கும் நிரம்பச் செய்யவேண்டு மென்பதாம்.

ஒப்புமைப் பகுதி-:

'சேறு':-

"சேறு சேர் கனி"

—சூளா. சுயம். 66.

"சேறுபடு மலர்சிந்த விரைந்தே"

—சீவக. 426.

''சேறுபடு கோதை''

—சீவக. 2019.

''கரும்பின் றீஞ்சேறு''

—பதிற்றுப். 75: 6.

'கோது':—

''கோதுபோற் போகு முடம்பு''

—நாலடி., 34.

''கோது செய்குணக் கோதினுட் கோதனான்''

—சீவக. 240.

குறிப்பு:-

நிரம்பிய பலகேள்வியானாய பயனைப்பெற்ற அறிவினை யுடையார் விரைவி லிறத்தலுக்கும், கல்லாதார் நெடுநாள் வாழ்தலுக்கும் காரணம் கற்பித்துக் கூறினமையின் இச் செய்யுள் 'ஏது தற்குறிப்பேற்ற வணி'.

(ரு).

106. இடும்பைகூர் நெஞ்சத்தா ரெல்லாருங் காண
நெடுங்கடை நின்றுழல்வ தெல்லாம்—அடம்பம்பூ
அன்னங் கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப!
முன்னை வினையாய் விடும்.

தருமர்:— என்பது. அடம்பம்பூ—அடம்பம்பூவை; அன்னம் கிழிக்கும்—அன்னங்கிழித்து விளையாடும்; அலைகடல்—அலை பொருந்திய கட(லினது); தண் சேர்ப்ப!— (குளிர்ந்த) சேர்ப்பையுடையவனே!; இடும்பைகூர்—பொல்லாங்குக்கு உடன் பட்ட; நெஞ்சத்தார்—மனத்தராகி; எல்லாரும் காண—எல்லாரு மறியும்படி; நெடும்கடை — உயர்ந்த வாயில்கள் தோறும்; நின்று—சென்று இரந்து அவர் கரவினால் மனநொ(ய்ம்மை)யிற் நின்று உயிர்த்து; உழல்வதெல்லாம்—மற்றுள்ள வாயில்களிற் சென்று அலைவதெல்லாம் யாதோவெனில்; முன்னை வினை

யாய் விடும் - இவை முன்செய் தீவினைப்பயனால் எய்தியதென்னப் படுமென்றவாறு.

தமக்கு மறுமைக்கு வேண்டியவற்றைச் செய்துகொள்ளாரை ஊழ்வினையானது இப்படி செய்யுமென்று அறிவுறுத்தியது.

பதுமனார்:— அடம்பம்பூ அன்னங் கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்பனே! துன்பமிக்க மனமுடையார் யாவருங்காணச் செல்வமுடைய பிறர்வாயினின்று, துன்பம் உழப்பதெல்லாம் பழவினைப் பயனாய் விடுமென்றவாறு.

விளக்க உரை:— அடம்பம்பூ — அடம்பம்பூவை; அன்னம் கிழிக்கும்—அன்னம் கிழித்து விளையாடும்; அலை— (அலைகளையுடைய); தண் —(குளிர்ந்த); கடல் —(சமுத்திரத்தினது; சேர்ப்! —(கரையையுடையவனே!); இடும்பைகூர் — இடும்பை மிக்க; நெஞ்சத்தார்—நெஞ்சினையுடையார்; எல்லாரும் காண —எல்லாரும் அறிய, நெடும்கடை—உயர்ந்த வாசல்கள் தோறும்; நின்று—இரந்து (நின்று); உழல்வது எல்லாம்—திரிவதெல்லாம் யாதோவென்னில்; முன்னை வினையாய்விடும் — முன்செய்த தீவினைப்பயனாக விடுமென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

> "அகத்தாரே வாழ்வாரென்று அண்ணாந்து நோக்கிப்
> புகத்தாம் பெறாஅர் புறங்கடை பற்றி
> மிகத்தாம் வருந்தி யிருப்பரே மேலைத்
> தவத்தால் தவஞ்செய்யா தார்". —நாலடி. 31.

குறிப்பு:—

உழல்வது என்னுந் தொழில், உழல்வதெல்லாம் எனப் பன்மையால் கூறியது ஒருமைப்பன்மை மயக்கம். நெடுங்கடை

என்பதற்கு நெடுங்காலம் என்று பொருள் கொள்ளலும் உண்டு. மனிதர்க்கு வகுத்த வயது நூறு என்பதனான் நெடுங்கடை எனப்பட்டது என்பர். அடம்பு. கொடியடம்பு, மரஅடம்பு என இருவகைப்படும். ஈண்டு அது மரஅடம்பைக் குறித்தது.

(சூ).

107. வளம்பட வேண்டாதார் யார்? யாரும் இல்லை
அளந்தன போகம் அவரவர் ஆற்றான்
விளங்காய் திரட்டினார் இல்லைக் களங்கனியைக்
காரெனச் செய்தாரும் இல்.

தருமர்:— என்பது. வளம்பட—செல்வமுண்டாக; வேண்டாதார் யார்?—வேண்டாதார் யாவர்?; யாரும் இல்லை—ஒருவருமில்லை; [வேண்டி முயலினும்] விளங்காய்—விளவின் காயை; திரட்டினார் இல்லை—ஒருவர் திரளச் செய்தவருமில்லை; களங்கனியை—களவின் கனியை; கார்என—கறுப்பாக; செய்தாரும் இல்—செய்தவருமில்லை; [அவைபோல] அவர் அவர் ஆற்றான்—அவரவர்செய்த தவத்துக்குத் தக்கது; போகம்—நுகர்ச்சிகளும்; அளந்தன—கற்பித்துக் கிடந்தன என்றவாறு.

உலகிலுள்ளோர் அனைவருஞ் செல்வத்தை விரும்பினாராயினும், முன்செய்த வினைப்பயன் அவரவர்க்கு எய்துவதன்றி விரும்பியவாறு எய்தாதென்று ஊழ்வினையின் திறம் (கூறி) விளங்காய்தானாகத் திரண்டதுபோலும், களவின்கனி தானாகக் கறுப்பானதுபோலும் தன்னைச்செய்தவரையே அனுபவிக்கப் படுத்தும் என்பதாயிற்று.

பதுமனார்:— தமக்குச் செல்வமுண்டாக வேண்டாதார் யாவர்? மற்றுயாவருமில்லை. விளவின் காயினைத் திரளாகச் செய்தாருமில்லை. களவின் பழத்தைக் கறுக்கச் செய்தாருமில்லை. அதுபோல அவரவர் முன்செய்த வினைநெறியானே அவரவர்க்கு நுகர்ச்சிகள் அளந்து கிடந்தன என்றவாறு.

வளம்பட—செல்வமுண்டாக. அளந்தன போகம் அவரவ ராற்றான்—முற்பிறப்பிலவரவர் செய்த நெறியாலே நுகர்ச்சிகள் அளந்து கிடந்தன. 'விளங்காய் ....செய்தாருமில்' என்பது முன்பு இடப்பட்ட விதைவழியே பின்பும் அப்படி பலித்ததல்லது திரளவுங் கறுக்கவுஞ் செய்தாரில்லை யென்பதாம்.

விளக்க உரை:— வளம்பட வேண்டாதார்—செல்வம் வேண்டுமென்று கருதார்; யார்?—யாவர்?; யாரும் இல்லை—மற்று யாவருமில்லை; [வேண்டி முயலினும்] விளங்காய்– விளங் கனியை; திரட்டினார் இல்லை—திரளச்செய்து வைத்தாரு மில்லை; களங்கனியை—; கார் எனச்செய்தாரும் கறுக்கச்செய்தா ரும்; இல்—இல்லை; [அவைபோல] அவரவர் ஆற்றான் அவர வர் செய்த தவத்துக்குத் தக்கது; போகம்—நுகர்ச்சிகளும்; அளந்தன—கற்பித்துக் கிடந்தன என்றவாறு.

முன்பு இட்ட விதைவழியே பின்பும் அப்படிப் பலித்த தல்லது திரளவுங் கறுக்கவுஞ் செய்தாரில்லை.

மேற்கோள் பகுதி:—

நச்:— உயிர்மெய்க்கு அளவு கூறுகின்றவிடத்து "பொருட் பெற்றியென்று கொள்வதல்லது காரணங் கூறலாகாமை உணர்க. ஆசிரியர் ஆணை என்பாருமுளர். 'விளங்காய்...... செய்தாருமில்' என்பதே காட்டினார் உரையாசிரியரும்" என்று உரை கூறிப் போவர்.

—தொல். எழுத். சூ. 10.

இளம்:— "வளம்பட...........செய்தாருமில்: இது, நான் கடியாய் மூன்றாம் அடி இறுதி, தனிச்சொற்பெற்று வருதலின் நேரிசைப் பாற்படும்"

—தொல். செய். சூ. 113.

யா. கா.:— அளவடியானும் செப்பலோசையானும் வந்த வெண்பாவுக்கு இச்செய்யுள் எடுத்துக்காட்டு.

—சூ. 22.

இ—வி:—அங்கும் இதற்கே எடுத்துக்காட்டு.

- சூ.721.

யா—கா:—மூன்றாமடியின் இறுதி தனிச்சொற் பெற்று இரண்டு விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்கு இச் செய்யுள் எடுத்துக்காட்டு.

—சூ.24.

யா—வி:—பலவிகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பா விற்கு எடுத்துக்காட்டு.

—சூ.61.

வீர:—"இனி, வெண்பாப்போலியாவது இவ்விலக்கணங் களான் மிக்கும் குறைந்தும் இதுவேபோல வரும்; வரலாறு: 'வளம்பட ....செய்தாருமில்' இது, நடுவு தனிச்சொலின்றி மூன்றாமடி குறைந்து நான்கடியாய்ப் பதினைந்து சீராய் வந்தது". —வீர.யாப்பு.சூ.21.

சிவஞானபோதமா:—"வளம்பட வேண்டாதார் யார்யாரு மில்லை: என்னுமுறையானே முடவன் மலையிற்றேனை அவாவி வாயூறினாற்போல".

—சூ.6.அதிகரணம்.2.வெண்பா.5.

சமயதிவாகர முனிவர்:—"இல்லை என்பது 'இல்' என நின்றது; 'காரெனச் செய்தாரு மில்' என்றாற்போல".

—நீலகேசி.மொக்கல.101.உரை.

ஒப்புமைப் பகுதி:—

"வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி
தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது".

—குறள்.377.

"அளந்துதாங் கொண்டு காத்த வருந்தவ முடைய நீரார்க்கு
அளந்தன போகம் எல்லாம் அவரவர்க்கு அற்றை நாளே
அளந்தன வாழு நாளும்".

—சீவக.213.

"தந்தம்
விதியின் பயனே பயன்".

—மூதுரை.19.

"தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பார்
பூந்தா மரையோன் பொறிவழியே.

—நல்வழி.30.

குறிப்பு:-

அளந்தன என்பது செயப்பாட்டுவினைப் பொருளில் வந்த செய்வினையாகக் கொள்வர் சிலர். விளங்காயும், களங்கனியும் தம் தம் இயற்கையால் உருண்டை வடிவமாகவும் கரியநிறமாக வும் அமைந்து கிடந்தன. அவை பிறர்செயலால் நிகழ்ந்தன அல்லாததுபோலவே, நுகரும் இன்பங்களும் அவரவர் முன் செய்த வினைக்கீடாக அளவிடப்பட்டுக் கிடந்தன என்பதாம். இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமை யணி.

(எ)

108. அறியாரும் அல்லர் அறிவது அறிந்தும்
பழியோடு பட்டவை செய்தல் [1]கழியோடி
நெய்தல் நறவுயிர்க்கும் [2]நீள்கடல் தண்சேர்ப்ப!
செய்த வினையான் வரும்.

தருமர்:—என்பது. கழிஓடி—கழியின்வழியே காற்றோடி; நெய்தல்—நெய்தற்பூ; நறவு உயிர்க்கும்—மணங்கமழா நிற்கும்; நீள்கடல் தண்சேர்ப்ப!—குளிர்ச்சி பொருந்திய விரிந்த கடற் சேர்ப்பையுடையவனே!; அறிவது—நன்னூல்களை; அறியாரும் அல்லர்—கற்றறியாதவருமல்லர்; அறிந்தும்–அறியத்தக்க நூலின்

பா-ம்:—1. [1]'வழியோடி'—பதுமனாரும், விளக்க உரையும்;
2. 'வளியோடி'. [2]'நீள்கழித் தண்சேர்ப்ப'—பதுமனாரும், விளக்க உரையும்.

பயன்களை யாராய்ந்தறிந்திருந்தும்; பழியோடுபட் —பழிப் புரை யெய்தும்படி(யான) சில காரியங்களை; செய்தல் —சிலர் செய்வது; செய்த வினையான் வரும்—முன்செய்த தீவினைப் பயனால் வருமென்றவாறு.

மிகுந்த அறிவினையுடையாராயினும் முன் செய்த தீவினை யானது வந்து, அந்த அறிவை மருளவைத்து அறிவில்லாராக்கி அவர்க்குப் பழிப்புரையெய்துந் தொழில்களைச் செய்விக்குமென ஊழினது வலி கூறியவாறு.

பதுமனார்:— (காற்றின்) வழியோடி நெய்தல் நறவு பிறரால் உயிர்க்கப்படு நீள்கழித் தண்சேர்ப்பனே! அறியா தாரும் அல்லர். அறியத்தக்க நூல்களையறிந்தும் பழியோடு கூடிய காரியங்களைச் சிலர் செய்தல் முன்னஞ்செய்த (தீ)வினை யால் வருமென்றவாறு.

[அறியாரும்—அறிந்தும்] இயற்கையறிவால் தாமறியாரும் அல்லர்; அறியக்கூடிய நூல்களை யறிந்தும். வழியோடி நெய்தல் நறவு உயிர்க்கும்—காற்றுவழியோடி நெய்தல் நறவு நாறும். செய்த வினையால் வருதலாவது:— மக்கட் பிறப்பும் அறிவும் உளவாகவும் அறிவிற்குப் பொருந்தாத தீயவைசெய்தல், முற்பிறப்பிற் கொலைத்தொழிலே யியல்பாகிச் செறிந்தவாதனை யால் வருதல் செய்தவினை.

விளக்க உரை:—வழிஓடி—காற்றுவழியேயோடி; நெய்தல்—நெய்தற்பூ; நறவு உயிர்க்கும்—மணங் கமழாநிற்கும்; நீள்கழித் தண்சேர்ப்பனே—நீண்ட கழியையுடைய (குளிர்ந்த) கடற் சேர்ப்பையுடையவனே!; அறிவது—அறியத்தக்க நூலின் பயன் களை; அறியாரும் அல்லர்—அறியாதாரும் அல்லர்; அறிந்தும்—அறிந்திருந்தும்; பழியோடுபட்டவை செய்தல்—பழியோடு கூடிய காரியங்களைச் சிலர் செய்தல்; செய்த வினையான் வரும்—முன்செய்த வினைப்பயனால் வருமென்றவாறு.

நறவு உயிர்க்கும்—நறவு நாறும். செய்த வினையால் வருதலாவதுர்..........செய்தல் வினை.

ஒப்புமைப் பகுதி:-

"நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்".

—குறள். 373.

"ஒழிகென வொழியாது ஊட்டும் வல்வினை"

—சிலப். 10:171.

"விதிவழி மதியெனப் புலந்தார்"

—திருவிளை. விருத்த. 10.

குறிப்பு:-

அறியாருமென்ற வும்மை இழிவுசிறப்பு. அறிந்துமென்ற உம்மை உயர்வு சிறப்பு. அறிவது—சாதியொருமை. ஓடி என்பது ஓடாநின்றென்னும் நிகழ்கால வினையெச்சத்திரிபு. நெய்தல் என்பது முதலாகுபெயராய் நெய்தற் பூவைக் குறித்தது. நீள்கடல்—வினைத்தொகைக் குறிப்பு. நறவு—நறா என்பதன் விகாரம். இச்செய்யுளின் முதலடி முற்றுமோனை.

(அ).

109. **ஈண்டுநீர் வையத்துள் எல்லாரும் [1]எத்துணையும்**
வேண்டார்மன் தீய [2]வினைப்பயன் நல்லதை
வேண்டினும் வேண்டா விடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது.

---

†பதுமனார் உரையைப் பார்க்க.

பா-ம்:—[1]'எட்டுணையும்'

[2]1. 'விழைப்பய னல்லவை'—புதுமனாரும் விளக்க உரையும். 2. 'விழைப்பய னல்லது'. 3. 'விழைபய னல்லவை'.

தருமர்:—என்பது. ஈண்டுநீர்—மிக்க கடல் சூழ்ந்த; வையத்துள்—பூமியிடத்து; எல்லாரும்—யாவரும்; எத்துணையும் —எவ்வளவும்; நல்லதை—நல்வினைப் பயன்களை விரும்பி யிருப்பாரல்லது; தியவினைப்பயன்—தீவினைப்பயனை; வேண் டார்— வேண்டுமென்று கருதார்; வேண்டினும் வேண்டாவிடினும் —அவர் விரும்பினாலும் விரும்பாதிருந்தாராயினும்; உறல்பால— [தாம் முன்பு செய்து இப்போது] உறும்பகுதியான நல்வினை தீவினைப்பயன்கள்; தீண்டாவிடுதல் அரிது—அனுபவியாமல் வெறுமனே போகாதென்றவாறு.

தாம் ஒன்று கருத வினையொன்று செய்யுமென்பது கருத்து.

பதுமனார்:—நிறைந்த நீர்சூழ்ந்த உலகத்துள் யாவரும், தமக்கெவ்வளவுந் தீயதுளவாய் வருந்திய துன்பங்களை வேண் டார். நல்லவையே வேண்டுவர். அவ்வின்பமுந் துன்பமும் அவரவர் விரும்பினும் விரும்பாவிடினும், உறற்பான்மையை யுடைய அவ்வினை யிரண்டும் உறாதுவிடுகை அரிதென்றவாறு.

ஈண்டுநீர்—பெருநீர். விழைபயன்—(வருந்திய துன்பங் களை). நல்லவை—(நல்வினைப் பயன்களை வேண்டுவர்). மன்—அசை. வேண்டினும் வேண்டாவிடினும்—நல்லவை வேண் டினும் தியவை வேண்டாவிடினும் தீண்டா விடுதல்—உறாது விடுதல்.

விளக்க உரை:—ஈண்டுநீர்—மிக்க கடல் சூழ்ந்த; வையத் துள்—பூமியிடத்து; எல்லாரும்—யாவரும்; எத்துணையும் —தமக்கு எவ்வளவும்; விழைபயன் நல்லவை—விரும்பத்தக்க நல்ல பயன்களை வேண்டியிருப்பாரல்லது; தீய—தீங்குகள்; வேண்டார்—வரவேண்டுமென்றிரா(ர்); வேண்டினும் வேண்டா விடினும்—அவர் விருப்பினாராயினும் விரும்பாதிருந்தாராயினும்; உறல்பால—உறும் பகுதியான தான்செய்த நல்வினை, தீவினை இரண்டும்; தீண்டாவிடுதல் அரிது—அனுபவியாமல் வெறுமனே போகாதென்றவாறு.

ஈண்டுநீர்—பெருநீர். மன்—அசை. வேண்டினும் வேண்டா விடினும்—நல்லவை வேண்டினும் தீயவைவேண்டாவிடினும்.

மேற்கோள் பகுதி:—

பரிமே:—"உறற்பால தீண்டாவிடுதலரிது—என்றாற்போல ஈண்டு அருமை இன்மைமேனின்றது".

—குறள். 7.

ஒப்புமைப் பகுதி:-

"உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா".

—நாலடி. 104.

"உறற்பால யார்க்கும் உறும்".

—நாலடி. 117.

"—விழுமிய
வேண்டினும் வேண்டாவிடினும் உறற்பால
தீண்டா விடுதல் அரிது".

—பழ. 62.

"எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென் றடும்".

—குறள். 207.

"பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்
சொரியினும் போகா தம".

—குறள். 376.

"திருவுறு கின்றுழி மகிழ்ந்துந் தீர்வுழிப்
பருவரல் எய்தியும் பாசந் தன்னிடை
அரிதுணர் கேள்வியர் அழுங்கு வார்கொலோ
வருவது வரும்து மறுக்க லாகுமோ".

—கந்த புராணம்.

குறிப்பு:—

ஈண்டு நீர்—பெருநீர்; ஆற்றுநீர், பெருநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் என இம்மூவகை நீராலுங்கூடிப் பெருகிய நீராக லான் அது ஈண்டு ஆகுபெயராய்க் கடலைக் குறித்தது. மன்—அசைநிலை.

(கூ).

110. சிறுகா பெருகா முறைபிறழ்ந்து வாரா
உறுகாலத்து ஊற்றாகா ஆமிடத்தே யாகுஞ்
சிறுகாலைப் பட்ட பொறியும் அதனால்
இறுகாலத்து என்னை? பரிவு.

தருமர்:—என்பது. சிறுகாலை—முற்பிறப்பில்; பட்ட—தான் செய்த; பொறியும்—நல்வினை, தீவினையிரண்டும்; சிறுகா பெருகா—சிறுகிப்பெருகி வாராது; முறைபிறழ்ந்து வாரா—முன் பின்னாகத் தடுமாறியும் வாராது; உறுகாலத்து—[தாம் இப் பிறப்பிற்] துன்பமுற்று வருந்தும்போது நல்வினையானது; ஊற்று ஆகா—ஊன்றுகோலாக உதவாது; ஆம் இடத்தே ஆகும்—அவர் முன்பு செய்தவாறே அனுபவிக்கப்படுத்தும்; அதனால்—ஆதலால்; இறுகாலத்து—தீவினை வருத்துங்காலத்து; பரிவது—அதற்குத் தாம் வருந்துவது; என்னை?—யாது? என்றவாறு.

தீவினைசெய்து நல்வினை செய்தால் தீவினைகெட்டு நல் வினையனுபவிப்பதில்லையென்பது தோன்ற, 'உறுகாலத்து ஊற்றாக' என்றார். நன்மை செய்தது, தீங்கு அனுபவிக்கும் வேளை வந்து உதவவேண்டாமோவெனில், எந்தக் காலத்திலே நல்வினைசெய்தான் அந்தக்காலத்திலேயன்றித் தீவினையை யனுபவிக்கும்வேளை வருதற்கு வலியில்லை. ஆதலால் தீவினை செய்யத்தகுவதல்லவென்று அதன்வலி கூறியவாறு.

பதுமனார்:- முற்காலத்துண்டாகிய நல்வினைகளுஞ்செய்த அளவிற் சிறுகா, பெருகுவதுஞ் செய்யா; முறைமை தடுமாறி

வாரா. துன்பமுறுங்காலத்து வந்து தாங்கா. ஆங்காலத்தும் அத்துணையே யாதலால் தீவினைப்பயத்தாற் கேடுவருங்காற் பரிவது என்னை? என்றவாறு.

உறுகாலத்து ஊற்றாக—துன்பமுறுங்காலத்து வந்துதவி யாகா. சிறுகாலைப்பட்ட பொறி—முற்காலத்துண்டாகிய வினை. இறுகாலத்து என்னை பரிவு—கேடு வருங்காலத்து இரங்குவது என்னை.

விளக்க உரை:- சிறுகாலை — முற்காலத்து; பட்ட—உண்டாகிய; பொறியும்—நல்வினைத்தீவினைப்பகுதிகள்; சிறுகா—சிறுகுவஞ்செய்யாது; பெருகா —பெருகுவதுஞ் செய்யாது; முறை பிறழ்ந்து வாரா —முறை தடுமாறியும் வாராது; உறு காலத்து—துன்பமுறுங்காலத்து; ஊற்று ஆகா—[தான் செய்த நல்வினைப் பயன்] வந்து ஊன்றுகோல் ஆகாது; ஆம் இடத்தே ஆகும்—நல்வினை நல்வினையாக அனுபவிக்கும், தீவினை தீவினையாக அனுப விக்கும்; அதனால்—ஆதலால்; இறுகாலத்து—[தாம் முற்பிறப்பிலே செய்த தீவினை இப்பிறப்பிலே வந்து] வருத்துங் காலத்து; பரிவது—அதற்கு வருந்துவது; என்னை?—யாதோ? என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

நச்:—''ஈண்டுக் கட்டுண்ணவேண்டும் பாவம் ஆண்டின்மை யுணர்க. பிறரும் இச்சமயத்தார், ''சிறுகா பெருகா முறை பிறழ்ந்து வாரா'' என்றதனாலுமுணர்க''.

—*சீவக.* 1089.

ஒப்புமைப் பகுதி:-

''சாதலும் பிறத்தல் தானுந் தம்வினைப் பயத்தின் ஆகும்
ஆதலும் அழிவும் எல்லாம் அவைபொருட்டு இயல்பு
கண்டாய்

நோதலும் பரிவும் எல்லாம் நுண்ணுணர் வின்மை யன்றே
பேதைநீ பெரிதும் பொல்லாய் பெய்வளைத் தோளி

யென்றான்.

—சீவக. 269.

"இன்பமது அடைந்த காலை யினிதென மகிழ்ச்சி செய்யார்
துன்பமது உற்றபோதுந் துண்ணெனத் துளங்கிச் சோரார்
இன்பமுந் துன்பந் தானும் இவ்வுடற்கு இயைந்த வென்றே
முன்புறு தொடர்பை யோர்வார் முழுவதும் உணர்ந்த
நீரார்."

—கந்த.

"வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந் தாநினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்".

—நல்வழி. 5.

'ஆமிடத்தே யாகுஞ்.....பொறியும்'......:—

"ஈண்டுங்கால் ஈண்டும்

மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்"

—நாலடி. 93.

"செல்வம்

தொகற்பால போழ்தே தொகும்".

—பழ. 120.

'இறுகாலத்து என்னை பரிவு' :—

"அன்றாங்கால்

அல்லற் படுவ தெவன்"

—குறள். 379.

குறிப்பு:—

ஊற்று—முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; ஊன்று என்னும் முதனிலைத் தல்விகுதி புணர்ந்து கெட்ட மாத்திரையில் ஊற்று என விகாரப்பட்டது. அது ஈண்டு தொழிலாகுபெயராய் ஊன்று

கோலை யுணர்த்திற்று. ஊழ்; ஆகூழ், போகூழ் என இரண்டா கலான் பன்மையாய்க் கூறப்பட்டது. பொறி—ஊழ்; பயனைத் தருவதாய விதி (குறள். 618).

(ய).

12. மெய்ம்மை.

தருமர்:- அஃதாவது உண்மை சொல்லுதல். அஃதெப் படியென்னில் நிலையாத யாக்கையைக் கருதிப் பொய்சொல் லில், முற்கூறிய விரதங்களுக்கு இடையூறாதலில் பொய் சொல்லா மையும், உலகத்தின் நடந்துவரும் இயற்கைகளினது உண்மை யுங் கூறியதாம்.

பதுமனார்:- அஃதாவது மெய்ம்மை கூறுவதே தமக்கு விரதமாக மேற்கொண்டு சொற்சோர்வு பிறவாமற் குறித்துக் கூறலும், இவ்வாறு தாஞ்சொல்லு மெய்ம்மையாலே பிறர்க்குத் தீவினைவரிற் பொருட்பகுதியென் றிவ்வகையுந் தம்விரதத்தை யும் நிருபித்து, அவர்க்கு அத்தீங்கு வாராத் திறத்தினோக்கி பரியாய வசனங்களாலே கூறலும், அங்ஙனந் தீராதவழித் தம் பிராணனை விட்டாயினும் அவ்விரு திறத்தையும் இரட்சிப்பது மாம். அவற்றுள் இவ்வுலகியலின் மெய்ம்மை கூறப்பட்டது.

இது அதன்பின் கூறியதென்னையெனின், எல்லாப் பொருட் குங் காரணமாகித் தம்மையும், தம்மாலறியப்படும் தத்துவங் களையும், பூதங்களுக்கு இதமாகிய வாய்மைகளையும் என்ன காரணத்தான் வந்ததென் றறிந்து துறவை நிலைபெறுதலானும், ஏனையோர்க்கும் வாய்மை சொல்ல வேண்டுதலானும், அவ் வுலகவியற்கையை மெய்யாக வறிந்தொழுகவே பழவினை அறிதலும் அக்கருத்தேபற்றி யென்பது.

விளக்க உரை:- அஃதாவது உண்மையே சொல்லுதல்.

அஃதெப்படியென்னில் பொய்சொல்லக் கடவோமல்லவென்னும் விரதத்துக்கழிவாதலில் நிலையாத உடம்பைக் கருதிப் பொய் சொல்லாமல் மறுமைக்குறுதியாகிய மெய் கூறுதலே தவமென்ற வாறு.

இந்தவதிகாரம் அங்ஙனின்று உலகத்துக்கு நடத்துமியற்கை யான உண்மையைச் சொன்னதாம்.

குறிப்பு:-

'வாய்மை':—

பரிமே:—அஃதாவது மெய்யினது தன்மை. பெரும் பான்மை யும் காமமும் பொருளும் பற்றி நிகழ்வதாய பொய்மையை விலக்கலின், இது கூடாவொழுக்கம் கள்ளாமைகளின் பின் வைக்கப்பட்டது.

மணக்:— வாய்மையாவது பொய் சொல்லாமை.
பரிதி:-வாய்மையாவது சத்தியமே சொல்லுக என்றவாறு.
—குறள். அதி. 30.

111. இசையா ஒருபொருள் இல்லென்றல் யார்க்கும்
வசையன்று வையத்து இயற்கை—நசையழுங்க
நின்றோடிப் பொய்த்தல் நிரைதொடீஇ! செய்ந்நன்றி
கொன்றாரிற் குற்றம் உடைத்து.

தருமர்:- என்பது. நிரைதொடீஇ!—நிரைத்த தொடியினை யுடையாய்!; இசையா—கொடுக்கக்கூடாத; ஒருபொருள்—; இல் என்றல்—ஒருவற்கு இல்லையென்று சொல்வது; யார்க்கும் வசை அன்று—யாவர்க்குங் குற்றமில்லை; வையத்து இயற்கை—உலகத்தில் நடந்துவரும் இயற்கைதானே; நின்று—ஒருவற் கொன்று கொடுக்கிறோமென்று சொல்லி(நின்று); ஓடி—சிறிது நாள் கழித்துப் பிறகு; நசை அழுங்க—அவர் நச்சுதல் கெட் டழுங்கும்படியாக; பொய்த்தல்—இல்லையென்பது; செய்ந்நன்றி கொன்றாரின்—செய்தநன்றி மறந்தொழுகுதலினும்; குற்றம் உடைத்து—குற்றம் உண்டாமென்றவாறு.

யாவர்க்குந் தனக்கியன்றமாத்திரம் கொடுக்கவேண்டும். அந்தப்படிக்குக் கொடானாயினும் ஒருவர் ஒருபொருள் கேட்டவுடனே இல்லையென்றால், அது குற்றம் பாரமில்லை. ஒருவற்கொன்று கொடுக்கிறோமென்று நச்சுதலாகச் சொல்லிச் சிறிது நாள் கழித்துப் பிறகு, இல்லையென்று விட்டால் அது மிகவும் குற்றமாம். அதற்குச் செய்த நன்றி மறந்தாரினும் குற்றமென்று, பொய் சொன்னவர் குற்ற மிகுதி கூறியவாறு.

பதுமனார்:- நிரை தொடீஇ! தம்மாற் கொடுக்கக் கூடாத பொருளை இல்லையென்று மறுத்தல் யாவர்க்குங் குற்றமன்று; உலகத்தியற்கையே. இரவலராசையின் கண்ணின்றழிய நெடுங் காலநின்று பொய்த்தல், செய்ந்நன்றியைச் சிதைத்தாரினுமிக்க குற்றமுடைத்தாம் என்றவாறு.

இசையா—கொடுக்கக் கூடா. நசை அழுங்க—நச்சுதல் கெடத்தானே போம்படி. நின்று ஓடிப் பொய்த்தல்—நெடுநாட் பொய்யுடன் சொல்லுதல்.

விளக்க உரை:- நிரை தொடீஇ!—நிரைத்த தொடியினையுடையாய்!; இசையா ஒருபொருள்—கொடுக்கக்கூடாத பொருளை; இல்என்றல்—இல்லையென்கை; யார்க்கும் வசை அன்று—யாவர்க்கும் குற்றமன்று; வையத்து இயற்கை—இவ்வுலகத்தியற்கை; நசை அழுங்க நின்று ஓடிப் பொய்த்தல்—நச்சுதல் கெட ஒழுகக் கண்ணழித்து இல்லையென்று விடுதல்; செய்ந்நன்றி கொன்றாரின்—செய்த நன்றி கொன்றாரிலும்; குற்றம் உடைத்து—; என்றவாறு.

நசை அழுங்க—நச்சுதல் கெடத்தானே போம்படி. நின்று ஓடிப் பொய்த்தல்—நெடுநாட் பொய்யுடனே சொல்லுதல்.

மேற்கோள் பகுதி:-

சங்கர:— "இயல்பெனினும் தன்மையெனினும் இயற்கை

யெனினும் ஒக்கும். விகாரமெனினும் செயலெனினும் செயற்கை யெனினும் விதியெனினும் ஒக்கும். இவ்விரண்டனுள் ...... "இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும், வசையன்று வையத்தியற்கை" எனச் செயற்கையை இயற்கையாகவுங் கூறுதல் இலக்கணை.

—நன்.சூ.151.

மயிலை சங்கர :—சொல் லெச்சத்திற்கு, "இசையா........................ வசையன்று" என்பதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன்.சூ.359.
—நன்.சூ.360.

ஒப்புமைப் பகுதி:-

"இசைவ கொடுப்பதூஉம் இல்லென் பதூஉம்
வசையன்று வையத் தியற்கை அஃதன்றிப்
பசைகொண் டவனிற்கப் பாத்துண்ணா னாயின்
நசைகொன்றான் செல்லுலக மில்".

—பழ.24.

"ஒல்லுவ தொல்லும் என்றாலும் யாவர்க்கும்
ஒல்லா தில்லென மறுத்தலும் இரண்டும்
ஆள்வினை மருங்கில் கேண்மைப் பாலே
ஒல்லா தொல்லும் என்றாலும் ஒல்லுவது
இல்லென மறுத்தலும் இரண்டும் வல்லே
இரப்போர் வாட்ட லன்றியும் புரப்போர்
புகழ்குறை படூஉம் வாயிலத்தை"

—புறம்.196.

"நச்சித்தற் சென்றார் நசைகொல்லா மாண்பினிதே"
—இனியவை.27.

'செய்ந்நன்றி....உடைத்து':—
"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு"

—குறள்.110.

''நிலம்புடை பெயர்வதாயினும் ஒருவன்
செய்தி கொன்றார்க்கு உய்தி இல்லென
அறம்பா டிற்றே''

—புறம்.34:5-7.

''சிதைவகல் காதற் றாயை தந்தையைக் குருவைத் தெய்வப்
பதவியந் தணரை ஆவைப் பாலரைப் பாவைமாரை
வதைபுரி குநர்க்கும் உண்டா மாற்றலா மாற்றன் மாயா
உதவிகொன் றார்க்கென் றேனும் ஒழிக்கலாம் உபாய
முண்டோ''

—கம்ப.கிட்கிந்தை.62.

''நன்றி, செய்குநர்ப் பிழைத்தோற் குய்விலவென்னும்
குன்றாவாய்மை''

—கல்லாடம்.4.

''பிறர்புரிந்த நன்றியது கொல்லினும்.....நரகில் எய்துவார்''.

—வில்லி.கிருட்.109.

''நாளை முனிபோரில் எந்நன்றியினும் செய்ந்நன்றி
கொன்றார் தமக்குக் குருகுலத்தார் கோவே!
யாமுங்கூட்டு என்றார்''

—வில்லி.12-ம் போர்.43.

குறிப்பு:—

நிரைதொடி-வினைத்தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித் தொகை. 'ஒருபொருள்' என்றது இன்ன பொருளெனச் சுட்டாமையின்கண் வந்தது.

(க).

112. தக்காருந் தக்கவர் அல்லாருந் தந்நீர்மை
எக்காலுங் குன்றல் இலராவர்—அக்காரம்
யாவரே தின்னினுங் கையாதாம்; கைக்குமாந்
தேவரே தின்னினும் வேம்பு.

தருமர்:— என்பது. அக்காரம்—கருப்புக் கட்டியை; யாவரே தின்னினும்—யாவர் தின்றாலும்; கையாதாம்—; வேம்பு—வேம்பை; தேவரே தின்னினும்—தேவர் தின்றாலும்; கைக்குமாம்—கைக்கும் [அதுபோல] தக்காரும்—தகுதிப் பாட்டையுடையவரும்; தக்கவர் அல்லாரும்—தகுதிப்பாடில்லாதாரும்; தந்நீர்மை—தமதுதன்மை; எக்காலும்—எப்பொழுதும்; குன்றல் இலர் ஆவர்—கெடுதலில்லையாவர் என்றவாறு.

நல்லவர்க்கு நல்லகுணமன்றித் தீயகுணம் வாராது; தீயவர்க்கு எவ்வகையாகப் புத்தி சொன்னாலும் அவர்க்கு அந்தக் குணம் போகாது என்பது தோன்றத், தேவர் அவர் தெய்வ வலியினாலும் கசப்பறாது என்று தீயவர் குணங்கூறி, இவை உலகவியற்கையாகிய உண்மையென்று காட்டப்பட்டது.

நல்லவர் பொய்சொல்லா ரென்பதாம்.

பதுமனார்:— கரும்பின் கட்டியை யாவரே தின்னினுங் கையாது; இனிதாம். வேம்பைத் தேவரே தின்னினுங் கைக்கும். அதுபோல தகுதியுடையாருந் தகுதியுடைய ரல்லாதாருந் தமது தன்மையை எஞ்ஞான்றுங் குன்றுதலிலராவர் என்றவாறு.

விளக்க உரை:— அக்காரம்—கருப்புக் கட்டியை; யாவரே யாவரொருவர்; தின்னினும்—; கையாதாம்—; வேம்பு—; தேவரே தின்னினும்—தேவர்கள் தின்னினும்; கைக்குமாம்—; [அதுபோல] தக்காரும்—தகுதியுடையாரும்; தக்கவர் அல்லாரும்—தகுதியில்லாதாரும்; தந்நீர்மை—தமது தன்மை; எக்காலும்—எப்பொழுதும்; குன்றல் இலர் ஆவர்—கெடுதலில்லையாவர் என்றவாறு.

மேற்கோள் பகுதி:—

இளம் / தெய்வச் / கல் } :—அக்காரம், யாவரே .... வேம்பு—என்ற வழி, யாவர் என்றது இழிவு குறித்து நின்றது; தேவர் என்பது உயர்வு குறித்து நின்றது''.

—தொல். சொல். இடை. சூ. 7.

தெய்வச்:—"தேவரே தின்னினும் வேம்பு—என்றவழி ஏகாரம் சிறப்புக் குறித்து நின்றது.

—தொல். சொல். இடை. சூ. 46.

நேமி:—"கைக்குமாம்......வேம்பு—இஃது இழிவு சிறப்பு".

—நேமி. சூ. 52.

ஒப்புமைப் பகுதி:—

"தெற்ற ஒருவரைத் தீதுரை கண்டக்கால்
இற்றே அவரைத் தெளியற்க—மற்றவர்
யாவரே யாயினும் நன்கொழுகார்; கைக்குமே
தேவரே தின்னினும் வேம்பு".

—பழ. 114.

குறிப்பு:-

எக்காலும் என்றது சுகதுக்க காலத்தும், உடல்நலமின்மை முதலியன நேரிட்டகாலத்தும் என்பதனைக் குறித்தது. ஏகாரங்கள் இரண்டும் முறையே இழிவு சிறப்பும் உயர்வு சிறப்பும் உணர்த்தி நின்றன. தின்னினும் என இரண்டிடத்தும் வந்த உம்மைகளில் முன்னது இழிவு சிறப்பும், பின்னது உயர்வு சிறப்பொடு எதிர்மறைப் பொருளும் உணர்த்தின. யாவர் என்றது நரகரைக் குறித்தது; பின்னே தேவரென வந்துள்ளமையான். ஆமிரண்டும் அசை.

(௨).

**113. காலாடு போழ்திற் கழிகிளைஞர் வானத்து
மேலாடு மீனிற் பலராவர்—ஏலா
இடரொருவர் உற்றக்கால் ஈர்ங்குன்ற நாட!
தொடர்புடையேம் என்பார் சிலர்.**

தருமர்:— என்பது. ஈர் குன்றம் நாட! — அருவிவிழுஞ் சிறப்பால் ஈரபாகத்தையுடைய மலைநாடனே!; கால்ஆடு

போழ்தில்—செல்வமுண்டாகிய பொழுது; பலர்—(பல்பேர்); வானத்துமேல் ஆடு மீனின்—ஆகாயத்துத் தோன்றிய நட்சத்திரத்திலும்; கழிகிளைஞர்—மிக்க உறவின் முறையார்; ஆவர்—திரளாக வுண்டாவர்; ஏலா இடர் ஒருவர் உற்றக்கால்—அச்செல்வமுடையார்க்குத் தகாத இடர் வந்தகாலத்து; சிலர்—; தொடர்பு உடையேம் என்பார்—அவரை உறவென்று சொல்வார் என்றவாறு.

சிலரெனவே நற்குணமுடையார் முன்உறவு என்றிருந்தபடியே அவருக்கு இடர்வந்தகாலத்திலும் ஒருமையோடு ஒழுகாநிற்பர். தீயவர், அச்செல்வமுடையார் இடருற்றகாலத்துத் தாமுன்பு உறவு என்றிருந்தது, 'தங்களுக்கும் சற்றுஉறவென்று †புறத்தியார் சொல்வர்' என்பதாகக் கூறுவார். ஆதலால் தீயவர் இப்படி பொய் சொல்வரென உண்மை கூறியதாயிற்று. 'காலாடு போழ்தில்' என்றது நடக்கையுண்டாகிய காலத்து என்றவாறு.

பதுமனார்:—ஊர்ங் குன்ற நாடனே! முயற்சியோடு காலியங்கும் பொழுதின்கண்மிக்ககிளைஞர் விசும்பின்மேலியங்கு மீன்போலப் பலராவர். தமக்குத் தகாத இடும்பையை முன்பு செல்வமுடை யாராயினார் ஒருவர் [1]உற்றால், சிலரே யவரொடு [2]நட்புடையோமென்று கூறுவர் என்றவாறு.

விளக்க உரை:-ஈர் குன்றம் நாட!-விழுகின்ற வருவியால் ஈரபாகத்தையுடைய மலைநாடனே!; கால் ஆடு போழ்தில்-முயற்சியாற் செல்வமுண்டாம் பொழுது; கழிகிளைஞர்-மிக்க உறவின் முறையார்; வானத்துமேல் ஆடுமீனின்-வானிடத்துண்டாகிய மீனினும்; பலர் ஆவர்-; ஏலா இடர்-தமக்குத் தகாத இடர்; ஒருவர்-(அவருக்கு); உற்றக்கால்-வந்துற்றபோது; தொடர்பு உடையேம் என்பார் சிலர்-இவரை உற

பா-ம்:-[1]உற்றகாலத்தில்
[2]உறவுடையோமென்று.

†அன்னியர்.

வென்று சொல்லுவார் சிலர் என்றவாறு.

இது உலக வியற்கையான உண்மை சொன்னதாம்.

மேற்கோள் பகுதி:-

நச்:-"கண் ஆடி வென்று-கண் எல்லாரிடத்தும் உலாவி வென்று; 'காலாடு போழ்தின்' என்றாற்போல".

-சீவக. 2327-உரை.

ஒப்புமைப் பகுதி:-

"கல்லோங்கு உயர்வரைமேற் காந்தண் மலராக்கால்
செல்லாவாஞ் செம்பொறி வண்டினம்-கொல்லைக்
கலாஅற் கிளிகடியுங் கானக நாட!
இலாஅஅர்க் கில்லை தமர்".

-நாலடி. 283.

"உண்டாய போழ்தின் உடைந்துழிக் காகம்போல்
தொண்டா யிரவர் தொகுபவே-வண்டாய்த்
திரிதருங் காலத்துத் தீதிலிரோ வென்பார்
ஒருவரு மிவ்வுலகத் தில்."

-நாலடி. 284.

"ஆர்த்த பொறிய அணிகிளர் வண்டினம்
பூத்தொழி கொம்பின்மேற் செல்லாவாம்-நீர்த்தருவி
தாழா உயர்சிறப்பிற் றண்குன்ற நன்னாட!
வாழாதார்க் கில்லை தமர்".

-நாலடி. 290.

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு".

-குறள். 752.

"கெடுங்காலைக் கைவிடுவார் கேண்மை அடுங்காலை
உள்ளினும் உள்ளம் சுடும்".

-குறள். 799.

"உறின்நட் டறினொருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்?"

—குறள். 812.

"முட்டின் றொருவர் உடைய பொழுதின்கண்
அட்டிற்றுத் தின்பவர் ஆயிரவர் ஆபவே
கட்டலர்தார் மார்ப! கலியூழிக் காலத்துக்
கெட்டார்க்கு நட்டாரோ இல்".

—பழ. 59.

"உடைமையறாது ஈட்டல் உறுதுணையாம் யாண்டும்
உடைமையராச் சென்றக்கால் ஊரெல்லாம் சுற்றம்
உடைமைக்கோல் இன்றங்குச் சென்றக்காற் சுற்றம்
உடையவரும் வேறு படும்".

—இன். 12.

"அதனினு மருட்கை யுடைத்தே பிறனாட்டுந்
தோற்றஞ் சான்ற சான்றோன் போற்றி
இசைமர பாக நட்புக் கந்தாக
வினையதோர் காலை யீங்கு வருதல்"

—புறம். 217: 3—6.

"செல்வர்க்கே சிறப்புச் செய்யுந் தீருந்துநீர் மாந்தர்போல
அல்குற்கு முலைக்கு மீந்தா ரணிகலமாய வெல்லா
நல்கூர்ந்தார்க் கில்லை சுற்றமென்று நுண்ணுசுப்புநைய
ஒல்கிப்போய் மாடஞ் சேர்ந்தா ரொருதடங் குடங்கைக்
கண்ணார்".

—சீவக. 2535.

"வாழ்ந்த காலை யல்ல தியாவர்க்கு
மாழ்ந்த காலை யன்பு மில்லென"

—பெருங். 3. 22:94—95.

"பொருள் கையுண்டாய்ச் செல்லக் காணிற்
போற்றி யென்றேற் றெழுவர்
இருள்கொ டுன்பத் தின்மைகாணி லென்னே
யென்பாரு மில்லை"

—திருவாய். 9, 1—3.

குறிப்பு:-

காலாடுதல் என்பது நினைத்தவிடஞ் செல்லுதல்; அஃது இலக்கணையால் செல்வம் பெறுதலை யுணர்த்திற்று. கைசாய்தல், சாய்கால், செல்வாக்கு என்பனவும் காண்க. போழ்து என்பது பொழுது என்பதன் மரூஉமொழி. கழி-உரிசொல்; மிகுதியைக் குறித்தது. ஏலா—ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். ஈர் என்ற அடைமொழி பல நீரருவிகளைக் கொண்டுள்ள மலையினது வளத்தைக் குறித்தது. சிலர் என்பதன் ஈற்றில் தேற்றேகாரம் விகாரத்தால் தொக்கது. அது ஈண்டு அருமை குறித்து நின்றது. கிளைபோலத் தழுவுவார் உறவினரென்பதனான் அவர் கிளைஞர் எனப்பட்டார். (௩).

114. வடுவிலா வையத்து மன்னிய மூன்றில்
நடுவணது எய்த இருதலையும் எய்தும்
நடுவணது எய்தாதான் எய்தும் உலைப்பெய்(து)
அடுவது போலுந் துயர்.

தருமர்:—என்பது. வடுஇலா—குற்றமற்ற; வையத்து—பூமியிடத்து; மன்னிய—நிலைபெற்ற; மூன்றில்—அறம், பொருள் இன்ப மூன்றினுள்ளும்; நடுவணது எய்த—நடுவாகிய பொருள் எய்தியவழி; இருதலையும்—அறமும் இன்பமும்; எய்தும்—எய்துவர்; நடுவணது எய்தாதான் எய்தும்—நடுவில் நின்ற பொருள் எய்தாதான் பெறுவதேதெனில்; உலைப்பெய்து அடுவதுபோலும் துயர்-உலையினிட்டுக் கொல்லுகிற †ஆமை யெய்துந் துயரத்தை யெய்துவன் என்றவாறு.

முன் கொடுத்திலனாகில் இம்மையில் பொருளெய்தானாகில் ஆமை கெட்டதுபோல துயரத்தை அடைவனென்று உலகவியற்கையான உண்மை கூறப்பட்டது.

---

†இதனால் ஆமையினைக் கொல்லுதல் எளிதன்றென் பதூஉம், அதனைக் கொல்ல விழைவார் உலையினிட்டுக் கொல்லுவர் என்பதூஉம் உணர்த்தினார்.

பதுமனார்:-குற்றமில்லாத உலகத்து மன்னப்பட்ட அறம், பொருள், இன்பமென்னும் மூன்றனுள் நடுவுளதாய பொருளை ஒருவனெய்த, அறனும் இன்பமுமாகிய விருதலையும் எய்துவன். அப்பொருளை யெய்தாதான் உலையின்கட் பெய்தடுவது போலும் துயரினை எய்துவன் வன்றவாறு.

'மூன்று—அறம், பொருள், இன்பம்

விளக்க உரை:- வடு இலா - குற்றமற்ற; வையத்து-பூமியிடத்து: மன்னிய-நிலைபெற்ற; மூன்றில்-அறம், பொருள், இன்பமென்று சொல்லப்பட்ட மூன்றினுள்ளும்;நடுவணது எய்த-நடுவாகிய பொருளெய்தவே; இருதலையும் எய்தும்-ஒருவன் அறமும் இன்பமுமாகிய விரண்டினையும் எய்துவன்; நடுவணது எய்தாதான்-நடுவில் (நின்ற) பொருளை யெய்தாதான்; உலைப்பெய்து அடுவதுபோலும் துயர்-உலை(யிலே) யிட்டுக் கொல்லுகிற (ஆமையினதுபோலத்) துயரத்தை; எய்தும்-எய்துவன் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

செல்வமெய்தாதான் அடையும் துயராவன:-

"இல்லாரை எல்லாரும் எள்ளுவர் செல்வரை
எல்லாருஞ் செய்வர் சிறப்பு".

—குறள். 752.

"அருளுடை யாருமற் றல்லா தவரும்
பொருளுடை யாரைப் புகழாதார் இல்லை
பொருபடைக் கண்ணாய் அதுவால் திருவுடையார்
பண்டம் இருவர் கொளல்".

—பழ. 269.

"பட்டாங்குத் தூயர் பழிச்சற் குரியராய்
ஒட்டின் றுயரா உலகத்தோர்-கட்டளை
யாம்வெறுக்கை இன்றி அமையாராம் அஃதிலார்
ஆம்வெறுக்கை நிற்கும் உடம்பு".

—இன். 19.

"இன்சொல்லன் தாழ்நடையன் ஆயினும்ஒள் ளில்லானேல்
வன்சொல்லி னல்லது வாய்திறவா-என்சொலினும்
கைத்துடையான் காற்கீழ் ஒதுங்கும் கடன்ஞாலம்
பித்துடைய அல்ல பிற".

—நீதிநெறி. 11.

"பணந்தானே யறிவாகும் பணந்தானே வித்தையுமாம்....
பணமில்லா தவர்பிணமாம் பான்மை சேர்வார்"

—தண்டலை.

"எந்நாளும்

இல்லாரை எல்லாரும் எள்குவர் செல்வரை
எல்லாரும் செய்வர் சிறப்பு"

—திரு. உலா. 135–137.

'வடுவிலா...எய்தும்':-
"அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்".

—குறள். 754.

"ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க் கெண்பொருள்
ஏனை இரண்டும் ஒருங்கு".

—குறள். 760.

"அறனும் பொருளும் இன்பமும் மூன்றும்
ஆற்றும் பெருமநின் செல்வம்".

—புறம். 28: 15–16.

"ஐயமிலை இன்பம்அற னோடவையும் ஆக்கும்
பொய்யில் பொருளே பொருள் மற்றல்ல பிறபொருளே"
—சீவக. 497.

"அறப்பொருள், துன்னுங் காலைத்துன்னாதன இல்லையே"
—சீவக. 1923.

"எல்லாம், பொருளிற் பிறந்து விடும்"

—நான்மணி. 7.

"பொன் பொருட்டினால் யாவும் உண்டாம்".

—கந்த. மாயைப். 7.

"பழியில் நீங்கிநன் கீட்டிய பசும்பொருள் சிறிதும்
கழிப டாதுநல் வழிப்பயன் படுவது கடுப்பக்
கொழிதி ரைச்சுவைப் பலியின் குளிர்புனல் முழுதும்
வழுவு றாதுகால் வழிச்சென்று வளவயல் நிரைக்கும்"
—காஞ்சி.நாட்டுப்.70.

"பாரோர் சொலப்பட்ட மூன்றன்றே யம்மூன்றும்
ஆராயிற் றானே யறம்பொரு ளின்பமென்று
ஆரா ரிவற்றி னிடையதனை யெய்துவார்
சீரா ரிருதலையு மெய்துவார்".
—வெங்கைக்கோவை.262.

"நூலுறு கல்வியை நுனித்து நாடியே
வாலறி வெய்திய வரத்தி னோர்களும்
மேலுறு திருவொடும் மேவு றார்எனின்
ஞாலமங் கவர்தமை நவையுள் வைக்குமால்"
—கந்த.மாயையுப.11.

"இல்லா ரிருமையும் நல்லவெய்தார்".
—பழமொழி.

"வறியா ரிருமையு மறியார்".
—பழமொழி.

"ஏழைச் சொல் அம்பலம் ஏறாது".
—பழமொழி.

குறிப்பு:—

அறம்—இம்மை, மறுமை, வீடு என்னும் மூன்றையும் பயப்பதாதலின் அதனை முதலிலும்; பொருள்—இம்மை, மறுமை என்ற இரண்டனை மட்டுமே பயப்பதாதலின் அதனை இடையிலும்; இன்பம்—மறுமை ஒன்றையே பயப்பதாதலின் அதனை கடையிலுமாக முறையே இவைகள் சான்றோர்களால் வைத்தெண்ணப்பட்டன. அறம், பொருள், இன்பம் என்பதன் வரிசையில் நடுநின்ற பொருளை, நடுவணது எனக் குறித்தார். (சு).

115 நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறூஉங்
கல்லாரே ஆயினுஞ் செல்வர்வாய்ச்—சொற்செல்லும்
புல்லீரப் போழ்தின் உழவேபோன் மீதாடிச்
செல்லாவா நல்கூர்ந்தார் சொல்.

தருமர்:—என்பது. நல் ஆவின் கன்று ஆயின்—நல்வழிப் பசுவின் கன்றானால்; [1]நாகும்—அதன் இளங்கன்றும்; விலை பெறூஉம்—[பசுவின் நன்மையாலே] அதிக விலைபெறும்; [அதுபோல] கல்லாரே ஆயினும்—கற்றிலனாயினும்; செல்வர் வாய்ச்சொல்—செல்வமுடையனாயில் அவன் சொல்வது [பொல்லாச் சொல்லாயிருந்தாலும்]; செல்லும்—பிறர்க்குப் பொருந்தியிருக்கும்; நல்கூர்ந்தார் சொல்—மிடியன் சொல் [நன்றாயிருந்ததாயினும்];புல் ஈரப் போழ்தின்—குளிர்ந்த செவ்வி மழையல்லது புல்லிய ஈரத்தில்; உழவேபோல்—உழும் உழவு போல; மீதுஆடி—உள் நாடாமல்; செல்லாவாம்—பலர்க்குப் பொருந்தாது [1]ஆய்விடும் என்றவாறு.

[1]'ஆய் விடும்' எனவே நல்லசொல் நல்லதே; தீயசொல் தீயதே. செல்வரிடத்திற் பெறும் பேற்றையன்றி அவரிடத்துப் பொல்லாச் சொற்களையும் நல்லதென்று, அவர் முகம்பெற மிகுதி யாகக் கூறி(யது). வறுமையர் சொல் நன்றாயிருப்பினும் அவர் இல்லாமையினால், அதனைக்கொண்டு கூறுவார் இல்லாதத னால் அச்சொல் பொல்லாதென்று பிரகாசமின்மை நோக்கிக் கூறியது. ஆதலால் அமைந்தோர் அவரவர் சொற்களை யுண்டானவாறே கூறுவர். பெறும்பேறு விரும்புவார் இத்தன்மை யாகப் பொய் சொல்வரென உலகவியற்கையாகிய உண்மை கூறப்பட்டது.

பதுமனார்:—நல்லாவின் கன்றாயின் நாகும் விலைபெறும். கற் றிலராயினுஞ் செல்வமுடையார் வாயிற் சொற்கள் யார்க்குமேறும். கற்றாராயினு நல்கூர்ந்தாற்சொல் செவ்வி நிரம்பா வீரப்

---

[1]நாகு—கிடாரிக்கன்று.

போழ்தின் உழவேபோன் மேலெழுந்து ஏறா என்றவாறு.

விளக்க உரை:-நல் ஆவின் கன்று ஆயின்-நல்வழிப் பசுவின் (கன்றாயினதனாகு) கன்றும்; விலைபெறூஉம்—விலைபெறும்; [அதுபோல] கல்லாரே ஆயினும்—கற்றிலராயினும்; செல்வர் வாய்ச் சொல்—செல்வமுடையார் வாயிற்சொல் [பொல்லா தாயினும்]; செல்லும்—பலர்க்கும் பொருந்தியிருக்கும்; நல்கூர்ந் தார் சொல்—மிடியர் சொல் (நன்றாயிருந்ததாயினும்]; புல் ஈரப் போழ்தின்—புல்லிய ஈரம் விழுந்த போழ்தின்கண்; உழவேபோல் —உழும் உழவேபோல; மீது ஆடி-உள் நாடாமல்; செல்லாவாம் —பலர்க்கும் பொருந்தாதாய்விடும் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"நற்பொருள் நன்குணர்ந்து சொல்லின் நல்கூர்ந்தார்
சொற்பொருள் சோர்வு படும்".

—குறள். 1046.

"இல்லார் வாய்ச் சொல்லினும் நயம் இன்னா".

—இன்னா. 29.

"கல்லானே யானாலும் கைப்பொருளொன் றுண்டாயின்
எல்லாரும் சென்றாங் கெதிர்கொள்வர்—இல்லானை
இல்லாளும் வேண்டாள்மற் றீன்றெடுத்த தாய்வேண்டாள்
செல்லா தவன்வாயிற் சொல்".

—நல்வழி. 34.

"எனைத்துணைய வேனும் இலம்பட்டார் கல்வி
தினைத்துணையும் சீர்பா டிலவாம்".

—நீதிநெறி. 10.

"வறுமையில் கல்விபோலப் புலப்படா மருங்குல்"

—திருவிளை. தடா. அவதா. 58.

'நல்கூர்தல்':—

"நல்கூர்ந்த மக்கட்கு"

—நாலடி. 242.

"நடவை வருத்தமொடு நல்கூர் மேனியன்"

—மணி. 13:12.

"மாலைநீ யாயின் மணந்தாரவ ராயின் ஞாலமோ
நல்கூர்ந்தது வாழிமாலை"

—சிலப். 7:50.

"நல்கூர்க் கட்டழ னலிந்துகை யறுப்ப"

—பெருங். வத்த. 2:21.

குறிப்பு:-

விலைபெறூஉம் என்பது இன்னிசை யளபெடை. 'வாய்ச் சொல்' என்றவிடத்து 'வாய்' என வேண்டாது கூறியது அதன் சிறப்புணர்த்துதற்காம். உழவு—தொழிலாகுபெயர். உம்மைகள் இழிவுசிறப்பு உணர்த்தின. நல்கூர்தல்—நல்கு+ஊர்தல்; பிறர் நல்குவதைப் பெற்றுக்கொள்ளச் செல்லுதல் எனப்பொருள் படும். அது வறுமையடைதலைக் குறித்தது. செல்வர் ஒன்றை ஒரு முறை கூறினும் அது செல்லுதல்பற்றி 'சொற் சொல்லும்' என ஒருமையிலும், இல்லார் பலமுறை ஒன்றைப்பற்றி கூறினும் செல்லாமைப்பற்றி 'சொல் செல்லாவாம்' என்ப் பன்மையிலும் கூறினார்.

(ரு).

116. இடம்பட [1]நன்ஞானங் கற்பினும் என்றும்
அடங்காதார் என்றும் அடங்கார்—தடங்கண்ணாய்!
உப்பொடு நெய்பால் [2]தயிர்காயம் பெய்தடினும்
கைப்பறா பேய்ச்சுரையின் காய்.

பா—ம்:—[1]'மெய்ஞ்ஞானம்'.
[2]'அயிர்—விளக்க உரை'.

தருமர்:—என்பது. தடங்கண்ணாய்!—நீண்ட கண்களை யுடையவளே!; பேய்ச்சுரையின்காய்—பேய்ச் சுரைக்காய்க்கு; உப்பொடு—உப்பு(டனே); நெய்பால் தயிர்—; காயம் பெய்து அடினும்—சர்க்கரை முதலாகிய பலகாயம் இட்டாக்கினும்; கைப்பு அறா—கசப்பு போகாது; [அதுபோல] என்றும் அடங்கா தார்—எப்பொழுதும் தன் இயற்கையறிவினாலே அமையாதார்; இடம்பட—(மிகு)தியாக; நன்ஞானம்—நல்ல ஞானங்களை; கற்பினும்—கற்றறியினும்; என்றும்—எந்தக்காலமும்; அடங்கார் கல்வியறிவினாலே அமையார் என்றவாறு.

கல்வியிலராயினும் இயற்கையறிவினாலே நல்லோராயினார்; ஒருமையாக மெய்ம்மையே கூறி அமைந்தொழுகுவர். தீயவர் வேண்டுநூல்களை எல்லாங் கற்றறியினும், மெய்ம்மைகூறி அடக்கமுடைத்தாய் ஒழுகுதல் இலரென்று, உலகவியற்கை யாகிய உண்மை கூறியது. தீயவர்க்கு மாறுபடாக அமைந் தோரைக் கல்வியிலராயினும் என்று உவமை கூறியதன்றி அவர்க்குக் கல்வி இல்லாமை கூறியதன்று. சர்க்கரையுங் கூட்டி ஆக்கினுமென்றது; காயமென்றது பலகாய மென்பதனால் கயப் புக்கு மாறுபாடாகிய சர்க்கரையுங் கூட்டிக் கூறப்பட்டது.

பதுமனார்:—தடங்கண்ணாய்! உப்பொடு நெய், பால், தயிர், காயம் பெய்தட்டாலும் பேய்ச்சுரைக்காய் கைப்பறாது. அது போல நல்ல நூல்களை என்றும் விரியக் கற்பினும் அடங்குந் தன்மையல்லாதார் என்றும் அடங்கார் என்றவாறு.

இடம்பட-அகலமுண்டாக. அயிர் (என்று பாடமோதிச்) சர்க்கரை யென்பாரு முளர்.

விளக்க உரை:— தடங்கண்ணாய்!—பெரிய கண்ணினை யுடையவளே!; பேய்ச்சுரையின் காய்—; உப்பொடு—உப்பு டனே; நெய்—நெய்யும்; பால்—பாலும்; அயிர்-கண்ட சர்க்கரை யும்; காயம்—(பல காயங்களும்); பெய்து அடினும்—இட்டு சமைப்பினும்; கைப்பு அறா—கைப்பு அறாது; [அதுபோல]

என்றும் அடங்காதார்—எப்பொழுதும் இயற்கையறிவால் அடங்காதார்; இடம்பட—இட முண்டாக; நல்ஞானம்—நல்ல ஞானங்களை; கற்பினும்—கற்றறியினும்; என்றும் அடங்கார்—செயற்கையறிவாகிய கல்வியான் எப்பொழுதும் அடங்கமாட்டார் என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

நச்:—உம்மைச்சொல் உயர்வுசிறப்புக் குறித்து வந்ததற்கு "உப்பொடு நெய் ...காய்'' என்பதனை மேற்கோள் காட்டுவர்.
—தொல்.சொல்.இடை.சூ.7.

யா.கா.:— "மதிமருட்டும் சிறுநுதல்பேர் அமர்க்கண் செய்யவாய் ஐயநுண் ணிடையாய் எ—து மகடூஉ முன்னிலை. என்னை? 'இடம்பட மெய்ஞ்ஞானம்...காய்' எனப் பிறரும் தடங்கண்ணாய் என்று இடையே மகடூஉ முன்னிலை சொல்லினாரும் உளரெனக் கொள்க''.

—உறுப்.சூ.4.

ஒப்புமைப் பகுதி:—

"ஐங்காய மிட்டரைத்துக் கரைத்தாலுந்
தன்காரம் போகாதாம் பேய்ச்சுரைக்காய்''

—பழமொழி.

'காயம்':—

"காயங் கொண்டன விஞ்சி''

—மலைபடு.125.

குறிப்பு:—

'உப்பொடு' என உப்பை ஒடுக் கொடுத்துப் பிரித்தார்; மற்ற சுவைகளினும் அதன் இன்றியமையாமையைக் கருதியாம். கற்பினும், அடினும் என்றவிடத்து உம்மைகள் உயர்வு சிறப்புப் பொருளைக் குறித்தன. மற்றும் சிலர் எதிர்மறை உம்மைகளாகக் கொள்ளுதலுமுண்டு. இடம் என்பதனைப் பண்புப் பெயராகக்

கொண்டு 'இடம்பட' என்பதற்கு 'விரிவாக' எனப் பொருள் கொள்வர்.

(கூ)

117. தம்மை இகழ்வாரைத் தாமவரின் முன்னிகழ்க
என்னை அவரொடு பட்டது?—புன்னை
விறற்பூங் கமழ்கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப!
உறற்பால யார்க்கும் உறும்.

தருமர்:— புன்னை விறல் பூ—புன்னையினது மிக்க பூ; கமழ் கானல்-மணங் கமழாநின்ற கழிக்கானலை யுடைய; வீங்கு நீர்ச் சேர்ப்ப!—கடற்சேர்ப்பனே!; உறல்பால—உறும்பகுதிகள்; யார்க்கும் உறும்—யாவர்க்கும் வந்துறும்; [ஆதலால்] தம்மை இகழ்வாரை—தம்மை இகழ்ச்சியாகச் சொல்லுவாரை; தாம்—தாமும்; அவரின் முன் இகழ்க—அவர் முன்னே இகழ்ச்சியாகச் சொல்லிவிடுக; அவரொடு பட்டது என்னை?—அவருடன் காரியம் யாது? என்றவாறு.

உறும்பகுதி எவ்வகைத்தாயினும வந்து உறுவதன்றிப்போவதல்ல. அதனால் ஒருவரைப் புறங்கூறாமல் அவர்முன்னே சொல்லி ஆறிவிடுக. எனவே ஒருவர் இகழ்ச்சி சொன்னது பொறுப்பதே (அ)றம். அதற்குப் பொறுக்க மாட்டாராயின், அவரைக் காணாத விடத்தே இகழ்ந்து கூறுவது வாய்மையன்று; என்பதனால் உலகவியற்கையாகிய உண்மைகூறி யறிவுறுத்தியது.

பதுமனார்:— புன்னையின் மிக்க பூக்களால் (மணம்) கமழ்கின்ற நீரினையுடைய சேர்ப்பனே! தாம்உறற்பால துன்பங்கள் யாவர்க்கும் உறும். ஆதலால் தம்மை இகழ்வாரைத் தாமுமவரின்முன்னே இகழ்க. அவரோடு உண்டான தொடர்ச்சி யாது? என்றவாறு.

என்னை—யாது. உறல்பால—உறும்பகுதி, உறக்கடவ வினை.

விளக்க உரை:— புன்னை விறல் பூ -புன்னையினது மிக்க பூ; கமழ்கானல்—மணங்கமழாநின்ற கழிக்கானலையுடைய; வீங்குநீர்ச் சேர்ப்ப!—கடற் சேர்ப்பனே; உறல்பால—உறும் பகுதிகள்; யார்க்கும் உறும்—யாவர்க்கும் வந்துறும்; [ஆதலால்] தம்மை இகழ்வாரை—தம்மை யிகழ்ந்து சொல்லுவாரை; தாம்—தாமும்; அவரின்முன் இகழ்க—[புறங் கூறாமல்] அவர் முன்னே இகழ்ந்து சொல்லிவிடுக; அவரொடு பட்டது என்னை?—அவருடனே காரியமாவது யாது? என்றவாறு.

விறல் என்பது மிகுதி.

ஒப்புமைப் பகுதி:

"உறற்பால நீக்கல் உறுவர்க்கும் ஆகா"

—நாலடி. 103.

"உறற்பால, தீண்டா விடுத லரிது".

—நாலடி. 108.

—பழ. 62.

"கண்டறிவார் போலார் கெழீஇயின்மை செய்வாரைப்
பண்டறிவார் போலாது தாமும் அவரேபோல்
விண்டொரீஇ மாற்றி விடுதல் அதுவன்றோ
விண்டற்கு விண்டல் மருந்து".

-பழ. 251.

"ஆமே யொருவ ரொருவர்க் கிடரை யகற்றுவதும்
ஆமே யொருவ ரொருவர்க் கிடர்நன்மை யாக்குவதும்
தாமேது செய்தன ரன்னது தாமே புசிப்பதன்றிப்
போமே தலையிற் பொறித்தான் பிறழந்து நினைப்பினுமே".

-விநாயக.

குறிப்பு:-

விறல்பூ-வெற்றியமைந்த பூ என்பர்; கடலின்கண் நாறும் புலால் நாற்றத்தைப் போக்கி நன்மணத்தைப் பரவச் செய்யும்

பூ என்பதுதான். கானல்—கடற்கரைச் சோலை. வீங்குநீர்—வினைத்தொகை அன்மொழி. காரணமின்றிப் பழிக்கும் இயல்புடைய கீழோரது வாயையடக்குதற்கு உபாயம் இச்செய்யுளில் கூறினார்.

(எ).

118. ஆவே(று) உருவின ஆயினும் ஆபயந்த
பால்வே(று) உருவின அல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகும் அறநெறி ஆபோல்
உருவு பலகொளல் ஈங்கு.

தருமர்:— என்பது. ஆ—பசுக்கள்; வேறு உருவின ஆயினும்—பலவண்ணங்கள் உடைத்தாயினும்; ஆ பயந்த பால்—அந்தப் பசுக்களிற் கறந்த பால்; வேறுஉருவின அல்லவாம்—அந்த(ப்பல) வண்ணங்களை யுடைத்தாகாவாம்; அறநெறி—அறத்தினது வழியும்; பால் போல்—அந்தப்பால் போல; ஒரு தன்மைத்து ஆகும்—ஒருதன்மையாயிருக்கும்; ஈங்கு—(இங்குண்டாகிய) சமயங்களும்; ஆபோல்—அந்தப் பசுக்கள்போல; உருவு பல கொளல்—வேறுபட்ட வேடங்களாய் இருக்கும் என்றவாறு.

சமயங்கள் வேறுவேறாயிருந்தாலும் அந்தச் சமயத்துக் கெல்லாம், ஒருவனே கர்த்தனாகவிருந்து அவரவர் மனத்தின்படி அறநெறியை நடத்திவிப்பன். அதனால் ஏனையோரை யிகழ்ந்து தாங்கொண்ட விரதத்திற் பிழையாது ஒழுகுதல் வேண்டுமென உண்மை கூறியவாறு.

பதுமனார்:— பசுக்கள் வேறுபட்ட உருவினவாயினும் அவைபயந்த பால்கள் வேறுபட்ட வண்ணத்தன வல்லவாம். அப்பாலே போல அறத்தினது வழி ஒரு படிபெற்றித்தாகும். அப்பசுக்கள்போலச் சமயங்களும் பலவேடங்களையுடைய என்றவாறு.

பால்போல் ஒருதன்மைத்தாகும் அறநெறி—சமயங்கள்

தம்மில் வேறுபடச் சொல்லிற்றாயினும் அறஞ்சொல்லுவது என்றும் ஒருதன்மைத்து. அறம் என்றது எல்லாவுயிர்க்கும் இதமான செயல். இங்கு சமய மயக்கு.

விளக்க உரை:- ஆ—பசுக்கள்; வேறு உருவின ஆயினும்—வேறுபட்ட வண்ணத்தன வாயினும்; ஆ பயந்தபால்—அந்தப் பசுக்கள் கறந்த பாலுக்கு; வேறு உருவின அல்லவாம்—வேறுநிறம் இல்லையாயினாற் போல; அறநெறி—அறத்தினது வழி; பால்போல்;—அந்தப் பால்போல; ஒரு தன்மைத்து ஆகும்—; ஈங்கு—(இங்குண்டாகிய) சமயங்களும்; ஆபோல்—அந்தப் பசுக்கள்போல; உருவு பலகொளல்—பலவேடங்களை யுடைய என்றவாறு.

சமயங்கள் வேறுபட† ....மயக்கு.

மேற்கோள் பகுதி:-

யா. வி யா. கா. வீரசோ. இ. வி.	:—லகர வொற்றிடை வந்த ஆசிடை யெதுகைக்கு மேற்கோளாக வரும்.

—யா. வி. தொடை. சூ. 37.
—யா. கா. ஒழிபு. சூ. 6.
—வீரசோ. யாப்பு. சூ. 5.
—இ. வி. சூ. 748

சிவஞான போதமா:—"பால்போல்.... ...ஈங்கு—என்பவாக லின், நல்வினை எனப்பட்டனவெல்லாம் புண்ணியங்களா மன்றே".

சூ. 8. அதி. 1. வெண்பா. 1.

திருநூற்று:— "இதனால் அருகனை மும்மூர்த்திகளும் பிறரும் நீ யெனப் புகழ்ந்ததாம்; 'ஆவேறுருவின.......பலகொளல் ஈங்கு' என்றாராகலின்"

—திருநூற்று.

---

† பதுமனார் உரையில் பார்க்க.

குறிப்பு:-

உரு என்பது உகரச்சாரியைப் பெற்று உருவு என வந்தது தெருவு, நடுவு எனப் பிறவாண்டும் வருதல் காண்க. கொளல்—அல்லீற்று உடன்பாட்டு வியங்கோள். பசுக்கள் எனப் பன்மையில் கூறியது நோக்கி பால்கள் எனப்பன்மையில் கூறினர் பதுமனார்.

(அ).

119. யாஅர் உலகத்தோர் சொல்லில்லார்? தேருங்கால்
யாஅர் உபாயத்தின் [1]வாழாதார்?—யாஅர்
இடையாக இன்னாதது எய்தாதார்?—யாஅர்
கடைபோகச் [2]செல்வமுய்த் தார்?

தருமர்:—என்பது. தேருங்கால்—ஆராயுங்காலத்து; உலகத்து ஓர் சொல்—உலகத்து இறந்தாரென்னுஞ் சொல்; இல்லார்—இல்லாதிருந்தவர்; யார்?—யார்தான்? உபாயத்தின்—முற்பிறப்பில் தருமஞ்செய்து அந்த உபாயத்தில்; வாழாதார்—இப்பிறப்பில் வாழாதவர் யார்?—யார்தான்? இடையாக-சாவது முன்னாக; இன்னாதது எய்தாதார்-வசையுரையை எய்திக் கொள்ளாதிறந்தவர்; யார்?—யார்தான்? கடைபோக—தமக்குப் போதுமென விடுமளவும்; செல்வம் உய்த்தார்-செல்வத்தை யனுபவித்தவர்; யார்?-யார்தான்? என்றவாறு.

விசாரிக்கும்பொழுது ஊழ்வினையானது இத்தன்மையாய் அனுபவிக்கப்படுத்துமன்றி அவரவர் எண்ணத்தின்படி (நடவா) தென உலகவியற்கையாகிய உண்மை கூறியது. தேருங்கால் என்றதும் இடைநிலைத் தீபகம்.

பதுமனார்:— (தேருங்கால்), யார் உலகத்து ஓர்சொல்

பா-[1]'வாழாதாரியார்'.
[2]'செல்வமுற்றார்'

இல்லார்? என்றது யாவர் உலகத்தொரு புகழில்லாதவர்? என்ற வாறு. யார் உபாயத்தின் வாழாதார்? என்றது யாவர் செல்வமு மாக்கமும் முயற்சியாற் செல்வமுறாதார்! என்றவாறு. யார் இடையாக இன்னதாது எய்தாதார்? என்றதும் யாவர் இடை யிட்டு இன்னாத வசையுரை எய்தாதார்? என்றவாறு. யார் கடைபோகச் செல்வம் உய்த்தார்? என்றது யாவர் இடையிட்டு வறுமையுறாதார்? என்றவாறு.

நிரனிறையாகக் கூட்டுக. தேருங்கால் என்பதனை எங்குங் கூட்டுக. சொல்—தம்மை நல்லாராகச் சொல்லுஞ் சொல். உபாயம்—செல்வமுயற்சி.

விளக்க உரை:—தேருங்கால்-ஆராயுங்கால்; உலகத்து ஓர் சொல்—உலகத்திறந்தாரென்னுஞ் சொல்; இல்லார்-ஆற்றிருக் கிறவர்; யார்?—யார்தான்?; உபாயத்தின் வாழாதார்—முற் பிறப்பிலே தன்மஞ் செய்து அந்த உபாயத்தால் இப்பிறப்பிலே வாழாதார்; யார்?—யார்தான்; இடையாக இன்னாதது எய்தா தார்-சாவதற்கு முன்னே வசையுரையை எய்திக் கொள்ளாது இறந்தவர்; யார்?-யார்தான்?; கடைபோகச் செல்வம் உய்த்தார் -செல்வத்தை யமையுமெனச் செலுத்தினவர்; யார்?-யார்தான்? [ஒருவருமில்லை] என்றவாறு.

இப்பாட்டுத் **தேருங்கால்** என்றது **இடைநிலைத் தீபகம்.** கடைபோக வென்றது நிரபம வமையுமென்று விடுதல்.

மேற்கோள் பகுதி:-

சங்கர:-''ஒருவரென வழங்குஞ்சொல் உயர்திணை யாண் பால், பெண்பாலிரண்டற்கும் பொதுவாய் அத்திணைப்பன்மை வாய்பாட்டு வினையைக்கொண்டு முடியும் பாங்கினையுடைத்து என்று சொல்லுவர் புலவர்;.... ''யாஅரொருவர் உலகத்தோர் சொல்லில்லார்'' எ-ம் வரும்''

—நன். சூ.289.

ஒப்புமைப் பகுதி:—

'கடைபோக' :—

"ஈறு [1]கடைபோக வெனக்கருள் என்றலும்"

—மணி. 21—144

குறிப்பு:-

'கால்' என்பது காலம் என்பதன் விகாரம். உபாயம் என்றது சாம், பேத, தான, தண்டம் என்றும்; உழவு, வாணிகம் சேவை முதலியன வென்றும் கூறுவர். அளபெடைகள் செய்யுளோசை நிறைக்க வந்தன. முதலடியிலுள்ள 'உலகத்து', 'தேருங்கால்' என்பனவற்றைப் பிறவிடத்தும் இயைத்துக் கொள்க. ஓர் சொல் என்பதற்குப் பதுமனார் 'புகழ்' எனவும்; தருமரும், விளக்க வுரைகாரரும் 'உலகத்து இறந்தாரென்னுஞ் சொல்' எனவும் கூறுதல் காண்க. ஓர்சொல்—பழிச்சொல், நிந்தைச்சொல் என்றும் சொல்வர்.

(கூ).

120. **தாஞ்செய் வினையல்லால் தம்மொடு செல்வதுமற்று**
யாங்கணுந் தேரிற் பிறிதில்லை—ஆங்குத்தாம்
போற்றிப் புனைந்த உடம்பும் [2]பயனின்றே
கூற்றங்கொண்டு ஓடும் போழ்து.

தருமர்:—என்பது. [3]யாங்கணும்—; தேரில்—யாம் தெரிய ஆராய்ந்துபார்க்குங்காலத்து; தம்மொடு செல்வது—தாம் இறந்த காலத்துக் கூடச்செல்வது; தாம்செய்வினை அல்லால்— தாஞ் செய்த நல்வினை தீவினையன்றி; மற்றுபிறிது இல்லை—அவ் வினைகளல்லது வேறொன்றுமில்லை; கூற்றம்கொண்டு ஓடும் போழ்து—தமதுயிரைக் கூற்றுவன் விரைவிற் கொண்டுபோம்

---

[1]மரணம் இறுதியாக.

பா—ம்:—[2]'பயமின்றே'.

[3]எல்லா நூற்களிலும்.

பொழுது; ஆங்கு தாம் போற்றி புனைந்த—தாம் பாதுகாத்து அழகுசெய்த; உடம்பும்—உடம்பாலும்; பயன் இன்று—ஒரு பயனுமில்லை என்றவாறு.

தாம் அழகுபெறச்செய்து பரிகரித்து இருத்திய, உடம்பினாற் செய்வதொரு பயனுமின்றிக் கெடுவதாய, நிலையில்லாத யாக்கையை விரும்பிப் பொய்சொன்னவற்றினால் இம்மை மறுமைக்கும் பொல்லாங்கு எய்துவர். அச்செய்கைக்கு உடன் படாது மெய்ம்மையென்னும் விரதம் பிழையாமல் ஒழுகுவார்க்கு இருமையும் நன்குண்டாமென்பதாம்.

பதுமனார்:—ஆங்குத்தாம் பாதுகாத்துக் கைபுனைந்த உடம்பும் தம்மைக்கொண்டு கூற்றம் ஓடும்பொழுது பயன் செய்யாது. எக்காலத்தாயினும் ஆரா(யுங்கால்) தாம் செய்யப் பட்ட இருவினையுமல்லது தம்மொடு மறுபிறப்பிற் செல்வது பிறிதில்லை என்றவாறு.

யாங்கணும்—எவ்விடத்தானும். போற்றி புனைந்த—காத்துப் பேணின.

விளக்க உரை:—யாங்கணும்—; தேரில்—தெளிய ஆராயுங் காலத்து; தம்மொடு செல்வது—தாம் இறந்தகாலத்துக் கூடப் போவது; தாம்செய்வினை அல்லால்—தாஞ்செய்யும் நல்வினை தீவினை இரண்டுமல்லாது; மற்று பிறிது இல்லை—அது வல்லது வேறொன்றுமில்லை; கூற்றம் கொண்டு ஓடும்பொழுது—கூற்ற மானவன் கொண்டோடும் பொழுது; ஆங்குதாம் போற்றி புனைந்த—தாம் பாதுகாத்து அழகுசெய்த; உடம்பும்—உடம் பாலும்; பயம் இன்று—ஒருபயனுமில்லை என்றவாறு.

யாங்கணும்—எவ்விடத்தானும். போற்றி புனைந்த—காத்துப் பேணின.

ஒப்புமைப் பகுதி:-

"அன்றறிவாம் என்னா தறஞ்செய்க மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை.

—குறள். 36.

"ஈட்டிய வொண்பொருளு மில்லொழியுஞ் சுற்றத்தார்
காட்டுவாய் நேரே கலுழ்ந்தொழிவர்—மூட்டும்
எரியி னுடம்பொழியி மீர்ங்குன்ற நாட!
தெரியி னறமே துணை",

—அறநெறி. 147.

"மனையாளு மக்களும் வாழ்வுந் தனமுந்தன் வாசல்மட்டே
இனமான சுற்ற மயான மட்டேவழிக் கேதுதுணை
தினையா மளவெவ் வளவாகினு முன்பு செய்ததவந்
தனையாள வென்றும் பரலோகஞ் சித்திக்குஞ் சத்தியமே".

—பட்டினத்தார்.

"அத்தமும் வாழ்வு மகத்துமட்டே விழியம் பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே விம்மி விம்மியிரு
கைத்தலை மேல்வைத்தழு மைந்தருஞ் சுடுகாடு மட்டே
பற்றித் தொடரு மிருவினைப் புண்ணிய பாவமுமே".

—பட்டினத்தார்

குறிப்பு:-

'உடம்பும் பயனின்றே' என்றதன் உம்மை சிறப்பும்மையாய் இளமை, சுற்றம், கல்வி, செல்வம் இவற்றின் பயனின்மையை யுணர்த்தி நின்றது. ஏகாரம் தேற்றேகாரம்.

(ய).

---

13. தீவினையச்சம்.

தருமர்:— அஃதாவது இப்பிறப்பிலே கொலை, களவு, கள்,

காமம், பொய் முதலானவற்றுக்கு உடன்பட்டுச் செய்யவே, அக்குற்றத்துக்குத்தக்க தண்டம் நரகத்திலே அனுபவித்து அதுவு மன்றிப் பூமியில் வந்துபிறந்து, நோய், மூப்பு, துன்பம், மிடி முதலானவற்றால் நெஞ்சந் துக்கப்பட்டு உழல்வாரைச் சுட்டிக் காட்டித் தீவினை செய்தவர்கள், இப்படி அனுபவிப்பது திண்ண மெனத் தீவினைசெய்தலையஞ்சி நல்வினைசெய்ய ஒருப் படுதலாம்.

பதுமனார்:—அஃதாவது தீவினைப்பயனை அனுபவிப்பவன் அந்தவினைகள் செய்வாரைக்கண்டு தான் தன்னை அஞ்சுதல்.

இது அதன்பின் சொல்லியதென்னையெனின், எல்லாவுயிர் கட்கும் உயிர்(க்கு றுெ) வாராமற் பாதுகாத்து அதனையுவந்து உண்ணும் உணவை யொழிந்து. உடம்போடு ஒழுகின் அவ் வுடம்பும் பிறவி(த்துன்ப)த்தைநீங்கி உடம்பொடு வீடுபெறலும்; இல்லறத்தின்கண்ணின்றார் மேலதாகிய கொல்லாமையும் இவ் விரண்டினையுங் கூறியது. தீவினையச்சமாதலால் தீவினைக் கஞ்சலே மெய்ம்மையை யறிந்தாராவார்.

விளக்க உரை:— அஃதாவது இப்பிறப்பிலே கொலை, களவு, கள், காமம், பொய்யென்னும் இவற்றிற்கு உடன்பட்டுச் செய்யவே, இந்தக் குற்றங்கட்குத்தக்க தண்டம் நரகத்தினும் அனுபவித்து அதுவும் போதாமற் பூமியிலும் வந்து பிறந்து, நோயுந்துன்பமு மிடியு முதலாயினவற்றால் நெஞ்சு துக்கப் படுவார்களென்று, இம்மையிலே யிப்படி யனுபவிக்கிறவர்களைச் சுட்டிக்காட்டித் தீவின்ன செய்தவர்கள், இப்படியனுபவிக்கிறார்க ளாதலால் யாவரும் இப்படியொத்த தீவினைசெய்தலை யஞ்சி நல்வினை செய்யும்படி பண்ணுதலாம்.

குறிப்பு:—

'தீவினையச்சம்':—

பரிமே:— அஃதாவது பாவங்களாயின செய்தற்கு அஞ்சு தல். இதனான் மெய்யின்கண் நிகழும் பாவங்களெல்லாம்

தொகுத்து விலக்குகின்றார் ஆகலின், இது பயனிலசொல்லாமை யின் பின் வைக்கப்பட்டது.

மணக்:— தீவினையச்சமாவது தீவினைகளைப் பிறர்க்குச் செய்யாமை.

பரிதி:— தீவினையச்சமாவது, வாக்கினாற் செய்யும் குற்ற மாகிய புறங்கூறல், பயனில சொல்லுதல் போல, மனத்தாலும் பாவத்தைப் பண்ணப் பயப்பட வேணும் என்றவாறு.

காளிங்:— இனி, யாவனொருவன் யாதானும் ஒன்றினை முயலுமிடத்து, மனம் மொழி மெய் என்ற மூன்றும் முதற் காரணமாகக் கொண்டு, மனத்தினால் ஒன்றைக் கருதுதலும், வாக்கினால் ஒன்றை உரைத்தலும், காயத்தால் ஒன்றைச் செய்தலுமாய் அல்லறே நிகழ்த்துவது; அவற்றுள் அடக்க முடைமை, வெஃகாமை, எனப் பலவாறான மனக்கருத்தின் அறத்தியல்புணர்த்தி, பின்பு புறங்கூறாமை, இனியவைகூறல், எனப் பலவற்றால் வாய்மொழியின் அறத்தியல்பு உணர்த்தி, மற்று இனி தீவினையச்சம், ஒப்புரவறிதல், ஈகை, புகழ் என்பன வற்றால் காயச்செய்தியின் அறத்தியல்பு உணர்த்துவான் எடுத்துக் கொண்டார். அவற்றுள் முன்னர் தீவினைக்குற்றம் அறிவிக்கின்றது.

—குறள். அதி. 21.

121. துக்கத்துள் தூங்கித் துறவின்கட் சேர்கலா
மக்கட் பிணத்த சுடுகாடு—தொக்க
விலங்கிற்கும் புள்ளிற்குங் காடே புலங்கெட்ட
புல்லறி வாளர் வயிறு.

தருமர்:— துக்கத்துள்—மனைவாழ்க்கையாகிய துக்கத்தின் கண்ணே நின்று; துறவின்கண் சேர்கலா—துறந்துபோக மாட்டாத; மக்கள் பிணத்த—மனிதரை யடக்குவது; சுடுகாடு–; தொக்க—திரண்ட; விலங்கிற்கும் புள்ளிற்கும்—மிருகம் பறவை களுக்கு; காடு—சுடுகாடு யாதெனில்; புலம்கெட்ட—அறிவில்லாத;

புல் அறிவாளர்—புல்லிய அறிவுடையார்; வயிறு—; என்றவாறு.

துறவில் திடமில்லா மனிதரெல்லாம் சுடுகாட்டை யடைவர். விலங்கு, பறவை முதலானவற்றுக்கு அடையுஞ் சுடுகாடு எவ்விடமென்னில், அறிவில்லார் வயிறே சுடுகாடாம். முற்பிறப்பில் இப்படி பலவற்றையுங் கொன்(றுதின்)றவர்கள் இம்மையிலே (பிறந்து) புருடாயுள் அளவாகத் துறவுக்கு மனசு ஒருப்படாமல் (மறுமைக்குறுதியை யிழந்து மனைவாழ்க்கையிலே நின்று) துன்புற்று உழல்வரென்பதாம்.

பதுமனார்:— மனைவாழ்க்கை என்கின்ற துன்பத்தின் கண்ணே யொழுகித் துறவறத்தின்கட்சென்று, பிறப்பறுக்க மாட்டாத மக்களது பிணத்தவாயிருக்குஞ் சுடுகாடுகள். திரண்ட விலங்கிற்கும் பறவைக்குஞ் சுடுகாடாவன அறிவுகெட்ட புல்லறிவாளர் வயிறு என்றவாறு.

துக்கத்துள் தூங்கி—மனைவாழ்க்கையென்கின்ற துன்பத்தின்கண்ணே ஒழுகி. பிணத்த—மக்களது பிணத்தன. புலன் கெட்ட—அறிகெட்ட.

விளக்க உரை:— துக்கத்துள் தூங்கி-மனைவாழ்க்கையாகிய துக்கத்தின்கண்ணே நின்று; துறவின்கண் சேர்கலா-துறந்து போகமாட்டாத; மக்கள் பிணத்த-மக்களை யடக்குவது; சுடுகாடு—; தொக்க-திரண்ட; விலங்கிற்கும் புள்ளிற்கும்-விலங்குகளுக்கும் பட்சிகளுக்கும்; காடு-சுடுகாடாவது (யாதெனின்); புலன்கெட்ட அறிவுகெட்ட; புல் அறிவாளர்-புல்லறிவினையுடையார்; வயிறு-; என்றவாறு.

முற்பிறப்பிலே இப்படி பலவற்றையுங் கொன்றுதின்றவர்கள் இப்பிறப்பிலுந் துறக்கமாட்டாமல், மனைவாழ்க்கையிலே நின்று (நெஞ்சு) துக்கப்படுவர் என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

கொலை மறுத்தல்:—நரகசேடமானது, மறுசென்மத்தினும் துக்கம் தருமென்பதற்கு மேற்கோளாக வரும்.

—கொலை மறுத்தல். 4.

ஒப்புமைப் பகுதி:—

'சுடுகாடு':—

"[1]களரிபரந்து கள்ளி போகிப்
பகலுங் கூவுங் கூகையொடு பிறழ்வா
வீம விளக்கிற் பேஎய் மகளிரொடு
அஞ்சுவந் தன்றிம் மஞ்சுபடு [2]முதுகாடு
நெஞ்சமர் காதல ரழுத கண்ணீர்
என்புபடு சுடலை வெண்ணீ றவிப்ப
எல்லார் புறனுந் தான்கண் டுலகத்து
மன்பதைக் கெல்லாந் தானாய்த்
தன்புறங் காண்போர்க் காண்பறி யாதே".

—புறம். 356.

குறிப்பு:-:-

மனைவாழ்க்கையாகிய துக்கத்தினின்றும் நீங்குதல் செய்யார் என்பார் 'துக்கத்துள் தூங்கி' என்றார். சிறிதும் அருளில்லாது ஊனுண்ணலாகிய தீவினைகளைச் செய்வாரை இழித்து 'புலங்கெட்ட புல்லறிவாளர்' என்றார். மெய்யறிவிலராய், சான்றோர் கூறும் உறுதிமொழிகளையும் கேளாத இயல்பினர் புல்லறிவாளர் எனப்பட்டனர். சுடுகாடு—பால் பகா அஃறிணைப் பெயர். பிணத்த—பலவின்பால் படர்க்கை வினைக்குறிப்பு முற்று.

---

[1] காடு.

[2] சுடுகாடு.

இப்பாட்டான் புலாலுண்ணல் மறுக்கப்பட்டது.

(க).

122. இரும்பார்க்குங் காலராய் ஏதிலார்க்கு ஆளாய்க்
கரும்பார் கழனியுட் [1]செல்வர்—சுரும்பார்க்குங்
காட்டுளாய் வாழுஞ் சிவலுங் குறும்பூழுங்
கூட்டுளாய்க் கொண்டுவைப் பார்.

தருமர்:- என்பது. சுரும்பு ஆர்க்கும்—வண்டுகள் ஆரவாரிக்கும்; காட்டுள் ஆய் வாழும்—காட்டிடை வாழாநிற்கும்; [2]சிவலும் [3]குறும்பூழும்—சிவலக்காடை, குறுங்காடை முதலாகியவற்றை; கொண்டு—பிடித்துவந்து; கூட்டுள் ஆய் வைப்பார்—கூட்டிலே அடைத்து வைப்பவர்; இரும்பு ஆர்க்கும்—[இப்பிறப்பிலே] விலங்குபூண்ட; காலர் ஆய்-காலினையுடையராய்; ஏதிலார்க்கு ஆளாய்-அன்னியர்க்கு அடிமைப்பட்டு; கரும்பார் கழனியுள்-[மறுமையிலே] இருண்ட [4]பாராகிய துன்பமென்னும் பயிர்விளையும் நரகமாகிய வயலிலே; செல்வர்-; என்றவாறு.

இம்மையில் இப்படித் துன்பத்தை அனுபவிப்பாரைநோக்கி, இவர் முற்பிறப்பில் இப்படிப் பறவை முதலானவற்றைச் சிறை செய்தவரென்று உலகிலுள்ளோர் அறியக்கூறி, மேலைக்கும் இவர் நரகத்தை யடைவரென்பதும் அறிவுறுத்தி, இப்பிறப்பில் இவ்வகை செய்தாரும் மேலைக்கு இப்படி யனுபவிப்பரென்று சொல்லியவாறு.

ஆதலால் தீயவற்றிற்கு அஞ்சி நல்வினைக்கு ஒருப்பட

பா-ம்:-[1]'சேர்வர்'.

[2](1) கவுதாரி; (2) காடை வகை. [3]காடை; 'குறும்பூழ் போற் கொழுங்கான் முகை சுமந்தன.

(சீவக. 1651.)

[4] பூமியாகிய.

வேண்டுமென்பது கருத்து.

பதுமனார்:— (வண்டுகள் ஆரவாரிக்குங்) காட்டுள்ளே தமக்குரியவாய் வாழ்கின்ற, சிவல் முதலாயினவற்றைக் கூட்டுள்ளே சிறைசெய்து தம்வயத்தனாவாக்கி, அவற்றதனாய பயன் கொள்வார் தாமும் மறுபிறப்பிற் றளைபட்டுப் பிறர்க்கு ஆளாய்க் கரும்பார் கழனியிடத்தே செல்வார் என்றவாறு.

கரும் பார் கழனி—இருள் செறிந்து துன்பம் விளைக்கு நிலம்; ஆவது நரகம்.

விளக்க உரை:—சுரும்பு ஆர்க்கும்—வண்டுகள் ஆரவாரிக்கும்; காட்டுள் ஆய் வாழும்—காட்டுளே வாழ்கிற; சிவலும் குறும் பூழும்—சிவல் காடை முதலியவற்றை; கொண்டு—பிடித்து வந்து; கூட்டுள் ஆய் வைப்பார் — சிறைசெய்து கூட்டிலே வைத்துத்திரிபவர்; இரும்பு ஆர்க்கும்—விலங்கு பூண்ட; காலர் ஆய்—(காலினையுடையராய்); ஏதிலார்க்கு ஆள் ஆய்—அன்னியர்க்கு அடிமைப்பட்டு; கரும்பார் கழனியுள்— [மறுபிறப்பில்] இருண்ட பாராகிய, துன்பத்தை விளைக்கிற நரகமென்னுங் கழனியிலே; சேர்வர்—சேருவர் [இருமையினும் இப்படி யனுபவிப்பார்] என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

இ. கொ.:—“ இரும்பார்க்கும் ....ஆளாய்-என்பதுபோல நின்றன, கெடுதல் விகாரப்பட்டு நின்றனவென்பாரும், ஆய் என்னுமொழி வருவிக்கவேண்டு மென்பாருமுளர்”.

—இ.கொ.சூ. 89.

பிரயோக:— “இரும்பார்க்கும் காலராய் ஏதிலார்க்கு ஆளாய்..........என்னும் பாட்டுக்கள்போல ஆய் என்னுஞ் சன் கொடுத்து விரவாவினை யெச்சமாக்குவர். இவ்வினையெச்சங் களைக் கிரியாவிசேடணமென்பர்.

—சூ. 39.

கொலை மறுத்தல்:—நரகசேடமானது மறுசென்மத்திலும் துக்கம் தருமென்பதற்கு மேற்கோளாக வரும்.

—கொலைமறுத்தல். 4.

ஒப்புமைப் பகுதி:-

"பூவை கிளி தோகை புணரன்னமொடு பன்மா
யாவையவை தங்கிளையி னீங்கியழ வாங்கிக்
காவல் செய்து வைத்தவர்க டங்கிளையி னீங்கி
போவர் புகழ் நம்பியிது பொறிலது கண்டாய்".

—*சீவக*. 2875.

குறிப்பு:-

கரும்பார் என்பதற்கு கருநிலம் என்றும் கழனி என்பதற்கு விளைநிலம் என்றும் பொருள் கூறுவர். கருநிலமென்பது நீரில், மலையில், வனத்தில் பயன்படாத நிலம்; "வெற்பினீரினில் வெவ்வனத்தில், கறைபடு மிகுதிதானே கருநிலமாகுமென்ப" என்ற நிகண்டும் காண்க. இனி வேறுசிலர் கரும்பு ஆர் கழனி எனப் பதச்சேதம் செய்து கரும்புகள் நிறைந்த கழனி எனப் பொருள் கூறுவர்.

இரும்பு, கருவியாகுபெயராய் இரும்பு விலங்கைக் குறித்தது- இப்பாட்டான் பறவைகளைக் கொன்று தின்பதேயன்றி அவற்றைப் பிடித்துக் கூட்டிலடைத்து வைத்தலும் தீவினை யென்று கூறப்பட்டது. சீவக சிந்தாமணியிலும் சீவகன் முற் பிறப்பில் ஓர் அன்னப்பார்ப்பைச் சிறைசெய்தமையான் மறு பிறப்பில் சிறைப்பட்டான் என்று கூறியிருத்தல் காண்க.

(உ).

**123. அக்கேபோல் அங்கை ஒழிய விரலழுகித்
துக்கத் தொழுநோய் எழுபவே—அக்கால்
அலவனைக் காதலித்துக் கான்முரித்துத் தின்ற
பழவினை வந்தடைந்தக் கால்.**

தருமர்:—என்பது. அக்கால்—முற்பிறப்பிலே; அலவனை—நண்டுகளை; காதலித்து—விரும்பி அதனைப்பிடித்து; கால் முரித்து—கால்களை முரித்து; தின்ற—; பழவினை வந்தடைந்தக்கால்—பழைய தீவினை வந்த காலத்தில்; அக்கே போல்—அக்குமணி போலே; அங்கை [1]ஒழிய—; விரல் அழுகி—விரலுள்ளதெல்லாம் எலும்புதோன்றும்படி அழுகிவிழ; துக்கத் தொழுநோய் எழுப—இப்படித் தொழுநோயிலே நெஞ்சு துக்கப்பட்டுத் திரிவர் என்றவாறு.

இவ்வகைத்தாகிய நோயில் அழுந்துவார் முன் இப்படி தீவினைசெய்தவரென்று, உலகத்திலுள்ளோர் தீவினைக்கு அஞ்சி நல்வினைக்கு ஒருப்படும்படிக்கு அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—முற்பிறப்பின்கண் அலவனைக் காதலித்துக் கால்முரித்துத்தின்ற பழவினை வந்தடைந்தக்கால் அங்கையொழிய அக்குமணிபோலுங் கைவிரலெல்லாம் அழுகிக் குறையத் துன்பமுறுந் தொழுநோய் எழுவர் என்றவாறு.

அக்கு—சங்குமணியின் நிறம்.

விளக்க உரை:—அக்கால்-முற்பிறப்பிலே; அலவனை—நண்டை; காதலித்து—(விரும்பி யதனைப்) பிடித்து வந்து; கால் முரித்து—காலை முரித்து; தின்ற—; பழவினை—; வந்து அடைந்தக்கால்—வந்தடுத்த போது; அக்கேபோல்-அக்குமணிபோல; அங்கை ஒழிய-; விரல் அழுகி-விரலுள்ளதெல்லாம் எலும்பு தோன்ற அழுகிவிழுந்து; துக்கத் தொழுநோய் எழுப-இப்படித் தொழுநோயிலே நெஞ்சு துக்கப்பட்டுத் திரிவர் என்றவாறு.

அக்கு—சங்கு மணியின் நிறம்.

---

[1]நீங்க.

மேற்கோள் பகுதி:—

பதுமனார்:-'உயிருடம்பின் நீக்கியார் என்ப செயிருடம்பின், செல்லாத்தீ வாழ்க்கை யவர்' என்ற குறளின்கண், செயிருடம்பினர் ஆதல் ,அக்கேபோல் அங்கையொழிய விரலழுகித் துக்கத் தொழுநோய் எழுபவே' என்பதனாலும் அறிக'' என மேற்கோள் காட்டி உரை கூறுவர்.

ஒப்புமைப் பகுதி:-

"பிறர்க்கின்னா முற்பகல் செய்யின் தமக்கின்னா
பிற்பகல் தாமே வரும்".

-குறள்.319.

"பிறர்க்கின்னா செய்வது நன்றாமோ மற்று"

-கலி.62-8.

"நெடியது காண்கிலாய் நீயெளியை நெஞ்சே!
கொடியது கூறினாய் மன்ற—அடியுளே
முற்பகற் கண்டான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் கண்டு விடும்".

-பழ.130.

"முற்பகற் செய்தான் பிறன்கேடு தன்கேடு
பிற்பகற் காண்குறூஉம் பெற்றியகாண்"

-சிலப்.வஞ்சின.3-4.

"பிறர்க்கின்னா செய்தலின் பேதைமை யில்லை"

-அறநெறி.95.

"முற்பகற் செய்யிற் பிற்பகல் விளையும்"

-கொன்றைவேந்தன்.

"முற்பகல் செய்வினை பிற்பகல் உறுநரின்',

-பெருங்.1:56-259.

"முன்னை செய்வினை இம்மையில் வந்து மூடுமாதலின்"

-சுந்தரர்.திருப்புறம்.4.

"முற்பக லோர்பழி முடிக்கின் மற்றது
பிற்பகல் தமக்குறும் பெற்றி யென்னவே"
—கந்த. 2-ஆம் நாள். சூரபன்.365.

குறிப்பு:—

தொழுநோய்-இருபெயரொட்டுப் பண்புத்தொகை. நோய் எழுப என்றது திணைவழுவமைதி. தின்ற என்பது காரணப் பொருட்டில்வந்த இறந்தகாலப் பெயரெச்சம்; சங்கு சுட்ட சுண்ணாம்பு என்பதுமது. கால்-வினையெச்ச விகுதி. இதனான் நண்டு முதலிய பிராணிகளையும் கொன்று தின்னல் தீவினை யென்னப்பட்டது.

(௩).

124. [1]நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்
எரிப்பச்சுட்டு எவ்வ [2]நோய் ஆக்கும்—பரப்பக்
கொடுவினையர் ஆகுவர் கோடாருங் கோடிக்
கடுவினையர் ஆகியார்ச் சார்ந்து.

தருமர்:— என்பது. நெய்போல்வதூஉம்—நெய்போலுங் குளிர்ச்சியுடையதும்; நெருப்பு அழல் சேர்ந்தக்கால்—நெருப்பின் தழலைச் சார்ந்தால்; எரிப்பச் சுட்டு—[அதுவும் நெருப்பின் தன்மையாய் அதனை யண்டினபேர்க்கு] எரிப்பெடுக்கும்படி சுட்டு; எவ்வ நோய் ஆக்கும்—மிகவும் துன்பமாகிய நோயைச் செய்யும்; [அதுபோலவே] கோடாரும்—மனதில் கோட்டமில்லாதாரும்; கடுவினையர் ஆகியார்—தீவினையாளரை; சார்ந்து—சேர்ந்து; கோடி—கோட்டமுடையரால்; பரப்ப—மிகவும்; கொடுவினையர் ஆகுவர்—தீவினையராகுவர் என்றவாறு.

'கோடாருங் கோடி' என்றது மனநன்மையுடையவருந்

பா-ம்!—[1]'நெருப்பெழச் சேர்ந்தக்கால்'
[2]'நோ யார்க்கும்'.

தீவினையாளரைச் சேர்ந்தால் தமது நன்மைகெட்டுத் தீவினையர் ஆவர். அஃதென்போலவென்னில் நெய், தண்ணீர் முதலானது மிகவுங் குளிர்மையுடையது. நெருப்பைச் சேர்ந்தபடியினாலே தன்குணங்கெட்டு நெருப்பின் தன்மையானாற்போல, நல்லவருந் தீயவரைச் சேரில் தீயவராவர் என்பதாம்.

இப்பாட்டு கூடாநட்பு. இவ்விடத்திற் சேர்த்தது ஏதெனில் முன் தீவினையினால் இப்பிறப்பில் தீவினையாளரைச் சேர்ந்து, பின் நரகத்தாவது நோக்கித் தீவினையரென்னும் பேர் இம்மைக்கும் எய்துதலால், இதனை இவ்வதிகாரத்திற் சேர்த்துத் தீவினையாளரைச் சேர்வதே தீவினைசெய்வதென வதனை யஞ்சுவதாக அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—நெருப்பின் வெம்மையைச் சேர்ந்த நெய்யுங் கொதிப்பச் சுட்டுத் துன்பநோயை யாக்கும். அதுபோலக் கோட்டமில்லாதாரும் அஞ்சத்தக்க வினையராகியாரையடைந்து பிறர்க்குக் கோட்டத்தைச் செய்து மிகவும் கொடிய வினையராவர் என்றவாறு.

நெய் போல்வதூஉம்—நெய்போற் குளிர்ந்ததுவும். எவ்வ நோய்—துன்பநோய். பரப்ப—மிகவும். கோடாரும்—கோட்டமில்லாதாரும்.

விளக்க உரை:—நெய் போல்வதூஉம் - நெய்யினுடைய குளிர்ச்சியை யுடையதும்; நெருப்பு அழல் சேர்ந்தக்கால்—நெருப்பின் அழலைச் சேர்ந்தபொழுதே; எரிப்பச் சுட்டு—எரிக்கும்படி சுட்டு; எவ்வநோய் ஆக்கும்—மிகவுந் துன்பமாகிய நோயைச் செய்யும்; கோடாரும்—கோட்டமில்லாதவரும்; கடு வினையர் ஆகியார்-தீவினையாளரை; சார்ந்து-சேர்ந்திணங்கி; கோடி—கோட்டமுடையராய்; பரப்ப—மிகவும்; கொடு வினையர் ஆகுவர்—தீயவினையராவர்; [நல்லவரும் பொல்லாதவராவர்] என்றவாறு.

மேற்கோள் பகுதி:—

நச்:—"நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல்வதூஉம், எரிப்பச்சுட் டெவ்வநோ யாக்கும்—எனப் போலுமென்னும் இடைச்சொல்........நெய்யையும் புனைந்து நின்றவாறு காண்க.
—தொல். சொல். இடை. சூ. 30.

சேனா:—"போலும் போல்வது என்னுந் தொடக்கத்துக்குப் பலவாய்ப்பாடுந் தழுவுதற்குப் போலியென்றார். 'நெருப்பழற் சேர்ந்தக்கா னெய்போல்வதூஉம்' என்பதுமது.
—தொல். சொல். இடை.. சூ. 30.

இ. வி. } இ. கொ. } :—"நெருப்பழல்..........ஆக்கும்: எனப் போல்வதும் சிறுபான்மை அசை நிலையாதலும்...."
—இ. வி. சூ. 277.
—இ. கொ. சூ. 90.

பிரயோக:—"நெருப்பழற் சேர்ந்தக்கால் நெய்போல் வதூஉம்: எனவும்....குற்றெழுத்து நிற்குமிடத்தும் சிறுபான்மை அசைநிலையாக அளபெடுத்து வந்தது காண்க".
—பிரயோக. சூ. 5.

கொலைமறுத்தல்:—அங்கு மேற்கொளாக வரும்.
—கொலைமறுத்தல். 4.

ஒப்புமைப் பகுதி:-

"தீயகந்தமுள்ள தொன்றைச் சேர்ந்திருப்ப தொன்றற்குத்
தீயகந்த மேறுந் திறமதுபோல்—தீய
குணமுடையோர் தங்களுடன் கூடி யிருப்பார்க்குக்
குணமதுவே யாஞ்செறிவு கொண்டு".
—நீதிவெண்பா.

குறிப்பு:—

நெய்போல்வதூஉம், கோடாரும் என்றதின் உம்மைகள் உயர்வு சிறப்பும்மைகள். முன்னது அந்நெய்யின் தன்மையையும்,

புண்களை ஆற்றும் குணத்தையும், பின்னது கோடாத ஒழுக்கத்தினரென்பதையும் குறித்தன. போல்வதூஉம் என்றதன் அளபெடை செய்யுளோசை நிறைக்க வந்தது. 'கோடி கடுவினையர்' எனக்கொண்டு 'மிகப்பலவாகிய தீவினைச் செய்கைகளையுடையார்' என உரை கூறுவாருமுண்டு.

(சுசு).

125. **பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்**
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு.

தருமர்:—என்பது. பெரியவர் கேண்மை—பெரியவருடன் கொண்ட நட்பானது; பிறைபோல—பிறையைப்போல; நாளும்—நாள்கள்தோறும்; வரிசை வரிசையா நந்தும்—அதிகம் அதிகமாக வளர்ந்துவரும்; சிறியார் தொடர்பு—சிறியாருடைய நட்பு; வான் ஊர்—வானிலே செல்லும்; மதியம்போல்—மதியம் போல; வைகலும்—நாள்தோறும்; வரிசையால்—முறைமையாக; தானே தேயும்—தேய்ந்து ஒருபயனும் இல்லையாம் என்றவாறு.

நிறைந்த (மதியம்) நாள்தோறும் தேயுமாப்போல அறிவிலார் நட்புத்தேயும். அவருடன் நட்புக்கொண்டவரும் அறிவில்லாராயிற்று. நன்மையாளரைச் சேர்ந்து இம்மைக்கு நல்லவனென்றும், மறுமைக்கு நல்லொழுக்கத்தினாலே சுவர்க்காதிலோகங்களை அனுபவியாமற் பொல்லாரைச் சேர்வது முன்னைத் தீவினை (என்றும) தற்கஞ்ச வேண்டுமென்பதாம்.

பதுமனார்:—பெரியோர் பிறரொடு கொண்டநட்புப்பிறைபோல நாடோறும் முறைமுறையாக வளரும். சிறியார் பிறரோடு கொண்டநட்பு விசும்பின்கட் செல்லு மதியம்போல நாடோறும் முறை முறையாலோர் காரணமின்றித்தானே குறையும் என்றவாறு.

வரிசை—முறை. தானே—ஒரு காரணமின்றித்தானே. முன்பு பெருத்துப் பின்பு சிறுகித்தேய்தல் தீவினை.

விளக்க உரை:— பெரியவர் கேண்மை — பெரியவருடன் கொண்டநட்பு; பிறைபோல—; நாளும்—நாள்தோறும்; வரிசை வரிசையா—முறை முறையாக; நந்தும்-வளரா நிற்கும்; சிறியார் தொடர்பு— சிறியாருடன் கொண்ட நட்பு; வான்ஊர்—வானிலே செல்லும்; மதியம்போல் — மதியம்போல; வைகலும்—நாள் தோறும்; வரிசையால்—முறையாக; தானே—ஒருகாரணமின்றி (த்தானே); தேயும்—தேய்ந்துவரும் என்றவாறு.

வரிசை—முறை. தானே—ஒருகாரணமின்றித் தானே. முன்பு பெருத்துப் பின்பு சிறுத்துத் தோன்றுதல் தீவினை.

மேற்கோள் பகுதி:-

நன். வி:-"இவ்வினைமுதற் பொருள், "பெரியவர் .... தொடர்பு" என்பதனுள், கேண்மை தானே நந்தும்; தொடர்பு தானேதேயும் எனச் செயப்படுபொருட் கண்ணும் வரும்".

—நன். வி. சூ. 296.

பிரயோக } :—"குணவிருத்திகாரர் ... . "பெரியவர்
இ. கொ. } கேண்மை....தொடர்பு" என்றும் இவற்றுள் 'தாமே', 'தானே' என்னுஞ் சுயமேவபதந் தொடர்ந்த 'வரும்', 'நந்தும்', 'தேயும்' என்னும் [1]அகன்மக பரஸ்மைபதம் என்னுஞ் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுச் சொல்லோடு வருங் [2]கருமகருத்தா வென்பர்.

—பிரயோக. சூ. 11.
—இ. கொ. சூ. 26.

நச்.— "ஊர்தல் — ஈண்டுப் போதல் மேற்று; "வானூர் மதியம் போல". —சீவக. 286.

---

[1]அகன்மகம்—செயப்படுபொருள் குன்றியவினை.

[2]செயப்படுபொருள் வினைமுதல் போல் வருவது.

ஒப்புமைப் பகுதி:-

''கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின் றற்றே-நுனிநீக்கித்
தூரிற்றின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈரமிலாளர் தொடர்பு''.

-நாலடி. 138.

''நளிகடல் தண்சேர்ப்ப! நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை-விளிவின்றி
அல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு''.

-நாலடி. 166.

''கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே-குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்று
மதுரமி லாளர் தொடர்பு''.

-நாலடி. 211.

''பெருகுவது போலத் தோன்றிவைத் தீப்போல்
ஒருபொழுதுஞ் செல்லாதே நந்தும்-அருகெல்லாஞ்
சந்தன நீள்சோலைச் சாரன் மலைநாட!
பந்தமி லாளர் தொடர்பு''.

-நாலடி. 234.

''நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு''.

-குறள். 782.

''குடமுதற் றோன்றிய தொன்றுதொழு பிறையின்
வழிவழிச் சிறக்கநின் வலம்படு கொற்றங்
குணமுதற் யோன்றிய வாரிருண் மதியில்
தேய்வன கெடுகநின் றெவ்வ ராக்கம்''.

-மதுரைக்காஞ்சி. 193-6.

''வளர்பிறை போல வழிவழி பெருகி.''

-குறுந். 289.

"முறைமையில் தேயும் நிறைமதி நீர்மை, நண்பு"

—பெருங். 1:46:309.

"சுருக்க மின்றிச் சுடர்பிறை போலப், பெருக்கம்".

-பெருங். 2:6:35.

3—4:—

"உலகறியத் தீரக் கலப்பினு நில்லா
சிலபகலாஞ் சிற்றினத்தார் கேண்மை".

-நாலடி. 204.

"சிறியார் கொண்ட தொடர்பிற்
செல்லச் செல்ல வஃகுநெறி"

-சீவக. 1416.

குறிப்பு:—

அறிவுடைய பெரியோர் ஒருவருடைய குணத்தை நன்காராய்ந்தபின் நட்புப் புரிவர். ஆகவே அவரது நட்பு நாள்தோறும் பிறைபோல வளரும்தன்மையது. மற்று சிறியரோ யாதுமாராயாது நட்டு, பின்பு அவர்குணங் கண்டவுடன் நட்பு சுருங்குவர். ஆகவே அவர்நட்புக்கு முழுமதியம் உவமையாயிற்று. இப்பாட்டான் தீவினை தருவதான சிறியார் நட்பினை யஞ்சிவிடுக என்பது கூறப்பட்டது. (ரு).

126. சான்றோர் எனமதித்துச் சார்ந்தாய்மற் சார்ந்தாய்க்குச்
சான்றாண்மை சார்ந்தார்கண் இல்லாயிற்-சார்ந்தோய்கேள்!
சாந்தகத்து உண்டென்று செப்புத் திறந்தொருவன்
[1]பாம்பகத்துக் கண்டது உடைத்து.

பா-ம்:-[1]'பாம்பு கண்டன்ன துடைத்து'.

தருமர்:— என்பது. சான்றோர் என மதித்து—இவர் அமைந்தவரென்று கருதி; சார்ந்தாய்மன்-சேர்ந்தவனே!; சார்ந் தாய்க்கு-மற்று அவரிடத்துச் சார்ந்த உனக்கு; சார்ந்தார் கண் -நீ சாரப்பட்டவர்க்கு; சான்றாண்மை அமைதியென்பது; இல் ஆயின்—இல்லையாகில்; சார்ந்தோய்கேள்! — சார்ந்தவனே கேளாய்!; ஒருவன்—; [1]சாந்து அகத்து உண்டு என்று— செப்பிலே சார்ந்திருக்கிறதென்று; செப்புத்திறந்து—செப்பைத் திறந்து; அகத்து—அதனுள்ளே; பாம்பு கண்டது உடைத்து— பாம்பைக் கண்டவன் தம்மைபோலும் என்றவாறு.

ஒருவன் மனமறியாது அவன் நட்புக்கொண்டு பின்பவன் செய்யும் அறியாமையால் துயரமெய்துவது முன்னைத் தீவினை யாம் என்பதுதோன்ற, இப்பாட்டு இல்வதிகாரத்துச் சேர்த்துத் தீவினைக்கஞ்சி நல்வினைக்கு ஒருப்படும்படி யறிவுறுத்தியது.

பதுமனார்:— அமைந்தோரெனக் கருதிச் சிலரைச் சார்ந்தாய். சார்ந்த நினக்கு நீ சாரப்பட்டவர்மாட்டு மதித்த சான்றாண்மை யில்லையாயிற் சார்ந்தாய் நீ கேளாய்! உள்ளே சார்ந்துண் டென்று செப்பைத் திறந்து அதனுள்ளே யொருவன் பாம்பு கண்டாற்போல தன்மையை யுடைத்து என்றவாறு.

சான்றோர்—அமைந்தோர்

விளக்க உரை:— சான்றோர் என மதித்து — இவர் அமைந்தோரென்று கருதி; சார்ந்தாய்மன்—சேர்ந்தவனே!; சார்ந்தாய்க்கு—மற்று (அவரிடத்துச்) சார்த்த நினக்கு; சார்ந் தார்கண்—நீ சாரப்பட்டவர்க்கு; சான்றாண்மை—அமைதி யென்பதொன்று; இல் ஆயின்—இல்லையாகில்; சார்ந்தோய் கேள்!—சார்ந்தவனே கேளாய்!; சாந்து அகத்து உண்டு என்று—செப்பிலே சாந்து இருக்கிறதென்று, செப்புத்திறந்து— செப்பைத்திறந்து; ஒருவன்—பார்த்தானொருவன்; அகத்து—

[1] சந்தனம்.

அதினுள்ளே; பாம்பு கண்டது உடைத்து—பாம்பு கண்டாற் போலும் (தன்மையை யுடைத்து) என்றவாறு.

முன்செய்த தீவினை யொருவன் நெஞ்சறியாமல் அவனைச் சேர்வித்துப் பின்பவன் செய்யும் அறியாமை கண்டு, நெஞ்சு துக்கமாக்கிவிக்கும் என்பது போதரத் தீவினையச்சத்திலே சேர்க்கப்பட்டது.

மேற்கோள் பகுதி:-

பேரா:—"சாந்து......உடைத்து: என்பது அச்சமாகலின் அச்சவுவமை."

—தொல். பொருள். உவம. சூ. 19.

குறிப்பு:-

மன்—அசைநிலை; மிகுதிப்பொருளையும் காட்டியதாகக் கொள்ளலுமேற்கும் சார்ந்தாய்க்கு—முன்னிலை ஒருமை வினை யாலணையும் பெயர். சான்றாண்மையானது நற்குணங்களால் நிறைந்து அவற்றையாளுந் தன்மை. குணத்தையும் செயலையும் பலவாறு ஆராய்ந்து நட்புக்கொள்ளவேண்டுமென்பதாம்.

(சா).

127. யாஅர் ஒருவர் ஒருவர்தம் உள்ளத்தைத்
தேருந் [1]துணைமை யுடையவர்?—சாரல்
கனமணி நின்றிமைக்கு நாட! கேள் மக்கள்
மனம்வேறு செய்கையும் வேறு.

பா—ம்:—[1]'துணிமை'.

தருமர்:— என்பது. சாரல்—மலைச்சாரலிலே; கனமணி நின்று இமைக்கு நாட!-மிகுந்து பிரகாசிக்கும் மணிகளையுடைத் தாகிய நாடனே!; கேள்—கேளாய்; மக்கள் மனம் வேறு—மனிதர் மனதில் எண்ணம் வேறு; செய்கையும் வேறு—; [அல்லாது உள்ளும் புறமும் ஒன்றாவார் அரிது] ஒருவர்—; ஒருவர்தம்—மற்றொருவருடைய; உள்ளத்தை—நெஞ்சினை; தேரும் துணைமையுடையவர்—அளவிட்டறிய வல்லவர்; யார்?—யாவர்? என்றவாறு.

அவர் நெஞ்சினை வேறுபடுத்திப் பொல்லாதவராக ஆக்கு விப்பது முன்னைத் தீவினை. அதனால் ஒருவர் மனம் அளவிடப் படாதாகித் தீவினையாளரைச் சேருவிப்பதும் அத்தீவினை எய்த லால். அத்தீவினைக்கஞ்சி நன்னெறியின் ஒழுகவேண்டும் என்பதாம்.

பதுமனார்:— சாரற் கனமணி நின்றிமைக்கு நாடனே! கேளாய். மக்கள் மனங்களுட் கருதுவது வேறொன்று; செய் வது வேறொன்று. ஆதலால் பிறரொருவர் தம்முள்ளத்தைத் தேர்ந்தறியும் அறிவினையுடையார் யாவர்? ஒருவருமில்லை.

தீவினையாளரை யஞ்சுக என்றவாறு.

விளக்க உரை:— சாரல்—மலைச்சாரலிலே; கனமணி—மிக்க மணிகள்; நின்று இமைக்கு நாட!—நின்று விளங்கு நாடனே!; கேள்—கேளாய்; மக்கள் மனம் வேறு-மக்கள் மனதிற் கருதுவதும் வேறு; செய்கையும் வேறு-செய்வதும் வேறொன்று; ஒருவர்—;ஒருவர் தம் உள்ளத்தை-பரத்தையர் நெஞ்சை; தேரும் துணைமை யுடையவர்-அளவிட்டு ஆராய்ந் தறியவல்லவர்; யார்?—யாவர்? என்றவாறு.

அவர் நெஞ்சை வேறுபடுத்தி இப்படிச் செய்விப்பதுந் தீவினைப்பயன். இப்படியொத்த தீவினையாளரை யஞ்ச வேண்டும் என்பதாம்.

யாவர் ஒருவர்தம் உள்ளத்தை.........உடையவர்-பிறர் ஒருவர் தம் உள்ளத்தைத் தேரும் அறிவினையுடையவர் யாவர்? ஒருவருமில்லை.

ஒப்புமைப் பகுதி:-

"கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு
சொல்வேறு பட்டார் தொடர்பு".

—குறள். 819.

"மனம்வேறு சொல்வேறு மன்னுதொழில் வேறு
வினைவேறு பட்டவர்பால் மேவும்-அனமே
மனமொன்று சொல்லொன்று வான்பொருளும் ஒன்றே
கனமொன்று மேலவர்தம் கண்".

—நீதி. 75.

"நட்பிடைக் குய்யம்வைத்து எய்யா வினைசூழ்ந்து
வட்கார் திறத்தராய் நின்றார்க்குத்-திட்பமா
நாளுலந்த தன்றே நடுவன் நடுவின்மை
வாளா கிடப்பன் மறந்து".

—நீதிநெறி. 57.

குறிப்பு:-

அறிவு துணை எனப்பட்டது, ஒன்றைத் தேர்தற்குக் கருவி அது ஆகலான். சாரல்-தொழிலாகு பெயர். நன்மணிகள் மலைப்பக்கங்களில் கிடப்பினும் தங்கள் பிரகாசத்தான் பலர்க்கும் புலப்படுத்திக் கொள்ளுதல் போல, ஒருவரின் மனம், மொழி, மெய்களின் தூய்மைதானே பிறர்க்குப் புலப்படும் என்பது தொகைமொழி. இப்பாட்டான் ஒருவரைப் பலவழியால் பலநாளும் ஆராய்ந்து நட்புக்கொள்ள வேண்டும் என்பது கூறப்பட்டது.

(எ).

128. உள்ளத்தால் நள்ளாது உறுதித் தொழிலராய்க்
கள்ளத்தால் நட்டார் [1]கழிகிளைமை [2]தெள்ளிற்
புனற்செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட!
மனத்துக்கண் மாசாய் விடும்

தருமர்:- என்பது. புனல் செதும்பு நின்று அலைக்கும்—அருவிகள் அடிவாரத்தே விழுந்து [3]செதும்பி யலையா நின்ற; பூங்குன்ற நாட!-பொலிவினையுடைய மலைநாடனே!; தெள்ளில்-விசாரிக்கும்பொழுது; உள்ளத்தால்-மனத்தால்; நள்ளாது-உறவு பண்ணாது; உறுதித் தொழிலராய்-(தமக்கு உறுதியைச் செய்வித்துக் கொள்ளுந் தொழிலராய்); கள்ளத்தால்-[ஒருவர் பக்கல் தாங்கருதிய பயன் கொள்ளுமளவும்] வஞ்சகத்தால்; நட்டார்—நட்புக்கொண்ட(வரது); கழிகிளைமை-மிக்கவுறவானது; மனத்துக்கண்-பின்பு மனத்தினிடத்தே; மாசாய் விடும்-குற்றமாய் விடும் என்றவாறு.

ஒருவரிடத்தொரு காரியங் கொள்ளுமளவும் உறவுபோலிருந்தும், அது கொண்டபின் பகைவர் போலாவார் சிலர். அத்தன்மையாரைச் சேரிற் சேர்ந்தவனும் அத்தன்மையாவன். இப்படி வஞ்சிப்பதே பின் அனுபவிப்பதாகிய தீவினையாதலால் இவ்வகைத்தாகியவரைச் சேர்ந்து தீவினையில் ஒழுகாது, அதற்கஞ்சி நன்னெறியின் ஒழுகுதல் வேண்டும் என்பதாயிற்று.

பதுமனார்:— மணி முதலானவற்றைக் கொழித்துக் கொண்டு அருவிப்புனல் [4]அசும்பின்கண்ணே விழுந்து நின்றலைக்கும் பூங்குன்ற நாடனே! ஒருவரோடு ஒருவர் மனத்தால் நட்புச்

பா-ம்:-[1]'கழிகேண்மை'-விளக்கவுரை.

[2]'தெள்ளிப்'-பதுமனார், & விளக்கவுரை.

[3]'செதும்பற் றாமரைச் செவ்விதழ் போல'

—(பெருங் உஞ்சை. 40. 323.);

'இன்னுரைச் செதும்பாற்றுஞ் செவ்வியுள்' —(கலி.48).

செருத்தற்றீம்பால் செதும்பு படப் பிலிற்றிட

—(பெருங். உஞ்சை.49, 112.)

செய்யாது மற்றவராற் றமக்குறுதியைச் செய்வித்துக் கொள்ளுந் தொழிலராய் வஞ்சனையால் நட்புச் செய்தாரது மிக்க கேண்மை; அவர் நட்புக்கொள்ளப்பட்டார்க்கு மனத்தின்கட் †குற்றமாய் விளையும் ஆதலால் அவர் நட்பை யஞ்சுக என்றவாறு.

உறுதித்தொழில் — தமக்கு உறுதியைச் செய்வித்துக் கொள்ளுந் தொழில். செதும்பு—சிறுகியொழுகும் புனல். மாசு, ஈண்டு துன்பம்.

விளக்க உரை:— புனல்—அருவி; தெள்ளி — கொழித்து செதும்பு நின்று அலைக்கும்—அடிவாரத்திலே விழுந்து செதும்பி யலையாநின்ற; பூங்குன்ற நாட!—பொலிவினையுடைய மலை நாடனே!; உள்ளத்தால்—; நள்ளாது—உறவு பண்ணாது; உறுதித் தொழிலராய்—தமக்கு உறுதியைச் செய்வித்துக்கொள் ளுந் தொழிலராய்; கள்ளத்தால்—[அவர் பக்கல் தாங்கருதிய பயனைக் கொள்ளுமளவும்] வஞ்சகத்தால்; நட்டார்—நட்புக் கொண்டவருடைய; கழிகேண்மை—மிக்கவுறவு; மனத்துக்கண்—பின்பு மனத்தின்கண்; மாசாய்விடும்—குற்றமாய்விடும் என்றவாறு.

செதும்பு—சிறுகியொழுகும் புனல். மாசு—துன்பம்.

குறிப்பு:—

மலை அருவியானது மணி முதலானவைகளைக் கொழித்துக் கொண்டுவந்து விழுந்து அலைத்தல்போல, தீவினையாளர்களின் வஞ்சனை யொழுக்கமும் நட்பாகக் கொண்டவர் மனத்தை அங்ஙனம் வருத்திவிக்கும் என்பது தொகைமொழி. மாசு தருவ தனை மாசென்றது உபசார வழக்கு.

(அ).

129. ஒக்கிய ஒள்வாள்தன் ஒன்னார்கைப் பட்டக்கால்
ஊக்கம் அழிப்பதூஉ மெய்யாகும்—ஆக்கம்

---

†குற்றமாய விளையாதலால்.

இருமையுஞ் சென்று [1]சுடுதலால் நல்ல
கருமமே கல்லார்கண் தீர்வு.

தருமர்:— என்பது. ஒக்கிய—பகைவரைக் கொல்வதாகச் சொல்லிவிட்ட; ஒள்வாள்-ஒள்ளிய வாள்; தன்—(தன்னுடைய); ஒன்னார் கைப்பட்டக்கால் — பகைவர் கையில் அகப்பட்ட காலத்து; ஊக்கம்-தம்முடைய மனவெழுச்சியை; அழிப்பதூஉம் —கெடுப்பதும்; மெய்யாகும்—உண்மையாம்; ஆக்கம் இருமையுஞ் சென்று சுடுதலால்—கல்வி யில்லாதவராகிய பொல்லாதாரிடத்துச் சேர்ந்தால், அவர் நெறியே யொழுகப்பட்டு அதனால் சேர்ந்தவர்க்கு இம்மை மறுமையாகிய விருவினையாக்கத்தையும் கெடுப்பதினாலே; கல்லார்கண் தீர்வு—அவரிடத்து நட்புவிடுதல்; நல்ல கருமமே—நல்ல கருமம் என்றவாறு.

தான் [2]சவதரித்த வாள் தனக்கே நன்மை செய்ய வேண்டுமல்லாமல் பகைவரிடத்துப் புகுந்தகாலத்து, அவர்க்கு உறவாகியவர் செயற்படி தம்மை வெழுச்சியைக் கெடுக்குந் தன்மையாகலாமோவென்னில், வாள் யாவர் கைக்கொள்ளினும் அவர் செயற்படியன்றி அதற்கு அறிவில்லையே. அதுபோலத் தீயவினத்தாரைச் சேர்ந்து தாஞ்செய்த தீவினையானதும் அப்படி மாறுபட்டு இருமையுங் கெடுக்கும். அதனால் பொல்லாதாரைச் சேர்ந்த தீவினைக்கஞ்சி நல்வினையில் ஒருமைப்படவேண்டு மென்பதாம்.

பதுமனார்:— பகைவரை எறிய ஒக்கிய வாளே அப்பகைவர் கைப்பட்டக்கால், ஒக்கினவன் தன்னை வலிகெடுப்பது மெய்ம்மையாகும். அதுபோலவு மன்றியே கல்லாதாரையாக்கிய வாக்கம், இம்மையு மறுமையும் ஆக்கினவன் தன்னைச் சென்று சுடுமாதலால், அக்கல்லாதாரைவிட்டு நீங்குதல் நல்ல கருமம் என்றவாறு.

பா-ம்:—[1]'சிதைத்தலால்'.

[2]சம்பாதித்த.

பகைவரை எறிய [1]ஒக்கிய ஒள்வாள் ஊக்கமழிப்பது, வாளி முந்தவன் ஊக்கமழி(வது). ஆக்கம்—கல்லாதாரை யாக்கு மாக்கம்; பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தல். தீர்வு—விட்டு நீங்குதல். ஈண்டுக்கல்லாதார் என்றது தீவினையாளரை நோக்கி.

விளக்க உரை:—ஒக்கிய பகைவரை வெட்டுவதாக வோச் சின; ஒள்வாள்—ஒள்ளிய வாள்; தன்-(தன்னுடைய); ஒன்னார் —அந்தப் பகைவர்; கைப்பட்டக்கால்-கையிற் புகுந்த காலத்து; ஊக்கம்-தன்னுடைய மனவெழுச்சியை; அழிப்பது-கெடுக்கிறது; மெய்யாகும்—உண்மையாகும்; ஆக்கம் இருமையும் சென்று சுடு தலால்—இம்மை மறுமை இரண்டுக்குந் தன்னுடைய ஆக்கத்தை யழிக்குமாதலால்; கல்லார் கண் தீர்வு—அறியாதாரை விட்டு நீங்குதல், நல்ல கருமம்—நல்ல கருமம் என்றவாறு.

ஆக்கம்—அறிவில்லாதாரை ஆக்குமாக்கம்; பாம்புக்குப் பால் வார்த்து வளர்த்தல். தீர்வு—விட்டு நீங்குதல்; ஈண்டுக் கல்லாரென்றது தீவினையாளரை நோக்கி.

குறிப்பு:—

ஒக்கிய—இறந்தகாலப் பெயரச்சம்; ஓங்கிய என்பதன் பிறவினை. ஒக்கு—பகுதி; ஓங்கு என்பது, பிறவினைக்குறியான் மெலி வலியாகி 'ஒக்கு' என்பதாயிற்று. ஒன்னார்—ஒன்றார் என்பதன் மரூஉ என்ப. அழிப்பதூஉம்—இன்னிசை யளபெடை. ஆக்கம்—கல்லாதாரிடத்து ஆகுதல், அஃதாவது சேர்தல் ஈண்டு அது சேர்தலின் பயனாகிய அவர்க்குச் செய்யும் உபகாரத்தைக் குறித்து நின்றது. தீயாரிடம் நட்புக்கொண்டு அவருக்குச் செய்யும் பொருள் முதலிய உபகாரத்தினால் அவர் செய்யும் தீச்செயல், கொடுத்தவருக்கு இம்மையில் புகழையும் மறுமை

[1]ஓங்கின.

யில் துறக்க இன்பத்தையும் அழிப்பதாதலின், அவரது இணக்கம் 'இருமையுஞ் சுடும்' என்றார். அத்தகையாரினின்றும் நீங்குதலான் இவை அழிதலில்லாமையால் 'தீர்வு நல்ல கருமமே' என்றும் கூறினார்.

(கூ).

130. மனைப்பாசங் கைவிடாய் மக்கட்கென்று ஏங்கி
எனைத்தூழி [1]வாழியே? நெஞ்சே!— எனைத்துஞ்
சிறுவரையே ஆயினுஞ் செய்தநன்று அல்லால்
உறுபயனோ இல்லை உயிர்க்கு.

தருமர்:—என்பது. நெஞ்சே!—என் நெஞ்சமே; மனைப்பாசம்—மனைவாழ்க்கையினது கட்டுப்பாட்டை; கைவிடாய்—கைவிட்டாயில்லை; மக்கட்கு என்று ஏங்கி—மக்கட் பொருட்டாக விரங்கி நின்று; எனைத்து ஊழி வாழியே?—எத்தனை ஊழி காலம் வாழக் கடவை?; உயிர்க்கு உறுபயனோ—உயிருடன் போய் உறுதி செய்யும் பயன்; எனைத்தும்—யாதானும்; சிறுவரையே ஆயினும்—சிறிய அளவாயினும்; செய்த நன்று அல்லால்—தான்செய்த அறத்தின்பயனே யல்லாது; இல்லை—வேறொன்றுமில்லை யென்றவாறு.

ஆதலால் மனைப்பாசமாகிய விடயங்களில் முயக்குற்றுத் தீவினையே செய்வதனால் அது உயிர்க்குறுதி செய்யுமோ? அத்தீவினை நீக்கி நல்வினையாகிய அறத்தைச் செய்யில் அது உயிர்க்குறுதி செய்யும். ஆகையினாலே நல்வினைக்கு ஒருப்பட்டுத் தீவினைக்கு அஞ்ச வேண்டுமென்று நெஞ்சோடு கூறுவதுபோல உலகிலுள்ளார்க்கு அறிவுறுத்தியது.

பதுமனார்:—நெஞ்சமே! மனைவாழ்க்கையின் கண்ணுள்ள பற்றினைக் கைவிடுகின்றிலை. மக்கட் பொருட்டிரங்கி எத்

பா-ம்:—[1]'வாழ்த்தியோ'.

துணைக் காலம் வாழ்வாய்? சிற்றளவையாயினுஞ் செய்த நன்மையல்லது யாதும் நமமுயிர்க்கு பயனில்லை என்றவாறு

இதனுள் 'எனைத்தூழி வாழியே நெஞ்சே' என்பதன் கருத்து ஒருபொருளின் நிலைநில்லாமையை யுணர்த்தியது. எனைத்தும்—எத்துணையும் ஆதலாற் சிறிதுந் தீவினையை யஞ்சுவது என்பதாம்.

இப்பதின்மூன்று அறத்தின் அதிகாரத்தானும் அடைத்த வெண்பாவிற் சொன்ன பயன்களை, வழுவாதொழுகவே யொருவற்கு வீட்டின்பமாம். அறத்தைக் கருதிச் சொல்லப்பட்ட நூல்களின் அடங்காதனவும் அடங்கிடப் பொருளுரைக்க.

அறம்நுதலியன முற்றும்.

விளக்க உரை:— நெஞ்சே! —நெஞ்சமே; மனைபபாசம்— மனையினது பிணிப்பை; கைவிடாயத்-; மக்கட்கு என்று ஏங்கி-மக்கட் பொருட்டாக விரங்கி; எனைத்துஊழி வாழியே?— (எத்தனை) ஊழிகாலம் வாழ்வாய்?; உயிர்க்கு உறுபயனோ— உயிர்க்கு உடன்போய் உறுதிசெய்யும் பயன்; எனைத்தும்— யாதாலும்; சிறு வரையே ஆயினும்--சிறுவரை யளவாயினும்; செய்த நன்று அல்லால்—தான் செய்த அறப்பயன் அல்லது; இல்லை—(வேறு) ஒன்றுமில்லை யென்றவாறு.

முன்செய்த தீவினைப்பயன் தன்னுடைய நெஞ்சமுட்படத் தனக்கு வசம்வாராமல் நெஞ்சை வேறுபடுத்திச் செல்லுதலால், அத்தீவினைக்கஞ்ச வேண்டுமென்பது கொண்டு தீவினையச்சத் திலே சேர்க்கப்பட்டது.

நெஞ்சுவசம் வருவது நல்வினை செய்தவருக்கு.

மேற்கோள் பகுதி:—

மயிலை:—"சிறுவரையே யாயினும்.....உயிர்க்கு. எ-ம் வரும். இவை, தன்னை எள்ளாமை வேண்டுவானென்பான் கள்ளாமை

காக்க தன் நெஞ்செனவும், தன்னாற் செய்யப்பட்ட நன்றல்லது உயிர்க்கு உறுபயனில்லையெனவும் உருபுச்சொற்கள் எஞ்ச வந்தன, எப்பாற்படுமோவெனின், உருபுச் சொற்களும் வினை வினைக் குறிப்பாயடங்குதலின், வினையெச்சத்தின்பாற்படு மென்க''.

—நன். சூ. 359.

ஒப்புமைப் பகுதி:—

3-4:—

''தாஞ்செய் வினையல்லால் தம்மோடு செல்வதுமற்
றியாங்கணுந் தேரிற் பிறிதில்லை''

—நாலடி. 120.

குறிப்பு:—

மனை—இல்வாழ்க்கை; இடவாகுப் பெயராய் மனைவியைக் குறித்ததாகக் கொள்ளலு மேற்கும். கைவிடாய்—முற்றெச்சம்; கை—தமிழுப சர்க்கம்; தனக்கென ஒருபொருளில்லாது வினையை யடுத்துவந்தது. உறுபயனோ என்பதன் ஓகாரம் உயர்வு சிறப்பு. எனை—எத்தனை யென்பதன் மரூஉ.

(ய).

இல்லறவியல் முற்றிற்று.

துறவறவியல் ஏழதிகாரமும் இல்லறவியல் ஆறதி
காரமுமாகப் பதிமூன்றதிகாரத்தோடு
அறத்துப்பால் முற்றிற்று.

பொருட்பால்.

இரண்டாவது

பொருட்பால்

1. அரசியல்

14. கல்வி.

தருமர்:—பொருட்பா லென்பது அரசர்க்கு மற்று மொழிந்தார்க்கு மனைவாழ்க்கையின்கண்ணே நின்று, பொருளுக்கு வருவாய் பண்ணிக்கொண்டு அறமும் இன்பமுஞ் செய்ய வேண்டுமாதலால், இந்தப் பொருளென்னும் பகுதிக்குக் கல்வி பெரும்பான்மை யாதலின் பொருட்பாலிலே சேர்க்கப்பட்டது.

அறத்துப்பாலுக்குக் கல்வி பெரும்பான்மை அல்லவோ வெனில், அரசர்க்குக் கல்விகொண்டு மனுநூல் சொல்லுகிற முறைமை(யினை)யறிந்து பிராணிகளை இரட்சிக்க, இதுவே சருவ பிராணிகளுக்கும் இரட்சைப் படு(த்து)மாதலாற் பொருளுக்குக் கல்வி பெரும்பான்மைத்து என்பதாம்.

பதுமனார்:—பொருளாவது, கல்வி முதல் கற்புடைய மகளிர் ஈறாகச் சொல்லப்பட்ட வெல்லாப் பொருள்களும் என்றவாறு. எல்லாப் பொருள்களுமென்ற பொருண்மை என்னை யெனின், அர்த்த புருஷார்த்த மற்றுள்ள [1]புருஷார்த்தங்களை உள்ளடக்கிச் சொல்லுதலாற் பொருளென்று பெயராயிற்று. அவற்றுட் டலைமைக் குணமாகிய புருஷார்த்தம் கல்வி.

---

[1] தருமம், அர்த்தம், காமம், மோட்சம் என நால்வகைப்பட்ட உறுதிப் பொருள்; 'புருஷார்த்த மேது மில்லேன்'.

(தாயு. மௌன. 6.)

அஃதாவது தத்தங் குலத்திற்கேற்ப ஓதியும், படித்தும், பொருள்களை விளங்கிக் கேட்டறிந்தும் பின்பதனைத் தான் விரித்துக்கூற வல்லனாதலுமாதலால், ஒருவன் கற்பதன் பொருட்டாக அப்பொருள்களின்முன் இது வைக்கப்பட்டது.

விளக்க உரை:—[1]

குறிப்பு:—

பொருட்பால்:—

அரசியல்:—

பரிமே:—இனி, இல்லறத்தின்வழிப் படுவனவாய பொருள் இன்பங்களுள் இருமையும் பயப்பதாய பொருள் கூறுவான் எடுத்துக் கொண்டார். அது தன் துணைக் காரணமாய அரச நீதி கூறவே அடங்கும். அரசநீதியாவது காவலைநடாத்தும் முறைமை. அதனை அரசியல், அங்கவியல், ஒழிபியல் என மூவகைப்படுத்து, மலர்தலை உலகிற்கு உயிரெனச் சிறந்த அரசனது இயல்பு இருபத்தைந்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி, முதற்கண் இறைமாட்சி கூறுகின்றார்.

மணக்:—பொருட்பாலாவது பொருளின்பகுதி என்று கொள்ளப்படும். பொருள் என்றது மக்களை உடைத்தாகிய நிலம்; பகுதியாவது அந்நிலத்தை ஆளுதற்குரிய அரசரது தன்மையும், அவர் ஆளுதற்குச் செய்யும் திறன்களும், அதற்குத் துணையான அமாத்தியர் இலக்கணமும், அவர் செய்யும் திறன்களும், அவ்விருவரானும் உண்டாக்கப்பட்ட நாடும், அரணும், பொருளும், படையும் ஆகிய இவற்றினது திறன்களும், அறம், பொருள், இன்பம், என்னும் மூன்றற்கும் துணையாகிய நட்பினது திறன்களும், அவ்வாறு உண்டாகிய பொருட்கும் பொருள் உடையார்க்கும் கேடுவரும் திறன்களும், அந்நிலத்து உண்டான மக்களது இயல்பும், அவர் செய்யுமாறும் கூறுதல்.

---

[1] தருமர் உரையிலுள்ளதே.

இவையெல்லாம் அரசியலும், அமைச்சியலும், பொருளியலும், நட்பியலும், துன்பவியலும், குடியியலும் என அடங்கும். படையியல் அரணியல் என வகுத்தார் உளரால் எனின், அவையெல்லாம் ஒருவனால் ஆக்கப்படும் பொருள் ஆகலின், பொருளியல் என அடங்கும். துன்பவியல் என்றது எற்றுக்கு? அதனையும் நட்பியலுள் அடக்கினார் உளரால் எனில், அவையெல்லாம் நட்கப்படாது என்னும் கருத்தினால் கூறினார்கள் ஆயினும் அவற்றினிடைக் கிடந்த பேதைமை, புல்லறிவாண்மை என்னும் அதிகாரங்கள் நட்கப்படாததும் நட்கப்படுவதும் அன்றி, ஒருவற்குத் துன்பத்திற்குக் காரணம் ஆம்என்று கூறுதலால், துன்பவியல் என வேண்டும் என்க.

இதனுள் இறைமாட்சி முதலாக இடுக்கணழியாமை ஈறாகக் கூறிய அதிகாரம் இருபத்தைந்தும் பெரும்பான்மையும் அரசர்க்கு உரியவாதலின் அரசியல் என்றும், அமைச்சு முதலாக அவையஞ்சாமை ஈறாகக் கூறிய அதிகாரம் பத்தும் பெரும்பான்மையும் அமைச்சர்க்கு உரியவாதலின் அமைச்சியலென்றும், நாடு முதலாகப் படைச் செருக்கு ஈறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் பொருட்பகுதியாதலின் பொருளியலென்றும், நட்பு முதலாகக் கூடாநட்பீறாகக் கூறிய அதிகாரம் ஐந்தும் நட்பின் பகுதியாதலின் நட்பியலென்றும், பேதைமை முதலாக மருந்து ஈறாகக் கூறிய அதிகாரம் பன்னிரண்டும் கேட்டுக்குக் காரணமாதலின் துன்பவியல் என்றும், குடிமை முதலாகக் கயமையீறாகக் கூறிய அதிகாரம் பதின்மூன்றும் மக்களது இயல்பு கூறுதலின் குடியியல் என்றும் ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரம் எழுபதும் ஆறு பகுதியாயிற்று.

அவற்றுள் அரசியலாவது அரசர் செய்யும் திறன் கூறுதல். அஃது யாங்ஙனம் கூறினார் எனில், அது கூறிய அதிகாரம் இருபத்தைந்தினும் முற்பட அரசரால் உண்டாக்கவேண்டும் பொருளும், அவர்க்கு இன்றியமையாத துணையும், காலம் இடம் வலி முதலியன அறிதலும் தெரிந்து தெளிதலும் வினையாடலும் முதலியனவும் செங்கோன்மை முதலிய பிறவும் முறையாக உணர்த்தப்படுகின்றன.

—குறள், பொருட்பால், அவதாரிகை.

கல்வி:—

பரிமே:— அஃதாவது அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன அறநூலும், நீதிநூலும், யானை குதிரை தேர் படைக்கலமென்ற இவற்றின் நூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையன் ஆயக்கால் தன்னுயிர்க்கே யன்றி மன்னுயிர்க்கும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப் புடைமையின் பொதுப்படக் கூறுகின்றார்.

மணக்:-கல்வியாவது கல்வியாமாறும் அதனினாகிய பயனும் கூறுதல். இது முதலாகப் பொருள்வரவு இயற்றும்திறம் கூறு கின்றார் ஆதலின், அஃது இயற்றுங்கால் கல்வி முந்துற வேண்டும்; அதனால், இது முன் கூறப்பட்டது.

பரிதி:— கல்வியானது அரசற்கு மனுசாஸ்திரம் மந்திரி சாஸ்திரம் தொண்ணூற்றெட்டாயுதக் கல்விவேணும் என்றவாறு.

—குறள். அதி. 40.

மேற்கண்டவாறு பொருட்பால் ஆறு இயலாக திருக்குறளில் வகுத்திருக்க நாலடியாரில் அரசியல், நட்பியல், தலையின்பவியல் துன்பவியல் பொதுவியல், பகையியல், பன்னெறியியல் என எழு வகைப் படுத்துக் கூறப்பட்டிருத்தல் காண்க.

இதனுள் கல்வி முதல் தாளாண்மை ஈறாகக் கூறி அதிகாரம் எழும் அரசியலென்றும், சுற்றந்தழால் முதலாகக் கூடாநட்பு ஈறாகக் கூறிய அதிகாரம் நான்கும் நட்பியலென்றும், அறிவுடைமை முதலாக நன்றியிற் செல்வம் ஈறாகக் கூறிய அதிகாரம் மூன்றும் தலையின் பவியலென்றும், ஈயாமை முதலாக இரவச்சம் ஈறாகக் கூறிய அதிகாரம் நான்கும் துன்பவியலென்றும், அவையறிதல் என ஓரதிகாரம் பொதுவியலென்றும், புல்லறி வாண்மை முதலாகக் கயமை ஈறாகக் கூறிய அதிகாரம் நான்கும் பகையியலென்றும், பன்னெறி என ஓரதிகாரம், பன்னெறி யியலென்றும் ஆகப் பொருட்பால் கூறிய அதிகாரம் இருபத்து நான்கும் ஏழு பகுதியாயிற்று.

திருக்குறள் போன்று நாலடியார் ஒரு வரான் ஆக்கப்பட்ட நூலன்று பலரான பாடப்பெற்ற நானூறு செய்யுட்களே பின்னால் பதுமனார் என்பாரால் குறளையொட்டி `அதிகாரவடைவுபடுத்தி தொகுக்கப்பட்டது. ஆயினமையின் நாலடியாரில் திருக்குறள் போன்று பொருட்பாலின் அங்கங்கள் செவ்விதின் நிரம்பப் பெற்றில.

131. குஞ்சி அழகுங் கொடுந்தானைக் கோட்டழகு
மஞ்சள் அழகும் அழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி அழகே அழகு.

தருமர்:—என்பது. [1]குஞ்சி அழகும்—மயிரினழகும்; கொடுந்தானை—வளைய உடுத்த புடவையின்; [2]கோடு அழகும்—முந்தானை யழகும்; [3]மஞ்சள் அழகும்—சுண்ணம் பூசிய வழகும் [இவைமுதலாகிய வழகுகளெல்லாம்]; அழகு அல்ல—; நெஞ்சத்து—[ஒருவனுக்கு கல்வியானது] நெஞ்சுக்குப் பொருந்தி; நல்லம்யாம் என்னும்-யாம் நல்லம் என்னும்; நடுவு நிலைமையால்—நடுவுநிலைமையைச் செய்தலால்; கல்வி அழகே அழகு—கல்வியே அழகு என்றவாறு.

கல்வியினாலே தீயவைகளை அறிந்ததனைப் பொறுத்து யாவர்க்கும் நல்லவனென்னும் நடுவுநிலைமையாகி அமைந் தொழுகப்பண்ணும். அதுவன்றிச் சகலருங் கல்வியுடையாரைச் சிறப்புச் செய்வர். ஆதலால் கல்வி இம்மை மறுமைக்குறுதி என்பதுதோன்ற வதனை அழகென்றார்.

பதுமனார்:—மயிரினழகும், கோடிய வாடையினது கொடுந்திரை யழகும், மஞ்சளால் வந்த அழகும் அழகல்ல. நெஞ்சத்தின்கணுள்ள நடுவு நிலைமையால் நல்லேம் யாமென்று தாந்தம்மை அறியப்படுங் கல்வி அழகே ஒருவர்க்கு அழகாவது என்றவாறு.

கொடுந்தானை—கோடுவளைந்த ஆடையினது பக்கம்.

---

[1]ஆடவரது சிகை; பங்கி, குடுமி, சிகை என்பனபோல. அதுபோல் அளகம், ஓதி, கூந்தல், ஐம்பால், கோதை என்பன பெண்களின் தலைமயிரைக் குறிப்பன.

[2][அவ்வாடையினிற்] பட்டுக்கரை, சரிகைக் கரைகளின் அழகு.

[3]அரிதாரத் திலகத்தின் அழகு, கலவைப்பூச்சின் அழகு என்றுமாம்.

நெஞ்சத்து நல்லம் யாமென்னும் இது நடுவு நிலைமையை யுடைய பிறர்கூறக் கற்கும் கல்வி யழகே ஒருவர்க்கு அழகாவது என்றவாறு.

விளக்க உரை:-என்பது. குஞ்சி அழகும்—மயிரினழகும்; கொடுந்தானை—வளையச் சுற்றும் புடவையின்; கோடு அழகும்—கொய்சக வழகும்; மஞ்சள் அழகும்—மஞ்சளால் வந்த அழகும்; அழகல்ல-; நெஞ்சத்து-தன்னுடைய நெஞ்சுக்குப் பொருந்த; நல்லம் யாம் என்னும்—யாம் நல்லோமென்னும்; நடுவு நிலைமையால்—செப்ப முடைமையால்; கல்வி அழகே அழகு—ஒருவர்க்கு அழகென்பது கல்வி யென்றவாறு.

'கடிகா அவத்தை'க்கு முன்பு மஞ்சள் குளிப்பாளாதலால் மஞ்சளழகென்றார்.

நெஞ்சத்து நல்லம்யாம் என்னும் இது நடுவுநிலைமையுடைய பிறர்கூறக் கற்கும் கல்வி அழகே அழகென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"மயிர்வனப்புங் கண்கவரு மார்பின் வனப்பும்
உகிர்வனப்புங் காதின் வனப்புஞ்—செயிர்தீர்ந்த
பல்லின் வனப்பும் வனப்பல்ல நூற்கியைந்த
சொல்லின் வனப்பே வனப்பு".

--சிறுபஞ்ச.37.

"இடைவனப்புந் தோள்வனப்பும் ஈடின் வனப்பும்
நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால்
கழுத்தின் வனப்பும் வனப்பல்ல எண்ணோடு
எழுத்தின் வனப்பே வனப்பு".

—ஏலாதி.74.

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு".

—குறள்.392.

"நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
மண்மாண் புனைபாவை யற்று".

—குறள். 407.

"கற்றோர்க்குக் கல்வி நலனே கலனல்லால்
மற்றோ ரணிகலம் வேண்டாவா—முற்ற
முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா; யாரே
அழகுக்கு அழகுசெய் வார்?"

—நீதிநெறி. 13.

குறிப்பு:—

ஆடவர்க்குரிய குஞ்சியை முதலிலும், மகளிர்க்குரிய மஞ்சளை ஈற்றிலும், இருபாலார்க்குமுரிய கொடுந்தானையை இடையிலுமாக முறையே வைத்துள்ளமையின் இப்பாடல் ஆண் கல்வியையும் பெண் கல்வியையும் குறித்ததென்பர் சிலர். குஞ்சி முதலியன நிலையில்லாத உடலுக்கே அழகைச் செய்வன; கல்வியானது நிலையுடைய உயிர்க்கு அழகைச் செய்வதென்பதனான், 'கல்வி அழகே அழகு' எனப் பிரிநிலை ஏகாரம் கொடுக்கப்பட்டது.

(க).

132. இம்மை பயக்குமால் ஈயக் குறைவின்றால்
தம்மை விளக்குமால் தாமுளராக் கேடின்றால்
எம்மை உலகத்தும் யாங்காணேங் கல்விபோல்
மம்மர் அறுக்கு மருந்து.

தருமர்:— என்பது. இம்மை பயக்குமால்—மற்று ஒரு நல்வினை செய்வது மறுமைக்குதவும், இக்கல்வி இம்மையிலே தானே பயன்படுத்திவிக்கும் அதனாலும்; ஈயக் குறைவின்றால்—பொருள் ஒருவற்குக் கொடுத்தால் குறையும்; இது ஒருவர்க்குக் கொடுத்தாலுங் குறைவில்லாதது அதனாலும்; தம்மை விளக்குமால்—தம்மை இன்னாரென்று பேருண்டாக்கும் அதனாலும்; தாம் உளராக் கேடு இன்றால்—பொருளானது தாமுளதாகவுங்

கேடு காணப்படும், இஃது தாமுள்ளளவுங் கேடு காணப்படு (தலில்லை அதனா)லும்; எம்மை உலகத்தும்—எல்லாவுலகத் துள்ளும்; கல்விபோல்—கல்விபோல; மம்மர் அறுக்கும்—மயக் கத்தைத் தீர்க்கும்; மருந்து—மருந்தானது; யாம் காணேம்—யாம் கண்டறியோம் என்றவாறு

மயக்கத்தைத் தீர்த்து நன்னெறியின் ஒழுகப்பண்ணி, மறுமைக்குறுதி செய்தலினாலும், இம்மையிலும் இன்னாரென விளக்கமுண்டாக்கிப் பயன்படுத்தலினாலும் யாவருங் கல்விக்கு உடன்படுதல் நன்மையென்பதாம்.

பதுமனார்:—இப்பிறப்பின்கண் தமக்கின்பத்தைப் பயக்கும். பிறர்க்குக் கொடுத்தாற் குறைவு படாது. தம்மை இப்பெற்றிப் பட்டாரென்று எல்லாருமறிய விளக்கும். செல்வம் போலத் தாமுளராகக் கேடு காணப்படாது. மனத்தின்கண்ணுள்ள மயக்கத்தைக் கல்விபோல அறுக்கு மருந்து எவ்வுலகத்தும் யாங் கண்டறியேம் என்றவாறு.

இம்மை—இப்பிறப்பிலே. எம்மை—எல்லா வுலகத்தும். மம்மர்—மயக்கம்.

விளக்க உரை:— இம்மை—பயக்குமால்—பொருள் போலத் தானுள்ளளவும் பயன்படாதிராமல் இந்தக்கல்வி இப்பிறப்பிலே தனக்குப் பயன்படும் ஈயக்; குறைவின்றால்—பொருள் ஒருவருக் குக் கொடுத்தால் குறைவுபடும், கல்வி ஒருவருக்குக் கொடுப் பினும் குறைவுபடாது; தம்மை விளக்குமால்—பொருளென்ப துண்டானால் தம்மை இப்படி ஒத்தவரென்று விளக்கு வியாது, கல்வி தம்மை விளக்குவிக்கும்; தாம் உளராக் கேடு இன்றால்—பொருளென்பது தாமுளராகக் கேடு காணப்படும்; கல்வி தாமுள்ளளவும் கேடுகாணப்படாது; [ஆதலால்] எம்மை உலகத்தும்—எல்லாவுலகத்தும்; யாம்—; கல்விபோல்—கல்விபோல; மம்மர் அறுக்கும்—மயக்கத்தைத் தீர்க்கும்; மருந்து—; காணேம்—கண்டறியோம் என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

நச்:—ஓதற் சிறப்புக்கு இச்செய்யுளை எடுத்துக்காட்டுவர்.
—தொல். பொருள். புறத். சூ. 30.

ஒப்புமைப் பகுதி-

"ஆற்றவும் கற்றார் அறிவுடையார் அஃதுடையார்
நாற்றிசையும் செல்லாத நாடில்லை அந்நாடு
வேற்றுநா டாக தமவேயாம் ஆயினால்
ஆற்றுணா வேண்டுவ தில்".

—பழ. 55.

"கற்பக் கழிமட மஃகு மடமஃகக்
புகந்தீர்ந் திவ்வுலகிற் கோளுணருங் கோளுணர்ந்தால்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி
இப்பா லுலகத் திசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்".

—நான்மணி. 28.

"அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும்—உறுங்கவலொன்(று)
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியி னூங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை".

—நீதிநெறி. 2.

"கைப்பொருள் கொடுத்துங் கற்க கற்றபின் கண்ணு மாகும்
மெய்ப்பொருள் விளைக்கு நெஞ்சின் மேலிவிற்கோர் துணையு
மாகும்

பொய்ப்பொருள் பிறகள் பொன்னாம் புகழுமாந் துணைவி
யாக்கும்

இப்பொரு ளெய்தி நின்றீ ரிரங்குவ தென்னை யென்றான்"
—சிந்தா. 1595.

குறிப்பு:-

இம்மை—காரணவாகு பெயராய்ப் பிறப்பின் பயனைக்

குறித்தது. உயிர்களுக்குப் பிறப்பை எய்துவித்தலில் முதற் காரணமாய் நிற்பது பேதைமை என்பதனான் அதனை நோயென்றும், அதனை நீக்குவிப்பது கல்வியேயாமாதலின் அதனை மருந்து என்றும் உருவகப்படுத்தப்பட்டது. கல்வியை மருந்தாகக் கூறியதற்கேற்பப் பேதைமையை நோயெனக் கூறாமையின் இது ஏகதேச வுருவகவணி. ஆல்-முதலிலுள்ள மூன்றும் அசை; நான்காவது 'ஆதலால்' என்பதன் விகாரம்.

(உ).

133. களர்நிலத்துப் பிறந்த உப்பினைச் சான்றோர்
விளைநிலத்து நெல்லின் விழுமிதாக் கொள்வர்
கடைநிலத்தோர் ஆயினுங் [1]கற்றறிந் தோரை
தலைநிலத்து வைக்கப் படும்.

தருமர்:–என்பது. களர்நிலத்துப் பிறந்த—உவர் நிலத்திலுண்டாகிய, உப்பினை—உப்பை; சான்றோர்—அமைந்தோரானவர்; [2]விளைநிலத்து நெல்லின்—விளையும் நிலத்துண்டாகிய நெல்லினும்; விழுமிது ஆ—சிரிதாக; கொள்வர்—; [அதுபோல] கடைநிலத்தோர் ஆயினும்—இழிகுலத்துப் பிறந்தவராயினும்; கற்று அறிந்தோரை—கல்வியாற் பலவும் அறிந்திருப்பாரை; தலைநிலத்து வைக்கப்படும்—தலைமையாக வைத்தெண்ணப் படும் என்றவாறு.

கல்வியினாலே இழிகுலத்தாரும் உயர்ச்சி பெறுதலால் யாவரும் கல்விக்கு உடன்படுதல் வேண்டுமென்பதாம்.

பதுமனார்:—உவர்நிலத்தின்கண் பிறந்த உப்பினை விளைநிலத்தின்கண் விளைந்த நெல்லினுஞ் சிரிதாகக்கொள்வர். உலகத்தார்.

பாடம்:— [1]'கற்றுணர்ந் தோரை'.

[2]'வயலில் தோன்றிய நெல்லைக் கொள்வதுபோல' என்றும் உரை கொள்வர் சிலர்.

அதுபோலக் கீழ்க்குலத்துப் பிறந்தாராயினுங் கற்றறிந்தாரைச் சான்றோரால் தலைநிலத்தின்கண் வைக்கப்படும் என்றவாறு.

விளக்க உரை:— களர்நிலத்துப் பிறந்த—உவர் நிலத்துப் பிறந்த; உப்பினை-; சான்றோர்-அமைந்தோர்; விளைநிலத்து நெல்லின்—விளைநிலத்திலே பிறந்த நெல்லினும்; விழுமிது ஆ—சிறியதாக; கொள்வர்—; [அதுபோல] கடைநிலத்தோர் ஆயினும்—கடையான சாதியிலே பிறந்தாராயினும்; கற்று அறிந்தோரை—கல்வியுடையராய்ப் பலவும் அறிந்திருப்பாராகில் அவரை; தலைநிலத்து வைக்கப்படும்—சான்றோரால் தலைமையுண்டாக வைத்தெண்ணப்படும் என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

நன்.வி. ⎫ :—படும்' என்னும் சொல் ஐம்பால் மூவிடத்
இ.வி. ⎬ தனவா மென்றற்கு மேற்கோளாக வரும்.
இ.கொ. ⎭

—சூ.339.

—சூ.213.

—சூ. 85.

ஒப்புமைப் பகுதி:-

"உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர்".

—குறள்.395.

"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு".

—குறள்.409.

"வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே".

—புறம்.183:8—10.

''நாற்பாற் குலத்தின் மேற்பா லொருவன்
கற்றில னாயிற் கீழிருப் பவனே''.

—வெற்றி.37.

''எக்குடி பிறப்பினும் யாவரே யாயினும்
அக்குடியிற் கற்றோரை மேல்வரு கென்பர்''.

—வெற்றி.38.

''ஆக்கு மறிவா னலது பிறப்பினான்
மீக்கொ ளுயர் விழிவு வேண்டற்க''

—நீதிநெறி.

''திரியழல் காணின் தொழுப விறகின்
எரியழல் காணின் இகழ்ப—ஒருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிட்டுக் கற்றான்
இளமைபா ராட்டு முலகு''.

—நான்மணி.64.

''சேற்றில் பிறந்திடும் கமலமலர் கடவுளது
திருமுடியின் மேலிருக்கும்
திகழ்ச்சிப்பி உடலில்ச னித்தமுத் தரசரது
தேகத்தின் மேலிருக்கும்
போற்றியிடு பூச்சியின் வாயினுல் பட்டென்று
பூசைக்கு நேசமாகும்
புகலரிய வண்டெச்சில் ஆனதேன் தேவர்கொள்
புனிதஅபி டேகமாகும்
சாற்றிய புலாலொடு பிறந்தகோ ரோசனை
சவாதுபுழு கனைவர்க்குமாம்
சாதிஈ னத்திற் பிறக்கினும் கற்றோர்கள்
சபையின்மேல் வட்டமன்றோ?
மாற்றிச் சுரத்தினை விபூதியால் உடல்குளிர
வைத்தமெய்ஞ் ஞானமுதலே!
மயிலேறி விளையாடு குகனே! புல்வயல்நீடு
மலைமேவு குமரேசனே!''.

—குமரேச சதகம்.

குறிப்பு:-

களர் நிலத்து உப்பு, விளைநிலத்து நெல் எனக் களர் நிலம், விளை நிலம் எனவேண்டாது கூறியது, அவை தோன்றிய விடத்தின் இழிவுயர்வுகளை உணர்த்தற்காம். 'புலாலும் ஊனும் புனைதடு சேறும், உவர்நீர்ச்சுழியும் கவர்புள் ளினமும்' நிரம்பப் பெற்றமையின் களர்நிலம் இழிப்புண்டது. விழுமியது என்பது 'விழுமம்' என்னும் உரிச்சொல் அடியாகப் பிறந்த குறிப்பு வினையாலணைந்த பெயர்.

(௩).

134. வைப்புழிக் கோட்படா வாய்த்தீயிற் கேடில்லை
மிக்க சிறப்பின் அரசர் செறின்வவ்வார்
எச்சம் எனவொருவன் மக்கட்குச் செய்வன
விச்சைமற் றல்ல பிற.

தருமர்:— என்பது. வைப்பு உழி—பொருள்போல வைத்திருக்குமிடத்து; கோள்படா — ஒருவரால் கொள்ளப்படாது; வாய்த்து ஈயில்—ஒருவற்கு வாய்க்கும்படி கொடுத்தாலும்; கேடு இல்லை—பொருள்போலக் குறைவுபடாது; மிக்க சிறப்பின் அரசர்—மிகுந்த சிறப்பினையுடைய அரைசர்; செறின் வவ்வார் —விரோதத்தாலும் வாங்கமாட்டார்; [ஆதலால்] ஒருவன்—; மக்கட்கு—தம்முடைய பிள்ளைகளுக்கு; எச்சம் என செய்வன— இவ்வகைக்கு எல்லாம் உள்ளாகாதென்றறிந்து தேடிக் கொடுக்கும் பொருளாவது; விச்சை—கல்வி முதலாகிய வித்தைகளை யறிவிப்பது; பிற அல்ல—அன்றி வேறொன்றுமில்லை என்றவாறு.

தான் போனபின்னும் பிள்ளைகளிடத்து நிற்பதாகலில் தன்னை ஒழிந்து நின்றது என்பதனை எச்சமென்றார். தன்னையுமன்றித் தானிறந்த காலத்துத் தன்குடியையும் உய்விப்பதாகலிற் கல்வி யாவர்க்கும் நன்கென்றதாம்.

பதுமனார்:— (பொருள்போல) வைத்தவிடத்துக் கொள்ளப்

படாது இடத்துள்ள தீயால்வருங் கேடில்லை. மிக்க சிறப்பினை யுடைய அரசர் வெகுண்டாலும் வவ்வமாட்டார். ஆதலால் தம் புதல்வர்க்கு ஆக்கமெனக் கருதி யொருவர் செய்வன கல்வியே. பிறவெல்லாம் ஆக்கமல்ல என்றவாறு.

வாய்த்தீயிற் கேடில்லை யென்பது ஈந்தால் வாய்த்துக் கேடில்லை யென்றுமாம். வாய்த்தீயில்—ஓரிடத்திலும் தீயாமல் என்றும், ஓரிடத்திற் கொடுக்கிலும் என்றுமாம். செறின்—அடர்ந்து. எச்சம் என—மேற்புதல்வர்க்கு ஆக்கமென.

விளக்க உரை:— வைப்பு உழி—பொருள்போல வைத்த விடத்திலே; கோள்பட7 — கொள்ளப்படாது; வாய்த்தீயில் கேடில்லை—பிறரால் குறளைச் சொல்லிக் கேடு வராது; மிக்க சிறப்பின் அரசர்—மிக்க தலைமையை யுடையவர்கள்; செறின்—செறுத்தாலும்; வவ்வார்—கொள்ளமாட்டார்கள்; [ஆதலால்] ஒருவன்—; மக்கட்கு—தம்முடைய பிள்ளைகளுக்கு; எச்சம் என கேடின்றியே பின்பு இரட்சிக்கும்படி; செய்வன — தேடிக் கொடுக்கும் பொருளாவது; விச்சை—கல்வி முதலாகிய பல வித்தைகளும் அறிவிப்பது; பிறஅல்ல—அல்லது வேறொன்று மில்லை என்றவாறு.

வாய்த்தீயில் †.........ஆக்கமென.

ஒப்புமைப் பகுதி:-

"தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்".

—குறள்.67.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை".

—குறள்.400.

---

†பதுமனார் உரையிலுள்ளதே.

"வெள்ளத்தே போகாது
வெந்தணலில் வேகாது; வேந்தராலும்
கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவின்றிக் குறைவுறாது
கள்ளர்க்கோ மிகஅரிது
காவலோ மிகஎளிது; கல்வியென்னும்
உள்ளத்தே பொருளிருக்க
ஊரெல்லாம் பொருள்தேடி உழல்வதென்னே!

—விவேகசிந்தாமணி.

"வெள்ளத்தாற் போகாது வெந்தழலால் வேகாது"

—குசேலோபாக்கியானம்.

"மாற்படு புந்தியின் மறுவில் சேதனம்
பாற்படும் உயிர்க்கெலாம் பவத்தின் மாண்பயன்
நூற்படு கல்வியின் நுவல்வ ளத்தினின்
மேற்படு கின்றதில் விழுமி தில்லையே".

—கந்த. மாயையுப. 6.

"கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி"

—கொன்றை. 22.

"அழிவின்மையாவது தாயத்தார், கள்வர், வலியர், அரசர் என்றிவரால் கொள்ளப்படாமையும், வழிபட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம்".

—குறள். 400. பரிமே. உரை.

குறிப்பு:—

வைப்பு—தொழிலாகுபெயர். வைப்புழி—இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. எச்சம் என—ஆக்கம் என்று; ஒருவற்குப் பின் எஞ்சிநிற்பது எச்சமெனப்பட்டது. பொருள்; கல்விப்பொருள், செல்வப்பொருள் என இரண்டாம். ஆயினமையின் பிற என்றது செல்வப் பொருளைக் குறித்தது. கல்விப்

பொருளுக்கும் செல்வப்பொருளுக்குமுள்ள வேறுபாடுகளைக் கூறினமையின் இது வேற்றுமையணி. ஒருவன் தன்மக்கட்குத் தேடிவைத்தற்குரியது கல்விப்பொருளே; செல்வப் பொருளன்று என்பதற்கு இப்பாட்டான் காரணங் கூறப்பட்டது.

(சு).

135. கலவி கரையில கற்பவர் நாள்சில
மெல்ல நினைப்பிற் பிணிபல தெள்ளிதின்
ஆராய்ந்து அமைவுடைய கற்பவே நீரொழியப்
பாலுண் குருகில் தெரிந்து.

தருமர்:—கல்வி கரை இல—கல்விக்கு இவ்வளவு என்று ஒரு கரையில்லை; கற்பவர் நாள் சில—கற்பவர்க்கு வாழ்நாளுஞ் சிறிது; மெல்ல நினைப்பில்—மெல்ல விசாரிக்கும்போது; பிணி பல—அந்நாட்களிலே வியாதிகள் பலவும் அனுபவிப்பது சில நாள்; [ஆதலால்] தெள்ளிதின் ஆராய்ந்து—அக்கல்வியில் தெளிய விசாரித்து; அமைவுடைய—நன்னெறிக்கு அமைவுண்டான வற்றை; கற்பவே—கற்கக் கடவன்; [அஃதெப்படி யென்னில்] நீர் ஒழிய—தண்ணீரை யொழித்து; பால்உண் குருகில்—பாலை யுண்ணும் அன்னம்போல; †தெரிந்து—; என்றவாறு.

எண்ணிறந்த நூல்கள் உண்டு. அதனை இவன் ஆயுள் பரியந்தத்திலும் கற்றுமுடியாது. ஆதலால் அன்னம் பால் உண்டாற்போல அசாரமானதை நீக்கிச் சாரமானதை (விரும்பி) கற்க வேண்டுமென்று கல்வி கற்பதற்கு உபாயங் கூறியவாறு.

பதுமனார்:—என்பது. கற்கப்படும் கல்விகள் எல்லையில. கற்பவர் வாழ்நாள் சில. விரையாது ஆராயின் வருநோயும் பல. தெள்ளிய வறிவினால் ஆராய்ந்து தமக்கு அமைவுடையன (வற்றையே) நீரினை ஒழியப் பாலினை உண்ணும் அன்னம் போல வேறுபடுத்துக் கற்க (வேண்டும்) என்றவாறு.

---

†நூல்களின் தன்மைகளை யறிந்து.

கலையில்லாத கல்வியாவன:—[1]காவியம், [2]நாடகம், [3]நிருத்தம், [4]கீதம், [5]வாச்சியம், [6]தாளம், [7]வீணா, [8]வேணு உள்ளிட்ட [9]பரத சாத்திரம்; [10]காமச்சாத்திரம், [11]சிப்பியம், [12]சிற்பசாத்திரம், [13]தனுர்வேதம், [14]பூபலம், [15]அர்த்தசாத்திரம், அக்ஷர வித்தை, [16]சதுரங்க ஞானம், [17]புவனகோசம், [18]சாமுத்திரிகா இலக்கணம், [19]சோரசாத்திரம், [20]லீலாக்ஷம், இலௌகிக கணிதம், சேவாக்கியானம், [21]சத்தசாத்திரம், [22]அசுவ வைத்தியம், வீபத்தலக்கணம், [23]அலங்கார இலக்கணம், [24]தருக்கசாத்திரம், [25]அபிதானம், [26]சோதி சாத்திரம், [27]பிரச்ன சாத்திரம்,

---

[1]பழையதோர் கதையைப்பற்றிய தொடர்நிலைச் செய்யுள்.

[2]கதாபாத்திரங்களின் வேடம்பூண்டு ஒருகதையை நடந்தது போல் நடித்துக்காட்டுவது.

[3]நடனம். [4]இசை. [5]வாத்தியம்; பறை முதலியன.

[6]பாடுகையிற் காலத்தை அறுதியிடும் அளவு. [7]வீணை. [8]வேய்ங்குழல்.

[9]பரதர் இயற்றிய நாட்டிய நூல்.

[10]அறுபத்துநாலு கலைகளுள் ஒன்றான மதன நூல்.

[11]கம்மிய வேலை, தையல் வேலை, விசித்திர வேலை முதலியன.

[12]கட்டிடக்கலை, கல்லில்உருவம் செதுக்குகை முதலியன.

[13]நால்வகை உபவேதங்களுள் ஒன்றான வில்வித்தை.

[14]பூமிகளின் விளைவுகளைப்பற்றிக் கூறும் நூல்.

[15]பொருள் நூல்.

[16]சதுரங்க படைகளை யமைத்தலில் தேர்ந்த அறிவு.

[17]அண்டகோளங்களைப்பற்றிக் கூறும் நூல்.

[18]அங்கவிலக்கண நூல்.

[19]சோரவித்தை, திருட்டு முதலியன.

[20]சொக்கட்டான் முதலியன.

[21]எழுத்துச் சொற்களைப்பற்றிய இலக்கண நூல்.

[22]குதிரை வைத்தியம்.

[23]ஆடை, அணிகளால் அலங்கரித்தலைப்பற்றிக் கூறும் நூல்.

[24]நியாயவாத நூல்.

[25]பலப்பொருள்களின் பெயர்களைப்பற்றிக் கூறும் நூல்.

[26]சோதிட சாத்திரம், வானசாத்திரம், கிரகங்களின் பலங்களை அறிவிக்கும் சாத்திரம் முதலியன.

[27]தொடுகுறி முதலிய ஆருட சாத்திரம்.

[1]கூ(ப) சாத்திரம், அங்கபடனம், [1]சகுண சாத்திரம், [2]Aசாமுத்தி விலக்கணம், [3]கெந்தயுரதி, பகலக்கணம், [4]இரத்தின சாத்திரம், கச வைத்தியம், [5]தேரை வைத்தியம், [6]நரவைத்தியம், [7]சத்திர வைத்தியம், [8]விபுவித்தியை, [9]விருக்காயுர் வேதம், [10]வசியாகரிஷண வித்தியை, வித்தம்ப நோற்பாடனமாரணம் உள்ளிட்ட மந்திரவாதம்; ஔஷதவாதம், [11]இரசவாதம், [12]இந்திரசாலம், [13]யச்ஷ வித்தியை. [14]1. அணிமா. [15]2. மகிமா. [16]3. இலகிமா. [17]4. கரிமா. [18]5. ஈசித்துவம். [19]6. வசித்துவம். [20]7. பிராப்தி. [21]8. பிராகாமியம் (என்ற) [22]அட்டசித்தி; [23]அக்கினித்தம்பம்

---

[1]கிணறுதோண்டுமிடம் முதலியவற்றைப்பற்றிக் கூறும்நூல்.

[2]நிமித்தம் உணர்த்தும் நூல்.
[2A]இது பிரதியில் இருந்தபடியேயாகும்.
[3]சன்மாந்தரநிலையை அறிதல்.

[4]இரத்தினங்களின் இயல்பு முதலியனவற்றைப்பற்றி கூறும் நூல்.
[5]யானை வைத்தியம்.
[6]அதிர்ஷக்குறி அறிவிக்கும் இலக்கணம்.
[7]இரண வைத்தியம்.
[8]எங்கும் பரந்திருக்கும் வல்லமையாதலைக் கூறும் வித்தை.
[9]மரங்களைப்பற்றிய சிகிச்சையைக் கூறும் நூல்.
[10]பலரையும் வசிகரித்தலைப்பற்றி கூறும் நூல்.
[11]உலோகங்களைப் பேதிக்கச்செய்யும் வித்தை.

[12]அறுபத்துநாலு கலைகளுள் ஒன்றாகிய மாயவித்தை.

[13]பிசாசு ஓட்டும் வித்தை.

[14]அட்டமாசித்தியுள் ஒன்றாகிய அணுப்போலாகை.

[15]அட்டமா சித்திகளுள் இட்டம்போல உருவத்தைப் பருக்கச் செய்யும் பேராற்றல்.

[16]அட்டமாசித்திகளுள் ஒன்றாகிய மிக்க லேசாகுதல்.
[17]அட்டமாசித்திகளுள் ஒன்றாகிய மிக்க கனமாகை.
[18]அட்டமாசித்திகளுள் ஒன்றாகிய யாவர்க்குந் தேவனாதல்.
[19]அட்டமாசித்திகளுள் ஒன்றாகிய யாவரையும் வசிகரித்தல்.

[20]அட்டமாசித்திகளுள் விரும்பிய இடத்தை யடைதலாகிய பெரும்பேறு.

[21]அட்டமாசித்திகளுள் விரும்பியவற்றை அடையும் பெரும் பேறு.

[22]யோகத்தா லடையக் கூடிய எட்டுசித்திகள்.

[23]அறுபத்துநாலு கலையுள் அக்கினி சுடாமலிருக்கச் செய்யும் வித்தை.

[1]சலத்தம்பம், [2]சுக்கிலத்தம்பம், [3]கபிசத்தி, [4]அட்டதாரணை, [5]லேக சத்தி, [6]சலலேகை, [7]பிருங்கசத்தி, சாங்கியம்; [8]1. இயமம், [9]2. நியமம். 3. ஆசனம். [10]4. பிராணாயாமம். [11]5. பிரத்தியாகாரம். [12]6. தாரணை. [13]7. தியானம். [14]8. சமாதிகளான அட்டாங்க இலக்கணங்களையுஞ் சொல்லும் யோக சாத்திரம்; வணிகர் கன்மம், அட்டாதச பாஷா ஞானம், [15]வர்த்தககௌசலம், [16] திரிகாலஞானம், [17]இருகுபம்

என்று இவ்வகைப்பட்ட வெகுவிதயான சாத்திரங்களையும் அறிந்தும், அவை வல்லாராகையாலுஞ் சுருதி, ஸ்மிருதி

---

[1]அறுபத்துநாலு கலையுள் நீரின் சக்தியை மாற்றும் வித்தை.

[2]அறுபத்துநாலு கலைகளுள் வீரியத்தைக் கட்டும் வித்தை.

[3]மற்கடசக்தி.

[4]எட்டுவிதமாக அறிதல்.

[5]எழுதும் சக்தி.

[6]சலத்தில் அழியாமல் எழுதும் சக்தி.

[7]வண்டினது அறிவு;(குற்றம் நீங்கி குணங் கொள்ளுதல்)

[8]யோகத்திற்கு உரிய அட்டாங்கங்களுளொன்று, இச்சை, களவு, கொலை, பொய் இவற்றினீங்கிப் புலனடக்கி இருத்தல்.

[9]அட்டாங்க யோகத்துள் தவம், தூய்மை, தத்துவமோர்தல், மனமுவந்திருத்தல், தெய்வ வழிபாடு என்ற விதிமுறைகளில் வழுவாதொழுகல்.

[10]அட்டாங்க யோகத்துள் இரேசகம், பூரகம், கும்பகம் என்று மூவகையாய்ச் சுவாசத்தை அடக்கியாளும் யோகமுறை.

[11]அட்டாங்க யோகத்துள் இந்திரியங்களை விஷயங்களினின்று திருப்புகை.

[12]அட்டாங்க யோகத்துள் ஒன்றான மனத்தை ஒருவழி நிறுத்துகை.

[13]அட்டாங்க யோகத்துள் ஒன்றான இடையறாச் சிந்தனை.

[14]அட்டாங்க யோகத்துள் மனத்தைப் பரம்பொருளோடு ஐக்கியப் படுத்தி நிறுத்துகை.

[15]கப்பல் முதலியன ஓட்டுதல்.

[16]முக்காலங்களையு மறியும் அறிவு.

[17]பிரதியில் இருந்தபடியே.

இதிகாச புராணாதிகளும், தொண்ணூற்றாறாகச் சொல்லப்பட்ட சமயங்களுந் தனித்தனியே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசமான பஞ்சபூதங்களையும் பூதபரிணாமங்களான பூமி, அந்தர, சுவர்க்க, பாதாளங்கள் உட்பட்ட சராசர விசேஷங்களையும், உற்பத்தி ஸ்திதி நாசங்களையும், கன்மபேதங்களையும், உத்கிரம பேதங்களையுந் †தன்மார்த்த காமமோட்சங்களையுஞ் சொல்லிப் பிரகிருதி புருஷனென்றும், பசுபாச பதியான அநித்தங்கள் என்றும், ஏகமனேகமென்றும், [1]குண குணிதமென்றும், சத்திசிவனென்றும், மும்மூன்றும் இவ்விரண்டு மாகச் சொல்வாரும், பிரத்தியட்சமே உள்ளதென்பாரும், வெறுஞ் சக்தியேயுள்ளதென்பாரும் கசவேதனை சாக்கினோர் சம்ஸ்கார விக்ஞானம் அவையனித்தம் துக்கம் அனாத்யனித்தியமென் பாரும், [2]சிவபுரகலை தன்மாதன்மகாச மென்பாரும், வைதா நித்தாநித்தம் அத்திநாத்தி ஏசமனேகம் என்றும் அத்திர கன்மங்கள் ஈரிரண்டையுங் கொள்வாரும், சமயந்தோறும் அவ்வாறு நன்வாலு பேதங் கொள்வாரும், காலவசமென்பாரும், அல்லாத சமயங்களும் ஒன்றுக்கொன்று வேறுபடச் சொல்லுஞ் சாத்திரங்களுக்கு(ம்) எல்லையில.

கற்பவர்க்கு கற்கலாகும் நாள்கள்சில. அந்நாட்கள் தன்னிலும் ஒழுக விசாரிக்கில் வியாதிபு நித்திரையுஞ் சரீர கன்மங்களும் ஆசாரியனை யவதானங் கொள்ளுகையுமான பிணிபல.

வேறுபடுத்து ஆராய்ந்து அமைவுடைய கற்கலாவது:- கவிகளாலே சோகரசம் வீரரச முதலியன பேதங்களுள(வாகச்) சித்திரித்துச் சொல்லப்பட்ட காவிய நாடகங்களாலும், ஆடவர் பெண்டிர் தம்மிற் கூடுதலும் பிரிதலுமாகச் சொல்லுங்கிளவிகளாலுமுட்டிய நிலையு மறந்து, எய்து வேட்டுவதனாலும் வன்னக்கலாப பாவனைகளையறச் சித்திரங்களாலும், சூது சதுரங்கம் பொருவதனாலும், இராச காரியம் விசாரிப்ப தனாலும், சலதுர்க்க முதலான துர்க்கங்களிலே

---

†தன்மார்த்த காம மேட்சம்—அறம்பொருளின்பம் வீடு.

[1] நிர்குணம் சகுணமென்றும் இருத்தல் பொருத்தம்.

[2] பிரதியில் இருந்தபடியே எழுதப்பெற்றது.

போவதனாலு மற்றும் வருவனவும், இப்படியல்லாத சாத்திரப் பிரயோசனங்களை உள்ளாராய்ந்தும் இவை ஆசையுங் கோபமு மனோவிகாரமாகிய பிறப்பு முதலான துன்பங்களைத் தருவனவா யிருந்தன.

[1]"ஐயுணர் வெய்தியக் கண்ணும் பயமின்றே
மெய்யுணர் வில்லா தவர்க்கு"

எனவும்,

*"தத்கர்ம யந்ந பந்தாய சா வித்யா யாவிமுக்தயே.
ஆயாசாயா பரம் கர்ம வித்யான்யா சில்பநைபுணம்"

மோக்ஷ வித்தியை அல்லாதன சில்பநைபுணம் என்று சொன்னபடியே இவற்றை ஆராய்ந்து, சமயங்களிலே லோகாயதன் சொல்லுந் திட்டாந்தமே உள்ளதாகில் திட்டஞ் செய்தவனுக்கு அதனால்வரும் விரோதமில்லையாம். அதிட்டமுண்டான பொழுது திட்டவாதி கெட்டானா மென்பதினாலே அதிட்டங் கைவிடாதொழுகவும், கன்மவாதிகள் சொன்னபடிகளிலே பாவஞ்செய்து புண்ணியங்களைச் செய்தபின் கர்த்தா உளனாகில், கர்த்தாவாலும் சத்திய தானதன்மங்களும் இந்திரிய

---

[1]குறள். 354. (மெய்யுணர்தல்).

பரிமே:— செல்லப் படுகின்ற புலன்கள் வேறுபாட்டான் ஐந்தாகியவுணர்வு அவற்றை விட்டுத் தம்வயத்ததாய வழியும், அதனாற் பயனில்லையேயாம் மெய்யினையுணர்தல் இல்லாதார்க்கு.

மணக்;—மெய்முதலாகிய பொறிகள் ஐந்தினாலும் அறியப் படுவன எல்லாம் அறிந்தவிடத்தும் அதனான் ஒருபயன் உண்டாகாது; உண்மையை அறியும் அறிவில்லாதார்க்கு என்றவாறு.
—குறள். 354—உரை.

*இச்சுலோகத்தின் பொருள்:—

எந்த கருமமானது சம்சாரத்தில் கட்டுண்ணப்பண்ணாமலிருக்கிறதோ அதுவே உயர்ந்த கருமமாகும். ஏனைய கருமங்கள் வீண் வருத்தத்தையே கொடுக்கும். எந்த அறிவினால் பேரின்பம் கிடைக்குமோ அதுவே சிறந்த அறிவு. மற்ற அறிவுகள் பிறரைப் பிரமிக்கச் செய்யும் கைத்திறமையையே ஒக்கும்.

நிக்கிரகங்களும் பலிக்குமென்பதனாலு(ம்), மோட்சம் பின்பு பெற்றுக் கொள்ளச் சுவர்க்க முதலாயின சுகங்களைப் பெறுதற்குக் குறையில்லை யென்பதும், [1]கடபடாதிகள் செய்வா ரன்றி உளவாக வென்றுழிச் சரீரமானவை பிராணனை ஒழியச் [2]சேட்டியா வென்றும், தத்த(ம்) வசமொழியச் சுழலாநின்ற கிரகங்களாலே பூமிக்கு நலந்தீங்கு பிறத்தலும், கருதியது முயன்றபடி முடியாமலு(ம்), முன்புள்ளவான கண், செவி, கை, கால் பாவகன்மத்தாலே பின்பு குறைவதனால். புண்ணிய கன்மத்தாலே ஒன்றும் இரண்டு உறுப்புக்கள் மிகவேண்டுமவை காணாமையாலும் பூர்வ கன்மந் துடரும்பொழுது தானம் பண்ணும்பொருள் [3]சேதனக் கிரிசைக்கொரு வடிவில்லை.

கொடுத்த மனதும் அநித்தப்பட்டுப் போனதுகொண்டு அவன்தானே கொடுக்குமென்னில், அதனிற் சிறுத்தாளும் கன்மா காதலாகிய பலிக்கும்போது இராசாவானவன், பலருஞ் செய்த நலந்தீங்குகளுக்கீடாக வனுபவித்தாற் போலவும், இச்சகத்தும் ஒரு கர்த்தாவுளனாக வேண்டுமென்னுங் கர்த்தாவாதிகள் பத்திக்கு, ஞான வைராக்கியங்களாலே சாலோக்ய, சாமீப்பிய, சாருப்பிய, சாயுச்சியங்களைப் பெற முயலும் இத்தன்மைகளை யுடைய சமயங்களிற் சொன்னபடிகளிலே வழுவாமல், முயன்று பலம் பெறுதற்குக் கிரியாந்தமுங் காலாந்தமு முலோகாந்தமுந் தயாந்தமும், வேண்டிய விதற்கு, விசுவாசமாக மகாவாக்கியங் களுந் தத்தஞ் சமயருசியான அனுபவமுமாகிப் பிறப்பதற்கு முன்னும் மரித்தபின்னும் வருவன அறியவும், அப்பொழுது சாதிக்கவும் படாவென்றும், இப்பொழுது நலந்தீங்குகளையும் அறிந்து மோட்சம்பெற முயலவும், அறிந்த இச்சரீரமுள்ள

---

[1]கடம், படம். குடமும் துணியும்போன்ற பொருள்கள்.

[2]சேட்டியா—சந்நிதி சேட்டிப்பதற்கோ.

—திருமந். 2391.

[3]சேதனம்—அறிவு. 'சேதன மென்னுமச் சேறு'.

(—நாலடி. 106.)

பொழுதே அம்மோட்ச தரிசனம் பண்ணுவதே ஞானமாவ னென்றும் அறிந்து, சமயங்களிற் சொன்னபடியே சீவ பரருக்கு வேறுபாடு நிரூபிக்க;

அவன்செய்தது நசித்ததெனில் ஒருவர்க்கொருவர் ஏற்றத் தாழ்விலராவர். அவன் [1]சர்வஞ்ஞனைக் [2]கிஞ்சிஞ்ஞன் எனில், சிறுநெருப்புக்கும் பெருநெருப்புக்கும் பொடிமூடுமாப்போலக் கிஞ்சிஞ்ஞனுக்கும் பலமுளதாமென்னில் அனாகத்துவம் உளதா கவு(ம்), மலமுளதாமென்னில் கர்த்தாக்களாக வெண்ணப்பட்ட திரிமூர்த்திகளிடத்துஞ் சிலவிக்கினங்கள் உளவாக ஆகம புராணங்கள் சொல்லாநின்றன வாதலாலும், சர்வக்ஞத்துவத் திலுஞ் சியவனமுளதாம். பெரியனாதலாலே லீலை என்னிற் சிறியனாதலாலே இவனுக்குமிது லீலையாம். இவனுக்கு மலம் சகசமென்னல் அக்கினி உட்டணம்போல வேறுபடா. செம்பிற் [3]காளிதங்குளிகை தாக்கக் கழிந்து சுவர்ணமாகக் கண்டோ மென்னில், செம்புநிறமுங்கெட்டுக் குளிகை நிறமும் பெறாது வேறு ஒன்றானாற்போலச், சாரூப்பிய, சாயுச்சியங்களுங் கிடை யாது. அப்பொழுது வேறுபட்டும் ஈசுவரனுக்குச் சந்நிதி அல்லாத (து)மான அவத்தை பிறந்துவிடும்.

நெல்லில் உமியும், பூவிற்புறவிதழும் போக்கினாற்போல மலத்தை இவன் விடுவிக்கு மென்னில்; அப்பொழுதும், வேறாத லொத்தும் ஈசுவரனை அடைவாருமின்றி நாசமும் பிறந்து, கர்த்தாவு மின்றிக் கன்மவாதமுமாய், இவையின்றி விருட்சமுஞ் சாயையும் போலவும், தீபமும், பிரபையும் போலவும் இருவரு மென்னில் தீபத்தைவிட்ட பிரபையும், பிரபையையொழிய வொரு தீபமுமுளதாகையு மன்றி விருட்சத்தை ஒழிந்த சாயையு மின்றி, விருட்ச தீபங்களுடைய வர்க்கக்கேடே அவற்றுக்குங் கேடாகி, வேறு தனக்கென வறிவுஞ் செயலுமின்றி அப்பிராப் பியனென்றும், இதுபோல் இதுவென்றும் சிட்டாந்திரங்க ளென்றுஞ் செல்லும் பிரமாணங்களுக்கு மா[4]...வனவாய்க் கண்ட

[1]சர்வஞ்ஞன்—கடவுள்; (முற்றறிவுடையோன்)

[2]கிஞ்சிஞ்ஞன்—சீவான்மா; (சிற்றறிவினன்)

[3]களிம்பு, ''காளிதஞ் சகசமா இருக்குமாறு'' (சி. சி. உ. 79. மறை.)

[4]பிரதியில் எழுத்துக்கள் சிதைந்துளது.

பரிபூரணனவன் கண்டிதனனைத் தரிசி என்னில் ஏகதேசியாயி ருப்பா னொருவ(னி)டையிலே யனாயினவன் பூரணத்துவத் துக் குறைவாயிவன் உள்ளும் புறம்பு மிவனே யுள(னா)கும்.

பிரமாண முளதென்னில் அவன் என்னுஞ் சொல்லும் வேறு பாடு மின்றி [1]அப்பிராப்பியம் மென்னும் பிரமாணத்துக்குப் போ(தப்) பெற்றதுமாம். முதலே ஒன்றிரண்டாகாது. இரண் டொன்றாகாது. ஒருவர்க்கொருவர் அறிவு நலந்(தீங்)குகளும் ஒவ்வாமை பொன்றாமை கூடாதெனில், ஒருவனேறு கருத்துப் பிறந்த சரீரந்தன்னில் மெய், வாய், கண், மூக்கு, செவி ஒன்ற றிந்து ஒன்றறியாதிருத்தலும், மனத்தானுஞ் சுகத்தை அறியுங் காலத்துத் துக்கத்தை ய(றியா)திருத்தலும், துக்கத்தையனுப விக்குங் காலத்துச் சுகத்தை யறியாதிருத்தலும், †பலபல விதங் களை யறிதலும் இயல்பாகலின் அதனையும் பலவென்று சொல்லுகின்றிலை. அதுநிற்கப் பலவென்றும் ஒன்றென்றுஞ் சொல்லு(கின்)ற நீதானே எத்தன்மையனென்னில், நான் இச் சரீரத்திலே சுரோத்தி ராதிகளிலே வந்த சத்தாதி விஷயங்கள் விளக்குப்போலக் காட்டாநின்ற மனது நானென்னில், இதற்கு முன் கழிந்த சித்தங்களிலே ஒன்றோ?, எழாநின்ற சித்தமோ?, வருகின்ற சித்தமோ?; இச்சரீரத்துட னிற்கப்படுகிறவற்றில் யாவை? யாவை? என்று நிரூபித்துச் சொல்லவேண்டு மென்னில் நிரூபிக்கப் பார்க்கில் நீகற்பித்த கற்பனை பூமியானது உன்னையே நிரூபித்து, அவ்வாறு நிரூபித்தால் பின்பு சொல்லவு மாட்டாயாம்.

அது நிற்க இன்னகாலத்தின்னானாற் சொல்லப்பட்ட தென்னாது பழமையுடைத்தாகியும், எல்லாப் பொருள்களாலு மொழிவற நிறைந்த பிரமாணத்தில் துணிவும், பிரமாணத்தைக் கண்டபின் இதற்கு அநுகூலமாகவும், பிரமாணங்கள் பண்ணின கர்த்தாக்களுள் இவன், அயனென்னும் இவர்களில் வேறல்ல ராதலும், இவனே எல்லாப் பொருள்களையுங் கண்டறுதியுட் (டத)னைக் கற்பிக்கவல்லதும், அறுதியிட வல்லதும், வேறில்லா மலும் இவன்தான் பிரும்மாவின் சரீரத்தோடு (ஒ)ரு நுண்

---

[1] அப்பிராப்பியம்—அடையத்தகாதது.

† துக்கத்தை யனுபவிக்குங் காலத்துச் சுகத்தை யறியா திருத்தலும்.

எறும்பின்சரீரத்துடன் வாசியற [1]யானென்றும், எனது என்றும் நிற்கக் கண்டாலும் அறிந்து வி(வைக)ள் எனது என்னும் பொருளை நிரூபிக்க முற்பட அன்பாகியுஞ் சத்தாகியுந் தோன்றிப் பின்பு மனோவிகாரமாய் விடக்கண்டு யானென்று கொன்டு தாலுளஞானமை கூறவும், அவன் என்று தன்னுண்மையை அவர்க்குந் தெரியாதபடி நின்றுசத்தமும், ஆகாசமுமாகிநிற்கவும், அதனினும் ஆகாச மென்பதொன்(றாகி) ஆகாசமே உள்ள தென்னும்படி நுணுகியதன் வழியே சத்த, பரிச, ரூபங் கூடி அக்கினியாகி சத்த பரிச ரசங் கூடி அப்பாகி சத்த பரிச ரச கந்தங்கூடிப் பிருதிவியாகி இப்படி ஒன்றுக்கொன்று தூலமாகித் தோன்றி இப்பூதங்கள் தம்மிற்கூடி பௌதிகங்களான சராசரங் களாகித் தோன்றி இவைதான் தனித்தனியே ஒன்றெனவும் பலவெனவும், வண்ணமெனவும், ரூபமெனவும், அறுதியிட முடிய(ா)மையும் ஒன்றையொன்றொவ்வா ரூபங்களை யுடைய ராகவும் இப்படி வெகுவிதமாகத் தன்னைத்த(ானே) பாவிப் பித்தான்;

அவற்றின் உள்ளும் புறம்பும் எங்குங் கரந்து, ஆகாசம் நின்ற நிலைபோல எல்லாப் பொ(ருள்களை) யுந் தன்னுள்ளே கொண்டும், அவையன்றியும் நின்றசிற் றற்பவமெனக் கொள்ளு தலும், இவையன்றியுந் தோற்(றப்) பொருள்களும் இச்சரீரமுந் தம்மைக்காணும் இந்திரியங்களைக் காணமாட்டா. இந்திரியங் கள் தாமுமத(ற்) கறிவாகியும், ரூபமாகியும் இந்தமனத்தைக் காணமாட்டா மனது தானுந் தனக்குக் கீழாயுள்ள இந்திரிங் களையும், அவை தான் காட்டப்பட்ட பொருள்களையுங் காணு மித்தனை யன்றித், தனக்கு அறிவாயும் அதிகமாயும் நின்றதனை அறியமாட்டா. இந்திரியங்களது ஆனால் அதிகமான தனக்கும் அவருக்கும் இப்படி சிலவுளவானாலோ வென்னில், பிருமா முதலாக நீர்க்குமிழி போலத் தோன்றிக்கழியத் தனக்காத்து வந்தவர்களின்றிநின்ற காலமுஞ் சகத்தையெல்லாந் தன்னுள்ளே வைத்துத் தான் தன்னுள் எங்கும் வியாபித்து, [2]அவிகாரியாய்

---

[1]யான், எனது = அகப்பற்று, புறப்பற்று.

[2] அவிகாரி—விகாரமற்றது.

நின்ற (வா) காசமுஞ் சரீரமுமாக உடைத்தான அவிகாரத்துக்கு (அ)வத்தைகூடாது. அகிலசுக(ா)சுகங்களுமவறத [1]....தனக்கே யாதல் வேண்டுமென்னில், கரணங்களடங்கின நித்திரையிலே மகாசர்ப்பந் தன்மேலே (ஊர்ந்)து போகவும். சாந்து புழுகு நெய்யைப் பூசவும் பயமும், சுகமும் அனுபவியாமையும் உணர்ந்த கால[2]....... அவற்றாலுள்ள சுகதுக்கங்களை யனுபவித்தாலும்†...

[3]"பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்ப தறிவு".

[4]"யானென தென்னும் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த உலகம் புகும்".

"பெறுபவை கொள்பவர் கொள்போ னெறிபட்டுக்
கற்பவர்க் கெல்லா மெளியநூல் மற்றம்
முறிபுரை மேனியா ருள்ளம்போலே யார்க்கு
மறிதற்க........ ய பொருள்".

---

1 } 2 } பிரதி செல்லரித்துளது.

†இப்பகுதிக்குப் பின்பு எழுதப்பட்ட ஏடுகள் இல்லை.

[3]பரிமே:—பிறப்பிற்கு முதற் காரணமாய அவிச்சை கெட வீட்டிற்கு நிமித்த காரணமாய செவ்விய பொருளைக் காண்பதே ஒருவர்க்கு மெய்யுணர்வாவது.

மணக்:—பிறப்பாகிய அறியாமையினின்று நீங்கப் பிறவாமையாகிய செவ்விய பொருளைக் காண்பது அறிவாம் என்றவாறு.

—குறள். 358. (மெய்யுணர்தல்).

[4]பரிமே: - தானல்லாத வுடம்பை யான் என்றும், தன்னோடியைபு இல்லாத பொருளை எனது என்றுங் கருதி அவற்றின்கண் பற்றுச் செய்தற்கு ஏதுவாகிய மயக்கத்தைக் கெடுப்பான், வானோர்க்கும் எய்தற்கு அரிய வீட்டுலகத்தை எய்தும்.

மணக்:—யான் என்றும் எனது என்கும் நினைக்கின்ற மயக்கத்தை அறுக்கும் அவன், தேவர்க்கு மேலாகிய உலகத்தின் கண்ணே செல்லும் என்றவாறு.

—குறள். 346 (துறவு).

"சிலேக மலிகம பங்கசிலேன பரிசுத்யதி
சித்தேந பரிசுத்யதி".
"...............மாய மாயு மிம்மாய மயக்கம்".

[1]"கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்
மற்றீண்டு வாரா நெறி".

தெள்ளிதின்—தெளிந்த வறிவினா லென்றுமாம்.

விளக்க உரை:—என்பது. கல்வி கரைஇல—கல்விக்கு ஒரு கரையில்லை; கற்பவர்நாள் சில—கற்பவர்க்கு நாளும் அற்பம்; மெல்ல நினைப்பில்—மெல்ல நினையுங் காலத்து; பிணிபல—வியாதிகளும் பலவுள; [ஆதலால்] தெள்ளிதின் ஆராய்ந்து—தெளிய வாராய்ந்து; அமைவுடைய—அமைவுடையவற்றை; கற்பவே—கற்கக் கடவன்; [அஃதெப்படியென்னில்] நீர் ஒழிய—நீரை யொழித்து; பால்உண் குருகில்—பாலையுண்ணும் அன்னம் போல; தெரிந்து—; என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக".

—குறள். 391.

(ரு).

---

[1]பரிமே:—இம்மக்கட் பிறப்பின்கண்ணே உபதேசமொழிகளை அனுபவமுடைய தேசிகர்பால் கேட்டு அதனான் மெய்ப்பொருளை உணர்ந்தவர், மீண்டு இப்பிறப்பின்கண் வாராத நெறியை எய்துவர்.

மணக்:—இவ்விடத்தே மெய்ப்பொருளை அறிந்து தெளிந்தாரே அடைவார்; மீண்டு இவ்விடத்து வாராத வழியினை என்றவாறு.

—குறள். 356. (மெய்யுணர்தல்).

136. தோணி இயக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார்—காணாய்
[1]அவன்துணையாய் ஆறுபோய் அற்றேநூல் கற்ற
[2]மகன் துணையான் [3]மிகக் கொளல்.

தருமர்:—என்பது. தோணி இயக்குவான்—நீரினுள் தோணி நடத்துமவன்; தொல்லை வருணத்து—பழையதாய் வருகிற நாலு வருணத்திலும்; காணில்—ஆராய்ந்து பார்க்கில்; கடைப் பட்டான் என்று—கடைக் குலத்தானென்று; இகழார்—இகழ்ச்சி செய்யார்கள்; காணாய்—(நீ)பாராய்; அவன் துணையாய் தோணி விடுவானுடைய துணையினாலே; ஆறுபோய் அற்றே—ஆறு கடந்த தன்மைத்தாக; நூல் கற்றமகன் துணையான்—நூல் கற்றவன் யாவனாயினும் அவன்சாதி பொல்லாங்கு பாராது அவன் துணையினாலே; மிகக் கொளல்—நல்ல நூல்களைக் கற்றறியக் கடவனென்றவாறு.

நீரைக் கடத்துமவரை சாதி இகழ்ச்சி செய்யாததுபோல நூல் கற்றறிந்தோரையும் சாதி பொல்லாங்கு எண்ணாது, அவரிடத்து நன்னூல்கள் உண்டாயின் அதனைக் கற்கவேண்டு மென்பதாம்.

†**பதுமனார்:**—பழைய சாதிகள் உள்ளாராயில் தோணியைச் செலுத்துவான் கடைப்பட்டானென்று மற்றவனை இகழாது, அவனே துணையாக ஆறுகளைக் கடந்து போவதே போலு மால்; காணாய் நூல்கற்ற மகன் துணையாக நல்லபொருள்களை மனத்தான் அறிந்து கோடல் என்றவாறு.

பா—ம்:—[1]'அவன் துணையா'.—பதுமனார் & விளக்கவுரை.

[2]'மகன் துணையா'. —do—

[3]'நல்ல கொளல்'. —do—

†இச்செய்யுளுடன் கலைமகள் மன்றத்து ஓலைச்சுவடி குறைப்பிரதியாக முடிந்துள்ளது. பின் பகுதிகள் அடையாறு நூல் நிலையத்திலிருந்து வருவிக்கப்பட்ட 'நாலடி விருத்தி' என்னும் கையெழுத்துப் பிரதியைக் கொண்டு பூர்த்தி செய்யப்பட்டன.

வருணம்—சாதி.

விளக்க உரை:— தோணி இயக்குவான்—நீரிலே தோணியைச் செலுத்துவான்; தொல்லை வருணத்து—பழையதாக வருகிற சாதியுள்; காணில்—ஆராயுங்காலத்து; கடைப்பட்டான் என்று—கடைசாதியென்று; இகழார்—அவனை யிகழார்கள்; காணாய்—(நீ)பாராய்; அவன் துணை ஆ—தோணி விடுமவனே துணையாகக்கொண்டு; ஆறு போய் அற்றே—ஆற்றைக் கடந்து போன தன்மைத்தாக; நூல் கற்ற மகன் துணை ஆ—நூல் கற்றவன் யாவனொருவன் சாதி பொல்லாதவனென்று அவனை இகழாமல் அவன் துணையாக; நல்ல கொளல் நல்ல நூற்களைக் கற்றறியக் கடவன் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"மேற்பிறந்தார் ஆயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்தும்
கற்றார் அனைத்திலர் பாடு".

—குறள். 409.

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே
பிறப்போ ரன்ன உடன்வயிற் றுள்ளும்
சிறப்பின் பாலால் தாயுமனம் திரியும
ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
மூத்தோன் வருக என்னாது அவருள்
அறிவுடையோன் ஆறு அரசும் செல்லும்
வேற்றுமை தெரிந்த நாற்பா லுள்ளும்
கீழ்பா லொருவன் கற்பின்
மேற்பா லொருவனும் அவன்கட் படுமே".

—புறம்.183.

"உடல்வயத் தாகும் சாதி உயர்ந்தவர் சாதி தாழ்ந்தோர்
திடமுற உயிரி னோடு செல்லுறும் கல்வி தம்மால்
அடர்தரும் பெருமை எய்தார் ஆதலால் அகக்கண் ணாகித்
தொடர்புறும் கல்விகல்லாத் தொழிலினை விடலே வேண்டும்".

—விநா.அரசி.47.

குறிப்பு:—

ஒருவர்க்குப் பெருமை குலத்தினா லேற்படுவதன்று. கல்வி யினால் ஏற்படுவதே பெருமை யென்பதாம்.

(கூ).

137. [1]தவலருந் தொல்கேள்வித் தன்மை யுடையார்
இகலிலர் எஃகுடையார் தம்முட் குழீஇ
நகலில் இனிதாயிற் காண்பாம் அகல்வானத்து
உம்பர் [2]உறைவார் பதி.

தருமர்:— என்பது. தவல் அரு - கேடில்லாத; தொல் கேள்வித் தன்மையுடையார்—பழைய கேள்வித் தன்மையுடையவர்; இகலிலர்—தம்முள் மாறுபாடில்லாராக; எஃகுடையார் தம்முள்—அறிவினாற் கூரியருமாயிருக்குமவர் தம்முள்; குழீஇ—தம்மிற் கூடியிருந்து; நகலில்—மகிழு மகிழ்ச்சியினும்; இனிதாயில்—இனிதாயிருக்குமாகில்; அகல் வானத்து—அகன்ற வானத்தில்; உம்பர் உறைவார் பதி—தேவர்கள் உறைவதாகிய உயர்ந்த உலகத்தை; காண்பாம்—காணக்கடவோம் என்றவாறு.

கல்வியாலே கூரியராக வொன்றுக்கொன்று விரோதமுமில்லாதார் கூடியிருந்து, கல்வியினால் மகிழு மகிழ்ச்சிக்கு நிகராகச் செய்வது தெய்வலோகத்திலும் இல்லையெனக் கல்வியினது பெருமை கூறியவாறு.

பதுமனார்:—கெடற்கரிய பழைய கேள்விகளால் வருங்குணங்களையுடையராய்த் தம்முள் மாறுபாடிலராய், எஃகு போன்ற கூர்மையுடையார் தம்முட் கூடியிருந்து மகிழுமகிழ்ச்சி போலவினிதாமாயில் காண்பாம், அகன்ற விசும்பிற் கடவுள் உறையும் பதி என்றவாறு.

பா—ம்:— [1]'தகலரும்'.
[2]'உறையும்'.

தவல்—கெடல். தன்மை—குணம். நகல்—மகிழ்ச்சி.

விளக்க உரை:—தவல் அரு—கேடில்லாத; தொல் கேள்வித் தன்மையுடையார்—பழைய கேள்வித் தன்மையுடையவர்; இகல் இலர்--தம்முள் மாறுபாடிலராய் எஃகுடையார் தம்முள்—கூரியருமா யிருக்குமவர் தம்மில்; குழீஇ—கூடியிருந்து; நகலில்-மகிழுமகிழ்ச்சியினும்; இனிதாயில்-இனிதாகில்; அகல் வானத்து—அகன்றவானத்திலே; உம்பர் உறைவார் பதி—தேவர்கள் உறையும் பதி; காண்பாம்—காணக் கடவோம்.

இந்தக் கல்வியை வியந்து தேவருலகத்தை இகழ்ந்த தென்பதாம்.

தவல்—கெடல்.

மேற்கோள் பகுதி:—

பேரா.
வைத்திய. } :—அறிவு பொருளாக உவகை பிறத்தற்கு ''இகலிலர்.......... காண்பாம்'' என்பதனை யெடுத்துக்காட்டுவர்.

—தொல். மெய்ப்பாடு. சூ. 11.

—இ.வி.சூ. 578.

தக்கயாகப்:— "பழைய சந்திரசூரிய ரென்றது, அவர்களுடைய பழமை சொல்லியவாறு; 'தவலருந் தொல்கேள்வி'' என்றது போல''.

கடை திறப்பு. 18-ஆம் பாடல்-உரை.

ஒப்புமைப் பகுதி:—

"உவப்பத் தலைக்கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்''.

—குறள். 394.

குறிப்பு:—

காண்பாம்—தனித் தன்மைப் பன்மை. எஃகு—ஆயுதம், கூர்மை; அஃது ஈண்டு கூரிய அறிவினைக் குறித்தது. கூரீஇ—சொல்லிசை அளபெடை. உம்பர்—மேல்; ஈண்டு அது பண்பாகு பெயராய்ச் சுவர்க்கத்தை யுணர்த்திற்று. இனிதாயிற் காண்பாமெனவே பற்றவை இனிதன்று என்பதும், இதுபோல உயிர்க்குறுதி பயக்கும் இன்பம் நல்கவல்லன அல்லவென்பதும், ஆகவே காணக்கடவமல்லம் என்பதும் குறிப்பாலுணர்த்தப் பட்டன,

(எ).

138. கனைகடல் தண்சேர்ப்ப! கற்றறிந்தார் கேண்மை
நுனியிற் கரும்புதின்று அற்றே—நுனிநீக்கித்
தூரில்தின் றன்ன தகைத்தரோ பண்பிலா
ஈர மிலாளர் தொடர்பு.

தருமர்:—என்பது. கனைகடல் தண்சேர்ப்ப! — ஆர வாரத்தையுடைய குளிர்ந்த கடற்சேர்ப்பனே!; கற்று அறிந்தார் கேண்மை—கல்வியினால் அறிவுடையவருடன் கொண்ட வுறவு; கரும்பு—கரும்பை; நுனியில் தின்று அற்றே—கொழுந்தாடை தொடங்கித் தின்றாற் போலும்; பண்பு இலா ஈரம் இலாளர் தொடர்பு—பண்பும், நயமும் இல்லாதவருடன் கொண்டவுறவு; (நுனி நீக்கி—நுனியை விட்டு; தூரில் தின்றன்ன தகைத்து—அந்தக் கரும்பை யடியே தொடங்கித் தின்றாற் போலும்) என்றவாறு.

கல்வியுடையாரிடத்து நட்புக்கொண்டால் நாடோறும் அவர் கல்வியினுடைய சாரத்தை யறியப்பட்டு அதனால் மிகுந்த மகிழ்ச்சி யெய்துவர். அவருடன் நட்புக்கொள்ளும் போது அவருடைய கல்வி இடம்பாடெல்லாந் தெரியாது. சிறிது தெரிந்ததினால் நுனியிற் கரும்பு தின்றாற்போலு மென்றார். நயமுங் கல்வியாகிய பண்புமில்லாதாருடன் நட்புக்கொண்டால் அவர் அப்போது சொல்லும் நல்லவார்த்தை, அடிக்கரும்பு

தின்றாற்போல இரதிப்பாய்ப் பின்னவர் அறிவின்மையானது நாளிலே கண்டு துயரமெய்துவதை, அடிக்கரும்பினின்று கொழுத்தாடை தின்றாற்போலுமென்று கல்வியானது பெருமை கூறியவாறு அரோ—அசை.

பதுமனார்:— கனைகடற் றண்சேர்ப்பனே ! நூல்களைக் கற்றறிந்தார் நட்பு நுனியே தொடங்கிக் கரும்பினைத் தின்றாற் போலுந் தன்மையை யுடைத்து. பண்பின்றி ஈரமிலாளர் தொடர்பு நுனியை நீக்கிக் கரும்பினை யடியே தொடங்கித் தின்றாற்போலுந் தன்மையை யுடைத்து என்றவாறு.

தூர்—அடி.

விளக்க உரை:— என்பது. கனைகடல் தண்சேர்ப்ப ! —ஆரவாரத்தையுடைய குளிர்ந்த கடற்சேர்ப்பனே!; கற்று அறிந்தார் கேண்மை—கற்றறிந்தாருடனே கொண்ட வுறவு; கரும்பு-கரும்பை; நுனியில் தின்று அற்று-நுனியே யெடுத்துத் தின்றாற்போலும்; பண்பு இலா ஈரம் இலாளர் தொடர்பு—பண்பும் நயமும் இல்லாத பேருடனே கொண்ட வுறவு; நுனி நீக்கி—நுனியைவிட்டு; தூரில்தின்றன்ன தகைத்து—அந்தக் கரும்பை அடியே தொடங்கித் தின்றார்போலும் என்றவாறு.

இது கல்விக்குக் கூடுமோவென்னில் ஒருவனுடனுறவு (பண்ணுங்காலத்து அவன்குணத்தை யாராய்ந்தறிந்து நட்புக் கொள்ள வேண்டும். இது கல்வியுடையவனுக்கல்லது கூடா தென்பது கொண்டு கல்வியென்னும் அதிகாரத்திற்) சேர்க்கப் பட்டது.

மேற்கோள் பகுதி:—

மயிலை. } :—கனையென்னும் உரிச்சொல் ஒலித்தற்றொழிற்
சங்கர. } பண்பை யுணர்த்தியதற்கு "கனைகடற் றண்

சேர்ப்ப'' என்பதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன். மயிலை. சூ. 4·8.

—நன். வி. சூ. 459.

ஒப்புமைப் பகுதி:—

''பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு''.

—நாலடி. 125.

''நளிகடற் றண்சேர்ப்ப ! நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போ லகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு''.

—நாலடி. 166.

''கருத்துணர்ந்து கற்றறிந்தார் கேண்மையெஞ் ஞான்றுங்
குருத்திற் கரும்புதின் றற்றே—குருத்திற்கு
எதிர்செலத்தின் றன்ன தகைத்தரோ வென்றும்
மதுரமி லாளர் தொடர்பு''.

—நாலடி. 211.

''—கரும்பின்
கடைக்கண் அனையம்நாம் ஊரற்கு அதனால்
இடைக்கண் அனையார்க்கு உரை''.

—நாலடி. 390.

(அ).

139. கல்லாரே ஆயினுங் கற்றாரைச் [1]சேர்ந்தொழுகில்
நல்லறிவு நாளுந் தலைப்படுவர்—தொல்சிறப்பின்

பா-ம்:—[1]'சார்ந்தொழுகில்'.

ஒண்ணிறப் பாதிரிப்பூச் சேர்தலாற் புத்தோடு
தண்ணீர்க்குத் தான்பயந் தாங்கு.

தருமர்:—என்பது. தொல் சிறப்பின்-பழைய சிறப்பையும்; ஒள் நிறம்—ஒள்ளிய நிறத்தையுமுடைய; பாதிரிப்பூ—பாதிரிப் பூவை; சேர்தலால்—சேர்தலாலே; புது ஓடு—புதியவோடு; தண்ணீர்க்கு-; தான்பயந்து ஆங்கு-நாற்றங் கொடுத்துத் தான் பயன்பட்டாற் போல; கல்லாரே ஆயினும்-கற்றிலராயினும்; கற்றாரை—கற்றறிந்தாரை; சேர்ந்தொழுகில்—சென்றணுகித் திரிவாராகில்; நாளும்—நாளடைவிலே; நல்லறிவு தலைப்படுவர்—நல்லறிவுகளை யுடையவராவர் என்றவாறு.

கல்வியில்லாதாருங் கல்வியுடையாரை யடுத்தவுடனே அறிவுடையா ராவரென்றால், கல்வியில் முயல்வார்க்கு அறிவுவருதல் சொல்லவேண்டாவே. ஆதலால் எவ்வகைத்தானுங் கற்க வேண்டுமெனக் கல்விக்கு உடன்படாதார்க்கு அறிவுறுத்தியது.

பதுமனார்:- நூற்களைக் கற்றிலராயினுங் கற்றாரைச் சேர்ந் தொழுகுவராயின் நாடோறுந் தொல்சிறப்பின் நல்லறிவு நாளுந் தலைப்படுவர். ஒள்ளிய நிறத்தினையுடைய பாதிரிப்பூவைச் சேர்தலாற் புத்தோடுதான் வாசத்தை தண்ணீர்க்குப் பயந்தாற் போல் என்றவாறு.

நாளும்—நாடோறும்.

விளக்க உரை:— என்பது. தொல் சிறப்பின்—பழஞ் சிறப் பினையும்; ஒள் நிறம்—ஒள்ளிய நிறத்தையுமுடைய; பாதிரிப்பூ—பாதிரிப் பூவை; சேர்தலால்—; புத்தோடு—; தண்ணீர்க்குத் தான் பயந்து ஆங்கு—தான் தண்ணீர்க்குப் பயன் பட்டது போலும்; கல்லாரே ஆயினும்—கற்றிலராயினும்; கற்றாரை—கற்றவரை; சேர்ந்து ஒழுகில்—சேர்ந்தணுகித் திரிந்து; நல்லறிவு நாளும் தலைப்படுவர்—நல்லறிவு நாள் தோறும் உடையராவர் என்றவாறு.

[1]உயர்ந்தவனுங் கற்றறிய வேணுமென்று தம்மைத் தேடி வந்து சேர்தலில் இந்தக் கல்வியை வியந்து யாவருங் கற்க வேண்டு மென்பதாம்.

ஒப்புமைப் பகுதி:—

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட தீமையை மாற்றுவ ரெனுமிது வழக்கே
உருண்ட வாய்தொறும் பொன்னுரு னுரைத்துரைத் தோடி
இருண்ட கல்லையுந் தன்னிற மாக்கின விரதம்"

—இராமாவதாரம்.

"நல்லமண முள்ளதொன்றை நண்ணி யிருப்பதற்கு
நல்ல மணமுண்டா நலமதுபோல்—நல்ல
குணமுடையோர் தங்களுடன் கூடியிருப் பார்க்குக்
குணமதுவே யர்ஞ்சேர்வு கொண்டு".

—நீதிவெண்பா

"பூவோடு சேர்ந்த நாரும் மணம் பெறும்".

—பழமொழி.

குறிப்பு:—

அறிவு தலைப்படுவர்—திணை வழுவமைதி. புதுமை + ஓடு = புத்தோடு; ஈறுபோய்த் தன் ஒற்று இரட்டி புத்தோடு என வாயிற்று. பாதிரிப்பூ கற்றார்க்கும், புத்தோடு கல்லார்க்கும், நன்மணம் அறிவிற்கும் உவமைகள். நன்மணம் பொருந்திய நீரில் நீராடவிழைவார் புதுப்பானையில் பாதிரிப் பூக்களைப் பெய்து, அவை நன்கு மலர்ந்தபின் பானையினின்றும் அவை களை நீக்கி அப்பானையில் நீர் வார்த்துக் கொள்வர். பூக்களின் மணம் பானையிலேறி, தன்கண் வார்க்கப்பட்ட நீரிலும் கலந்து

பா-ம்:- [1]உயர்ந்தவனும் கற்றறிய வேணுமென்றுப் பாதிரியின் பூவை (யும்) புத்தோட்டையுஞ் சேர்த்துச் சொல்லிவியது, யாவருங் கற்க வேணு மென்பதாம்.

நீரை மணம்பெறச் செய்யும். அதுபோல கற்றாரைச் சார்ந்த கல்லாரும் அறிவுபெற்று, தன்னைச்சார்ந்தாரையும் அறிவு படுத்துவ ரென்பதாம்.

(கூ).

140. அலகுசால் கற்பின் [1]அறிவுநூல் கல்லாது
உலகநூல் ஓதுவது எல்லாங் கலகல
கூஉந் துணையல்லாற் கொண்டு தடுமாற்றம்
போஒந் துணையறிவா ரில்.

தருமர்:— என்பது. அலகுசால் — எண்ணிறந்த; கற்பின் —நூலினைக் கற்குங் காலத்து; அறிவுநூல் கல்லாது—தன்னை நன்னெறியின் உய்ப்பதாய நன்னூல்களைக் கல்லாது; [2]உலக நூல் ஓதுவது எல்லாம்—உலகவழக்கமான பலநூல்களை ஓதுவ தெல்லாம்; கலகல கூஉம் துணையல்லால்—கலகலவென்னு மோசை யுடைத்தாகக் கூவுவதேயல்லாமல்; கொண்டு தடு மாற்றம்போஒம்—பிறவித் தடுமாற்றத்தினின்று தம்மை யுய்யக் கொண்டு போம்; துணையறிவார் இல்—அளவை யறிவாரில்லை யென்றவாறு.

கற்றறிந்தோர் கல்வியறிவினாலே உலகவியற்கையான விடயங்களிலே நின்றுழன்று மீண்டும் பிறவிக்கு ஏதுவாகாமல், கல்வியறிவினாலே சூட்சித்தாராய்ந்து மீண்டும் பிறந்துழலாது நல்லுலகத்தைத் கொடுப்பதாய தவத்திலுழன்று நன்மைபெற வேண்டுமென்பதாம்.

பதுமனார்:—அறிவினாற் சொல்லப்பட்ட அளவு அமைந்த

பாடம்:— [1]'அறிவநூல்'.

அறிவநூல்—இறைவனாகம நூல்; அவை அங்காமம், பூர்வாகமம், பகுசுருதி யாகமம் என்பன.

[2]உலக நூல்—மந்திரம், கணிதம், வைத்தியம், சோதிடம், காப்பியம், புராணம், கண்மருள் சாலம் முதலிய பிற நூல்கள்.

கற்பினையுடைய வாகமங்களைக் கல்லாது, உலகநூல்களை ஓதுவதெல்லாங் கலகலவெனக் கூவுந்துணையல்லாது, பிறவித் தடுமாற்றத்தினின்றுந் தம்மை(யுய்ய)க்கொண்டு போமளவறிவாரில்லை யென்றவாறு.

அலகுசால்—எண்ணுதல் அமைந்தவென்றும், அளவமைந்தவென்றுமாம். கற்பின்—விரதங்களின்; அவையாவன இராகத்துவேஷ லோப மதமாச்சரிய [1]பை(சாச) சூனியங்களும் இவற்றால்வருங்கொலை, களவு, கள், காமம், பொய் முதலானவும் விட்டு, ஊனும், தேனும், காற்றும், போசன நியதியுடையராகி அன்பும் அறனும் அருளும் ஞானபாவனைகளுஞ் செலுத்தி ஏகாகி நிற்பிக்க சாந்தி பாணி [3]பாத்திராவுதிகம், பொத்துவம், ஆனபடிகளிலே நிற்குந் தவசினையுடைய வறிவன் அனந்த ஞானம் அனந்தகுண முதலான பெருமையையுடையவனாலே அருளிச் செய்யப்பட்ட வீட்டுநெறி அறிவுநூல். உலகநூல், சிற்பம் சோதிஷ மென்னுமிவை முதலாயின.

தடுமாற்றம்—பிறவித்தடுமாற்றம்.

விளக்க உரை:— என்பது. அலகுசால் — எண்ணமைந்த; கற்பின்—நூலைக் கற்குங்காலத்து; அறிவுநூல் கல்லாது—வீடுபேற்றுக்குக் காரணமான [2]வீசனது ஆகமநூல்களைக் கல்லாது; உலகநூல் ஓதுவது எல்லாம்—உலகவழக்கமான பலநூல்களை ஓதவதெல்லாம்; கலகல கூஉம் துணை அல்லால்—கலகலவென்னும் ஓசையை யுடைத்தாய்க் கூவுமளவல்லது; கொண்டு தடுமாற்றம் போஒம்—பிறவித் தடுமாற்றத்தினின்றுந் தம்மை உய்யக்கொண்டு போம்; துணை அறிவார் இல்—அளவையறிவாரில்லை யென்றவாறு.

கல்வியால் அறப்பயன் நீட்டிக்க மனைவாழ்க்கையின்கண்

பா-ம்:— [1]வைரங்களும்.

[2]இறைவனது.

[3]இவை பிரதியிலிருந்தபடியே எழுதப்பெற்றது.

நில்லாமல் பின்பு மறுமைக்கு உறுதியாகத் துறந்து தவம் பண்ணுத லென்பதாம்.

அழகு சால் கற்பின் †.........பிறவித் தடுமாற்றம்.

மேற்கோள் பகுதி:-

மயிலை
சங்கர
சுப்பிர } :- இரட்டைக்கிளவி அவ்விரட்டிற் பிரிந்து தனித்து ஒலியா என்பதற்கு "கலகல கூஉந் துணையல் லால்.........இல்" என்பதனை மேற்கோளாகக் காட்டுவர்.

—நன்.சூ.395.
—நன் சூ.396.
—பிரயோக.சூ.39.

திருநூற்று:-"இதனால், மெய்ந்நூலால் உண்மை விளங்குவ தல்லது பொய்ந்நூலுண்மை விளங்காவாதலின் மிச்சர் உணரா ரென்பதாம்; 'உலகநூ லோதுவதெல்லாங் கலகல' என்றார் பிறரும்".

—திருநூற்று.15.

ஒப்புமைப் பகுதி:-

"விளக்கு விலைகொடுத்துக் கோடல் விளக்குத்
துளக்கமின் றென்றனைத்துந் தூக்கி—விளக்கு
மருள்படுவ தாயின் மலைநாட! என்னை?
பொருள்கொடுத்துக் கொள்ளா திருள்".

—பழ.334.

"—தொலைவில்லாச்
சத்தமுஞ் சோதிடமு மென்றாங் கிவைபிதற்றும்
பித்தரிற் பேதையா ரில்".

—நாலடி.52.
(ய).

†பதுமனார் உரையிலுள்ளதே.

15. குடிப் பிறப்பு.

தருமர்:—அஃதாவது மண்ணு மக்களுந் தோன்றிய நாள் முதலாகச் சன்மமெடுத்து வருவதாய் நாலுவருணத்துளதாகிய குடிப்பெருமையும், அதற்கனுபவமாய் வரும் கோத்திரமும், குலத்திற்கேற்ற வொழுக்கமும். ஆசாரமும், வழிபாடும், செயற்கையான கல்வியும். பிறரறிந்து கூற வேண்டுமறிவுந் தமக்கு இயற்கையாகி உண்டாதலுமாம்.

பதுமனார்:— அஃதாவது வருண நாலுக்குமுட்பட்டு மண்ணு மக்களுந் தோன்றின நாள்முதலாக வரும் செல்வமும், அதனால் உளதாகிய குடிப்பெயருமுடைத்தாய் அதற்கனுபவமாய் வரும் கோத்திரமும், மனையுமே ரிடமாகவு முடைத்தாய்க் குலவறமும், ஆசாரவறமும், இவை யீடுபடாத வொழுக்கமும் உடைத்தாயது உயர்குடி. சன்மமான விடத்தை யொழிந்து கோத்திரமும் மனையும் வெவ்வேறு பட்டிருக்கையும், குடிப் பிறப்பிற் குறையில்லை யாயினும் நல்லொழுக்கமும், அடிப்பாடும் பிறரறிந்து கூறவேண்டும் வரிசைத் தாழ்வுள்ளதாம், இப்பெற்றி யினாற் பிறந்து பெறுவதன்றி இடையில் தேடிப்பெறவும், பெற்றதனை ரட்சிக்கவும் அரிதாகிய விதனாற்பெறும் பிரயோசனம் யாதெனில், வேதாகமம் ஆரிஷ முதலாகிய சாத்திரங் களும் காவிய புராணங்களும் இவரிடமாக எழவும் வளரவும் பெறுதலும், அவற்றாற் சொல்லப்பட்ட தன்மார்த்த காமமோட் சங்களைச் சாதித்துப் பெறுதற்குப் பாபங்களைச் செய்யாது, சத்திய தானதன்மங்களைச் செய்தலும் பெரியாரைப் பணிந் தொழுகலும் இவர் இவ்வாறு செலுத்து நற்குணங்களைக் கண்டு, குடிப்பிறப்பல்லாதவரும் இக்குணங்களைச் சிலவிரும்பிச் செய்து பிழைத்தலுமாம்,

விளக்க உரை:- அஃதாவது வருண நாலுக்கும் உட்பட்டு மண்ணுமக்களுந் தோன்றிய நாள்முதலாக வருஞ் சனனமும், அதிலுளதாகிய குடிப்பிறப்பும், அதற்கனுபவமாய் வரும் கோத்திரமு மோரிடமாகவும், குலத்துக்கேற்ற ஒழுக்கமும்,

அறமும், ஆசாரமும், [1]அடிப்பாடும், செயற்கையான கல்வியும், பிறரறிந்து கூற வேண்டுமறிவுகள் தமக்கியற்கையாக வுண்டாதலுமாம்.

குறிப்பு:-

'குடிமை':—

பரிமே:— அஃதாவது உயர்ந்த குடியின்கண் பிறந்தாரது தன்மை. உயர்ந்த குடிப்பிறப்பு நால்வகை வருணத்தார்க்கும் இன்றியமையாதாகலின், அச்சிறப்புப்பற்றி இது முன் வைக்கப் பட்டது.

பரிப்:— குடிமையாவது உயர்குடிப் பிறந்தராது இயல்பு கூறுதல் மக்கள் உடைத்து ஆகிய கணங்கள் எல்லாவற்றினும் உயர்குடிப்பிறத்தல் சிறப்புடைத்து ஆதலின் இது முன் கூறப் பட்டது.

பரிதி:— குடிமையாவது கடல் சூழ்ந்த உலகில் தன்குடியை ஆக்க என்றவாறு.

—குறள். அதி. 96.

141 உடுக்கை உலறி உடம்பழிந்தக் கண்ணுங்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்
இடுக்கண் தலைவந்தக் கண்ணும் [2]அரிமா
கொடிப்புற் கறிக்குமோ? [3]மற்று.

தருமர்:— என்பது. அரிமா—சிங்கமானது; இடுக்கண்

---

[1](1) உறுதியான நிலை; 'இதிரே உபாயத்தில் அடிப்பாடு' (ஈடு. 6. 3. 3); (2) திருவடியில் ஈடுபாடு; 'இதென்ன அடிப்பாடு தான்' (ஈடு. 4. 1. 11).

பா-ம்;— [2]'வரிமா'; வரிமா—புலி.

[3]'கூறு'—பதுமனார்.

தலைவந்தக் கண்ணும்—பசியால் துன்பம் வந்தவிடத்தும்; கொடிப்புல்—படர்ந்த புல்லை; கறிக்குமோ? —தின்னுமோ?; [தின்னாது அதுபோல்] உடுக்கை—உடுக்கும் புடவை; உலறி உடம்பு அழிந்தக்கண்ணும்—துணியாய்ப்போய் அதனாலே பொலி வழிந்து பசியாலுடம்பு வற்றியவிடத்தும்; குடிப்பிறப்பாளர்—நல்ல குடிப்பிறந்தவர்; தம் கொள்கையில் குன்றார்—தமது ஒழுக்கத்திற் குறைவதில்லை என்றவாறு.

நற்குலத்திற் பிறந்தவர் தமது இயற்கை யறிவினாலே வறுமையுற்ற காலத்தினும், அதனைப் பொறுப்பதன்றிச் செல்லா விடஞ் சென்று இரவாரென்பதாம்.

பதுமனார்:—பொல்லா உடுக்கையாற் பொலிவழிந்து பசிநோயால் உடம்பழிந்தவிடத்துங் குடிப்பிறப்பினையுடையார் தம்மொழுக்கத்திற் குறைவுபடார். பசியால்வரும் இடுக்கண் தலைவந்தவிடத்தும் அரிமா கொடிப்புல்லைக் கறிக்குமோ? என்றவாறு

உலறி—உருக்கெட்டு. உடம்பு அழிந்தக்கண்ணும்—பசி நோயாற் பொலிவழிந்த விடத்தும்.

விளக்க உரை:—என்பது. அரிமா—சிங்கம்; இடுக்கண் தலைவந்தக் கண்ணும்—பசியால் துன்பம் வந்தவிடத்தும்; கொடிப்புல் கறிக்குமோ? —கொடிப்புல்லைத் தின்னுமோ?; [தின்னாது அதுபோல] உடுக்கை—பொல்லா உடுக்கையால்; உலறி—பொலிவழிந்து; உடம்பு அழிந்தக்கண்ணும்—பசி நோயால் உடம்பு வற்றினவிடத்தும்; குடிப் பிறப்பாளர்—(நற்) குடிப்பிறப்பையுடையவர்; தம்கொள்கையில் குன்றார்—தம் மொழுக்கத்தில் குறையார் என்றவாறு.

உலறி—உருக்கெட்டு.

ஒப்புமைப் பகுதி:—

"ஒற்கந்தாம் உற்ற விடத்தும் உயர்ந்தவர்
நிற்பவே நின்ற நிலையின்மேல்—வற்பத்தால்
தன்மேல் நலியும் பசிபெரி தாயினும்
புன்மேயா தாகும் புலி".

—பழ.119,

"நல்லா றொழுக்கின் தலைநின்றார் நல்கூர்ந்தும்
அல்லன செய்தற் கொருப் படார் பல்பொறிய
செங்கட் புலியேறு அறப்பசித்தும் தின்னாவாம்
பைங்கண் புனத்தபைங் கூழ்".

—நீதிநெறி.61.

"வழங்குவ துள்வீழ்ந்தக் கண்ணும் பழங்குடி
பண்பின் தலைப்பிரிதல் இன்று".

—குறள்.955.

"ஊழி பெயரினும் தாம்பெயரார் சான்றாண்மைக்(கு)
ஆழி எனப்படு வார்".

—குறள்.989.

"பீடில்லாக் கண்ணும் பெரியார் பெருந்தகையா"

—பழ.96.

"சீரியர் கெட்டாலும் சீரியர் சீரியரே
அல்லாதார் கெட்டாலங் கென்னாகும்—சீரிய
பொன்னின் குடம்உடைந்தால் பொன்னாகும்; என்னாகும்?
மண்ணின் குடம்உடைந்தக் கால்".

—வாக்கு.18.

"சந்தன மென்குறடு தான்தேய்ந்த காலத்தும்
கந்தம் குறைபடா தாதலால்—தந்தம்
தனம்சிறிய ராயினும் தார்வேந்தர் கேட்டால்
மனம்சிறிய ராவரோ மற்று".

—வாககு.28

"இம்மூ வுலகில் இருள்கடியும் ஆய்கதிர்போல்
அம்மூன்றும் முற்ற அறிதலால்—தம்மின்

உறழா மயங்கி உறழினும் என்றும்
பிறழா பெரியோர் வாய்ச் சொல்'.

—பு வெ.167.

"தேய்ந்தாலும் சந்தனக்கட்டை மணம் மாறாது".

—பழமொழி.

"குப்பைக்குள் இருந்தாலும் குன்றிமணி குன்றாது".

—பழமொழி.

"புலி பசித்தாலும்புல்லைத்தின்னாது".

—பழமொழி.

குறிப்பு:—

உடுக்கை—தொழிலடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; தொழி லாகு பெயர் என்பர் மற்றும் சிலர். இடுக்கண் என்றதற்கு 'மலர்ந்த நோக்கமின்றி மையல்நோக்கம் படவரும் இரக்கம்' என்பர் உரையாசிரியராகிய நச்சினார்க்கினியர். அரிமா—இரு பெயரொட்டுப் பண்புத்தொகை. ஓகாரம் எதிர்மறை. மற்று—அசை. குடிப்பிறந்தார்க்குள்ள கொள்கையாவன; அருளும், அன்பும், அடக்கமும், வாய்மையும் இன்சொல்லும் பொய் யில்லாமையும், குரவரைப் பேணுதலுமாகிய இவை முதலியன. (க).

142. **சான்றாண்மை சாயல் ஒழுக்கம் இவைமூன்றும்**
வான்றோய் குடிப்பிறந்தார்க்கு அல்லது—வான்றோயும்
மைதவழ் வெற்ப! படாஅ பெருஞ்செல்வம்
எய்தியக் கண்ணும் பிறர்க்கு.

திருமர்:—என்பது. வான்தோயும்—வானில் திகழும்;

மைதவழ் வெற்ப!—மஞ்சுகள் தவழ உயர்ந்த மலைசூழ்ந்த நாட்டை யுடையவனே!; சான்றாண்மை—அமைதியும்; [1]சாயல்—மேன்மையும்; ஒழுக்கம்—ஒழுக்கமும்; இவைமூன்றும்—என்னும் (இம்மூன்று) குணங்களானது; வான்தோய்—வானைத்தோயும் உயர்ந்த; குடிப்பிறந்தார்க்கு அல்லது—குடியிலே பிறந்தவர்க் கல்லது; பெரும் செல்வம் எய்தியக்கண்ணும் பிறர்க்கு—பிறர் பெரிய செல்வத்தை யுடையராயினும் அவர்களுக்கு; படா—[இந்தக் குணங்கள்] உண்டாகாது என்றவாறு.

வான்தோய் குடி—குலத்தினது உயர்வு கூறியது. பெரிய செல்வமுண்டானவிடத்து மெனவே அவர் இழிவு விளங்கப் பட்டது.

பதுமனார்:— வான்றோயு மைதவழ் வெற்ப! அமைதி, மேன்மை, ஒழுக்கம் இம்மூன்றும் வானைத்தொடுவதுபோல ஓங்கிய குடியின்கட் பிறந்தார்க்கல்லது பிறர்க்குப் பெருஞ் செல்வம் எய்தியவிடத்தும் உளவாகா என்றவாறு.

சான்றாண்மை— அமைதி. சாயல்—மேன்மை. வான்தோர் குடி—வானிலே தேய்வதுபோல ஓங்கிய குடி. மை—கார். படா—உளவாகா.

விளக்க உரை:—என்பது. வான்தோயும்—வானைத்தோயும்; மைதவழ் வெற்ப!—மஞ்சு தவழு மலையை யுடையவனே!; சான்றாண்மை—அமைதியும்; சாயல்—மேன்மையும்; ஒழுக்கமும்; இவை மூன்றும்—இம்மூன்று குணமும்; வான் தோய்—வானைத் தோயும் உயர்ந்த; குடிப்பிறந்தார்க்கு அல்லது—குடியின்கட் பிறந்தார்க்கல்லது; பெரும் செல்வம் எய்தியக் கண்ணும்—; பிறர்க்கு—; படா—(இவை) உண்டாகாது என்றவாறு.

---

[1]சாயல்—'ஐம்பொறிகளாலும் நுகரப்படும் பலவகை மென்மை களையும் உணர்த்துவதோ ருரிச்சொல்' என்பர் நச்சினார்க் கினியர் (சீவக.8).

மை—கார்.

மேற்கோள் பகுதி:-

பரிமே:—"வானுயர் தோற்றம் என்பது "வான்தோய்குடி" என்றாற்போல இலக்கணை வழக்கு".

—குறள். 272. உரை.

ஒப்புமைப் பகுதி:-

"ஒழுக்கமும் வாய்மையும் நாணுமிம் மூன்றும்
இழுக்கார் குடிப்பிறந் தார்"

—குறள். 952.

"உன்னல் மொழிதல் செயல்மூன்றொத் தொழுக்கம் வாய்மை நாண் இழுக்கார்
மன்னு மனையில் பிறந்தார்கள் மலர்தல் ஈகை இகழாமை
நன்னர் மொழியும் அவர்க்கேயாம் நன்மை பயவா வினை வறுமை
இன்ன விடத்தும் புரியார்கள் ஏமகண்டா இனியறிமோ".

—விநா. அரசி. 143.

குறிப்பு:-

வானத்தை யளாவும் உயர்ந்த மலைகளிலே மேகங்கள் தவழ்தல்போல நற்குடிப் பிறந்தார்க்கே சான்றாண்மை முதலிய குணங்கள் பொருந்தியுள்ளன என்பது தொகைமொழி. சாயல் —மேன்மை; 'அது கருத்தும் சொல்லும், செயலும் தம்முள் மாறாமையும், பழிபாவங்களுக்கு அடங்குதலுமாகிய தன்மை' என்பர். 'அல்லது' என்னும் குறிப்பு வினையெச்சம் 'படா' என்னும் வினைகொண்டது.

(உ).

143. இருக்கை எழலும் எதிர்செலவும் ஏனை
விடுப்ப ஒழிதலோடு இன்ன—குடிப்பிறந்தார்
குன்றா ஒழுக்கமாக் கொண்டார் கயவரோ(டு)
ஒன்றா உணரற்பாற் றன்று.

தருமர்:— என்பது. குடிப்பிறந்தார்—; இருக்கை எழலும்—தம்மால் ஆசாரஞ் செய்யப்பட்டவர் வந்தால் அவரைக் கண்டவுடன் எழுந்திருந்து நிற்றலும்; எதிர்செலவும்–அவர்க்கு எதிராகச் செல்லுதலும்; ஏனை விடுப்ப ஒழிதலோடு—அவரிருந்து போம் பொழுது மற்றுமவர்பின்னாகச் சென்று அவர் நில்லுமென நிற்றலும்; இன்ன—இவ்வகைத்தாயவை; குன்றா ஒழுக்கம் ஆ—தமக்குக் கோடாத வொழுக்கமாக; கொண்டார்—; கயவரோடு—கயவருடன்; ஒன்று ஆ—இவை ஒன்றும் பகுதியுண்டாயினும் குடிப்பிறந்தாரைப்போல வியற்கையாய் உண்டாயதென்று; உணரல் பாற்று அன்று—உணரும் பகுதியல்லவென்றவாறு.

கயவரிடத்து இந்தக் குணம் உண்டாயிருந்ததாயின் அது அச்சத்தாலாதல், ஒருபயனைக் கருதியதால் ஆசாரஞ் செய்ததன்றிக் குடிப்பிறப்பாளரைப் போலச் சுபாவமல்லவென்பதாம்.

பதுமனார்:—தம்மாற் சிறப்புச் செய்யப்படுவாரைக் கண்டால் இருக்கை எழலும், எதிர்சேறலும், அவர்பின் சென்றால் அவர் நிற்கவென நிற்றலும் இப்பெற்றிப்பட்டன குடிப்பிறந்தார் தமக்குக் குன்றாவொழுக்கமாகக் கொண்டார். அவ்வொழுக்கங் கயவரோடு பொருந்த உணரப்படுந் தன்மையை யுடைத்தன்று என்றவாறு.

தம்மால் ஆசாரஞ் செய்யப்படுவாரைக் கண்டால் தாம் இருக்கை யெழலும், அவருக்கு எதிர்சென்று கண்டு வருதலும், போம்போழுது பின்னேசென்று நிற்கச்சொல்ல நிற்றலும், என்ன விலை முதலான உபசாரமாவன குடிப்பிறந்தார் ஒழுக்க

மாதலிற் குடிப்பிறப்புக் குன்றா வொழுக்கமாகக் கொண்டார். கீழ்களுக்கு ஒழுக்கமென்ப தில்லாமையால் அவர் அஞ்சித் திரிவனவே ஆசாரமாதலின், நல்லொழுக்கங் கயவரோ டொன்றா வுணருந் தன்மை [1]"அச்சமே கீழ்களது ஆசாரம்" என்பதுமது.

விளக்க உரை:— என்பது. குடிப்பிறந்தார்—; இருக்கை எழலும்-தம்மால் ஆசாரஞ் செய்யப்பட்டார் வந்தால்; இருந்த இருப்புவிட்டுத் தாம் எழுந்திருந்து நிற்றலும்; எதிர் செலவும்— அவருக்கெதிரே செல்லுதலும்; ஏனை விடுப்ப ஒழிதலோடு— அவர் நில்லுமென நிற்றலும்; இன்ன (என்ற இவை முதலான வை); குன்றா ஒழுக்கம் ஆ—தமக்குக் கோடாத வொழுக்கமாய்; கொண்டார்—; கயவரோடு—கயவருடன்; ஒன்றா உணரல் பாற்று அன்று—இவை ஒன்றும் பகுதி யுண்டாயினுங் குடிப்பிறந் தாரைப் போல வியற்கையாக வுணரும் பகுதி ஒன்றானும் உடைத்தல்ல வென்றவாறு.

[2]கயவர் அந்த நற்குணங்களைச் செய்யில் அச்சத்தாலாதல் ஒருபயனைக் கருதியாதல் செய்வர்; அவரைப்போலச் சுபாவ மல்ல. "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்பதுமது.

மேற்கோள் பகுதி:-

நச்:— வழிபாடு கூறுதற்கு இச்செய்யுளை மேற்கோள் காட்டுவர்.

—தொல். பொருள். புறத்திணை. சூ. 20.

பரிமே:— "பணிவு — இருக்கை யெழலும் எதிர்செலவும் முதலாயின".

—குறள். 960. உரை.

---

[1]குறள். 1075. "கயவரதாய ஆசாரம் கண்டது உண்டாயின் அதற்குக் காரணம் அரசனான் ஏதம் வரும் என்று அஞ்சும் அச்சமே". (பரிமே-உரை).

[2]"அச்சமே கீழ்கள தாசாரம் எச்சம்
அவாவுண்டேல் உண்டாம் சிறிது".

—குறள். 1075.

ஒப்புமைப் பகுதி:-

"நலம்வேண்டின் நாணுடைமை வேண்டும் குலம்வேண்டின்
வேண்டுக யார்க்கும் பணிவு".

—குறள் 960.

"ஏற்ற முடைமை எதிர்கோளி னறிப".

—முதுமொழிக் காஞ்சி.5.

"காணுறி லெழுந்திருத்தல் காதலித் தெதிரே செல்லல்
பேணிநன் மொழிகள் சொல்லல் பின்பு போய்ச் செல்ல [நிற்றல்
ஆணியா மூனிக் கிவ்வா றானவை செய்தன் மெய்யே"

—பழப்பாடல்.

குறிப்பு:-

இருக்கை என்பது தொழிலாகு பெயர். ஏனை என்ற இடைச்சொல் வினைமாற்றுப் பொருளில் வந்தது. ஒடு—எண்ணிடைச் சொல். இச்செய்யுளின் முதலடி முற்றுமோனை. இன்ன என்பதன் ஈற்றில் இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தல் விகாரம்.

(ங).

144. நல்லவை செய்யின் இயல்பாகுந் தீயவை
பல்லவர் தூற்றும் பழியாகும்—எல்லாம்
உணருங் குடிப்பிறப்பின் ஊதியம் என்னோ?
புணரும் ஒருவர்க்(கு) எனின்.

பதவுரை:— என்பது. நல்லவை செய்யின்—நல்லவற்றைச் செய்தால்; இயல்பாகும்—அது தமக்கு இயன்ற காரியமாகும்; தீயவை—தீயவற்றைச் செய்தால்; பல்லவர் தூற்றும்—அது பலரும் தூற்றும்; பழி ஆகும்—பழிப்புரையாகும்; [ஆதலால்] ஒருவர்க்கு—; புணரும் எனின்—இவ்வகைத்தாய குடிப்பிறப்பு புணருமாயின்; எல்லாம் உணரும்—எல்லாவற்றையு மறியும்;

குடிப்பிறப்பின்—குடியின்கட் பிறத்தல்; ஊதியம் என்னோ?—என்ன பயனைத் தருமோ? [ஒருவர்க்கு நன்றென்று வியந்து சொல்லுகிறது யாதோ?] என்றவாறு.

நற்செய்கை செய்யில் அவர்க்குள்ள சுபாவஞ் செய்தாரென்பதன்றி வியந்து கூறுவதில்லை. பொல்லாதவற்றைச் செய்யில் பலரும் பழிப்புரையாடுவதாய் முடியுமாதலால், இவ்வகைத்தாய உயர்குலத்திற் பிறந்ததினால் ஆவதென்ன? என்று அவரிடத்துத் தீயசெயலில்லை யென்பது தோன்ற [1]நிந்தாஸ்துதியாகக் கூறியது.

பதுமனார்:— நல்லனவற்றைச் செய்யில் தமக்கியற்கையாகும்; தீயனவற்றைச் செய்யிற் பலருந் தூற்றும் பழியாகும். ஆதலால் நற்குணங்களையுந்தாமே உணர்ந்தொழுகுங் குடியின்கட் பிறத்தலின்மேல் ஒருவர்க்கு உறுதியில்லை, அக்குடிப் பிறப்புத்தான் (வந்து) கூடுமாயி னென்றவாறு.

இத்தன்மையன வெல்லாமறிந்து தத்தமக்கேற்ற குணங்களைத் தாமே வழுவாமல் எப்பொழுதும் உணருங் குடிப்பிறப்பின் மிக்க ஊதியமில்லை, அக்குடிப்பிறப்பு ஒருவர்க்கு வந்து கூடுமாயி னென்றவாறு.

விளக்க உரை:— நல்லவை செய்யின்—நல்லவற்றைச் செய்யில்; இயல்பாகும்—தமக்கு இயல்பாகும்; தீயவை—தீயவற்றைச் செய்யில்; பல்லவர் தூற்றும்—பலரும் தூற்றத்தக்க; பழி ஆகும்—பழிப்புரையாகும்; [ஆதலால்] ஒருவர்க்கு—; புணரும் எனின்—இப்படி குடிப்பிறப்பு வந்து கூடுமாகில்; எல்லாம் உணரும்—எல்லாவற்றையுமறிந்த; குடிப்பிறப்பின்—குடியின்கட் பிறத்தலால்; ஊதியம் என்னோ?—என்ன பயனைச் செய்யுமோதான்? [நன்றென்று வியந்து சொல்லுகின்றது யாதோ?] என்றவாறு.

---

[1]வஞ்சகப் புகழ்ச்சி; இகழ்தல் போலப் புகழ்கை.

குடிப்பிறப்பின் ஊதியம் என்னோ—குடிப்பிறப்பின் மிக்க ஊதியமில்லை, அக்குடிப்பிறப்பு ஒருவர்க்குக் கூடுமாயி னென்ற வாறு.

ஒப்புமைப் பகுதி:-

'தீயவை பல்லவர் தூற்றும் பழியாகும்':—

''குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து''.

—குறள். 957.

''கன்றி முதிர்ந்த கழியப்பன் னாள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றானும்—தோன்றாதாம்
ஒன்றாய் விடினும் உயர்ந்தோர்ப் படும்குற்றம்
குன்றின்மே லிட்ட விளக்கு''.

—பழ. 204.

'நல்லவை செய்யின் இயல்பாகும்':-

''இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு''.

—குறள். 951.

குறிப்பு:-

'என்னோ' என்பதன் ஓகாரம் இரக்கப் பொருளை யுணர்த் திற்று. 'புணரும் எனின்' என்பதனான் ஒருவர்க்கு நற்குடிப் பிறப்பு கூடுவது முன் அவர்செய்த அறத்தாலேயாம் என்பது உணர்த்தினார். குடிப்பிறப்பின் என்றவிடத்து 'இன்' என்ற ஐந்தனுருபு ஏதுப்பொருளை யுணர்த்திற்று எனக்கொண்டு தருமரும், **விளக்கவுரைகாரரும்** உரைகூறிப்போக மற்றுப் பதுமனாரோ எல்லைப்பொருளை யுணர்த்தியதாகக் கொண்டு உரை கூறிச் சென்றனர்.

(சு)

145. கல்லாமை அச்சம் கயவர் தொழிலச்சம்
சொல்லாமை யுள்ளுமோர் சோர்வச்சம்—எல்லாம்
இரப்பார்க்கொன்று ஈயாமை அச்சம் [1]மரத்தாரிம்
மாணாக் குடிப்பிறந் தார்.

தருமர்:- என்பது. கல்லாமை—கல்வியில்லாமலிருப்பதும்; அச்சம்—; கயவர் தொழில்—கீழ்மக்கள் தொழிலைச் செய்கின்றதும்; அச்சம்—; சொல்லாமையுள்ளும்—பொய் சொல்லாமல் மெய்யே சொல்லினும்; ஓர் சோர்வு— அச்சொல்லில் ஒரு சோர்வு பட்டாலதுவும்; அச்சம்—; எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈயாமை—யாவையும் இரப்பார்க்கு ஒன்றினைக் கொடாததும்; அச்சம்-; [ஆதலால்] இம்மாணா—இம்மாட்சியில்லாத; குடிப்பிறந்தார்—குடியில் பிறந்தவர்; மரத்தார்—மரக்கலத்திலிருப்பாரைப் போலப் பார்த்து பார்த்தவிதெல்லாம் அச்சமாயிரா நின்றது.

மாட்சிமையில்லாதகுடி யென்றது உயர்குலத்தில் பிறந்தவர் குலத்திற்கேற்புடைத்தாக வொழுகுதல் நோக்கி, அவ்வொழுக்கம் பிறர்க்கு அருமையென்பது தோன்ற வக்குடியை மாணாக்குடி என்று நிந்தாஸ்துதியாகக் கூறியது.

பதுமனார்:— மாட்சிமைப்பட்ட குடிப்பிறந்தார்க்குக் கல்லாமையும் அச்சம்; கயவர் தொழிலும் அச்சம்; (பொய்) சொல்லாமையாகி(ய) நற்குணங்களுட் சொல்லத் தகுவன சொல்லாமையாகிய சோர்வும் ஓர் அச்சம்; எல்லாப் பொருளையும் இரப்பார்க்கு (ஒன்றைக்) கொடாமையும் அச்சம். ஆதலால் இப்பெற்றிப்பட்ட மாட்சிமையில்லாக் குடிப்பிறந்தார் மரத்துள்ளே வைத்தெண்ணக் கடவர் என்றவாறு.

அல்லாதூஉம் இந்நான்கு அச்சமும் இல்லா மாணாக் குடிப் பிறந்தார் மக்களுள் எண்ணப்படார்; மரங்களுள் எண்ணப் படுவார் என்பாருமுளர். தவறுபடச் சொல்லாமையுள்ளும்

பா-ம்: — [1]'மரத்தாரம்'.

யாதானுமோர் (சொற்)சோர்வுபடு மென்றவாறு. இரப்பா ரெல்லார்க்கும் என்று கூட்டுக. குடிப்பிறந்தார்க்கிவை அச்சமா யிருந்தன. மாட்சிமை யில்லாக் குடிப்பிறந்தார் மரத்துள்ளே வைத்தெண்ணப்படுவார்.

விளக்க உரை:— என்பது. கல்லாமை அச்சம்—கல்லாமை யால் ஓர் அச்சம்; கயவர் தொழில் அச்சம்—கீழ்மக்கள் தொழில் செய்கிறது ஓர் அச்சம்; சொல்லாமையுள்ளும் ஓர் சோர்வு அச்சம்—பொய் சொல்லாமை யுள்ளும் ஒருசொற் சோர்வுப் படுதலும் ஓர் அச்சம்; எல்லாம் இரப்பார்க்கு ஒன்று ஈயாமை அச்சம்—எல்லாம் இரந்தவர்க் கொன்றைக் கொடாததும் ஓர் அச்சம்; [ஆதலால்] இம்மாணா—இந்த மாட்சிமையில்லாத; குடிப்பிறந்தார்—குடியிற்பிறத்தல்; மரத்தார்—மர(க்கல)த்திலிருப் பாரைப் போலப் பார்த்தது பார்த்ததெல்லாம் அச்சமாய் இராநின்றது என்றவாறு.

மாட்சிமையில்லாத குடியென்பது குடிக்குத் தக்கவொழுகும் ஒழுக்கங் கூடாத வருமைநோக்கி யென்பதாம்.

மாட்சிமைப்பட்ட குடிப்பிறந்தார்க்கு இந்நான்கும் அச்ச மாதலான் இப்பெற்றிப்பட்ட மாட்சிமையில்லாத குடிப்பிறந்தார் மரத்துள்ளே வைத்தெண்ணப் படுவாரென்றவாறு. அல்லதூஉம் இந்நான்கு அச்சமுமில்லா மாணாக்குடிப் பிறந்தார் மக்களுள் எண்ணப்பாடது மரங்களுள் **எண்ணப்படுவா ரென்பாருமுளர்,** தவறுபடச் சொல்லாமையுள்ளும் யாதானுமொரு (சொற்) சோர்வுபடுமென்றவாறு.

மேற்கோள் பகுதி:—

மயிலை:— உயிர்ப்பண்பு உணர்த்துதலுக்கு "கல்லாமை யச்சங் கயவர் தொழிலச்சம்" என்பதை மேற்கோள் காட்டுவர்
—நன்.சூ.451.

பரிமே:— இரக்கப்படுதல் — இரப்பார்க்கு ஈவல் என்று

இருத்தல். அதனை இன்னாதென்றது ''எல்லாம், இரப்பார்க் கொன்றீயாமை'' கூடுங்கொல்லோ என்னும் அச்சநோக்கி''.

—குறள். 224—உரை.

ஒப்புமைப் பகுதி:—

'சொல்லாமை யுள்ளுமோர் சோர் வச்சம்':—

''ஒன்றானும் தீச்சொல் பொருட்பயன் உண்டாயின்
நன்றாகா தாகி விடும்''.

—குறள். 128.

குறிப்பு:—

மரம் என்பது அதனானாகிய மரக்கலத்தைக் குறித்தது எனக் கொண்டு மரந்தார் என்பதற்கு மரக்கலத்தில் இருப்பாரைப் போலப் பார்த்தது பார்த்ததெல்லாம் அச்சமாயிரா நின்றது எனத் தருமரும், விளக்கவுரைக்காரரும் உரை கொண்டனர். பதுமனாரோ மரத்தார்—மரந்துள்ளே வைத்தெண்ணக்கடவர்' என உரைகூறிப் போந்தனர். மரத்தார்-மரத்தினாற் செய்த பாவை போன்றவர் என்றும் உரை கூறுவர் வேறுசிலர். மாணாக்குடி என்பதற்கு மாண் ஆகுடி எனப்பிரித்து மாட்சிமை யாதலை யுடைய குடி என உரைகொள்ளலுமுண்டு. இப்பாட்டானும் வஞ்சகப் புகழ்ச்சியால் குடிப்பிறப்பின் மேன்மையை யுணர்த்தினார்.

(ரு).

146. **இளநன்மை இன்சொலொன்று ஈதல்மற் றேனை
மனநன்மை என்றிவை எல்லாங்—களமணி
முத்தோடு இமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப!
இற்பிறந்தார் கண்ணே யுள.**

தருமர்:— என்பது. கனமணி—மிகுந்த மாணிக்க மணிகள்;

முத்தோடு இமைக்கும்—முத்துடனே விளங்கிப் [1]பாடஞ் செய்தலும்; முழங்கு உவரித் தண்சேர்ப்ப!—ஆரவாரமுங் குளிர்ச்சியுமுடைய கடற்சேர்ப்பனே!; இனநன்மை—நல்லாரோடு இணக்கமும்; இன்சொல்—இனியவார்த்தையும்; ஒன்று ஈதல்—இரப்பவர்க்கு ஒன்றைக் கொடுத்தலும்; மற்று ஏனை—மற்றும் ஒழிந்த; மனநன்மை—மனத்திற் பொல்லாங்கு இல்லாமையும்; என்ற இவை எல்லாம்—(என்ற) இவைகளெல்லாம்; இல்பிறந்தார் கண்ணே உள—உயர்ந்தகுடியிற் பிறந்தாரிடத்தல்லது பிறர்க்கு இல்லை என்றவாறு.

குடிப்பிறப்பாளர் தன்மை கூறியது.

பதுமனார்:—[கனமணி முத்துடனே விளங்கி முழங்கா நின்ற தண்கடற்சேர்ப்பனே! இனநன்மையும், இன்சொல்லும், ஈதலும், மனநன்மையுமென்று சொல்லப்பட்ட இவையெல்லாங் குடிப்பிறந்தார் மாட்டேயுள என்றவாறு].

விளக்க உரை:— என்பது. கனமணி—மிக்க மாணிக்க மணிகள்; முத்தோடு இமைக்கும்—முத்துடனே விளங்கிப் பாடஞ்செய்யும்; முழங்கு உவரித் தண் சேர்ப்ப!—ஆரவாரத்தையுடைய குளிர்ந்த கடற்சேர்ப்பனே!; இன நன்மை—இன நன்மையும்; இன்செல்—இன்சொல்லும்; ஒன்று ஈதல்—ஒன்று ஈதலும்; மற்று ஏனை மனநன்மை—மற்றை மனநன்மையும்; என்ற இவை எல்லாம்—என்று சொல்லப்பட்ட இவையெல்லாம்; இல்பிறந்தார் கண்ணே உள—இற்பிறந்தாரிடத்தே உண்டு [அல்லது பிறர்க்கு இல்லை] என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

“நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும்
வகைஎன்ப வாய்மைக் குடிக்கு”.

—குறள். 953.

---

[1]ஒளிவிடுதல்; ‘நினதுபாடஞ் செய்கின்ற... வேல்’ (புறம். 57—உரை).

குறிப்பு:—

என்றிவை—பெயரெச்ச விகாரம். இற்பிறந்தார்கண்ணே என்னும் பிரிநிலை விகாரத்தால் இழிகுடியிற் பிறந்தாரிடத்து இந்தநற்குணங்கள் இயல்பாக உண்டாகுதலில்லை யென்பதும் அவர்க்குக் கற்பித்தாலும் நிலைப்பெறுதலில்லை யென்பதும் உணர்த்தப்பட்டன. உவர்+இ=உவரி; உப்புச் சுவையையுடைய கடலைக் குறித்தது, 'உகெுரு முவரி' (கம்ப. ஊர்தே. 15) என்பதும் காண்க

(சூ).

147. செய்கை அழிந்து சிதன்மண்டிற்று ஆயினும்
பெய்யா ஒருசிறை பேரில் உடைத்தாகும்
எவ்வம் உழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை.

தருமர்:—என்பது. பேர் இல்—பெரிய இல்லினிடத்தே; செய்கை அழிந்து—கட்டப்பட்ட வுறுப்புக் குலைந்து; சிதல்—செல்லானது; மண்டிற்று ஆயினும்—சேர்ந்து அரித்ததாயினும்; பெய்யா—ஒழுகாதவிடம்; ஒருசிறை உடைத்தாகும்—ஒரு பக்கத்திலே யுண்டாயிருக்கும்; [அதுபோல] குடிப்பிறந்தார்—உயர் குலத்திற் பிறந்தவரும்; எவ்வம் உழந்தக் கடைத்தும்—தாம் மிக்க துன்பத்தை யடைந்தகாலத்திலும்; செயல் பாலவை—தாஞ் செய்யும் பகுதியான ஒப்புரவுகளை; செய்வர்—; என்றவாறு.

தம்முடைய இயற்கையறிவு குடிக்கு உண்டானதாதலால் அவ்வறிவு கொண்டு, தாம் மிக்க துன்பமெய்தியிருந்தும் அதனை எண்ணாமல் (ஒப்புரவு) முதலான நல்லொழுக்கத்தினொழுகுவதல்லாது கீழ்மக்கள்போல, ஒருதுன்பம் வந்தவிடத்து அதனையே நோக்கா ரென்பதாம்.

பதுமனார்:—செய்கை யழிந்து சிதல் மண்டிற்றாயினும் ஒழுகாததோரிடத்தைப் பெரியமனை யுடைத்தாகும். அதுபோல

வறுமையால் துன்பமுழந்தாலும் குடிப்பிறந்தார் பிறர்க்குச் செய்யத்தகும் உதவிகளைச் செய்வார் என்றவாறு.

பொய்யா வொருசிறை—ஒழுகாத வொருபக்கம். எவ்வம் —வறுமையாலுண்டான துன்பம்.

விளக்க உரை:— என்பது. பேர் இல் பெரிய இல்லிலே; செய்கை அழிந்து—பிணிக்கப்பட்டவுறுப்புக் குலைந்து; சிதல் மண்டிற்று ஆயினும்—செல்லு மிகச் செறிந்ததாயினும்; பெய்யா —ஒழுகாதவிடம்; ஒருசிறை உடைத்தாகும்—ஒரு பத்கத்திலே சிறிதுண்டாயிருக்கும்; [அதுபோல] குடிப்பிறந்தார்—குடியின்கட் பிறந்தார்; எவ்வம் உழந்தக் கடைத்தும் - துன்பத்தை யடைந்த விடத்தும்; செயல் பாலவை—செயற் பகுதியான வொப்புரவு களை; செய்வர்—; என்றவாறு.

பெய்யா வொருசிறை—ஒழுகாத வொரு பக்கம்.

ஒப்புமைப் பகுதி:—†

"ஈட்டிய ஒண்பொருள் இன்றெனினும் ஒப்புரவு
ஆற்றும் மனைப்பிறந்த சான்றவன் - ஆற்றவும்
போற்றப் படாதாகிப் புல்லின்றி மேயினும்
ஏற்றுக்கன் றேறாய் விடும்".

—பழ. 217.

"செய்வர் செயற்பா லவை":—

"செய்வர் செயற்பா லவை".

—நாலடி. 153.

- நாலடி. 185.

(எ).

---

†இச்செய்யுளுக்கும் பின்வரும் 148, 149, 150, 184, 185—ஆம் செய்யுட்களுக்கும் கருத்து ஒப்புமை உள்ளது காண்க.

148. ஒருபுடை பாம்பு கொளினும் ஒருபுடை
அங்கண்மா ஞாலம் விளக்குறூஉந்- திங்கள்போல்
செல்லாமை [1]செவ்வனேர் நிற்பினும் ஒப்புரவிற்கு
ஒல்கார் குடிப்பிறந் தார்.

தருமர்:— என்பது. ஒருபுடை—ஒருபக்கத்தை; பாம்பு கொளினும்—பாம்பு பற்றி நின்றாலும்; ஒருபுடை—ஒருபக்கத் தாலே; அம்கண்மா ஞாலம்—அழகிய இடத்தையுண்டான பூமி யெல்லாம்; விளக்குறூஉம்—விளங்கப் பண்ணும்; திங்கள் போல்- திங்கள் போல; குடிப்பிறந்தார்—உயர்ந்த குடியிற் பிறந்தவர்; செல்லாமை—நடக்கையில்லாமையாகிய மிடி; செவ்வன் நேர் நிற்பினும்—ஒருபடிப்பட நின்றாலும்; ஒப்புரவிற்கு ஒல்கார்— தாஞ் செய்யும் ஒப்புரவுக்குத் தளரார் என்றவாறு.

இதுவும் குடிப்பிறப்பாளரது இயற்கையான வொழுக்கங் கூறியது.

பதுமனார்:—ஒருமருங்கு பாம்பு கொண்டதாயினு மற்றொரு மருங்கினால், அங்கண்மா ஞாலத்தை விளக்குறுத்து மதியம் போலச் செல்லாமையாகிய வறுமை [2]செவ்வனே நின்றதாயினும், குடிப்பிறந்தார் ஒப்புரவிற்குத் தளரார் என்றவாறு.

விளக்க உரை:—என்பது. ஒருபுடை—ஒருபக்கத்தை; பாம்பு கொளினும்—பாம்பு பற்றிக்கொண்டு நிற்பினும்; ஒரு புடை— நின்ற ஒருபக்கத்தினையுங் கொண்டு; அம்கண் மாஞாலம்— —அழகிய விடத்தையுடைய பூமி முழுவதையும்; விளக்குறூஉம் திங்கள்போல் — விளக்கு மதியம்போல; குடிப்பிறந்தார் — குடியின்கட் பிறந்தார்; செல்லாமை—நடவாமையாகிய மிடி;

பாடம்:— [1]'செவ்வனே'—பதுமனார்.

[2]செவ்வனே நின்றதாயினும்—நன்றாக நிலைத்திருந்தாலும்.

செல்வன் நேர் நிற்பினும்—ஒருபடிப்பட நின்றதாயினும்; [1]ஒப்புரவிற்கு—உலகாசாரத்தினைச் செய்வதற்கு; ஒல்கார்—தளரார் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

'ஒருபுடை பாம்பு..... திங்கள்போல்':—

''அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்குந்
திங்களுந் தீங்குறுதல் காண்டுமால்''

—பழ.15.

''அணங்குவாள் விடவரா வனுக்கு மெல்லையுங்
குணங்கெடா தொளிவிரி குளிர்வெண் டிங்கள்போல்''

—இராமாவ.மந்தரை சூழ்ச்சி.45.

'செல்லாமை செவ்வனேர்....குடிப்பிறந்தார்':—

''உடுக்கை யுலறி யுடம்பழிந்தக் கண்ணும்
குடிப்பிறப் பாளர்தங் கொள்கையிற் குன்றார்''

—நாலடி.141.

''செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்''.

—நாலடி.149.

''இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்''.

—குறள்.218.

குறிப்பு:-

செல்லாமை—மனமொழி மெய்களான் ஆகும் செயல்கள் நடவாமை; எனவே வறுமையினைக் குறித்தது. செவ்வன்—பண்புப்பெயர்; இது நிற்பின் என்னும் வினையை விசேடித்து நின்றமையின் உரிச்சொல். நேர்—நேர்ந்து என்னும் வினை

பா-ம்:—[1]'உலக வியற்கையாம் ஒப்புரவாகிய நன்மை செய்தற்கு'.

எச்சத்தின் விகாரம்; "[1]வரிப்புனை பந்து' என்பதுமது. 'செல்லாமை நேர் நிற்பினும் செவ்வன் ஒப்புரவிற்கு ஒல்கார்' எனக்கொண்டு வறுமை நேர்ந்து நின்றாலும் செவ்வையான ஒப்புரவிற்குத் தளரார் என உரைக்கொள்ளலுமுண்டு. 'நேர் நிற்பினும்' என்பதற்கு எதிரில் நின்றாலும் எனவும் உரை கொள்வர் சிலர். குடிப்பிறந்தார்க்குத் திங்களை உவமிப்பார். 'ஒருபுடை பாம்புகொளினும் ஒருபுடை அங்கண்மா ஞாலம் விளக்குறும் திங்கள்' என்றமையால், குடிப் பிறந்தார் தங்களால் இயன்றமட்டும் ஒப்புரவு செய்வரென்பதும் அது அவர்க்கு இயல்பு என்பதும் பெறப்பட்டன.

(அ).

149. செல்லா இடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்லிடத்துஞ் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி [2]மாபோல்
பொருமுரண் ஆற்றுதல் இன்று

தருமர்:—என்பது. செல்லா இடத்தும்—தமக்கு நடக்கையில்லாத விடத்தும்; குடிப்பிறந்தார்-குடிப்பிறப்பாளர்; செய்வன—செய்யும் ஒப்புரவுகளை; செல் இடத்தும்—தமக்கு நடக்கையுண்டானவிடத்தும்; சிறியவர்—; செய்யார்—செய்யமாட்டார்; [அஃதெப்படி யென்னில்] [3]புல்வாய்—புல்வாயானது; பருமம்—[4]சேணங்கலனையை; பொறுப்பினும்—தன்மேற்கொண்டிருந்தாலும்; பாய் பரிமா போல்—பாயும் வேகத்தையுடைய குதிரையைப்போல; பொரு முரண்—போர் பொரும் வலியை; ஆற்றுதல் இன்று—செய்யமாட்டாது என்றவாறு.

---

[1] திருமுருகாற்றுப்படை.

பா-ம்:—[2]'மாப் போற் பெருமுரண்'.

[3]கலைமான்; 'புல்வாய் புலியுழை மரையே கவரி' (தொல். பொருள்.மா.சூ.35)

[4]ஏட்டில் இவ்வாறே யுள்ளது. சேணம் எனினும் கலனை யெனினும் பொருள் ஒன்றே.

எனவே புல்வாய் சேணங்கலணையைச் சுமக்கும் வலி யுடைத்தாயிருந்தும், போர்செய்யும் வலிக்கு அறிவில்லாதது போலக் கீழ்மக்களும் இயற்கையறிவில்லாமையினாற் செல்வ முள்ள விடத்தும் ஒப்புரவைச் செய்யமாட்டார். குதிரைக்குப் போர் செய்யும் வலி இயற்கையானது போலக் குடிப்பிறப் பாளரும், இயற்கையறிவினால் இயன்ற ஒப்புரவு செய்வரென அவர் குடித்தன்மை கூறியதாம்.

பதுமனார்:- புல்வாய் பண்ணினைத் தாங்கிற்றாயினும் பாய்பரிமாவைப் போலப் போரின்கட் பொருமுரண் ஆற்றுத லில்லை. அதுபோல வறுமையாய்ச் செல்லாதவிடத்துங் குடிப் பிறந்தார் செய்யும் ஒப்புரவுகளைத் தமக்குச் செல்வமுண்டாய்ச் செல்லுமிடத்துஞ் செய்யமாட்டார் குடிப்பிறவாதார் என்ற வாறு.

பருமம்—[1]பண். செல்லாவிடம்—வறுமையாற் செல்லாவிடம்.

விளக்க உரை:- என்பது செல்லா இடத்தும்—தமக்கு நடவாமலானவிடத்தும்; குடிப்பிறந்தார்—; செய்வன—; செய்யும் ஒப்புரவுகளை; செல் இடத்தும்—செல்வமுண்டான விடத்தும்; சிறியார்—கீழ்மக்கள்; செய்யார்—செய்யமாட்டார் கள்; [அஃதெப்படியென்னில்] புல்வாய்—புல்வாயானது; பருமம் பொறுப்பினும்—[2]பக்கரையைப் பொறுத்ததாயினும்; பாய் பரிமாபோல்—பாய்கிற செலவையுடைய குதிரையைப்போல; பொருமுரண் ஆற்றுதல் இன்று—போருக்கு வலிதாம் ஆற்ற லில்லை யென்றவாறு.

பருமம் பொறுப்பினும்—பண்ணினைத் தாங்கிற்றாயினும்.

பருமம்—பண்

---

[1]குதிரைக்கலனை; குதிரைச்சேணம்.

[2]சேணம்; பக்கரை பதைப்ப யாத்து' (சூளா. கல்யா. 14.)

ஒப்புமைப் பகுதி:-

''ஏட்டைப் பருவத்தும் இற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்''.

—நாலடி., 358.

''மாட மழிந்தக்கால் மற்று மெடுப்பதோர்
கூட மரத்துக்குத் துப்பாகு மஃதேபோல்
பீடிலாக் கண்ணும் பெரியோர் பெருந்தகையர்
ஈடில் லதற்கில்லை பாடு''.

—பழ. 96.

''கூஉய்க் கொடுப்பதொன்று இல்எனினும் சார்ந்தார்க்குத்
தூஉய்ப் பயின்றாரோ துன்பம் துடைக்கிற்பார்
வாய்ப்பத்தான் வாடியக் கண்ணும் பெருங்குதிரை
யாப்புள்வே றாகி விடும்''

—பழ. 162.

(கூ).

150. எறறொன்றும் இல்லா விடத்துங் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் [1]சேர்ந்தார்க்கு அசைவிடத்து—ஊற்றாவர்
அற்றக் கடைத்தும் அகல்யாறு அகழ்ந்தக்கால்
தெற்றெனத் [2]தெண்ணீர் படும்.

தருமர்:— என்பது. குடிப்பிறந்தார்—குடிப்பிறப்பாளர்; எற்று ஒன்றும்—தமக்குவரும் வருவாயொன்றும்; இல்லா விடத்தும்—; அற்று—வறுமையாகி; தன் சேர்ந்தார்க்கு—தம்மை அடைந்தார்க்கு; அசைவு இடத்து—தளர்ந்தவிடத்து; ஊற்று ஆவர்—ஊன்றுகோல் உதவுமாப் போலாவர்; [எதன்போல வெனின்] அகல் யாறு—அகன்ற ஆற்றில்; அற்றக் கடைத்தும்—

பா-ம்:—[1] 1. 'சொற்றார்', 2. 'சேர்ந்தார்'.
[2] 'தண்ணீர்படும்'.

நீர்வற்றியிருக்கும் போதும்; அகழ்ந்தக்கால்—தோண்டினக்கால்; தெற்றென — விரைய; தெள் நீர் படும்—தெளிந்த நீரைத் தருவது போல வென்றவாறு.

இல்லாமையான காலத்தினும் இரப்போர் தளர்ச்சிகண்டு தம்முடம்பு வருந்தியாகிலும் அவர் தளர்ச்சியை நீக்குவர். அது குடிப்பிறப்பாளர்க்கு இயற்கையான ஒழுக்கமாதலில் 'அசைவிடத்து ஊற்றாவர்' என்றவாறு.

பதுமனார்:— யாதொரு பொருளும் இல்லாதவிடத்தும் குடிப் பிறந்தார் பொருளற்றுத் தம்மைச் சார்ந்தார்க்குத் தளர்ந்தவிடத்துப் பற்றாவர். நீரற்றவிடத்தும் அகல்யாறு தோண்டினால் மிக்க தண்ணீரைத் தரும் அதுபோல வென்றவாறு.

எற்றொன்றும்—யாதொன்றும். தெற்றென—விரைய.

விளக்க உரை:— என்பது. குடிப்பிறந்தார் — குடியின்கட் பிறந்தார்; எற்று ஒன்றும்—யாதொன்றும்; இல்லா விடத்தும்—; அற்று—ஒன்று மற்று; தன் சேர்ந்தார்க்கு — வந்து தம்மையடைந்தவர்க்கு; அசைவு இடத்து—தளர்ந்த விடத்து; ஊற்று ஆவர்—ஊன்று கோல் ஆவர்; (எதன்போலவெனின்) அகல் யாறு —அகன்ற வாறு; அற்றக் கடைத்தும் நீர்வற்றின விடத்தும்; அகழ்ந்தக்கால்—தோண்டின காலத்து; தெற்றென—விரைய; தெள் நீர் படும்—தெளிந்த நீரைத் தரும் அதுபோல வென்றவாறு.

தெற்றென—விரைய.

ஒப்புமைப் பகுதி:—

"உறைப்பருங் காலத்து மூற்றுநீர்க் கேணி
இறைத்துணினு மூராற்று மென்பர்—கொடைக்கடனுஞ்
சாஅ அயக் கண்ணும் பெரியார்போன் மற்றையார்
ஆஅஅயக் கண்ணு மரிது".

—நாலடி. 184,

"உறுபுன றந்துல கூட்டி யறுமிடத்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற் செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை".

—நாலடி. 185.

"ஆற்றுப் பெருக்கற் றடிசுடும்அந் நாளுமவ்வா(று)
ஊற்றுந் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லைஎன மாட்டார் இசைந்து".

—நல்வழி. 9.

குறிப்பு:—

எற்று—குறிப்பு வினைப்பெயர். தன் சேர்ந்தார்—தம் எனப் பன்மை வரவேண்டியவிடத்து ஒருமை வந்தது; ஒருமைப் பன்மை மயக்கம். 'யாறு நீர்படும்' என்றவிடத்து இடத்து நிகழ் பொருளின் தொழில் இடத்துமேல் ஏற்றிக் கூறப்பட்டது உபசார வழக்கென்ப. முதுமையால் உடம்பு தளர்ந்தகாலத்து ஒருவற்கு ஊன்றுகோல் உதவுமாப்போல, தளர்ந்து தன்னை வந்தடைந் தார்க்குக் குடிப்பிறந்தார் உதவுவரென்றார்.

(ய).

---

16. மேன்மக்கள்

திருமர்:— அஃதாவது மேம்பாட்டுத்தன்மை. அதுகுடிப் பிறந்தார்க்கு இயற்கையாக உண்டாகாதோ வென்னில், அந்த இயற்கை கீழ்மக்களைச் சார்ந்து வேறுபடுமாதலில் மேம்பாட்டுத் தன்மை யுடையார் தீயவர்கள் வந்தடுத்தாலும் அவர்களையும், நற்குணமுடையவராகும்படி பண்ணித் தம்முடைய தன்மை குன்றா ரென்பது கொண்டு, மேன்மக்கள் என்னும் அதிகாரமும் வேண்டு மென்பதாம்.

பதுமனார்:— அஃதாவது தத்தங் குடிப்பிறப்பிற் கேற்ற இயல்புகள் பலவும், வழுவாமல் ஒழுகுவாரிடத்துள்ள மேம் பாட்டுத்தன்மையாம்.

விளக்க உரை:— அஃதாவது மேம்பாட்டுத் தன்மை. குடிப்பிறந்தார்க்கு இயற்கையாக வுண்டாகாதோ வென்னில், இந்த இயற்கை கீழ்மக்களைச் சார்ந்து வேறுபடுமாதலில், [1]மேம் பாட்டுத்தன்மை யுடையார் தீக்குணமுடையார் வந்து சேர்ந்த விடத்தும் அவர்களையும் நற்குணமுடையவராகும்படி பண்ணித் தாமும் தம்முடைய தன்மை குன்றாரென்பது கொண்டு, மேன் மக்கள் என்னும் அதிகாரம் வேண்டுமென்பதாம்.

151. அங்கண் விசும்பின் அகனிலாப் பாரிக்கும்
திங்களும் சான்றோரும் ஒப்பர்மன்—திங்கண்
மறுவாற்றுஞ் சான்றோரஃது ஆற்றார் தெருமந்து
தேய்வர் ஒருமா சுறின்.

தருமர்:—எ—து. அம்கண் விசும்பின் அகல்நிலா பாரிக்கும் திங்களும் சன்றோரும் ஒப்பர்—அழகிய இடத்தையுடைய விசும்பின்கணின்று மிகுந்த நிலவை எங்கும் பரப்பா நின்ற மதியமும் சான்றோரும் ஒப்பர்; திங்கள் மறு ஆற்றும்—மற்றந்த மதியமானது மறுவைப் பொறுக்கும்; சான்றோர் அஃதுஆற்றார் —சான்றோரானவர் குற்றமாகிய மறுவைப் பொறாராய்; ஒருமாசு உறின்—ஒருகுற்றம் வந்தவிடத்திலே; தெருமந்து தேய்வர் சுழன்று மாய்ந்து விடுவர் என்றவாறு.

எனவே, மதியானது மிகவும் தூய்மையதுபோல மேன் மக்களும் மனத்தூய்மையுடையவர். மதியானது குற்றம் பொறுப் பினும் இவர் குற்றம் பொறார். அதனிலும் வாசியுடையவ ரென்று அவர் மேம்பாட்டுயர்ச்சி கூறியதாயிற்று.

---

[1]'மேம்பாட்டுத்தன்மை யென்பது' எனச் சுவடியிலிருக்கிறது.

பதுமனார்:—என்றது. அங்கண் விசும்பினின்று மிக்க நிலா வினைப் பரப்பும் அத்திங்களே அன்னர் சான்றோரும் தண்ணளி யைப் பாரித்தலான். (அது அ)ன்றியே வேற்றுமை உணடு. அத்திங்களானது தன் மறுவினைப் பொறுக்கும். சான்றோர் மறுவினைப் பொறார். ஒரு மறுவினை மாற்றாராய் (உயிர்) மயங்கி வாழ்வாராதலால் என்றவாறு.

விளக்க உரை:— என்பது. அங்கண் விசும்பின்—அழகிய இடத்தையுடைய விசும்பிலே; அகல்நிலாப்பாரிக்கும்—மிக்க நிலவைப் பரப்பும்; திங்களும் சான்றோரும் ஒப்பர்—மதியமும் அமைந்தோருந் தம்மில் ஒப்பர்; திங்கள் மறு ஆற்றும்—அந்தத் திங்களாகிய மதியம் மறுவைப் பொறுக்கும்; சான்றோர் அஃதாற்றார்—அமைந்தோர் அந்தக் குற்றத்தைப் பொறாராய்; தெருமந்து தேய்வர் ஒருமாசுறின்—அலமந்து விடுவர் தமக்கொரு குற்றம் வந்தவிடத் தென்றவாறு.

ஆதலால் மேன்மக்கள் மதியினும் வாசியுடைய ரென்பதாம். தண்ணளியா லொப்பர்.

மேற்கோள் பகுதி:—

"திங்களுஞ் சான்றோரும் ஒப்பர்'........என்பன நிலைமைப் பொருள் வினையொடு முடிவதே தலைமையில் பொருளின் வினையும் முடிந்ததாய்க் காரகமாம்" என வரும்.

—பிரயோ. சூ. 16. 'உடனிகழ்'

இது, தனிச்சொல் பெற்றுப் பலவிகற்பத்தான் வந்ததற்கு எடுத்துக்காட்டுவர்.

—யா. வி. செய்.சூ. 8

இது, இரண்டாம் அடியின் இறுதி தனிச்சொல்பெற்று மூன்று விகற்பத்தான் வந்த இன்னிசை வெண்பாவிற்கு எடுத்துக் காட்டுவர்.

—யா. கா. செய். சூ. 4.

உயர்திணையையும், அஃறிணையையுங்கூட எண்ணி உயர் திணையாலே முடிவனவுள என்பதற்கு இச்செய்யுள் எடுத்துக் காட்டு.

—நேமி. சொல். 9-உரை.

சிறப்பினான் உயர்திணை முடிவு பெற்றதற்கு எடுத்துக் காட்டு.

—நன். சூ 17.
—நன். வி. சூ. 378.
—தொல். சூ. 48.

ஒப்புமைப் பகுதி:—

"குடிப்பிறந்தார் கண்விளங்குங் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து".

—குறள். 957.

"மயிர்நீப்பின் வாழாக் கவரிமா வன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்".

—குறள்.

"விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை நீக்கிக்
கதிப்பட்ட நூலினைக் கையிகந் தாக்கிப்
பதிப்பட்டு வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்திற் பட்ட மறு".

—அறநெறி. 162.

"அந்தி மாலை நீங்கிய பின்னர்
வந்து தோன்றிய மலர்கதிர் மண்டிலஞ்
சான்றோர் தங்கண் எய்திய குற்றம்
தோன்றுவழி விளங்குந் தோற்றம் போல
மாசறு விசும்பின் மறுநிறங் கிளர".

—மணி. 6: 1—5.

"பெரியோருழையும் பிழை சிறிது உண்டாகில்
இருநிலத்தில் யாரு மறியத்—தெரிவிக்குந்
தேக்குங் கடலுலகில் யாவர்க்குந் தெள்ளமுதம்
வாக்கு மதிமேன் மறு".

—வீரசோ. அலங். சூ. 32-உரை.

"அங்கண் விசும்பி னகனிலாப் பாரிக்கும்
திங்களும் தீங்குறுதல் காண்டுமால்—பொங்கி
அறைப்பாய் அருவி அணிமலை நாட!
உறற்பால யார்க்கு முறும்".

—பழ 15.

"அங்கண்மால் விசும்பு".

—மதுரைக் காஞ்சி 384.

குறிப்பு:—

நிலாவைப் பரப்பும் திங்களும், சான்றோரும் ஒப்பராயினும் திங்கள் மறுவைப் பொறுக்கும். சான்றோர் தமக்கு மாசுவந்த விடத்து அலமந்து தேய்வர்.

(க)

152. இசையும் எனினும் இசையா தெனினும்
வசைதீர எண்ணுவர் சான்றோர்—விசையின்
நரிமா உளங்கிழித்த அம்பினில் தீதோ
அரிமாப் பிழைப்பெய்த கோல்.

தருமர்:— எ-து. சான்றோர்-அமைந்தோரானவர்; இசையும் எனினும் இசையாது எனினும்—ஒருகாரியத்தை எண்ணும் பொழுது அக்காரியம் கூடுவதாயினும் கூடாதாயினும்; வசை தீர எண்ணுவர்-குற்றந்தீர எண்ணுவர்; [அது அக்காலத்துப் பழுதுபட்டதாயினும்]; விசையின் நரிமா உளங்கிழித்த அம்பினில் அரிமாப் பிழைப்பு எய்தகோல்—விசையுடனே நரியின் நெஞ்சைப்பட்டுக் கழன்றுபோன அம்பினும் சிங்கத்தைக் கொல்வதாகவிட்டு அதனைத் தப்பிப்போன அம்பு; தீதோ?—பொல்லாததோ? என்றவாறு.

அமைதிபெற்ற மேன்மக்களானவர் பிழைக்க வெண்ணினாராயினும் அது பழுதுபடா தென்பதாயிற்று.

பதுமனார்:— என்றது. கூடுமாயினும் கூடாதாயினும் குற்றந் தீர நினைப்பர் சானறோர். விசையின் நரிமாவினை நெஞ்சங்

கிழித்த அம்பினில் அரிமாவினைப் பிழைக்க எய்த அம்பு தீதன்று என்றவாறு.

இசையும்—முடியும்.

விளக்க உரை:— என்பது. சான்றோர் அமைந்தோர்; இசையும்எனினும் இசையாது எனினும்—கூடுமாயினும் கூடா தாயினும்; வசைதீர எண்ணுவர்—குற்றந்தீர வெண்ணுவர் விசையின் நரிமா **உளம்கிழித்த** அம்பினில்—விசையினால் நரிமாவினை நெஞ்சைப்பட்டுக் கழன்றுபோன அம்பினும் காட்டில் அரிமாப் பிழைப்பு எய்தகோல்—சிங்கத்தைக் கொல்லுவதாக விட்டதனைப் பிழைத்துப்போன அம்பு தீதோ? பொல்லாததோ? என்றவாறு.

ஆதலால், சான்றோர் பிழைக்க வெண்ணினார் ஆயினும் பழுதுபடா தென்றவாறு.

கருத்து:—மேன்மக்கள் செயற்கரியவற்றையே குற்றமறச் செய்ய எண்ணுவர்.

மேற்கோள் பகுதி:-

‘‘இசையு மெனினும்—கோல்’’

—புறத்திரட்டு.68. ஊக்க.1.

ஒப்புமைப் பகுதி:-

‘‘கான முயலெய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது’’.

—குறள்.772.

‘‘பெருமை யுடையவ ராற்றுவா ராற்றின்
அருமை யுடைய செயல்’’.

—குறள்.975.

"நடம்பயில் எந்தை மங்கை நாணினால் வருந்தினாள் என்று
அருந்தருள் சொல்வான் ஞால மலைக்குமம் மாயை சூளான்
நெடுந்தகை முன்னம் சென்ற நிலையேநன் றாடுகொள்வோன்
மடங்கல்முன் வெல்வேன் என்று வருதலே யாற்றலன்னோ".

—பிரபு.வசவண்.32.

153. நரம்பெழுந்து நல்கூர்ந்தார் ஆயினும் சான்றோர்
குரம்பெழுந்து குற்றங்கொண்டு ஏறார்—உரங்கவறா
உள்ளமெனு நாரினாற் கட்டி உளவரையால்
செய்வர் செயற்பா லவை.

தருமர்:— எ.து சான்றோர்—அமைந்தோர்கள் [1]நரம்பு எழுந்து [2]நல்கூர்ந்தாராயினும்-பசியாகிய நோயினாலே உடம்பு வற்றி நரம்பு தோன்றும்படி வறியரானார் ஆயினும்; குரம்பு எழுந்து [1]குற்றங்கொண்டு ஏறார்—தமது மேம்பாடாகிய வரம்பைக்கடந்து குற்றங்களை மேற்கொண்டு இரப்பதாகத் துணிந்து ஒருவர் பக்கல் இரப்போமென்று செல்லார்; [மற்று ஏது செய்வரென்னில்]; உரம் கவறு ஆ—தம்முடைய அறிவையே கவறாகக் கொண்டு; உள்ளம் எனும் நாரினால் கட்டி—முயற்சி என்னும் நாரினாலே மனத்தை இறுகக்கட்டி; [1]உளவரையால் செயற்பா [2]லவை செய்வர்—உளவரையாத தமக்குண்டான வற்றைக் கொண்டே [1]செய்யத்தக்க ஒப்புரவுகளைச் செய்வர் என்றவாறு.

தாம் பசியால் வருந்திய காலத்தும் தாம் ஒருவரிடத்து இரவாமல், தம்முடைய பசியும் நோக்காமல் பிறருக்குச் செய்யும் ஒப்புரவு செய்வ ரென்பதாம்.

பதுமனார்:— என்றது. பசியாலுடம்பு உலர்ந்து நரம் பெழும்படி நல்கூர்ந்தாராயினும், அமைவுடையார் வரம்பைக்

கடந்து குற்றத்தைக் கொண்டு அக்குற்றத்தின்கண்ணே மிகார். தம்மறிவினையே கவறாகக் கொண்டு முயற்சி என்னும் நாரால் வறுமையால் தளர்ந்த மனத்தை யாப்புறப் பிணித்து, தமக்குப் பொருளுள்ள அளவினாற் செய்யத்தக்க ஒப்புரவுகளைச் செய்வரென்றவாறு.

விளக்க உரை:—என்றது. சான்றோர் அமைந்தோர்; நரம்பு எழுந்து நல்கூர்ந்தார் ஆயினும்-பசிநோயால் உடம்புவற்றி நரம்புதோன்ற மிடித்தாராயினும் குரம்புஎழுந்து குற்றங்கொண்டு ஏறார்—வரம்பைக் கடந்து குற்றங்களைக் கொண்டிரப்பதாகத் துணிந்து ஒருவர்பக்கல் செல்லார்; உரம் கவறு ஆ—தம் அறிவினையே கவறாகக் கொண்டு; உள்ளமென்னும் நாரினால் கட்டி—முயற்சி என்னும் நாரினால் வறுமையில் தளர்ந்த மனத்தினைச் சிக்கெனப் பிணித்து; உள்வரையால்—தமக்குள்ள பொருள் அளவினால்; செய்வர் செயற்பாலவை—செய்யத்தக்க ஒப்புரவுகளைச் செய்வரென்றுவாறு. குரம்பெழுந்து—தம் வரம்பைக் கடந்து; உரம்—திண்மை.

ஒப்புமைப் பகுதி:—

"தீத்துறு செங்கோல் சென்றுசுட் டாங்குக்
கொதித்த வுள்ளமொடு குரம்புகொண் டேறி".

—மணிமே. உத. 18—2—3.

"செய்வர் செயற்பா லவை" என்பது.

—நாலடி. 147. 185. 271.ல் காண்க.

"அடந்து வறியராய் ஆற்றாத போழ்தும்
இடங்கண் டறிவாமென் றெண்ணி யிராஅர்
மடங்கொண்ட சாயல் மயிலன்னாய்! சான்றோர்
கடங்கொண்டுஞ் செய்வார் கடன்".

—பழ. 216.

"இடனில் பருவத்து மொப்புரவிற் கொல்கார்
கடனறி காட்சி யவர்".

—குறள். 218.

"சலம்பற்றிச் சால்பில செய்யார்மா சற்ற
குலம்பற்றி வாழ்துமென் பார்".

—குறள். 956.

குறிப்பு:—

மனதை அறிவினாலும், முயற்சியாலும் உறுதிப்படுத்திக் கொண்டு, யாசிக்காமல் தமக்குள்ள அளவு பிறருக்குக் கொடுத்து நன்மையே புரிவர் மேலோர் என்பது கருத்து.

(ரு)

154. [1]செல்வுழிக் கண்ணொருநாட் [2]காண்பினும் சான்றவர்
தொல்வழிக் கேண்மையில் தோன்றப் புரிந்தி
நல்வரை நாட! சிலநா(ள்) அடிப்படின் யாப்பர்
கல்வரையும் உண்டா(ம்) நெறி.

தருமர்:—எ-து. (நல்வரை நாட!—சிறந்த மலைகளினாற் பொலிவுபெற்ற நாட்டை யுடையவனே!;) சான்றவர் செல்வுழிக் கண்ணொரு நாட்காண்பினும்-மேன்மக்களானவர்கள் தாம் செல்லும் வழியிலே ஒருவனை ஒருநாள்கண்டு பேசியிருந்தாலும் பிறகு அவனைக் காணும் பொழுது; தொல்வழிக் கேண்மையில்—வெகுகாலமாக நட்புக் கொண்டாரிலும்; தோன்றப் புரிந்து யாப்பர்—மிகுதியாக நட்புறுவர்; சில நாளடிப் படின்—நாள்தோறும் நடக்கில்; கல்வரையும் உண்டாம் நெறி—மலையினது கல்லின்மேலேயும் வழியுண்டாகாதோ என்றவாறு.

பாடம்: 1 'செல்வழி'

2 'காணினும்'—பதுமனார், விளக்கவுரை.

பலநாளும் ஒருவரிடத்திற் சென்று இதம்பெற உரைக்கில் அவர். நட்பாகிறதற்குச் சொல்லவேண்டாம். போகிற வழியிலே ஒருநாள் கண்டேன் என்று அவரை மறுத்துங் கண்டவிடத்திலே எப்போதுந் தம்முடனே நட்பாயிருப்பவரைக் கண்டாற்போல நட்புறுவதல்லவோ; மேன்மை. பல நாள் நடக்கிற் கல்லுங் குழியும் அதுபோலச் செய்வது (அவர்) நட்பு ஆதலால் இத்தன்மை. மேன்மக்களுக்குண்டாகிய குணமென்பதாம்.

பதுமனார்:— என்றது. செல்கின்ற வழியின்கண்ணே ஒருநாள் ஒருவரைக் காணினும் அமைவுடையார், பழையதாக வழிவந்த கேண்மையேபோல விளங்கச்செய்து அவரை நட்பாகப் பிணிப்பர். நல்வரை நாடனே! சிலநாள் அடிப்பட நடந்தால் கல்வரைக் கண்ணும், வழி உண்டாம் என்றவாறு.

செல்வுழிக்கண்—செல்கின்ற வழியின்கண்ணே.

விளக்க உரை: – என்பது. நல்வரை நாட!—நல்ல மலை நாடனே!; சான்றவர்—அமைவுடையவர்; செல்வுழிக் கண் ஒரு நாள் காணினும்—போகின்ற வழியின்கண் ஒருவரைக் காணினும்; தொல்வழிக் கேண்மையில்—பழையதாக வழிவந்த வுறவுபோல வரையுங்கொண்டு; தோன்றப்புரிந்து யாப்பர்—விளங்கவிரும்பி நட்பாகப் பிணிப்பர்; சிலநாள் அடிப்படில்—சிலநாள் அடிப்பட நடந்தால்; கல்வரையும் கல்லானவிடமும் நெறி உண்டாம்—வழியாம் என்றவாறு.

விளங்கச் செய்தலாவது பலரும் அறியும்படி மதிப்பித்தனர்.

மேற்கோள் பகுதி:—

மெய்யீற்றின்முன் உயிர்வர உடம்படுமெய்' அல்லாத் 'வகரமெய்' பெற்றது என்பதற்கு 'செல்வுழி' என்பதை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொ. எ. பு. சூ. 38. ந உரை.

ஒப்புமைப் பகுதி:—

''பகையறு குரிசிலைப் பண்டு பயின்றன்ன உவகை உள்ள மோடு'' என்னும் அடிக்கு எடுத்துக்காட்டுவர்.

—பெரும். கா. 3-12 அடி 33-ன் உரையில்.

''புணர்ச்சி பழகுதல் வேண்டா உணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்''.

—குறள். 785.

''ஒருநாட் பழகினும் பெரியோர் கேண்மை
இருநிலம் பிளக்க வேர்வீழ்க் கும்மே''.

—நறுந்தொகை.

செல்வுழி — மெய்யீற்றின்முன் உயிர்வர உடம்படுமெய் யல்லாத வகர மெய்பெற்றது. (இதனை, மெய்யீற்று உடம்படு மெய்' என்பர். நச்சினார்க்கினியர்).

புரிந்தியாப்பர்—குற்றியலிகரம்.

குறிப்பு:—

செல்கின்றவழியில் ஒருநாள் ஒருவரைக் காணினும் சான்றோர் பழைய வழிவந்த நட்பினரைப்போல, விளங்கச் செய்து, அவரை நட்பாகப் பிணிப்பர்.

(ச).

155. **புல்லா வெழுத்தில் பொருளில் வறுங்கோட்டி**
[1]கல்லா ஒருவன் உரைப்பவுங் கண்ணோடி
நல்லார் வருந்தியுங் கேட்பரே மற்றவன்
பல்லாரு(ள்) நாணல் பரிந்து.

---

[1]கல்லா வொருவன்—பா. பேதம்.

தருமர்:—எ-து. புல்லா எழுத்தில் பொருளில்—எழுத்திலக்கணத்துக்கும் பொருந்தியதல்ல, அதுவன்றி, பொருள் பெற்றிருக்கிறதோ வென்னில், அதுவுமில்லை வறுங்கோட்டி இந்த வகையில்லாத பயனில் சொல்லை—கல்வி இல்லாதான் [1]ஒருவனிருந்துரைப்பினும் அதற்குக் கண்ணோட்டமுற்று [2]நல்லவரானாரவர்கள் கல்லா ஒருவன் [3]வருத்தமுற்றாகிலும் கேட்பர். அஃதேனெனில், மற்றவன் அந்த வறுங்கோட்டி சொன்னவன் பலருள்ளும், நாணுவதற் கிரக்க முற்று எனறவாறு.

பயனில் சொல் ஒருவன் வந்து பாராட்டில் அவன் அறியாமை, இவர் அறிவுள்ள நெஞ்சிற்குப் புண்ணிற் கோல்படுமாப் போலாம். அப்படி யானாலும் அவனை அவமதித்தாலவன் பல பேர் முன்னேயும் நாணமுறுவன் என்பதனால் தம்முடைய நெஞ்சிற்குப் புண்ணிற் கோல்படுமாப் போலிருப்பதனைப் பொறுத்து, அவன் சொல் இன்புற்றுக் கேட்பதுபோலக் கேட்பரென மேன்மக்கள் தன்மை கூறியது.

கண்ணோட்டம்—முகதாட்சண்ணிய.

பதுமனார்:—என்றது. இலக்கணத்தொடு பொருந்தாத எழுத்தறிவினையுடைத்தாய்ப் பொருளில்லாத வறுவிய அவையின்கட் பயின்று, கல்லாவொருவன் ஒன்றினைச் சொல்லவும் அவன்மாட்டுக் கண்ணோடி நல்லறிவுடையார், வருந்தியானும் அவன் பலரெதிர் நாணுதற்கிரங்கிக் கேட்பர் என்றவாறு.

[4]‘கோட்டிகல்லா’ என்றுபாடமோதிக் கோட்டியைச் சொல்லென்று பொருளுரைப்பாருமுளர். புல்லா—பொருந்தாத எழுத்தினையுடைய பாடத்தாலே பொருளில்லாதன சொல்லும் அவையிடத்து மருவிக்கல்லார்.

விளக்க உரை:—என்பது. புல்லா எழுத்தில்—

---

[1]ஒருவன் உளர்ப்பவும் —

[2]நல்லார் —

[3]வருந்தியுங் கேட்பர் —

[4]பொழிப்புரை:-‘கோட்டிகல்லா’ பதுமனார் உரையில் உள்ளதே.

இலக்கணத்தோடு பொருந்தா வெழுத்தாய்; பொருளில்—பொருளறிவில்லாததாய்; வறுங்கோட்டி—வறுவிய அவையின் கட்பயின்ற [1]கல்லா ஒருவன் உரைப்பவும் கண்ணோடி—அறிவில்லாதவனொருவன் ஒன்றினைச் சொல்லினுமவ்விடத்து கண்ணோட்டமுடையராய்; நல்லார் வருந்தியுங் கேட்பரே—மேன் மக்களானவர்கள் தமது நெஞ்சுக்கு வாராதாயினும் அதனை விரும்பிக் கேட்பரே; மற்றவன் பல்லாருள்—நாணல் பரிந்து—மற்றந்தவறியாதவன் பலர் முன்னும் நாணுதலுக் கிரங்கி என்றவாறு.

மேற்கோள் பகுதி:—

"புல்லா வெழுத்தில் பொருளில் வறுங்கோட்டி" என்புழிப் போல (குறள். 401ல்) என எடுத்துக்காட்டுவர் பரிமேலழகர்.

ஒப்புமைப் பகுதி:—

'கோட்டி':—

"வெள்ளைக் கோட்டி"

—சிலப். 30. 198.

"நடவை மாக்களும் நகையொடு வைகி
வட்டுஞ் சூதும் வம்பக் கோட்டியும்"

—மணிமே. 14. பாத்திர. 62-63.

"தோரண வீதியும் தோமறு கோட்டியும்"

—மணிமே. 14. விழாவறை. 43.

"வீரக் கோட்டி பேசுவார்"

—கம்ப மராயாச 13.

"தன்துணைவி கோட்டியினி னீங்கி"

—சீவக. சிந். 1035.

"ஆயிழை கோட்டத் தோங்கிருங் கோட்டியிருந்தோய்"

சிலப். 30. 62.

(ரு).

---

[1]'புல்லா எழுத்தின் கோட்டி' இலக்கணத்தினைத் தழுவாத கோட்டி என்பது பொருள். இதனை 'இன்றாங்கட்கு' சிவ.போ.சூ.1. அ.2.4. 'அருங்கேடன்' குறள் 210-இவற்றின் உரையோடு ஒப்பிடுக.

156. கடித்துக் கரும்பினைக் கண்டகர நூறி
இடித்துநீர் கொள்ளினு(ம்) இன்சுவைத்தேயாகும்
வடுப்பட வைதிறந்தக் கண்ணும் குடிப்பிறந்தார்
கூறார்தம் வாயிற் சிதைத்து.

தருமர்:—எ.து. கடித்துக் கரும்பினைக்—கரும்பானத்தை கடித்து ஈனப்படுத்தி கண் தகர நூறி கண்தகரும்படி யடித்து; இடித்து நீ கொள்ளினும்—ஆலைவாயிலே வைத்து நெருக்கிச் சாறு கொள்ளினும்; இன்சுவைத்தே யாகும்—இனிதான விதத்தையே கொடுக்கும் [அதுபோல] வடுப்படவைது இறந்தக்கண்ணும்—தமக்குக் குற்றம் உண்டாகும்படிக்கு ஒருவர் வைதுபோனாலும்—குடிப்பிறந்தார் நற்குடியிற் பிறந்த மேன்மக்களானவர்கள் தம் வாயிற் சிதைத்து கூறார்—தாம் அவரை நோக்கித் தம்முடைய வாயினாலே பொல்லாத சொற்களைச் சொல்லார் என்றவாறு.

தாமும் தம்வாயால் வைதால் ஈனரில் ஒருவராவது நோக்கிக் கூறார் என்பதுமல்ல, கரும்பை எவ்வகைத்தாய் இடர்ப்படுத்திய காலத்தும் அதன் இரதம் குன்றாததுபோல, இவர்க்குமிந்தக் குணம் இயற்கையான குணமென அவர் மேம்பாட்டுத்தன்மை கூறியவாறு.

பதுமனார்:—என்றது. கரும்பினைக் கறித்துக் கண்ணுடைய நெரித்தும் அதனைத் துவைத்துச்சாறு கொள்ளினும் கரும்பு இனிய சுவையை யுடைத்தேயாம். அதுபோல குற்றந் தோன்ற வைதவிடத்தும் குடிப்பிறந்தார் தம்வாயிற் சிதையக் கூறார் என்றவாறு.

கடித்து—கறித்து, கண் தகர நூறி—கண் உடைய நெறித்து, வைது இறந்தக் கண்ணும்—மிக வைத விடத்தும்.

விளக்க உரை:—கரும்பினைக் கடித்துக் கண்தகரநூறி—கரும்பினைத் தறித்துக்கண்ணுடைய நெரித்து; இடித்து நீர் கொள்ளினும்—இடித்து ஆலைவாயிலே வைத்துச்சாறு கொள்ளி

னும்; இன்சுவைத்தே யாரும்—இனிதாய விதத்தைக் கொடுக்கும்; [அதுபோல] வடுப்பட வைதிறந்தக் கண்ணும்—குற்றமுண்டாக ஒருவர் வைதுபோனவிடத்தும்; குடிப்பிறந்தார் கூறார் தம் வாயிற்சிதைவு—குடிப்பிறந்தவர் தம் வாயிற் சிதையக் கூறார் என்றவாறு.

கடித்து—கறித்து. கண்தகர—கண் உடைய வைதிறந்தக் கண்ணும்—மிகவைதவிடத்தும்.

மேற்கோள் பகுதி:-

நச்:—"கடித்துக் கரும்பினைக் கண்தகர நூறி" இது, வல்லெழுத்துப்புணர்ச்சி எய்திற்று. "இன்னும் அதனானே ஒருசொல்லைப் பகுத்துச் ....பெறுதும்" என்பர் நச்சினார்க்கினியர்.

—தொல்.செய்.சூ.12.

மயிலை:— "கடித்துக் கரும்பினை" என்ற அடியை எடுத்துக் காட்டுவர்.

—நன்.உரி.சூ.16.

சங்கர:—"கடித்துக் கரும்பினைக் கண்டகர" என்பது வரைவு எனக் காட்டுவர்.

—நன்.விருத்.சூ.457.

குறிப்பு:-

வாயின் என வேண்டாது கூறினார். நல்ல சொற்கள் பயின்றது எனத் தாம் வேண்டியதன் சிறப்பு முடித்தற்கு குற்றம் பிறக்க ஒருவர் வைதுபோன விடத்தும் குடிப்பிறந்தார் தம் வாயிற் சிதையக் கூறார்.

(சா).

157. கள்ளார்கள் ளுண்ணார் கடிவ கடிந்தொரிஇ
எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்—தள்ளியும்
வாயிற்பொய் கூறார் வடுவறு காட்சியார்
சாயிற் பரிவ திலர்.

---

†கடியென் கிளவி வரைதற்கண் வந்ததற்கு.

தருமர்:— என்பது. கள்ளார் கள்ளுண்ணார்—குற்றமற்ற அறிவுடையார் தாம் களவு செய்வாரையும், கள்ளுண்பாரையும், காண்பதற்கு உடன்படார்; கடிவ கடிந்து ஓரீஇ—கடியத்தக்கன வற்றை ஒழித்து நெறியின் ஒழுகுவர்; அதுவன்றி, எள்ளிப் பிறரை இகழ்ந்துரையார்—ஒருவரை இகழ்ந்துஞ் சொல்லார்; தள்ளியும்—மறந்தாகிலும்; வாயிற் பொய்கூறார்—வாயினாலே பொய் சொல்லார்; வடுவறுகாட்சியார்—குற்றமற்ற குணத்தினை யுடையார்; சாயிற் பரிவதிலர்—தாம் தளர்ந்தகாலத்தும் இவ்வகை ஒன்றும் செய்யாது, நன்னெறியின் ஒழுகுவர் என்ற வாறு.

கடிவது—கொலை, களவு, கள், காமம், முதலியவை ஒழிவது—அனாசாரமிவைகள் ஒன்றும் தமக்குத்தளர்ச்சி வந்தகாலத் திலும் செய்யார். அவர்க்குச் சுபாவ குணமாகையால், வடுவறுகாட்சியார் என்றார். வடுவறுகாட்சியை எழுவா யாக்கிப் பொருளுரைக்க.

பதுமனார்:—என்றது. களவு காணார் கள்ளுண்ணார் நல்லாற்றில் நீக்கத்தகுவனவற்றை நீக்கிவிட்டுப் பிறரை இகழ்ந்து மிக்குரையார்; தடுமாறியும் வாயாற் பொய்சொல்லார், கேட்டால் இரங்குவதிலர், குற்றந்தீர்ந்த அறிவினையுடையார் எ—று.

கள்ளார்—களவுகாணார். தள்ளியும்—தடுமாறியும். கேடு வரினுமிரங்குவதிலர்.

விளக்க உரை:—என்பது. கள்ளார் கள்ளுண்ணார்—களவுகாணார், கள்ளுண்ணார்; கடிவ கடிந்தொரீஇ—கடியத் தக்கவை கடிந்து; ஒழியத்தக்கவை ஒழிந்து; எள்ளிப்பிறரை இகழ்ந்துரையார்; தள்ளியும் வாயிற் பொய்கூறார்—மறந்தும் வாயிற் பொய் சொல்லார்; வடுவறுகாட்சியார்—குற்றமற்ற காட்சியார்; சாயிற் பரிவதிலர்—தளர்ந்த காலத்திரங்குவதிலர் என்றவாறு.

இப்பாட்டிற்கு 'வடுவறுகாட்சியார்' எழுவாயாக (வைத்துப்)

பொருளுரைக்க. கடியத்தக்க கொலை, காமம், முதல் ஒழியத் தக்க அனாசார முதலியவை என்பதாம்.

பொழிப்பு:—தள்ளியும்—தடுமாறியும், சாயிற்பரிவதிலர் கேடு வரினும் இரங்குவதில்.

ஒப்புமைப் பகுதி:—

“களவு கடனாகக் கடிந்திடுதல் சூதே.

—சிந்தா. முத். 272.

“உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன் பொருளைக்
கள்ளத்தால் கள்வேம் எனல்”.

—குறள். 282.

“பொருள்தீர்ந்த பொச்சாந்தும் சொல்லார் மருள்தீர்ந்த

—குறள். பய. 199.

“என்றும் பரிவதிலர்”

—நாலடி. 182.

குறிப்பு:—

வடுவெறு காட்சியவர் களவுகாணார் கள்ளுண்ணார்.
தடுமாறியும் வாயாற் பொய் கூறார்.

தள்ளியும்—தவறியும். இது, இப்பொருட்டாதலை “கள்வார்க்குத் தள்ளும் உயிர்நிலை” என்னும் குறட்பாவினடி உணர்த்துதல் காண்க.

—குறள். 290.

(எ)

158. பிறர்மனை யின்கட் செவிடாய்த் [1]திறனறிந்(து)
ஏதிலார் இற்கட் குருடனாய்த் தீய.

பாடபேதம்[1]திறன் அறிந்து, அத்திறங்களாவன:-குடிப்பிறப்பு,கல்வி

புறங்கூற்றின் [1]மூகையாய் நிற்பானேல் யாது(ம்)
அறம்கூற வேண்டா(ம்) அவற்கு.

திருமர்:— என்பது. பிறர் மறையின்கண் செவிடுஆய்— பிறர் மறைத்துச் சொல்லுமிடத்துச் செவிடரைப் போலவும்; திறன் அறிந்து— நல்லொழுக்கமாகிய திறங்களை அறிந்தும்; ஏதிலார் இல்கண் குருடன் ஆய்- அயலர் இல்லின்கண் குருடரைப் போலிருந்தும்; தீயபுறங் கூறின்—ஒருவரை ஒருவர் தீங்காகப் புறங்கூறுமிடத்து; மூங்கையாய்-ஊமைபோலிருந்தும்; நிற்பான் ஏல்—இப்படிச் செய்வானாகில்; யாதும் அறங்கூற வேண்டாம் அவற்கு—இதுவன்றியும் வேறு அறஞ்செய்ய வேண்டுமென்ப தவற்கில்லை; என்றவாறு. (எந்த அறமும் பிறர் அவருக்குப் புகல வேண்டியதில்லை).

இல்லத்திருந்து இத்தன்மையோடு ஒழுகினும் அதனிலும் துறவறம் அதிகமென்று சொல்லக்கடவதல்ல வென்பாம், குடிப்பிரப்பிலராயினும் இத்தன்மையாய் ஒழுகுவார் சிலரையே சான்றோர் என்பது.

பதுமனார்:—என்றது. பிறர்மறை கூறுமிடத்துச் செவிடனைப் போன்று, செய்யத்தக்க திறங்களை அறிந்த அயலார் மனையின்கட் குருடனைப் போன்று, தீயபுறங் கூற்றின்கண் மூங்கையைப் போன்று, இவ்வாறு ஒருவன் ஒழுக வல்லானாயின்' யாதும் அறங்கூற வேண்டா என்றவாறு.

திறனறிதல்-செய்யத்தக்க திறங்களை அறிதல். (ஒழுக்கங்கள்)

விளக்க உரை:— என்பது. பிறர் மறையின்கட் செவிடாய்

ஒழுக்கம், செல்வம், உருவம், பருவம், என்பனவற்றான் வரும் தகுதி வேறுபாடுகள்.

—குறள். 644. ப. உரை

[1]மூங்கை.

பிறர் மறைத்துச் சொல்லும் செவிப் [1]பறைச்சலான விடங்களிலே செவிடரைப் போல இருந்து; திறன் அறிந்து ஏதிலார் இல் கண் குருடனாய்—நல் ஒழுக்கமாகிய திறங்களை அறிந்து அயலார் மனையாளிடத்துக் குருடரைப்போலே இருந்தும்; தீய புறங் கூற்றின் மூகையாய் நிற்பானேல்—ஒருவரைத் தீங்காக ஒருவர் புறஞ்சொல்லுமிடத்து ஊமைபோலே இருந்தும்; இப்படிச் செய்வாராகில்; யாதும் அறம்கூற வேண்டாம் அவற்கு—இல்லறத்திலே நின்றாராயினும் இதனைத் துறந்து தவஞ்செய்யுமென்று சொல்லவேண்டாம் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

''கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருள்மேல்
செல்லான் சிறியா ரினஞ்சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் தீச்சொற்கள் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை''.

—ஏலா. 19.

குறிப்பு:—

பிறர்கூறும் மறையை வெளியிடாமலும், பிறர்மனையை நோக்காமலும் தீயபுறங் கூறாமலும், ஒருவன் 'நிற்பானேல்' அவனுக்கு அறங்கூற வேண்டியதில்லை. 'யாது அறமும்' என உம்மைப்பிரித்துக் கூறுக. 'நிற்பானேல்' என்பது நிற்றலின் அருமை தோன்ற நின்றது.

(அ).

159. பன்னாளுஞ் சென்றக்கால் பண்பிலார் தம்முழை
என்னானும் வேண்டுப வென்றிகழ்வர்—என்னானும்
வேண்டினு நன்றுமற் றென்றி விழுமியோர்
காண்டொறுஞ் செய்வர் சிறப்பு.

[1]பறைச்சல்—பேச்சு.

தருமர்:—எ-து. பன்னாளுஞ் சென்றக்கால் பண்பிலார் தம் முறை—பண்பில்லாதாரிடத்து ஒருவர் பலநாளுஞ் சென்றக்கால், தம்பிடத்தே ஒருபொருள் வேண்டியல்லோ பலநாளும் வருகின்றாரென்று; என்னானும் வேண்டுப என்று இகழ்வர்—யாதாயினும் ஒருபொருளைப்பெற விரும்புவரெனக் கருதி அவரை இகழ்ந்து கைவிடுவர்; என்னானும் வேண்டினும் நன்று என்று விழுமியோர்-யாதானு மொன்றினை வேண்டினும், நல்ல கருமமே என்று பெருமையுடையவர்; காண்டொறுஞ் செய்வர் சிறப்பு—அவர் அவரைக்கண்டபொழுதெல்லாம் நாளுக்குநாள் அதிகமாம் உபகாரம் செய்வரென்றவாறு.

சிறப்புச் செய்வது, அவர் வேண்டியது தமக்கியன்ற மாத்திரமாகிலும் கொடுத்தினிய வார்த்தைகளும் சொல்லி, ஆசாரம் பண்ணுதல் முதலானவை மேன்மக்களுக்கிவை இயற்கையாகிய குணம் அதனைச் சிறப்பிக்கும் பொருட்டுக் கீழ்மக்கள் குணமுங் கூறப்பட்டது.

பதுமனார்:—என்றது. பலநாளும் ஒருவர்மாட்டுச் சென்றக்கால் பண்பில்லாதார் யாதானும், வேண்டிவந்தாரென்று கருதி இகழாநிற்பர் யாதானும் ஒன்று வேண்டினும் எமக்கு நன்றென்று சீரியாரல்லாரைக் காணுந் தோறுஞ் சிறப்புச் செய்வா ரென்றவாறு.

என்னாலும்—யாதானும்.

விளக்க உரை:— என்பது பன்னாளுஞ் சென்றக்கால் பண்பிலார் தம்முறை—பண்பிலாதார் தம்பிடத் தொருவர் பல நாளுஞ் செல்லுவாராகில்; என்னானும் வேண்டுவார் என்று இகழ்வார்—யாதானும் ஒன்றை வேண்டியல்லோ நம் பக்கல் வருகிறாரென்று, அவரை இகழ்ந்துவிடுவர்; என்னானும் வேண்டினும் நன்று என்று விழுமியோர்—யாதாலும் ஒன்றை வேண்டினும் இது நமக்கு நன்றல்லோவென்று சீரியோர்; காண்டோறுஞ் செய்வர் சிறப்பு—அவரைக் காணுந்தோறுஞ் சிறப்புச் செய்வர்

என்றவாறு.

சிறப்புச்செய்கை என்பது அவர்மனம் விரும்பி இனிய வார்த்தையும் ஆசாரமுமுதலானவை, செய்தலென்பதாம்.

மேற்கோள் பகுதி:-

''விழுமஞ் சீர்மையும் சிறப்பு மிடும்பையும்''

—தொ.உரி.சூ.57-ல் சேனாவரையர், நச்சினார்க்கினியர்.

'விழுமியோர் காண்டொறுஞ் செய்வர் சிறப்பு' என்னும் அடியைக் காட்டுவர். (நாலடி).

—இலக்கணவிளக்கம். சூ. 282.

ஒப்புமைப் பகுதி:-

''ஒருநாட் செல்ல மிருநாட் செல்லலம்
பலநாள் பயின்று பலரொடு சொல்லினும்
தலைநாட் போன்ற விருப்பினன் மாதோ''.

—புறம். 101.

குறிப்பு:—

கீழோர் யாதானும் ஒன்றை வேண்டினாலும் தமக்கு நன்றென்று. மேலோர் அவரைக் காணுந்தோறும் சிறப்பினைச் செய்வர். 'சென்றக்கால்' என்றதில் 'செல்' எனும் பகுதி, 'தரல் வரல் கொடை செலல் சாரும் படர்க்கை, எழுவாயிரண்டும் எஞ்சிய வேற்கும்'' என்ற விதிக்கு மாறாக தன்மைக்கண் வந்தது. 'இளவழுவமைதி'.

(கூ).

160. உடையா ரிவரென்(று) ஒருதலையாய்ப் பற்றிக்
கடையாயார் பின்சென்று வாழ்வ(ர்)—உடைய

[1]பிலந்தலைப் பட்டது போலாதே நல்ல
குலந்தலைப் பட்ட விடத்து.

தருமர்:— ஏ—து. உடையார் இவரென்று—உலகத்தின் கண்ணே சிலர் கீழ்மக்கள் செல்வமுடையராக விருந்தால்; ஒருதலையாய்ப்பற்றிக் கடையாயார் பின்சென்று வாழ்வர்— ஒருநேராக அந்தக் கடையாயரையும், பின்சென்று உயிர்வாழா நிற்பர்; உடைய பிலம் தலைப்பட்டது போலாதே—நல்ல பிலந் தலைப்பட்டவிடத்து இப்படி ஈனரைப்பின்சென்று உயிர்வாழ்வார் தங்காலம் உண்மையை நினைத்த வீணரைப் பின்செல்வ தொழித்துத், தங்குலத்தைத் தலைப்பட்டு, அவ்வொழுக்கத் தோடு ஒழுகுவாராயின் அவற்கது ஒருவன் நோயால் வருந்திப் பலம் குறைந்த வேளையிலே அந்தநோய் தீர்ந்து பழைய பலம் வந்து தலைப்பட்டாற்போலுமல்லவோ என்றவாறு.

வறுமையுற்ற காலத்தில் இயன்ற விடத்தல்லது இவர் தன்மை அறியாத கடையாயார் பின்சென்று உயிர்வாழ்வதிலும் இறப்பதே நன்றென்பதாயிற்று. வறுமையுற்றவிடத்து யாவ ரிடத்தாயினும் இரந்துயிரைப் பரிகரியாமல் வறுமையிலே இறப்பது கருமமோவெனில், மிகுந்த வறுமைவந்தால் அதற்கான விடத்திரந்துயிரைப் பரிகரிப்ப தல்லாமல் ஈனரைப் பின்சென்று உயிர்வாழ்தல் இயல்பல்ல;

மேன்மக்கட்கு இந்த ஒழுக்கமில்லை யாதலின், இத்தன்மை யாக ஒழுகுமவரை நோக்கித் தமக்கு மனம் பொறாது கூறியவா றாயிற்று. இவை மேன்மக்கள் தன்மையை வியந்து கூறியதாம். பிலந்தலைப்பட்டது போலாதே, என்று வினாவுதலினால் இது போலாதோ என்றது.

பதுமனார்:—என்றது. உடையாரிலரென்று துணிந்து பற்றிக் கீழ்மக்கள் பின்னேயும் சென்று சிலர் வாழா நிற்பர். எல்லாப் பொருளுமுடைய பிலத்தைத் தலைப்பட்டாற் போலுமன்றே

---

[1]"தரணியெல்லாம் பிலமுகத்தே புகப்பாய்ந்து"
—திருவாசகம்.12,7.

நல்லகுலத்திற் பிறந்தாரைச் சேர்ந்தவிடத்து எ-று.

அல்லதூஉம், இவர் பொருளுடைய ரென்று கருதி யாப்புறப் பற்றிக் கீழாய குலத்திற் பிறந்தார் பின்னே சென்றுந் தலையாய குலத்திற் பிறந்தார் வாழாநிற்பர். எல்லாப்பொருளையு முடைய பிலத்தைத் தலைப்பட்டது போலுமன்றே நல்ல குலத்தின்கண் பிறந்தவிடத் தென்றுமாம்

ஒரு தலையாய்ப்பற்றித் தாமேவிடாதே பற்றிக், கீழ்களுட் பொருளுடைமையால் பிலத்தைத் தலைப்பட்டது போலாதே, நல்லகுலம் தமக்குத் தலைப்பட்டவிடத்தென்று குலத்துள்ளாரைச் சேர்தலும் என்றுமாம்.

விளக்க உரை:— என்பது. உடையார் இவர் என்று ஒரு தலையாய்ப் பற்றி—இவர் செல்வமுடையார் என்றொருதலையுந் தான் விரும்பிச் சென்று பற்றி; கடையாயார் பின்சென்று வாழ்வர்—கீழ்மக்கள் பின்பேயுஞ் சென்று சிலர் உயிர்வாழா நிற்பர்; உடைய பிலந்தலைப்பட்டது போலாதே—எல்லாச் செல்வத்தையுமுடைய பிலத்தைத் தலைப்பட்டது போலுமல் லவே; நல்ல குலந்தலைப்பட்ட விடத்து—நல்லகுலத்திலே பிறந்து எல்லா நற்குணங்களையுமுடைய மேன்மக்களைச் சார் தல் அதுபோலுமல்ல என்றவாறு.

மேன்மக்களைச் சார்தல் மறுமைக்குறுதியாகும் ஒழுக்க முண்டாம் என்றவாறு. (பொழிப்புரை) இவர் பொருளுடைய ரென்றுகருதி யாப்புறப் பற்றிக் கீழாய குலத்திற்பிறந்தார் பின்னே சென்றும் தலையாய குலத்தில் பிறந்தார் வாழாநிற்பர். எல்லாப் பொருளையுமுடைய பிலந்தலைப்பட்டது போலுமன்றே, நல்லகுலத்தின்கட் பிறந்தவிடத்தென்றுமாம். ஒருதலையாய்ப் பற்றி—தாமேவிடாது பற்றிக் கீழ்மக்களுடைய பொருளுடைமை யான பிலத்தைத் தலைப்பட்டது போலாதே. நல்லகுலந் தமக் குத் தலைப்பட்டவிடத் தென்றுமாம்.

குலத்துள்ளாரைச் சேர்தலும் என்றுமாம்.

உடையார்—உலகவழக்கு.

குறிப்பு: —

நல்ல குலத்திற் பிறந்தாரைச் சார்ந்தவிடத்து, எல்லாப் பொருளும் நிரம்பியதோர் பிலத்தைத் தலைப்பட்டதுபோலும்.

பிலம்—சுரங்கம், பொருள் நிரம்பியதோர் சரக்கறையுமாம். (ய).

17. [1]பெரியாரைப் பிழையாமை

தருமர்:— அஃதாவது தம்மிற் பெரியாராகிய ஐங்குரவர் ஏவலை மறாமல் அவர்வழி நிற்றலும், எல்லா நற்குணங்களு முடையராய் வேற்று வேந்தரிடத்துத் தன்னுடைய செல்வவலி துணைவலியின் ஆங்காரங்கொண்டு, அவரை யிகழ்ந்து அவர்க் கொரு குற்றங்களைச் செய்யாமையுமாம்.

ஐங்குரவரானவர்:— மாதா, பிதா, மாமன், குரு, உபாத்தியாயர் (என்ற ஐ)வரும்

பதுமனார்:— அஃதாவது எல்லாவகையினானுந் தம்மின் மிக்க பெரியாரைப் பிழையாது அவர்மனங் கொள்ளும்படி ஒழுகுதல்.

விளக்க உரை:— அஃதாவது தம்மிற் பெரியாராகிய ஐங்குரவர் ஏவலை மறாமல் அவர்வழி நிற்றாலும், எல்லா நற்குணங்களையுமுடையராய் வேற்றுவேந்தரிடத்துத் தன்னுடைய செல்வ வலி துணைவலியென்னும் அகங்காரங் கொண்டு, அவரை யிகழ்ந்து அவர்க்கொரு குற்றங்களைச் செய்யாமையுமாம்.

ஐங்குரவரானவர்: - மாதா, பிதா, மாமன், அரசன்,

பா—ம்: —[1]'மேன்மக்களியல்பு' —அச்சுப்பிரதி.

உபாத்தியாயர்.

குறிப்பு:-

'பெரியாரைப் பிழையாமை': —

பரிமே:— அஃதாவது பெரியாராயினாரை அவமதித்து ஒழுகாமை. "இரட்டுற மொழிதல்" என்பதனான் பெரியார் என்பது ஆற்றலால் பெரியாராய வேந்தர்மேலும் தவத்தால் பெரியாராகிய முனிவர்மேலும் நின்றது. மேற்செல்லாது எஞ்சிநின்றதாகலின், இது வெகுளியான் வருவனவற்றது இறுதிக்கண் வைக்கப்பட்டது.

மணக்:—பெரியாரைப் பிழையாமையாவது தம்மின் பெரிய அரசரையும், முனிவரையும், அறிஞரையும் பிழைத்தொழுகாமை. மேல்பகையும் பகையின்கண் செய்யும் திறமும் கூறினார் இது தம்மின் பெரியார்தம்மைப் பகையாகக் கொள்ளாராயினும், தமது இகழ்ச்சி அவரால் தீமை பயக்குமாதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:— பெரியாரைப் பிழையாமையாவது பெரியவர்க்கு ஒரு குற்றமும் செய்யாமை என்றவாறு.

—குறள். அதி. 90.

161. பொறுப்பரென்று எண்ணிப் புரைதீர்ந்தார் மாட்டும்
வெறுப்பன செய்யாமை வேண்டும்—வெறுத்தபின்
ஆர்க்கும் அருவி அணிமலை நன்னாட
[1]பேர்த்தாதல் யார்க்கும் அரிது.

பாடம்:—[1]'பேர்த்தால்'—விளக்கவுரை.

[2]'பேர்த்துதல்'—விளக்கவுரையில் காட்டப்படும் பாடம்

[3]'பேர்க்குதல்'—அச்சுப் பிரதி.

பதுமனார் உரையில் 'போற்றிடல்' எனப் பாடம் காணப் படுகிறது; அது விளக்கவுரையில் காட்டப்படும் பாடமாகிய பேர்த்துதல்' ஆக இருக்க வேண்டும்.

தருமர்:— என்பது. ஆர்க்கும் அருவி—ஆரவாரிக்கும் அருவியினையுடைய; அணிமலை நல்நாட! —அழகு பொருந்திய மலை சூழ்ந்த நாடனே!; பொறுப்பர் என்று எண்ணி—எது செய்யினும் பொறுப்பரென்று (கருதி); புரைதீர்ந்தார் மாட்டும்—குற்றந்தீர்ந்த நற்குணமுடையவர் (இடத்தும்); வெறுப்பன—அவர்மனம் வெறுக்கத்தக்கவற்றை; செய்யாமை வேண்டும்—அவரிடத்துச் செய்யாமலிருக்க வேண்டும்; வெறுத்தபின்—அவர் மனம் வெறுத்தபிறகு; பேர்த்தாதல்—அவர் கோபத்தைப் பொறுப்பித்தல்; யார்க்கும் அரிது—யாவர்க்குங் கூடாது என்றவாறு.

குற்றமற்றவரிடத்தும் என்று உம்மை கொடுத்தமையால், குற்றமற்றவரை அவமதிப்பாகச் செய்யினும் அவர் கோபம் செய்வதில்லை. இவனுடைய தீவினைப்பயனாலே அவர் அறிவை மயக்கி அவரிடத்து வெகுளி உண்டாயிற்றாகில், அதனை யாவராலும் அடக்கப்படா தென்பதாம்.

இது நற்குணமுடைய வேற்றுவேந்தரைப் பிழைத்ததாம்.

பதுமனார்:— ஆர்க்கு மருவி யணிமலை நன்னாடனே! செய்தகுற்றத்தைப் பொறுப்பரென்று கருதிக் குற்றந்தீர்ந்தார் மாட்டும் அவர் வெறுப்பனவற்றைச் செய்யவேண்டா. வெகுண்ட பின் அவர் வெகுளியால் வருங் கேட்டினை நீங்குதலரிது என்றவாறு.

விளக்க உரை:— என்பது ஆர்க்கும் அருவி—ஆரவாரிக்கும் அருவியினையுடைய; அணிமலை நல்நாட!—அழகிய மலைநாடனே!; பொறுப்பர் என்று எண்ணி—பொறுப்பரென்று சொல்லி; புரைதீர்ந்தார் மாட்டும்—குற்றந்தீர்ந்தாரிடத்தும், வெறுப்பன — அவர் வெறுக்கத்தக்கவற்றை; செய்யாமை வேண்டும்—செய்யாமலிருக்க வேண்டும்; வெறுத்தபின்—அவர் வெறுத்தபின்; பேர்த்தாதல்—அவர் வெகுளியைப் பெற்றால் நீக்குதல்; யார்க்கும் அரிது—யாவர்க்கும் அரிதென்றவாறு.

பேர்த்துதல் என்று பாடமாயின் அவ்வெகுளியான் வருங் கேட்டினை நீக்குதல் (என்று உரைகொள்க).

ஒப்புமைப் பகுதி:-

"பூவுட்கும் கண்ணாய்! பொறுப்பர் எனக்கருதி
யாவர்க்கே யாயினும் இன்னா செயல்வேண்டா
தேவர்க்கும் கைகூடாத் திண்ணன்பி னார்க்கேயும்
நோவச்செய் நோயின்மை யில்".

—பழ. 335.

"குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது".

—குறள். 29.

"பெரியாரைப் பேணா தொழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்".

—குறள். 892.

"இம்மூன்று பாட்டானும் பொறுப்பர் என்று அரசர் வெறுப்பன செய்யற்க என்பது கூறப்பட்டது.

—குறள். 700—பரிமே. உரை.

"தீயன கொடியவன் செய்த செய்கையை
நாயினேன் உணரினன் னெறியி னீங்கலாத்
தூயவர்க் கிடரிழைத் துழலும் தோழுடை
ஆயவர் வீழ்கதி அதனில் வீழ்கயான்".

—கம்ப. பள்ளியடை. 116.

"மெய்மை நீங்கியே கொலைகள வியன்றுமே லுள்ள
செம்மை யாளரைச் சீறியே அணங்குசெய் தீயோர்
தம்மில் லாற்றரும் பழிசுமந் தொல்லையில் தமரோ(டு)
இம்மை வீடுவர் எழுமையும் துயரினூ டிருப்பர்".

—கந்த. அவைபுகு. 104

குறிப்பு:-

புரைதீர்ந்தார் என்றது பாவங்களாகிய குற்றங்களைத்

தவத்தான் நீங்கப்பெற்ற முனிவர்களைக் குறித்தது. மாடு—ஏழனுருபு. உம்மை—உயர்வு சிறப்பும்மை; எச்சவும்மையாகக் கொண்டு எவரிடத்தும் வெறுப்பன செய்யாமை வேண்டும் எனக்கொள்ளுதலுமமையும். வெறுத்தபின்—வெறுப்பின்; எதிர் கால வினையெச்சம்.

(௬).

162. பொன்னே கொடுத்தும் புணர்தற்கு அரியாரைக்
கொன்னே [1]தலைப்படப் பெற்றிருந்தும்—அன்னோ!
பயனில் பொழுதாக் கழிப்பரே நல்ல
நயமில் [2]அறிவின் அவர்.

தருமர்:—என்பது. பொன்னே கொடுத்தும்—பொன்னைக் கொடுத்தாலும்; புணர்தற்கு அரியாரை—வந்து சேருவதற்கு அரியவரை; கொன்னே—பயனின்றியே; தலைப்பட—வந்தெய்த; பெற்றிருந்தும்—; அன்னோ!—அய்யோ!; பயன் இல் பொழுது ஆ கழிப்பர்—பயன்படாமல் நாளை வீணே கழியாநிற்பர்; [அவர் ஆர் எனில்] [3]நல்ல நயம்இல் அறிவின் அவர்—நன்மை யெய்திய வீரபாகத்தையுடைய அறிவில்லாதவர் என்றவாறு.

கிடைத்தற்கரியபொருள் எய்துவதாயிருக்க அதற்கான முயற்சியாலே, அந்தப்பொருலளக் கைக்கொள்ளாததுபோலப் பெரியோரை வழிபடாது, தமது அறிவின்மையால் அவரை அவமதிப்பாகச் செய்(கை)யால் ஏதும் பயன்படாராய்க் கெடுவ ரென்பதாம்.

பதுமனார்:—பொன்னே கொடுத்தாலும் புணர்தற்கரியவரை ஒன்றுங் கொடாதே சேரப்பெற்றிருந்தும் அன்னோ! தமக்குப்

பா—ம்:—[1] 'தலைக்கூடப்—பதுமனார், விளக்கவுரை.

[2] 'அறிவில் அவர்'—பதுமனார்.

[3]குற்றமற்ற இன்பம் பொருந்துதலில்லாத அறிவினை யுடைய பேதையர் என்றுமாம்.

பயனில்லாத பொழுதாக நாள்களைக் கழிப்பர் மிக்க வீரமில்லாத வறிவினையுடையயார் என்றவாறு.

கொன்னே - ஒன்றுங் கொடாதே. அன்னோ—அய்யோ. பயனில் பொழுதாக் கழிப்பரே—அவருடனே கூடினபொழுதைப் பயனில் பொழுதாக நினைத்துக் கழிப்பர். நயம் (இல் அறிவில் அவர்)—அவர் கூட்டத்தானே பயனென்பதனை யறியாத வறிவினையுடையார். அவருடனே கூடாத பயனில் பொழுதாகத் தம் நாட்களைக் கழிப்ப ரென்றுமாம்.

விளக்க உரை:—என்பது. நல்ல நயன் இல் அறிவின் அவர்—நல்ல வீரமில்லாத வறிவினையுடையார்; பொன்னே கொடுத்தும்—பொன்னைக் கொடுத்தும்; புணர்தற்கு அரியாரை—வந்து எய்தற்கரியாரை; கொன்னே—பயலின்றியே; தலைக் கூடப் பெற்றிருந்தும்—வந்து எய்தப் பெற்றும்; அன்னோ! —அய்யோ!; பயன் இல் பொழுது ஆக்கழிப்பர்—பயனின்றியே நாளைக் கழியா நிற்பர்.

கொன்னே—ஒன்றுங்கொடாதே. பயனில்†..........என்றுமாம்.

மேற்கோள் பகுதி:—

தெய்வ:—"பொன்னே கொடுத்தும், என்பதனுள் 'அன்னோ' என்பது அருள்குறித்து நின்றது".

—தொல்.சொல்.இடை.சூ. 33.

குறிப்பு:—

'பொன்னே' என்பதன் ஏகாரம், உயர்வுசிறப்பு. கொடுத்தும், பெற்றிருந்தும் என்பவைகளின் உம்மைகளும் உயர்வு சிறப்புப் பொருளன. அன்னோ—ஓ, இரக்கப் பொருளுணர்த்தும்

†பதுமனார் உரையிலுள்ளதே.

இடைச்சொல். கழிப்பரே என்பதன் ஏகாரமும் அப்பொருளது. 'தலைக்கூட' என்புழித் 'தலை' என்பது தழிஉப சர்க்கம். கொன்னே என்பதன் ஏகாரம் இழிவு சிறப்போடு தேற்றப் பொருளதுமாம்.

(ட)

163. அவமதிப்பும் ஆன்ற மதிப்பும் இரண்டு
மிகைமக்க ளான்மதிக்கற் பால—நயமுணராக்
கையறியா மாக்கள் இழிப்பும் [1]எடுத்துரைப்பும்
வையார் வடித்த நூலார்.

தருமர்:- என்பது. அவமதிப்பும்—ஒருவரைத் தாழமதித்த லும்; ஆன்றமதிப்பும்—உயரமதித்தலும்; இரண்டும்—என்னுமிவ் விரண்டும்; [2]மிகை மக்களான்—பெரியோரால்; மதிக்கல் பால— மதிக்கும் பகுதியாம்; [அதுவல்லது] நயம் உணராகை அறியா— நயகுணமும் ஒழுக்கமு மில்லாத; மாக்கள்—அறிவில்லார்; இழிப்பும்—ஒருவரைத் தாழச்சொல்லுதலையும்; எடுத்துரைப்பும்- உயரச் சொல்லுதலையும்; வடித்த நூலார்—ஆராய்ந்த வறிவினை யுடையவர்கள்; வையார்—ஒன்றாக வெண்ணார்கள் என்றவாறு.

ஆதலால் ஒருவர் பெரியோரால் நல்லோரென மதிக்கப்படுவ (தி)ம்மை மறுமைக்குறுதியாம். அதனால் அவரைப் பிழையாது அவர்வழி நின்று ஒழுகுதல் வேண்டுமென்பதாம்.

பதுமனார்:— ஒருவரைத் தாழ்வாக மதித்தலும் உயர்வாக மதித்தலும் இவ்விரண்டு மேன்மக்களால் மதிக்கத்தக்கன நயமுணராது நல்ல ஒழுக்கமுமறியாத மக்கள் பழிக்கும் பழிப்பும் எடுத்துப்பகர்தலும் கோதற்ற நூலறிவார் மனத்தின்கண்

பா-ம்:-[1]'எடுத்தத்தும்' — பதுமனார், விளக்கவுரை.

[2]மிகைமக்கள்—குடி, கல்வி, யறிவு, ஒழுக்கம் என்ற இவைகள் மிகுந்த மக்கள்; மேன்மக்கள்.

ஒன்றாகக் கருதா ரென்றவாறு.

ஆன்ற—இயன்ற. மிகை மக்கள்—மேன்மக்கள்.

விளக்க உரை:— என்பது. அவமதிப்பும்—ஒருவரைத் தாழ மதித்தலும்; ஆன்ற மதிப்பும்—உயர மதித்தலும்; இரண்டும்—இவை யிரண்டும்; மிகை மக்களான்—பெரியோரால்; மதிக்கல் பால—மதிக்கும் பகுதி யுடைத்து; [1]நயம் உணரா—நயமறியாராய; [2]கையறியா மாக்கள்—ஒழுக்கமிலரான மனிதர்; இழிப்பும்—ஒருவரைத் தாழச் சொல்லுதலும்; எடுத்து ஏத்தும்—ஒருவரை உயரச்சொல்லி யேத்துதலும்; வடித்த நூலார்—ஆராய்ந்த வறிவினை யுடையார்; [3]வையார்—ஒன்றாக வையார் என்றவாறு.

பெரியோர் மனத்துக்கு வர நின்று மதிப்புண்டாக வேண்டுமென்பதாம். ஆன்ற—இயன்ற. மிகை மக்கள்—மேன் மக்கள். கையறியா—ஒழுக்க மில்லாத.

ஒப்புமைப் பகுதி:—

"நன்றேகாண், மானமுடையார் மதிப்பு".

—நாலடி. 294.

"நாயின்மேலேறி வையாளி விட்டாலென்ன, விழ்ந்தாலென்ன"

—பழமொழி.

குறிப்பு:-

ஆன்ற—இறந்தகாலப் பெயரெச்சம்; ஆல் பகுதி. இது அகல் என்பதன் மரூஉ; சால் என்பதன் மரூஉ என்றும் கொள்வர். மிகை-ஐ விகுதிப் பெற்ற தொழிற்பெயர். மதிப்பு—

---

[1]பிறர்குணச்செயல்களின் நன்மையை யுணரமாட்டாத என்றுமாம்

[2]கையறியா—மதிக்கும் முறைமை உணராத.

[3]வையார்-ஒருபொருளாக வைத்து எண்ணார்.

—தொழிற்பெயர். உணரா, அறியா—எதிர்மறைப் பெயரெச்சங்கள், இவ்விரண்டும் அடுக்கி மாக்கள் என்னும் வினை முதல் கொண்டன; 'மூவா முதலா உலகம் எனச் சிந்தாமணியிலும் வருதல் காண்க.

(ரு).

164. விரிநிற நாகம் விடருள தேனும்
உருமின் கடுஞ்சினஞ் சேணின்றும் உட்கும்
அருமை யுடைய அரண்சேர்ந்தும் உய்யார்
பெருமை யுடையார் செறின்.

தருமர்:- என்பது. [1]விரிநிறம் நாகம்—விளங்காநின்ற நிறத்தையுடைய நாகமானது; [2]விடர் உளதேனும்—தாழ்ந்த வளையிலே கிடந்தாலும்; உருமின் கடும் சினம்—உருமினுடைய சினமாகிய வொலி; சேண் நின்றும்—வானிலே நின்று அதிர்ப்பினும்; உட்கும்—அதற்கு அஞ்சும்; [அதுபோல] பெருமை யுடையார் செறின்—பெருமைக் குணமுடையார் கோபித்த காலத்து; அருமையுடைய அரண் சேர்ந்தும்—அருமையாகச் செய்யப்பட்ட அரணுக்குள்ளே இருந்தாலும்; உய்யார்—உய்யக்கடவரல்ல என்றவாறு.

இதுவும் எல்லா நற்குணங்களுமுடைய வேற்று வேந்தரைப் பிழைத்ததாம்.

பதுமனார்:-விரிநிறநாகம் முழையின் கண்ணுளதாயினும் உருமேற்றின் மிக்கசினஞ் சேய்த்ததாயினும் அதனை யஞ்சும். அதுபோல, அருமையுடைத்தாகிய அரணைச் சேர்ந்தாராயினும் கயவர் பெருமையுடையார் வெகுளியிற் பிழையார் என்றவாறு.

விடர்—முழை. உட்கும்—அஞ்சும்.

---

[1]படம் விரிக்கின்ற ஒளியையுடைய பாம்பானது என்றுமாம்.

[2]விடர்—வெடிப்பு நிலம்.

விளக்க உரை!— என்பது. விரி நிறம் நாகம்—மிக்க நிறத்தையுடைய பாம்பு; விடர் உளதேனும்—பாதாளத்துக் குள்ளே கிடப்பினும்; [1]உருமின் கடும் சினம்—உருமின் மிக்க சினம்; சேண் நின்றும் உட்கும்—வானிலேநின்று அதிர்ப்பினும் அஞ்சும்; [அதுபோல] பெருமையுடையார் செறின்—பெருமைக் குணமுடையவர் கோபித்தால்; அருமையுடைய [2]அரண் சேர்ந்தும்—அருமையுடைத்தாகிய அரணைச் சேர்ந்தும்; உய்யார் பிழைக்கமாட்டார் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

"இறந்தமைந்த சார்புடையார் ஆயினும் உய்யார்
சிறந்தமைந்த சீரார் செறின்".

—குறள். 900.

"பாம்பு இடிக்கு அஞ்சும்' என்பது:—

கடுவொடுங் கெயிற்ற அரவுத்தலை பனிப்ப
இடியென முழங்கு முரசின்"

—புறம். 17. 38—39.

"நஞ்சுடை வாலெயிற்று ஐந்தலை சுமந்த
வேக வெந்திற னாகம் புக்கென
விசும்புதீப் பிறப்பத் திருகிப் பசுங்கொடிப்
பெருமலை விடரகத்து உருமெறிந் தாங்கு".

—புறம். 37. 1—4.

"அஞ்சுவரு மரபின் வெஞ்சினப் புயலேறு
அணங்குடை யரவி னருந்தலை துமிய
நின்றுகாண் பன்ன நீண்மலை மிளிரக்
குன்றுதூ வெறியு மரவம் போல".

—புறம். 211. 1—4.

[1]இடியினுடைய மிக்க கோபமாகிய வொலி.

[2]அரண்சேர்ந்தும்—காவலாகிய இடத்தைச் சேர்ந்தும்.

"பானாட்
பாம்புடை விடர வோங்குமலை மிளிர
உருமுச்சிவந் தெறியும் பொழுது"

—நற்.104.

"ஏறோடு
அருமணி நாக [1]மனுங்கச் செருமன்னர்
சேனைபோற் செல்லு மழை".

—கார் நாற்பது.20.

"முதிர்மணி நாக மனுங்க முழங்கி"

—திணைமொழியைம்பது.

"உருமுற்ற பாம்பின்......அஞ்சி"

—சீவக.பதிகம்.27.

குறிப்பு:-

ஒருவர்க்குச் சினம் பிறந்தபோது இரைந்து பேசல் இயல்பு. இவ்வியல்பை இடிக்குமேற்றி இடியிடித்தலை கடுஞ்சினம் என்றது இலக்கணை. நிற்க என்பது நின்று எனத் திரிந்து வந்தது. அரண் பண்பாகு பெயராய்க் காவல் மிகுந்த இடத்தைக் குறித்தது. அது குறிப்பால் காவல் செய்யும் அரசரை உணர்த்தி நின்றது. இலக்கணை—ஒரு பொருளின் இலக்கணத்தை மற்றொரு பொருளுக்குத் தந்துரைப்பது.

(சு).

165. எம்மை அறிந்திலிர் எம்போல்வார் இல்லென்று
தம்மைத்தாங் கொள்வது கோளன்று—தம்மை
அரியரா நோக்கி அறனறியுஞ் சான்றோர்
பெரியராக் கொள்வது கோள்.

தருமர்:— என்பது. [ஒருவர்] [2]எம்மை அறிந்திலிர் –;

[1]அனுங்க—வருந்தும் வகை.

[2]எம்முடைய கல்வியறிவு முதலிய சிறப்பை நீர் அறியவில்லை என்பாம்.

எம்போல்வார் இல்-எம்மைப் போல்வார் ஒருவருமில்லை; என்று —என; தம்மைத் தாம் கொள்வது—பிறருடன் தம்மைத்தாமே உயர்த்திச் சொல்லிக் கொள்வது; கோள் அன்று—கோட்பாடன்று; அறன் அறியும் சான்றோர்—அறத்தினை யறியும் அமைந்தோ ரானவர்கள்; தம்மை-; அரியர் ஆ நோக்கி-அரியராகப் பார்த்து; பெரியர் ஆ கொள்வது—இவர் பெரியவரென்று மதிக்கப் பண்ணிக் கொள்ளுவதே; கோள்—கோட்பாடு என்றவாறு.

எனவே பெரியாரைப் பிழையாது அவர்வழி நின்று ஒழுகுதல்செய்து, அவரால் நல்லாரென மதிக்கப்படுவதே பயன் படுதலாம் என்பதாயிற்று.

பதுமனார்:— எம்மையுள்ள வண்மை அறிந்திலிர்; எம் போல்வார் இல்லென்று தம்மைத்தாமே மதித்துக்கொள்வது கோளன்று. தம்மைப் பெறுதற்கரியராகப் பார்த்துப் பெரிய ராக அறனறியுஞ் சான்றோர் மதித்துக்கொள்வது கோளென்ற வாறு.

அரியரா நோக்கி—பெறுதற்கரியராக மதித்து.

விளக்க உரை:— என்பது, எம்மை அறிந்திலிர்—எம்மை அறிந்தாரில்லை; எம்போல்வார் இல்—எம்மைப்போல்வா ரில்லை; என்று—காணுமென்று; தம்மைத்தாம் கொள்வது— தம்மைத் தாமே உயரச் சொல்லுவது; கோள் அன்று—கோட்பா டன்று; அறன் அறியும் சான்றோர்—அறத்தினை அறியும் அமைந் தோர்; தம்மை—; அறியர் ஆ நோக்கி—அரியராகப் பார்த்து; பெரியர் ஆ கொள்வது—பெரியாராக மதித்துக் கொள்வதே; கோள் கோட்பாடு என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

''கற்றனவும் கண்ணகன்ற சாயலும் இற்பிறப்பும்
பக்கத்தார் பாராட்டப் பாடெய்தும் தானுரைப்பின்

மைத்துனர் பல்கி மருந்தில் தணியாத
பித்தனென் றெள்ளப் படும்''.

—நாலடி. 340.

''வியவற்க எஞ்ஞான்றும் தன்னை நயவற்க
நன்றி பயவா வினை''.

—குறள். 439.

''அமைந்தாங் கொழுகான் அளவறியான் தன்னை
வியந்தான் விரைந்து கொடும்''.

—குறள், 474.

''தன்னை வியப்பிப்பான் தற்புகழ்தல் தீச்சுடர்
நன்னீர் சொரிந்து வளர்த்தற்றால்—தன்னை
வியவாமை யன்றே வியப்பாவ தின்பம்
நயவாமை அன்றே நலம்''.

—நீதிநெறி. 19.

''தான் தற்புகழ்தல் தகுதி அன்று''.

—நன். 52.

''கன்று மினிய பொருள் பலவும் காதல் பகைவர் அறியாமே
நன்று நுகர்க நினைஎன்றும் நன்கு மதித்து வியவற்க
நன்றி பயவா வினையினையும் நண்ணும் மதத்தான்
முடியற்க
வென்றி விளங்கப் புகழ்விளங்க விழுப்பம் விளங்க
வேண்டிடினே''.

—விநா. அரசி. 54.

''தன்னைப் புகழ்வானும் சாணேறி நிற்பானும்
பொன்னைப் புதைத்து வைத்துப் போவானும் பேய்''.

—பழமொழி.

குறிப்பு:—

எம்—செருக்குப்பற்றி வந்த தன்மைப் பன்மை. கோள்—முதனிலை திரிந்த தொழிற்பெயர்; 'கொள்' என்னும் பகுதி புடைபெயர்ச்சி விகுதியாகிய 'தல்' விகுதி புணர்ந்து கெட்ட

மாத்திரையில் முதனீண்டு நின்றது. அறிந்திலிர்—முன்னிலை பன்மை எதிர்மறை இறந்த கால வினைமுற்று.

ஆக என்பதன் ஈறு தொக்கது.

(ரு).

166. நளிகடல் தண்சேர்ப்ப! நாணிழற் போல
விளியுஞ் சிறியவர் கேண்மை—விளிவின்றி
அல்கு நிழற்போல் அகன்றகன் றோடுமே
தொல்புக ழாளர் தொடர்பு.

தருமர்:— என்பது. நளிகடல் தண்சேர்ப்ப! — செறிந்த கடற்சேர்ப்பை யுடையவனே!; சிறியவர் கேண்மை—சிறியாருடன் கொண்ட நட்பானது; [1]நாள் நிழல் போல—முற்பகலினிழற்போல; விளியும்—அடைவிலே குறைந்துவரும்; தொல் புகழாளர் தொடர்பு—பழையதாகியே தொடர்ந்த புகழினையுடைய பெரியோருடன் கொண்ட நட்பு; விளிவு இன்றி—கேடின்றியே; [2]அல்கு நிழல் போல்—பிற்பகல் நிழல்போல; அகன்று அகன்று ஓடுமே—அடைவிலே வளர்ந்துவரும் என்றவாறு.

பெரியோருடன் கொண்ட நட்புப் பயன்தருமென்பது தோன்றப் பெரியாரைப் பிழையாமையிற் சேர்த்து, அவரைப் பிழைத்தல் ஆகாதென அறிவுறுத்தியவாறு.

பதுமனார்:—பெருங்கடல் தண்சேர்ப்பனே! முன்பகல் நிழல் போலச் சிறியவர்கொண்ட கேண்மை நாடோறுந் தேயும் தொல்புகழாளர் தொடர்பு தேய்வின்றியே பின்பகல் நிழல்

---

[1]நாள் நிழல் போல—உதய காலத்து நிழல்போல.

[2]அல்கு நிழல் போல்—பொழுது சுருங்குதலாலுண்டாகும் நிழல் நீளுதல் போல, அல்கு நிழல் என்பதற்கு அடியில் தங்கும் உச்சிக்காலத்து நிழல் போல என உரைகொள்வர் சிலர். அல்குதல்—தங்குதல்.

போல வளர்ந்து செல்லும் என்றவாறு.

நாள் நிழல்—முன்பகல் நிழல். அல்கு நிழல்—பின் பகல் நிழல்.

விளக்க உரை:— என்பது. நளிகடல் தண்சேர்ப்ப!—செறிந்த கடற்சேர்ப்பையுடைய மலைநாடனே!; சிறியவர் கேண்மை—சிறியாருடனே கொண்டநட்பு; நாள் நிழல் போல—முற்பகல் நிழற்போல; விளியும்—குறைந்து வரும்; தொல் புகழாளர் தொடர்பு—பழைய புகழ்ச்சியுடையாருடனே கொண்ட தொடர்ச்சி; விளிவு இன்றி—கேடின்றி; அல்கு நிழல் போல்—பிற்பகல் நிழற்போல; அகன்று அகன்று ஓடுமே—வளர்ந்து செல்லும் என்றவாறு.

பெரியாருடன் கொண்ட தொடர்ச்சி மேன்மேலும் இனிமையுண்டாய் வளருமாதலில் அவருடனே கொண்ட தொடர்ச்சி, விடலாகா தென்பது தோன்றப் பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரத்திற் சேர்க்கப்பட்டது.

ஒப்புமைப் பகுதி:—

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையா நந்தும்—வரிசையால்
வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே
தானே சிறியார் தொடர்பு".

—நாலடி. 125.

"நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப்
பின்னீர பேதையார் நட்பு".

—குறள். 782.

குறிப்பு:—

நளி—செறிவை யுணர்த்தும் உரிச்சொல்; "நளியென் கிளவி செறிவு மாகும்" என்பது தொல்காப்பியம் (உரி. சூ. 25).

"தடவுங் கயவு நளியும் பெருமை" என்ற தொல்காப்பியங் கொண்டு நளி என்பதற்கு பெருமை எனக்கொள்ளலுமாம். தருமரும், விளக்கவுரைகாரரும், 'நளிகடல்' என்பதற்கு செறிந்த கடல் என்றதும், பதுமனார் பெருங்கடல் என்றதும் காண்க. அல்குதல்—சுருங்குதல்; ஈண்டு பகற்பொழுது சுருங்குதற்கு ஆயிற்று. அகன்று அகன்று—மிகுதிபற்றிய அடுக்கு. உவமையின் உறுப்புகளாகிய உவமை, பொருள், பொதுத்தன்மை, உவமையுருபு என்ற நான்கும் அமைந்திருத்தலான் இச்செய்யுள் முற்றுவமையணி.

(சூ).

167. மன்னர் திருவு மகளிர் எழினலமுந்
துன்னியார் துய்ப்பர் தகல்வேண்டா—துன்னிக்
குழைகொண்டு தாழ்ந்த குளிர்மர மெல்லாம்
உழைதங்கட் சென்றார்க்கு ஒருங்கு.

தருமர்:— என்பது. மன்னர் திருவும்—அரசருடைய செல்வமும்; மகளிர் [1]எழில் நலமும்—மகளிருடைய அழகினது நலமும்; [2]துன்னியார்—சேர்ந்தவர்கள்; துய்ப்பர்—அனுபவிப்பார்; தகல்வேண்டா—அவருக்கு வயமானபேரே அனுபவிக்க வேண்டுமென்பது வேண்டாம்; [அஃதெங்ஙபோலவெனில்] துன்னி—நெருங்கிய இலைகளையுடைத்தாய்; [3]குழைகொண்டு—(தளிரைக் கொண்டு); தாழ்ந்த குளிர் மரமெல்லாம்—கவிழ்ந்த நிழலையுங் குளிர்ச்சியுமுடைய மரங்களெல்லாம்; தங்கண் சென்றார்க்கு—தம்மிடத்துச் சென்றடைந்தபேர்க்கு; ஒருங்கு உழை—வேற்றுமையன்றி நிழலைக் கொடுப்பதுபோலும் என்றவாறு.

மரம் வைத்தார்க்கே நிழலைக் கொடுக்க வேண்டுமன்றிப் பிறர்க்கு நிழலைக் கொடுக்கலாகாதென்பது, மரத்தினிடத்திலே இல்லையே. அதுபோல அரசரைச் சேர்ந்தவரும் அவர்

---

[1]எழில் நலம்—வளர்ச்சியோடு கூடிய அழகு.

[2]துன்னியார்—நெருங்கி யிருப்பவர்கள்.

[3]குழை—தளிர்.

செல்வத்தைத் தாமும் அனுபவிப்பார். ஆதலால் எல்லா நற் குணங்களுமுடைய அரசரைப் பிழையாது அவரை வழிபடிற் பயன்படுவர்; அவரைப் பிழைப்பிற் கெடுவரென்பதாம்.

பதுமனார்:— அரசர் செல்வத்தையும், மகளிர் எழில் நலத் தையும் அவரை யடைந்தார் நுகர்வர்; அவர் தகுதியுடைய ராக வேண்டா. நெருங்கிக் குழைகொண்டு தாழ்ந்த குளிர் மரங்களெல்லாந் தம்மாட்டுச் சென்றார்க்கு ஒக்கப் [1]புகலிடமா வது போல என்றவாறு.

தகல் வேண்டா—அதற்குத் தகுதியுடையராக வேண்டா உழை—இடமாம்.

விளக்க உரை:— என்பது. மன்னர் திருவும்—அரசர் செல்வ மும்; மகளிர் எழில் நலமும்—மகளிருடைய தோற்றப் பொலிவு நலமும்; துன்னியார் துய்ப்பர்—சேர்ந்தவர்கள் அனுபவிப்பர்; தகல் வேண்டா—அவர் தகுதியுடையராக வேண்டாம்; [அஃதென்போல வென்னில்] துன்னி—இலைச் செறிவை யுடையதாய்; குழைகொண்டு—(தளிரைக் கொண்டு) தாழ்ந்த குளிர் மரமெல்லாம்—கவிந்து குளிர்ந்த நிழலையுடைய மரங் களெல்லாம்; தங்கண் சென்றார்க்கு—அதனிடத்திலே சென்ற டைந்தவர்க்கெல்லாம்; ஒருங்கு உழை—வேற்றுமையற நிழ லைக் கொடுத்தாற்போலும் என்றவாறு.

'மன்னர் திருவும்' என்பது கொண்டு பெரியாரைச் சேர்ந்த வர்கள் இனிமையுறுவர் என்பதுதோன்ற, அவரைப் பிழையாது ஒழிக லென்பதாம்.

---

[1]புகலிடம்—புகலிடம் எமதாரும். —கம்.வன.24.

புகலிடம் பிறிதொன்றில்லை. —திருவாச.5-62.

ஒப்புமைப் பகுதி:—

''பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின்''.

—குறள்.216.

''அருஞ் சுரத்தின் மரம்போல அடைந்தார்களித்தல்
அவற் கியல்பு''.

—சீவக.3.நச்.உரை.

குறிப்பு:—

எழில்—இல் விகுதிபெற்ற தொழிற்பெயர். தகல்—அல் விகுதிபெற்ற தொழிற்பெயர். துன்னியார்—பல்லோர் படர்க்கை இறந்தகால வினைப்பெயர். இப்பாட்டில் எடுத்துக் காட்டுவமையணி, ஒப்புமைக் கூட்டவணி என்ற இரு அணிகளும் வந்திருத்தல் காண்க. ஒப்புமைக் கூட்டவணியாவது இரண்டு முதலிய பொருள்களை ஒருங்குகூட்டி ஒரு பொதுத் தன்மையின் முடிப்பது. 'மன்னர் திரு' 'மகளிர் எழில் நலம்' என இரண்டு பொருள்களையும் ஒருங்கு கூட்டித் துன்னியார் துய்ப்பர்' என்ற ஒரு பொதுத்தன்மையினுல் முடித்தது காண்க. (எ).

168. தெரியத் தெரியுந் தெரிவிலார் கண்ணும்
பிரியப் பெரும்படர்நோய் செய்யும்—பெரிய
உலவா இருங்கழிச் சேர்ப்ப! யார் மாட்டுங்
கலவாமை கோடி உறும்.

தருமர்:—என்பது. [1]பெரிய உலவா—பெரிதாகி வற்றாத; [2]இருங்கழிச் சேர்ப்ப!—மிகுந்தகழிச் சேர்ப்பை யுடையவனே!;

---

[1]பெருமையுடைய கெடாத என்றுமாம்.

[2]இருங்கழிச் சேர்ப்ப!—நெடிய கழிக்கரையையுடையவனே, சேர்ப்பன்—(நெய்தல் நிலத்தலைவன்).

[1]தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும்—தம்மறிவில்லாது ஒருவர் அறிவிப்ப அறிந்தும் அறிவில்லாதாராய் ஒழுகுவாரிடத்து; பிரிய—நட்புற்றுப் பின்பு பிரிந்தால்; [2]பெரும் படர்நோய் செய்யும்—மிக்க துன்பமாகிய நோயைச் செய்யும்; [ஆதலால்] யார் மாட்டும் கலவாமை—யாவரிடத்தும் நட்புக்கொள்ளாதது; கோடி உறும்—நட்புக்கொள்வதிலும் கோடிமடங்கு நன்றென்றவாறு.

அறிவில்லாதாரைச் சேர்ந்து பிரியினுந் துன்பமுறுமானால் பெரியோரைச் சேர்ந்து பிரியிற் றுன்பத்துக்குக் குறைவில்லையே. ஆதலால் பெரியோரைச் சேரிலவர் மனம்வர வொழுக வேண்டுமென்பது தோன்றக் 'கலவாமை கோடியுறும்' என்று குறிப்பாற் கூறியவாறு. அக்குறிப்பு ஏதெனில் சிறியோர் இணக்கம் போன்ற வொழுக்கந் தவிர்ந்து. பெரியோரைப் பிழையாது அவரை நட்புற்று அவர்வழி நின்று ஒழுகுதல் வேண்டுமென்பதாம்.

பதுமனார்:— [3]பெரிய உலவா விருங்கழிச் சேர்ப்பனே! விளங்க ஆராயும் ஆராய்ச்சியில்லாதார் மாட்டுங் கேண்மை கொண்டு பிரிந்தால் அவர்க்குப் பெரிய நினைவொடு வரும் நோயைப் பிரிவு செய்யும். ஆதலால், யார் மாட்டுங் கேண்மை கொண்டு கலவாமையே கோடி மடங்கு உறும் என்றவாறு.

தெரியத் தெரியுந் தெரிவிலார்—விளங்க வாராயும் ஆராய்ச்சி இல்லாதார். படர்—உள்ளல். உலவா விருங்கழி—தொலையாத பெருங்கழி.

விளக்க உரை:— என்பது. பெரிய உலவா—பெரியதாய

---

[1]உண்மைப்பொருள் விளம்பங்குடி ஆராயும் அறிவிலாரிடத்தினும் என்றுமாம்.

[2]பெரும்படர்நோய்—மிக்க நினைவிற் கேதுவான துன்பம்.

[3]பெரிய வற்றாத மிக்க கழிச் சேர்ப்பனே.

வற்றாத; இருங்கழிச் சேர்ப்ப!—மிக்க கழிச் சேர்ப்பை யுடையவனே!; தெரியத் தெரியும் தெரிவிலார் கண்ணும் —விளங்க ஆராயும் ஆராய்ச்சியில்லாதா ரிடத்தும்; பிரிய— பிரிந்தால்; பெரும்படர் நோய் செய்யும் மிக்க துன்பமாகிய நோயைச் செய்யும்; [ஆதலால்] யார் மாட்டும் கலவாமை— யாவரிடத்தும் சேர்ந்து நட்புக்கொள்ளாதது; கோடி உறும்— கோடி மடங்கு உறுதியை யுடைத்து என்றவாறு.

பெரியாரைச் சேர்ந்தவன் ஒருகாரணத்தைப்பற்றிப் பிரி தலும் அந்தப் பெரியாரைப் பிழைத்ததாம்.

படர்—உள்ளல். உலவாவிருங்கழி—தொலையாத பெருங்கழி.

ஒப்புமைப் பகுதி:—

‘‘மரீஇப் பலரோடு பன்னாள் முயங்கிப்
பொரீஇப் பொருள்தக்கார்க் கோடலே வேண்டும்
பரீஇ உயிர்செகுக்கும் பாம்பொடும் இன்னா
மரீஇஇப் பின்னைப் பிரிவு.

—நாலடி. 220.

‘‘பரா அரைப் புன்னை படுகடல்தண் சேர்ப்ப!
ஓராஅலும் ஒட்டலும் செய்பவோ? நல்ல
மருஉச் செய்(து) யார்மாட்டும் தங்கும் மனத்தார்
விராஅஅய்ச் செய்யாமை நன்று’’.

—நாலடி. 246.

‘‘விலங்கேயும் தம்மோடு உடனுறைதல் மேவும்
கலந்தாரைக் கைவிடுதல் ஒல்லா—இலங்கருவி
தாஅய் இழியு மலைநாட! இன்னாதே
பேஎயோ டானும் பிரிவு’’.

—பழ. 122.

இச்செய்யுளுடன் மாறுபடுவது:-
‘‘உணர உணரும் உணர்வுடையாரைப்
புணரப் புணருமாம் இன்பம்—புணரின்
தெரியத் தெரியும் தெரிவிலா தாரைப்
பிரியப் பிரியுமாம் நோய்’’.

—நாலடி. 247.

குறிப்பு:—

படர் என்பது ஓர் உரிச்சொல்; ''படரே உள்ளல் செலவு மாகும்'' என்ற தொல்காப்பியம் (சூ.340) காண்க. தெரிவிலார் கண்ணும் என்றதன் உம்மை இழிவு சிறப்பு. பிரிப—பிரியி னென்பதன் திரிபு. யார் மாட்டும் என்றதன் உம்மை முற்று. கோடி—மிகப் பல என்பதற்குக் காட்டிய ஓரெண்.

(அ).

169. கல்லாது போகிய நாளும் பெரியவர்கட்
செல்லாது வைகிய வைகலும்—ஒல்லை
கொடாஅது தொழிந்த பகலும் உரைப்பிற்
படாஅஅவாம் பண்புடையார் கண்.

தருமர்:—என்பது, உரைப்பில் சொல்லுங்காலத்து; கல்லாது போகிய நாளும்—கல்வியில் முயலாது கழிந்த நாளும்; [1]பெரியவர்கண் செல்லாது—பெரியோரிடத்துச் சென்று அவர் தன்மையின் ஒழுகாது; வைகிய வைகலும்—இருந்த நாளும்; ஒல்வ—இயன்றமாத்திரம் ஒருவற்கு ஒன்றை; கொடாது ஒழிந்த பகலும்—கொடாது கழிந்த நாளும் இவைகளெல்லாம்; [2]பண் புடையார் கண்—பண்புடையாரிடத்து; படாவாம்—உண்டா காவாம் என்றவாறு.

பெரியோரைச் சேர்வார்க்கு இந்தக் குணமெல்லாம் உண்டாகுமாதலால் அவரைப் பிழையாது, அவர் மனம்பெற வொழுகுவார் இனிமைபெறுவர் என்பதுதோன்ற அவரைப் 'பண்புடையார்' எனக் கூறினார்.

பதுமனார்:—நூல்களைக் கல்லாது கழிந்த நாள்களும்,

---

[1]பெரியவர்கண் செல்லாது வைகிய வைகல்— கேள்வியின் பொருட்டுப் பெரியோரிடத்துச் செல்லாது கழிந்த நாளும்.

[2]பண்புடையார்—நற்குண நற்செய்கை யுடையார்.

பெருங்குணத்தார் மாட்டுச் செல்லாது கழிந்த நாள்களும், தமக்கியன்றன கொடாதொழிந்த நாள்களும் உரைப்போமாயின் பண்புடையார்மாட்டு உளவாகா என்றவாறு.

படாவாம்—உளவாகாவாம்; கண்டாவாமென்றுமாம்.

விளக்க உரை:—என்பது. உரைப்பில்—சொல்லுங் காலத்து; கல்லாது; போகிய நாளும்—கல்லாமற் கழிந்தநாளும்; பெரியவர் கண் செல்லாது—பெரியோரிடத்துச் சென்று சேராமல்; வைகிய வைகலும்—சென்ற நாளும்; ஒவ்வ—இயன்ற மருவாதி ஒருவற்கு ஒன்றை; கொடாதொழிந்த பகலும்—கொடாதே கழிந்த நாளும்; பண்புடையார்கண்—பண்புடையாரிடத்து; படாவாம்—இவை உண்டாகா என்றவாறு.

பெரியாரை அரிதாகச் சென்று சேர்தலும், பின்பு அவரை ஒரு காரணத்தைப்பற்றிப் பிழையாமையும் பண்புடையார்க்கு உண்டென்பதாம்.

ஒப்புமைப் பகுதி:—

"கல்லாக் கழிப்பர் தலையாயார்".

—நாலடி. 366.

குறிப்பு:—

போகிய, வைகிய, ஒழிந்த என்பன கழிந்த என்னும் பொருளைக் குறித்தன. நாளும், வைகலும், பகலும் என்பனவும் ஒரு பொருளன. ஆகவே இது பொருட்பின் வருநிலையணி. 'கல்லாது போகிய நாள், பெரியவர்கண் செல்லாது வைகிய வைகல், ஒல்லை கொடாதொழிந்த பகல்' என்ற இம்மூன்று பொருளையும் 'படாவாம்' என்ற வினையினான் முடித்தது 'கடைநிலைத் தொழில் தீவகவணி' அறிவை விளக்குவதனான் கல்வியை முன்னும், அதனை மேன்மேலும் வளர்த்து உறுதிபடுத்துவது

கேள்வியாதலின் அதனைப் பின்னும், இவற்றினாலாகிய பயன் அறமாதலின் ஈற்றில் ஈகையுமாக முறையே மூன்றையும் வைத்தார்.

பண்புடையார் தம்முடைய நாட்களைக் கற்றலிலும், கேட்டலிலும், இரந்தார்க்கு ஈதலுமாகக் கழிப்பர் என்பதாம்.

(கூ).

170. பெரியார் பெருமை சிறுதகைமை ஒன்றிற்கு
உரியார் உரிமை அடக்கம்—தெரியுங்கால்
செல்வ முடையாருஞ் செல்வரே தற்சேர்ந்தார்
அல்லல் களைப வெனின்.

இ-ள்:— என்பது. தெரியுங்கால் — விசாரிக்கும்போது; பெரியார் பெருமை — பெரியாருக்குப் பெருமையாவது; சிறு தகைமை—தாம் சிறியவரைப்போல் அமைந்தொழுகுந் தகுதியுடைமை; [1]ஒன்றிற்கு உரியார் உரிமை — ஒருவித்தைக்கு உரியவற்கு உரிமையாவது; அடக்கம்—; செல்வமுடையாரும்—; தன்சேர்ந்தார்—தம்மை யடைந்தாருடைய; அல்லல் துன்பங்களை; களைபவெனின்—நீக்குவராயின்; செல்வரே—செல்வரே யாவர் என்றவாறு.

அடக்கமாவது பிறர் தன்னை வியந்துரைக்கத் தாழ்ந்தடங்கி யிருத்தல்.

பெரியோரைச் சேர்ந்தவர்க்குச் செல்வம், கல்வி, பெருமை முதலானவை யெய்தும். இவை உண்டானதனால் ஆங்காரியாகாமல் அதற்கேற்புடைத்தாய அமைந்த வொழுக்கமுண்டாம்.

---

[1]சிறுதகைமை — தலைவணக்கம்; 'பெரும்பூட் சிறுதகை' என்றதுபோல. (புறப். வெண். மாலை. 8. 24).

[2]ஒன்றிற்கு—கல்வி, செல்வம், ஆண்மை முதலியவற்றின் யாதாயினும் ஒன்றற்கு; பரம்பொருளுக்கு எனலுமாம்.

அதனால் பெரியோரைப் பிழையாதொழுக வேண்டு மென்பதாம்.

பதுமனார்:— பெரியார்க்குப் பெருமையாது பணிந் தொழுகுதல். ஒன்றின்கண் தெள்ளியாரது கேண்மையாவது அடங்கி ஒழுகுதல். ஆராயுங்காற் செல்வமுடையாரும் தம்மை அடைந்தாரது வறுமையை நீக்குவராயின் செல்வராவர் என்றவாறு.

சிறுதகைமை—பணிந்தொழுகல்.

விளக்க உரை:— என்பது. தெரியுங்கால்—ஆராயுங்காலத்து; பெரியார் பெருமை — பெரியார்க்குப் பெருமையாவது; சிறு தகைமை—சிறிய தகுதியாகிய பணிந்தொழுகுதல்; ஒன்றிற்கு உரியார் உரிமை—ஒருவித்தைக்கு உரியவனுக்கு உரிமையாவது; அடக்கம்—பிறர் பாராட்டத் தானடங்கி யிருத்தல்; செல்வமுடை யாரும்—; தன் சேர்ந்தார்—தம்மை யடைந்தவருடைய; அல்லல் —துன்பங்களை; களைப வெனின்—நீக்குவராயின்; செல்வரே— செல்வராவர் என்றவாறு.

இது பெரியாரைப் பிழையாமையானது எப்படி என்னில் பெரியோர்க்கு முறைமையாவது, தம்மை அடைந்தவர்களை இனிமை உண்டாகக் கொண்டு போதலே; அவர் பிழையாரென்பது கொண்டு பெரியாரைப் பிழையாமை என்னும் அதிகாரத்திற் சேர்க்கப்பட்டது.

ஒப்புமைப் பகுதி:-

'ஒன்றிற்கு....அடக்கம்':—

''கல்வி யுடைமை பொருளுடைமை யென்றிரண்டு
செல்வமுஞ் செல்வ மெனப்படும்—இல்லார்
குறையிரந்து தம்முன்னர் நிற்பபோற் றாமுந்
தலைவணங்கித் தாழப் பெறின்''.

—நீதிநெறி. 16.

'தெரியுங்கால் செல்வம் ...னின்':—

"தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு".

—குறள் .212.

(ய).

---

18. [1]நல்லினஞ் சேர்தல்.

தருமர்:—அஃதாவது யாவரையுந் தமக்குச் சிறந்தவர் களைப்போல நோக்கி அருளுடையராய்த்தம்மை அடைந் தோர்க்கு ஒருதுன்பம்வரில், அது தமக்கு வந்த துன்பமாகக் கருதி அத்துன்பத்தை விரைவில் நீக்கி, அவர் தமக்கு ஒரு பிழை செய்தாலும் தம்முடைய உறுப்புக்கள் தமக்கொரு வருத்தஞ் செய்ததுபோல வெண்ணி, மற்றுமவரைப் பரிகரிப்பதும் இது வன்றியும் நற்குணங்கள் பலவுமுடையவரை ஆராய்ந்து அவ ருடன் நட்புச் செய்தலாம்.

பதுமனார்:—அஃதாவது உலகத்து நல்லோரென்று வழங்குஞ்சொல் இடையீடுபடாது அடிப்பட ஒழுகித், தமக்குத் தீங்குவரின் அதுதீருந்திறன் நோக்காது வினைப்பய னென்று ஆற்றும் அறிவினராயினும், பிறர்க்கு ஒருதீங்கு வரக் காணின் அவரினுந் தாம் அதற்கு நொந்துற்றுத் தம்முயிர், உறுப்பு, பொருள் போவதாயினும் அது தீர்க்கமுயலும் நல்லோர் தமக்கு இனமாகும்படி சேர்தல்.

விளக்க உரை:—அஃதாவது யாவரையுந் தமக்குச் சிறந்தவர்களைப்போல நோக்கி அருளுடையராய்த், தம்மை அடைந்தவர்களுக்கு ஒரு தீங்குவரின் தமக்கொரு தீங்கு வந்தது

பா-ம்:—[1]'நல்லிணக்கஞ் சேர்தல்'—தருமர்.

போல விரைந்து நீக்கி, அவர் தமக்கொரு பிழை செய்தாலும் தம்முடைய உறுப்புக்கள் தம்மை வருத்தஞ் செய்ததுபோலக் கண்டு, மற்றுஞ் சொல்லப்பட்ட நற்குணங்கள் பலவுமுடைய வரை ஆராய்ந்து நட்புச் செய்த லென்பதாம்.

குறிப்பு:—

திருக்குறளின்கண் 'பெரியாரைத் துணைக்கோடல்' என்ற அதிகாரமும் அதற்கடுத்து 'சிற்றினஞ் சேராமை' என்ற அதிகாரமும் வகுக்கப்பட்டிருத்தல் காண்க.

'பெரியாரைத் துணைக்கோடல்':—

பரிமே:—அஃதாவது மூவிருகுற்றமும் முறைமையின் கடிதலின் காவற்சாகாடு [1]உகைத்தற்கு உரியனாய அரசன், தீ நெறிவிலக்கி நன்னெறிச் செலுத்தும் பேரறிவுடையாரைத் தனக்குத் துணையாகக் கோடல். அதிகார முறைமையும் இதனானே விளங்கும். பேரறிவுடையராவார் அரசர்க்கும் அங்கங்கட்கும் மானுடத் தெய்வக் குற்றங்கள் வாராமல்காத்தற்கு உரிய அமைச்சர், புரோகிதர்.

—குறள். அதி. 45.

'சிற்றினஞ் சேராமை':—

பரிமே —அஃதாவது சிறிய இனத்தைப் பொருந்தாமை சிறிய இனமாவது [2]'நல்லதன் நலனும் தீயதன் தீமையும் இல்லென்போரும்' விடரும் தூர்த்தரும் நடரும் உள்ளிட்ட குழு. அறிவைத் திரித்து இருமையும் கெடுக்கும் இயல்பிற்றாய அதனைப் பொருந்தின் பெரியாரைத் துணைக்கோடல் பயனின்று என்பது உணர்த்தற்கு இஃது அதன்பின் வைக்கப்பட்டது.

—குறள். அதி. 46.

சிற்றினஞ்சேராமை என்ற அதிகாரத்தான் அதற்கு மறு தலையான நல்லினஞ்சேர்தலை வலியுறுத்தினமை காண்க.

---

[1]உகைத்தல்—செலுத்துதல்.

[2]புறம். 29:11.

171. அறியாப் பருவத்து அடங்காரோடு ஒன்றி
நெறியல்ல செய்தொழுகி அவ்வு(ம்)—நெறியறிந்த
நற்சார்வு சாரக் கெடுமே வெயின்முறுகப்
புற்பனிப் பற்றுவிட் டாங்கு.

தருமர்:— என்பது. [1]அறியாப் பருவத்து—புத்தியறியாத காலத்தில்; அடங்காரோடு ஒன்றி — அடக்கமில்லாதாருடனே இணங்கி; நெறியல்ல—நல்ல நெறியில்லாத பாவங்களை; செய்து ஒழுகியவ்வும்—செய் தொழுகியதும்; நெறி அறிந்த—நன்னெறிகளை யறிந்த; [2]நல்சார்வு சார—நல்லாரைச் சேரில்; கெடுமே-கெட்டுப்போம்; [அஃது எதன்போலவென்னில்] வெயில் முறுக—வெயில் மிகுந்தோறும்; புல்பனி—புல்லின்மேற் பற்றியிருந்த பனிநீரானது; பற்றுவிட்டு ஆங்கு—அதனை விட்டொழிந்தாற் போல என்றவாறு.

எனவே நல்லினத்தைச் சேர்ந்தால் அவர், இவன் அறி வின்மையாற் செய்யுந் தீநெறிகளைத் தவிரும்படி அறிவுறுத்தித் தமதுநெறியின் ஒழுகப் பண்ணுவராதலால், இவனுக்குப் பாவம் புகாதென்பதாம்.

பதுமனார்:— அறியாக் காலத்து அடக்க மில்லாரோடு இணங்கி நெறியில்லாதென செய்தொழுகிய பாவங்களும், வெயில் முறுகப் புல்லைப் பனிப்பற்று விட்டாற்போல நெறியறிந்த [3]சார்வினைச் சாரவே கெடும் என்றவாறு.

அவ்வும்—அவையும்.

விளக்க உரை:— என்பது. அறியாப் பருவத்து—

---

[1]ஆவன ஆகாதன பகுத்தறியலாகாத இளமைப்பருவத்தில் என்றுமாம்.

[2]நல்சார்வு சார—நல்லினமானது தன்னைச் சார்வதினால் எனலுமாம்.

[3]நல்லோர்களை.

அறியாத காலத்து; அடங்காரோடு ஒன்றி—அடக்கமில்லாத ருடனே கூடி; நெறி அல்ல—நெறியல்லாதவைகளை; செய்து ஒழுகியவ்வும்—செய்தொழுகிய பாவங்களும்; நெறியறிந்த—நல்லவழிகளை யறிந்த; நல்சார்வு சார-நல்ல பேரைச் சாரவே; கெடுமே—கெட்டுப்போம்; [அஃது எதன்போல வென்னில்] வெயில் முறுக—வெயில் மிகுந்தோறும்; புல்—புல்லை; பனிப் பற்று—; விட்டு ஆங்கு—விட்டாற் போலும் என்றவாறு.

அவ்வும்—அவையும்.

குறிப்பு:-

ஒழுகியவ்வும்-வகரமெய் தொகுத்தல் விகாரத்தான் வந்தது சார்வு—தொழிலாகு பெயர். பற்று—முதனிலைத் தொழிற் பெயர். இச்செய்யுளான் நல்லினஞ் சேர்தலின் பயன் கூறப் பட்டது. "நல்லினத்தி னூங்குந் துணை இல்லை தீ'இனத்தின் அல்லற் படுப்பதூஉம் இல்" என்ற திருக்குறளும் 460 காண்க.

(க).

172. அறிமின் அறநெறி அஞ்சுமின் கூற்றம்
பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்சம்
வெறுமின் வினைதீயார் கேண்மைஎஞ் ஞான்றும்
பெறுமின் பெரியார்வாய்ச் சொல்.

தருமர்:— என்பது. அறம்—தன்மத்தினுடைய; நெறி—வழியை; அறமின் — அறியுங்கள்; கூற்றம் கூற்றினது வஞ்சத்தை; அஞ்சுமின்—அஞ்சுங்கள்; பிறர் கடுஞ்சொல்—பிறர் சொல்லுங் கடுஞ் சொற்களை; பொறுமின் — பொறுத்துக் கொள்ளுங்கள்; வஞ்சம்—; போற்றுமின்—வஞ்சம் வராதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள்; [1]வினைதீயார்—தீயகுணமுடைய

---

[1]செயலில் தீயார் என்றுமாம்.

யாரை; கேண்மை—உறவு பண்ணுவதை; வெறுமின்—வெறுங்கள்; எஞ்ஞான்றும்—எப்பொழுதும்; பெரியார் வாய்ச் சொல்—பெரியார் சொல்லும் நன்மொழிகளை; பெறுமின்—கேளுங்கள் என்றவாறு.

வஞ்சமாவது கொலை, களவு, கள், காமம், பொய் முதலானவை. 'வெறுமின் வினைதீயார் கேண்மை' யென்பதனால் தீயகாரியங்களைச் செய்வாரிடத்து இணக்கமாயின் அவர் தன்மையால் ஒழுகப்பண்ணும். அதனால், கூற்றினுடைய வஞ்சத்தையறிந்து, அதற்கானபடி பெரியோராகிய நல்லினத்தைச் சேர்ந்து, அவர் வாய்ச்சொல்லாகிய நன்மொழிகளைச் கேட்டு அறநெறியறிந்து பிழையுங்களென்று அறிவுறுத்தியது.

பதுமனார்:— அறத்தினது நெறியை அறிமின். கூற்றத்தினை அஞ்சுமின். பிறர் கடுஞ் சொல்லைப் பொறுமின். படிறு வாராமற் பாதுகாமின். எஞ்ஞான்றும் பெரியார் வாய்ச் சொல்லைப் பெறுமின் என்றவாறு.

வஞ்சம் போற்றுமின்—படிறு வாராமற் பாதுகாமின் படிறு—கொடுமை, வஞ்சம்.

விளக்க உரை:— என்பது. அறம் நெறி—அறத்தின் வழியை; அறிமின்—அறியுங்கள்; கூற்றம்—கூற்றத்தினது வஞ்சத்தை பிறர் கடு சொல் —பிறர் சொல்லும் கடியசொற்களை; பொறுமின்—பொறுங்கள்; வஞ்சம் வராதபடி பாதுகாத்துக் கொள்ளுங்கள்; வினைதீயார் கேண்மை—தீவினையுடையார் நட்பை; வெறுமின்-தவிருங்கள்; எஞ்ஞான்றும்-எல்லாநாளும்; பெரியார் வாய்ச்சொல்-பெரியவர் வாய்ச் சொற்களை; பெறுமின் பெறுங்களென்றவாறு.

வஞ்சமாவது கொலை, களவு, கள், காமம், பொய் யென்றிவை.

மேற்கோள் பகுதி:-

இளம் பூ:—[1]பலநோக்காகி ஓடிய நோக்கிற்கும், [2]செவி உறைக்கும் எடுத்துக் காட்டுவர்.

—[1]தொல். செய். சூ. 104.

—[2]தொல். செய். சூ. 114.

மயிலை:—"அறிமின் அறநெறி...வாய்ச் சொல்—என்னும் இதனுள், ஒருவழிநின்ற எஞ்ஞான்றும் என்றதனைப் பிரித்துப் பிறவழியும் கூட்டிமுடிக்க வேண்டுதலிற் பிரிநிலை எச்சமாயிற்று; இதனை [3]விளக்கு மென்ப" என்பர்.

—நன். சூ. 359.

(உ).

173. அடைந்தார்ப் பிரியும் அரும்பிணியுங் கேடும்
*உடங்குடம்பு கொண்டார்க்கு உறலால்-தொடங்கி
பிறப்பின்னா தென்றுணரும் பேரறிவி னாரை
உறப்புணர்க அம்மாவென் நெஞ்சு.

தருமர்:— என்பது. அம்மா என் நெஞ்சு—கேளாய் என்னுடைய நெஞ்சமே!; அடைந்தார்-தன்னை யடைந்தவரை; பிரிவும்—பிரிதலும்; அரும் பிணியும்—மருந்தால் தீரர்க்கரிய பிணியும்; [4]கேடும்—சாவும்; உடம்பு கொண்டார்க்கு—உடம்பு எடுத்தார்க்கு; [5]உடங்கு உறலால்—இவைகள் உடனே வந்தெய்தலால்; தொடங்கி—பழையதாய்த் தொடர்ந்து; பிறப்பு—வருகின்ற பிறப்பினை; இன்னாது என்று—பொல்லாத தென்று; உணரும் பேர் அறிவினாரை—அறியும் அறிவினையுடையாரை;

பா-ம்:—[3]'நடுநிலைத் தீபமுமென்ப'.

*முடங்குடம்பு எனப் பாடமோதி முடங்கலான உடம்பெனப் பொருள் கூறுவாரும் உளர்.

[4]செல்வத்தின் கேடும் எனக் கொண்டார் பதுமனார்; பல வகைத் தீங்குகளும் எனக்கொண்டனர் மற்றுஞ்சிலர்.

[5]உடங்கு—ஒருசேர; ஒன்றுமையாக என்றும் கொள்வர்.

[1]உற—சிக்கென; புணர்க—பற்றுவது செய்யாய் (என்றவாறு)

அம்மா என் நெஞ்சு—கேளாய் என்னுடைய நெஞ்சமே என்று நெஞ்சோடு கூறுவதுபோல வற்புறுத்தியது.

பதுமனார்:—அடைந்தவர்களைப் பிரிவும், பொறுத்தற் கரிய நோய்களும், செல்வத்தின் கேடும் உடம்பு கொண்டார்க்கு இவையுடனே வந்தெய்தலால், பிறவி இன்னாதென்று உணரும் பேரறிவினாரைத் தொடங்கி உறப்புணர்க அம்மா வென்நெஞ்சு என்றவாறு.

[2]அம்மா வென்பது இழிவின்கண் வந்தது. கேடு—செல்வக் கேடு. உடங்கு—உடனே. தொடங்கி—பேரறிவினாரைத் தொடங்கி.

விளக்க உரை:—என்பது. அடைந்தார்—அடைந்தவர்களை; பிரிவும்—பிரிதலும்; அரும்பிணியும்—மருந்தால் தீர்தற் கரிய நோயும்; கேடும்—சாவும்; உடம்புகொண்டார்க்கு—இவை உடம்பு கொண்டார்க்கு; உடங்கு உறலால்—உடனே வந்தெய்தலால்; தொடங்கி—பழையதாய்த் தொடங்கி; பிறப்பு—வருகிற பிறப்பு; இன்னாது என்று உணரும்—பொல்லாதது என்றறியும்; பேர் அறிவினாரை—பெரிய வறிவுடையாரை; என் நெஞ்சு—என் நெஞ்சமானது; உற—அவர்களைச் சிக்கென; புணர்க—பிணிப்பதாக வென்றவாறு.

அம்மா வென்பது அழைத்துச் சொல்லல்.

பொழிப்புரை:—அம்மா—இழிவின்கண் வந்தது. கேடு—செல்வக்கேடு. உடங்கு—உடனே. தொடங்கி—பேரறிவினாரைத் தொடங்கி.

---

[1]உற—உறுதியாக; மிகுதியும் என்றுமாம்.

[2]அம்மா வென்பது இழிவின்கண் வந்த இடைச்சொல்.

குறிப்பு:-

சாவு பிரிவில் அடங்கிவிடுமாதலால் கேடு என்பது பொருள் கேட்டையே குறித்த தென்பர். உறலால் இன்னாது என்று இயைத்துக்கொள்க. உறலால் புணர்க என முடிப்பாருமுளர்.

அம்மா என்னெஞ்சு என்பதை விளியாகக் கொண்டார் தருமர். அம்மா வென்னும் அசைச் சொல்லினது நீட்டம் விளி யாகக் கொள்ளப்படும் என்பது தொல்காப்பிய சூத்திரம் (153).

(ந).

174. இறப்ப நினையுங்கால் இன்னா தெனினும்
பிறப்பினை யாரு முனியார்—பிறப்பினுட்
பண்பாற்று நெஞ்சத் தவர்களோ(டு) எஞ்ஞான்றும்
நண்பாற்றி நட்கப் பெறின்.

தருமர்:—என்பது. [1]பிறப்பினுள்—பிறந்தாலும்; [2]பண்பு ஆற்றும்—பண்பினை இடையறாது செலுத்தும்; நெஞ்சத்தவர் களோடு—நெஞ்சினையுடைய நல்வினைத்தவர்களுடனே; எஞ் ஞான்றும்—எல்லாநாளும்; [3]நண்பு ஆற்றி—தாமும் அந்தப் பண்பினை வழுவாமற் செலுத்தி; நட்கப் பெறின்—அவர்களுடன் நட்புக்கொள்ளப் பெறுவராயின்; [4]இறப்ப நினையுங்கால்— மிகவும் ஆராய்ந்து விசாரித்துப் பார்க்குமிடத்து; இன்னாது எனினும்—பிறவியானது பொல்லாதே யானாலும்; பிறப்பினை யாரும் முனியார்—பிறவி ஆகாதென்று அதனை (யாரும்)

---

[1]ஒருவர் பிறந்த பிறப்பினுள் என்றுமாம்.

[2]பண்பு ஆற்றும்—தமக்கு இயல்பாகிய அறங்களைச் செய்யும்.

[3]நண்பு ஆற்றி—அன்பு செய்து; நட்புச் செய்து.

[4]நினையுங்கால் இறப்ப இன்னா தெனினும் என்று இயைத்து நினைத்தறியு மிடத்து மிகவும் துன்பஞ் செய்வதே யாயினும் என்று பொருள் கொள்ளலுமேற்கும்.

வெறுப்பதில்லை என்றவாறு.

பிறவி மிகப் பொல்லாதானாலும் நல்லினஞ் சேர்ந்து அவர் தன்மையாய் ஒழுகுவராயின், அந்தப் பிறப்பு நன்மையென்று நல்லினஞ் சேர்தலை வியந்து கூறியது.

பதுமனார்:- பிறப்பினுள் நல்ல குணங்களை ஆற்றவல்ல நெஞ்சினை யுடையாரோடு எந்நாளும் நட்பினை அழியாமற் செலுத்தி நட்புச்செய்யின், மிகவாராயுங்காற் பிறப்பின்னா தாயினும் அதனை யாவரும் வெறார் என்றவாறு.

இறப்ப நினையுங்கால்—மிகவும் ஆராயுங்கால். நண்பு— ஆற்றி—நண்பழியாமல் முடியச் செலுத்தி. நட்க(ப்பெறின்) தான் செலுத்தினபடியே நட்புச் செய்யப் பெறின்.

விளக்க உரை!—என்பது. பிறப்பினுள்—பிறந்த காலத்து; பண்பு ஆற்றும்—பண்பினை அறாமல் செலுத்திவரும்; நெஞ்சத் தவர்களோடு — நெஞ்சினையுடைய நல்லினத்தாருடனே; எஞ் ஞான்றும் — எல்லா நாளும்; நண்பு ஆற்றி—தாமும் அந்த நட்பினை வழுவாமல் செலுத்தி; நட்கப்பெறின்—நட்புகொள்ளப் பெறின்; இறப்ப நினையுங்கால் — மிகவாராயுங்காலத்து; இன்னாது எனினும்—பிறப்பு பொல்லாதாயினும்; பிறப்பினை—; யாரும் முனியார்—யாரும் வெறார்; [இந்தப் பிறப்பு இனிமை யுடைத்து என்றவாறு.

நண்பு ஆற்றி—நண்பழியாமல்.

குறிப்பு:-

பண்பு என்றது அறத்தைக் குறித்துநின்றது; மக்கட்கு விழுப்பம் தருவது அதுவேயாதலான் பெறின் என்பது பெறுதலின் அருமை குறித்து நின்றது. இச்செய்யுளான் நல்லினஞ் சேர்தலின் பெருமையும் அருமையும் கூறப்பட்டது.

(சு).

175. ஊரங் கணநீர் உரவுநீர்ச் சேர்ந்தக்கால்
*பேரும் பிறிதாகித் தீர்த்தமாம்—ஒருங்
குலமாட்சி இல்லாருங் குன்றுபோல் நிற்பர்
நலமாட்சி நல்லாரைச் சார்ந்து.

தருமர்:—என்பது ஊர் [1]அங்கண நீர்—ஊரினுள் முற்றத்திலே நின்ற நீரும்; [2]உரவு நீர்- மிகுந்த நீரை; சேர்ந்தக்கால்—சேர்ந்தால்; பேரும் பிரிது ஆகி தீர்த்தம் ஆம்—அது பெயரும் வேறுபட்டுத் தன்பெயர் போக்கித் தீர்த்தமென்று பெயராம்; [அதுபோல] [3]ஒரும்—விசாரிக்குமிடத்து; குலம் மாட்சி இல்லாரும்-மாட்சிமை இல்லாரும்—மாட்சிமையில்லாத குடியிற் பிறந்தவரும்; நலம் மாட்சி நல்லாரைச் சேர்ந்து—நல்ல மாட்சிமையுடைய பெரியாரைச் சேர்ந்து—நல்ல மாட்சிமையுடைய பெரியாரைச் சேர்ந்து அதனால்; குன்றுபோல் நிற்பர்—உயர்ந்த குலமாகத் தோன்றுவர் என்றவாறு.

முற்றத்தில் நின்றநீர் நன்னீரைச் சேர்ந்து தானும் அந்தத் தன்மையானாற்போல, நல்லவரைச் சார்ந்த தீயவரும் நல்லவ ரென்று நல்லினத்தார் தன்மையை உயர்வாக்கி, யாவரும் அத் தன்மையாய் ஒழுகுவதற்கு அறிவுறுத்தியது. 'ஒரும்' என்பதை இடைச்சொல்லாக்கி அங்கணம் என்பதை தொட்டியென்று சொல்லுவாருமுளர்.

பதுமனார்:—ஊரின்கண் முற்றத்துள்ள நீர் ஆற்றின் நீரைச் சேர்ந்தாற் பேரும் வேறுபட்டு எல்லார்க்கும் தீர்த்த நீராகும். குலத்தால் மாட்சிமை இல்லாரும் ஒழுக்க நன்மையால்

பா-ம்:—*'பேரும் பெரிதாகித்'—அதற்கு சிறப்பான ஓர் பேரையுமடைந்து என்பது பொருள்.

[1]அங்கணநீர்—சலதாரை நீர்.

[2]சிறப்புப் பொருந்தியதோர் ஆற்றின் நீர், வலியமைந்த நீர் என்றுமாம்.

[3]ஒரும்—மதிக்கத்தக்க; ஆராய்ந்து பார்க்கின்ற என்றுமாம். அசையாகக் கொண்டார் பதுமனார்; 'அஞ்சுவதோரு மறனே' என்புழிப்போல.

மாட்சிமைப்பட்ட நல்லாரைச் சார்ந்தால், மலைபோல் உயர்ந்து நிற்பர் என்றவாறு.

ஊர் அங்கணம்—ஊர்முற்றம். உரவு நீர்—[1]வலியநீர். நல மாட்சி—ஒழுக்கத்தால் மாட்சிமைப்பட்ட.

விளக்க உரை:- என்பது. ஊர் அங்கண நீர்—ஊரின்கண் முற்றத்து நீர்; [2]உரவு நீர்—மிக்க நீரை; சேர்ந்தக்கால்—சேர்ந் தக் காலத்து; பேரும் பிறிது ஆகி—பேரும் வேறுபட்டு; தீர்த்த மாம்—; [அதுபோல] குலம் மாட்சி இல்லாரும்—மாட்சிமை இல்லாத குடிப்பிறந்தாரும்; நலம் மாட்சி நல்லாரைச் சார்ந்து —மாட்சிமையுடைய நற்குண முடையாரைச் சேர்ந்து; குன்று போல் நிற்பர்—குன்றுபோல் உயர்ந்து நிற்பர் [தோற்றமுடைய ராவர்] என்றவாறு.

ஓரும் என்பது இடைச்சொல். அங்கணத்(தைத்) தொட்டி என்றுஞ் சொல்லுவார்கள்.

நலம் மாட்சி—ஒழுக்க நலத்தால் மாட்சிமைப்பட்ட.

ஒப்புமைப் பகுதி:-‡

"நல்லமணமுள்ள தொன்றை நண்ணி இருப்பதற்கு
நல்மணமுண்டா நயமதுபோல்—நல்ல
குணமுடையார் தங்களுடன் கூடியிருப் பார்க்குக்
குணமதுவே யாஞ்சேர்வு கொண்டு".

—உபதேச ரத்தினமாலை.

---

[1]தம்மில் மூழ்கினாரது உடலை தூய்மை யாக்குதலன்றி அவரது பாவங்களையும் போக்கும் வலிவுடைய நீர்; அது புண்ணிய நதிகளையும், குளங்களையும் குறித்தது.

[2]மிக்க நீராவது ஆற்றின் நீர்.

‡அடுத்துவரும் இரண்டு செய்யுட்களும் கருத்தில் இச்செய்யு ளுடன் ஒத்திருத்தல் காண்க.

"சோதிலா வழுதஞானி நுரைகழல் நறுகிற்கிழாஞ்
சாதியிற் கடைப்பட் டோர்க ளாகிலுந்தலைவ ராவர்
வீதியி லொழுகுநீரு மகழிடை விரவநீரும் பாய்தலால்
நதியி லந்நீர் தீர்த்தமாம் பரிசுபோல".

—பழப்பாடல்.

"பெரிய குடிப்பிறந் தாரும் தமக்குச்
சிறியா ரினமா யொழுகுதல்—எறியிலை
வேலொடு நேரொக்கும் கண்ணாய்! அஃதன்றோ
பூவொடு நாரியைக்கு மாறு".

—பழ.356.

"தெருண்ட மேலவர் சிறியவர்ச் சேரினும் அவர்தம்
மருண்ட புன்மையை மாற்றுவ ரெனுமிது வழக்கே".

—கம்பராமாயணம்.

குறிப்பு:-

தீர்த்தமும் ஆம் என்பதற்குத் தீர்த்தம் ஆம் என வந்தது; இறந்தது தழீஇய எச்சவும்மை தொகுத்தல். மாட்சியில்லார், மாட்சி நல்லார்-இரண்டும் திணை வழுவமைதி. ஒரும் என்பதனை எச்சமாகக் கொண்டு அறியும் எனவும், ஏவல் வினை முற்றாகக் கொண்டு அறிவீராக எனவும் பொருள் கூறுவர் சிலர். குன்று போல் நிற்பர் என்றமையால் அளவு செய்யமுடியா கல்விப் பொருளும், பிறரால் குற்றஞ் சொல்ல வியலா அசைவின்மையும், கல்வியறிவு ஒழுக்கங்களால் யாவர்க்கும் விளங்கி நிற்கும் நிலையும், பொருள் வற்றிய விடத்தும் ஒப்புரவு செய்தற் குடன்படும் பண்புமாகிய இவை யுடையவராவர் என்பதுணர்த்தப்பட்டது. "அளக்க லாகா வளவும் பொருளும், துளக்க லாகா நிலையுந் தோற்றமும், வறப்பினும் வளந்தரும் வண்மையு மலைக்கே" என்ற தொல்காப்பியச் சூத்திரமும் (பாயிரம்.சூ.28) காண்க. இச்செய்யுள் எடுத்துக்காட் டுவமையணி.

(௫).

176. ஒண்கதிர் *வான்மதியஞ் சேர்தலால் ஓங்கிய
அங்கண் விசும்பின் முயலுந் தொழப்படூஉங்
குன்றிய சீர்மைய ராயினுஞ் சீர்பெறுவர்
குன்றன்னார் கேண்மை கொளின்.

தருமர்:—என்பது. ஓங்கிய அம்கண் விசும்பின்—அழகிய இடத்தையுடைத்தாய் உயர்ந்த விசும்பின் கண்ணே; [1]ஒள்கதிர்—நல்ல கிரணங்களுடன்; வான் வதியம்—வானின்கணின்று விளங்கிய மதியத்தை; சேர்தலால்—சேருகையினாலே; முயலும்—முயலையும்; [2]தொழப்படூஉம்—; [அதுபோல] [3]குன்றிய சீர்மையராயினும்—சீர்மை யில்லாதவரும்; குன்று அன்னார்—குன்றுபோலும் உயர்ந்த நற்குணங்களையுடையவரை; கேண்மை கொளின்—சேர்வராயின்; [4]சீர் பெறுவர்—சீர்மை உடையவராவர் என்றவாறு.

திங்களைச் சேர்ந்தமுயல் நன்மை பெற்றாற்போல, நல்லினஞ் சேருவாரும் நல்லவராவர் என்றவர் தன்மையை அறிந்து(கூறியது).

பதுமனார்:—ஒள்ளிய கதிரையுடைய ஒளிமதியத்தைச் சேர்தலால், உயர்ந்த அங்கண் விசும்பினுள்ள முயலுந் தொழப்படும் அதுபோலந் தாழ்ந்த சீர்மையரே ஆயினு மலைபோலுயர்ந்த நல்லாரோடு நட்புக் கொளின் சீர்பெறுவர் என்றவாறு.

வாள்—ஒளி.

பா-ம்:—*'வாண் மதியம்'—பதுமனார் & விளக்க வுரை.

[1]ஒள் கதிர்—விளக்கமாகிய கிரணங்களையுடைய.

[2]வணங்கப்படும்.

[3]குறைந்த சிறப்புடையராயினும்; குடி கல்வி யறிவு முதலிய சிறப்பில்லாராயினும் என்றுமாம்.

[4]சீர்பெறுவர்—தாமும் மேம்பாடு பெறுவர்; அவருக்குப் பிறரால் செய்யப்படும் வந்தனை வழிபாடு முதலிய சிறப்பைத் தாமும் பெறுவர் என்பதாம்.

விளக்க உரை:—என்பது. ஓங்கிய-உயர்ந்த; அம்கண் விசும்பின்—அழகிய விடத்தையுடைய விசும்பின்(கண்ணே); ஒள்கதிர்—ஒள்ளிய கிரணங்களையுடைய; [1]வாள் மதியம்—விளங்கிய மதியை; சேர்தலால்—; முயலும் தொழப்படும்—; அதுபோல] குன்றிய சீர்மையராயினும்—குன்றிய சீர்மையுடையராயினும்; குன்று அன்னார்—குன்று போல யுயர்ந்த தோற்றத்தை யுடையார்; கேண்மை கொளின்-நட்புக் கொள்ளில்; சீர்பெறுவர்—செற்றியினது நன்மைகொண்டு சீர்மையுடையராவர் [தாமும் குன்று போலத் தோற்றமுடையராவர்] என்றவாறு.

வாள்—ஒளி.

மேற்கோள் பகுதி:-

வீரசோ:— தனிச்சொலின்றி ஒரு விகற்பத்தால் வந்த இன்னிசை வெண்பாவிற்கு இச்செய்யுள் எடுத்துக்காட்டாக வரும்.

—யாப்பு.சூ.8.

ஒப்புமைப் பகுதி:—

"மிக்காரைச் சேர்தன் மிகமாண முன்னினிதே",

—இனியவை.

"செஞ்சடை யொருவன் கண்டஞ் சேர்தரப் படுதலாலே
நஞ்சுமிவ் வுலக மெல்லாந் தொழப்படு நலத்த தன்றே".

—பழம்பாடல்.

திங்கள்கண் காணப்படும் களங்கத்தை அதனுள் முயல் இருப்பதாகக் கூறல் கவி மரபு. அதற்கு பிறநூற் சான்று:—

"திங்களுள் தோன்றி இருந்த குறுமுயால்"

—கலி.144.

---

[1]வாள் மதியம்—ஒளிதங்கிய சந்திரனை.

"குறுமுயன் மறுநிறம் கிளர மதிநிறைந்து"

—அகம். 239.

"பிறையது வளரத் தானும் வளர்ந்துடன் பெருகிப் பின்னாள்
குறைபடு மதியந்தேயக் குறுமுய றேய்வதே போல்".

—நைடதம். அரசாட்சி. 6.

குறிப்பு:-

குன்றிய சீர்மையர் என்பதிற் சொற்களைப் பின்முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக் கூட்டி சீர்மை குன்றியவர் எனக் கொண்டு பொருள் கூறுதலு மமையும். உம்மைகள் இரண்டில் முன்னது இழிவு சிறப்போடு இறந்தது தழீஇயது. பின்னது இழிவு சிறப்பில் வந்தது. 'ஒள்ளிழை மகளிர் உயர்பிறை தொழூஉம்' என்ற அகநானூற்றில் வரும் செய்யுளால் (239) மகளிர் பிறைச் சந்திரனை தொழுதல் பண்டை வழக்கு என்ப தறியலாம். சந்திரன்பாலுள்ள களங்கத்தை முயல் என்றும், மான் என்றும் பலவாறாக மக்கள் வழங்குவர். [1]'முயற் கூடு' என்றே திங்களுக்கு வேறொரு பெயர் வழங்கி யிருத்தலு மறிக. சந்திரனைத் தொழுவார் அதன் களங்கத்தை நீக்கித் தொழுத லில்லை யாதலால் 'முயலும்' தொழப்படும்' என்றார். இச் செய்யுளும் எடுத்துக்காட் டுவமையணி.

(சூ).

177. பாலோடு அளாயநீர் பாலாகும் அல்லது
நீராய் *நிறந்தெரிந்து தோன்றாதாந்— தேரிற்
சிறியார் சிறுமையுந் தோன்றாதா நல்ல
பெரியார் பெருமையைச் சார்ந்து.

தருமர்:—என்பது. தேரில்—ஆராயுமிடத்து; பாலோடு

பா-ம்:—*'நிறந்திரிந்து தோன்றாதாற் றேறில்'.

[1]"சிதைவிலா முயலின்கூடு பசுங்கதிர்த்தே" —சூ. நிகண்டு.

அளாய நீர்—பாலுடன் கலந்த தண்ணீர்; பாலாகும் அல்லது—பாலாகத் தோன்றுமல்லாமல்; [1]நீராய் நிறந்தெரிந்து தோன்றாது—நீரின் நிறம் விளங்கித் தோன்றாது; [அதுபோலும்] [2]நல்ல பெரியார் பெருமையைச் சார்ந்து—நற்குணமுடைய பெரியார் பெருமைக்குணத்தைச் சார்ந்தவிடத்து; சிறியார் [3]சிறுமையும்—சிறியாருடைய சிறுமைக் குணமும்; தோன்றாது—; என்றவாறு.

பாலோடு கலந்த நீர்தானும் அத்தன்மை பெற்றாற்போல நல்லினஞ் சேர்ந்தவரும் நல்லவராவ ரென்பதாம்.

பதுமனார்:—பாலோடு கலந்தநீர் பாலாய்த் தோன்றுமத்துணையல்லது, நீராய் நிறந்தெரியத் தோன்றாதாம். ஆராயிற் சிறியாரது சிறுமைக் குணனும் மிக்குள்ள பெரியோரது பெருமைக் குணத்தைச் சார்ந்து தோன்றாதாம் என்றவாறு.

விளக்க உரை:—என்பது. தேரில்-ஆராயில்; பாலோடு அளாயநீர்—பாலுடனே கலந்த நீர்; பாலாகும் அல்லது—பால்போலே இருக்குமல்லது; நீராய் நிறந் தெரிந்து தோன்றாது—; [அதுபோல] நல்ல பெரியார் பெருமையைச் சார்ந்து—நல்ல பெரியாருடைய பெருமைக் குணத்தைச் சார்ந்து; சிறியார் சிறுமையும்—சிறியாருடைய சிறுமைக்குணமும்; தோன்றாது—தோன்றாவாகும் என்றவாறு.

[ஆம் இரண்டும் அசை நிலைகள்].

குறிப்பு:-

அளாய—இறந்தகாலப் பெயரெச்சம்; அளா—பகுதி.

---

[1]நீரசய்த் தன்னிறம் வேறுபட்டுக் காணப்படாது என்றுமாம்.

[2]நல்ல பெரியார் பெருமையை—நற்குண நற்செய்கைமிகுந்தவருடைய பெருந்தகைமையை.

[3]சிறுமையும்—கீழ்மைக் குணமும்.

ய்—இறந்தகால இடைநிலை. அ—பெயரெச்ச பொருண்மை விகுதி. உம்மை—இழிவு சிறப்போடு இறந்தது தழீஇய எச்ச வும்மை. நல்ல பெரியார்—திணைவழுவமைதி. நல்ல— பண்பி னடியாகப் பிறந்த பலவின் படர்க்கைப் பெயர். சார்ந்து— சார்ந்தால் என்பதன் திரிபு.

இம்மூன்று பாட்டாலும் நல்லினஞ் சார்தலால் வரும் உயர்வு உணர்த்தப்பட்டது.

(எ).

178. கொல்லை இரும்புனத்துக் குற்றி அடைந்தபுல்
ஒல்காவே ஆகும் உழவர் †உழுபடைக்கு
மெல்லியரே ஆயினும் நற்சார்வு சார்ந்தார்மேற்
செல்லாவாஞ் செற்றார் சினம்.

தருமர்:— என்பது. [1]கொல்லை—விலைகாடாகிய; [2]இரும் புனத்து—பெரிய புனத்துள்ளே; குற்றி [3]அடைந்த புல்—மரத் தின் கட்டையை அடுத்துநின்ற புல்லானது; உழவர் உழு படைக்கு—உழவர்க்குக் கருவியாகிய கலப்பைக்கு; [4]ஒல்காவே ஆகும்—அசையாதாகும்; [அதுபோல] மெல்லியரே ஆயினும்— வலியில்லாராயினும்; நல்சார்வு சார்ந்தார்மேல்—அவர் நற் சார்வைச் சார்ந்த விடத்து; செற்றார் சினம்—பகைவர் சினம்; [5]செல்லாவாம்—அவர்மேல் செல்ல மாட்டாது என்றவாறு.

நல்லினத்தைச் சார்ந்தவர் அவர் தன்மையோடு ஒழுகுவ ராதலில், அவரைச் சாருமுன் இவரைக் கெடுப்பதாகச் சினங்

---

†"உழுபடை படையூன்றுசான் மருங்கின் ஈன்றதன் பயனே". (புறம். 35,25.)

[1]கொல்லை—கொல்லையாகிய; காட்டிடத்துள்ள கொல்லை களினும் என்றுமாம்.

[2]மலையிடத்துள்ள பெரிய வயல்களினும் எனலுமாம்.

[3]அடைந்த புல்—சேரமுளைத்த புற்கள்.

[4]தளர்வடையாதனவே யாகும்; அழிவுறாதனவே யாகும் எனலுமாம்.

[5]செல்லாவாம்—பயன்படாவாம்.

கொண்டிருந்த காம, குரோத, முதலாகிய அறுபகைகளும், நெறி கடவாது அவர் வசமா மென்பது தோன்ற, 'செல்லாவாஞ் செற்றார் சினம்' என்று நல்லினஞ் சேர்தற்கு வற்புறுத்தியது. பொருட் பாலாகலின் உலக வியற்கைக்குமாம்.

பதுமனார்:—கொல்லை நிலத்துப் பெரிய புனத்தின்கணின்ற மரக்கட்டையை அடை(ந்து) நின்ற புல் உழவர் உழுபடைக்கு அசையாவாகும் அதுபோல வலியிலரே ஆயினும் வலிய சார்வைச் சார்ந்தார் மாட்டுப் பகைவர் வெகுளி(கள்) செல்ல மாட்டா வென்றவாறு.

கொல்லை நிலத்து—பெரிய புனத்து. ஒல்கல்—அசைதல்.

விளக்க உரை:— என்பது கொல்லை இரும்புனத்து—கொல்லைப் பெரிய புனத்து; குற்றி அடைந்த புல்—மரக் கட்டையை யடை(ந்து) நின்ற புல்லும்; உழவர் உழுபடைக்கு—உழவர் உழுகிற கலப்பைப் படைக்கு; ஒல்காவே ஆகும்—அசையாவாகும்; [அதுபோல] மெல்லியரே ஆயினும்—வலியிலரே யாயினும்; [1]நல்சார்வு சார்ந்தார் மேல்—நல்ல சார்வைச் சார்ந் தாரிடத்து; செற்றார் சினம்—பகைவர் சினம்; செல்லாவாம்—(அவர்) மேற் செல்லமாட்டாது என்றவாறு.

ஒல்கல்—அசைதல்

ஒப்புமைப் பகுதி:-

''தக்கார் இனத்தனாய்த் தான்ஒழுக வல்லானைச்
செற்றார் செயக்கிடந்த தில்''.

—குறள். 446.

---

[1]நல் சார்வு—பகைவரினு மிக்க வலியுடையாரை; அறிவு ஆற்றல்களால் வலியுடையாரை என்றுமாம்.

"இடிக்கும் துணையாரை ஆள்வாரை யாரே
கெடுக்குந் தகைமை யவர்".
—குறள். 447.

"சிறிய ராயினார் சார்பினை விழையன்மின் திறங்கெழு
பெரியோராம்
அறிஞ ராயினர் சார்பினை விழைமினோ அலரிதழ்
விரிகொன்றை
வெறிந றுந்தொடை எம்பிரான் சார்பினை விழைதலால்
உரகங்கள்
மறுவி லாற்றல்சால் கலுழனை வினாயின வாழ்ந்தனை
யோஎன்ன".
—காஞ்சி. பணாத. 6.

"தலையிழந்தா னெவ்வுயிருந் தந்தான் பிதாவைக்
கொலைபுரிந்தான் குற்றங்க டீர்ந்தான்—உலகில்
தனிமுதன்மை பூண்டுயர்ந்தோர் வேண்டுவரேல் தப்பாம்
வினையும் விபரீத மாம்".
—வீர அலங்கார. சூ. 20.

"மெலியோர் வலிய விரவலரை யஞ்சார்
வலியோர் தமைத்தா மருவிற்—பலியேல்
கடவு ளவிர்சடைமேற் கட்செவி யஞ்சாதே
படற்சிறையப் புள்ளரசைப் பார்த்து".
—நன்னெறி. 9.

குறிப்பு:—

கொல்லைப் புனம்—இருபெயரொட்டுப் பண்புத் தொகை. குற்றி — பண்படியாகப் பிறந்த பெயர்; குறு — பகுதி; இ — ஒன்றன் படர்க்கை விகுதி; றகரவொற்று இரட்டித்தது விரித்தல்; உகரக் கேடு சந்தி. புல், சினம்—பால்பகா அஃறிணைப் பெயர்கள்; பன்மைவினை கொண்டன. ஒல்கா, செல்லா—எதிர்மறை பலவின்பால் முற்றுக்கள். உழுபடை—வினைத்தொகை நிலைத் தொடராய்க் கலப்பைக்குக் காரணப் பெயராயிற்று. குவ்வுருபு கருவிப் பொருளில் வந்தது. சார்வு—தொழிலாகு பெயர்.

சினம்-காரியத்தைக் காரணமாக உபசரித்த உபசார வழக்கென்ப. இச்செய்யுளான் நல்லினஞ் சார்தலின் வன்மை கூறப்பட்டது. இச்செய்யுள் எடுத்துக் காட்டுவமையணி.

(அ).

179. *நிலநலத்தால் நந்திய நெல்லேபோல் தத்தம்
குலநலத்தான் ஆகுவர் சான்றோர்—கலநலத்தைத்
தீவளி சென்று சிதைத்தாங்குச் சான்றாண்மை
தீயினஞ் சேரக் கெடும்.

இ-ள்:— என்பது. [1]சான்றோர்—அமைந்தோர்; [2]நிலநலத்தால்—நிலத்தினது நன்மையினாலே; நந்திய—மிகுந்து விளைந்த; நெல்லே போல்—நெற்பயிர் போல; தத்தம் குலநலத்தான் [3]ஆகுவர்—தங்கள் தங்கள் குலத்தின் நன்மையினாலே ஆவர்; [அஃது எப்படியெனில்] [4]கலநலத்தை-இடையூறில்லாமல் கடலிடத்து ஓடுகின்ற மரக்கலத்தை; [5]தீவளி சென்று-(தீக்) காற்றுச் சென்று; சிதைத்து ஆங்கு—கெடுத்தாற் போல; [6]சான்றாண்மை—சான்றாண்மையும்; தீ இனம் சேரக் [7]கெடும்—தீ இனத்தைச் சேரிற் கெடுமென்றவாறு.

நல்நிலத்திலே வித்திய நெல்லுயர்ந்து வளர்ந்தாற் போலத் தீ இனஞ் சேர்ந்து கெடாமல் நல்லினஞ் சேர்ந்து அவர் தன்மையாக வேண்டுமென்பதாம். உயர்குடியிற் பிறந்தமைந்தோரானாற்

---

*"நிலத்தில் கிடந்தமை கால் காட்டும்" (குறள். 959)

[1]சான்றோர்—கல்வியறிவொழுக்கங்களால் நிறைந்தோர்.

[2]விளைநிலத்தினது வளத்தால் என்றுமாம்.

[3]ஆகுவர்—ஒழுக்கங் குன்றாது பெருகுவர்.

[4]கலநலத்தை-மரக்கலத்தினது திண்மையை.

[5]தீவளி-சுழல்காற்று.

[6]சான்றாண்மை-கல்வி, யறிவு முதலியவற்றான் நிறைந்து அவற்றை ஆளுந்தன்மை.

[7]கெடும்-தன்திண்மை அழியும்.

போல நல்லினஞ் சேர்ந்தவரும் நல்லவராவ ரென்பதாயிற்று.

பதுமனார்:—நிலத்தினது நன்மையால் மிகவெழுந்த நெற் போலத் தங்குலத்தினது நன்மையாற் சான்றோராவர். இடையூ றின்றிச் செல்கின்ற மரக்கலத்தினது நன்மையைத் தீக்காற்று சென்று சிதைத்தாற் போலத், தீயவினைத்தைச் சாரவே சான்றாண்மை கெடுமென்றவாறு.

நந்துகை—மிகவெழுகை. கலம்—மரக்கலம். தீவளி—கடுங் காற்று.

விளக்க உரை:—என்பது. சான்றோர்—அமைந்தோர்; நில நலத்தால்—நிலத்தினது நன்மையாலே; நந்திய—வளர்ந்த; நெல்லேபோல்—நெல்போல; தத்தம் குலநலத்தான் ஆகுவர்—தத்தாமுடைய குலத்தினது நன்மையாலே ஆவர்; [அஃது எப்படியெனில்] கலநலத்தை — இடையூறின்றிச் செல்கின்ற மரக்கலத்தை; தீவளி சென்று—தீக்காற்றுச் சென்று; சிதைத்து ஆங்கு—கெடுத்தாற்போல; சான்றாண்மை—சான்றாண்மையும்; தீஇனம் சேரக் கெடும்—தீஇனத்தைச்சேரக் கெடுமென்றவாறு.

தீவளி—கடுங்காற்று.

ஒப்புமைப் பகுதி:—

"நிலத்தியல்பான் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்(கு)
இனத்தியல்ப தாகும் அறிவு".

—குறள். 452.

"இனத்தியல் பாம்அறி வென்ப துண்மையே
மனத்துயர் செயும்மயல் மாற்று நீறுதான்
அனிச்சமெல் அடியினார் நுதல்அ டுத்தலும்
பனித்துடல் வெதும்புமால் படுத்த லால்என்பார்''.

-பிரபு. மாயை. பூசை. 34.

குறிப்பு:-

தந்தம் என்பது தத்தம் என வலித்தது. சிதைத்து—சிதைத்தால் என்பதன் திரிபு. ஆங்கு—உவமையிடைச் சொல் தீ யினம்—பண்புத் தொகை; தீமையாகிய இனம் என விரியும். இச் செய்யுளான் தீயினத்தினது தீமையின் மிகுதி கூறப்பட்டது.

(கூ).

180. மனத்தான் மறுவிலர் ஏனுந்தாஞ் சேர்ந்த
இனத்தால் இகழப் படுவர்—புனத்து
வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வேமே
எறிபுனந் தீப்பட்டக் கால்.

தருமர்:—என்பது. [1]மனத்தான்—தம்முடைய மனத்தில்; மறு இலர் ஏனும்—ஒரு குற்றமுமின்றி இருந்தவராயினும். தாம் சேர்ந்த இனத்தால் — தீயினத்தைச் சேரில்; இகழப்படுவர்—பலராலும் இகழப்படுவர்; [அஃது என்போல வென்னில்] எறி புனம் தீப்பட்டக்கால் — (வெட்டின) புனத்திலே தீப்பட்டக் காலத்து; புனத்து வெறிகமழ்—(கொல்லைப் புனத்தில் மணங் கமழா நின்ற); சந்தனமும் வேங்கையும் [2]வேமே—சந்தன மரமும் வேங்கைமரமும் வேவதுடன் வெந்தாற்போல் என்ற வாறு.

வேங்கை மரத்தை அடுத்திருக்கையினால் அச்சந்தன மரத்துக்குங் கேடு வந்தது. அதுபோலத் தீயினத்தைச் சேர்ந்தவர் கெடுவரென்பது கொண்டு நல்லினத்தைச் சேரவேண்டுமென்பதாயிற்று.

எறிபுனம்—வெட்டினகாடு.

---

[1]மனத்தின் நிலைமையான்; மனத்தினன்மையால் என்றுமாம்.
[2]வேம்—பயனில்லா மரங்களோடு ஒக்கவேகும்.

பதுமனார்:—மனத்தின்கண் குற்றமிலராயினுந் தாமடைந்த தீயினத்தாலே யிகழப்படுவர். வெட்டிய புனந் தீப்பட்டால் புனத்தின்கண் மணங் கமழா நின்ற சந்தனமும் வேங்கையுங் கூடவேவா நிற்கும் என்றவாறு.

இனம்-தீயவினம். எறிபுனம்—வெட்டின புனம்.

விளக்க உரை:—என்பது. மனத்தால்—மனத்தின் கண்; மறு இலர் ஏனும்—ஒரு குற்ற மன்றியிலே இருந்தாராயினும்; தாம் சேர்ந்த இனத்தால்—தாஞ்சேர்ந்த தீயவினத்தினாலே; இகழப்படுவர்—பலரும் இகழப்படுவர்; [அஃது என் போல வென்னில்] எறிபுனம் தீப்பட்டக் கால்—வெட்டின புனந் தீப்பட்டவிடத்து; புனத்து வெறிகமழ்—கொல்லைப் புனத்து மணங் கமழாநின்ற; சந்தனமும் வேங்கையும் வேமே—சந்தனமும் வேங்கை மரமும் ஒக்க வேகா நிற்கும் அதுபோல வென்றவாறு.

எறிபுனம்—வெட்டின புனம்.

மேற்கோள் பகுதி:-

பரிமே:—"நட்பு ஒழிந்தாலும் நீங்காக்கால் 'வெறிகமழ் சந்தனமும் வேங்கையும் வே' மாறுபோலத் தீங்குவருதலின் விடல் என்றும்...............கூறினார்".

—குறள், 797. உரை.

ஒப்புமைப் பகுதி:-

"வேம்பின் இலையுள் கனியினும் வாழைதன்
தீஞ்சுவை யாதுந் திரியாதாம்—ஆங்கே
இனந்தீ(து) எனினும் இயல்புடையார் கேண்மை
மனந்தீதாம் பக்கம் அரிது".

நாலடி. 244.

"கடல்சார்ந்தும் இன்னீர் பிறக்கு மலைசார்ந்தும்
உப்பீண்(டு) உவரி பிறத்தலால் தத்தம்

இனத்தனையர் அல்லர் எறிகடற்றண் சேர்ப்ப!
மனத்தனையர் மக்களென் பார்".

—நலடி. 245

"மனத்தானாம் மாந்தர்க் குணர்ச்சி இனத்தானாம்
இன்னான் எனப்படும் சொல்".

—குறள். 453.

"மனநலம் மன்னுயிர்க் காக்கம் இனநலம்
எல்லாப் புகழும் தரும்".

—குறள். 457.

"முயலவோ வேண்டா முனிவரை யானும்
இயல்பின்னர் என்பது இனத்தால் அறிக
கயலியலுண் கண்ணாய்! கரியரோ வேண்டா
அயலறியா அட்டூணோ இல்".

—பழ. 237.

"தக்கார் வழிகெடா தாகும் தகாதவர்
உக்க வழியராய் ஒல்குவார்—தக்க
இனத்தினான் ஆகும் பழியும் புகழும்
மனத்தினான் ஆகும் மதி".

—சிறுபஞ்ச. 81.

"கயவரைக் கைகழிந்து வாழ்த லினிதே".

—இனியவை. 30.

"சந்தனத்தைச் சார்தருவுந் தக்க மணங்கமழுஞ்
சந்தனத்தைச் சார்வேய் தழல்பற்ற - வந்தவனந்
தானுமச்சந் தனமுந் தன்னினமு மாள்வதன்றித்
தானுங் கெடச்சுடுமே தான்".

—நீதிவெண்பா.

'புனத்து வெறிகமழ்......பட்டக்கால்',:—
"குறத்தி மாட்டிய வறற்கடைக் கொள்ளி
யார மாதலி னம்புகை யயலது
சாரல் வேங்கைப் பூஞ்சினைத் தவழும்".

—புறம். 108; 1—3.

குறிப்பு:-

எறிபுனம்—வெட்டிச் சுட்ட கொல்லை நிலம் (புறம். 231). 'எறி' என்னுங் காலங் கரந்த பெயரெச்சம் புனமென்னும் பெயர் கொண்டது. சந்தனம், வேங்கை-குறிஞ்சி நிலக் கருப்பொருள் கள். வேங்கை பூவிற் சிறந்தது, சந்தனம் மணத்திற் சிறந்தது என்ப. குறிஞ்சி நிலத்துக் குறவர் தினை விதைத்தற்குத் தரிசாய்க் கிடந்த காடுகளை வெட்டிச்சுடுதல் மரபு. "தொடுதோற் கானவன் சூடுறு வியன்புனம்'' என்ற அகநானூறும் (368) காண்க. இச்செய்யுளான் மனத்தாற் குற்றமில ராயினும் சேர்ந்த தீயினத்தால் ஒருவர் இகழப்படுவர் என்பதுணர்த்தப் பட்டது. இச்செய்யுள் எடுத்துக்காட்டுவமை யணி.

(ய)

---

19. பெருமை.

தருமர்:— அஃதாவது குல வொழுக்கத்தினாலும், கல்வி ஒழுக்கத்தினாலும், அன்பு மறனும் அருளுமுடைமையினாலும், ஒப்புரவினாலும், யாதொரு தீங்கு வந்தவிடத்துந் தமது தன்மை (குன்றாமை)யினாலும், நட்டார், அயலார், பகை, உறவு என்னும் வேறுபாடின்மையினாலும், மற்றுமுண்டாகிய நற்செய்கையால் உயர்வெய்தியதே பெருமை யென்பதாம்.

மேன்மக்கள் என்னும் சான்றோர்க்கு இவை இல்லையோ? அதுவே அமையாதோ? எனில் அவர்க்கு நட்டார், அயலார் என்னும் வேறுபாடும் ஆசையும் உண்டு. இவர்க்கு அவை யில்லாமையால் பெருமை யென்னும் அதிகாரமுங் கூறப் பட்டது.

பதுமனார்:— அஃதாவது குலவொழுக்கத்தாலும், கல்வி யினாலும், அன்பு மறனு மருளுடைமையினாலும், ஒப்புரவினாலும், அறிவுடைமையினாலும், யாதொரு தீங்கு உற்றாலுந் தம்மியல்

பில் குன்றாத வெள்ளை நற்குணங்களாலும், நிறைந்த உயர்வுடைமை.

விளக்க உரை:— அஃதாவது குலவொழுக்கத்தினாலும், கல்வி ஒழுக்கத்தினாலும், அன்பு மறனும் அருளுமுடைமையினாலும், ஒப்புரவினாலும், யாதொரு தீங்கு வந்தடுத்தாலுந் தம்முடைய தன்மை குன்றாமலும், தம்மிற் சிறியார், நட்டார், அயலார், பகை, உறவு என்று வேறுபடுத்திச் [1]சொல்லு முறைமையை நீங்கித் தம்முடைய சுபாவங் குன்றாத நிறைவு ஓர்ப்புக் கடைப்பிடிகளினாலும், எய்திய (உயர்)வுடைமையே பெருமை யென்பதாம்.

மேன்மக்களுக்கும் பகைவர், நட்டார் என்னும் வேறுபாடும் ஆசையுமுண்டு. பெருமைக்கு அதுதானு மில்லை யென்பதாம்.

குறிப்பு:-

'பெருமை':—

பரிமே:— அஃதாவது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர்குற்றம் கூறாமை என்று இவை முதலிய நற்குணங்களால் பெரியாரது தன்மை. நிலையினும் மேன்மேலுயர்த்தற் பயத்தவாய இவை உளவாவது நிலையின் தாழாமையுள் வழியாகலின், இது மானத்தின்பின் வைக்கப்பட்டது.

மணக்:- பெருமையாவது மேன்மை. அஃதாவது சிறியார் செய்வன செய்யாமை.

பரிப்:— இது மானமுடையார்க்கு உளதாவது ஒன்றாகலின் அதன்பின் கூறப்பட்டது. அன்றியும் குடிப்பிறந்தார்க்கு நற்குணம் எனினும் அமையும். இவ்வுரை மேல்வருவன வற்றிற்கும் ஒக்கும். குணங்கள் பலவும் சேரக் கூறுகின்றார் ஆகலின் அதன்பின் கூறப்பட்டது.

—குறள். அதி. 98.

பா—ம்: —[1]'சொல்லுமுறையை நீக்கித்'.

இவ்வதிகாரத்திலும் இதற்கடுத்த சான்றாண்மை, பண்பு புடைமை என்ற அதிகாரங்களிலுமுள்ள கருத்துக்கள் நாலடி யாரில் மேன்மக்கள் என்னும் அதிகாரத்திலும்; நன்றியில் செல்வம், நாணுடைமை என்ற அதிகாரங்களிலுள்ள கருத்துக் கள் இப்பெருமை என்னும் அதிகாரத்திலும் கூறப்பட்டிருத்தல் காண்க.

181. ஈதல் [1]இயையா(து) இளமைசேண் நீங்குதலால்
காதல் அவருங் கருத்தல்லர் - காதலித்(து)
ஆதுநாம் என்னும் அவாவினைக் கைவிட்டுப்
போவதே போலும் பொருள்.

தருமர்:—என்பது. [2]ஈதல் இயையாது—ஒருவற்கு ஒன்றைக் கொடுப்பதற்குக் கூடவுமில்லை; [3]இளமை சேண் நீங்குதலால்—இளமையும் நம்மைவிட்டுத் தூரமாகச் செல்லாநிற்கும்; [அதனால்] காதல் அவரும்—நம்மேற் காதலையுடைய மகளி ரும்; கருத்து அல்லர்—நம்மேல் விருப்பமொழிந்தார்; [ஆதலால்] காதலித்து [4]நாம் ஆதும்—இவ்வகைத்தாக இருக்கவும் பின்னும் இருந்து மனைவாழ்க்கையின் வாழக்கடவோம்; என்னும் அவா வினை—என்னும் ஆசையை; [5]கைவிட்டு—; போவதே [6]பொருள் —துறவறத்திற் போவதே நமக்குப் பொருளாவது என்றவாறு.

அறத்துப்பாலில் துறவென்னு மதிகாரத்தில் கூறவேண்டியது

பா-ம்:—[1] 1 'இசையாது'—பதுமனார். 2. 'இசையா'— விளக்கவுரை.

[2]ஈதலும் இசையாது—வறுமையாற் பிறர்க்கு ஒன்றைக் கொடுத்தலும் முடியாமல்.

[3]இளமை சேண் நீங்குதலால்—இளமைப் பருவம் தூரத்தில் நீங்கிக் கழிந்தமையால்.

[4]நாம் ஆதும்—நாம் பெருகுவோம்.

[5]கைவிட்டு—பற்றற விட்டு; முற்றும் நீக்கி என்றுமாம்.

[6]பொருள்—நற்காரியமாம்; பிறப்பின் பயனாம் என்பதுமாம்.

இவ்விடத்திற் சொல்லவேண்டியது ஏதெனில், அறத்துப்பாலிற் கூறியது மணஞ்செய்யுமுன் துறத்தலை. மனைவாழ்க்கையில் நின்று எல்லா இன்பங்களும் அனுபவிப்பவர் துறப்பதற்கு ஒருப் படுதல் அரிது. அதனால் இவ்விடத்துக் கூறி உயர்ந்தோர் ஒருவர் முப்பத்திரண்டு வயதின்மேற்பட்ட மனைவாழ்க்கையில் நின்று, தமதறிவினால் துறப்பதற்கு ஒருப்பட்டுத் தம்நெஞ்சை உடன்படுத்துவதுபோல யாவர்க்கும் அறிவுறுத்தியது.

பதுமனார்:— பிறர்க்கு ஒன்றைக கொடுத்தல் கூடுகின்ற தில்லை; நம்மிளமை சேய்த்தாக நீங்குதலால் முன்பு நம்மைக் காதலித்தவருந் தங்கருமத்தினர் அல்லர். நெஞ்சமே! மனைவாழ் வினைக் காதலித்து மேலாவோமென்னும் அவாவினைக் கை விட்டுத் துறந்து போவதேபோலும் நமக்குப் பொருளாவது என்றவாறு.

காதலித்து—(நெஞ்சமே) மனைவாழ்க்கையைக் காதலித்து. ஆதும் நாம்—மேலாகக் கடவோம் நாம். போவதே—துறந்து போவதே.

விளக்க உரை:— என்பது. ஈதல் இசையாது—ஒருவர்க்குக் கொடுக்கக் கூடுகின்றதில்லை; இளமை சேண் நீங்குதலால்— நம்மிளமை சேய்த்தாக நீங்குதலால்; காதல் அவரும்—நமமேற் காதலையுடைய மகளிரும்; கருத்து அல்லர்—கருத்தினர் அல்லர்; [ஆதலால்] காதலித்து நாம் ஆதும் என்னும்—முன் சொல்லப்பட்டவை யெல்லாம் இன்னமுந் தமக்குள்ளதாம் என்னும்; அவாவினை—ஆசையினை; கைவிட்டு—; போவதே பொருள் — மனைவாழ்க்கையைவிட்டுத் துறந்து போவதே நமக்குப் பொருளாவ தென்றவாறு.

[1]இப்பாட்டுத் தவத்துக்குச் சேர்க்கவேண்டும் என்னில் இன்பங்கள் அனுபவித்த பின்பு, முப்பத்திரண்டு வயதுக்குமேல் துறக்கவேண்டு மாதலில் பெருமையிலே சேர்ந்தார்.

பா–ம்:—[1]இது அறத்துப்பாலில் துறவென்னு மதிகாரத்துக்கு அமைந்தது இவ்விடத்திலேவேண்டு மோவென்னில், மணஞ் செய்தன் முன் துறத்தலதுவாதலில் இது; மனையாழ்க்கை

குறிப்பு:-

காதலவரும்—உம்மை உயர்வு சிறப்பு; அறுசுவையுண்டி அமர்ந்து ஊட்டியவ ராதலால். கருத்து—முதனிலை திரிந்த தொழிற்பெயர். ஆதும்—தன்மைப் பன்மை யெதிர்கால வினை முற்று. போலும்—உரையசைப் பொருளில் வந்தது; "ஒப்பில் போலியும் அப்பொருட் டாகும்" என்ற தொல்காப்பியச் சூத்திரமும் (சூ.273) காண்க. போவதே—ஏ, பிரிநிலை.

(க).

182, †இச்சார்வின் ஏமாந்தேம் ஈங்கமைந்தோம் என்றெண்ணிப்
பொச்சாந்(து) ஒழுகுவர் பேதையார்—அச்சார்வு
நின்றன போன்று ‡நிலையா(து) எனவுணர்ந்தார்
*ஒன்றும் பரிவ(து) இலர்.

தருமர்:— என்பது. பேதையார்—அறிவில்லார்; [1]இச்சார் வின்—இந்த மனைவாழ்க்கையாகிய சார்விலே; நின்று [2]ஏமாந்தேம்— இரப்பதற்கு உடன்பட்டோம்; [3]ஈங்கு அமைந்தேம் —இவ்விடத்து நின்று எல்லாவற்றானும் நிரம்பினோம்; என்று எண்ணி—என்று கருதி; பொச்சாந்து ஒழுகுவர்—பின்பு தமக்கு வருந் துன்பத்தை விசாரியாது மறந்தொழுகுவர்; அச்சார்வு—

யினின்று இன்பங்களை யனுபவித்துப் பின்புத் துறக்க வேண்டு மென்னும் விதியினால், முப்பத்திரண்டு வயது மேற்பட்டவர் தமது நெஞ்சை அறிவுறுத்தித் துறந்து போகைக் குடன்படு வித்துக் கொண்டதாம்.

பா-ம்:—†'இற்சார்வின்'—அச்சுப்பிரதி.

‡'நிலையா என வுணர்ந்தார்'—பதுமனார் & விளக்க வுரை.

*'என்றும்'—பதுமனார்.

[1]இல்சார்வின்-இல்வாழ்க்கைக்குரிய துணைகளினால்; இல்வாழ்க் கையை அடைந்ததனால் என்றுமாம்.

[2]ஏமாந்தேம்—இன்புற்றோம்.

[3]ஈங்கு—இவ்வுலகத்தில்.

அந்த மனைவாழ்க்கையாகிய [1]சார்வு; நின்றன போன்று--நிற்கு மது போற் புலப்பட்டு; நிலையாது என உணர்ந்தார்—நிலையா தாகப்போ மென்றறிந்தவர்கள்; [2]ஒன்றும் [3]பரிவது இலர்—ஒரு துன்பத்துக்கும் வருந்துவதில ரென்றவாறு.

துன்பத்துக்கு வருந்தாரெனவே மனைவாழ்க்கையினின்று இன்பத்தை விரும்பினார், துறந்து தவம் பண்ணுவதற்கு அப்போதைக்கு வருத்தமாயிருக்கும். அத்துன்பத்தைத் தம் தறிவினாலே இன்பமாய்க் கருதித் துறந்து தவம் பண்ணுதற்கு ஒருப்படுவரென்பது தோன்ற, அவர் துன்பத்துக்கு வருந்தா ரென்றார். இவை பெருமையின் தன்மை கூறியது.

பதுமனார்:—இம்மனை வாழ்க்கையாகிய சார்வின் கணின்று அரண் பெற்றேம்; ஈங்கு எல்லாவற்றானும் நிரம்பினேமென்று தாமின்புறுவது கடைப்பிடியா(ய்) ஒழுகுவர் அறிவில்லார். அம்மனை வாழ்க்கையின்கண் அமைந்தனவெல்லாம், நின்றன போன்று தோன்றுகின்ற வத்துணையே அவையெல்லாம், நிலை யாவென உணர்ந்து நன்மையின்கணின்றார் என்றுந்துன்புறார் என்றவாறு.

இச்சார்வின் -- இம்மனை வாழ்க்கை(யாகிய சார்வின் கணின்று). (ஏமாந்தேம்)—அரண் பெற்றேம். அரண்—இரட்சை. அமைந்தேம்—நிரம்பினேம். பொச்சாந்து ஒழுகுவர்—அப்படி இன்புறு(வது) கடைப்பிடியாக ஒழுகுவர். நின்றன போன்று— நின்றன போலத் தோன்றி. பரிவது இலர்—இரங்குவதிலர்.

விளக்க உரை:- என்பது. பேதையார்—அறியாதார்; இச்சார்வின் இந்த மனைவாழ்க்கையாகிய சார்வின்கண்ணே

---

[1]சார்வு--பற்றுக்கள்; துணைகள் என்றுமாம்.

[2]என்றும்—எப்பொழுதும்.

[3]பரிவது இலர்—விரும்புவ திலர் எனினு மமையும்.

நின்று; ஏமாந்தேம்-இரட்சை யுற்றோம்; ஈங்கு-(இவ்விடத்திலே நின்று); அமைந்தேம்—எல்லாவற்றானும் நிரம்பினோம்; என்று எண்ணி-என்று கருதி; பொச்சாந்து ஒழுகுவர்—தமக்கு வருகிற துன்பத்தை விசாரியாதே மறந்தொழுகுவர்; அச்சார்வு—அந்த மனைவாழ்க்கையாகிய சார்வு; நின்றன போன்று—நிற்குமது போலப் புலப்பட்டு நின்று; நிலையா என உணர்ந்தார்—ஒழுக நிலையாவாய்ப் போம் என்றறிந்தவர்; ஒன்றும் பரிவது இலர்—ஒரு துன்பத்துக்கும் வருந்துவதிலர் என்றவாறு.

இன்பத்தைத் துன்பமென் றிருப்பார் வருந்தா ரென்பதாம். துன்பமாவது, மனைவாழ்க்கையை விட்டுத் துறவிலே நிற்குதல்.

குறிப்பு:-

சார்வு—தொழிலாகு பெயர். ஏமாந்தேம்—ஏமா, பகுதி; அலமா, இறுமா, அல்லா, சோகா என்பன போல ஓர் சொல். ஏம மென்னும் மொழியோடு 'யா' என்பதன் மரூஉ ஆகிய ஆப்புணர, 'ஏமா' எனக் கடைக்குறையாய் இரண்டுசொல் ஒரு சொல்லின் தன்மைப்பட்டு நின்றது என்பர் சிலர். த்—சந்தி; த்—இறந்தகால இடைநிலை; ஏம்—தன்மைப் பன்மை விகுதி. சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம். பொச்சாந்து—பொச்சா, பகுதி. இங்கு என்னும் சுட்டின் நீட்சி, ஈங்கு.

(உ).

183. மறுமைக்கு வித்து மயலின்றிச் செய்து
சிறுமைப் படாதேநீர் வாழ்மின்—†அறிஞர்யார்?
நின்றுழி நின்றே நிறம்வேறாங் காரணம்
இன்றிப் பலவும் உள.

தருமர்:- என்பது. [1]மறுமைக்கு வித்து—மறுமைக்

பா-ம்:—†'அறிஞராய்'—பதுமனார்.

[1]மறுமைக்கு வித்து—மறுமை இன்பத்துக்குக் காரணமாகிய அறத்தை.

குறுதியாகிய வறங்களை; மயல் இன்றி செய்து—[1]மயக்க மில்லாதே செய்து; [2]சிறுமைப் படாதே—சிறுமைத் தொழிலின் கட்படாது; நீர்—; [3]வாழ்மின்—உயிர்வாழுங்கள்; காரணம் இன்றி-காரணமில்லாமல்; [4]நின்றுழி நின்றே-நின்றவிடத்திலே நின்று ஒருபொழுதின்கண்ணே; [5]நிறம் வேறுஆம்—தன்மை யானது பலவிதமாக வேறு ப(ட்டுவி)டும்; [6]பலவும் உள—(பல வேறுபாடுகளும் உளதாம்); அறிஞர் யார்?—அதனை அறிய வல்லவர் யார்? என்றவாறு.

சிறுமைப் படுதல்—விடயங்களின் உட்பட்டு மயங்குதல். ஒருபொழுதின் கண்ணே தன்மை வேறுபடுதலால் சிறுமைத் தொழிலுக்கு உடன்படாது, மறுமைக் குறுதியானவற்றைச் செய்து பெருமைத்தன்மை வழுவாது ஒழுகவேண்டுமென வற்புறுத்தியது.

பதுமனார்:—மறுபிறப்பிற்கு நன்மைத்தாங் காரணங்களை ஐயமின்றிச் செய்து, கீழ்மையின்கட் டங்காதே ஒழுகுமின் அறிஞராய். நின்ற நிலையுள்ளே நின்றே காரணமின்றியே முன்னை வினையே காரணமாக, நிறம் வேறாய்ப் பல துன்பமும் இன்பமும் உளதா மென்றவாறு.

அல்லதூஉம் என்றிப் பலவுமுள வென்று பாடமோதி யறிகின்ற(வ)ராய் நின்றுழி நின்றே, [7](நிறம் வேறாங் காரண மென்று மறுமையை ஐயமுற்றுச் சிறுமைப்படாதே, மறுமைக்கு வித்தும் மயலின்றிச் செய்து வாழ்மின்) நிறம் வேறாங்

---

[1]மயக்கம்—உண்டோ இல்லையோ வென்ற ஐயம்.

[2]சிறுமைப்படாதே—துன்ப மடையாமல்.

[3]அறிஞராய் வாழ்மின் என்ற பாடத்துக்கு அறிவுடையவர் களாய் வாழுங்கள் என்பதாம்.

[4]நின்றஉழி நின்றே—உடல் நின்ற நிலையில் இருந்தே.

[5]நிறம் வேறு ஆம்—இளமை முதலிய தன்மைகள் வேறுபடும்.

[6]பிணி வறுமை முதலிய பலவும் உண்டாம் என்றுமாம்.

[7]விளக்கவுரையி லுள்ளபடி.

காரணங்கள் பலவு(முள) என்றுரைப்பாரு முளர். மறுமைக்கு நன்றி விளையும் அறத்தைப் பலிக்கும் பலியாதென்று மயக்க மின்றிச் செய்தும், அறஞ்செய்யாதார் படும் இழிவினிற்படாதே நீர் ஒழுகுமின். இப்பொருட் பகுதியை அறிஞராய் நின்றபடி நின்றே தன் சய(ன)ந் தனக்குத் தெரியாதபடி கணந்தோறும் அநித்தப்பட்டு வரும் ஒழிங்கிலே பால, யௌவன, வாலிபம் ஆகிற நிறம் வேறாம். இதற்கொரு காரணம் பெறுவதொன்றின்றி முன்னைவினையே காரணமாகி யிருப்பன பலவுமுள என்றவாறு.

விளக்க உரை:—என்பது. மறுமைக்கு வித்து—மறுமைக் குறுதியான அறங்களை; மயல் இன்றிச் செய்து-மயக்க மின்றிச் செய்து; சிறுமைப்படாதே—சிறுமையின்கண் தங்காமல்; நீர்—; வாழ்மின்—உயிர் வாழ்மின்; நின்றுழி நின்றே—நின்றவிடத்திலே நின்றொரு பொழுதின்கண்ணே; காரணம் இன்றி—ஒரு காரணமின்றியே [முன்னை வினையே காரணமாக]; நிறம் வேறு ஆம்—தன்மை வேறுபட்டு விடும்; பலவும் உள— பல வேறுபாடுகளு முளதாம்; அறிஞர் யார்?—அதனை யறிவார் யாவர்? என்றவாறு.

சிறுமை யென்பது, விஷயங்களிலே மயங்கல்.

பொழிப்புரை:—

மறுபிறப்பிற்கு நன்மைத்தாங்[1]..........முன்னை வினையே காரணமாகி இருப்பன பலவுமுள வென்றவாறு.

ஒப்புமைப் பகுதி:-

"உரனென்னுந் தோட்டியான் ஓரைந்துங் காப்பான்
வரனென்னும் வைப்பிற்கோர் வித்து".

—குறள். 24.

---

[1]பதுமனார் உரையி லுள்ளதே.

குறிப்பு:-

மறுமைக்கு வித்து ஆவது அறம்; இம்மையில் செய்யப்படும் அது மறுமையில பயன் விளைத்தலான் மறுமைக்குவித்து எனப்பட்டது. 'அறிஞராய்' எனப் பாடங்கொண்டார், 'அறிஞராய் மறுமைக்குவித்து' எனக் கூட்டி உரை கூறிச் செல்வர். இன்னுஞ்சிலர் 'அறிஞராய் நின்றுழி நின்றே' எனக் கூட்டி 'நாம் இன்னது செய்ய வேண்டும் இன்னது தவிர வேண்டும் என்றிருக்கையிலேயே எல்லாம் மாறுகின்றன என உரை கூறுவர். ஐம்புல நுகர்ச்சியைச் சிறுமைத் தொழில் என்றுணர்த்தப்பட்டது. நின்ற உழியாவது உடல் உயிரோடு கூடி நின்றநிலை.

இம்மூன்று செய்யுளானும் மனைவாழ்க்கையில் மயங்காது நிற்றலால் உளதாம் பெருமை கூறப்பட்டது.

(௩).

184. உறைப்பருங் காலத்தும் ஊற்றுநீர்க் கேணி
இறைத்துருணினும் ஊறாற்றும் என்பர்—கொடைக்கடனுஞ்
†சாஅயக் கண்ணும் பெரியார்போல் மற்றையார்
‡ஆஅயக் கண்ணும் அரிது.

பதவுரை:— என்பது [1]உறைப்பு அருங்காலத்தும்—மழை இல்லாது அருங்கோடையான காலத்திலும்; ஊற்றுநீர்க்கேணி—ஊற்று நீரையுள்ள கேணியானது; [2]இறைத்து உணினும்—தன்னிடத்து நீரை இறைத்து உண்ணக் கொடுத்தாயினும்; ஊர்

பா-ம்—†'சாஅயக் கண்ணும்—அச்சுப் பிரதி
‡'ஆஅயக் கண்ணும்—ஷை

[1]உறைப்பு அருங் காலத்தும்—மழைதுளித்த லில்லாத காலத்திலும்.

[2]இறைத்து உணினும்—இறைத்துக் குடித்தாலும்; பயிர்களுக்கு இறைத்துத் தாமும் பருகினும் என்பதுமாம்.

ஆற்றும்—ஒரு ஊரைப் [1]பரிகரிக்கும்; [அதுபோல] [2]கொடைக் கடனும்—கொடையினது தன்மையும்; [3]சாஅயக் கண்ணும் பெரியார் போல்—பெரியார் தமக்குத் தளர்ச்சி வந்தவிடத்தும் ஏற்பார்க்குக் கொடுப்பது போல; மறையார் [4]ஆஅயக் கண்ணும் அரிது—சிறியவர் செல்வம் பெற்றிருந்துங் கொடுப்பது அரிதென்றவாறு.

கேணியில் ஊறுநீர் இறைத்துப் போனாலும் மற்றும் ஊறிய நீர் தனக்கென வையாது யாவர்க்குங் கொடுப்பது போலப், பெருமைக்குணம் உடையாருந் தம்மில்லாமை நோக்காது கொடுப்பரெனப் பெருமையின் தன்மை கூறியது. கேணி இறைத் துண்ணக் கொடுத்ததாயினும் எனவே, அதனிடத்து மழைத்துளி நிறைவு போல நீரில்லாமை கூறியது.

பதுமனார்:— மழைபெயல் அரிய காலத்தும் ஊற்று நீரை யுடைய கேண் ஊறவூற இறைத்துணினும் ஊரை ஆற்றுமென்று சொல்வர். (அதுபோலச்) செல்வங்கெட்ட விடத்தும் பெரியார் போலக் கொடையாகிய கடனைச் செய்தன் மற்றைச் சிறியார் செல்வமாகிய விடத்தும் அவர்க்கு அரிது என்றவாறு.

உறைப்பு அருங்காலத்து—மழை யருக்குங்காலத்து. ஆற்றும்—அற்றவூட்டும். கொடைக் கடனும் — கொடையாகிய கடனும். கடன்—உடைமை. சாஅயக் கண்ணும்—சாய்ந்த விடத்தும் ஆஅயக் கண்ணும்—செல்வமாகிய விடத்தும்.

விளக்க உரை:— என்பது. உறைப்பு—மழை பெயல்; அருங் காலத்தும்—அரிய காலத்து; ஊற்றுநீர் கேணி—ஊறுகின்ற நீரையுடைய குளம்; இறைத்து உணினும் — இறைத்துக்

---

[1]பரிகரிக்கும்—காப்பாற்றும்.

[2]கொடைக்கடனும்— ஈதலாகிய கடமையும்.

[3]சாயக் கண்ணும்—வறுமையால் தளர்ந்தவிடத்தும்.

[4]ஆயக் கண்ணும்—செல்வத்தாற் பெருகிய காலத்தும்.

கொண்டு போய் உண்ணினும்; ஊர்ஆற்றும்—ஒருரைப்[1]பரிகரிக்கும் [அதுபோல] கொடைக் கடனும்—கொடுக்கிற முறைமையும்; சாஅயக் கண்ணும்—தளர்ந்த விடத்தும்; பெரியார் போல்—பெருமைக் குணமுடையாரைப் போலச் சுபாவமாக; மற்றை யார்—மற்றந்தச் சிறியவர்கள்; ஆஅயக் கண்ணும்—அரிது செல்வ முடையாராயினும் அவரைப்போலச் சுபாவத்தன்மை உண்டாதல் அரிது என்றவாறு.

சாயக்கண்ணும்—சாய்ந்த விடத்தும்.

ஒப்புமைப் பகுதி:-

"செய்கை யழிந்து சிதன்மண்டிற் றாயினும்
பெய்யா வொருசிறை பேரி லுடைத்தாகும்
எவ்வ முழந்தக் கடைத்துங் குடிப்பிறந்தார்
செய்வர் செயற்பா லவை".

—நாலடி. 147.

"செல்லா விடத்துங் குடிப்பிறந்தார் செய்வன
செல்விடத்துஞ் செய்யார் சிறியவர்—புல்வாய்
பருமம் பொறுப்பினும் பாய்பரி மாபோற்
பொருமுரண் ணாற்றுத லின்று".

—நாலடி. 149.

"எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத்—தூற்றாவர்
அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்".

—நாலடி. 150.

"உறுபுனல் தந்துல கூட்டி யறுமித்துங்
கல்லூற் றுழியூறு மாறேபோற்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க்காற்றிச்
செய்வர் செயற்பா லவை".

—நாலடி. 185.

---

[1]பரிகரித்தும். (தொ.பொ. 239—உரை. பு. வெ. 10. 1.)

''ஏட்டைப் பருவத்து மிற்பிறந்தார் செய்வன
மோட்டிடத்துஞ் செய்யார் முழுமக்கள்—கோட்டை
வயிரஞ் செறிப்பினும் வாட்கண்ணாய்! பன்றி
செயிர்வேழ மாகுத லின்று''.

—நாலடி. 358.

''பெருமை உடையவர் ஆற்றுவார் ஆற்றின்
அருமை உடைய செயல்''.

—குறள். 955.

குறிப்பு:—

ஊற்று நீர்-இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலை; ஊற்றையுடைய நீர் என விரியும். கேணி—அருவா நாட்டார் வழங்குந் திசைச்சொல். ஊர்—இடவாகுப்பெயர்; ஊரிலுள்ள மக்களை யுணர்த்திற்று; 'ஊருணி', 'ஊரடங்கிற்று' என்ற விடத்துமது. கொடைக் கடனும்—உம்மை அசை; உயர்வு சிறப்பு எனக் கொள்ளலுமாம். சாயக்கண், ஆயக்கண்—கண் விகுதிபெற்ற எதிர்கால வினையெச்சங்கள். இவ்விரண்டிலும் செய்யுளோசை நிறைத்தற்பொருட்டு அளபெடுத்து வந்தன. மற்றையார்—ஈண்டு மற்றை என்னும் இடைச்சொல் 'வேறு' என்னும் பொருளின்மேல் வந்தது. பெரியோர்களது தன்மையை முன்னிரண்டடிகளில் உபமானத்தால் கூறினமையின் அது பிறிது மொழிதல் என்னும் அணி.

(௮).

58. உறுபுனல் தந்துல(கு) ஊட்டி அறுமிடத்தும்
†கல்லூற்(று) உழியூறும் ஆறேபோல்—செல்வம்
பலர்க்காற்றிக் கெட்டுலந்தக் கண்ணுஞ் சிலர்க் காற்றிச்
செய்வர் செயற்பா லவை.

பா-ம்:—†'கல்லுற் றுழியூறும்'—பதுமனார்.

தருமர்:—என்பது. [1]உறுபுனல்—மிக்க புனலை; தந்து—கொண்டுவந்து; உலகு [2]ஊட்டி—உலகத்துள்ளார் உய்யும் படிக்குக் கொடுத்து; அறுமிடத்தும்—அந்நீர் அற்றவிடத்திலேயும்; கல்—கல்லினால்; [3]ஊற்று உழி—; ஊறும் ஆறேபோல்—நீர் ஊறிய ஆறுபோல; செல்வம் பலர்க்கு ஆற்றி—பெரியோர் தமது செல்வத்தைப் பலர்க்குங் கொடுத்து; கெட்டு உலந்தக்கண்ணும்-அதுபோய்த் தாம் வறுமையான காலத்திலும்; சிலர்க்கு ஆற்றி—தமக்கியன்ற வளவினால் இரப்பவர்க்குக் கொடுத்து; செயற்பாலவை — செய்யத்தக்க ஒப்புரவுகளை; செய்வர்—; என்றவாறு.

இது பெரியோர்க்கு இயற்கையாகிய தன்மை கூறியது.

பதுமனார்:—மிக்கநீரைத் தந்துலகத்தை ஊட்டி நீரற்ற காலத்துங் கல்லினவிடத்தூறும் ஆறேபோல், செல்வத்தைப் பலர்க்கீதலானே கெட்டு முடிந்தவிடத்தும் சிலர்க்காற்றிச் செய்யத்தக்க ஒப்புரவினைச் செய்வர் பெரியோர் என்றவாறு.

உறுபுனல்—மிக்கபுனல். உலந்த(க்கண்ணும்)—முடிந்தவிடத்தும்.

விளக்க உரை:—உறுபுனல் தந்து—மிக்க புனலைத் தந்து; உலகு ஊட்டி—உலகை யூட்டி; அறும் இடத்தும்—வற்றினவிடத்தும்; கல்—கல்லினவிடத்து; ஊற்று உழி—; ஊறும் ஆறேபோல்—ஊறும் ஆறேபோல; செல்வம் பலர்க்கு ஆற்றி—செல்வத்தைப் பலர்க்குங் கொடுத்து; கெட்டு உலந்தக்கண்ணும்—பரிகரிக்கையால் அந்தச் செல்வம் கெட்டு மிடித்தவிடத்தும்; சிலர்க்கு ஆற்றி—பின்புந் தமக்குள்ள வளவினால்

[1]தன்னிடந்துள்ள நீரை என்றுமாம்.

[2]ஊட்டி—உண்பித்து.

[3]ஊற்று உழி—ஊற்றுக்குழியில்; கல் ஊற்று உழி—தோண்டப்படுகிற ஊற்றுக்குழில்.

சிலர்க்குங் கொடுத்து; செயற்பாலவை—செய்யத்தக்க ஒப்புரவு களை; செய்வர்—; என்றவாறு.

மேற்கோள் பகுதி:-

சேனா } :—'உறு' என்னும் உரிச்சொல் மிகுதிப்
தெய்வச் } பொருளில் வரும் என்பதற்கு "உறுபுனல் தந்துல கூட்டி" என்பதை மேற்கோளாகக் காட்டுவர்

—தொல். சொல். சூ. 299.

—தொல். சொல். சூ. 294.

இ-வி:—இங்கும் அதற்கே மேற்கோளாக வரும்.

—சூ. 281.

வீரசோ:—ஈற்றடி ஒழிந்து ஏனையடிகள் தனிச் சொற் பெற்று வந்ததற்கு இச் செய்யுள் மேற்கோளாக வரும்.

—யாப்பு. சூ. 8.

ஒப்புமைப் பகுதி:-

"எற்றொன்று மில்லா விடத்துங் குடிப்பிறந்தார்
அற்றுத்தற் சேர்ந்தார்க் கசைவிடத் தூற்றாவர்
அற்றக் கடைத்து மகல்யா றகழ்ந்தக்கால்
தெற்றெனத் தெண்ணீர் படும்".

—நாலடி. 150.

"இடனில் பருவத்தும் ஒப்புரவிற் கொல்லார்
கடனறி காட்சி யவர்".

—குறள். 218.

"ஆற்றுப் பெருக்கற்(று) அடிசுடும்அந் நாளுமவ்வா(று)
ஊற்றுப் பெருக்கால் உலகூட்டும்—ஏற்றவர்க்கு
நல்ல குடிப்பிறந்தார் நல்கூர்ந்தா ரானாலும்
இல்லையென மாட்டார் இசைந்து".

—நல்வழி, 9.

குறிப்பு:—

அறுமிடத்தும், உலந்தக்கண்ணும்—உம்மைகள் இழிவு சிறப்புப் பொருளன. பலர்க்கு—பலர்க்கும் என்ற முற்றும்மை விகாரத்தால் தொக்கது. கல்லூற்று — வினைத்தொகை. ஆறேபோல்—ஏகாரம் பிரிநிலை. பெரியோர்க்குளதாகிய தன்மை இச்செய்யுளில் உவமையான் விளக்கப்பட்டது. உவமையணி.

(ரு)

186. †பெருமலை நாட! பெரியோர்கண் தீமை
கருநரைமேற் சூடேபோல் தோன்றும்—கருநரையைக்
கொன்றன்ன இன்னா செயினுஞ் சிறியார்மேல்
ஒன்றானுந் ‡தோன்றாக் கெடும்.

தருமர்:— என்பது. பெருமலை நாட!—உயர்ந்த மலை சூழ்ந்த நாட்டையுடையவனே!; பெரியோர்கண் தீமை—பெரியோரிடத்துண்டாகிய குற்றமானது; [1]கருநரைமேல்—பெரிய வெள்ளேற்றின்மேல்; [2]சூடேபோல் தோன்றும்—சூட்டேறுபோல தோன்றா நிற்கும்; கருநரையை—பெரிய வெள்ளேற்றை; கொன்று அன்ன இன்னா செயினும்—கொன்ற வத்தனை குற்றத்தைச் சிறியோர் செய்யினும் அது; சிறியார் மேல்—அந்தச் சிறியாரிடத்தும்; [3]ஒன்றானும் தோன்றாக் கெடும் —ஒரு குற்றமாகத் தோன்றாதமைந்துபோம் என்றவாறு.

பா-ம்:—†'பெருவரைநாட'—.

‡'தோன்றா கெடும்'—விளக்க வுரை.

[1]கருநரைமேல்—பெருமையாகிய வெள்ளெருத்தின் மேலுள்ள.

[2]சூடேபோல் தோன்றும்—சூட்டின் வடுவேபோல நன்கு விளங்கும்; சூடு—முசுப்பு என்பாரு முளர்.

[3]ஒன்றானும் தோன்றாக் கெடும்—ஒரு குற்றமாயினும் விளங்கித் தோன்றாம வழியும்.

"கருநரையைக் கொன்றன்ன வின்னா செயினும்" எனவே அதனைக் கொல்வது பசுவைக் கொன்ற தோழத்தோடொக்கும். அத்தன்மையாகிய குற்றங்களைச் செயினும் அது அவர்க்கு இயற்கையெனப் பிரகாசமாம்; ஆதலால் அவர்க்கு இக்குண மில்லை யென்பதாம்.

பதுமனார்:— பெரிய மலைநாடனே! பெரியவர் மாட்டுண்டாய தீமை பெரிய வெள்ளேற்றின்மேற் சூடேபோல விளங்கித் தோன்றும். அக்கருநரையைக் கொன்றாற்போலும் இன்னாதனவற்றைச் செய்தாராயினுஞ் சிறியவர்மாட்டு ஒன்றாயினுந் தோன்றாவாய்க் கெடும் என்றவாறு.

கருநரை—வெள்ளேறு.

விளக்க உரை:— என்பது. பெருமலை நாட!—பெரிய மலை நாடனே! பெரியோர்கண் தீமை—பெரியோரிடத்துண்டாகிய குற்றம்; கருநரைமேல்-பெரிய வெள்ளை எருத்தின்மேல்; சூடேபோல் தோன்றும்-சூட்டேறுபோல உயர்ந்து தோன்றும்; கருநரையை—பெரிய வெள்ளை எருத்தினை; கொன்று அன்ன இன்னா செயினும்—கொன்றாற்போலுங் குற்றங்களைச் சிறியார் செய்யினும், சிறியார்மேல்—அந்தச் சிறியாரிடத்து; ஒன்றானும் தோன்றா கெடும்—ஒருகுற்றமுந் தோன்றாவாய்க் கெட்டுவிடும் என்றவாறு.

கருநரை—வெள்ளேறு.

மேற்கோள் பகுதி:-

திருநூற்று:— "நரை—இடபம்; 'கருநரை மேற் சூடேபோல்' என்றார் பிறரும்" எனவரும்.

—திருநூற்று.34.

ஒப்புமைப் பகுதி:-

"குடிப்பிறந்தார் கண்விளங்கும் குற்றம் விசும்பின்
மதிக்கண் மறுப்போல் உயர்ந்து".

—குறள். 957.

"திரைதொடி தாங்கிய நீடோள்மாற் கேயும்
உரையொழியா வாகும் உயர்ந்தோர்கட் குற்றம்
மரையாகன் றூட்டும் மலைநாட! மாயா
நரையான் புறத்திட்ட சூடு".

—பழ. 48.

"கன்றி முதிர்ந்த கழியப்பான் னாள்செயினும்
ஒன்றும் சிறியார்கண் என்றானும்—தோன்றாதாம்
ஒன்றாய் விடினும் உயர்ந்தார்ப் படுங்குற்றம்
குன்றின்மேல் இட்ட விளக்கு".

—பழ. 204.

"விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை யில்லார்
கதிப்பவர் நூலினைக் கையிகந்தா ராகிப்
பதிப்பட வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்துப் பட்ட மறு".

— பழ. 258.

"விதிப்பட்ட நூலுணர்ந்து வேற்றுமை நீக்கிக்
கதிப்பட்ட நூலினைக் கையிகந் தாக்கிப்
பதிப்பட்டு வாழ்வார் பழியாய செய்தல்
மதிப்புறத்திற் பட்ட மறு".

—அறநெறி. 162.

"தோன்றினான் குன்றத்துச்சிச் சுடர்ப்பழி விளக்கிட்டன்றே".
—சீவக. நாமகள். 233-4.

குறிப்பு:—

நரை-வெண்மை; அது வெள்ளெருதுக்குப் பண்பாகுபெயராய் வந்தது. சூடு-சுடப்படுவது; முதனிலை திரிந்தது.

தோன்றா-ஈறுகெட்ட எதிர்மறை வினையெச்சம், 'தோன்றா கெடும்' என ஒற்று மிகாமற் பாடங்கொண்டு அஃறிணைப் பன்மை முற்றெச்சமென்பாரு முளர். ஒன்றானும்—ஆன், ஆயின் என்பதன் விகாரம்; உம்—இழிவு சிறப்பு. தோன்றுதலாவது, யாவருங் கருதிப் பேசுதல்.

(சு).

187. †இசைந்த சிறுமை ‡இயல்பிலா தார்கண்
பசைந்த துணையும் பரிவாம்—அசைந்த
நகையேயும் வேண்டாத நல்லறிவி னார்கண்
பகையேயும் பாடு பெறும்.

தருமர்:— என்பது. [1]சிறுமை இசைந்த—சிறுமைக் குணம் பொருந்திய; இயல்பு இலாதார்கண் — பண்பிலாதாரிடத்து; பசைந்த துணையும்—நட்புக்கொண்ட வளவும்; பரிவு ஆம்—துன்பத்தையே தரும்; [2]அசைந்த—தளர்ந்த செய்திகளை; [3]நகையேயும்—நகை செய்யுங் காலத்திலும்; வேண்டாத—வேண்டியிராத; நல்லறிவினார்கண்—நல்லறிவினையுடையாரிடத்து; பகையேயும்—கொண்ட பகையாகிலும்; பாடுபெறும்—பெருமையைத் தரும் என்றவாறு.

எனவே பகை, நட்பு, உறவு, அயலாரென்னும் வேற்றுமை பெரியோரிடத்தில்லை யாதலால், சிறியோரிடத்து இணங்கி இம்மை மறுமை இரண்டினுந் துன்பம் பெறுவதில், பெரியோரிடத்துப் பகையாயினும் நன்றென்று அவர் இயல்பு கூறிய

பா-ம்:—†'இயைந்த'—பதுமனார்.

‡ 1. 'இயைபிலார் தங்கண்—பதுமனார். 2. 'இயைபிலா தார்கண்'—விளக்கவுரை.

[1]இழிக்குணம் பொருந்திய என்றுமாம். சிறுமை—நற்குணங்கள் யாவுமின்மை.

[2]அசைந்த—பழிப்பட்ட செயல்களை; தகாதவைகளை என்றுமாம்.

[3]நகையேயும்—விளையாட்டிலேயும், களிக்குங் காலத்தும் என்றுமாம்.

வாறு.

பதுமனார்:— பொருந்திய சிறுமையையுடைய குணம் இல்லாதார்மாட்டு நண்புசெய்த அத்துணையுந் துன்பத்திற்குக் காரணமாம். ஒழுக்கத்தின் வேறுபட்டனவற்றை நகையின் கண்ணும், பிறரைச் சொல்லுதல் வேண்டாத நல்லறிவினார் மாட்டுக் கொண்ட பகையேயும் பெருமையைப் பெறுமென்ற வாறு.

இயைபில்லாதார்—நற்குணத்தியல் பில்லாதார். பசைதல்—நட்புச் செய்தல். பரிவு—இரக்கம். அசைந்த—ஒழுக்கத்தின் வேறுபட்டனவற்றை. (நகையேயும் வேண்டாத) வேண்டாத நகையிடத்தும் பிறரைச் சொல்லுதல். பாடு—பெருமை.

விளக்க உரை:— என்பது இசைந்த சிறுமை—பொருந்திய சிறுமைக்குணத்தையுடைய; இயைபு இலாதார்கண்—பண்பிலா தாரிடத்து; பசைந்த துணையும்—கலந்து நட்புக் கொண்டவள வும்; பரிவு ஆம்—துன்பத்தையே தரும்; அசைந்த தளர்ந்த செய்திகளை; நகையேயும்—மகிழ்ச்சியின் கண்ணும்; வேண் டாத — வேண்டியிராத; நல்லறிவினார்கண் — நல்லறிவினை யுடையாரிடத்து; பகையேயும்—கொண்ட பகையும்; பாடு பெறும்—பெருமையுண்டாம் என்றவாறு.

பசைதல்—நட்புச்செய்தல். பாடு—பெருமை.

ஒப்புமைப் பகுதி:-

"நுண்ணுணர்வி னாரோடு கூடி நுகர்வுடைமை
விண்ணுலகே யொக்கும் விழைவிற்றால்—நுண்ணூல்
உணர்வில ராகிய வூதிய மில்லார்ப்
புணர்தல் நிரயத்து ளொன்று".

—நாலடி. 233.

† நாலடியார் 137-ஆம் செய்யுளினது கருத்துங் காண்க.

"பேதை பெருங்கெழீஇ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்".

—குறள். 816.

"இழிந்த மாக்களொடு இன்பம் ஆர்தலின்
உயர்ந்த மக்களொடு உறுபகை இனிது"

—பெருங். 4:4:21—2.

'நகையேயும்....நல்லறிவினார்':—
"நகையினும் பொய்யா வாய்மை"

—பதிற்.70.

(எ).

188. *மெல்லிய நல்லாருண் மேன்மை அதுவிறந்(து)
‡ஒல்லாருட் கூற்றுட்கும் உட்குடைமை—எல்லாஞ்
சலவருட் சாலச் சலமே நலவருள்
நன்மை வரம்பாய் விடல்.

குருமர்:— என்பது. [1]மெல்லிய நல்லாருள் — மென்மைக் குணமுடையவரிடத்து; [2]மேன்மை — தாமும் மேன்மையை வேண்டுக; [3]அது இறந்து — அக்குணமின்றிய; ஒல்லாருள்—பகைவரிடத்து; கூற்று உட்கும்—கூற்றுவனும் அஞ்சத்தக்க; உட்கு உடைமை—அச்சஞ் செய்வதை வேண்டுக; [4]எல்லாம் சல

பா-ம்:—*மெல்வியல் நல்லாருண் மென்மை'—அச்சுப்பிரதி.
(புறத். பா. 540).

‡'ஒன்னாருள்'—பதுமனார் & விளக்கவுரை.

(புறத்.பா. 540).

[1]மெல்லிய நல்லாருள்-வலிமையில்லாத நண்பரிடத்து; மெல்லிய குண முள்ள பெண்டிர்களிடத்தில் என்றுமாம். (புறத்.பா. 540).

[2]'மென்மை' எனப் பாடங்கொண்டு மென்மையை (சாந்த குணமுடைமையை) வேண்டுக என்று பொருள் கூறுவார்.

[3]அது இறந்து—அம்மென்மையினீங்கி; இனி, 'ஒன்னாருள்' அது இறந்து' எனக்கூட்டி 'பகைவரிடத்து மேன்மையாகிய இயல்பை விட்டு, எனப்பொருள் கொள்ளுதலும் சிறப்புடைத்து.

[4]எல்லாம் சலவருள்—எல்லாச் செயலும் வஞ்சனையாரிடத்து;

வருள்—எல்லாவற்றாலுந் தோன்றாப் பகையாகச் சலஞ் செய்வாரிடத்து; சால—தாமு மிகுதியாக; [1]சலமே-சலத்தை வேண்டுக; [2]நலவருள் — இவ்வகைத்தாய் ஒழுகுதல் நல்லவருளாகிய; நன்மை வரம்பாய் விடல்—நன்மைக்கு வரம்பாய் விடுமென்றவாறு.

அதிகாரங் கூறுவதில் பெரியோர்க்குப் பகை, நட்பு என்னும் வேறுபாடில்லையெனக் கூறி, இவ்விடத்து மாறுபடக் கூறலாமோவெனில் இவை அவர்க்கல்ல. மற்றுள்ள உயிர்கட்குப் பகை செய்யில் அவர் தமக்கு நட்பாயினும், அவர்மேல் கூற்றுவனும் அஞ்சும்படிபோல அஞ்சுதல் பண்ணியதனை நீக்குவர். மற்றவையும் இப்படிக் கண்டுகொள்க.

பதுமனார்:— மெல்லிய வியல்பினையுடைய நல்லாரிடத்து மேன்மையைய வேண்டுக. பகைவரிடத்துக் கூற்றுவனும் அஞ்சத்தக்க அச்சத்தைச் செய்யும் வலியை வேண்டுக. எல்லாம் படிறேசெய்யும் படிறுடையார் மாட்டுப் படிறுடைமையை வேண்டுக. நல்ல பண்புடையார்மாட்டு நன்மைக் கெல்லையை வேண்டுக என்றவாறு.

அதுவிறந்து—அதுமிக்கு. வரம்பு—எல்லை. அதுமிகுத்து என்றதனைப் பொருடோறும் ஒட்டுக.

விளக்க உரை:— என்பது. மெல்லிய நல்லாருள்—மெல்லிய இயல்பினையுடைய நல்லாரிடத்து; மேன்மை — மேன்மை வேண்டுக; அதுவிறந்து—அதுவொழிந்த; ஒன்னாருள்—பகைவரிடத்து; கூற்று உட்கும்—கூற்றுவனும் அஞ்சத்தக்க; உட்கு உடைமை—அச்சமுடைமையை வேண்டுக; எல்லாம் சலவருள் —எல்லாவற்றாலும் பொய் கொண்டிருப்பாரிடத்து; சால

எல்லாக் காரியங்களிலும் பொய்யரிடத்து என்றுமாம்.

[1]சலமே—வஞ்சனையை; பொய்பேசுதலை வேண்டுக என்பதாம்.

[2]நலவருள் வரம்பாய் விடல்—நல்லோரிடத்து நற்குண முடைமையும் ஒருவருக்கு எல்லையாக விடுக.

சலமே—மிகவு மாறுபடுதலை வேண்டுக; நலவருள்—எல்லா நன்மைக்குண முடையாரிடத்து; நன்மை வரம்பாய்விடல்—நன்மைக்கெல்லையை வேண்டுக வென்றவாறு.

முன்னே பகைவர் நட்டாரென்னும் வேறுபாடு இலரென்று சொல்லிவைத்து, இப்போது இப்படிச் சொல்லுதல் என்னை யெனில் இதுவும் அவர்க்கல்ல. மற்றுள்ள வுயிர்களிடத்து யாவர் சிலர் துன்பங்களைச் செய்தல், கொலையைச் செய்தலாகிய இப்படி ஒத்தவரிடத்துத் தன்னுயிர்க்கு வந்ததுபோல, அப்படி ஒத்தாரைத்தள்ளி உயிர்களைப் பரிகரிக்கவேண்டு மென்பது கொண்டு இப்பாட்டுக்குச் சொன்னாராம்.

பொழிப்புரை:--

எல்லாம் சலவருள் சால சலமே—எல்லாம் படிறே செய்யும் படிறுடையார் மாட்டுப் படிறுடைமையை வேண்டுக. அது இறந்து—அதுமிக்கு. வரம்பு-எல்லை. அதுமிகுத்தென்ற தனைப் பொருடோறு மொட்டுக.

மேற்கோள் பகுதி:-

இளம்:—"ஒருநெறிப் படாதும் ஓரியன் முடியாதும் வருமிடம் வழுவாம். அஃதாவது புணர்தல் வேண்டித் தோழியை யிரந்து குறையுறுவான், அவ்விடத்திற்குத் தக்கவுரை கூறாது தன்னாற்றலும், ஆற்றாமையும், பிறவுங் கூறல். உ-ம். "மெல்லியனல்லாய் மென்மை யதுவிறந்து................ நன்மை வரம்பாய் விடல்" இதனானு மறிக" என இச்செய்யுளை மேற்கோளாகக் காட்டுவர்.

—தொல்.செய்.சூ.201.

ஒப்புமைப் பகுதி:-

'மெல்லியல் நல்லாருள் மென்மை':-.

"துப்பாராய்த்
தூமலரின் மென்மையுறு தோற்றத்தே வைத்துய்க்க
ஏமக் கிழத்தி யறிந்து".

—இன் .22.

குறிப்பு:-

மேன்மைக்குணமாவது, பிறர்செய்த தீங்கைப் பாராட்டாத குணம். கூற்று—கூற்றும் என்னும் உயர்வு சிறப்பும்மை தொக்கது. உட்கு என்றது உபசார வழக்கு; உட்கை உண்டாக்குவது உட்கு எனப்பட்டது. உட்கு—முதனிலைத் தொழிற் பெயர். சலவர்—ஈறு திரிந்த குறிப்புவினைப் பெயர். எல்லாஞ் சலவர்—திணைவழுவமைதி. ஆய்விடல்—'அல்' ஈற்று உடன்பாட்டு வியங்கோள் வினைமுற்று. 'விடு' என்பது துணிவுப்பொருளின்கண் வந்தது. 'வரம்பாய் விடல்' என்பது கடை விளக்கணியாகக் கொண்டு இச்செய்யுளிற்கு உரை கூறலு முண்டு. இப்பதிப்பு உரையாசிரியர்கள் 'வேண்டுக' என்னும் வினைவருவித்துத் தனிவாக்கியமாக ஒவ்வொரு பொருளையும் முடித்தனர்.

(அ).

189. **கடுக்கி ஒருவன் கடுங்குறளை பேசி**
மயக்கி விடினும் மனப்பிரிப்பொன்(று) இன்றித்
துளக்கம் இலாதவர் தூய மனத்தார்
விளக்கினுள் ஒண்சுடரே போன்று.

தருமர்:—என்பது. ஒருவன்—; [1]கடுக்கி—தம்மைக் கூடியதாகப் பண்ணி; [2]கடுங்குறளை பேசி—மிகவும் பொல்லாத சொற்களைச் சொல்லி; மயக்கி விடினும்—வேறுபடுத்திவிடினும்; [3]மனம் பிரிப்பு ஒன்று இன்றி—தம்முடைய மனத்திலே வேறுபா

---

[1]கடுக்கி—1. 'கடுமை யென்னும் பண்படியாய்ப் பிறந்த வினையெச்சமெனக்கொண்டு; 'முகத்தைக் கடுமையாக வைத்துக்கொண்டு' எனப் பொருள் கூறுவர்; 2. மற்றுஞ் சிலர் 'கடுகி' என்பது 'கடுக்கி' எனக் ககரவொற்று விரிந்துநின்றது எனக் கொண்டு, 'விரைந்து வந்து' எனப் பொருள் கூறுவர்.

[2]கடுங் குறளை பேசி—கொடிய கோள்களைச் சொல்லி.

[3]மனத்தால் நட்பினைப் பிரித்தல் சிறிதுமில்லாமல் என்றுமாம்.

டொன்றுமில்லாது; [1]விளக்கினுள் — அசையாது நின்று எரியும் விளக்கினில்; ஒள்சுடரே போன்று—ஒள்ளிய சுடர்போல; [2]தூய மனத்தார்—மனந்தூயராய்; [3]துளக்கம் இலாதவர்—நிலை தளராது திண்ணியராய் நிற்பர் என்றவாறு.

சிறியார் தமக்குப் பொல்லாங்கு செய்தாலும் தம் உயிருக்கு வரும் வருத்தத்தை நோக்காது, தமது தன்மையில் திரியாது நிற்பரென்று அவர்குணங்களை வியந்து கூறியது.

பதுமனார்:—தம்மைக் கடியராகப் பண்ணி ஒருவன் கடுங்குறளைகளைப் பேசி வேறுபடுத்திவிடினும், தம்மனத்து வேறுபாடொன்றின்றி விளக்கில் ஒண்சுடரே போன்று தூய மனத்தார், திண்ணியராய் நிலைதளரார் என்றவாறு.

கடுக்கி—தம்மைக் கடியராகப் பண்ணி. மயக்கி—நின்ற நிலையைக் கெடும்படி மயக்கி. பரிப்பு—இரங்குதல். துளக்க மில்லாதவர்—நிலைதளராதவர்.

விளக்க உரை:— என்பது. ஒருவன்—; கடுக்கி—தம்மைக் கடியராகப் பண்ணி; கடுங்குறளை பேசி—மிகவும் பொல்லாத சொற்களைச் சொல்லி; மயக்கிவிடினும்—வேறு படுத்திவிடினும்; மனம் பிரிப்பு ஒன்று இன்றி—தன் மனத்து வேறுபாடொன்றும் இன்றி; விளக்கினுள்—அசையாமல் நின்று எரியும் விளக்கினுள்; ஒள்சுடரே போன்று—ஒள்ளிய சுடரே போன்று; தூய மனத்தார்—மனமுந் தூயராய்; துளக்கம் இலாதவர்—திண்ணியராய்த் தமது தன்மையுஞ் சலியார் என்ற

---

[1]'விளக்குத்தண்டின் ஏற்றிய என்றுமாம். துளக்க மில்லாதவர் விளக்கினுள் ஒண்சுடரே போன்று தூயமனத்தார்' என்று கூட்டிப் பொருள் கொள்ளுதலு மமையும்.

[2]தூயமனத்தார்—பரிசுத்தமான மனத்தை யுடையவராவர்; குற்றமில்லாத மனமுடையராயிருப்பர் என்றுமாம்.

[3]துளக்கம் இலாதவர்—அறிவு கலங்குதல் இல்லாதவர்.

வாறு.

தம்முடைய உயிர்க்கும் வருந்தார் இன்னுமது [1]இப்படியே கண்டுகொள்க.

ஒப்புமைப் பகுதி:—

'துளக்கம்':—

'திருமுடி துளக்கி நோக்கி'

—சிந்தா-1881.

'துளக்கில் விளக்கை'

—தேவா. 13-6.

'சடைமுடி துளக்கி'

—கம்பன்.

'குறளை':—

''பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லென''

—மணி. 30-68.

குறிப்பு:—

குறளை—பழிமொழி, புறங்கூறல்; வாக்குக் குற்றம் நான்கனுள் ஒன்று. மற்றவை பொய், வன்சொல், பயனில் சொல் என்பன. ஒன்று—ஈண்டு முற்றும்மை தொக்கது; சிறிதென்பதைக் காட்டிநின்று. விளக்கு—தானியாகு பெயரென்ப. சுடரே—ஏகாரம் உயர்வு சிறப்பு.

(க௯).

190. முற்றுற்றுந் துற்றினை நாளும் அறஞ்செய்து
பிற்றுற்றுத் துற்றுவர் சான்றவர்—அத்துற்று

பா-ம்:—[1]'இப்பாட்டுள்ளே'.

முக்குற்ற நீக்கி முடியும் அளவெல்லாந்
துக்கத்துள் நீக்கி விடும்.

தருமர்:—என்பது. [1]சான்றவர்-அமைந்தோர்; முன் துற்றம் துற்றினை—முற்பட உண்ணும் உணவினை; நாளும்—நாள் தோறும்; அறஞ்செய்து-; பின்துற்று-பிற்பட உண்ணும் உண வினை; துற்றுவர்-உண்பர்; அத்துற்று-அப்படியுண்டவூண்; முக்குற்றம் நீக்கி-காம, வெகுளி, மயக்கமென்னும் மூன்று குற்றத்தையுந் தள்ளி' [2]முடியும் அளவு எல்லாம்-தாம் இறக்கு மளவும்; [3]துக்கத்துள் நீக்கிவிடும்-எல்லாத் துன்பங்களையும் நீக்கி விடும் என்றவாறு.

'முற்றுற்றுந் துற்றிலன' என்றது கிடைத்த பொருளைத் தனக்கென்று எண்ணாது முந்திக் தருமத்திற்குதவிப், பிறகு எவ்வளவாகிலுங் கிடைத்தது தமக்கு உணவாக்கிக் கொள்வது இறக்குமளவெல்லாங் காப்பது முன்னும் இப்படிச் செய்யில் இம்மை மறுமையிலுங் காக்கு மென்பதாம்.

பதுமனார்:—முற்பட்ட வுண்ணும் உணவினை நாடோறும் அறமாகச் செய்து பிற்பட உண்ணும் உணவினை உண்பர் அமைந்தோர். அப்பெற்றியானுண்டவூண் காம, வெகுளி, மயக்கங்களை நீக்கி வீடுபெறுமளவும் எல்லாத் துன்பங்களையும் நீக்கும் என்றவாறு.

முன்துற்றும் துற்று. முற்படவுண்ணும் ஊண். முக்குற்றம் காம, வெகுளி, மயக்கம். முடியும் அளவு—வீடுபெறுமளவும்.

விளக்க உரை:— என்பது. சான்றவர்—அமைந்தோர்;

---

[1]சான்றவர்— நற்குண நற்செய்கைகளான் நிறைந்தவர்; மேலோர்.

[2]உடலினின்று உயிர்நீங்கும் அளவில் என்பதாம்.

[3]துக்கத்துள் நீக்கிவிடும்-துக்கத்துக்குக் காரணமாகிய பிறப் பினின்றும் ஒழித்துவிடும் என்பதாம்.

முன்துற்றும் துற்றுனை-முற்பட உண்ணும் வுறி; நாளும் அறம் செய்து-நாடோறும் அறமாகச் செய்து; பின்துற்று-பிற்பட உண்ணும் உணவினை; துற்றுவர்-உண்பர்; அத்துற்று-அப் பெற்றியான வூண்; முக்குற்றம் நீக்கி-காம, வெகுளி, மயக்க மென்னும் முக்குற்றங்களையுங் களைந்து; முடியும் அளவு எல்லாம்-வீடுபெறுமளவும்; துக்கத்துள் நீக்கி விடும்-எல்லாத் துன்பங்களையும் நீக்குமென்றவாறு.

மூன்று குற்றங்களையும் இவ்விடத்தில் நின்று நீக்கி வீடு பெருமளவும், அவற்றினுள்ள துன்பங்களை நீக்கிக்கொண்டு சென்றுவிடுமாதலால், இதனை யறிந்து பின்னை என்னாமல் இட்டுத்துய்ப்பர் சான்றவர் என்றவாறு.

ஒப்புமைப் பகுதி:—

''காமம் வெகுளி மயக்கம் இவைமூன்றன்
நாமம் கெடக்கெடும் நோய்''.

—குறள். 360.

''கொடுவாய் இரும்பின் கோளிரை துற்றி''.

—அகம். 36.

''இகலன் வாய்த் துற்றிய தோற்றம்''.

—களவழி. 28.

''பற்று இன்று துற்றின்று''.

—புறப். வெ. 10-4.

குறிப்பு:—

'துற்று' என்னும் முதனிலைத் தொழிற்பெயர் உண்ணப்படும் பொருளுக்காயிற்று; ஆகவே தொழிலாகு பெயர். துற்றவர்-பல்லோர் படர்க்கை எதிர்கால வினைமுற்று; துற்று-பகுதி; வ்-எதிர்கால இடை நிலை; அர்-பல்லோர் படர்க்கை விகுதி. இனி, துத்தும், துத்தினை, துத்து, துத்துவர், அத்துத்து எனப்

பாடங் கொள்வாரும் உளர். அப்பாடம் வழுவாதலறிக. (ய).

---

20. தாளாண்மை.

தருமர்:—அஃதாவது, முயற்சி உடைமை. முயற்சி செய்யவே பொருள் வருவாய் உண்டாய்ப் பொருளாலே குலமும், பெருமையும், மேம்பாடும், மதிப்பும், சுற்றமும், நட்பும், அறமும், இன்பமும், உண்டாம் என்பதுகொண்டு மடிதல் இன்றியே முயற்சி செய்ய வேண்டுமென்பதாம்.

பதுமனார்:—அஃதாவது. அறம், பொருள், இன்பம் வீடு, என்னும் நான்கினையும் பெறுதற்கு முன்புசெய்த வினைகள் கடுகப் பலிப்பதற்கும் ஏதுவாகிய முயற்சிகளை உடையராதல்.

தாள்—முயற்சி. ஆண்மை—அதனை உடைமை.

விளக்க உரை:—அஃதாவது. அறம், பொருள், இன்பம், வீடென்னும் நான்கினையும் பெறுவதற்கு முன்பு செய்தவினைகள் கடுகப் பலிப்பதற்கு ஏதுவாகிய முயற்சியை உடையார் ஆதல்.

தாளாண்மை—முயற்சி. ஆண்மை—அதனை உடைமை என்றவாறு.

குறிப்பு:—

'ஆள்வினையுடைமை' :—

பரிமேல்:—அஃதாவது. இடைவிடாத மெய்ம்முயற்சி உடையனாதல். அஃது ஆளும்வினை எனக் காரியத்தால் கூறப் பட்டது. மடிகெடுத்தாலும் வினைமுயற்சியானன்றி ஆளப் படாமையின், இது மடி இன்மையின் பின்வைக்கப்பட்டது.

மணக்:—ஆள்வினையுடைமையாவது முயற்சி உடைமை. செய்யுங்காரியம் உயர நினைத்துச் சோம்புதல் இல்லாதிருந் தாலும் அது முடியுமாறு முயல வேண்டுதலின், அதன்பின் இது கூறப்பட்டது.

பரிதி:—ஆள்வினையுடைமையாவது காரியத்தில் முயற்சி யுடைமை எ-று.

—குறள். அதி.

191. கோளாற்றக் கொள்ளாக் குளத்தின்கீழ்ப் பைங்கூழ்போற்
கேளீவ துண்டு கிளைகளோ துஞ்சுப
வாளாடு கூத்தியர் கண்போல் தடுமாறும்
தாளாளர்க் குண்டோ தவறு.

தருமர்:—என்பது. கோள் ஆற்றக் கொள்ளாக் குளத்தின் கீழ் பைங்கூழ் போல்—கொள்ளுதற் குரிய(நீரை) மிகுதியாகக் கொள்ளமாட்டாத குளத்தின் கீழுள்ள பசிய பயிர்கள் (தனக்கு எப்போதைக்கு வேண்டும் என்று கொள்ளும் நீரை மிகுதியாகக் கொள்ளவறியாது குளத்தில்) இருப்பதுபோல; கேள்ஈவது உண்டு கிளைகளோ துஞ்சுப—அப்பயிரின் தன்மையராய்த் தங்குடியில் ஒருவன் கொடுப்பதனை உண்டு [அவரல்லாது இல்லை என்றிருக்கும்] தமது கிளைஞரானவர் வருவாய் இல்லா மையால் பசியால் வருந்தி அவரப்படி பசியால் வருந்தாத படிக்குத் தம் வருத்தம் நோக்காது துஞ்சுப; வாள் ஆடு கூத்தியர் கண் போல் தடுமாறுந் தாளாளர்க்கு உண்டோ தவறு—வாளை நோக்கி ஆடுகின்ற மகளிர் கண்கள் போலத் தடுமாறி முயற்சி செய்யும் அவற்குத் தவறு உண்டோ, என்றவாறு.

தவறு என்பது வேறு கிளையின்றித் தம்மையே நோக்கி இருக்கும் தங்கிளைஞர் பசியால் வருந்தி இருக்கவும், முயற்சி செய்தவரைப் பரிகரியாது, மடியுற்றிருக்கிற பிறரால், பழிக்கப் படுங் குற்றமாய், மடிதல் இல்லாது வாளை நோக்கி ஆடும் நடன மகளிர் கண்போல தடுமாறினவன் முயற்சி அருமை நோக்கி, அதற்கு இடையூறு வாராது, தெய்வம் துணையாம் என்பதா யிற்று.

பதுமனார்:—என்பது. கோள்மிக்க கொள்ளாச் சிறு குளத்தின் கீழ்ப்பயிரே போலக், கேள் ஈவதனை உண்டு சுற்றத்தார் இறக்க வாளாடு கூத்தியர்கண்ணே போலப் புடைபெயர்ந்து முயலும் முயற்சியை உடையார்க்குத் தவறில்லை எ—று.

(கோளாற்றக் கொள்ளா)—கோளைமிக்க கொள்ளாத. பைங்கூழ்-பசியபயிர் கிளைகள். முயற்சி இல்லாத கிளைகள். வாளாடு—வாட்பிடித்துச் சுழற்றும். கூத்து ஆடுவாள் கண்போலப் புடைபெயரும்.

விளக்க உரை:—என்பது. பைங்கூழாகிய இலேசத்தை ஆரத் தண்ணீரில்லாத குளத்தின்கீழ்ப் பயிரேபோலக் கேள் ஈவதனை உண்டு சுற்றத்தார் இறப்பதாக. அதுபோலன்றி; வாளாடு கூத்தியர் கண்போல் புடைபெயர்ந்து முயலும் முயற்சியை உடையார்க்கு உற்றவரில்லை என்றவாறு.

ஆற்றுத் தண்ணீரை நிறையக் கொள்ளா என்றுமாம்.

கொள்கரையைப் பைங்கூழினது துயரந் தீர்க்க அருகு வருணி இல்லாத குளம்போலத் [1]தன் உச்சாயமில்லாமல் கேள் ஈவது உண்டு. பின் அவன் கை வறண்டால் அஞ்சுங்கிளை போலன்றி வாளைத் [2]தெற்றியின் நோக்கிக், கூத்து இயற்று வார் கண்போலச், சபையுந், தானமும், பகையும், நிலமும், பார்க்கு மதுபோல முயலுமுயற்சியை உடையார்க்குத் தவறில்லை.

(௧).

192. ஆடுகோ டாகி அதரிடை நின்றதூஉங்
[3]காழ்பட்ட கண்ணே [4]களிறிணைக்குங் கந்தாகும்

---

[1]உச்சாயம்—உயர்வு.

'உச்சாயமாக முகமன்கள் உரைசெய்து'
—நல்லா. பாரா. வனம். 163.

[2]'இலங்குவளை மகளிர் தெற்றியாடும்'.
—புறம். 53.

பா-ம்:—[3]காழ்கொண்ட.
[4]களிறணைக்கும்.

வாழ்தலு மன்ன தகைத்தே, ஒருவன்றான்
தாழ்வின்றித் தன்னைச் செயின்.

தருமர்:—எ-து. ஆடு கோடாகி அதரிடை நின்றதூஉங்—அசைந்தாடுந் தன்மையாய வழியருகே நின்ற கொம்பும்; காழ்பட்ட கண்ணே களிறு இணைக்குங் கந்தாகும்—வயிர மேறிய காலத்தில் யானையைக் கட்டுதற்குக் கட்டுத்தறியாகும்; ஒருவன் தாழ்வின்றித் தன்னைச் செயின்—யாவன் ஒருவனும் மடிதலின்றித் தன்முயற்சியாலே ஆக்கிக் கொள்வனாயின்; வாழ்தலும் அன்ன தகைத்தே—அதுபோல ஒருவனுக்குச் செல்வ முண்டாவதும்; அத்தன்மை உடையதேயாகும்.

ஆதலால் முயற்சி செய்வார்க்கு எவ்வகைத்தாயினும் மேம்பாடெய்தும் என்பதாம். 'தாழ்வின்றித் தன்னைச்செயின்' எனவே, முயற்சிக்கின்ற காலத்தில் மடியுற்றிருந்து இயலாத காலத்து முயற்சிசெய்யில் அது பலியாது. அதனால், கால மறிந்து முயன்று தன்னைத்தானே மேம்பாடு பண்ணிக்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தியது.

பதுமனார்:—என்றது. அசைந்தாடுவதொரு கொம்பாய் வழியிடை நின்ற இளமரம், முற்றியபொழுதே களிற்றை அணைக் குந்தறியாம். வாழ்தலும் அப்பெற்றித்தாம். மடிதலின்றி முயன்று ஒருவன் தன்னையாக்கின் எ-று.

அசைந்த கொம்பாகியதாய் வழி இகந்து, தறி, தாழ்வின்றி முயற்சியுட்டாழ்வின்றி, தன்னைச் செயின்—தன்னை யாக்கின்.

விளக்க உரை:—ஆடு கோடு ஆகி—அசைந்த தொரு கொம்பாய்; அதரிடை நின்றதூஉம்—வழியினிடை நின்ற இளமரம்; (வழிமாறி நடந்தால்) காழ்பட்ட கண்ணே களிறிணைக் குங் கந்து ஆகும்—அம்மரம் முற்றிய காலத்து களிறு அணைக்குந் தறியாம்; ஆதலால், வாழ்தலும் அன்னதகைத்தே—வாழ்தலும் அப்பெற்றித்தே; ஒருவன் தான் தன்னை தாழ்வின்றுச் செயின்—ஒருவன் மடிதலின்றி முயன்று தன்னை ஆக்கின் என்றவாறு.

ஆடுதல்—அசைதல், கோடு—கொம்பு, அதர்—வழி. காழ்—வயிரம் முயன்று ஒருவன் தாழ்வின்றிச் செயின், மனதில் நினைவு தவறாமல் செயின்.

ஒப்புமைப் பகுதி:—

"கடிமரந் தடிதல் ஓம்புநின்
நெடுநல் யானைக் கந்தாற் றாவே"

—புறம். 57. 10—11.

"உற்றதற் கெல்லா முரஞ்செய்ய வேண்டுமோ
கற்றறிந்தார் தம்மை வெகுளாமைக் காப்பமையு
நெற்செய்யப் புற்றேய்ந்தாற் போல நெடும்பகை
தற்செய்யத் தானே கெடும்".

—பழ. 83.

குறிப்பு:—

களிறு ஆண்பாற் பெயர்

"வேழக் குரித்தே விதந்து களிறென்றல்"

—தொ. சூ. 34. மா.

'நின்றதூஉம்' வளர்ப்பார் பிறரின்றிந் தானேவளர்வது எனப் பொருள்படலின்; தன்முயற்சியால் உயர்வடைதற் குவமை.

கருத்து:— தன்முயற்சியால் பிறர் உதவி இன்றிச் செய்யும் காரியம் மேன்மை உடைத்தாம்.

(உ).

193. உறுபுலி ஊனிரை இன்றி ஒருநாட்
சிறுதேரை பற்றியுந் தின்னு(ம்)—அறிவினால்
காற்றொழி(ல்) என்று கருதற்க; கையினான்
மேற்றொழிலு(ம்) ஆங்கே மிகும்.

தருமர்:— என்பது உறுபுலி ஊன் இரை இன்றி—மிக்க வலியினையுடைய புலியானது தனக்கு ஊன் இரை இல்லாமையினால்; ஒருநாள் சிறு தேரை பற்றியுந் தின்னும்—ஒருநாளையிலே சிறிய தேரையைப் பிடித்துத் தின்றாயினுங் கிடக்கும்; அறிவினால் கால்தொழில் என்று கருதற்க—ஆராய்ந்து இத்தொழில் சிறிது, இதனில் முயன்று பெறும்பேறு ஏதென்று மடியுறுதலைக் கருதற்க; கையினான்—தன்முயற்சி இடைவிடாது முயலுகின்ற வதனால்; மேல்தொழிலும் ஆங்கே மிகும்—மேலாய தொழிலும் மிகுதியாக எய்தும் என்றவாறு.

புலி தேரையைத்தின்பது தன்மையல்லவே; அதுவுந் தனக்கு இரை கிடையாத வேளைக்கு மடியுற்று இராமல் தேரையாகிலும் பிடித்துத் தின்னும் அதுபோல, முயற்சி செய்வாரும் அது சிறிதென்று கருதினால் மிகுந்த தொழில் எய்துவதல்ல. அச்சிறிய தொழிலிலே யாகிலும் முயன்று வருகையில் மிகுந்த தொழில் வந்தெய்தும் ஆதலால், முயற்சி இடைவிடாது முயலவேண்டுமென வற்புறுத்தியது.

பதுமனார்:— என்றது. மிக்க புலி தனக்கு ஊனாகிய உணவின்றிப் பசியால் ஒருநாள் சிறுதேரையைப் பிடித்தாயினும் தின்னும் ஆதலால், தனக்கு வறுமை உற்றால் கால்தொழில் என்றே கருதா தொழிக; அவ்வொழுக்கத்தானே மேலாய தொழிலுமாம் எ–று.

உறுபுலி—வலியுற்றபுலி; கடுகப் பயனாகா முயற்சியை கலுழ்ச்சி என்று, கருதற்க என்றுமாம், அதன் முயற்சிக்கு நாலோர்பாதியால் கால் முயற்சி அவ்வொழுக்கத்தினால்.

விளக்க உரை:— என்பது. வலிமிக்கபுலி தனக்குக் கடனான இரை இன்றிப் பசியால் ஒருநாள் சிறுதேரையைப் பிடித்தாயினும் தின்னும். ஆதலால், தனக்கு வறுமையுற்றவிடத்துத்தாழ்வான தொழில் என்று கருதாது ஒழிக; அவ்வொழுக்கந்தானே மேலாய தொழிலே மிகும் என்றவாறு.

ஒருநாள் ஒருநாழிகை இதற்குப் பசி நோவு பொறாமல், [1]உச்சிராயத்தினால் [2]பனியானைத்தின்று அச்சத்திகொண்டு [3]விருகம் பிடிக்க எண்ணும்.

குறிப்பு:-

'புலி பசித்தால் புல்லைத்தின்னாது' என்பது பழமொழி எனினும், பசிவரின் தனக்குரிய இரை கிடைக்காத விடத்து பசியைத்தனித்தற்குச் சிற்றுணவையாவது உண்டு இறவாமல் உயிர்தரித்து மறுநாள் பேருணவு கிடைக்குங்கால் உண்டு வாழுமாம்போல, ஒருவன் சிறிய தொழில் கிடைப்பின் அதனைப் பெற்றுப்பின் மடியுறாது முயற்சியுறின் பெரிய தொழில் வந்தெய்தும்—காற்றொழில், கையினான் மேல் தொழில், என்னும். சொல் நயம் காண்க.

(ஙு).

191. இசையா(து) எனினும் இயற்றியோ ராற்றா(ல்)
அசையாது நிற்பதா(ம்) ஆண்மை—இசையுங்கால்
கண்ட(ல்) திரையலைக்குங் கானலங் தண்சேர்ப்ப!
பெண்டிரும் வாழாரோ மற்று.

தருமர்:—என்பது. இசையாது எனினும்—தன்னுடைய முயற்சி ஒருகாலத்தில் பலிப்பில்லை ஆயினும்; இயற்றி—அதற்கு மனத்திடம் விட்டு மடியுற்றிராமல்; ஓர் ஆற்றால் அசையாது நிற்பதே—மற்று அம்முயற்சி விடாது செலுத்துவதே; ஆண்மை—ஆண்தன்மையாவது; இசையுங்கால்—முயன்றவை எல்லாம் பலிக்குமாகில்; பெண்டிரும் வாழாரோ—முயலுந் தொழிலுக்கு உரித்தல்லாத பெண்டிர்களுஞ்செல்வமுடையார் ஆகாரோ;

---

[1]உச்சிராயம்—மனவெழுச்சி.

[2]'பனியான்'—பாம்பு. (பிரதியிலிருந்தபடியே எழுதப்பெற்றது)

[3]விருகம்-மிருகம். ''பல்லிருக மாகிப் பாம்பாய்ப் பறவையாய்''
(திருவா.சிவபு,27.)

கண்டல் திரை அலைக்குங் கானலந் தண் சேர்ப்ப!—கடல் முள்ளியை மோதுந் திரையினையுங் கழிக்கானலையும் உடைய குளிர்ந்த கடல் சேர்ப்பை உடையவனே! என்றவாறு.

தன் முயற்சி எல்லாம் பலிப்பதல்லவே. ஒரு காலத்தில் பலியாததினாலே, எப்போதும் பலியாமற் போகிறதுமல்லவே, ஆதலால், முயற்சி பலியாத விடத்து மனந்தளராமல் அது பலித்ததாகவே கொண்டுவிடாது முயலவேண்டும் என்பதாம்.

பெண்டிரும் வாழாரோ என்று மடியுறுவாரை இகழ்ந்தது.

பதுமனார்:—என்றது. தான் முயன்ற முயற்சியால் பயன் கூடிற்றில்லை யாயினும், முன்னந்தாழாதே ஒருவகையால் முயன்று தளராதே நிற்பதாம். ஆண்மையாவது முயன்றன எல்லாம் முடியுமாயின்; கண்டல் திரை அலைக்குங் கானலந் தண் சேர்ப்பனே! ஆண்மைத் தன்மை இல்லாத பெண்டிரும் வாழ்வரன்றோ என்றவாறு.

தான் முயன்ற முயற்சியால் பயன் கூடிற்றில்லை யாயினும், இசையுங்கால்—முடியுங்கால்.

விளக்க உரை:— [1]கண்டல் திரை அலைக்குங் கானலந் தண் சேர்ப்பனே!-கடல் முள்ளியைத் திரைகள் மோதும் கானலையுடைய குளிர்ந்த சேர்ப்பனே!; இசையாது எனினும்—தான் முயன்ற முயற்சியால் பயன் கூடிற்றில்லையாயினும்; ஓர் ஆற்றால் தளராது நிற்பதாம்—ஒருவன் கையால் முயன்று மடியாமல் நிற்பதாம்; ஆண்மை—ஆண்மையாகும்; இசையுங்கால்—முயன்றவை எல்லாம் முடியின்; பெண்டிரும் வாழாரோ—ஆண்மைத்தன்மை இல்லாத பெண்டிரும் வாழ்வரன்றோ; என்றவாறு.

---

[1]கண்டல்—கடல் முள்ளியும், மடல் ஆத்தியும்

ஒப்புமைப் பகுதி:—

"முயற்சியின் முடியாக் கருமம் இல்லென"

—பெருங்க. 5.4.14.

"பெருமை உடையதன் அருமை பழியார்"

—முதுமொழி. 3—3.

"எங்கணொன் றில்லை ஏமரில்லை என்றொருவர்
தங்கண் அழிவுதாம் செய்யற்க—எங்கானும்
நன்கு திரண்டு பெரியவாம் ஆற்றவும்
முன்கை நெடியார்க்குத் தோள்",

—குறள். 156.

"அருமை உடைத்தென்(று) அசாவை வேண்டும்
பெருமை முயற்சி தரும்".

—குறள். 611.

**195. நல்ல குலமென்றுந் தீய குலமென்றுஞ்
சொல்லள(வு) அல்லால் பொருளில்லைத்**

—தொல்சிறப்பி(ன்)

**ஒண்பொரு(ள்) ஒன்றோ தவங்கல்வி ஆள்வினை
என்றிவற்றா(ன்) ஆகுங் குலம்.**

தருமர்:—என்பது. நல்ல குலம் என்றும் தீய குலம் என்றும், சொல் அளவு அல்லால் பொருளில்லை—நல்ல குலத்தார் இவர் தீய குலத்தார் இவரென்று ஒருவரைச் சொல்லு மளவே அல்லாது அதனால் ஒருபொருளில்லை; தொல்சிறப்பின் ஒண்பொருள் ஒன்றோதவம், கல்வி, ஆள்வினை—பழயதாகிய சிறப்பினையுடைய ஒள்ளிய பொருளும், தவமும், கல்வியும், ஆள் வினையுடைமை; என்று இவற்றான் ஆகும் குலம்—என்று சொல்லப்பட்டவற்றால் ஆகும் குலம், என்றவாறு.

உயர்குல மாகிலும் பொருளில்லையாயின் தாழ்ந்த குலம்

போல எண்ணப்படும். இழி குலத்தாராயினும் பொருளுண்டானவர் உயர் குலத்தார்போல மேன்மை பெறுவார் ஆதலால், இதற்கெல்லாங் காரணமான முயற்சியை மடிதல் இன்றிச் செய்யவேண்டும் என்பதாம்.

ஒன்றோ—இடைச்சொல்.

பதுமனார்:—என்றது. நல்ல குலமென்றும் தீய குலமென்றும், சொல்லு மறவல்லது பொருள் ஒன்றில்லை. பழைய தாகச் சிறப்புடையதாய் வருகின்ற ஒள்ளிய பொருளும், தவமும், கல்வியும், முயற்சியும், என்று சொல்லப்பட்ட இந் நான்காலும் குலமாவது என்றவாறு.

ஒன்றோ என்பது, எண்ணிடைச்சொல். ஒண் பொருயொன்று, தவமொன்று, கல்வியொன்று, ஆள்வினையொன்று.

விளக்க உரை:—நல்ல குல மென்று, தீய குலமென்றும், சொல்லுந் தன்மையல்லாது உண்மைப்பாடு தோன்றாது. பழையதாகச் சிறப்புடைத்தாய் வருகின்ற ஒள்ளிய பொருளும், தவமுங், கல்வியும், முயற்சியும், என்கிற நாலும் குலமாவதென்றவாறு.

'ஒன்றே' என்பது எண்ணிடைச்சொல். 'ஒண்பொருள் ஒன்றோ' தவத்தாலும், கல்வியாலும், முயற்சியாலும் வருவதன்றே, பொருள் என்று உரைப்பாரும் உளர்.

(ரு).

196. ஆற்றுந் துணையு(ம்) அறிவினை உள்ளடக்கி
ஊக்க(ம்) உரையா(ர்) உணர்வுடையார்—ஊக்க(ம்)
உறுப்பி(ல்) ஆராயும் ஒண்மை உடையார்
குறிப்பின்கீழ்ப் பட்ட துலகு.

தருமர்:—என்பது. ஆற்றுந் துணையும் அறிவினை உள்

ளடக்கி—தாம் முயற்சி செய்யக் கருதின கருமத்தை அது முடியும் அளவும் பிறர் அறியாதபடி மனத்துள் அடக்கிக் கொண்டு; ஊக்கம் உரையார்—தமது மன எழுச்சியைப் பிறர் அறியச் சொல்லார்; உணர்வுடையார்—அறிவினை உடையவர்; ஊக்கம் உறுப்பினால் ஆராயும் ஒண்மை உடையார்—ஒருவர் மன வெழுச்சி அவர் அடக்கி இருந்தாலும் அவர் உறுப்பினாலே ஆராயும் ஒள்ளிய தன்மை உடையவர்; குறிப்பின் கீழ்ப்பட்ட துலகு—குறித்த கருமத்தின்கீழ்த் தங்கப்பட்ட துலகத்துள்ளார் செய்கை என்றவாறு.

அவரவர் மனத்தில் எண்ணிய கருமங்களை அவர் உறுப்பி னால் இடையூறு செய்யத்தக்க பேருண்டு. அதனால் அத்தன்மை உணர்வுடையாரும் அறியப்படாதபடி தாம் நினைத்த கருமத்திற்கு இடையூறுவரினும், மனந்தளராது அக்காரியம் முடியும் அளவும் உறுப்பினாலும், ஒன்று மறியாது அடக்கின், அவற்கு அக்கருமம் பலிக்கும். மனந் தளர்ந்தால் கருமம் உறுப்பினால் அறியப்படுமத னால், காரியமுடியும் அளவும் மனந்தளராது நின்று பிறர் மனத்தில் இதற்கு இடையூறாக எண்ணினதையும், அவர் உறுப் பினால் ஆராய்ந்து அறிந்து அதற்கானபடி செய்து இடையூறு தவிர்க்கும் குறிப்பினையுடையவர் செய்யும் முயற்சியை யாவரா லும் நீக்குதல் அரிதென்பது தோன்ற; உலகம் எல்லாம் அவர் கீழ் அடங்கிற்று என்று அவர் முயற்சியின் வலியை வியந்து கூறியவர் முயற்சி செய்வதும் இத்தன்மையாக வேண்டுமென அறிவுறுத்தியது.

பதுமனார்:— என்றது. தாம் நினைத்த காரியத்தை முடிக்கும் அளவுந் தந்துணிபுகளை உள்ளே அடக்கி வெகுளி வந்தாலுந் தமது ஊக்கங்களைச் சொல்லார் அறிவுடையார். பிறர் ஊக்கங்களை அவர் உறுப்பைக்கொண்டே ஆராயவல்ல மாட்சிமை உடையார் குறிப்பின் கண்ணே தங்கிற்று உலகு என்றவாறு.

ஆற்றும் — நினைத்த காரியம் செய்துமுடியும் அளவும்; ஊற்றம்—ஊக்கம். பிறர் நினைத்த ஆக்கத்தை அவர் உறுப்

பினால் ஆராயும். உறுப்பாவது — கண்ணும், மூக்கும் தன் துணிவை உள்ளடக்குதலும், பிறர் குறிப்பை அறிதலும் தாளாண்மை.

ஒப்புமைப் பகுதி:-

'ஒண்மை உடையார்'

"ஒப்பின் மாநகர் ஒண்மை"

—சீவக. 535.

"ஒண்மையும் நிறையும் ஓங்கிய ஒளியும்"

—பெருங். உஞ்சை. 34—151.

"ஒண்மை உடையம் யாம்"

—குறள். 844.

(சூ).

197. **[1]சிதலை தினப்பட்ட வால மரத்தை**
[2]மதலையாய் மற்றதன் வீழுன்றி யாங்குக்
[3]குதலைமை தந்தைக்கட் டோன்றிற்றான் பெற்ற
புதல்வன் [4]மறைப்பக் கெடும்.

தருமர்:— சிதலை தினப்பட்ட—செல்லுத் தின்னப்பட்டு; ஆலமரத்தை—[மெலிந்த] ஆலமரத்தினை; மதலையாய் அதன் கீழ் வூன்றியாங்கு—அந்த மரத்துக்குப் பற்றுக் கோடாக அந்த ஆலினை வீழ் தானே தாங்கினதுபோல்; குதலைமை

---

[1]'சிதல் மண்டிற்று நாலடி'. நாலடி. 147.

சிதலை. நுண்பல சிதலை. புறம். 51—9.

சிதலை செய் காயம் பெறேன். திருவாச. 6. 41.

[2]'மதலை கீழ் வைத்தென்'

[3]'குதலைமை—தளர்ச்சி.

"பொருள் விளங்காமை. திருக்கோவை. 104 உரை.

பா-ம்:— [4]'மறைக்கப் படும்'.

தந்தைக்கண் தோன்றின்—தளர்ச்சி தன்னுடைய பிதாவுக்கு ஓர் அமயம் வந்தவிடத்து; தான் பெற்ற புதல்வன் மறைப்பக் கெடும்—அந்தப்பிள்ளை யானவன் அதனைப் பாதுகாக்கவே பிதாவிடத்துண்டாய அறியாமை இல்லாதாம் என்றவாறு.

தன்னுடைய பிதாவானவன் வயது மூத்தாகிலும், பிணியினால் ஆகிலும், செயல் மாட்சி தோன்றிய விடத்துப் பிள்ளையானவன் முயன்று, அந்தக் குடியைப் பரிகரிக்கவே அக்குடிக்கு ஒரு தவறு வாராதென்பதாம்.

குதலைமை தந்தையானவன் வலியோடு இருக்குங் காலம் எல்லாம் முயற்சியால் தன்குடி தளராது பரிகரித்துப் பின்பு அவனுக்குப் பிணியினால் ஆதல், மூப்பினால் ஆதல், அம் முயற்சி அற்ற வேளையை அறியாமை தோன்றிய விடத்தென்றார். ஆதலால், புதல்வனானவன் வீழானது ஆலமரத்தை நிலைபெறுத் தினாற் போலத், தன் பிதாவையுந் தன் குடியையுந் தாங்கவே குலமும் மேம்பாடு எய்துதல் பெற்றான் அதுபோல, யாவரும் மடிதல் இன்றி முயற்சி செய்ய வேண்டுமென வற்புறுத்தியது.

பதுமனார்—சிதலை தினப்பட்ட ஆலமரத்தை மற்றதன் வீழ் பற்றுத் தாங்கினாற் போலத் தந்தைமாட்டுத் தளர்ச்சி தோன்றின், அவன் பெற்ற புதல்வன் பாதுகாக்கக் கெடும் என்றவாறு. மதலை கொடுங்கை பற்றாய்த் தாங்கும் வீழ் குதலைமை—தளர்ச்சி, மறைப்ப—முயற்சியாலே மறைப்ப.

ஒப்புமைப் பகுதி:

"தூங்கு சிறை வாவலுறை தொன்மரங்கள் என்ன
ஓங்குகுல நையவத னுட்பிறந்த வீரர்
தாங்கல்கட னாகும் தலைசாய்க்கவரு தீச்சொல்".
—சிந்தா. காந்த. 6.

"நைந்தடி யற்ற ஆலம் நடுங்கிவீழ் கின்ற தென்று
வந்தவீ ழூன்றி வீழா வகைநிலை விளைக்கு மாபோல்

மைந்தர்கள் தமக்குள் நல்ல வறிவினான் மகிழ்ந்து சேர்ந்து
தந்தையைத் தளரா வண்ணம் தாங்குவர் தவத்தி(ன்)
என்றான்"
—உத்தரகாண். ஒட்டக்.

"இடுக்கண் கால் கொன்றிட வீழு(ம்) அடுத்தூன்றும்
நல்லா(ள்) இலாத குடி".
—குறள். 1030.

இவனே,

"முழுமுதல் தொலைந்த கோளி ஆலத்துக்
கொழுநிழல் நெடுஞ்சினை வீழ்பொறுத் தாங்குத்
தொல்லோர் மாய்ந்தெனத் துளங்கல் செல்லாது
நல்லிசை முதுகுடி நடுக்கறத் தழீஇ
இளைய தாயினுங் கிளையரா வெறியும்
அருநரை உருமின் பொருநரைப் பொறாஅச்
செருமாண் பஞ்சவர் ஏறே".
—புறம். 58.

"மதலைநாண் பறப்பை"
—கந்தபுரா. சாலைசெய். 23.

"மலையி னெஞ்சொடு"
—கலித். 28.

"மதலை இற்றமை கேட்டலும்"
—சேதுபு. அக். 82.

கொழுநிதிக் குப்பை எல்லாம்.........மதலை ஏற்றி
—சீவக. சிற். 505.

நிகண்டு, பிங்கலம், 'மகன்' பொருளிற் கூறலுமாம்.

மேற்கோள் பகுதி:—

'ஊன்றும் என்றது இப்பொருட்டாதல்; "மதலையாய் மற்ற தன் வீழூன்றி யாங்கு" என்பதனாலும் அறிக என்பர்.
—பரிமேல். குறள். 615.

(எ).

198. [1]ஈனமாய், இல்லிருந் தின்றி விளியினும்,
மானந் தலைவருவ செய்பவோ,—யானை
[2]வரிமுகம் புண்படுக்கும் [3]வள்ளுகிர் நோன்தா(ள்)
அரிமா [4]மதுகை யவர்.

தருமர்:— ஈனமாய் இல்லிருந்து இன்றி விளியினும்—தம் முடைய முயற்சிக்கு இடையூறுவந்து ஈனப்பாடாகிய வறுமை யுற்று, ஒருசெயலும் இன்றி இறக்கும்படி கேடுற்ற காலத்திலும்; மானந் தலைவருவ செய்பவோ—மானம் அழிய வரத்தக்க காரியங்களைச் செய்வரோ; யானைவரிமுகம் புண்படுக்கும்—யானையினது புகர் முகத்தைப் புண்படச் செய்யத்தக்க; வள் உகிர் நோன்தாள் அரிமா மதுகையவர்—வளைந்த உகிரினையும் வலிதாகிய தாளினையு முடைய சிங்கத்தினது வலியை உடையவர் என்றவாறு.

இவ்விடத்து வலியாவது உற்சாகவலி. முயற்சிவலி இல்லாதார் ஈனத் தொழிலுக்கு உடன்படுவர் என்பதாயிற்று.

பதுமனார்:— என்றது. குறைவு பட்டுத் தம்மனையின் கண்ணிருந்து வறியராய் இறந்துபோகினுங் குற்றந் தம்மாட்டு வரும் முயற்சியைச் செய்வாரோ, யானையது புகர் முகத்தை வடுப்படுக்கவல்ல வள்ளுகிரையும், நோன்றாளையும் உடைய அரிமாவினது வலியை உடையார் என்றவாறு.

ஈலாம் முற்பிறப்பினால் விளையின் குறைபடுதல், விளிதல்;—இறத்தல். வரிமுகம்—புகர்முகம். வள்ளுகிர்—கூறிய உகிர், நோன் தாள்—வலியதாள். மதுகை—வலி.

---

[1]ஈனம்-தாழ்வு.

[2]வரிமுகம்-புள்ளிகளையுடைய முகம்.

[3]வள் உகிர் கூறிய நகங்கள்.

[4]மதுரை-வலிமை.

விளக்க உரை:— என்பது குறையுற்று தம்மனையின் கண்ணிருந்து வறியராய் இறந்து போகினும், தம்மாட்டு வரும் முயற்சியைச் செய்வரோ, யானையின் பின்புகர் முகத்தை வடுப் படுத்தவல்ல வளைந்த உகிரினையும் வலியதாளினையும் உடைய அரிமாவினது வலியை உடையார் என்றவாறு.

வள் உகிர்-ஒளியை உடைய நாகம்; நோன்தாள்-வலியதாள்.

ஒப்புமைப் பகுதி:-

''மான வருங்கல நீக்கி இரவென்னும்
ஈன விளியினால் வாழ்வேன்மன்-''

—நாலடி. 40

—இடமுடைய
வானகங் கையுறினும் வேண்டார் விழுமியோர்
மானம் அழுங்க வரின்'',

—நாலடி. 300.

''மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னார்
உயிர்நீப்பர் மானம் வரின்''.

—குறள். 969

—''தோல்வற்றிச்
சாயினும் சான்றாண்மை குன்றாமை இம்மூன்றுந்
தூஉய(ம்) என்பார் தொழில்''.

—திரிக. 27.

''உறுநர்த் தாங்கிய மதனுடை நோன்தாள்''.

—பத்து. திருமுரு. அ. 4.
(அ).

199. தீங்கரும்(பு) ஈன்ற திரள்கா(ல்) உலையலரி
தேங்கமழ் நாற்றம், இழந்தாஅங்கு—[1] ஓங்கும்

---

[1] ஓங்கும் உயர்குடி-ஒருபொருட் பன்மொழி.

உயர்குடி உட்பிறப்பி(ன்) என்னாம் பெயர் [1]பொறிக்கும்
[2]பேராண்மை இல்லாக் கடை.

தருமர்:—என்பது. தீங்கரும்பீன்ற திரள்கால் உளைஅலரி —இனிதாகிய, கரும்பீனப்பட்ட திரண்ட தாளினையும் தூய்மை யையும் உடைய பூவானது; தேங்கமழ் நாற்றம் இழந்தாங்கு— இனிதாகத் தேனொடு கூடிமணக்கும் மணத்தை இழந்ததுபோல; ஓங்கும் உயர்குடியுள் பிறப்பின் என்னாகும்—ஓங்கிய உயர்ந்த குடியிற் பிறந்தாலும் என்ன பயனுண்டு; (ஒருபயனுமில்லை) பெயர் பொறிக்கும் பேராண்மை இல்லாக்கடை—தம்முடைய பெயரை நிறுத்துவதாய்ப் பெரிய தாளாண்மை இல்லாத விடத்து என்றவாறு.

பெயர் பொறிப்பது தன்னுடைய முயற்சியினாலே அல்லது குடிப்பிறப்பினாலே ஆவதல்ல.

மக்களானவர்கள் உயர்குடிப் பிறப்புண்டாயதில் முயற்சி இல்லாது மடியுற்றிருக்கில், குடிப்பிறப்புங் குன்று மென்பது தோன்ற கரும்பினது பூவை உவமை ஆக்கினார்.

பதுமனார்:—என்றது. இனிய கரும்பு பயந்த திரண்ட தாளினையுந்தூய இதழினையு முடைய பூத்தேன்போலக் கமழு நாற்றத்தை இகழ்ந்தாற்போலக், ஓங்கி உயர்ந்த குடியின்கண் பிறப்பினால் என்ன பயனுண்டாம், தன் பெயரைப் பொறித்

---

[1]பொறிக்கும்—எழுதும்.

[2]பேராண்மை—செயற்கரிய முயற்சிகளைச் செய்தல்.

"நயக்கும் பேராண்மை நாட்டிய அருமை செய்தல்"
சூ. நிகண்டு.

'அரிய வீரச்செய்கை' திவாகரம்

பகைவர்மேல் கண்ணோடாது செய்யும் மறத்தை நூலோர்மிக்க ஆண் தன்மை என்று சொல்லுவர். எ-ர் பரிமேலழகர்.
(குறள்.773.)

"சீரினும் சீரல்ல செய்யாரே சீரொடு
பேராண்மை வேண்டு பவர்".
,, 926.

"தலைமையோடே கூடப் பெரிய ஆண்மை என்பர்"
(மணக்குடவர்).

தாற்போால நிறுத்தும் அருந்தாளாண்மை இல்லாவிடத்து என்றவாறு.

திரள்கால் உளைஅலரி—திரண்ட தாளிலையுடைய உளை போறை பூ பெயர் பொறிக்கும் பேராண்மை—பெயரை ங்கும் எழுதி நிறுத்தி இயங்குந் தாளாண்மை.

விளக்க உரை:—என்பது. தீம் கரும்பு ஈன்ற திரள் கால் உளை அலரி—இனிய கரும்பு பயந்த திரண்ட தாளினையுந் தூய இதழினையும் உடைய பூவானது; தேம் கமழ் நாற்றம் இழந்தாங்கு—தேன்போலக் கமழ்ந்த நாற்றத்தினை இழந்தாற் போல; ஓங்கி உயர்ந்த குடியுள் பிறப்பின் என்னாம்—ஓங்கி உயர்ந்த குடியின்கண் பிறந்தார் பிறப்பினால் என்ன பயனுண் டாம்; பெயர் பொறிக்கும் தாளாண்மை இல்லாக்கடை—தம்பெயரை உலகத்து பொறித்து வைக்கின்றாற்போல நிறுத்த வல்ல பெருந் தாளாண்மை இல்லாதவிடத்து என்றவாறு.

திரள்தாள் உலை அலரி—செறிந்த தாளையும் அசைவினை யுமுடைய பூத்தாள், கரும்பிலே பிறந்து அடியுங் கெட்டு மணமும் இழந்தாற் போல, இவனும் உயர்ந்த குடியின் கண்ணே பிறந்து அக்குடியும் முயற்சிகெட்டு தானுந் தலைமை கெட்டது என்று மாம்.

(கூ).

200. பெருமுத் தரையர் பெரிதுவந் தீயுங்
கருனைச்சோறு, ஆர்வர் கயவர்—கருனையைப்
பேரு(ம்) அறியார் நனிவிரும்பு தாளாண்மை
[1]நீரு(ம்) அமிழ்தாய் விடும்.

---

[1] நீரும்—என்பதற்கு, சோற்றோடு கூடிய நீரை மிகுதிபற்றி நீர் என்றார். 'நீருண்டார் நீரான்வாய்ப் பூசுப' என்பதனை எடுத்துக்காட்டி முதற்கண்ணுள்ள நீர் என்பது இப்பொருட்டாதல் உணர்க என்பர் ஓர் உரையாசிரியர். பெருமுத்தரையர்—என்பதற்கு பெரிய முத்துக்களையுடைய பாண்டியர்'

தருமர்:—என்பது. பெருமுத்தரையர் —பெருமுத்தரையர் என்று பெயருண்டாகப் பட்டவர்; பெரிது உவந்து ஈயும் கருனைச் சோறு ஆர்வர்—மிகவும் உவந்து கொடுக்கின்ற பொரிந்த கறியோடு கூட்டி இடுகின்ற சோற்றினிடமாவர்; கயவர்—கீழ் மக்கள்; கருனையைப் பேரும் அறியார் நனிவிரும்பு தாளாண்மை நீரும் அமிழ்தாய்விடும்-பொறித்த கறியைப் பெயரு மறியாராய்த்தாம் மிகவும் விரும்பிச் செய்த முயற்சியால் வந்த புற்கை நீராயினும், அதனை அமுதமாக உண்பார் அறிவுடையார் என்றவாறு.

முயற்சி செய்யாது மடியுற்றவர் தமக்கு நல்ல கறியுஞ் சோறும் இடுவார் இவர் என்று, அவர் காலம் பார்த்து இரந்து உண்பர்.

அது அவர் அறிவின்மையால் மடியுறுவது. அதனால், அவரைக் கீழ்மக்களென்றார். தாம் இத்தன்மையாகில் பழிப் புரை எய்தப்படுவோ மென்று தமதறிவினாலே தாளாண் மையை மிகவும் விரும்பிச்செய்து அந்த முயற்சியால் வருவதை அமுதமாகக் கொள்வரென அவரை மேன்மக்களாகிய தாளாண் மையை வியந்ததாம்.

பதுமனார்:—என்றது. பெருமுத்தரையர் என்னும் சிறப்புப் பெயர் பெற்ற செல்வர் பெரிதும் காதலித்து ஈயும் கருனை என்னும் கறியொடு கூட்டிச் சோற்றினை உண்பர். கீழ்மக்கள் கருனைக் கறியைப் பேருமறியாராய், மிகவும் விரும்பப்படுந் தாளாண்மையால் வரும்புற்கை நீரும் அமுதமாய் விடும் என்றவாறு.

முயலாமற் சோம்பினவர் இப்படிச் சோற்றினையும் இரந்து

எனவும், பெரிய மூன்று நாடுகளையுடைய சேர, சோழ, பண்டியர், எனவும் பொருள் கூறுப.

'முத்தரையர்' என்பார் ஆசிரியர் காலத்தோ முன்போ இருந்த வள்ளல்களில் ஒருவரெனக் கோடல் தகும்.

கொண்டு இடும் அவரது காலம் பார்த்துண்டு திரிவர்.

என்பது. கருனை என்னுங் கறியுடன் கூடிய சோற்றினைப் பெருமுத்தரைய ராயினும் உண்பர். கீழ்மக்கள் அக்கருனைக் கறியினுக்குப் பேருமறியார் மிகவிரும்புவர் தாளாண்மையால் வரும் புற்கை நீரும், அமுதுபோலும் என்றவாறு.

கருனைக்கறியின் — முதன்மைக்கறி.

விளக்க உரை:—என்பது. கயவர் — கீழ்மக்கள் (சோம்பேறிகள்) பெருமுத்தரையர் பெரிது உவந்து—பெருமுத்தரையர் என்பவர் மிகவும் விரும்பி; ஈயும் கருனைச்சோறு— அளிக்கிற-பொரிக்கறி உடனாய சோற்றை; ஆர்வர்-உண்பார்கள்; கருனையைப்போறும் அறியார்—பொரிக்கறியைப் பேரினாலும் அறியார்; நனிவிரும்பு தாளாண்மை—மிகவும் விரும்பித் தம்முயற்சியால் பெற்று உண்ட; நீரும் அமுதாய்விடும்—புற்கை நீரும் அமிழ்தத்தை ஒத்ததாகும்.

ஒப்புமைப் பகுதி:—

"நல்கூர்ந்தக் கண்ணும் பெருமுத் தரையரே
செல்வரைச் சென்றிரவா தார்".

—நாலடி. 296.

"தெண்ணீர் அடுபுற்கை யாயினுந்தாள் தந்த(து)
உண்ணலின் ஊங்கினியது இல்".

—குறள். 1065.

மேற்கோள் பகுதி:-

"பெருமுத் தரையர் பெரிதுவந் தீயும்" என்றவழிப் பெருமுன்னர்க் குறித்துச் சிராக்கவேண்டுமாயின் ஈண்டு மொழி சிதைத்தலின் கிரைபகை ஆகாதாயிற்று என்பர்.

—தொ. செ. சூ. ். இளம்பூரணர்.

குறிப்பு:—

'பெருமுத்தரையர்' என்பவர் [1]செந்தலை என்று வழங்கும் சந்திரலேகைச் சதுர்வேதிமங்கலத்திலிருந்து அதனைச் சுற்றியுள்ள நாட்டை ஆட்சிபுரிந்த சிற்றரசர் ஆவர். [2]வல்லமும் அவர்கட்குத் தலைநகராக இருந்தல் வேண்டும் என்று தெரிகிறது. வண்மையிற் பெரியார் ஆதலின் இவரை இந்நூலில் இரண்டு பாடல்கள் சிறப்பிக்கின்றன.

[1]Suscription No. 202 of 1926.

[2]Ep. end Vol. XIII Pages 143.

நாலடியார்

முற்பகுதி (1-200 பாடல்.)

செய்யுள் முதற்குறிப்பு அகராதி.

[பக்க எண்]

அ

அக்கேபோல்	348
அகத்தாரே	87
அங்கண் — அக	435
அச்சம்	229
அடைந்தார்	486
அம்பலயலெடுப்ப	244
அம்புமழலும்	247
அரும் பெறல்	92
அலகுசால்	407
அவமதிப்பும்	463
அறம்புகழ்	232
அறிமினறநெறி	484
அறியாப்பருவத்து	483
அறியாரும்	306
அறிவதறிந்து	205
அறுசுவை	18

ஆ

ஆட்பார்த்து	61
ஆடுகோடாகி	192
ஆவாநாமாக்க	89
ஆவேறுருவின	335
ஆற்றுந்துணையும்	542

இ

இசைந்த	523
இசையா தெனினும்	539
இசையாவொரு	315
இசையு மெனினும்	438
இடம்பட	315
இடும்பைகூர்	301
இம்மியரிசி	262
இம்மை பயக்குமால்	377
இருக்கை யெழலும்	417
இரும்பார்க்கும்	436
இல்லமிளமை	149
இல்லாவிடத்தும்	254
இழைத்தநாள்	29
இளையானடக்கம்	180
இற்சார்வின்	509
இறப்பச் சிறிது	278
இறப்பநினையுங்கால்	488
இனநன்மை	424
இன்பம் பயந்தாங்கு	222
இன்றுகொல்	98
இன்னா செயினும்	213

ஈ

ஈண்டு நீர்	308
ஈதலியையாது	507
ஈனமா இல்லிருந்து	547

உ

உடாஅதும்	39
உடுக்கை	411

[பக்க எண்.]

உடையாரிவர் 454
உண்ணாவொனொளி 36
உபகாரஞ் 190
உயிர்போயார் 139
உருவுமிளமையும் 290
உள்ளத்தால் 362
உறக்குந் 104
உறற்பால 293
உறுபுலி 537
உறுபுனல் 517
உறைப்பருங் 514

ஊ

ஊக்கித்தாங் 159
ஊரங்கணநீர் 490
ஊருளெழுந்த 250
ஊறியுவர்த்தக்க 131

எ

எம்மையறி 467
எற்றொன்று 432
எனக்குத்தாயாகி 51
என்னானுமொன்று 28

ஏ

ஏற்றகை 274

ஒ

ஒண்கதிர் 493
ஒருபுடை 428

ஓ

ஓக்கிய ஒள்வாள் 363

[பக்க எண்]

க

கடித்துக் 447
கடிப்பிடு 280
கடுக்கி யொருவன் 528
கணங்கொண்டு 73
கரும்பாட்டி 96
கல்லாதுபோகிய 477
கல்லாமை 422
கல்லாரே யாயினும் 404
கல்லெறிந்தன்ன 183
கல்விகரையில 386
கழிந்தாரிடு 136
களர்நிலத்து 380
கள்ளார்கள் 448
கனைகடற்றண் 402

கா

காணிற்குடிப் 236
காதலார் சொல்லும் 202
காலாடு போழ்தில் 320
காவாதொருவன் 147

கு

குஞ்சியழகும் 375
குடருங் கொழுவும் 128

கூ

கூர்த்துநாய் 192

கே

கேளாதே வந்து 83

[பக்க எண்.]

கொ

கொல்லையிரு 497
கொன்னே 154

கோ

கோதையருவி 196
கோளாற்றக் 534

சா

சான்றாண்மை 414
சான்றோரென 357

சி

சிதலைதினப்பட்ட 544
சிறுகாபெருகா 311

செ

செம்மையொன்று 239
செய்கையழிந்து 426
செல்லாவிடத்தும் 430
செல்வர்யாமென்று 34
செல்வுழிக்கண் 432
சென்றே அறைப 71

சொ

சொற்றளர்ந்து 47

த

தக்காருந் 318
தக்கோலந் 122
தண்டாச் 172

[பக்க எண்.]

தம்மை இகழ்ந்தமை 161
தம்மை இகழ்வாரை 333
தவலருந் 400

தா

தாஞ்செய்வினை 339
தாழாத்தளரா 49
தான்கெடினும் 224

தி

தினைத்துணையராகி 297

தீ

தீங்கரும்பீன்ற 548

து

துகடீர் 21
துக்கத்துட் 343
துன்பமேமீதூர 167
துன்பம் பலநாள் 152

தெ

தெண்ணீர்க் குவளை 125
தெரியத் தெரியும் 474

தோ

தோணி இயக்குவான் 398
தோற்போர்வை 120
தோற்றஞ்சால் 32

ந

நடுக்குற்று 259

	[பக்க எண்]
நடுவூருள்	267
நட்பினார்	44
நரம்பெழுந்து	440
நரைவருமென்	42
நல்லகுலமென்றும்	541
நல்லவைசெய்யின்	419
நல்லாவின்	328
நளிகடற்றண்	470
நா	
நார்த்தொடுத்	76
நி	
நிலநலத்தால்	500
நிலையாமை	146
நின்றன நின்றன	25
நெ	
நெடுங்கால	188
நெருப்பழல்	351
நே	
நேரல்லார்	200
நேர்த்து	177
ப	
படுமழை	78
பண்டமறியார்	133
பரவாவெளிப்	246
பருவமெனைத்துள	57
பல்லாரறிய	242
பல்லாவுள்	288

	[பக்க எண்.]
பல்லான்ற	299
பனிபடுசோலை	55
பன்னாளுஞ்	452
பா	
பாலோடளாய	495
பி	
பிறர்மறையின்	450
பு	
புக்கவிடத்	234
புல்லாவெழுத்தில்	444
புன்னுனிமேல்	81
பெ	
பெயற்பான்மறை	271
பெரியவர்கேண்மை	354
பெரியார் பெருநட்பு	479
பெருமலைநாட	520
பெருமுத்தரையர்	550
பொ	
பொறுப்பரென்று	458
பொன்னே கொடுத்தும்	461
ம	
மக்களாலாய	101
மதித்திறப்பாரும்	170
மலைமிசை	66
மறுமைக்கு	511
மறுமையும்	264

[பக்க எண்.]

மற்றறிவாம் 58
மனத்தான் 502
மனைப்பாசங் 366
மன்றங்கறங்க 70
மன்னர் திருவும் 472

மா

மாக்கேழ்மட 117
மாண்டகுணத் 157
மாற்றாராய் 186
மாணவருங்கல 113

மு

முல்லைமுகை 127
முற்றுற்றுந் 530
முன்னரேசாநாள் 257

மெ

மெய்வாய்கண் 164
மெல்லியநல்லாருள் 525

யா

யாஅருலகத்தோ 337
யாஅரொருவ 359
யாக்கையை 80
யானை எருத்தம் 23

வ

வடுவிலா 324
வளம்பட 303
வற்றிமற் 219

[பக்க எண்.]

வா

வாழ்நாட் 67
வானிடுவில் 12

வி

விரிநிறநாகம் 465
விளக்குப்புக 143
வினைப்பயன் 91

வெ

வெறியயர் 53

வே

வேற்றுமையின்றி 209
வைகலும்வைகல் 108
வைப்புழிக் 383

விசேடக் குறிப்புகள்.

அணிவகைகள்:—

அருங்கலம் 40; அணிகலம் 242; கண்ணவாத்தக்க கலம் 157; கடகம் 287; பொற்றொடி 376; தொடி 11.

அக்கு (சங்கு மணி) 123; கணமணி 127, 146, 369, மாண்ட மணி 347; முத்து 146, 399; வான்கதிர் முத்தம் 224; மொத்த நூற்கல் 376.

அளவைப் பெயர்கள்:—

தினைத்துணை 104, 323; தினையனைத்து 344; பனைத் துணை 104; பனையனைத்து 344; ஐந்தையனைத்து 329; எத்துணை 109; இம்மியரிசி துணை 94; ஒன்று 286, 357; மூன்று 114, 250; நான்கு 82, 319; ஐந்து 333; எட்டு 281: ஒன்பது 47; பத்து 281; நூறு 357; எழுநூறு 357; ஆயிரவர் 284; ஒருவர் 284; மூவர் 363; நால் பொருள் 82; நால் 383; காதம் 100; யோசனை 100; முந்திரி 346; காணி 346; தூணி 387; பதக்கு 387; நாழி 7.

ஆயுத வகைகள்:—

உழுபடை 178; உளி 355; குறடு 208; சுட்டுக்கோல் 208; முட்டிகை 208.

இசைக் கருவிகள்:—

கடிப்பு இடு கண்முரசம் 100; தண்ணம் 6; பறை 24, 25, 86; பிணப்பறை 23; மணப்பறை 23.

இட வகை:—

அவை 325; இல் 13, 383, 198; பேரில் 147; நல்லில் 225; இல்லம் 55, 207; வீடு 59, 274.

உலகு 15, 74, 185, 368; உலகம் 97, 119, 273; மையறு தொல்சீ ருலகம் 333; பொங்குநீர் ஞாலம் 72; அங்கண்மா ஞாலம் 148; மல்லன்மா ஞாலம் 296; வான் கவிந்த வையகம் 80; குண்டு நீர் வையம் 94; ஈண்டு நீர் வையம் 109; வடுவிலா வையம் 114; நெடுமொழி வையம் 240; புணர்கடல் சூழ் வையம் 264; தழங்கு குரற் பாய் திரைசூழ் வையம் 339; அறைகடல் சூழ் வையம் 230; நெடுமொழி வையம் 240; வையம் 350.

ஊர் 90, 175, 241, 383, 384; நடுவூர் 96; கடற் கோடு 263; கரும்பார் கழனி 122; காடு 361; இடுகாடு 96; சுடுகாடு 121; புறங்காடு 45; சுரும்பார்க்குங்காடு 122; பரற் கானம் 396; கடக்கருங்கானம் 398; கானல் 291; புன்னை விறற் பூங்கமழ் கானல் 117; சுரம் 5; தண்வயல் 389; தீப்புலவன் கோட்டி 312; புன்கோட்டி 260; பொருளில் வறுங் கோட்டி ......; தொல்லை இரும்புனம் 178; எறிபுனம் 180; நிலம் 22; நீணிலம் 27; களர்நிலம் 133; விளைநிலம் 133; 356; நெடுங் கடை 156; புறங்கடை 293, 31.

பட்டினம் 250; பனிபடுசோலை 17; பிலம் (சுரங்கம்) 160; மன்றம் 23; மாடம் 361; மெய்ஞ்ஞானக்கோட்டி 311; வடதிசை 242; விடர் 164; வெறியயர் வெங்களம் 16; வேதிகை 96; வான் 10, 38; வானம் 113; அகல் வானம் 137; மின்னொளிர் வானம் 269; வானகம் 300; அங்கண் விசும்பு 151, 373; விண் 226; புல்செக்கர் 397.

உணவு வகை:—

அக்காரம் 206, 374; அறுசுவையுண்டி 1; அடகு 207, 287; காரடகு 217; அமிழ்து 210, 217; உப்பிலிப்புற்கை 206;

தயங்குநீர்த்தண் புற்கை 210; உப்பிலிவெந்தை 287; கருனை 268; வெங்கருனை 207, 210; கருனைச்சோறு 200; குய்த்துவை ஆர் வெண்சோறு 217; நெய்யிலாப் பாற்சோறு 333; கூழ் 1, 2, பால்கூழ் 321; துற்று 190; சோறு 293; பால்சோறு 322; வல்சி 328; வான்புழுக்கல் 206; ஊன்இரை 193.

பால் 116; 177, 206, 239, 258; ஆபயந்த பால் 118; நெய் 116, 124, 337, 371; ஆன்படுநெய் 238; வேம்படு நெய் 238; தயிர் 116; தேன் 239; 259; கள் 349; தேமா 257; காயம் 116.

நெல் 133, 179, 221; பொன்னிறச் செந்நெல் 269, 367; கருங்கொள், செங்கொள், 387; உப்பு 116, 244; களர் நிலத்துப் பிறந்த உப்பு 133.

உடலுறுப்புக்கள்:—

தலை 14, 43, 49, 61, 257, 375; வெண்டலை 50; சென்னி கண் 44, 47, 226, 305, 395; குழிந்தாழ்ந்த கண் 49, 59; வெருக்குக்கண் 210; இடக்கண், வலக்கண் 388; கடைக்கண்; இடைக்கண் 393; சிதரரிக்கண் 394; மூக்கு 59, செவி 59; 257, 322; வாய் 8, 59, 63, 396; முகம் 303; ஒண்புருவம் 395; விற்புருவம் 290; நன்னுதல் 381; நறுநுதல் 381; நெஞ்சு 72, 49, 55; நெஞ்சம் 310, 379; உள்ளம் 62, 106, 317, 380, 386; அகம் 303; மனம் 23; கால் 84; கை 14, 98, 226, 227, 386; அங்கை 123; பாணி 16; விரல் 123; மெல் விரல் 394; தோள் 85, 312, 317, 375, 385, 394; அகலம் 392; மார்பு 385; கவான் 201; முலை 389; கொம்மைவரிமுலை 85; தடமுலை 378; வனமுலை 397; முலைக்கண் 399; வயிறு 121; நா 335, 338; கோடேந்து அகலல்குல் 354; அங்கோட்ட கலல்குல் 354.

தோல் 41, 46; கருந்தோல் 47, 322; துளை 42; என்பு 45, 46, 210, 292; குடர் 46; கொழு 46; குருதி 46; தொடர் 46; நரம்பு 46; தடி 46; வழும்பு 46; அடி 396, 388; பீள் 20;

உடம்பு 10, 34, 37, 35, 40, 42, 80, 120, 379; நோலா உடம்பு 258; முடங்குடம்பு 173; யாக்கை 18, 27, 28, 41; அரும்பெறல் யாக்கை 34; மெய் 59, 399; பண்டம் 10, 48; கும்பம் 47; முடைச்சாகாடு 48; உயிர் 50, 62, 324; ஆருயிர் 240, 330; இன்னுயிர் 323; கூத்தன் 26; புக்கில் 41; இளமை 17, 53, 55, 102; மன்னாவிளமை 11; நரை 11; மூப்பு 52, 55, 92, 326; சாக்காடு 52; பிணம் 25; செத்த பிணம் 281.

உடை வகை:—

அத்திட்டகூறை 281; உடுக்கை 141; பட்டும் துகிலும் உடுத்தல் 264; கொடுந்தானை 131; கோடு 131.

உவமைகள்:—

அறத்துப்பால்

1 பிறப்பினதியல்பை அறிய முடியாமைக்கு வானிடுவில்லின் வரவறியா முடியாமை உவமை.

2 செல்வத்துக்குச் சகடக்கால் 2.

3 செல்வங் கெடுகைக்குக் கரியமேகத்தினது மின்னொளி 8.

4 உலோபிகள் செல்வம் இழத்தலுக்குத் தேனீ 10.

5 சுற்றத்தார் அழுகிற ஓசைக்கு ஆழுமரக்கலத்தினிடத் துண்டாகுமொலி 12.

5 நிலையில்லா மகிழ்ச்சிக்கு மறிகுளகுண்டன்ன மகிழ்ச்சி 16.

7 இளமை நிலையாமைக்கு முற்றியிருந்த கனியொழியத் தீவளியால் நற்காயுதிர்தல் 19.

8 யாக்கைக்குப் படுமழை மொக்குள் 27.

9 யாக்கை நிலையாமைக்கு மலையாடு மஞ்சு 28.

10 யாக்கை நிலையாமைக்குப் புன்னுனிமேல் நீர் 29.

11 உடலைவிட்டு உயிர் நீங்குகைக்கு மரத்திலே வைத்த கூட்டை விட்டுத் தூரத்திலே பறந்து போகிற பறவை 30.

12 உடம்பிற்குக் கரும்பினது கோது 34.

13 அறப்பயனுக்குக் கரும்பூர்ந்தசாறு 34.

14 அறப்பயனுக்கு ஆலம் வித்து 38.

15 மாதர் கண்களுக்குத் தெண்ணீர்க் குவளையும், கயலும், வேலும் 44.

16 முறுவலுக்கு முல்லை முகையும் முத்தும் 45.

17 உடம்பிற்குச் சகடை 48, உயிர்க்குச் சகடை 48.

18 தவத்தின் முன் பாவம் நில்லாமைக்கு விளக்குப் புக விருள் போதல் 51.

19 நல்வினை தீர்விடத்து தீது நிற்பதற்கு விளக்குநெய் தேய் விடத்துச் சென்று இருள் பாய்தல் 51.

20 கயவர்வாய் இன்னாச்சொல்லுக்குக் கல்லெறிதல் 66.

21 சான்றோர் சினம் தணிதற்கு நீர்கொண்ட வெப்பம் தணிதல் 68.

22 பிறனில் விழைவான் நுகரும் நுகர்ச்சிக்குப் பாம்பின் தலை நக்குதல் 87.

23 பலர் நச்ச வாழ்வாருக்குப் படுபனை 96.

24 குடிகொழுத்தக் கண்ணும் கொடுத்துண்ணா மாக்களுக்கு இடுகாட்டுள் ஏற்றுப்பனை 96.

25 பழவினைக்குப் பசுவினது கன்று 101.

26 அனுபவிக்கும் பகுதியான தீவினைகளை நீக்குதல். முனிவராலும் ஆகாது என்பதற்கு மழை மறுத்தகாலத்தில் பெய்விப்பார் ஒருவருமில்லையாதல் 103.

27 பெறும்பகுதியான நல்வினைப் பயனை ஒருவராலும் நீக்குதலியலாது என்பதற்கு மழை மிகப் பெய்யுங்காலத்து அதனை நிறுத்துவார் ஒருவருமில்லையாதல் 103.

28 செல்வர் வாய்ச்சொற் செல்லுதலுக்கு நல்லாவின் கன்று விலை போதல் 115.

29 நல்கூர்ந்தார்சொல் செல்லாமைக்குப் புல்லீரப் போழ்தின் உழவு 115.

30 அடங்காதார்க்குப் பேய்ச்சுரையின் காய் 116.

31 அறநெறிக்கு ஆபயந்த பால் 118.

32 சமயங்களுக்குப் பசுக்களினது பல வண்ணங்கள் 118.

33 தீவினையாளரைச் சேர்ந்தார்கெடுதற்கு நெருப்பழற் சேர்ந்த நெய்போல் வதூஉம் எரிப்பச் சுடுதல் 124.

34 பெரியோரது கேண்மைக்குப் பிறை 125.

35 சிறியார் நட்பிற்கு மதியம் 125.

36 சான்றோரெனக் கருதிச் சாரப்பட்டாரிடத்து சான்றாண்மை இல்லாததற்குச் செப்பிலே சாந்திருக்கிறதென்று செப்பைத் திறந்து அதனுள் பாம்பைக்காணல் 126.

பொருட்பால்.

1 ஆராய்ந்து அமைவுடைய கற்பதற்கு நீரொழியப் பாலுண் குருகு 135.

2 நூல்களைக் கற்றறிந்தார் நட்பிற்கு நுனியே தொடங்கிக் கரும்பினைத் தின்னல் 138.

3 பண்பும் நயமு மில்லாதாருடன் கொண்ட நட்பிற்குக் கரும்பினை யடியே தொடங்கித் தின்னல் 138.

4 கல்லார் கற்றாரோடு சேர்ந்தொழுகி நல்லறிவுகளையுடை யவராதலுக்குப் பாதிரிப்பூவைச் சேர்ந்த புத்தோடு தண்ணீர்க்கு வாசத்தைக் கொடுத்தல் 139.

5 குடிப்பிறந்தார் இடுக்கணுற்றகாலத்தும் தம்மொழுக்கத்தில் குறையாராதலுக்கு அரிமா பசித்த காலத்தும் கொடிப் புல்லைத் தின்னாது 141.

6 குடிப்பிறந்தார் துன்பமுற்ற காலத்தும் ஒப்புரவு செய்தலுக் குப் பெரியமனையினிடத்தே அதன் உறுப்புக்கள் செல்லரித்து குலைந்து கிடந்தாலும் ஒரு பக்கத்தே மழைக்கு ஒழுகாத ஓரிடமிருத்தல் 147.

7 குடிப்பிறந்தார் வறுமையுற்ற காலத்திலும் ஒப்புரவு செய்தலுக்கு ஒருபுடை பாம்புகொள மற்றொரு பக்கத்தால் பிரகாசித்து ஒளி செய்யும் மதியம் 148.

8 குற்றந்தோன்ற வைதவிடத்தும் குடிப்பிறந்தார் அவரைத் தம் வாயினாற் சிதையக் கூறாமைக்குக் கரும்பினை ஆலை வாயிலே வைத்து நெருக்கிச் சாறு கொள்ளினும் இனிமை கொடுத்தல் 156.

9 மேன்மக்களைச் சார்தலுக்கு எல்லாச் செல்வத்தையு முடைய சுரங்கத்தையடைதல் 160.

10 அருமையுடைத்தாகிய அரணைச்சேர்ந்தாராயினும் மேன் மக்களது வெகுளியினின்றும் பிழையாமைக்கு விரிநிற நாகம் தாழ்ந்த வளையிலே கிடந்தாலும் இடிக்கு அஞ்சுதல் 164.

11 சிறியவர் நட்பிற்கு முன்பகல் நிழல் 166.

12 பெரியோர் நட்பிற்குப் பின்பகல் நிழல் 166.

13 அரசருடைய செல்வமும் மகளிருடைய அழகினது நலமும் அவரையடைந்தார் நுகர்தலுக்குக் கவிந்த நிழலையுங் குளிர்ச்சியுமுடைய மரங்களெல்லாம் அதனிடத்துச் சென்ற டைந்தபேர்க்கு நிழலைக் கொடுத்தல் 167.

14 நல்வினைசார நல்ல நெறியில்லாத பாவங்கள் கெடுமென்ப தற்கு வெயில் மிகுந்தோறும் புல்லின்மேற் பற்றியிருந்த பனிநீர் விட்டொழிதல் 171.

15 பெரியாரைச் சார்ந்த சிறியார் உயர்ந்து தோன்றுதற்கு ஊரங்கணநீர் உரவுநீரைச் சேர்ந்து தீர்த்தமெனப் பேர் பெறல் 175.

16 பெரியாரை நட்புக்கொண்ட சிறியார் சீர்மையராவர் என்பதற்குத் திங்களைச் சேர்ந்த முயல் யாவராலும் தொழப்படுதல் 176.

17 பெரியாரைச் சார்ந்தவிடத்துச் சிறியாரது சிறுமைக்குணம் தோன்றாதென்பதற்குப் பாலோடு அளாய நீர் 177.

18 வலி இல்லாராயினும் நல்சார்வு சார்ந்தார்மேல் பகைவர் சினம் செல்லாமைக்குக் கொல்லை நிலத்துப் பெரிய புனத்தின்கணின்ற மரக்கட்டையை அடைந்து நின்ற புல் உழவர் உழுபடைக்கு அசையாவாதல் 178.

19 சான்றோர் குலநலத்தான் ஆகுவரென்பதற்கு நில நலத்தால் நந்திய நெல் 179.

20 சான்றாண்மை தீயினஞ் சேரக் கெடுமென்பதற்கு மரக் கலத்தை தீக்காற்றுச்சென்று சிதைத்தல் 179.

21 ஒருவர் தம்மனத்தால் குற்றமிலராயினும் சேர்ந்த இனத் தால் கெடுவரென்பதற்கு வெட்டிய புனந்தீப்பட்ட காலத்து வேங்கையும் சந்தனமும் ஒக்க எரிதல் 180.

22 மேன்மக்கள் செல்வமிழந்த காலத்தும் ஒப்புரவு செய் தலுக்கு ஆறுவற்றியவிடத்தும் தோண்டுமிடத்து ஊற்றுக் குழியால் நீர் சுரத்தல் 185.

23 பெரியோரிடத்துண்டாகிய ஒரு தீமை விளங்கித்தோன்று தலுக்கு வெள்ளெருத்தின் மேலுள்ள சூட்டின் வடு 186.

24 துளக்கமிலாதவர், பிறர் தம்மிடத்து வந்து நட்டோன் மேல் மிக்க கோளைச் சொல்லி மயக்கிவிடினும் நட்பினைச் சிறிதும் பிரித்தலில்லாமலிருப்பதற்கு விளக்கினுளேற்றிய ஒண் சுடர் 189.

25 உறவினனொருவன் ஈயுமுணவை உண்டு வாழும் கிளை களுக்குக் குளத்தின் நீரைக்கொண்டு வளரும் பயிர்கள் 191.

26 சோம்பாமல் உலாவுகின்ற தாளாளர்க்கு நாடகப் பெண் களுடைய கண்கள் 191.

27 ஒருவன் முயற்சியுடைமையினால் வாழும் வாழ்க்கைக்குத் துவளுகின்ற கொம்பாக வழியில் நின்ற மரக்கன்று உள் வயிரங்கொண்டவிடத்து யானையைக் கட்டுவதற்குரிய தறியாதல் 192.

28 சிறுதொழிலும் மேற்றொழிலாக மிகுமென்பதற்கு வலி மிகுந்த புலியும் இரை கிடைக்கப் பெறாதகாலத்து சிறு தேரையைப் பிடித்துத் தின்னல் 193.

29 தந்தையின்கண் தோன்றிய குற்றம் புதல்வன் மறைப்ப கெடுதற்குச் செல்லினால் அரிக்கப்பட்ட ஆலமரத்தை அதனது விழுது தாங்குதல் 197.

30 உயர்குடியில் பிறந்தாரிடத்துப் பெயர்பொறிக்கும் பேராண்மை இல்லாததற்குத் தீங்கரும்பீன்ற திரண்ட தாளினையும் மென்மயிர்போற் கற்றையுமுடைய மலர்க்கு வாசனையில்லா திருத்தல். 199.

31 ஒருவன் தனிமையினானுற்ற வருத்தம் கேளிரைக் காணக் கெடுதற்குக் கருக்கொள்ளுங் காலத்துண்டாகிய மசக்கை நோயும், அக்கருவாகிய பாரம் பொறுத்துத் திரியும் துன்பமும், ஈனுங்காலத்துண்டாகிய வருத்தமுமாகிய இவை தான் பெற்ற மகவைக் கண்டவிடத்துத் தாய் மறத்தல் 201.

32 சுற்றத்தாரைத் தாங்குதற்கு நிழல் மரம் 202.

33 சுற்றத்தாருக்குத் தன்பயனை அளிப்பதற்குப் பழுமரம் 202.

34 பெரியோர் தம்மை அடைந்தாரைத் தாங்குதற்குப் பல பல காய்களைத் தாங்குகின்ற மரக்கொம்பு 203.

35 வெண்சோறிற்குப் புலிநகம் 206.

36 நெருங்கி நட்புப் பூண்டிருப்பார்க்கு முட்டிகை 208.

37 நட்பினருக்கு இடுக்கணுற்றகாலத்து விலகி விடுவார்க்குக் குறடு 208.

38 நட்பினருடன் இடுக்கணுற்றகாலத்தும் நட்புப் பூண்டு அவரைத் தாங்குவார்க்குச் சுட்டுக்கோல் 208.

39 வெம்மையுடைய பொரிக்கறிக்குப் பூனைக்கண் 208.

40 கற்றறிந்தார் நட்பிற்கு நுனிதொடங்கி தின்னப்படும் கரும்பு 211.

41 மனநயமில்லார் நட்பிற்கு அடிதொடங்கி தின்னப்படும் கரும்பு 211.

42 மனந்தூயார் நட்பிற்கு நாய் 213.

43 குடியாலுயர்ந்து மனத்தூய்மையில்லார் நட்பிற்கு யானை 213.

44 என்றும விடாத நட்பிற்குக் கோட்டுப்பூ 215.

45 நட்டுப் பிறகு நட்பு முறிப்பாருக்குக் கயப்பூ 215.

46 கடையாயர் நட்பிற்குக் கமுகு 216.

47 இடையாயர் நட்பிற்குத் தெங்கு 216.

48 தலையாயர் நட்பிற்கு எண்ணரும்பெண்ணை 216.

49 மிகவும் நெருங்கி இருத்தற்கு நாய்க்காற் சிறுவிரல் 218.

50 தூரத்திலிருந்தும் உதவுவார்க்கு வயலை விளைவிக்கும் வாய்க்கால் 218.

51 வெறுப்ப வெறுப்பப்பிழைகளைச் செய்யினும் தாம் விரும்பிக் கொண்டாருடைய பிழைகளைப் பொறுத்தலுக்கு அடைக்குந் தோறும் உடைத்தோடுகின்ற நீர் 222.

52 இன்னாசெயினும் விடற்பாலரல்லாரை நட்பு விடாது போற்றுதற்கு இல்சிதைத்த தீயை நாள்தோறும் நாடுதல் 225.

53 இன்னாதவற்றைச் செய்யினும் நட்பினரைக் கைவிடப் படாமைக்குக் கண்ணைக் குத்திய கை 226.

54 சிரியார் நட்பிற்கு மாரி 232.

55 சீரிலார் நட்பிற்கு மாரி வறண்ட தன்மை 232.

56 நுண்ணிய அறிவினை உடையாரோடு கூடி நட்புறுதற்கு விண்ணுலகு 233.

57 நுண்ணூல் உணர்விலாரோடு கூடி நட்புறுதற்கு நரகம் 233.

58 மனப்பிணிப்பு இல்லாதாருடன் கொண்ட நட்பிற்கு வைக்கோலில் பற்றிய தீ 234.

59 மிக்க நீர்மையுடையாருடனே உறவுகொள்ளினும் நற்குண மில்லாதார் காரியங்கள் வேறுபட்டிருத்தலுக்கு ஒரு தடாகத்திலே தோன்றிவளர்ந்த குவளையும், ஆம்பலும் 236.

60 நயமுள்ளவர் உறவைவிட்டு புல்லறிவினையுடையாரோடு, நட்புப் பூணுதற்குப் பசுவின்நெய் வார்க்கும் பானையில் அது களைந்து வேப்பெண்ணெய் பெய்தல் 238.

61 வடிவிற்கமைந்தவளிடத்து ஒப்புரவில்லாமைக்குப் பருகற் கமைந்த பாலிலே நீரையூற்றல் 239.

62 அறிவுடையார் தீயினத்தைச் சேர்ந்து கெடுதற்கு ராகம் விரிபெடையோடு கூடிக் கெடுதல் 239.

63 தக்க அறிவுடையார் பகைவர் தளர்ந்துழி அவர்மேற் செல்லாமைக்குத் திங்கள் இளம்பிறையான காலத்து வலிமை யினையுடைய நாகம் செல்லாமை 243.

64 இனம் தீதாயினும் அறிவுடையார் மனம் தீதாகுதலில்லை என்பதற்கு வேம்பின் இலையுள் கனிந்த வாழை 245.

65 கல்லாத ஒருவன் நல்லோர் அவையில் இருத்தலுக்கு நாயிருத்தல் 254.

66 கல்லாத ஒருவன் நல்லோர் அவையில் ஏதொன்று சொல்லு தற்கு நாய் குரைத்தல் 254.

67 கற்றறிந்தார் விரைந்து யாதொன்றும் சொல்லாதிருத்தலுக்கு ஒலியில்லாத பச்சோலை 256.

68 கல்லாதார் விரைந்தொன்றைச் சொல்லுதற்கு வற்றிய பனையோலை 256.

69 நன்றியறியா மனிதர்க்கு அறத்தினது வழியைச் சொல்லு தற்குப் பன்றிக்குக் கூழ் வார்க்கிற தோணியிலே தேமாங் கனியைப் பிழிதல் 257.

70 நன்மையை யறியாத மனிதர் செவியில் அறத்தினதுவழியைச் சொல்லுதல் ஏறாமைக்குக் குன்றின்மேலே புடைக்கின்ற தறி 257.

71 புண்ணியமில்லாதவனுக்கு அறிவு புகமாட்டாததற்குப் பாலால் கழுவி உலர்த்தப்பட்ட கரி 258.

72 இழிவான குணங்களையுடைய நெஞ்சினார்க்குப் பெரியோர் கூறும் தெளிவுடைய சொற்கள் ஏறாமைக்கு மணமிகும் பூவினது தேனை நுகராது துர்க்கந்தங்களை விரும்பிச் செல்லும் ஈ 259.

73 செல்வத்தை உடையராயினும் கீழ்மக்களை அறிவுடையார் நட்புக் கொள்ளாமைக்குக் கள்ளிப்பூ 262.

74 அணித்தே செல்வத்தையுடையராயினும் அவரை நீங்கி தூரத்திலேயுள்ள உதவுவார்கண்ணே விருப்பமுறப் பெறுதற்குக் கடற்கரையிலே இருந்தாராயினும் உப்பில்லாக் கிணற்றின் நீரை உண்ணல் 263.

75 அறிவில்லாதார்க்கு வட்டும் வழுதுணையும் 264.

76 செந்நெல்லுக்குப் பொன் 269.

77 அறிவில்லாதார் செல்வம் பயனின்றிப் போதற்குச் செந்நெற் பயிர்வாடக் கடலில் பெய்கின்ற மேகம் 269.

78 உலோபிகளது செல்வம் அயலானால் நுகரப்படுதற்கு இல்லத்து உருவுடைக் கன்னியர் 274.

79 உலோபிகளது செல்வத்தினும் சான்றோரது வறுமையே தலைமையுடைத்து என்பதற்குக் கடலையடுத்திருந்தும் நீரற்ற கிணற்றில் ஊறும் நீரை யுண்ணல் 275.

80 இரவலர்க்கு பசுவினது கன்று 279.

81 ஈவார்க்குப் பசு 279.

82 கீழோரது ஈகைக்கு உறுப்பிடங்களிலே கருவிகளை வைத்துத் துன்புறுத்தக் கறக்கும் பசு 279.

83 பொருளில்லார்க்கு உறவினரில்லையாதற்குக் காந்தட்பூ மலராதகாலத்து அதனிடத்துச் செல்லாத வண்டினம் 283.

84 செல்வமுண்டாய காலத்து பலருண்டாதற்கு யாக்கை ஒழிந்த காலத்து திரண்டுவரும் காகங்கள் 284.

85 செல்வமற்றுத் திரிவார்க்கு வண்டு 284.

86 செல்வமில்லாதாரை உறவினர் தேடிச் செல்லாமைக்கு பூத்தொழிந்த கொம்பின்மேல் செல்லா வண்டினம் 290.

87 செல்வ வலியினால் கயவர் செய்யும் வரம்புகடந்த செய்கைக்குக் கொதிக்கும் மானமுடையார் மனத்துக்குக் காட்டிலே பற்றிப்படர்ந்து மிகுந்தெரியும் தீ 291.

88 செல்வமுடையாருடைய சிறுமையான பார்வை கண்டு கொதிக்கும் சான்றோர் மனத்துக்குக் கொல்லன் உலைக் களத்தில் ஊதியெழுப்புந்தீ 298.

89 சீரியோர் தமக்கு மானங்கெடுவதனால் உலகம் பெறுவதாயினுமதனை வேண்டாமைக்கு இடப்பக்கம் விழுந்த மானை உண்ணாத வேங்கை 300.

90 பல்விற்குச் சுரை வித்து 315.

91 நூல்களுக்குப் பரத்தையரது தோள் 317.

92 நூல்களின் பொருள்களுக்குப் பரத்தையரது உள்ளம் 317.

93 அறிவுடையார் சொல்லைப் புறக்கணிக்கும் புல்லறிவாளனுக்குப் பாற்கூழின் சுவையணராத அகப்பை 321.

94 அறிவுடையார் கூறும் அறநெறியை மனத்தில் கொள்ளாத புல்லறிவாளர்க்குப் பாற்சோற்றின் நயமறியாத குணுங்கு நாய் 322.

95. உலக வாழ்வில் மகிழ்ந்திருக்கும் பேதையார்க்குத் தீயை மூட்டப்பட்ட உலையிலிடப்பட்ட ஆமை 331.

96. மனைவாழ்க்கையிலுள்ள காரியங்களைக் குறைவற முடித்து தன்மகாரியங்களைப் பின்செய்வாம் என்றிருப் பார்க்குக் கடலில் ஓசையடங்கியபின் கடலில் நீராட விருப்பார் 332.

97. குலம், தவம் முதலியவற்றான் நிறைந்து உலக வழக்கம் அறியாதார்க்கு நெய்யில்லாத பாற்சோறு 333.

98. உலோபிகளாயினும் செல்வமுடையாரைச் சுற்றி நீங்கா திருக்கும் வறியவர்க்கு நெய்யுள்ள பாத்திரத்தின் வெளியே சுற்றா நிற்கும் எறும்புகள் 336.

99. நல்லொழுக்கமில்லார் ஒருவரைச் சென்று நல்லொழுக்கத் தில் இசைவிப்போமென்று முயல்பவரது செயலுக்குக் கற்கிள்ளிக் கைவலி பெறுதல் 337.

100. கீழ்மகன், அறிவுடையார் தெளிந்த நூற்பொருளை எடுத்துச்சொல்லித் தெளிவித்தாலும், தன்மனம் விரும்பிய வாறே ஒழுகுதலுக்கு நொய்யரிசியை மிகுதியாக இடினும் குப்பை கிளறுதலை ஒழியாத கோழி 341.

101. கீழ்மகனைப் பெருமையுடையோனாகக் கொள்ளினும் அவனது செயல்கள் வேறுபடுதற்குப் பொற்கலத்து உண்பிப்பினும் பிறர் எச்சிற்கு இமையாது பார்த்திருக்கும் நாய் 345.

102. மிகுந்த செல்வத்தையுடையோராயினும் அவர் செய்யும் செயல்களால் கீழ்மகனாகக் காணப்படுதற்குப் பசும் பொன்னால் செய்யப்பட்டு அதன்மேல் மணியழுத்திய செருப்பு 347.

103. மிகுந்த செல்வத்தையுடையோராயினும் அவர் செய்யும் செயல்களால் கீழ்மகனாகக் காணப்படுமென்பதற்கு

இளமை தொடங்கியே புல்லைத்தின்பித்து நீர்பருகுவித்து வரினும் இரதத்தை இழுக்க அறியா எருமைகள் 350.

104. பெருநூல்களைக் கற்றாராயினும் கூரிய அறிவு சிறிதுமில்லாதவர் ஆராய்ந்துதுணியும் பெற்றிஇலராவதற்கு நீரிலே வாழினும் தம்முடலில் வழுக்குதலாகிய அழுக்கை நீக்கிக்கொள்ள வலியற்ற தேரை 352.

105. பரத்தையர் தமது பெண்மைக்குரிய அலங்காரத்தைக் காட்டுதற்குப் புதுப்பெருக்கம் 354.

106. பெண்மைக்குரிய அலங்காரத்தைச் செய்தலில் தேர்ந்தார்க்குச் சேடியார் 354.

107. இனிய குணமுடையார்க்குதவாது தன்னை இடுக்கண் செய்வார்க்கே உதவும் கயவர்க்குத் தட்டாமல் இறங்காத உளி 355.

108. கீழ்மக்கள் செல்வமுள்ள காலத்திலும், நற்குடிப்பிறந்தார் வறியகாலத்தும் செய்யும் ஒப்புரவுகளைச் செய்யாமைக்கு வைரமடைந்தகொம்பையுடைய பன்றி வேழமாகாமை 358.

109. மகனறிவு தந்தையறிவு என்பதற்குச் செந்நெல்லால் ஆய செழுமுளை 367.

110. கீழ் மேலாதற்குக் குடைக்கால் 368.

111. வேசியர் நட்புக்குப் புதுப்புனல் 370.

காமத்துப்பால்.

1 மகளிர்க்குக் கொய்தளிர் 373.

2 கண்ணுக்கு நீலமலர் 374.

3 பொதுமகளிர்க்கு மலங்கு 375.

4 என்றும் நீங்காதிருப்பதற்கு நூலொடு தொளைத்த மணியும்' புணர்பிரியாவன்றிலும் 376.

5 பரத்தை மயக்கிப் பொருள் கொள்ளுதலுக்கு ஆமா 377.

6 பொருள் வறந்தகாலத்துப் பொதுமகளிர் காட்டும் அன்பிற்குச் சேமா 377.

7 பரத்தையருடைய வேறுபட்ட மனத்திற்கு ஆட்டின் கொம்பு 378.

8 பொதுமகளிர் பார்வைக்கு மான் 378.

9 கற்பிற்கு அயிராணி 381.

10 ஈகையாளன் கையிலுள்ள செல்வத்திற்கு மனத்தின்கண் நல்லறிவுடையான் கற்றுத் தேர்ந்த நூல் 386.

11 நாணமுடையளாகிய குலமகள் அடைந்தவழகுக்கு ஆண் மகன் கையிலுள்ள கூரிய வாள் 386.

12 தலைமகளுக்குத் துடியின் இடக்கண் 388.

13 பரத்தையர்க்குத் துடியின் வலக் கண் 388.

14 கணவரைப் பிரிந்த மகளிர் நிலைக்குச் சாப்பறை 392

15 கண்ணுக்குக் கயல் 395.

16 மகளிரது வாய்க்குச் செவ்வாம்பல் 396.

17 கொங்கைக்கு கோங்கரும்பு 400.

உலகங்கள்:-

ஞாயிறு—தோற்றஞ்சால் ஞாயிறு 7; அவிர்கதிர் ஞாயிறு 89; திங்கள் 148, 151, 241, 243; மலைமிசை தோன்று மதியம் 21; வானூர்மதியம் 125; ஒண்கதிர் வாண்மதியம் 176; அங்கண் விசும்பின் அகனிலா 151; இளம்பிறை 241; வானத்து மேலாடுமீன் 113; நிரயம் 233; எரிவாய் நரகம் 58; கும்பி 81; சுவர்க்கம் 243; உம்பர் உறைவார்பதி 137; விண்ணுலகு 233; வயங்கொளி மண்டிலம் 22.

உலோக வகை:-

பொன் 162, 225, 307; மைதீர் பசும்பொன் 347, இரும்பு 122; நாறா தகடு 266.

உறவுப் பெயர்கள்:-

கேள் 29; கிளைகள் 30; கிளைஞர் 113, 206; சுற்றத்தார் 25; துன்னருங்கேளிர் 9, 201; எமர் 205; தமர் 77, 229, 87, 207; 283, 290; தாயத்தவர் 278.

தந்தை 197, 237, 253, 367; தாய் 15, 20, 101, 201, 237; ஈன்றாள் 316; புதல்வன் 197; பிள்ளை 20; மகன் 201, 367; மைத்துனர் 340; குழவி 11.

ஊர்திகள்:-

கலம் 250; ஆழ்கலம் 12; தோணி 136; நாவாய் 224; வையம் (இரதம்) 350; சகடம் 2.

ஊர்வன:-

எறும்பு 336; சிதல் 147, 197; நாகம் 66, 164, 239; பாம்பு 87, 126, 148, 200, 375; பையரவு 400; அரா 243; விரிபெடை 239.

ஒலிக் குறிப்பு:—

ஒல் 77; கல் 25; கலகல 140, 255; தழீஇந்தழீஇம் 6; தொண்டொண்டொடு 25.

காலப் பெயர்கள்:—

ஒரு நாள் 54; பல நாள் 54, 214; சில நாள் 214; சாநாள் 92; இழைத்தநாள் 6; உள் நாள் 324; வாழ் நாள் 4, 32, 39; நாள் 6, 7, 135; நெடுங்காலம் 68; கெடுங்காலம் 68; இருகாலம் 110; சிலபகல் 204; அழல் மண்டுபோழ்து 202; மம்மர்கொள் மாலை 393; முட்டுற்றபோழ்து 240; அபராணப் போழ்து 207; மாலைப்பொழுது 397; விழித்திமைக்கும் மாத்திரை 302; அறியாப்பருவம் 171; நிச்சம் 81; எக்காலும் 83; இரவு—எல் 8; வைகல் 7, 39; ஊழி 130.

சிறு குறிப்புகள்:-

(1) கூற்றுவன் பாசக்கயிற்றாற் பிடித்துக்கொண்டு செல்வன் 5; (2) இடுநீற்றாற் நாகம் படமொடுங்கி அடங்கும் 66; (3) இம்மை அலியாகி யாடி உண்பதற்கு முன்னைப்பிறர் மனைவியை விரும்பிச் சேர்ந்த பாவம் 85; (4) விரிபெடை யோடு கூடிய நாகத்திற்கு ஆயுள்கெடும் 239; (5) நீரினும் நுண்ணிது நெய்; நெய்யினும் புகை நுட்பம் 282; (6) வான வில்லின் தோற்றமு மறைவும் அறிதலரிது க. வா. (7) பல பசுக்களிலடையில் கன்றைவிடினும் அதன் தாயைக் கண்டு கொள்ளும் 101; (8) நாகம் இடிக்கு அஞ்சும் 104; (9) புலி தேரையையும் தின்னும் 193; (10) வௌவால்கள் விளாமரத் தைச் சென்றடையாது 261; (11) காட்டுப்பசுவைக் கொன்ற வேங்கை அது இடது பக்கம் வீழின் உண்ணாது போய்விடும் 300; (12) விலாங்குமீன் தன்னைப் பிடிக்கவரும் பாம்பிற்கு ஒரு புறத்தைக் காட்டி மற்றொரு புறத்தை மீனுக்குக் காட்டும் 375; (13) அன்றில் இணைபிரியாது 376.

தூதுரை:—

(1) மறைகாவா விட்டவன் செல்வுழிச் செல்க 230; (2) நட்டான் கடிமனை கட்டழித்தான் செல்வுழிச் செல்க 240.

தெய்வப் பெயர்கள்:--

கானிலந்தோயாக் கடவுள் க. வா; அமரர் 3/3; தெய்வம் 304, 309; கண்மூன்றுடையான் 400; இந்திரன் 346; செங்கண் மால் 373; கூற்று 105, 188; கோடில்தீகூற்று 4; ஆட்பார்த் துழலும் அருளில் கூற்று 20; கூற்றம் 5, 6, 7. 35, 36, 120 172, 330, 331, 363; நாவின் கிழத்தி 252; பூவின் கிழத்தி 252; அயிராணி 381.

தொகைச் சொற்கள்:-

அறுசுவை 1; அடுக்கிய மூவுலகம் 100; இருதலை 114; இருமை 129; ஐவாய் வேட்கை 59; ஒன்பதுவாய்ப் புலன் 47; முக்குற்றம் 190.

நீர் நிலைகள்:--

நீர் 69, 90, 177, 221, 239; இன்னீர் 244; உரவு நீர் 175; அங்கண நீர் 175; கழுநீர் 217; ஒரு நீர் (தடாகம்) 236; தீர்த்தம் 175; உறுபுனல் 185; செம்புனல் 222; புதுப்புனல் 370; ஆறு 136, 185; அகல்யாறு 150; கேணி 184; வல்லூற்று உவரில் கிணறு 263; ஊற்று 150, 184; அறுநீர்ச் சிறுகிணற்று ஊறல் 275; குளம் 191; தேம்படு தெண்கயம் 375; வாய்க்கால் 218; செழும்பெரும் பொய்கை 352; நீர்த்தருவி 290; ஒல்லென் அருவி 77; ஓங்கருவி 79; ஆர்க்குமருவி 161; கறங்கருவி 228, 285; பொங்கருவி 231; வாலருவி 232; பாயருவி 307; பிறங்கருவி 343; இலங்கருவி 344; கடல் 244,269; எறிநீர்ப் பெருங்கடல் 275; பெருங்கடல் 332; பொருகடல் 97; மலிகடல் 98; அலை கடல் 106; நீள்கடல் 108; கனைகடல் 138, 349; நளி

கடல் 166, 242; அறைகடல் 230; எறிகடல் 245; படுகடல் 246; ஒலிகடல் 249; புணர்கடல் 264; குண்டுநீர் 94; சுண்டு நீர் 109; வீங்குநீர் 117; உவரி 244; நுரை 221.

நீர் வாழ்வன:—

அலவன் 123; அன்றில் 376; அன்னம் 106; ஆமை 331; 114-உரை; கயல் 44, 97, 395; குருகு 135; தேரை 193, 352 மலங்கு 375; மீன் 375.

நூல்கள்:—

அறிவு நூல் 140; உலக நூல் 140; மிக்க கனம் பொதிந்த நூல் 341; நூல் 136, 319, 320, 352, 386; எழுத்தோலை 253; சத்தம் 52; சோதிடம் 52; நுண்ணூல் 233.

நோய்கள்:—

நோய் 52; துக்கத் தொழுநோய் 125; எவ்வநோய் 124; படர்நோய் 168; அருநோய் 219; கால்நோய் 372; பிணி 55, 92; ஈன்றக்கால் நோவு 201; வயா 201.

பறவை வகை:—

புள் 30, 121, 212; கழுகு 48; காக்கை 41, 284, 400; கிளி 283; கோழி 341; குறும்பூழ் (காடை) 122; சிவல் (கவுதாரி) 122; சிரல் 395; வாவல் 261; வண்டு 73, 283, 284, 290; சுரும்பு 122, 223; பெடை 48; சேவல் 48; ஈ 41, 218, 259, 389; தேனீ 10.

பாத்திர வகை:—

கலம் 250, 287; பெய்கலன் 238; பொற்கலம் 206, 345; குடம் 382; தவசி கடிஞை 99.

பிற்பொருள்கள் :—

அடுப்பு 94; அரக்கு 396; இருந்தை (கரி) 258; இழை விளக்கு 361; உலை 114, 331, 298; எருவை (கொறுக்கைத் தண்டு) 351; ஐந்தை (கடுகு) 329; கடு (விஷம்) 374; கதவு 91, 271; புதவு 99; கந்து 192; தறி 257; கப்பி (தானியக் கப்பி) 341; கருவி 398; கவறு 153; குஞ்சி 131; குடைக் கால் 368; குடை, குப்பை 341; குற்றி 178; கோல் 11, 13, 41, 152, 253, 258; சந்தனம் 234; வெறிகமழ் சந்தனம் 180; சாந்தம் 397; சாந்து 126; படுசாந்து 48; தண் சாந்து 389; செக்கு 374; செப்பு 126; செருப்பு 347; சேறு 105, 231; தக்கோலம் 43; தண்டு 14; தூண் 64; தோள்கோப்பு 20, 328; நார் 26, 153; நானம் 294; பகடு 2; பஞ்சி 396; பத்தர் 257; பயின் 267; பருமம் 149; பழங் கூரை 231; பை 26, மஞ்சள் 131; மாலை 397; அரும்பு அவிழ்தார் 390; மூழை 321; வட்டு 264; வலை 331; விளக்கு 51, 189, 371.

போர்க் கருவிகள்:—

அம்பு 89, 152; ஒள் வாள் 129; வாள் 362, 358; அயில் வாள் 386; வில் 297; வேல் 213, 297.

மக்கட் பெயர்கள்:—

அரசர் 134; கோ 81; மன்னர் 167; தவசி 99; உறுவர் 104; துறவோர் 273; உரவோர் 57, 88; தோணியியக்குவான் 136; அவி 85; புலவர் 255, 318, 321; கொலைஞர் 331; ஆமைகொல்வார் 331; செக்கூர்ந்து கொண்டார் 374; கம்மஞ் செய் மாக்கள் 398; பாகன் 213; கொல்லன் 298; வேன்மகன் 16; கணக்காயர் 314; ஓலைக் கணக்கர் 397; சேனைத்தலைவர் 3; குறவன் 356; உழவன் 356; உழவர் 178; பெருமுத்தரையர் 200, 296; பார்ப்பனார் 400; குறுங்கர் 322; பெண்ணவாய் ஆணிழந்த பேடி 251; வாளாடு கூத்தியர் 191; முறிபுரை

மேனியர் 317; தொழுந்தை 326; சில்லை (வேசை) 377; சேடியர் 354; புடைப்பெண்டிர் 368; வேசியர் 371.

இவையன்றியும் நல்லார், நன்மக்கள், உணர்வுடையார், மாண்டார், தக்கார், தலையாயர், ஆன்றவிந்தார், சான்றோர், சான்றவர், விழுமியோர், விழுமியார், குடிப்பிறந்தார், மேன்மக்கள், பெரியார், தெரிவுடையார், பண்புடையார், புரைதீர்ந்தார், பெருமையுடையார், தொல்புகழாளர், தொன்மையுடையார், வடித்த நூலார், சீரியார், மிகைமக்கள், ஒண்மையுடையார், வடுவறுகாட்சியார், நயமுணர்வார், நுண்ணுணர்வினார், நயவார், நயவர், உடையார், ஈவார், கொடுத்தார், செல்வர், பல்லார், தென்னாட்டவர், குணனுடைமாந்தர், கழுமியார், பெருநீரார், கழுமியார், சொன்னாளர், தாளாளர் எனவும்,

நலமில் அறிவினவர், கல்லார், பீடிலார், கீழ், கீழ்மக்கள், புன்மக்கள், உணர்விலார், திண்ணறிவில்லாதார், இரவலர், காரறிவாளர், பேதை, மூடர், இடுக்குடை உள்ளத்தான், வறியர், புல்லறிவாளர், வெள்ளறிவினார், உணராதார், கண்ணில் புன்மாக்கள், பித்தர், ஏழையார், கயவர், கயம், புல்லறிவினார், சிற்றறிவினார், கல்லாதார், சிறியார், நல்கூர்ந்தார், சிறியவர், கடையாயர், சீரிலார், பந்தமிலாளர், நல்கூர்ந்தமாக்கள், நேரல்லார் எனவும்,

ஆண் மகன், வரைமார்பன், மக்கள், நாட்டார், ஏதிலான், மாற்றார், ஒன்னார், சென்றார், ஒல்லார், நள்ளாதார், மேவாதார், பகைவர், மகிழ்ந்தார், நட்பினார், மூங்கை, செவிடன், குருடன், எனவும்,

இல்லாள், மனையாள், மகளிர், மெல்லியர், காதன்மனையாள், ஏதின் மலனயாள், நல்லார், உருவுடைக்கன்னியர், ஈர்ங்கோதையாள், பெருந்தோளி, காதலார், கொய்தளிரன்னார், அணிநீலக்கண்ணார், ஒண்ணுதலார், அசின்மொழியார், பூங்குழையார் மடமொழிமாதர், நறுநுதலாள், பூம்பாவை, எனவும் மக்களில் பல்வகுப்பினரும் குறிப்பிடப்படுகின்றனர்.

மர முதலியன:—

பயன்மரம் 17; நிழல் மரம் 202; குளிர்மரம் 167; பழுமரம் 202; மரம் 30; ஆலமரம் 107; ஏற்றுபனை 96; படுபனை 96; எண்ணரும்பெண்ணை 216; கமுகு 216; தெங்கு 216,242; புன்னை 111; பனை 66; கோங்கு 223; விளவு 261; கரும்பு 34, 35,138,156,199 முதலியனவும்,

காஞ்சிரங்காய் 217; காஞ்சிரங்காழ் 242; களங்கனி 107; விளங்காய் 107; புளிவிளங்காய் 328; பேய்ச்சுரையின்காய் 116; தேமா 257; வேம்பு 112; வாழை 245; வழுதுணை 264; சுரை வித்து 315; ஆலம்வித்து, 38; பனநுங்கு 44; மரை இலை 360; வேம்பின் இலை 245; முதலியனவும்,

கனி 17, 19; காய் 19; வெங்காய் 203; கொம்பு 203; கிளைகள் 30; புல் 29, 171,178; கொடிப்புல் 141; கொய்புல் 350; தளிர் 355; கொய்தளிர் 373; குழை 167; புல்விதழ் 221; சொழுமுளை 367; வற்றிய ஓலை, பச்சோலை 256; கண்டல் 194; முறியார்நறுங்கண்ணி 16; கோது 34, 105; துரும்பு 35; வீழ் 197; வை 234; நெற்று 237; முதலியனவும் குறிக்கப் படுகின்றன.

மலை:—

மலை 28, 244, 356; குன்று 257, 90; கல் 66, 334; அறைப்பெருங்கல் 359; பால் 396; கல்லோங்குயர் வரை 283; உயர்வரை 77, 223; நல்வரை 154, நீள்வரை 226; ஈர்ங் குன்றம் 113; பூங்குன்றம் 128, 212; கறைக்குன்றம் 231; நெடுங்குன்றம் 319; விறன்மலை 369; அணிமலை 161; செங்கோடு 372.

மற்றும் தீவளி 19, 179; படுமழை மொக்குள் 27; மஞ்சு 28; கருங்கொண்மூ 8; மின் 8; அழல் 89; உரு கெழுசெந்தீ 90; மழை 97, 361; மாரி 103, 232; நெருப்

பழல் 124; வெயில் 171; தீ 150, 224, 225, 234, 291, 298 310, 331; உறைப்பு 154; ஒண்சுடர் 189; வானிடுவில் க. வா. முதலியனவும் குறிக்கப்படுகின்றன.

வழக்கங்கள்:-

(1) நிலஞ்சென்னிபுற கடவுளை வணங்கல் க. வா. (2) செல்வர் மறுசிகை நீக்கி யுண்ணல் 1; (3) இல்லாள் ஊட்டுதல் 1; (4) பிணத்தை முக்காலைக் கொட்டினுள் மூடித் தூக்கிக்கொண்டெழுதல் 24; (5) பிணத்தை நார்தொடுத்து ஈர்க்கல் 26; (6) பிணத்தை நன்றாய்ந்து அடக்கல் 26; (7) பிணத்தைப் பார்க்குழிப் பெய்யல் 26; (8) புரண்டுரம் விழைந்தார்க்குக்கால் குறைத்தல்; (9) ஆமையைக் கொதிக்கும் உலையிலிட்டுக் கொல்லுதல் 114, 331; (10) ஆடுகளைப் பலியிடுவோர் கையிலே தளிராற் சேர்ந்த மாலையைப் பிடித்துக் கொண்டிருப்பர் 16; (11) காதலனைப் பிரிந்த மகளிர் தங் காதலர் பிரிந்த நாள்களை தங்கள் மெல்லிய விரல்களால் எண்ணுவர் 394.

விலங்கு வகை:-

யானை 3, 198, 213; களிறு 192; கடமா 300; வேழம் 358; அரிமா 141, 152, 198; வேங்கை 180, 300, 399; புலி 193, 206; பரிமா 149; குதிரை 398; புல்வாய் 149; மான் 378; கலைக்கணம் 399; தகர் 376,378; மறி 16; நாய் 70, 213, 254, 322, 345; மந்தி 237; பன்றி 257, 358; முயல் 176; ஆ 101, 108; ஆமா 319, 377; குழக்கன்று 101; ஆவின்கன்று 115, 279; காளை 398; சேமா 377; குண்டை 350; விலங்கு 76, 121; கருநரை (வெள்ளெருது) 186.

ஐம்பத்து மூன்று செய்யுட்களில ஆடூஉ முன்னிலைகளும், பதின்மூன்று செய்யுட்களில் மகடூஉ முன்னிலைகளும் வந்துள்ளன அவற்றுள்,

ஆடூஉ முன்னிலை:-

வரை நாட, மலைநாட, குன்றநாட, சாரல் நாட என விளித்தவை:-

1 வான்றோய் மலைநாட—நாலடி 10.

2 கோதை அருவிக் குளிர் வரை நன்னாட 71.

3 ஒல்லென் அருவி உயர்வரை நன்னாட 77.

4 ஓங்கருவி நாட 79.

5 ஈர்ங்குன்ற நாட 113.

6 சாரல் கனமணி நின்றிமைக்கு நாட 127.

7 புனல் செதும்பு நின்றலைக்கும் பூங்குன்ற நாட 128.

8 வான்றோயும் மைதவழ் வெற்ப 142.

9 நல்வரை நாட 154.

10 ஆர்க்கு மருவி அணிமலை நன்னாட 161.

11 பெருவரை நாட 186.

12 அறைக்கல் மலைநாட 203.

13 பொற்கேழ் புனல் ஒழுகப் புள்ளிரியும் பூங்குன்றநாட 212.

14 நிறக்கோங்கு உருவ வண்டார்க்கும் உயர்வரை நாட 223.

15 துன்னருஞ்சீர் விண்குத்து நீள்வரை வெற்ப 226.

16 கறங்கருவி நாட 228.

17 கறைக்குன்றம் பொங்கருவி தாழும் புனல்வரை நன்னாட 231.

18 வாலருவி நாட 232.

19 சந்தன நீள்சோலைச் சாரல் மலைநாட 234.

20 முற்றல் சிறுமந்தி முற்பட்ட தந்தையை நெற்றுக்கண்டன்ன விரலால் ஞெமிர்த்திட்டுக் குற்றிப்பறிக்கும் மலைநாட 237.

21 தேம்படு நல்வரை நாட 238.

22 கறங்கருவி கன்மேற் கழூஉங் கணமலை நன்னாட 285.

23 நீர்த்தருவி தாழாவுயர் சிறப்பின் தண்குன்ற நன்னாட 290.

24 குன்றின் பரப்பெல்லாம் பொன்னொழுகும் பாயருவிநாட 306.

25 பழிப்பில் நிறைஆமா சேர்க்கும் நெடுங்குன்றநாட 319.

26 பிறங்கருவி நன்னாட 343.

27 இலங்கருவி நன்னாட 344.

28 விறன்மலை நன்னாட 348.

29 கணமலை நன்னாட 353.

30 மணி வரன்றி வீழும் அருவி விறல்மலை—நன்னாட 369.

சேர்ப்ப என விளித்தவை:-

1 போதெலாம் மாதர் வண்டார்க்கு மலிகடல் தண்சேர்ப்ப 73.

2 கயற்புலால் புன்னைகடியும் பொருகடல் தண்சேர்ப்ப 97.

3 மலிகடல் தண்சேர்ப்ப 98.

4 அடப்பம்பூ அன்னங்கிழிக்கும் அலைகடல் தண்சேர்ப்ப 106

5 நறவுயிர்க்கும் நீள்கடல் தண்சேர்ப்ப 108.

6 புன்னை விறற்பூங்கமழ் கானல் வீங்குநீர்ச் சேர்ப்ப 117.

7 கனைகடல் தண்சேர்ப்ப 138.

8 கனமணி முத்தோடு இமைக்கு முழங்குவரித் தண்சேர்ப்ப 146.

9 நளிகடற் றண்சேர்ப்ப 166.

10 பெரிய உலவா இருங்கழிச் சேர்ப்ப 168.

11 கண்டல் திரையலைக்குங் கானலந் தண்சேர்ப்ப 194.

12 மடிதிரை தந்திட்ட வான்கதிர் முத்தம் கடுவிசை நாவா கரையலைக்கும் சேர்ப்ப 224.

13 இலங்குநீர்த் தண்சேர்ப்ப 227.

14. நளிகடல் தண்சேர்ப்ப 241.

15. எறிகடல் தண்சேர்ப்ப 244.

16. பராஅரைப் புன்னை படுகடல் தண்சேர்ப்ப 246.

17. நற்றளிர்ப் புன்னை மலருங் கடற்சேர்ப்ப 337.

18. கள்ளுயிர்க்கு நெய்தற் கனைகடற் றண்சேர்ப்ப 349.

19. வயங்கோத நில்லாத் திரையலைக்கும் நீள்கழித் தண் சேர்ப்ப 391.

கானக நாட என விளித்தவை:-

1. கானக நாட 76.

2. கொல்லைக் கலாஅல் இளிகடியும் கானக நாட 283.

ஊர என விளித்தவை:-

1. அந்நெல் வயல்நிறையக் காய்க்கும் வளவயலூர் 367.

ஐய என விளிந்தது:-

1. ஐய கேள் 350.

2. அருமரபின் ஓதம் அரற்றும் ஒலிகடல் தண்சேர்ப்ப 249.

மகடூஉ முன்னிலை:-

1. நிரைதொடீஇ 111.

2. தடங்கண்ணாய் 116.

3. நறுமலர்த் தண்கோதாய் 209.

4. பொன்னன்னாய் 225.

5. வேல்நெடுங் கண்ணாய் 265.

6. தாறாத் தகடேபோற் நன்மலர்மேற் பொற்பாவாய் 226.

7. வேற்கண்ணாய் 267.

8. கூர்மையின் முல்லை அலைக்கும் எயிற்றாய் 289.

9. செம்மையி னானங் கமழுங் கதுப்பினாய் 294.

10. புடைபரந்த விற்புருவ வேனெடுங் கண்ணாய் 297.

11. வாட் கண்ணாய் 358.

12. சுடர்த்தொடீஇ 398.

13. பொன்னின்ற கோங்கரும் பன்ன முலையாய் 400.

இந்நூலை எடுத்தாண்ட உரை ஆசிரியர்கள்.

1. அடியார்க்கு நல்லார்.
2. அரும்பத வுரைஆசிரியர்.
3. இளம்பூரணர்.
4. கல்லாடர்.
5. காளிங்கர்.
6. குணசாகரர்.
7. சங்கரநமச்சிவாயப் புலவர்.
8. சாமிநாத தேசிகர்.
9. சிவஞான முனிவர்.
10. குருகூர்—சுப்பிரமணிய தீக்ஷிதர்.
11. சேனாவரையர்.
12. சொக்கப்ப நாவலர்.
13. தண்டி அலங்கார உரை ஆசிரியர்.
14. நச்சினார்க்கினியர்.
15. பரிப்பெருமாள்.

16. பரிமேலழகர்.

17. பெருங்கதை உரை ஆசிரியர்.

18. பெருந்தேவனார்.

19. பேராசிரியர்.

20. மணக்குடவர்.

21. மயிலைநாதர்.

22. மயிலேறும்பெருமாள்பிள்ளை.

23. மாறனலங்கார உரைஆசிரியர்.

24. முத்துவீரியம் உரைஆசிரியர்.

25. யாப்பருங்கலவிருத்தி உரைஆசிரியர்.

26. மைத்தினாத தேசிகர் (இலக்கண விளக்கம்).